கேமியாயெ ஸூத்தம்.

1-வது காண்டம்.

Q7: 417
N54
14203

بسم الله الرحمن الرحيم

...யொயெ ஸஆதத்து

1-வது வால்யம்.

நாலு உன்வான்களும் முந்திய ருகுனு
இபாதாத்தும் அடங்கியது.

இஃது

மதுரை

ஹலரத்து முஹம்மது இப்ராஹீம் ஸாஹிபு நக்ஷபந்தி
அவர்களின் ஷாகிர்துகளில் ஒருவராகிய
நெல்லிக்குப்பம்

அப்துர் ரஹ்மான் ஸாஹிபு அவர்களால்

ஹிந்தி பாஷையி லிருந்து மொழி பெயர்க்கப்பட்டு
அச்சிட்டு விளங்கி வந்ததை
உரையாசிரியரின் குமாரர்களிடம்

சென்னை திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

மீண்டும் ஒரு பதிப்புக்கு அனுமதி பெற்று
ஷாஹுல் ஹமீதியா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

ஏழாம் பதிப்பு—காப்பிகள் 2000.

1954.

Translation Registered Copyright



விளம்பரம்.

இதனுல் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் :—கீமியாயே ஸஆதத் தென்னும் இப்புத்தகம் 1867-ஆம் 25-வது ஆக்ட்டு பிரிவு 6-வது விதியின் பிரகாரம் நம் இந்திய யூனியன் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் பிரான்ஸ் இலாகாவாகிய புதுச்சேரியிலும் இப்பிரதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த கீமியாயே ஸஆதத்து 1-வது வால்யம் முழுமையாவது இதிற் சில பாகத்தையாவது அடியிற் கையொப்பமிட்டிருக்கிற இதன் உரிமையாளர்களுடைய உத்தரவின்றி ஒருவரும் பிரசுரிக்கூடாது. அப்படி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனுலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

டைட்டில் பேஜில் எங்கள் கையெழுத்து இல்லாத புத்தகம் கள்ளர்களால் வெளிவந்ததாகையால் அக்கள்ளர்களைக் காண்பிப்பவர்களுக்குத் தக்க இனம் கொடுக்கப்படும்.

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள்,

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

என்ற விலாஸக்காரரிடம் கை விலைக்கும் வி. பி. பார்சல் மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

நெல்லிகுப்பம் மௌல்வி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் புத்திரர்கள் தெரிவிப்பதாவது :—

ஹிந்தி அண்டு பார்ஸி பாஷைகளிலிருந்து எங்கள் தகப்பனார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு பன்முறை வெளிவந்துள்ள "கீமியாயே ஸஆதத்து" 1, 2, 3 & 4 வால்யங்களையும் மீண்டும் ஒரு முறை அச்சிட்டு விற்பனை செய்து கொள்ள சென்னை திருவல்லிக்கேணி ஹாஜி **M. A.** ஷாஹுல் ஹமீது **&** ஸன்ஸ் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம்.

டைட்டில் பேஜில் (எங்கள் முன் வழக்கங்கள் போல்) எ. முஹம்மது அப்துல்லா, எ. அப்துர் ரஹீம் என்ற இருவரில் ஒருவர் கையொப்பமேனும் அவசியம் இருக்க வேண்டும். மேற்கண்ட எங்களல்லாத மற்றவரெவரும் இப்புத்தக சம்பந்தமான விவகாரங்கள் செய்ய உரிமையாளர்களல்ல என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

தைக்கால் வீதி,
நெல்லிகுப்பம்
1954.

A. முஹம்மது அப்துல்லா
A. அப்துர் ரஹீம்
(உரிமையாளர்)

1114/1953

Q1:47
N54

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

கீமியாயெ ஸஆதத்து

மொழி பெயர்ப்பு.



நூன்முகம்.

அல்லாஹு என்னும் அரிய திருநாமம் பொருந்தியவனுய் அனைவர்க்கும் அன்பு பாலிப்பவனுய் அடியார்க்கு அருள் புரிபவனுய் விளங்காநின்ற ஆதி நாயகனைத் துணைகொண்டு அவனது திவ்விய திருநாமத்தினுல் இப்பெரிய கிதாபைத் தமிழில் மொழிபெயர்க்கத் துணிந்தயான் அறிவிற்குறைந்தவனுயினும் யான் துணைகொண்ட வல்ல நாயகனை அல்லாஹு தஆலா தனது ஹபீபாகிய அஹ்மது முஜ்தபா முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இது காரியம் முடிவுற அடியேனுக்கருள் புரிந்ததற்கு அடியிற்குறித்த அறபுவாக்கியத்தால் ஆயிரமாயிர முறை அவனைப் புகழ்கின்றேன். பலில்லாஹில் ஹம்து ஹம்தன் கஸீரன் தைய்யிபன் முபாரக்கன் பீஹி.

பின்னர் கீமியாயெ ஸஆதத்து என்னும் இக்கிதாபானது ஹலரத்து இமாமுல் கிராம் ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் அபூஹாமித் முஹம்மதுல் கஸ்ஸாலி முஹம்மத்துல்லாஹி அலைஹி யவர்களால் பார்ஸி பாஷையில் இயற்றப்பட்டதும் அரிய விரகசியங்களடங்கியதுமான ஓர் பெரிய நூல்.

இதை ஹிஜ்ரி 1270-ம் ஆண்டுக்குப் பிறகு ஹிந்துஸ்தானிப் பர்ஷையில் திருப்பினவர் மதரூஸ் நவாபு முஹம்மத கவுஸ்கான் பஹதூருடைய தர்பார் உலமாக்களில் ஒருவரும், மதாருல் முல்கு ஹலரத்து முஹத்திஸ் மவுலவி அப்துல் ஹக்கூஹாப் என்பவர்களின் ஷாகிர்தும் காலியுல் முல்கு ஹலரத்து முஹத்திஸ் மவுலவி ஸிப்கத்துல்லா என்பவர்களின் தில்மீதுமான ஹலரத்து மவுலவி முஹம்மது மஹதீவாஸிப் என்பவரே.

இவர் ஹிந்துஸ்தானியில் திருப்பின உரையே இம்மொழிபெயர்ப்புக்கு மூலப்பிரதியாயிருக்கிறது. யானிதைத் தமிழில் திருப்பினதற்குக்காரணம் சொல்லுமுன் இவர் தமது திருப்புதலின் முகவுரையிற் கூறியிருக்கிற காரணத்தைச் சொல்லுகிறேன். அதுவருமாறு :—

தங்கள் சுயபாஷையை விரும்புகின்ற நண்பர்களிடத்தில் யான் செய்துகொள்ளும் விண்ணப்பம் யாதெனில், இதற்கு முன்னே ஆதா புஸ்ஸாலிஹீன் என்ற கிதாபுக்கும் துர்ருல் முக்தார் என்ற கிதா பின் முந்திய கால்பாகத்துக்கும் ஹிந்துஸ்தானி பாஷையில் விரிவாய் உரை யெழுதினதுபோல் தற்போது ஹலரத்து இமாம் முஹம்மது கஸ்ஸாலி றஹ்மதுல்லாஹி அலைஹியவர்களால் இயற்றப்பட்டதா யும் இஹ்யாவுல் உலூமித்தீனில் நின்றும் கடைந்தெடுத்த கைவல்லி யமாயுமிருக்கிற கீமியாயெ ஸஆதத்து என்ற கிதாபுக்கும் உரையெழுது ஓர் காட்டம் பிறந்தது. அந்காட்டப்படி அல்லாஹு தஆலாவினு டைய உதவிகொண்டு அதற்கு உரை எழுத ஆரம்பித்து இது செய்தி யை என்மீதன்பு பாராட்டும் எனது உஸ்தாதவர்களிடத்திற் சொன் னேன். அதற்கந்த ஆலிமு றப்பானியவர்கள் முத்துமழை பொழியும் தங்கள் சுத்த நாவினுல் இப்பேர்ப்பட்ட மகாபெருமை தங்கிய கிதா பைப் பிரசுரஞ்செய்வது இக்காலத்துக்கு முக்கியம் வேண்டியதாயி ருக்கிறதென்றும், இதனுடைய நூறு வார்த்தைகளினின்றும் ஒரு வார்த்தையின்பேரிலாவது யாராவதொரு முஸ்லிம் அமல் செய்வானு கில் அவன் சிதேவித்தனமென்னும் செல்வத்தை அடைவானென்றும் அருளிச்செய்தார்கள். நல்வழிக்கு ஆஸ்பதமென்ன. இந்த அரிய உபதேசத்தைக் கேட்டதினுல் எனது காட்டத்தை ஸ்திரப்படுத்தி னேன் என்பதே.

பின்னர் ஏழையாகிய என்மீது பலவிதத்திலும பக்ஷம் பாராட்டி என்னைச் சீர்திருத்திய எனது உஸ்தாதாகிய ஹலரத்து முஹம்மது இப்ராஹீம் ஸாஹிபு நக்ஷபந்தி யவர்களின் சமுகத்தில் யான் சில வணக்கஞ்செய்து இக்கிதாபின் அரிய விரகசியங்களைச் செவியுற்று வந்ததினுல் யானடைந்த ஆனந்தத்திற்கோர் அளவில்லை. அன்றியும் தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன் றைத் தான் என்றும் தலைவன் என்றும் கருதுகின்ற பேயர்கள் அந்த தம்பேர் இருக்கிறார்களே அவர்களுக்கு இக்கிதாபு ஒருவாறு உணர் வை வருத்தமென்றும், அநாதாரப் பேச்சுமொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களை இது மன்திருப்பச் செய்யுமென் றும் இகபரங்கள் இன்னின்ன வென்றறியாமல் இகலோக விச்சைகளி லேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பரவாசெய்யாதிருக்கிற பஞ்சை மாந்தர்களுக்கு அவ் வுலக விருப்பத்தை யூட்டுமென்றும், இதன் இபாதாத்துடைய ருக் குனில் ஸுன்னத்து ஜமா அத்துகளின் இஃதிகாது, இல்மைத்தேடல்,

ஒலு முழுக்கு தயம்மம் முதலிய சுத்திகள், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்ரு அவுறாது இவைகளின் அஹ்காமுகளும் அஸ்காருகளும் சொல்லப்பட்டிருப்பதால் அமல் செய்பவர்களுக்கு இது மிகவும் உதவியா யிருக்குமென்றும் எனக்குத் தோன்றிய தோடு மகாகனவானும் கல்விப் பிரியருமான எனது நண்பர் மகா-ரா-ரா-ஸ்ரீ, கப்பல் மோதீன் இப்ராஹீம் ஸாஹிபவர்களும் இக்கிதாபை உரையாக்கல் வேண்டுமெனப் பன்முறை என்னைத் தூண்டி வற்புறுத்தின படியால் ஹிந்தி பாஷை யறியாத இத்தமிழ் நாட்டு முஸ்லிம்கள் இதை எளிதில் உணர்ந்து அமல் செய்யும் பொருட்டு ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்று இருபத்து நான்காம் ஆண்டின் முதன் முறையாக இவ்வரிய கிரந்தத்தைத் தமிழிலச்சியற்றினேன்.

முதனூலாகிய பார்ஸீ கீமியாயெ ஸஆதத்தை இயற்றிய ஆலிமுறப்பானி இமாம் முஹம்மது கஸ்ஸாலி றஹ்மதுல்லாஹி அலைஹி யவர்களின் ஜீவ விர்த்தாந்தத்தை தாரிகு இபுனு கல்கான் என்னும் சரித்திரத்திலிருந்து சுருக்கமாய் எடுத்து முஹம்மது மஹ்தீ வாஸிப் என்பவர் தமது ஹிந்துஸ்தானி திருப்புதலின் இறுதியில் எழுதி யிருப்பதை யானிங்கு காட்டுவேன். அதாவது:—

இந்தப் பெருமை தங்கிய இமாமவர்கள் (பார்சு தேசத்தில்) தூஸ் என்னும் பட்டணத்தைச் சேர்ந்த மிக்க வளம் பொருந்திய கஸ்ஸால் என்னுமூரில் ஹிஜ்ரி நானூற்று ஐம்பதாம் ஆண்டில் பிறந்தவர்கள். ஆரம்பத்திலே தூஸ்பட்டணத்தில் கல்விபயிற்சியாகி அதன் பிறகு நைசாப்பூருக்குப் போய் இமாமுல் ஹறமைன் அபுல் மாஆலி யவர்களுடைய மதரஸாவிற் சேர்ந்து அங்கு மிகவும் பாடுபட்டு அநேக இல்முகளை ஹாஸில் செய்தார்கள்.

தங்கள் உஸ்தாதுடைய ஜீவகாலத்திலேயே அநேக கிதாபுகளைத் தஸ்னீபு செய்தார்கள். வஸீத்து, பஸீத்து, குலாஸா, இஹ்யாவுல் உலூமித்தீன், முஸ்தஸ்பா முன்ஹல்லு, மன்ஹூல் திஹாபத்துல் பலாஸிபா, மிஹக்குந்நலர், மிஃயாருல் இல்மி வல்மகாஸித, மல்னூனுபிஹி அலாகைரி அஹ்லிஹி, அல்மக்ஸதுல் அஸ்னு பீஷறஹி அஸ்மாயில் ஹுஸ்னு மிஷ்காத்துல் அன்வார் முதலிய அரிய பிரயோஜனங்கள் நிறைந்த பிரபல்யமான இக்கிதாபுகளெல்லாம் இமாமவர்களால் இயற்றப் பட்டவைகளேயாம். பிறகு பகுதாதுக்குப் போய் மதரஸத்துந்நிலாமிய்யாவில் உஸ்தாதா யிருந்து ஓதிக்கொடுத்து வந்தார்கள். பிறகு ஸுஹ்தென்னும் தவத்தைப் பூண்டு அங்கிருந்து ஹஜ்ஜை நாடிப் புறப்பட்டு மக்கா ஷரீபுக்கும் திருமதீனமா நகரத்திற்கும் போனார்கள். அங்கிருந்து பைத்துல் முகத்தஸுக்கு வந்து

பரக்கத்து பெற்ற ஸ்தலங்களைப் போய்க் காணுவதிலும் அவுலியாக்களுடைய கபுருகளை ஸியாரத்து செய்வதிலும் மிகவும் பிரயாசை யெடுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு இஸ்கந்தரியாவில் கொஞ்ச நாள் தரித்திருந்து பின்பு தங்கள் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். ஸுபியாக்களிருப்பதற்கு கான்காஹ் என்னுமடமும் உன்னத மதரஸாவும் கட்டினார்கள். ஜனங்களுக்குப் பிரயோஜனத்தை யுண்டாக்கும் காரியங்களிலேயே சதா முயற்சியா யிருந்து கடைசியாய் ஹிஜ்ரி ஐநூற்று ஐந்தாம் ஆண்டு ஜமாதியுல் ஆகிர் மாதத்தில் தூஸ் பட்டணத்திலே அவர்களுக்கு வபாத்துண்டாயிற்று என்பதே.

நிகழும் ஹிஜ்ரி 1324-ம் ஆண்டாகிய இக்காலத்துக்கு எண்ணூற்றுப் பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னே இவ்வுலகத்திலிருந்து மறைந்து போன அம்மஹானுடைய மகிமையானது ஆதித்த பிரகாசம் போல் அகிலமெங்கும் வியாபித்திருக்கிறது. இவர்களுடைய மனமான ஆழிய கங்கையிலிருந்து பிரிந்த நீரோட்டங்கள் உலகமெங்கு மோடிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் தங்கள் இருதயமான புதையலிலிருந்து இஜ்திஹாதான இருப்பாணியால் கொந்தியெடுத்த இரத்தினங்கள் அநேகருடைய கைகளில் ஆபரணமாய்ப் பிரகாசிக்கின்றன. இவர்கள் தங்கள் கல்பாகிய கடலிலிருந்து களங்கமில்லாத யோசனையால் மூழ்கியெடுத்த முத்துகளானவை வீதிகள் தோறும் விலைமதிக்கப்படுகின்றன, இவர்கள் தங்கள் அன்பான மனக்கரத்தால் அள்ளி இறைத்த அருட்பெருஞ் செல்வத்தை அநேகப் பேர் ஆவலாய் விழுந்து வாருகின்றார்கள்.

என்றாலும், பாலியேயன்றி . ஏனைய ஆகாரத்தை ஏற்கும் பக்குவமெய்தாத பாலர் போல் லாஹிராகிய இல்மையே தவிர பாத்தினிகிய இல்மை ஏற்கும் பக்குவம் வாதவர்களும் புலி ரூபமெழுதியப் படத்தைப்பார்த்து அதன் பொருளின்னதென்றறியாமல் படமே புலியென்று கருதும் பாடச்சாலைச் சிறுவர் போல் லாஹிரிலுஷாகில் அமைந்திருக்கும் அறிவுகளுக்குப் பொருளின்ன தென்றறியாதவர்களும் அழுக்காறுடையவர்களுமான சிலர் எரிச்சல் கொண்டு இமாம்மவர்களுக்கு எதிரிகளாயெழும்பி இப்பெருமானாரது இஹ்யாஉல் உலூம் போன்ற அரிய கிரந்தங்களை மதிக்காமல் அலட்சியம் செய்தார்கள். செய்தாலும் மென்ன உண்மை உயருமேயன்றி தாழாதென்ற ஆன்றோர் வாக்கியம் பொய்யாகுமா? வவ்வால்களுக்குக் கண்களில் வலுவில்லை யென்று வான் சூரியன் தனது பேரொளியை வீசாதிருக்குமா? ஜீவகோடிகளுக்கும் அதன் பிரகாசம் அவசியமா யிருக்கின்றதே.

அல்லாஹ் தஆலாவுடைய அருளென்னும் ஆதித்தனுல் பிரகாசமுற்ற, விரிந்த மனதையுடைய இந்த இமாமவர்களின் ஆழமான அறிவுகளை உற்றுணர்ந்து வியப்படைந்த வித்வசிரோன்மணிகள் வல்ல நாயகனை அல்லாஹ் தஆலாவிடம் கையேந்தி "மேன்மை தங்கிய நாயகா! நீ யுனதருட் பெருஞ்சோதியால் இமாம் கஸ்ஸாலியவர்களுடைய மனதைத் துலக்கினதுபோல் ஏழைகளாகிய எங்கள் மனதையும் அவ்வாறு துலக்கு" என்று துஆகேட்கிறார்கள். அது வருமாறு:—

நவ்விர் இலாஹஸ்ஸமா கல்பல் காீபி கமா

நவ்வர்த்த கல்ப இமாமின்னுஸி கஸ்ஸாலி.

இப்புத்தகத்தை பக்தியுடன் வாசிக்கின்ற உத்தமர்யாவரும் மேற்கண்ட துஆவை, நித்திய விருதாய் ஓதிவருவார்களாகில் அல்லாஹ் தஆலா அவர்களுடைய மனங்களை விரிவாக்குவானென்று ஆதரவு வைக்கின்றேன்.

இனி யான்செய்து கொள்ளும் விண்ணப்பங்களாவன:—

கீமியாயெ ஸஆதத்து என்னும் கிதாபானது ஒரே வால்யத்தில் நான்கு உன்வான்களென்றும் நான்கு ருகுனுக்களென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் பிந்திய மூன்று ருகுனுகள் நீங்கலாக கிதாபின் ஆரம்பத்திலிருந்து நான்கு உன்வான்களுக்கும் முந்திய ஒரு ருக்னுக்கும் இப்புத்தகம் உரையாயிருக்கிறது. இது மேற்கண்ட கிதாபின் கால்பாகத்துக்கு நெருங்குகின்றது.

இதேவிதமாய் மற்ற மூன்று ருகுனுகளுக்கும் உரையெழுதி ஒவ்வொரு ருகுனையும் ஒவ்வொரு வால்யமாய் அச்சிடக்கருதி இதற்கு 1-வது வால்யம் என்று சொல்லப்பட்டது. (பிறகு 2-வது, 3-வது, 4-வது வால்யங்களும் அச்சிட்டுத் தயாராய் விட்டன.)

இது தமிழ் புத்தகந்தானே யென்று அலட்சியம் செய்யாமல் இதிற் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் ஆதியிலிருந்து அந்தம் வரையில் நன்றுய்ச் சிந்தையைச் செலுத்திப் பார்வையிடவேண்டியது.

இதன் உன்வான்களில் அதிலும் நாலாவது உன்வானில் கூறியிருக்கிற சில விஷயங்களானவை பக்குவம்வாராத ஜனங்களைப் பல சந்தேகத்திலிழுத்து விடும். ஆதலால் அவர்கள் அந்த சந்தேகங்

பக்கம்.

(பஸல்) மனிதனுக்குள்ளே யிருக்கிற ஒவ்வொரு சேஷ யோடும் அவனுக்கு சம்மந்த முண்டென்பது 18

மனிதன் தன்னுடைய ஆட்டம் அடக்கங்களை நோட்ட மிட வேண்டு மென்பது 20

(பஸல்) மனிதன் தனக்குள்ளிருக்கிற பற்பல குணங்களில் தன் சொந்த குணத்தைப் பிரித்தறிவதெப்படி 23

(பஸல்) கல்புடைய புதுமைகள் 26

(பஸல்) நித்திரை அல்லது மவுத்தினலன்றி கல்பு வழி திறக்க ஏதுவில்லை யென்றெண்ணுதே 29

(பஸல்) இது காரியம் நபிமார்களுக்கே சொந்தமென்று நினைக்காதே 31

(பஸல்) நுபுவத்தும் விலாயத்தும் கல்புடைய மகிமை யினல் உண்டாகுவதென்பது 33

இல்மானது திரையாயிருக்கிற தென்று சூபியாக்கள் சொல்வதற்குக் காரணம் 37

முல்ஹிதுகளின் பயான் 39

அல்லாவை அறிவதின் பேரிலேயே மனிதனுக்கு ஈற் பதவி யுண்டென்பதை எப்படி தெரிந்துகொள்ளலாம் 40

(பஸல்) மனிதனுடைய தேகத்தைக் குறித்து அறிவு 42

சரீரத்தில் நோட்டமிடுவதினல் அல்லாவுடைய சிபத்துகளி னின்றும் மூன்று சிபத்துகள் வெளியாகு மென்பது 45

ஈகல் ஓர் ஹிக்காயத்து 48

2-வது உன்வான் அல்லாவை அறிவது 49

அல்லாஹு தஆலாவுடைய தூய்மையின் பயான் 52

அல்லாஹு தஆலாவுடைய அப்ஆலை அறிவது 55

(பஸல்) பின்பு மனிதனுடைய இராஜரீகத்தையும் 59

(பஸல்) இயற்கைவாதியும் நட்சத்திரவாதியும் 60

(பஸல்) ஜனங்களி லிருக்கிற விதர்ப்பங்கள் ஒருவாறு உண்மையேயாம் 62

(பஸல்) கிரகங்கள், நாலு அனுசர்கள் பன்னிரண்டு இராசிகள் அருஷு இவைகளுக்கு உபமானம் 63

(பஸல்) சுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி என்ற கலிமாவுக்குப் பொருள் 65

(பஸல்) அல்லாஹு தஆலாவுடைய மஃரிபாவின் விபரம் விரிவென்பது 67

பக்கம்

(பஸல்) அல்லாஹுதஆலாவுடைய கட்டளைகளின் ஹத்துகளை விட்டு மீறிப்போன அஹ்லுல் இபாஹத்தி என்பவர்களின் அறியாமை 69
3-வது உன்வான் துன்யாவை அறிவது 76
(பஸல்) துன்யாவில் மனிதனுக்குத் தேவையாகுவது இரண்டு வஸ்துக்கள் 77
(பஸல் துன்யாவென்பது? 79
(பஸல்) துன்யாவுடைய வஞ்சகமும் அதற்குபமானமும் ... 80
(பஸல்) துன்யாவில் உள்ளவைகளெல்லாம் கெட்டவைகளல்ல 85
4-வது உன்வான் ஆகிறத்தை அறிவது 87
(பஸல்) மவுத்து இன்ன தென்பது 89
(பஸல்) ஒருவனுடைய கை, கால்கள் திமிர்த்துப்போனல் ... 92
(பஸல்) ரூஹு ஹைவானியானது என்ன 93
(பஸல்) மனிதனுடைய ரூஹானது தன்னிலே நிலையானது ... 95
(பஸல்) ஒருக்கால் நீ சொல்லக்கூடும் 97
(பஸல்) கபருடைய அதாபுக்குப் பொருள் 100
(பஸல்) கபருடைய அதாபுக்குக் காரணம் 101
(பஸல்) ஒருக்கால் நீ சொல்லக்கூடும் 105
(பஸல்) ஒருக்கால் நீ சொல்லக்கூடும் 106
(பஸல்) சில மூடர்கள் 109
(பஸல்) ஆன்ம சம்மந்தமான நரகம் 110
(பஸல்) தேக சம்பந்தமான நெருப்பினும் ஆன்ம நெருப்பு அதிக சூடானது 118
(பஸல்) ஒருக்கால் நீ சொல்லக்கூடும் 120
(பஸல்) விஷயங்களைத் தங்கள் புத்தியினல் அறியும் சக்தியில்லாத மூடர்கள் 124

பக்கம்

முதல் ருகுனில் அடங்கிய விஷய அட்டவணை.

முதலாவது ருக்குனு இபாதாத்துடைய பயான் ... 129
1-வது அஸ்லு சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாது ... 130
அல்லாஹு தஆலாவுடைய தன்ஸீஹென்னும் தாய்மை ... 131
குத்ரத்தென்னும் வல்லமை 132
இல்மென்னும் அறிவு ... . ,,
இரு தாவென்னும் நாட்டம் 133
ஸம்உ, பஸ்று என்னும் கேள்வி, பார்வை .... ,,
கலாம் என்னும் திருவசனம் .... ,,
அப் ஆல் என்னும் செயல் 134
ஆகிரத்தென்னும் மூடிவுநாள் 135
சிறுத்தென்னும் பாலம் ... ... ,,
அன்பியாவென்னும் நபிமார் 136
2-வது அஸ்லு இல்மைத்தேடுவது பர்லென்று வந்திருக்கிற ஹதீதில் உலமாக்களுடைய அபிப்பிராய பேதங்களும் கஸ்ஸாலி இமாமவர்களின் அபிப்பிராயமும் ... 137
(பஸல்) இல்மு படிக்காதவன் எப்போதும் அபாயத்திலிருக்கிறானென்பது 140
(பஸல்) இல்முகற்பதினும் சிறந்த வேலை யொன்றுமில்லை யென்பது 141
அல்லாவையன்றி பிறிதொன்றை இச்சித்து இல்மு படித்தவர்கள் 142
எந்த ஆலிமுடைய சகவாசம் பிரயோஜனம் கொடுக்கும்? எந்த இல்மு பிரயோஜனம் கொடுக்கும்? 143
3-வது அஸ்லு சுத்தத்தின் பயான் 144
சுத்தத்தின் வகுப்புகள் .... ,,
(பஸல்) வெளியரங்கமான சுத்தம் கடைசி வகுப்பாயிருந்தாலும் 145
சுத்தத்தில் பேணுதல் செய்பவர்கள் அனுசரிக்க வேண்டிய விதிகள் 146
(பஸல்) அந்தரங்க சுத்தம்போல் வெளியரங்க சுத்தமும் மூன்று வகை யென்பது 150
முதலாவது வகை நஜீஸுகளை விட்டுச் சுத்தமாகுவது ... ,,
(பஸல்) ஒரு இடம் அசுத்தமாய்விட்டால் 151
இரண்டாவது வகை தொடக்கை விட்டுச் சுத்தமாகுவது ... 152
மலஜலங்கழித்தல் ... ... ,,
அவற்றினின்று சுத்தமாகுதல் 153
ஓலு செய்தல் 154

	பக்கம்
(பஸல்) ஒலுவில் மக்ரூஹ்	158
முழுக்கு	,,
தயம்மும்	,,
மூன்றுவது வகை சரீரக்கழிவுகளினின்று சுத்தமாகுவது	159
(பஸல்) குளிக்கும் வென்னீர் பொரைக்குப்போனல் ...	160
மிஞ்சியரோமம், நகம் முதலியவைகளை நீக்குவது ...	162
(பஸல்) தாடி நீளமாயிருந்தால்	163
4-வது அஸ்லு தொழுகையின் பயான்	165
வெளியரங்கமான தொழுகையைத் தொழுகிற விதம்	166
(பஸல்) தொழுகையின் மக்ரூஹ்கள்	171
தொழுகையின் அந்தரங்கமான உயிர்	172
தொழுகையுடைய ருகுனுகளின் அந்தரங்கமான உயிர்	174
கிர்அத்து, திக்ரு இவைகளின் உயிர்	178
தொழுகையில் கல்புஹ்லூராகுவதற்குச் செய்ய வேண்டிய பக்குவங்கள்	179
இமாம் ஜமாஅத்து	182
ஜும்ஆத் தொழுகையின் வரிசை	184
ஜும்ஆத் தொழுகையின் ஷரத்துகள்	185
ஜும்ஆத் தொழுகையின் அதபுகள்	186
ஜும்ஆ நாளின் அதபுகள்	190
பாயிதா	195
5-வது அஸ்லு ஸக்காத்துடைய பயான்	198
ஸக்காத்துடைய வகைகளும் அது விதியாகுவதற்குள்ள ஷரத்துகளும்	,,
ஸக்காத்து கொடுக்கிற விதம்	203
ஸக்காத்தையடைய பாத்தியமுள்ள எட்டு வகையார்	204
ஸக்காத்து ஏற்பட்டதின் இரகசியங்கள்	206
ஸக்காத்தின் அதபுகள்	209
ஸக்காத்து கொடுப்பதற்காக பகீரைத் தேடுவது	215
ஸக்காத்து வாங்குகிறவர்கள் அனுசரிக்க வேண்டிய அதபுகள்	217
கைரூத்து, சதகா இவைகளின் வரிசை	220
6-வது அஸ்லு நோன்பின் பயான்	223
நோன்பின் பர்லுகள்	224
நோன்பின் சுன்னத்துகள்	226
நோன்பின் ஹகீகத்து அல்லது உயிர்	227
கவாஸ்ஸுகளுடைய நோன்பு ஆறு காரியங்களால் பூர்த்தியாகிறது	228

பக்கம்

கலா, கபாரா, இம்ஸாக்கு, பித்தியா இவைகளின் பயான் 230
7-வது அஸ்லு ஹஜ்ஜின் பயான் 234
ஹஜ்ஜுடைய ஷரத்துகள் 235
ஹஜ்ஜுடைய ருகுனுகள் 237
ஹஜ்ஜு செய்கிற விதம் 240
ஹஜ்ஜுடைய பிரயாண முயற்சியின் அதபுகள் ... ,,
இஹ்ரும் கட்டுவது, மக்கத்தில் புகுவது இவைகளின் அதபுகள் 242
தவாபு செய்வதின் அதபுகள் 244
சயிசெய்வதின் அதபுகள் 247
அறபாவில் தரிபடுவதின் அதபுகள் 248
ஹஜ்ஜுடைய மற்றும் அமல்களின் அதபுகள் ... ... ,,
உம்ருவின் அதபுகள், பிரயாண தவ்வாபு 251
மதீனு முனவ்வாவுடைய ஸியாரத்து 252
ஹஜ்ஜில் அமைந்திருக்கும் இரகசியங்கள் 254
ஹஜ்ஜில் உற்றுணரவேண்டியவைகள் 256
8-வது அஸ்லு குர்ஆன் ஓதுவதின் பயான் 260
மறதியாளரின் குர்ஆன் ஓதல் 261
குர்ஆன் ஓதுவதின் வெளிப்படையான அதபுகள் ... 262
அதன் உட்படையான அதபுகள் 266
9-வது அஸ்லு ஹக்கு தஆலாவுடைய திக்ரின் பயான் 271
திக்ருடைய ஹகீகத்தின் பயான் 273
தஸ்பீஹு, தஹ்லீலு, தஹ்மீது சலவாத்து இஸ்திக்பாரு இவைகளின் பயான் 276
சலவாத்துடைய பயான் 279
இஸ்திக்பாருடைய பயான் 280
துஆவுடைய அதபுகளின் பயான் 281
பற்பல துஆக்களின் பயான் 284
10-வது அஸ்லு அவுராதுடைய தர்த்தீபின் பயான் 290
பகலுடைய அவுராதுகளின் பயான் 292
பத்து திக்றுகள் 294
முஸப்பஆத்துல் அஷ்ரு1அல்ஹம்து 2-குல்அவூது பிறப்பின்னுஸ் 296
இரவின் அவுராதுகள் 302

முற்றிற்று.

بسم الله الرحمن الرحيم

கீமியாயெ ஸஆதத்து.

முகவுரை.

بسم الله الرحمن الرحيم
الحمد لله رب العالمين والصلوة والسلام
على رسوله محمد سيد المرسلين واله واصحابه اجمعين

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன், வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா றஸூலிஹி முஹம்மதின் ஸய்யிதில் முர்ஸலீன், வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மாஈன்.

அருமையானவனே! அறிந்துகொள்:— அல்லாஹ்ூ தஆலா மனிதனை விளையாட்டுக்காகப் படைக்கவில்லை. மேலும் அவனுக்கு முன்னே பெரிய முக்கியமான வேலை யிருக்கின்றது. ஏனென்றால், அவன் துவக்கமில்லாத அனுதியல்லவென்கினும் சந்தேகமின்றி முடிவில்லாத நித்தியனுக யிருக்கின்றான். அவன் சரீரம் மண்ணால் உண்டாக்கப்பட்டிருக்கினும் அவன் ரூஹ்ூடைய உண்மை அல்லாஹ்ூ தஆலாவைச் சேர்ந்ததாயிருக்கிறது. அவன் தேகக் கூறில் *மேய்கிற மிருகங்களுடைய குணமும் ↑துஷ்ட மிருகங்களின் குணமும் ஷைத்தானுடைய குணமும் கலந்திருக்கினும் அவற்றை நீக்கும் பொருட்டுப் பாடுபடுவானுகில் அந்தக் குணங்களை விட்டுச் சுத்தமாகி அல்லாஹ்ூ தஆலாவுடைய திருச்சமூகத்திற்கு அருகனுகுந் தகுதியை உண்டாக்கிக் கொள்வான். மனிதன் கீழ்த்தரத்துக்கும் கீழே இறங்குவதும், மேல் தரத்துக்கும் மேலே ஏறுவதும் எல்லாம் அவனுடைய செய்கையினுலுண்டாகிற இறக்கமும் ஏற்றமுமா யிருக்கின்றன. அவனுடைய கீழ்த்தரத்துக்கும் கீழ்த்தரமென்ன வென்றால், மேய்கிற மிருகங்களுடையவும் துஷ்ட மிருகங்களுடையவுமான, வேலையை எடுத்து ஆசையும் கோபமுமான வலியிற்சிக்குவதேயாம். அவனு

*மேய்கிற மிருகம்-சாகபக்ஷினி. ↑துஷ்ட மிருகம்-மாம்ச பக்ஷினி

டைய மேல்தரத்துக்கும் மேல்தரமென்ன வென்றால், மலக்குகளுடைய பதவிக்குச் சேர்ந்து ஆசையும் கோபமுமான பிடிக்குள் சிக்காமல் அவ்விரண்டும் அவனுக்குச் சிறையாகுவதும் அவைகளுக்கு அவன் அரசனாகுவதுமாம். இந்த ராஜரீகத்துக்கு அவன் செல்லுவானாகில், அல்லாஹுதஆலா உடைய திருச்சமூகத்தின் வணக்கத்தை உண்டாக்கிக் கொள்வான். இந்தத் தகுதி மலக்குகளுடைய குணமாயிருக்கும். மனிதனுடைய பூரண பதவி இதில் தானிருக்கிறது. அல்லாஹுதஆலா உடைய ஜமால் என்னும் பேரழகை தரிசிப்பதின் இன்பம் அவனுக்கு உண்டானால், ஒரு மூச்சளவும் அதைத் தரிசிக்காமலிருக்க அவன் சகிக்கமாட்டான். அந்த ஜமாலைத் தரிசிப்பதே அவனுக்குச் சொர்க்கமாகும். எந்தச் சொர்க்கத்தில் கண்ணுக்கும் வெட்க உறுப்புக்கும் வயிற்றுக்கும் பிரயோஜனமுண்டோ அந்தச் சொர்க்கம் அவனுக்கு அற்பமாய்த் தோன்றும்.

மனிதன் உற்பத்தியான ஆரம்பத்தில் குறைகள் மிகுந்தவனாயிருப்பதால் அவன் பாடுபட்டுப் போர் புரியாதவரையில் பூரண பதவியை அடையமாட்டான். செம்பு, பித்தளை இவற்றிலுள்ள களிம்பைப் போக்கி அவற்றைச் சுத்தத் தங்கமாக்குகின்ற கீமியா (இரசவாதம்) ஆகிறது எப்படிக் கஷ்டமோ, இன்னும் ஒவ்வொருவருக்கும் அது எப்படி கிடைக்காதோ, அப்படியே மனிதனை மிருகங்களுடைய குணத்திலிருந்து சுத்தப்படுத்தி அவனை மலக்குகளுடைய பதவிக்குச் சேர்த்து அழியாத சுகத்தை அடையச்செய்கிற இந்தக் கீமியாவும் இலேசல்ல. மிகக்கஷ்டமானதேயாம். ஒவ்வொருவரும் இதை அறியமாட்டார்கள். உண்மையில் அழிவற்ற ஆனந்தத்தை அடையச் செய்யும் கீமியாவென்று எதற்குச் சொல்லக்கூடுமோ அந்தக் கீமியாவுடைய முறையைச் சொல்லக்கருதியே நாம் இந்தக் கிதாபுக்குக் கீமியாயெ ஸஆதத்து என்று பேர் வைத்தோம். இதைத்தான் கீமியாவென்று சொல்லவேண்டும். ஏனென்றால் செம்பிலும், பொன்னிலும் வாணிபதமேயன்றி வேறு பதமில்லை. தவிர அந்தக் கீமியாவின் பல்னிகறது துன்யாவில் இன்பம் பாராட்டுவதும் சுகஜீவனம் செய்வதுமேயாம். துன்யாவுடைய விசுவாசமின்மையும் அதன் செல்வம் நிலையாமையும் பரிஷ்காரமாய்த் தெரிந்திருக்கிறது. பின்னர் மிருகங்களுடைய குணங்களிலும், மலக்குகளுடைய குணங்களிலும் வானம் பூமியென்பதுபோல் வெகு வித்தியாசமிருக்கின்றது. இந்தக் கீமியாவின் பல்னே முடிவில்லா நித்தியானந்தமாயிருக்கும். இதனுடைய செல்வங்கள் மட்டிலடங்காதனவாயிருக்கின்றன. இந்தச் செல்வத்துக்கு எப்போதும் அழிவில்லை. ஆகையால் உண்மையில் இந்தக் கிதாபே கீமியாவாயிருக்கிறது. மற்றக் கீமியா பேருக்கு மாத்திரமேயாம்.

(பஸல்) அறிந்து கொள்ளுங்கள் :—தங்கமாக்குகின்ற கீமியா வானது எப்படி எல்லாவிடத்திலும் இருக்கின்றதில்லையோ மேலும் பாதஷாக்களுடையவும், பிரபுக்களுடையவுமான பொக்கிஷத்திலி ருக்கின்றதோ அப்படியே, நித்தியானந்தத்தை அடையச் செய்யும் கீமியாவும் எல்லா இடங்களிலும் புகப்படாது. மேலும் அல்லா வுடைய பொக்கிஷத்திலன்றி அதைக் கண்டு கொள்ள முடியாது. அல்லாவுடைய பொக்கிஷமாகிறது வானத்தில் மலக்குகளும் பூமி யில் நபிமார்களுடைய கல்புமாயிருக்கும். பின்பு எவன் இந்தக் கீமி யாவை றப்புடைய சமுகத்திலன்றி மற்ற விடங்களில் தேடுகின்றானே அவன் வழிதப்பினவனாயிருக்கின்றான். கடைசியில் அவன் காரியம் மோசமாகும். அவனுடைய பாட்டின் பலன் வெறும் எண்ணமேயாகும். கியாமத்து நாளில் அவனுடைய வறுமை வெளியாகும். வேஷம் வெளுத்துப் போகும். தப்பெண்ணம் பகிரங்கமாகும். அப்போது فكشفنا عنك غطاءك فبصرك اليوم حديد நாம் உன்னை விட்டும் உன் திரையைத் திறந்து விட்டோம், பின்பு உன் பார்வையானது இன்று கூர்மையா யிருக்கிறது என்று அவனுக்குச் சொல்லப்படும். அல்லாஹ் தஆலாவுடைய கிருபைகளினின்றும் ஒரு கிருபை யாதெனில், இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களைத் தன் அடி யார்களிடம் அனுப்பி இந்தக் கீமியாவின் முறையை அவர்களுக்குக் கற் றுக்கொடுக்கவும் கல்பாகிய முத்தைத் தெண்டிப்பென்னும் குகையில் வைக்கும் விதத்தையும், கல்பை அழுக்காக்குகின்ற கெட்ட குணங்களை விட்டு அதைச் சுத்தமாக்குகின்ற ஒழுங்கையும், நல்லகுணங்களை அடை யும் வழியையும் அவர்களுக்குக் காட்டும்படிக்கும் செய்ததேயாம். இதனாலேதான் அல்லாஹ் தஆலா தன் இராஜரீகத்தையும் மகத் துவத்தையும், பரிசுத்தத்தையும் குறித்துத் தன்னைப் புகழ்ந்திருக்கிறது போல் நபிமார்களை அனுப்பினதைக் குறித்து தன்னைத்தான் புகழ்ந்து தனது உபகாரத்தை வெளிப்படுத்தினான். அது வறுமாறு:—

يسبح لله ما في السموات وما في الارض الملك القدوس العزيز
الحكيم. هو الذى بعث في الامين رسولا منهم يتلوا عليهم ايته ويزكيهم
ويعلمهم الكتاب والحكمة وان كانوا من قبل لفى ضلال مبين

வானங்களில் உள்ளவைகளும் பூமியில் உள்ளவைகளும் அல் லாஹ் தஆலாவை இராஜரீக முள்ளவன், பரிசுத்தமானவன், மிகைப் புள்ளவன், பூராய முள்ளவன் என்று துதி செய்கின்றன. அவன்

* உம்மிகளில் நின்றும் ஒரு ரசூலை யெழுப்பி அவர்களுக்குத் தன்ஆயத்துக்களை ஓதிக்காட்டவும், அவர்களை சுத்தப்படுத்திச் செம்மையாக்கவும் அவர்களுக்குக் கிதாபையும், பூராயத்தையும் போதிக்கவும் செய்தான். முன்னே அவர்கள் பகிறங்கமான வழிகேட்டி லிருந்தார்கள்—என்பதை. அவர்களை சுத்தப்படுத்திச் செம்மையாக்குவ தென்பதற்கு பொருள் மிருகங்களுடைய குணமாயிருக்கிற கெட்ட குணங்களைவிட்டும் சுத்த மாக்குவ தென்பதேயாகும். கிதாபையும் பூராயத்தையும் போதிப்ப தென்பதின்பொருள், மலக்குகளுடைய குணமென்னும் உடையை அவர் களுக்கு உடுத்துவ தென்பதா யிருக்கும். இந்த கீமியாவைக் கொண்டு நாடப்பட்ட கருத்தென்ன வென்றால், மனிதன் தனக்குத் தகுமல் லாத காரியத்தைவிட்டு நீங்கி அதாவது, குற்றமான குணங்களைவிட்டுச் சுத்தமாகித் தனக்குத் தகுமான காரியத்தால் அதாவது, அழகான பூரண குணங்களால் திருந்துவதேயாம். இந்தக்கீமியாவின் மூலிகை யாதெனில், மனிதன் சுத்தமாக துன்யாவைவிட்டு முகந்திருப்பி அல்லா ஹுதஆலாவின் பக்கம் முகம் நோக்குவதா யிருக்கும். எப்படி யென்றால் அல்லாஹுதஆலா முதலில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு واذكر اسم ربك وتبتل اليه تبتيلا நீ உன் றப்புடைய நாமத்தை நினைப்பாயாக, இன்னும் எல்லாவற்றையும் விட் டொழித்து அவன் பக்கம் வருவாயாக என்று போதித்திருக்கிறான். எல்லாவற்றையும் விட்டொழிப்பதின் பொருள் யாதெனில், சகல பற் றும் நீங்கி எல்லா விதத்தாலும் தன்னை அல்லாஹுதஆலாவினிடம் ஒப்புவிப்பதேயாம். இதுவே இந்த கீமியாவுடைய மொத்தமான சங்கதி. இதன் விவரம் விரிவா யிருக்கிறது.

என்கினும் இதனுடைய † உன்வான் (அஸ்திவாசம்) நான்கு வஸ்துக்களை அறிவதின் பேரில் நிலைபெற்றதா யிருக்கின்றது. இன்னும் இதனுடைய ருக்குனு (தூண்) கள் நான்குவிதமான நடவடிக்கைகளா யிருக்கின்றன. ஒவ்வொரு ருக்னுக்கும் பத்து அஸ்லுகளுண்டு.

1-வது உன்வான் மனிதன் தன்னை அறிவது, 2-வது உன்வான் அல்லாஹுதஆலாவை அறிவது, 3-வது உன்வான் துன்யாவுடைய உண்மையை அறிவது, 4-வது உன்வான் ஆகிறத்துடைய உண்மையை அறிவது, இந்த நான்கு பொருள்களையும் அறிவது உண்மையில் இஸ் லாமுடைய ஆரம்பமா யிருக்கிறது. ஆனால் இஸ்லாமுடைய நடவடிக்கை களின் ருக்னுகள் நான்கில் இரண்டு ருக்குனுகள் பகிரங்க சம்பந்தமாயும்

* உம்மிகளில்-கல்லாத மாந்தர்களில்.

† உன்வான்-மேல்விலாசத்துக்கும் சொல்லப்படும்.

மற்றும் இரண்டு ருக்குனுகள் அந்தரங்க சம்பந்தமாயு மிருக்கின்றன. பஹிரங்க சம்பந்தமான இரண்டு ருக்னுகளில் முதலாவது ருக்குனு கிறது, அல்லாஹ் தஆலாவுடைய கட்டளைகளை நிறைவேற்றுவதா யிருக்கும். அது * இபாதத்து என்று சொல்லப்படும். இரண்டாவது ருக்குனுகிறது, அசைதல், அமர்தல், ஜீவனம் செய்தல் முதலிய நட வடிக்கைகளின் அதபைப் பேணுவதாயிருக்கும் இதற்கு ↑முஆமலாத்து என்று சொல்லப்படும். இனி அந்தரங்கசம்பந்தமான இரண்டு ருக் குனுக்களில் முதலாவது ருக்குனுகிறது கோபம், உலோபம், பொறுமை, கபடம், பெருமை முதலிய கெட்ட குணங்களை விட்டு கல்பைச் சுத்த மாக்குவதா யிருக்கும். இவ்விதமான குணங்கள் மனிதனுடைய கேடுக்குக் காரணங்களா யிருப்பதால் இவைகள் ‡ முஹ்லிகாத்து என்று சொல்லப்படும். இரண்டாவது ருக்குனுகிறது பொறுமை நன்றியறிதல், அல்லாஹ்வுடைய ஆசை, பொருத்தம், பாஞ்சாட்டல் முதலிய நற்குணங்களால் கல்பைத் திருத்துவதாயிருக்கும். இவைகள் ‖ முஞ்சியாத்து என்று சொல்லப்படும்.

இந்தக் கிதாபில் (மேற்கண்ட) நான்கு உன்வான்களையும் (நான்கு ருக்குனுகளில் உள்ள) நாற்பது அஸ்லுகளையும் = அவாம் களறியும் படி மிகத்தெளிவாய்ச் சொல்லி யிருக்கிறோம். இன்னும் நன்றாய் அறிய வேண்டும் மென்ற ஆசையுள்ளவர்கள் இஹ்யாஉல் உலூமுத்தீன், ஜவாஹிருல் குர்ஆன் முதலான நம்முடைய அறபி கிதாபுகளைப் பார்வை யிடவேண்டியது. சில சகோதரர்கள் இந்தக் கிதாபு பார்ஸியில் எழுதப் படவேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். அல்லாஹ் தஆலா அவர்களுடைய நிய்யத்திலும் என்னுடைய நிய்யத்திலும் † ரியா வந்து புகாதபடி காப்பாற்றுவானாகவும். அல்லாஹ் தஆலாவுடைய றஹ்மத் தைக் கொண்டு நான்வைக்கும் ஆதரவு யாதெனில், இதில் யாதொரு பிசகு வாமல் அவன் என்னைக் காப்பாற்றி நலவான காரியத்துக்கும் நான்வாற் சொல்கிறபடி அமல்செய்வதற்கும் நல்லுதவி புரிவான் என்பதே யாம். ஏனென்றால், அமலில்லாத சொல்லானது உபயோக மற்றதாயும் ஆகிறத்துடைய வேதனைக்குக் காரணமாயு மிருக்கின்றது. (நவூது பில்லாஹி மின்ஹா) சொல், செயல் இரண்டுக்கும் அல்லாஹ் தஆலா நமக்கு நல்லுதவி புரிவானாக,

---

*இபாதத்து—வணக்கங்கள். ↑ முஆமலாத்து—லௌகீக முறை மைகள். ‡ முஹ்லிகாத்து—கெட்டழியச் செய்பவை. ‖ முஞ்சியாத்து —ஈடேறச் செய்பவை. = அவாம்—சாமானியர். † ரியா என்பது அல்லாவுக்கன்றி பிறிதோன்றை இச்சித்து யாதொரு காரியத்தைச் செய் வது அல்லது விடுவதாம். இவ்விடத்திற் புகழாசை எனிற் பொருந்தும்.

بسم الله الرحمن الرحيم

கீமியாயெ ஸஆதத்து.

1–வது உன்வான்.

தன்னை அறிவது.

அறிந்து கொள்ளுங்கள்:—அல்லாஹ்¨ தஆலாவை அறிவதற்குத் திறவுகோலாகிறது, மனிதன் தன்னுடைய நப்ஸை அறிவதாயிருக்கும். இதனாலே தான் من عرف نفسه فقد عرف ربه எவன் தன் நப்ஸை அறிந்தானோ திடனாக அவன் தன் ரப்பை அறிந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலேயே அல்லாஹ்¨ தஆலா سنريهم ايا تنا في الافاق وفي انفسهم حتى يتبين لهم انه الحق நம்முடைய உண்மை அவர்களுக்கு வெளியாகும்படி உலகத்திலேயும் அவர்களுடைய நப்ஸ்¨களிலேயும் நம்முடைய திருஷ்டாந்தங்களை நாம் அவர்களுக்கு காட்டுகிறோம் என்று திருவுளமாயிருக்கிறான்.

அருமையானவனே! படைக்கப்பட்ட எல்லா வஸ்துக்களிலும் உனக்கு அதிக சமீபமாயிருப்பது நீயே யன்றி வேறொன்றுமில்லை. பின்பு (உனக்குச் சமீபமாயிருக்கிற) உன்னையே நீ அறியாமற்போனால் மற்றதை எப்படி அறியப்போகிறாய். ஒருக்கால் நான் தன்னை அறிவேனென்று சொல்ல வருவாய், ஆகிலும் அது தப்பாகும். ஏனென்றால், நீ உன் தலை, முகம், கை, கால் முதலிய வெளியுறுப்பான மாம்சத்தை அறிந்து கொண்டாய். இன்னும் அந்தரங்கத்துடைய சங்கதி எவ்வளவு அறிந்திருக்கிறாயென்றால், பசியெடுத்தால் பருக்கை தின்னுகிறாய், கோபம் வந்தால் ஒருவரைக் காய்ந்துவிழுகிறாய், காமம் மீறினால் கலவிசெய்கிறாய். மிருகங்களும் தன்னை இவ்விதமாய் அறிந்திருக்கின்றன. இப்படியாகத் தன்னை அறிவது அல்லாஹ்¨ தஆலாவை அறிவதற்குத் திறவுகோலாகமாட்டாது. சகலமிருகங்களும், பிராணிகளும் இது விஷயங்களில் உன்னோடு ஒத்திருக்கின்றன. ஆனதால் தன் அஸலு என்னும் மூலப்பொருளைத் தேடுவது உனக்கு விதியாயிருக்கும். அதாவது நீ யென்ன பொருள்? எங்கிருந்து வந்தாய்? எங்கு போவாய்? இங்கு ஏன் வந்தாய்? உன்னை இவ்விடத்திற்கு ஏன் கொண்டு வரப்பட்டது? உன் நற்பதவி என்ன? அது எதில் இருக்கிறது? உன்

றற்பதவி என்ன? அது எதிலிருக்கிறது? உனக்குள்ளே சேர்க்கப்பட்டிருக்கிற குணங்களிற் சிலது மேய்கிற மிருகங்களின் குணமாயும், சிலது துஷ்ட மிருகங்களின் குணமாயும், சிலது ஷைத்தான்களுடைய குணமாயும், சிலது மலக்குகளுடைய குணமாயு மிருக்கின்றனவே; இவை அடங்கலில் நின்றும் நீ யார்? மற்றக் குணங்கள் உனக்கு அன்னியமாகி உனக்குச் சொந்தமாயிருக்கிற உன் குணமெது? இவைகளை நீ அறியாத வரையில் தன் நற்பதவியைத்தேட உன்னுல் முடியாது. மேற்சொன்ன மேய்கிற மிருகங்கள், துஷ்டமிருகங்கள், ஷைத்தான்கள், மலக்குகள்முதலான சிருஷ்டிகளில் நின்றும் ஒவ்வொன்றின் ஊணும், உன்னதபதவியும் வெவ்வேறுயிருக்கின்றன. அதெப்படியென்றுல் மேய்கிற மிருகங்களுடைய ஊணும, பதவியும் யாதெனில்; தின்னல், தூங்கல், புணரல் இவைகளேயாம். . நீயும் அம்மிருகங்களிற் சேர்ந்தவனுகில் இராப்பகலாய்த் தின்னவும், தூங்கவும், புணரவும் முயற்சியாயிரு. துஷ்ட மிருகங்களுடைய ஊணும், பதவியும் என்னவென்றுல் சிறிப்பாய்வதும், பீறிக்கொல்வதுமேயாம். ஷைத்தான்களுடைய ஊணுகிறது கலகம் எழுப்புவதும், கபடம் செய்வதுமேயாம். நீயும் அவற்றைச் சேர்ந்தவனுகில், அத்தொழிலே நடாத்தித் தன் பதவியைப்பெற்றுக் கொள். மலக்குகளுடைய ஊணும், பதவியுமாகிறது அல்லாஹுதஆலாவுடைய ஜமாலைத் தரிசிப்பதாயிருக்கும். அவர்கள் ஆசை, கோபம் இவைகளை விட்டும் இன்னும் மேய்கிற மிருகம் துஷ்ட மிருகம், இவைகளுடைய குணங்களை விட்டும் நீங்கி யிருக்கிறர்கள். நீ மலக்குகளுடைய ஆதாரமுள்ளவனு யிருப்பாயாகில், அல்லாஹுதஆலாவை அறிவதற்கும், அவனுடைய ஜமாலைத் தரிசிப்பதில் பயனடைவதற்கும், ஆசை, கோபம் இவைகளைவிட்டு நீங்குவதற்கும் பிரயாசைப்படு. இன்னும் மிருகக்குணம் முதலான இதர குணங்கள் உன்னில் ஏன் படைக்கப்பட்டிருக்கின்றன வென்று ஆராய்ந்துபார். அவைகள் உன்னைச் சிறையாக்கித் தங்கள் பணிவிடையில் வைத்து இராப்பகலாய் உன்னை வேலை கொள்ளவா? அல்லது நீ அவைகளைச் சிறைபடுத்தி உனக்கு நேரிட்டிருக்கிற ஸபரில் (யாத்திரையில்) அவற்றுள் ஒன்றை வாகனமாகவும், ஒன்றைச் சுமை தூக்கியாகவும், ஒன்றை ஆயுதமாகவும் அமைத்து கொள்ளவா? அல்லது நீ தங்கியிருக்கிற இந்த (துன்யா வென்னும்) மன்ஜிலில் அவைகளை வேலை கொண்டு அவற்றின் உதவியால் தன் நற்பதவிக்குரிய விதையை விதைக்கவா? அல்லது வேறு எதற்காக அவைகளை உன்னில் படைத்திருக்கிற தென்று நோட்ட மிட்டு அறி. எப்போது நற்பதவிக்குரிய விதையின் பலனை நீ அடைந்தாயோ அப்போது நீ அவைகளை அடக்கியாண்டு தன் உன்னத பதவிக்குரிய ஸ்தானத்தில் வந்துசேர்ந்தாய். கவாஸ்ஸு என்னும்

சிறப்புற்ற ஜனங்கள் இந்த ஸ்தானத்திற்கு அல்லாஹு தஆலாவுடைய திருச்சமுகம் என்று சொல்லுகிறார்கள். அவாம் என்னும் சாமானிய ஜனங்களிடத்தில் இந்தஸ்தானத்தைக் கொண்டு கருதிய பொருள் சொர்க்கமா யிருக்கும்.

இந்த எல்லாச் சங்கதிகளையும் அறிவது உனக்கு அவசியமா யிருக்கிறது. அப்படி அறிந்தாயாகில் தன்னை அறிவதென்பது உனக்கு ஏதோ கொஞ்சம் தெரியலாகும். எவன் இந்தச்சங்கதிகளை அறிய வில்லையோ அவன் நீனுடைய மேற்றோலான உமியைக் கண்டானே யன்றி அதன் உட்பொருளான மணியை அறியவில்லை.

(பஸல்) அருமையானவனே! நீ தன்னை அறிய நாடுவாயாகில் அறிந்துகொள்:—உன்னை இரண்டு வஸ்துக்களால் உண்டாக்கி யிருக் கிறது, அதில் ஒன்று சரீரம் என்று சொல்லப்படுகிற இந்தப் பகிரங் கமான கூடு. இதை முகக்கண்ணுற் பார்க்கிறோம். மற்றொன்று அந்தரங்கமான பொருளாயிருக்கும். அது நப்ஸு என்றும் ரூஹு என்றும் கல்பு என்றும் சொல்லப்படுகின்றது. அதை அகக்கண் ணுற் காணலாம்; முகக்கண்ணுற் காண முடியாது. அந்தரங்கமான அந்தப் பொருள்தான் "நீ" என்பது. அதைத்தவிர உள்ளனவெல் லாம் அதைத் தொடர்ந்தவைகளாயும் அதற்கு வேலை செய்யும் ஊழியர்களாயு மிருக்கின்றன. அந்தரங்கமான அந்த பொருளுக்கு நாம் கல்பு என்று பேர் வைப்போம். ஆதலால் கல்புடைய சங்கதி யைக் குறித்து நாம் பேசும்போது அந்தரங்கமான அந்தப்பொரு ளைக்கருதியே பேசுகிறமென்று நீ எண்ணிக்கொள். சில சமயம் அதை ரூஹு என்றும் சில வேளை நப்ஸு என்றும் சொல்வோம். கல்பு என்றது மார்பின் இடது பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற 'இருதய கமலம்' என்னும் இந்த இரைச்சித் துண்டை அல்ல. எனென்றால் இதற்கு யாதொரு பெருமையு மில்லை. மிருகத்துக் கும், பிணத்துக்குகூட இந்தக் கமலம் இருக்கின்றது. வெளிக்கண் ணால் இதைக் காணலாம். இந்தக் கண்ணுக்குப் புலப்படுகிற எந்த வஸ்தும் ஆலமுஷ்ஷஹாதத்தைச் சேர்ந்ததாகும். நாம் சொல்கிற கல்பு இந்த ஆலத்தைச் சேர்ந்ததல்ல. ஆனால் அது இந்த ஆலத்துக்கு மூஸாபிராய் (பரதேசியாய்) வந்திருக்கிறது. அந்த இரைச்சித் துண்டு அதன் வாகனமாயிருக்கிறது. தேகத்தின் உறுப்புகளெல்லாம் அதற்கு ஊழியர்களா யிருக்கின்றன. அது தேகமுழுமைக்கும் அரசனு யிருக்கிறது. அல்லாஹு தஆலாவை அறிவது அவனுடைய ஜமாலத் தரிசிப்பது அதன் குணமாயிருக்கும். தக்லீ என்னும் விதி விலக்கும் அதற்கே; கீதாபு என்னும் விளித்தலும் அதை நோக்கியே; அதிபும் அதன் பேரிலேயே; நற்பதவியும் தற்பதவியும் அதற்கே சம்

பந்தப்பட்டதா யிருக்கிறது. இவை யெல்லாவற்றிலும் சரீரம் அதைத் தொடர்ந்ததா யிருக்கும். அதையும் அதன் இயற்கையான குணத்தை யும் அறிவது அல்லாஹ்வை அறிவதற்குத் திறவுகோலாகும். ஆகையால் நீ அதை அறியமுயலு. ஏனென்றால் அது விலை உயர்ந்த மாணிக்கமா யும் மலக்குகளுடைய இனத்திலுள்ளதாயு மிருக்கின்றது. அதனு டைய எதாஸ்தானம் அல்லாஹ் தஆலா வுடைய திருச்சமூகமாயிருக் கும். அவ்விடத்திலிருந்துதான் அது வந்திருக்கிறது, மீண்டும் அவ் விடத்திற்கே போகும். வர்த்தகத்திற்காகவும், பயிர் செய்வதற்காகவும் இங்கு சபராய் வந்திருக்கிறது. வர்த்தகத்துடையவும், பயிர் செய்கிறத் துடையவுமான அர்த்தம் பின்னால் உனக்குத் தெரிய வரும்.

(பஸல்) அருமையானவனே! அறிந்துகொள்:— கல்பு என்னும் ஒரு பொருள் உண்டென்பதை நீ உணர்ந்து கொள்ளாத வரையில் அது இத்தன்மையானதென்று நீ அறிய மாட்டாய். ஆகையால், முன்னே அது என்ன பொருள் என்பதையும், பின்பு அதன் சேஷ னைகளையும், பின்பு அச்சேஷனைகளுடன் அதற்கிருக்கிற சம்பந்தத்தையும், பின்பு அதன் இயற்கைக்குணமான ஹக்குடைய மஃரிபா அதற்கு எப்படி சித்திக்கின்ற தென்பதையும், இந்த மஃரிபாவினால் அது எப் படித் தன் பதவியை அடைகின்ற தென்பதையும் நோட்டமிட்டு அறி வாயாக. இவை ஒவ்வொன்றையும் விளக்கிச் சொல்லப்படும்.

ஆனால் கல்பு உண்டென்பது பகிரங்கமாயிருக்கின்றது. ஏனென் றால் மனிதனுக்குத் தன் இருப்பில் யாதொரு சந்தேகமில்லை. அவனு டைய இருப்பு அவன் சரீரமாகிய வெளிக்கூட்டைப் பொருத்ததல்ல. பிணத்துக்கும் சரீரம் இருக்கிறது உயிரில்லை. அந்த கல்பு என்று நாம் சொல்வதில் ரூஹினது சுயார்த்த ரூபத்தையே கருதுகிறோம். இந்த ரூஹ் போனால் சரீரம் பிணமாகும். ஒருவன் தன் கண்ணை மூடித் தன் சரீரத்தையும், வானம், பூமி இவைகளையும் மற்றும் கண் ணுற் காணக்கூடிய வஸ்துக்களையும் மறந்து போவானாகில் அப்போதும் தன் இருப்பை அறிகின்றான். அவனுக்குத் தன் சரீர உணர்ச்சியும் வானம் பூமி இவற்றிலுள்ள எல்லா வஸ்துக்களின் உணர்ச்சியும் இல்லா மற்போனாலும் தன் சுய உணர்ச்சி யிருக்கின்றது. ஒருவன் இது விஷயத்தில் நன்று யோசிப்பானாகில் ஆகிறத்துடைய ஹகீகத்தை (மறு மையின் எதார்த்தத்தை) அறிந்து கொள்ளுவான். இன்னும், சரீ ரத்தை அவனிடமிருந்து பிடுங்கிக் கொண்டால் அப்போதும் தான் அழியாமல் நிலைத்திருப்பா னென்பதையும், தெரிந்து கொள்ளுவான்.

(பஸல்) கல்பு இன்னதென்றும் அதற்குரித்தாகிய இலக்ஷணம் இன்ன தென்றும் நிரூபயித்துச் சொல்ல மார்க்க உத்தரவில்லை. இதி னாலே தான் ஜனங்கள் ரஸூலில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்க் ளிடத்தில் அதைக் குறித்துக் கேட்டபோது தாங்கள் அதை விளக்கிச்

சொல்ல வில்லை, அதெப்படி யென்றால், அல்லாஹ்¬ தஆலா குர்ஆனில். ويسئلونك عن الروح قل الروح من امر ربي இன்னும் ரூஹைகுறித்து உம்மைக் கேட்கிறார்கள். ரூஹாகிறது என் றப்புடைய அமரில் நின்றுமா யிருக்கும் என்று நீர் சொல்லும் எனத் திருவுளமா யிருக்கிறான். ரூஹா கிறது அல்லாஹ்வுடைய காரியங்களின் தொகையில் நின்றுமா யிருக்கு மென்றும் ஆலமுல் அம்று வில் நின்று முள்ள தென்றும் சொல்வதற்கு மேல் * அதிகமாய்ச்சொல்ல உத்தரவு கிடைக்கவில்லை. ولله الخلق والامر கல்தும் அம்றும் அல்லாஹ்¬ தஆலாவுக்கே உரியவை. ஆலமுல் கல்கு வேறே, ஆலமுல் அம்று வேறே, எந்த வஸ்துவில் அளவுக்கும் மட்டு திட்டத்துக்கும் இடமுண்டோ அது ஆலமுல் கல்கு என்று சொல்லப் படுகின்றது. எனெனில் லுகத்து என்னும் அரபி இலக்கியத்தில் கல்கு என்பதற்குப் பொருள் மட்டுபடுத்துகிறதா யிருக்கும். மனிதனுடைய கல்புக்கு மட்டு திட்டமில்லை. ஆனதனால் அது பாகத்தை ஏற்பதல்ல. பாகத்தை ஏற்பதாயிருந்தால் அதன் ஒரு பக்கத்தில் ஒரு வஸ்துவின் அறியாமையும் மற்றொரு பக்கத்தில் அந்த வஸ்துவின் அறிவும் உண்டா யிருப்பது கூடுமாயிருந்தது. அப்படி யிருந்தால் ஒருவன் ஒரே சமயத்தில் ஒரு வஸ்துவை அறிந்தவனுகவும் அறியாதவனுயு மிருப்பான். இதவோ ஒவ்வாத சங்கதி. இந்த ரூஹ்¬ பாகத்தை ஏற்காததாயும் மட்டு திட்டத்துக்கு இடமில்லாததாயு மிருப்பதுடன் படைக்கப்பட்டதா யிருக்கின்றது. இன்னும் கல்கு என்று மட்டு படுத்துவதற்குச் சொல்கிறதுபோல் படைக்கிறதற்கும் சொல்லப் படுகின்றது. இதன்படி ரூஹை ஆலமுல் கல்கு என்று சொல்லலாம். முன் சொன்ன பொருளை நோக்க ஆலமுல் அம்று என்று சொல்ல வேண்டும். ஆலமுல் கல்கு என்று சொல்லப்படாது. ஏனென்றால் ஆலமுல் அம்று என்று அளவுக்கும் மட்டு திட்டத்திற்கும் இடமில்லாத பொருளைச் சொல்லப்படுகின்றது. பின்பு சிலர் ரூஹை கதீம் (அனாதி) என்று சொல்லுகிறார்களே அது தப்பு. இன்னும் சிலர் அதை அர்லு

---

*அருள் தங்கிய இந்நூலாசிரியரான ஹலரத் இமாம் முஹம்மது சஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் தஸ்னீபு செய்த ஹல்லுல் மஸாயிலில் காமிலா என்னும் அரபி கிதாபுக்கு முபுத்தீ ஷாஹ்¬த்தீன் என்பவர் ஹிந்துஸ்தானி பாஷையில் உரை எழுதி அதற்கு ஹகீகத்து ரூஹி இன்ஸானி என்று பெயரிட்டிருக்கிறார். அதில் "ரூஹ்¬ என்பது என்ன?" என்ற வினவின் விடைக்குச் சார்பாக அவர் ஹாஷியாவில் விரிவான ஒரு நோட்டெழுதி யிருக்கிறார். அந்நோட்டின் தமிழுரை சுருக்கமாக அடுத்த 11-வது பக்கத்திலிருந்து நோட்டாக வரையப்படு கிறது. உற்றுணர்க:—

(ரூ) என்ற எழுத்து உள்ளவைகளெல்லாம் இதனைச் சேர்ந்ததென்றறிக.

என்று சொல்லுகிறதுந் தப்பு. ஏனென்றால், அர்லாகிறது தன்னில் தான் நிலையான ஆதாரப் பொருளல்ல; ஒன்றை அண்டி நிற்கிற ஆதேயப் பொருளாம். மனிதனுடைய ரூஹோ தன்னில் தான் நிலையான † ஜௌஹர் என்னும் ஆதாரப் பொருள். சரீரம் முழுமையும் அதைத் தொடர்ந்ததா யிருக்கிறது. இப்படியா இருப்பதில் ரூஹு எப்படி அர்லாகும். இன்னும் சிலர் ரூஹை ஜிஸ்மு (சடம்) என்று சொல் கிறது தப்பு, ஏனென்றால் ஜிஸ்மு பாகத்தை ஏற்கின்றதா யிருக்கிறது. ரூஹு பாகத்தை ஏற்பதல்ல. ஆனால், வேறே ஒரு வஸ்து உண்டு அதையும் ரூஹு என்று சொல்லுகிறார்கள். அது பாகத்தை ஏற்கும். என்கினும் அந்த ரூஹு மற்றும் ஜீவராசிகளுக்குள்ளதா யிருக்கும். நாம் கல்பு என்று சொல்லுகிற இந்த ரூஹு ஹக்கை அறியுமிடமா யிருக்கும். மற்றும் ஜீவராசிகளுக்கு ‡ இந்த ரூஹு இல்லை. இந்த ரூஹு ஜிஸ்மென்னும் சடமுமல்ல. அர்லென்னும் ஆதேயப் பொருளு மல்ல. மலக்குகள் போல் ஜௌஹரான ஒரு ஆதாரப் பொருளா யிருக்கிறது, இதன் உண்மையை அறிவது மகாகஷ்டம். இதை விளக்கிச் சொல்லவும் உத்தரவில்லை. சுலூக்கு என்னும் நடப்பின் ஆரம்பத்தில் இதை அறியத் தேவையுமில்லை. ஏனென்றால் தீனில் மூன்றி பாடுபடுவது அவசியம். ஒருவன் பாடுபடுவதற்குள்ள விதிகள் வழுவாமல் பாடுபடுவானுகில் பிறரிடத்தில் கேட்பதன்றி தானுகவே இந்த மஃரிபா அவனுக்கும் உண்டாய் விடும். இப்படித் தானு

---

† ரூஹை ஒரு ஜௌஹராகச் சொன்னதில் முத்தஹையிஸான ஜௌஹர் என்பதல்ல. அதாவது யாதொரு தலத்தின் ஒரு கோணத் தைத் தனக்கு இடமாகக் கொண்டிருக்கிற ஆதாரமான அணுவென்ப தல்ல; அது தலத்தில் விடுதி விட்டிருப்பதை விட்டும் சுத்தமான ஆதா ரப் பொருள். இவ்விதமாக கஸ்ஸாலி இமாமவர்களே தங்கள் ஹல்லுல் மாஸாயிலில் காமிலா என்னும் அறபி கிதாபில் எழுதி யிருக்கிறார்கள்.

‡ மற்றும் ஜீவராசிகளுக்கு எந்த பரிசு ரூபரச கந்தங்களை அறியும் செவியாதி ஐம்புல ணுணர்ச்சி யிருந்தாலும் ஆகிறத்து என்னும் பரலோக சாதனத்தைத் தேடும் மனவுணர்ச்சி யில்லாமையினால் அவைகளுக்கு இந்த ரூஹு இல்லை யென்பது ஏற்கத்தக்கதே.

(ரு) ரூஹை குறித்து விகர்ப்பமான பல சொற்கள் சொல்லப்பட் டிருக்கின்றன. ஹலரத் ஜுனைது பக்தாதி றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்களும் அவர்களைப் பின்பற்றினவர்களும் ரூஹு என்ற பொருள் உண்டு என்பதை ஒப்பினார்களே தவிர மற்றப்படி அதன் எதார்த்த ரூபத்தைக் குறித்து ஒன்றும் விவரித்துச் சொல்லவில்லை. மேலும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே அதைக் குறித்து அதிகமாக விவரிக்க வில்லையாதலால் அதில் வாதிக்க நமக்கு உத்திர வில்லை யென்றும் சொல்லி விட்டார்கள்.

கவே உண்டாகிற இந்த மஃரிபா எதைச் சேர்ந்த தென்றால், யார் நம்மில் பாடுபட்டார் களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டுவோம் என்று அல்லாஹ¨ தஆலா அருளின ஹிதாயத்திற் சேர்ந்ததா யிருக்கும். எவன் இன்னும் பாடுபட்டு முடிக்க வில்லையோ அவனிடத்தில் ரூஹ¨டைய ஹகீகத்தை (அதன் சுயார்த்தத்தை) விளக்கிச் சொல்வது கூடாது. ஆனால் பாடுபடுவதற்கு முன்னே கல்புடைய சேஷ்டைகளை அறிவது அவசியமா யிருக்கும். ஏனென்றால் எவன் கல்புடைய சேஷ்டைகளை அறியவில்லையோ அவனால் போர் செய்ய முடியாது.

(பஸல்) அறிந்து கொள்:—சரீரமானது கல்புடைய இராஜ்ஜியமா யிருக்கிறது. இந்த ராஜ்ஜியத்தில் கல்புடைய சேஷ்டைகள் பலவா யிருக்கின்றன. وما يعلم جنود ربك الا هو இன்னும் உன் ரப்புடைய சேஷ்டைகளை அவனன்றி மற்றவன் அறியான் என்றது இதைக் குறித்த வாக்கியமாகவே யிருக்கிறது. கல்பை ஆகிறத்துக்காக உண்டாக்கி யிருக்

(ரு) ஆனால் ரசூல் ஸல்லல்லாஹ¨ அலைஹிவஸல்லமவர்கள் ரூஹானது என் ரப்புடைய அம்ரில் நின்றுமா யிருக்கு மென்பதைத் தவிர வேறேன்றும் விவரித்துச் சொல்லவில்லை என்ற நியாயத்தினால், நாம் ரூஹைக் குறித்து அதிகமாக ஒன்றும் பேசக்கூடா தென்றுவது அதன் எதார்த்த ரூபம் எந்த ஒலிமாருக்கும் தெரியா தென்றுவது பரிபாகி களுக்கு அதன் ஹகீகத்தைச் சொல்லக்கூடா தென்றுவது ஏற்படாது. ரூஹானது என் ரப்புடைய அம்ரில் ஒன்று யிருக்கு மென்பதைத் தவிர அவர்கள் அதிகமாக விவரிக்காத காரணம் என்ன வென்றால், 1-வது அதைக் குறித்து வினவிய முஷ்ரிக்குகளுக்கு அதன் ஹகீகத்தை விளங்கிக் கொள்கிற சக்தி யிருந்ததில்லையாதலால், அதை விளக்கிச் சொல்ல வில்லை. 2-வது ரூஹ¨ என்ற பதம் பல பொருள்களில் வழங் கப்படுகிறது. ரூஹ¨ இன்ஸானிக்கும், ரூஹ¨ ஹைவானிக்கும், தலை மூளையின் தத்துவமான ரூஹ¨ நப்ஸானிக்கும், குறுஆனுக்கும், மகத் தான சிருஷ்டி யென்ற மலக்குக்கும், ஈஸா அலைஹிஸ்ஸலாமுக்கும், ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் முதலியவர்களுக்கும் ரூஹ¨ என்ற பதம் வழங்கப்படுவதாக யிருந்ததால் யூதர்களுடைய போதனையின் மேல் குறைஷி கனவான்களில் ஒருவனான நசுருபுனுஹாரிஸ் என்பவன் ரசூல் ஸல்லல்லாஹ¨ அலைஹி வஸல்லமவர்களிடத்தில் ரூஹைக் குறித்து கேள்வி கேட்டான். அப்படி கேட்டதில் ரூஹ¨டைய பல பொருள்களில் நாயகமவர்கள் எந்தப் பொருளைச் சொன்னாலும் இதைப் பற்றி நான் கேட்கவில்லை யென்று அவன் மறுத்து ஹலரத்தவர் களை ஆஜிஸாக்க வேண்டு மென்ற கெட்ட எண்ணத்துடன் கேட்டிருக் கவும் கூடும். ஆதலால் மீண்டும் அவன் சுவால் செய்ய விடமில்லாத படி ஜவாபு சொல்வதற்காக ரூஹானது என் ரப்புடைய அம்ரில் ஒன் றேனச் சொல் என்று உத்திரவாயிற்று.

கிறது, அதன் வேலை நற்பதவியைத் தேடுவதாயிருக்கும். அதன் நற்பதவியாகிறது அல்லாஹு தஆலாவை அறிவதின் பேரில் நிலை பெற்றதாயிருக்கிறது. அல்லாஹு தஆலாவை அறிவதென்பது அவனுடைய படைப்புகளை அறிவதினால் உண்டாகும். அவனுடைய படைப்புகளென்பது சர்வ லோகங்களுமேயாம். உலகங்களின் புதுமைகளை அறிவதற்கு, வெளிப்புலன்களும் உட்புலன்களும் வேண்டும். அந்தப் புலன்களைத் தாங்கிநிற்கச் சரீரம் தேவையாயிருக்கிறது. பின்பு மஃரிபா வாகிறது கல்புக்கு ஒரு வேட்டையாயும் புலன்கள் அதற்கு வலையாயும், சரீரமானது அதேறும் வாகனமாயு மிருக்கின்றன. இதனால் தான் அதற்குச் சரீரம் தேவையாயிற்று. சரீரமோ மண், தண்ணீர், சூடு, குளிர்ச்சி இவைகளால் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனாலேதான் அது எனதிசையிலிருக்கிறது. இன்னும் உள் அபாயம், வெளி அபாயமென இருவித அபாயங்களால் அது மாளும் கதியிலிருக்கிறது. உள் அபாயம் என்பது பசி தாகம் முதலியவைகளாம். இதற்காக ஊணும் குடிப்பும் தேவையாயிற்று. வெளி அபாயமென்பது ஜலத்தாலும் அக்கினியாலும் சத்துருக்களாலும் துஷ்ட மிருகங்களாலும் சம்பவிக்கிற ஆபத்துகளேயாம். இந்த ஆபத்துகளில் நின்றும் தப்பித்துக் கொள்ள அதற்குச் சேனைகள் தேவையாயின. இந்தச் சேனைகளும் இருவகைப்பட்டிருக்கின்றன. ஒன்று கை, கால் முதலியனபோல் வெளிரங்கமான சேனை. மற்றொன்று ஆசை, கோபம் முதலியன போல் அந்தரங்கமான சேனையாம். காணுத ஊணைத் தேடுவதும் காணுத பகையினைத் தட்டிவிலக்குவதும் சாத்தியப்படாதாகையால் அதற்குப் புலன்கள் தேவையாயின. அப்புலன்களிற் சிலது வெளிரங்கமானவை, சிலது அந்தரங்கமானவை வெளிரங்கமான புலன்களாவன:- கண், காது, மூக்கு, மெய், வாய் முதலிய ஐம்பொறிகளை அண்டிநிற்கும் சக்திகளான பார்வை, கேள்வி, வாசனை, சுவை, பரிசம் என்னும் ஐயறிவுகளாம். அந்தரங்கமான புலன்களாவன குவ்வத்து முத்தகய்யிலா, குவ்வத்து முத்தபக்கிரா, குவ்வத்து ஹாபிஸா,

---

(ரு)இன்னும் சிலர் எழுதியிருப்பதாவது: சுல்கர்னைனையும் அஸ்ஹாபுல் கஹ்பையும் ரூஹையும் குறித்துக்கேட்ட மூன்று கேள்விகளில் இரண்டு கேள்விக்கு அதாவது சுல்கர்னைன், அஸ்ஹாபுல் கஹ்பு இவர்களைக் குறித்து கேட்டகேள்விக்கு விடையாக அவர்களுடைய சரித்திரங்களை எடுத்துச் சொல்வதும் ரூஹைக்குறித்த கேள்வியின் விடையில் விஸ்தரிக்காமலிருப்பதும் ஆகிர்ஜமானுடைய நபியவர்களின் நுபுவ்வத்துக்கு ஒரு அடையாள மென்று அவர்கள் அறிந்தே அக்கேள்விகளை விடுத்தார்கள். ஏனெனில், அவர்களுடைய கிதாபுகளில் ரூஹினது ஹகீகத்தைக்குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆதலால் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் நசுருபுனுஹாரிஸ் என்பவனுக்கு அவன் எதார்த்த ரூபத்தை எடுத்தோத வில்லை என்பதே.

குவ்வத்து முத்தஜக்கிரா, குவ்வத்து வாஹிமா என்பனவாகிய ஐந்து சக்திகளேயாம். இந்த சக்திகள் இருக்கும் இடம் தலேமூளேயா யிருக்கும். இந்த சக்திகளில் நின்றும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சொந்தமான தொழில் இருக்கிறது. இவற்றுள் எதிலாவது ஏதேனும் கெடுதி சம்பவிக்குமாகில் மனிதனுடைய இகபரகாரியங்கள் கெடுதியை அடையும். இந்த வெளிரங்கமும் அந்தரங்கமுமான எல்லாச் சேனைகளும் கல்புடைய அதிகாரத்தின் கீழிருக்கின்றன. கல்பானது இவை எல்லாவற்றிற்கும் பாதுஷாவா யிருக்கிறது. அது நாவுக்கு உத்தரவு செய்தால் உடனே அது பேசுகின்றது. கைக்குஉத்தரவு கொடுத்தால் அது யாதொன்றை வாங்குகின்றது. காலுக்கு ஏவல் செய்தால் அது நடக்கின்றது. கண்ணுக்கு உத்தர வளித்தால் அது பார்க்கின்றது. யோசிக்கும் சக்திக்கு உத்தர வளித்தால் அது யோசிக்கின்றது. இவையெல்லாம் அதன் ஊழியர்களாய்ப் படைக்கப்பட்டிருக்கின்றன. எதற்கெனில் மனிதன் தன்னுடைய தங்கரிப்புகளேத் தயார் செய்து தன் வேட்டையைப்பிடித்து ஆகிரத்துடைய வர்த்தகத்தை முடித்து தன்னுடைய நற்பதவிக்குரிய விதையை விதைத்துக் கொள்ளு மளவும் சரீரத்தைக் காப்பதற்கேயாம். கல்புக்கு இந்தச் சேனைகள் வழிபடுவ தானது அல்லாவுக்கு மலக்குகள் வழிபடுவது போலாயிருக்கும். மலக்குகள் அல்லாஹ¨ தஆலாவுடைய எந்த உத்தரவுக்கும் மாறு செய்கிறதில்லே. மேலும் சந்தோஷத்துடனும் விருப்பத்துடனும் வழி பட்டு வருகிறார்கள்.

(பஸல்) கல்புடைய சேனைகளே விபரித்துச் சொல்ல வேண்டு மானுல் அது மிகவும் நீளமாகும். ஆனுல் அதன் கருத்து ஒரு உப மானத்தால் உனக்குத் தெரியலாகும். அந்த உபமானம் இதோ சொல்லப்படுகிறது அறிந்துகொள்:— சரீரமானது ஒரு பட்டணம் போலும், கை, கால் முதலிய உறுப்புகளானவை அந்தப் பட்டணத் திற்கு வேண்டிய தொழிலாளிகள் போலும், ஆசையானது தாசில் தாரன் போலும், கோபமானது கொத்துவால் போலும், கல்பானது அந்தப் பட்டணத்தையாளும் அரசன் போலும், புத்தியானது அவ் வரசனுடைய மந்திரி போலும் இருக்கின்றன. இராஜ்ஜியத்தின் பந்தோ பஸ்துக்காக அரசனுக்கு இவர்களெல்லாரும் தேவையா யிருக்கிறார்கள்.

(ரு) ஆகவே ரூஹானது என் ரப்புடைய அம்ரில் ஒன்றெனச் சொல்லேன்று ரசூல் ஸல்லல்லாஹ¨ அலேஹி வஸல்லமவர்களுக்கு உத்தரவு செய்ததினுல் எவ்விதத்திலும் பரிபாகிகளுக்கு அதன் எதார்த்த ரூபத்தை எடுத்தோதக்கூடாதென்றுவது அல்லது ரசூல் ஸல்லல்லாஹ¨ அலேஹி வஸல்ல மவர்களுக்கு அதன் ஹகீகத்து தெரியா தென்றுவது அல்லது எந்த ஒலிமாருக்கும் அதன் நிசவடிவம் நிஷ்கரமாகவில்லே யென்றுவது ஏற்படாது. இது அனுபவம்.

ஆனல் இந்த ஆசையென்னும் தாசில்தாரன் பொய்யனுயும், வரம்பு கடக்கிறவனுயும் கடுபடி செய்கிறவனுயு மிருக்கிறன். இவன் புத்தியாகிய மந்திரி சொல்கிறதைக் கேட்காமல் அவனுக்கு மாற்றம் செய்து கொண்டிருக்கிறன். எப்போதும் தீர்வை, தீர்வை, என்ற சாக்கு சொல்லி இராஜ்ஜியத்திலுள்ள பொருளே யெல்லாம் பிடிங்கிக்கொள்ளப் பார்க்கிறன். கோபமென்னும் கொத்துவாலானவன் மிகத் துஷ்டனுயும் தூர்க்குணனுயு மிருக்கிறன். இவன் ஒவ்வொருவரையும் அடித்துக் கொல்லவும் கை, கால்களே முறிக்கவும், வாரியெறியவும் நாடுகின்றன். பட்டணத்தை யாளும் அரசன் ஒரு விஷயத்தை மந்திரியிடம் ஆலோசித்துப் பின்பு அவன் மூலமாய்க் கீழ் அதிகாரிக்குத் தெரியப் படுத்துகிறன். அக்கீழ் அதிகாரி மந்திரிக்கு விரோதமாய் அவன் சொல்லைக் கேட்கா விட்டால் அவனுடைய மீறுதலே அடக்கும்படி அவனைக் கொத்துவால் வசம் ஒப்பிக்கிறன். கொத்துவாலையும் தன் வரம்பு கடக்காதபடி அடக்கி வைக்கிறன். இப்படிச் செய்வதில் இராஜ்ஜியத்தின் காரியம் திருத்தத்தை யடைந்து கட்டுகுலையாம லிருக்கிறது. இது போலவே கல்பு என்னும் அரசன் புத்தியாகிய மந்திரியிடம் ஆலோசித்து ஆசையாகிய தாசில்தாரனையும் கோபமாகிய கொத்துவாலையும் புத்தியாகிய மந்திரிக்குக் கீழ்ப்படியச் செய்து மந்திரியை அவ்விருவருக்கும் வசப்படா திருக்கும்படி செய்வானுகில் சரீரமாகிய இராஜ்ஜியம் சீர் திருந்தும். நற்பதவியின் வழியையும் அல்லாவுடைய சமுகத்திற்கு அருகனுகும் தகுதியையும் அடைந்து ஆனந்திப்பான். புத்தியை ஆசை, கோபம் இவைகளுக்கு அடிமை யாக்குவானுகில் இராஜ்ஜியம் பாழாகும். அரசன் ஹலாக்காகுவான்.

(பஸல்) மேற்சொன்ன எல்லாச் சங்கதிகளாலும் ஆசை, கோபம் இவைகள் அன்னபானுதியான ஆகாரத்தைத் தேடுவதற்கும், சரீரத்தைப் பாதுகாப்பதற்கும் உண்டாக்கப் பட்டிருக்கின்றன வென்று தெரிந்து கொண்டாய். ஆகவே இந்த இரண்டு சரீரத்துக்கு வேலைக்காரர்களா யிருக்கின்றன, அன்ன பானங்களான ஊணும் குடிப்பும் சரீரத்துக்கு ஆகாரமா யிருக்கின்றன. சரீரமோ புலன்களைச் சுமப்பதற்காக உண்டாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே சரீரம் புலன்களுக்கு வேலைக்காரனுயிற்று. புலன்கள் புத்திக்கு வேவு பார்த்துச் சொல்வதற்கென்று

(ரு) இன்னும் அதிப்பா என்னும் ஆயுர்வேத பண்டிதர்கள் ரூஹ¤ ஹைவானியை ரூஹ¤ இன்ஸானி என்கிறர்கள். பர்போரிகேஸ் என்பவர் ரூஹ¤ இன்ஸானியானது சரீரத்தில் புகுத்தப்பட்டிருக்கிற தென்றும் பிறகு தண்ணீரில் உப்புசேர்ந்து ஒன்றுய்விடுவதுபோல் அந்த ரூஹ¤ சரீரத்தில் ரேகித்து ஒன்றுய்ப் போகிறதென்றும் சொல்லுகிறர். அபுலோதர்கஸ் என்பவர் ரூஹானது சரீரத்தில் பிரவேசிப்பதும் அதில் குணப்பாட்டையுண்டாக்குவதுமானஒரு காற்றுயிருக்கிறதென்றும் சொல்லுகிறர்

படைக்கப் பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவற்றின் மூலமாய் அல்லாஹு தஆலாவுடைய படைப்புகளின் புதுமைகளை அறிவதற்கேயாம். ஆதலால் புலன்களானவை புத்தியின் வேலைக்காரர்களாயிருக்கின்றன. புத்தியோ கல்புக்கு ஓர் விளக்காயிருக்கும்படி அமைக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால், அதன் வெளிச்சத்தினால் கல்பானது தன் சொர்க்கமாகிய அல்லாவுடைய திருச் சமுகத்தை தரிசித்துக் கொள்ளவேயாம். ஆகவே புத்தியானது கல்புக்கு வேலைக்காரனாயிற்று. கல்பு எதற்காகப் படைக்கப்பட்டதென்றால் அல்லாஹு தஆலாவுடைய ஜமாலை தரிசிக்கவேயாம். பின்பு அது இந்தவேளையில் பராக்காகுமாகில் அல்லாஹு தஆலாவுடைய சமுகத்தின் ஊழியத்தைச் செய்கிற அடிமையாகும்.

وما خلقت الجن والانس الا ليعبدون

ஜின்னையும் இன்ஸான்களையும் என்னை வணங்குவதற்கன்றி நான் படைக்கவில்லை என்ற ஆயத்தின்பொருள் இதுவேயாம். ஆதலால் கல்பைப்படைத்து இந்த இராஜ்ஜியத்தையும் சேனைகளையும் அதற்குக் கொடுத்துச் சரீரமாகிய வாகனமும் அதன் வசம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால், மண்ணுலகத்திலிருந்து * விண்ணுலகத்திற்கு யாத்திரை செய்வதற்கேயாம்.

யாராவதொருவன் இந்தப் பாக்கியத்தின் ஹக்கையும் அடிமைத்தனத்தின் ஷரத்தையும் நிறைவேற்ற நாடினால் அவன் பாதுஷாவைப் போல் இராஜாங்கத்தின் கொலு மண்டபத்தில் உட்கார வேண்டும். அல்லாஹு தஆலாவுடைய சமுகத்தைத் தன்னுடைய நாட்டத்தின் கிபுலா வாக்கிக் கொள்ளவேண்டும். ஆகிரத்தைத் தன் ஊராக நியமனம் செய்து கொள்ள வேண்டும். சரீரத்தை ஏறுவாகன மென்று எண்ணிக் கொள்ள வேண்டும், துன்யாவைத் தங்கிச் செல்லும் தானமாகத் தரிபடுத்திக் கொள்ளவேண்டும். கை, கால் முதலிய உறுப்புகளை வேலைக்

---

*இழிவற்ற அஞ்ஞான பூமிகளைவிட்டு சிறந்த ஞானபூமிகளில் ஏறுவதென்பது இதன் கருத்தாகும்

(ரு)தாலீஸ் மதவி என்பவர் சகல சிருஷ்டிகளுக்கும் ஜலமேஉற்பத்திஸ்தானமாயிருக்கிறதென்றும், ஆதலால் அந்தஜலமே ரூஹ் என்றும் சொல்கிறார். அனுதுகீஸ் என்பவர் ரூஹானது பிருதிவு, அப்பு, தேபு, வாயுவென்னும் சதுர்ப்பூதாம்சங்களால் சேர்க்கப்பட்ட நுண்ணிய ஒருஜிஸ்மு என்றும் அது சரீரத்தில் இரேகித்திருக்கிறதென்றும் சொல்கிறார். இதற்கு அவர் காண்பிக்கிற அத்தாட்சியாவது:—அறிதல் என்னும் உணரும் தர்மானது தன்னோடு ஒத்துமையுள்ளதை உணர பார்க்கிறது. ஆகவே

காரர்களாக வைத்துக் கொள்ளவேண்டும், புத்தியை மந்திரியாக மதித்துக்கொள்ளவேண்டும். ஆசையை உக்கிராணத் தலைவனுகவும், பொருளைக் காப்பவனுகவும் அமைத்துக்கொள்ள வேண்டும். கோபத்தைக் கொத்தவாலாகக் குறித்துக் கொள்ளவேண்டும். புலன்களை வேவுகாரர்களென்றெண்ணிக் கொள்ளவேண்டும். அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆலத்தில் நியமனம் செய்து அவ்விடத்தில் நடக்கும் சமாசாரங்களை சேகரிக்கும்படி செய்யவேண்டும். தலை மூளையின் முன்பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற நினைவென்னும் சக்தியை சமாசாரம் கொண்டுவரும் தபால்காரனுகத் தரிபடுத்தி, புலன்களாகிய வேவுகாரர்கள் சேர்த்து வைத்திருக்கிற எல்லாச் சமாசாரங்களையும் அந்தத் தபால்காரனிடத்தில் ஒப்புவிக்கும்படி செய்யவேண்டும். தலைமூளையின் கடைசியில் அமைக்கப்பட்டிருக்கிற ஞாபக சக்தியை ஒரு பையாகப் பாவித்து நினைவென்னும் கடிதக்காரனிடம் இருக்கிற சமாசாரக் கடிதங்களை வாங்கி அந்தப்பையில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். சமயத்தில் புத்தியாகிய மந்திரிக்குத் தெரியப்படுத்த வேண்டும். மந்திரியானவன் இராஜ்ஜியத்தில் நின்றும் தனக்கு வருகிற அந்தச் சமாசாரங்களுக்குத் தக்கபடி இராஜ்ஜியத்தின் காரியங்களைப்பற்றியும் பாதுஷாவுடைய யாத்திரையைப்பற்றியும் ஆலோசனை செய்யவேண்டும். எப்போது ஆசை, கோபம் முதலியனபோல் சேனையில் நின்றும் சிலர் அரசனுக்கு அடங்காமல் மீறிப்போனதையும் இனி வழிபறிசெய்யும் கள்ளராவார்களென்பதையும் கண்டாலோ அப்போது துரிதமாக் அவர்களுடன் போர்செய்யப் பிரயத்தனம் செய்யவேண்டும். என்கிலும் அவர்களைக் கொன்றுபோட நாடுவது கூடாது. ஏனென்றால் அவர்களில்லாமல் இராஜ்ஜியத்தின் கட்டுப்பாடு நிலைக்காது. ஆகையால், அவர்கள் அடங்கிக் கீழ்படியும்படி தந்திரம் செய்யவேண்டும். அப்படிச்செய்தால் இனி போகவேண்டிய யாத்திரையில் உதவிக்காராயும் துணைவராயு மிருந்து விநோதமும் சோரமும் வழிமறிப்பும் செய்யா திருப்பார்கள். எப்

(ரூ) தாது வர்க்கம், மூலவர்க்கம், ஜீவவர்க்கங்களான மூன்று மூலங்களையும் அது உணர்வதிலால் அது பூதாம்சங்களால் சேர்க்கப் பட்டிருக்க வேண்டுமென்று அநுமானப் படுகிறது என்பதே. இன்னும் வாத பித்த சிலேத்துமங்களான தாதுக்கள் மிசுரமித்து அளவிலும் குணத்திலும் மிதமாயிருக்கிற நிலைமையே ரூஹ¨ என்று சிலர் நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இரத்தமானது மற்ற தாதுக்களில் சிறந்ததா யிருப்பதாலும் மரணத்தின்போது அது இல்லாமல் போவதாலும் அந்த இரத்தமே ரூஹ¨ என்ற பெயரை உடையதாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் பூதாம்சங்களின் குணத்தால் உண்டாகிற தத்சுபாவமான இயற்கையை ரூஹ¨ என்கிறார்கள். இன்னும் சிலர் ரூஹ¨ நப்ஸானியையும் அதாவது தலை மூளையிலிருக்கிற ஒரு தத்துவத்தையும்

போது இவ்விதம் செய்தாலே பாக்கியசாலியானன். பாக்கியத்தின் ஹக்கை நிறைவேற்றினன். இந்த பணிவிடைக்கு வெகுமானம் சமயத்தில் அவனுக்கு கிடைக்கும். அவன் இப்படிச் செய்யாமல் இதற்கு மாற்றமாக அரசனுக்கு அடங்காமல் மீறிப்போன சத்துருக்களோடும் வழிமறிக்கும் கள்ளர்களோடும் இணங்கி யிருப்பானுகில் நிர்ப்பாக்கியனுய்ப் போவான். வேதனையில் அகப்படுவான்.

(பலல்) அறிந்துகொள் மனிதனுக்குள்ளே யிருக்கிற ஒவ்வொரு சேனையோடும் அவனுக்குச் சம்பந்தமிருக்கிறது. அவை ஒவ்வொன்றினலும் ஒருகுணம் வெளியாகும். அக்குணங்களிற் சிலது அவனை ஹலாக்காக்குகிற கெட்ட குணங்களாயிருக்கும். இன்னும் சிலது அவனை நற்பதவிக்குக் கொண்டுபோகின்ற நற்குணங்களாயிருக்கும். குணங்களெல்லாம் பலவாயிருக்கினும் மேய்கிற மிருகங்களின் குணமென்றும் துஷ்டமிருகங்களின் குணமென்றும் ஷைத்தான்களின் குணமென்றும் மலக்குகளின் குணமென்றும் நான்கு வகைப்படும். ஏனெனில் மனிதனுக்குள் ஆசையைப் படைத்திருப்பதால் அவன் ஊணுசை போகவிச்சை முதலிய மிருகங்களுடைய வேலையைச் செய்கிறன். இன்னும் அவனில் கோபத்தை வைத்திருப்பதால் நாய், ஓநாய், புலி இவைகளைப்போல் கடித்தல், கொல்லல், கையாலும் வாயாலும் ஜனங்கள் மேல் விழுதல் முதலான துஷ்டமிருகங்களின் தொழிலைச் செய்கின்றன். இன்னும் அவனில் கபடமும் சூதும் ஜனங்களில் கலகம் எழுப்புவதுமான குணங்களிருப்பதால் ஷைத்தானுடைய கிரியைகளைச் செய்கிறன். இன்னும் அவனில் புத்தியைவைத்திருப்பதால் மலக்குகளுடைய வேலையைச் செய்கிறன். அதென்ன வெனில், அறிவைத்தேடுகிறது கெட்ட காரியங்களைவிட்டுப் பேணுகிறது. ஜனங்களுக்கு நலவை நாடுகிறது, அற்பகாரியங்களைவிட்டு நீங்கியிருக்கிறது, நல்ல காரியங்களை அறிவதில் சந்தோஷமாகிறது, அறிவின்மையைப் பற்றி வெட்கப்படுகிறது முதலியவைகளேயாம். உண்மையில் மனிதனுடைய தோலில் நாய்க்குணம், பன்றிக்குணம், ஷைத்தான் குணம், மலக்கின்குணம் என நான்கு குணங்களிருக்கின்றன. ஏனென்றால்,

---

(ரூ) சிலர் ரூஹ¬ ஹைவானியையும் அதாவது இருதய கமலத்திலுள்ள ஒரு தத்துவத்தையும் சிலர் ரூஹ¬ நபாத்தியையும் அதாவது ஈரலில் உள்ள ஒரு தத்துவத்தையும் சிலர் இந்த மூன்று தத்துவங்களும் சேர்ந்த சமுதாயத்தையும் ரூஹ¬ இன்ஸானி யென்கிறார்கள். முத்த கல்லிமுகளில் பெரும்பாலார் கொண்டிருக்கிற கொள்கை என்ன வென்றால் ரூஹ¬ இன்ஸானி யென்பது ரோஜா பூவில் பன்னீர் மிசரமித்திருப்பது போல் சரீரத்தில் மிசரமித்திருக்கிற நுண்ணிய ஒரு ஜிஸ்மா யிருக்கு மென்பதுதான். அது ஒரு ஜிஸ்மா யிருக்கு மென்பதற்கு அவர்கள் அநேகம் தலீலுகளைக் காண்பிக்கிறார்கள். அடியில் வரையப் படுகிற ஆயத்துகள் அந்த தலீலுகளில் சில்வாம்.

நாயானது தன்ரூபத்திலுலும் கைகால் முதலிய உருப்புகளிலுலும் கெட்டதாகவில்லை. மேலும் ஜனங்களின்மேல் விழுகிற அதன் குணத்திலுலேயே அது கெட்டதாயிற்று. பன்றியும் தன் ரூபத்தின்பொருட்டால் கெட்டதாகவில்லை. மேலும் மலத்தையும் கெட்ட வஸ்துக்களையும் இச்சிப்பதலுலேயே கெட்டதாயிற்று. நாயுடையவும் பன்றியுடையவுமான ரூஹின் ஹகீகத்து இதுதான். மனிதனிலும் இக்குணம் உண்டாயிருக்கிறது. ஷைத்தானுடையவும் மலக்குகளுடையவுமான குணங்களுக்குப் பொருள் இதன்படியேயாம்.

இன்னும் ஷைத்தான் வெட்கமடைந்து கலகம் செய்ய அவனுல் கூடாதபடி மலக்குகளுடைய ஒளியின் அடையாளத்தில் நின்று முள்ள புத்தியின் வெளிச்சத்திலுல் ஷைத்தானுடைய சூதை அறியும்படி மனிதன் ஏவப்பட்டிருக்கிறான். எப்படியென்றுல்:—

"ஒவ்வோரு மனிதனுக்கும் ஒவ்வோரு ஷைத்தான் உண்டு. எனக்கும் ஒரு ஷைத்தானிருக்கிறான். ஆனுல் அல்லாஹ¨ தஆலா அவன் பேரில் எனக்கு வேற்றியைக் கொடுத்தான். அவன் எனக்கு அடங்கிவிட்டான். தீமை செய்ய அவன் ஏவுகிறதில்லை" என்று றஸூல் ஸல்லல்லாஹ¨ அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஆசையாகிய பன்றியையும் கோபமாகிய குக்கலையும் அடக்கி அவைகளைப் புத்திக்குக் கீழ்படுத்தி அதன் உத்திரவின்படி அவை உட்காரவும் எழுந்திருக்கவும் செய்து கொள்ள மனிதன் ஏவப்பட்டிருக்கிறான். இப்படிச் செய்வானுகில் அவனுடைய நற்பதவிக்கு விதாயிருக்கிற நல்ல குணங்கள் அவனுக்கு உண்டாகும். இதற்கு மாற்றமாய் அவைகளுக்கு இவன் அடிபணிவானுகில் தன் தர்பதவிக்கு விதாயிருக்கிற கெட்ட குணங்கள் இவனில் நின்றும் வெளியாகும். சொப்பனத்திலாவது விழிப்பிலாவது இவன் கதியை

قوله تعالى الله يتوفى الانفس حين موتها والتى لم تمت في منامها (ரூ)
فيمسك التى قضى عليها الموت ويرسل الاخرى الى اجل مسمى
وقوله تعالى ولو ترى اذ الظالمون في غمرات الموت والملئكة
باسطوا ايديهم اخرجوا انفسكم اليوم تجزون الاية وقوله تعالى
يا ايتها النفس المطمئنة ارجعى الى ربك راضية مرضية

இந்த ஆயத்துகளில் ரூஹினது ஒபாத்தையும் அதைப் பிடித்துக் கொள்வதையும் புறப்படுத்துவதையும் திரும்ப அனுப்புவதையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒபாத்தாக்கல், பிடித்துக் கொள்ளல், புறப்படுத்தல் மீள அனுப்பல் முதலிய இப்பண்புகளெல்லாம் ஜிஸ்முக்குள்ள பண்புகளாயிருப்பதால் ரூஹை ஜிஸ்மு என்று அவர்கள் நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள்.

உவமித்துக் காட்டப்பட்டால் ஒரு பன்றிக்கு அல்லது நாய்க்கு அல்லது ஷைத்தானுக்கு முன்னல் கைகட்டி நிற்பதாகத் தன்னைக் காண்பான். ஒருவன் ஒரு முஸ்லிமை ஒரு காபிருடைய கையிற் பிடித்துக் கொடுப் பானுகில் அவன்கதி என்னவாகுமென்பது தெரிந்த சங்கதியே. பின்பு எவன் ஒரு மலக்கை நாயின் அல்லது பன்றியின் அல்லது ஷைத்தா னின் கையில் ஒப்புவிப்பானே. அவன் கதியானது அதைவிட கெட்ட தேயாகும். அநேக ஜனங்கள் நன்றாய் யோசிப்பார்களானுல், அவர்கள் தங்கள் நபுசின் இச்சைக்கே வழிபட்டவர்களா யிருக்கின்றார்கள். உண் மையில் இவர்கள் நிலைமையாகிறது யாதெனில், இவர்கள் வெளிகோலத் தில் இன்ஸானைப் போலிருந்தபோதிலும் நாளை கியாமத்தில் இவர்களு டைய வேஷம் வெளுத்துப்போம். அந்தரங்கத்தின்படி உட்கோலம் வெளியாகும். எப்படி யென்றால், எவனுக்கு ஆசையும் அவாவும் அதிகரித்திருந்ததோ அவன் தன்னைப் பன்றியின் ரூபத்தில் காண்பான். இன்னும் எவனுக்கு கோபம் மேலிட்டிருந்ததோ அவன் தன்னை நாயின் ரூபத்தில் காண்பான். இதன் நிமித்தமே ஒருவன் நாயைச் சொப்பனத்தில் கண்டால் அதற்குப்பொருள் அநியாயக்காரன் என் றும், பன்றியை மனமில் கண்டால் அதற்குப் பொருள் அசுத்தமான வன் என்றும் சொன்னது. ஏனென்றால் நித்திரையானது மவுத்துக்கு அறிகுறியாயிருக்கும். நித்திரையினல் இந்த ஆலத்தை விட்டும் இவ் வளவு தூரப்பட்டபடியால் கோலம் அந்தரங்கத்தைத் தொடர்ந்தது. ஒவ்வொருவரையும் அவர்களுடைய அந்தரங்கம் எப்படி யிருந்தோ அப்படியான கோலத்தில் கண்டான். இது விஷயத்தின் இரகசியம் இந்த கிதாபில் விளக்கிச் சொல்லக்கூடாத அவ்வளவு பெரியதாயிருக்கிறது.

(பஸல்) அருமையானவனே! மனிதனுக்குள் இந்த நான்கு காரிய கர்த்தாக்க ளிருக்கிறார்களென்று தெரிந்து விட்டதாகையால், இப் போது உன்னுடைய ஆட்டம் அடக்கங்களின்பேரில் நோட்டம் வைத்து இந்நான்கில் நீ எதற்கு வழிபட்டிருக்கிறு யென்று பார்.

(ரு) காஜிபாகலானியும் முஃதஸிலியாகிய நிஜாமும் ரூஹானது சரீரத் தில் சேர்ந்துள்ள நுண்ணிய ஒரு ஜிஸ்மா யிருக்கிறதென்றும் அது மாறுதல் அடைகிறதில்லை யென்றும் ஒரு உறுப்பை அறுத்தால் அந்த உறுப்பி லுள்ள ரூஹ¨ அறுப்புண்பதில்லை யென்று அறுப்புண்ட உறுப்புக்கு அடுத்த உறுப்பின் பக்கம் அந்த ரூஹ¨ இழுத்துக் கொள்ளப் படுகிற தென்றும் நிர்ணயங் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஜிஸ்மாகிறது பாகமேற்காத பரமாணுக்களால் சேர்க்கப் பட்டிருக்கிறதென்றும் மூலக் கருவுகளான அந்தப் பரமாணுக்களினது இருப்பே ரூஹ¨ என்று சொல் லப்படுகிறதென்றும் அஷ்அரிய்யாக்களில் பெரும்பாலார் ஒப்புக் கொண் டிருக்கிறார்கள். இன்னம் ரூஹாகிறது இருதயத்திலிருப்பதும் பாகமேற் காததுமான ஒரு பரமாணுவா யிருக்கிற தென்று இபுனுராவந்தி என்பவர் சொல்லுகிறார்.

இன்னும் நீ எந்தச்செயல் செய்தாலும் அதனால் ஒரு குணம்பிறந்து உன்னிலிருக்குமென்றும் அது உன் பட்டோலையில் எழுதப்படுமென்றும் உறுதியாக எண்ணிக்கொள். இக்குணங்களுக்கு அக்லாகு என்று சொல்லப்படும். இந்நான்கு காரியகர்த்தாக்களாலேயே எல்லாக் குணங்களும் உண்டாகின்றன. அதெவ்வாறெனின், நீ ஆசையாகிய பன்றியின் ஏவலுக்கு வழிபடுவாயாகில். உன்னில் அசுத்தமும், வெட்கமின்மையும், அவாவும், முகஸ்துதியும், உலுத்தத்தனமும், கெடுதியின் மேல் சந்தோஷமும் ஆகிய இக்குணங்களெல்லாம் வெளியாகும். அந்தப் பன்றியை அடக்கி வைப்பாயாகில், உள்ளது போதுமென்ற திருப்தியும், பெருந் தன்மையும், வெட்கமும், ஞானமும், வணக்கமும், அவாவின்மையும், எளிமைத் தனமுமான குணங்கள் வெளியாகும். இன்னும் கோபமாகிய குக்கலுக்குக் கீழ்ப்படிவாயாகில், வீரப்பும், பெருமையும், சுத்த மின்மையும்; தற்புகழும், பரிகசித்தலும், ஜனங்களை இகழ்த்லும், துன்பஞ் செய்தலுமான குணங்கள் வெளியாகும். அந்த நாயை அடக்கி வைப்பாயாகில், பொறுமையும், சாந்தமும் குற்றம் பொறுத்தலும், உறுதி மாறுமையும், வீரத்துவமும், கண்ணியமும், பெருந் தன்மையும் ஈகையுமான குணங்கள் வெளியாகும். இந்தப் பன்றியையும் நாயையும் தூண்டித் தூண்டிக் முண்டாக்கி வஞ்சகத்தைப் போதிக்கிற ஷைத்தானுக்கு நீ வழிபடுவாயாகில், மோசம், சதிமானம், கபடம், வஞ்சகம் முதலான குணங்கள் வெளியாகும். அதை அடக்கியும் அதன் வஞ்சகத்தினால் ஏமாறுமலு மிருக்கும் படி புத்தியாகிய மந்திரிக்கு உடன்படுவாயாகில், அறிவும் ஞானமும், கல்வியும், பூராயமும், பேணுதலும், நற்குணமும், தலைமைத் தனமுமான குணங்கள் வெளியாகும். உன்னோடிருப்பனவான இக்குணங்கள் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் என்னும் நிலைத்திருக்கிற நன்மைகளின் தொகையிற்

(ரூ) இன்னும் சில முத்தகல்லிமுகள் எதனால் சரீரம் ஜீவிக்கின்றதோ அந்த அர்வு என்னும் ஆதேயப் பொருளான ஹயாத்துக்கு ரூஹ¬ என்று பேர் சொல்லுகிறார்கள். இமாம் ராஜியவர்களும் இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலர் ரூஹாகிறது அல்லாஹ¬ தஆலாவினது அணுக்களில் ஒரு அணுவாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இன்னும் சில சூபியாக்கள் ரூஹானது ஜிஸ்முடைய சிபத்துகளிற் சேர்ந்ததல்ல வென்றும் அது அல்லாஹ¬ தஆலாவுடைய சிபத்துகளில் ஒன்றாயிருக்கிறதென்றும் அதை அவனுடைய அம்ரில் ஒன்றாகச் சொன்னதில் அம்று என்பது அவனுடைய கலாமாயிருக்கிறதென்றும் அந்தக்கலாமே அதாவது பிழைப்பூட்டலே ரூஹ¬ என்று சொல்லுகிறார்கள். இன்னும் உறப்பில் விம்மலையும் காமத்தையும் உண்டுபண்ணுகிற உஷ்ணமான காற்றை நப்சு என்று சொல்வது போல் சரீரத்தில் ஹயாத்தை உண்டாக்குகிற சுத்தமான வாயுவுக்கு ரூஹ¬ எனச் சொல்லப்படும் என்று சிலர் கூறுகிறார்கள். இப்படியே ரூஹ¬ விஷயத்தில் விகற்பமான பல

சேர்ந்தவைகளாயும், நற்பதவிற்குரிய வித்துகளாயு மிருக்கின்றன. எந்தச் செயலினல் கெட்ட குணங்கள் பிறக்குமோ அந்தச் செயல் மஃஸியத்து அல்லது பாவம் என்றும், இன்னும் எந்தச் செயலினல் நல்ல குணங்கள் உண்டாகுமோ அது தாஅத்து அல்லது வணக்கம் என்றும் சொல்லப்படுகின்றது. மனிதனுடைய ஆட்டம் அடக்கங்களான இரண்டு நிலைமைகளும் மேற்சொன்ன தாஅத்து மஃஸியத்துகளை விட்டொழியா. கல்பாகிறது ஒளியுள்ள ஓர் கண்ணாடி போலிருக்கிறது. இந்த கெட்ட குணங்களோ துருவும் தூசியும் போல் அந்த கல்பை இருளாக்கி நாளை அல்லாஹ¨ தஆலாவைக் கண்டு கொள்ள முடியாத படி அதை மறைத்து விடுகின்றன. நற்குணங்களோ ஒளிபோ லிருந்து அந்தப் பாவ இருளை கல்பில் நின்றும் நீக்கி விடுகின்றன. இதனலே தான் اتبع السيئة الحسنة تمحها ! பாவஞ் செய்தால் உடனே அதை அழிக்கின்ற நன்மையைச் செய் என்று நபூல் ஸல்லல்லாஹ¨ அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். கியாமத்துடைய மைதானத்தில் மனிதனுடைய கல்பு வருமாகில் ஒளியுள்ளாத யிருக்கும் அல்லது இருளடைந்ததா யிருக்கும்.

ولا ينون إلا من اتى الله بقلب سليم அல்லா இடத்தில் சலீமான கல்பைக் கொண்டு வந்தவனே யன்றி மற்றவன் ஈடேற்றம் பெற மாட்டான். மனிதனுடைய கல்பாகிறது படைத்த ஆரம்பத்தில் இரும்புக்குச் சமானமா யிருக்கிறது அதாவது எப்படி இரும்பைத் தேய்த்து விளக்குவதினல் அது * கண்ணாடி போலாகி உலகத்தின் நிழல் அதில் தோன்றுகிறதோ அப்படியே கல்பை சுத்திகரித்து அதைத் தெளிவாக்குவதினல், அது கண்ணாடியாகி ஹக்குடைய ஜமாலின் தரிசனை அதில் தோன்றுகின்றது. ஆனல் அதை நன்முக காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் தருவென்னும் அழுக்கேறி கண்ணாடியாக்க முடியாதபடி கெட்டுப்போகின்றது.

---

* முற்காலத்தில் இரும்பை அல்லது சேம்பைச் சாணையால் துலக்கி முகம்பார்க்கும் கண்ணாடியாக உபயோகித்து வந்ததால் அப்போது இமாமவர்கள் இரும்பை உபமானமாகச் சொன்னர்கள்.

(ரூ) கவுலுகள் உண்டாயிருக்கின்றன என்றாலும் இந்த கவுலுகளெல்லாம் நப்சு நாதிகா என்னும் ரூஹ¨ இன்ஸானியைக்குறித சொல்லப்பட்டால் முழுதும் தப்பென்று முடியும். ஏனென்றால் ஜிஸ்மை அல்லது ஜிஸ்மானி குவ்வத்தென்னும் ரூஹ¨ ஹைவானியை ரூஹ¨ இன்ஸானி என்று சொல்வது தண்ணீரில் உப்புபோல் சரீரத்தில் ரூஹ¨ இருப்பதாகக் கொள்வதும் அறிவற்ற வாயுவுக்கு அல்லது ஜலத்துக்கு ரூஹ¨ என்று பேர்வைப்பதும் சதுப் பூதாம்சங்களால் சேர்க்கப்பட்ட நுண்ணிய ஒரு தேகமே ரூஹ¨ இன்ஸானி என்று ஏற்பதும் அறிவில்லாத சடமான உதிரத்தை ரூஹ¨ இன்

كلا بل ران على قلوبهم ما كانوا يكسبون என்கிலும் அவர்கள் செய்தது அவர்களுடைய கல்புகளின் பேரில் துருவாகப் பிடித்துக் கொண்டது என்று அல்லாஹ்¬ தஆலா திருவுளமா யிருக்கிறான்.

(பஸல்) ஒருகால் நீ பின்வருமாறு சொல்லக்கூடும். அதாவது மனிதனில் மிருகங்கள், துஷ்ட மிருகங்கள், ஷைத்தான்கள், மலக்குகள் மூதலானவர்களுடைய குணங்களெல்லாம் சேர்ந்திருக்க மலக்குகளுடைய குணந்தான் இவன் குணமென்றும், மற்றுங்குணங்கள் இவனுக்கு அன்னியமானவைகளென்றும், இவனை மலக்குகளுடைய குணத்துக்காகவே படைத்ததென்றும் அதையே இவன் உண்டாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் மற்றக் குணத்திற்காக இவனைப் படைக்கவில்லை யென்றும் எப்படி அறிகிறது என்பதுதான்.

அருமையானவனே! பின்வரும் சங்கதியினால் இது காரியம் உனக்குத் தெரியலாகும்: அதென்னவென்றால், மனிதனுனவன் மேற்கண்ட இருவகை மிருகத்தினும் சிறந்தவனுயும்; கமாலியத்தென்னும் பூரணத் தன்மையுள்ளவனுயு மிருக்கின்றான். எந்த வஸ்துவுக்கு அதன் சிறந்த பதவியாகிய ஒருவிசேஷகுணம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அக்குணத்திற்காகவே அந்த வஸ்து படைக்கப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால், குதிரையானது கழுதையினும் சிறந்தது. ஏனெனில், கழுதையானது சுமை தூக்குவதற்காக உண்டாக்கப்பட்டிருக்கிறது. குதிரையோ யுத்தமுகத்தில் வீரனை ஏற்றிச்செல்வதற்காக படைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கழுதைக்குக் கொடுத்திருப்பது போல் இதற்குச் சுமைதூக்கும் சக்தியும் அளிக்கப்பட்டிருக்கிறது. என்கிலும் இதன் சிறந்த குணம் யுத்தமுகத்தில் வீரனை ஏந்திச் செல்வதேயாம். இது இக்குணத்தைவிட்டும் தளர்ச்சியடையுமாகில் இதற்

(ரூ) ஸானி என்று ஒப்புவதும் வாதபித்த சிலேத்துமங்களான தாதுகளுக்கு அல்லது தற்சுபாவமான இயற்கைக்கு ரூஹ்¬ என்று இசைப்பதும் அஃறிணை என்னும் ஆதேயப்பொருள்களைச் சேர்ந்த ரூஹ்¬ நப்ஸானியை அல்லது ரூஹ்¬ நபாத்தியை ரூஹ்¬ இன்ஸானியென்று சொல்வதும் சரீரத்தில் ரூஹ்¬ இன்ஸானியானது மாறுதலடையாமல் மிசுரமித்திருக்கிறதென்று சொல்வதும் அது பரமாணுக்களால் சேர்க்கப்பட்ட ஒரு ஜிஸ்மாயிருக்கிறதென்று சொல்வதும் ஆதேயப்பொருளான ஹயாத்தை ரூஹ்¬ இன்ஸானியென்று சொல்வதும் அது இருதயத்திலிருப்பதும் பாகமேற்காததுமான ஒரு அணுவென்று சொல்வதும் அதைச் சுத்தமான ஒரு காற்று என்று சொல்வதும் ஆகிய இவையெல்லாம் ரூஹ்¬ இன்ஸானியானது ஹகீகத்தையும் அதன் நிசவடிவத்தையும் அறியாமையினால் சொல்லும் சொற்களேயாம். நல்லதிருக்கட்டும். ரூஹ்¬ இன்ஸானியாகிறது அறிவுடையதாயிருக்கிறது. அறிவோ ஜவ்ஹர் என்னும் ஆதாரப்பொருளின் காரியம். அறிவுடைய ரூஹ்¬ எப்படி அர்ளு என்னும்

குக் கழுதையின் பதவிதான் கிடைக்கும். இதில் இதற்குக்கேடும் குறைவு மிருக்கின்றது. இதுபோலவே சில மனிதனை உண்ணவும், உறங்கவும், சுகம் பாராட்டவும் படைத்திருக்கிற தென்று நினைத்துத் தங்கள் வயது முழுவதையும் அக்காரியங்களிலேயே போக்குகின்றார் கள். இன்னும் சிலர் பைல்வான்கள்போல் இதர வஸ்துக்களை அடக்கி மேற்கொள்ளுவதற்காக மனிதன் படைக்கப்பட்டான் என்றெண்ணி யிருக்கிறார்கள். இந்த இரண்டு எண்ணங்களும் தப்பாயிருக்கின்றன. எனென்றால் உண்பதும் புணர்வதும் தேக இச்சை பாராட்டுவதேயாம். இந்தக் குணம் மிருகமுதலான பிராணிகளுக்கு முண்டு. ஒட்டகை யானது மனிதன் தின்பதைவிட அதிகமாய்த் தீனிதின்னுகிறது. சிட்டுக் குருவியானது மனிதனிலும் அதிகமாய்ப்போகஞ் செய்கின்றது. பின்பு இவைகளினும் மனிதன் என் சிறந்தவனுவான்? இன்னும் இதர வஸ்துக்களை அடக்கி மேற்கொள்ளுவது கோபத்தினால் உண்டாக் கின்றது. இந்தக் குணம் துஷ்டமிருகங்களுக் குள்ளது. மனிதனில் இவ்விரண்டு குணங்களு மிருப்பதுடன் இதற்குமேல் விசேஷமானது ஒரு சிறந்த குணம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது யாது எனில் அக்லு என்னும் அறிவேயாம். இதனால் அவன் தன்னு டைய றப்பாகிய அல்லாஹ¨ தஆலாவை அறிகின்றான். இதனாலேயே சகல விஷைதங்களையும் படைப்புகளையும் தெரிந்து கொள்ளுகிறான். இதனாலேயே ஆசையும் கோபமுமான பிடியிலிருந்து தன்னை விடுவிக் கின்றான். இந்த அக்லு என்னும் குணமானது மலக்குகளுக்குள்ளதா யிருக்கும். இவன் இந்தக் குணத்தினாலேயே மேய்கிற மிருகங்களையும் துஷ்டமிருகங்களையும் அடக்கி யாளுகின்றான்.

وسخر لكم ما في السموات وما في الارض جميعا منه வானங்களி லுள்ளவை பூமியிலுள்ளவை எல்லாவற்றையும் அவன் உங்களுக்கு வசப்படுத்தினன் என்று அல்லாஹ¨ தஆலா திருவுளமானதுபோல் சகலமும் இவனுக்கு வசப்பட்டவைகளா யிருக்கின்றன. ஆதலால் எந்

(ரு) ஆதேயப் பொருளாகும்? இன்னும் அதை சேர்க்கைப்பொருளான ஜிஸ்மு என்று சொல்வதினால் அது ஏககாலத்தில் ஒரு வஸ்துவை அறிவ தாயும் அறியாததாயும் இருக்கலாம் என்பது ஏற்படுகிறது. இதுவோ போ ருந்தாது. பொருந்தாதபோது அது எப்படி ஜிஸ்மாகும்? அல்லது ஜிஸ் மூக்குரிய குணங்களான ஆதேயங்கள் அதற்கு எப்படி இசையும். இன் னும் முத்தகல்லிமூகள் ரூஹை ஜிஸ்மாகக்கொண்டு அதன்பேரில் ஆதா ரமாக வபாத்தையும் பிடித்துக் கொள்வதையும், புறப்படுத்துவதையும், பிறகு அனுப்புவதையும் தலீல்களால் காண்பித்தார்களே அதற்கு நான் சொல்லுகிறேன்:—இந்த வபாத்து முதலிய குணங்களில் ஒன்றேனும் ரூஹை ஜிஸ்மு என்பதற்கு ஆதாரமாகாது. ஏனென்றால் வபாத்து என்பது ரூஹ¨டைய சம்பந்தம் சரீரத்தை விட்டு நீங்கிப்போவதேயாம் இதே தவிர ரூஹ¨ இல்லாமல் ஆக்குவதல்ல. ஏனென்றால் ரூஹ¨

தக் குணத்தில் மனிதனுக்குக் கமாலியத்தென்னும், பூரணத்தன்மை ஏற்படுகின்றதோ அதுவே அவனுக்குரிய சிறந்த குணமாம். மற்றக் குணங்கள் அவனுக்கு அன்னியமானவைகளா யிருக்கின்றன. அவை கள் அவனுடைய உதவிக்கும் ஊழியத்துக்கும் அவனுடன் அனுப்பப் பட்டிருக்கின்றன. இதனாலேதான் மனிதன் மரண மடைந்தால் அவன் ஆசையும் கோபமும் நீங்காமல் அழிந்து போகின்றன. ஆனால் அந்த ஜௌஹரான ஆதாரப் பொருள்மாத்திரம் அல்லாஹ் தஆலாவுடைய மஃரிபாவினால் பிரகாசமுற்றுவது, அல்லது பாவத்தி னால் இருளடைந்து முகங்கவிழ்ந்தாவது இருக்கும். மஃரிபாவினால் பிரகாசமுற்ற அந்த ஜௌஹரோ மலக்குகளுடைய கோலத்திலாகி அவர்களோடு சேர்ந்திருக்கும், மலக்குகளோ எப்போதும் அல்லாஹ் தஆலா வுடைய திருச்சமுகத்தி லிருக்கின்றார்கள்.

في مقعد صدق عند مليك مقتدر அடக்கியாளும் வல்லமை யுள்ள அரசனுடைய சமுகத்தில் மெய்யான இருப்பில் இருக்கிறார்கள். இனி அந்த ஜௌஹர் முகங்கவிழ்ந்திருப்பதற்குக் காரணம் யாதெனில், இவன் ஆசையும் கோபமுமான குணங்களுடன் இணங்கி யிருந்தான், இச்சித்த எந்தப் பொருளையும் இவன் விடவில்லை. இவ்வுலகமே இவ னுடைய நாட்டமும் தேட்டமுமா யிருந்தது. ஆகையால் இவனுடைய கல்பு இவ்வுலகத்தையே நோக்கியிருக்கும், இவ்வுலகமானது அவ் வுலகத்துக்குக் கீழே யிருப்பதால் தலைகீழான இவன் முகங்கவிழ்ந்த வனுக்கே யிருப்பான்.

ولو ترى اذ المجرمون ناكسوا رؤسهم பாவிகள் தங்கள் றப் புடைய சமுகத்தில் தலை கவிழ்ந்தவர்களா யிருப்பதை ஒருபோது நீர் காண்பீர் என்று அல்லாஹ் தஆலா திருவுளமா யிருப்பது இது காரியத்துக்கோர் சபிக்கினையா யிருக்கிறது. எவன் இவ்விதமாயிருப் பானே அவன் ஷைத்தான்களுடன் ஸிஜ்ஜீனில் இருப்பான். ஸிஜ்ஜீன்

(ரூ) இன்ஸானி என்னும் நப்சு நாதிகா இல்லாமல் போவது கூடாது. கூடாதென்பதற்கு நியாயம் சமீபத்தில் சொல்லப்படும். இதே போல் ரூஹைப் பிடித்துக் கொள்வதென்பது அதைச் சரீரத்துடன் சம்மந்தப் படுத்தாம லிருப்பதேயாம். அதைத் திரும்ப அனுப்பல் என்றது திரும்ப அதைச்சரீரத்துடன் சம்பந்தப் படுத்துவதாம். அல்லாஹ் தஆலாவின் பக்கம் திரும்பல் என்றது அது சரீரத்தில் செய்கிற ஆட்சி அதிகாரங்களை விட்டு நீங்கி அல்லாஹ் தஆலாவின் பக்கம் முழுநோக்காக நோக்குவதே யாம். புறப்படுத்த லென்பது அதைச் சரீரத்துடன் சம்மந்தப் படுத்தாமல் நிறுத்திவிடுவதேயாம். ஆதலால் குர்ஆன் ஷரீபில் ரூஹைக் குறித்து வபாத்தாதி குணங்களைச் சொல்லியிருப்பதினால் ரூஹை ஜிஸ்மு என்று நிச்சயிப்பது ஆதாரமற்ற வெற்றுரையேயாம். இதுவுமன்றி மரணத்தின் போது ரூஹ் ஹைவானியானது சரீரத்தை விட்டு புறப்படுத்தப் படுகிற

என்பதின் பொருள் எல்லாருக்கும் தெரியாது. இதனாலேதான், وما ادريك ما سجين ஸிஜ்ஜீன் இன்ன தென்று உமக்குத் தெரியுமா? எனஅல்லாஹ¨ தஆலா நாயகம் ஸல்லல்லாஹ¨ அலைஹிவஸல்லம் அவர்களுக்குத் திருவுளமாயிருக்கிறான்.

(பஸல்) அறிந்து கொள்ளுங்கள். கல்புடைய புதுமைகளுக்குத் தீர்மானமில்லை. அது எல்லாவற்றினும் அருமையானதாயிருப்பதைப் பற்றியே அதற்குப் பெருமையுண்டு. அநேக ஜனங்கள் இதை அறியாதவர்களாயிருக்கின்றார்கள். இரண்டு காரணங்களால் அதற்குப் பெருமையுண்டு. ஒன்று இல்மு என்னும் அறிவாலும் மற்றொன்று குத்ரத் என்னும் வலிமையினாலுமேயாம். என்கிலும் இல்மினாலுள்ள பெருமை இருவகைப்படும். அதில் ஒருவகை எல்லாரும் அறியக்கூடியது. மற்றொருவகை மறைவானது. அதை ஒவ்வொருவரும் அறியமுடியாது. எல்லாரும் அறியக்கூடிய வெளியரங்கமான இல்மினாலுள்ள பெருமை யாதெனில், அதற்குச் சகல இல்முகளையும் வித்தைகளையும் அறியும் சக்தியிருக்கிறது. கிதாபுகளில் எழுதப்பட்டிருக்கிற அங்க கணிதம், கணக்கு, வைத்தியம், சோதிடம், ஷரீஅத்துடைய இல்மு இவைகளையெல்லாம் ஒதியுணரும் சக்தியுள்ளதாயிருக்கிறது. அது பாகத்தை ஏற்காத ஒரு அணுவாயிருப்பதுடன், சகல இல்முக்களும் அதில் அடங்குகின்றன. மேலும் அதில் ஆல மடங்கலும் மைதான வெளியில் விழுந்து கிடக்கும் ஓர் அணுவைப் போலிருக்கின்றது. ஒரு இமைப் பொழுதில் தன் யோசனையினால் பூமியிலிருந்து வானம் வரையில் மஷ்ரிகிலிருந்து மகுரிபு வரையில் போகின்றது. பூமியிலிருந்துகொண்டு எல்லா வானங்களையும் அளவெடுக்கின்றது. ஒவ்வொரு நட்சத்திரத்துடைய பெருப்பத்தை அறிந்து கணிதத்தால் இது இத்தனை கெஜமிருக்கிற தென்று குறிப்பிடுகின்றது. மச்சங்களை சமுத்திரத்தின் ஆழத்திலிருந்து வலையின்

(ரு) படியால் அந்த ரூஹ¨ ஹைவானியே ஆயத்தில் கருதிய பொருள் என்று நாம் சொல்லக்கூடும். அது புறப்படுத்தப்படுவதினால் நப்சு நாதிகாவென்னும் ரூஹ¨ இன்ஸானியினது சம்பந்தம் சரீரத்தைவிட்டு நீங்கிப் போகிறது. ஏனென்னில் ரூஹ¨ இன்ஸானியானது சரீரத்தில் ஆட்சி செய்வதெல்லாம் ரூஹ¨ ஹைவானியின் உதவி கொண்டுதான். ரூஹ¨ ஹைவானி யென்பது கல்பு ஜிஸ்மானியான இருதய கமலத்தின் உஷ்ணத்தினால் பக்குவத்தை யுடைவதும் துடி நரம்புகளின் வழியால் எல்லா உறுப்புகளிலும் பரவி சரீரத்துக்கு ஹயாத்தைக் கொடுப்பதுமான நுண்ணிய ஒரு ஆவியாயிருக்கும். அந்த ஆவியாகிய ரூஹ¨ ஹைவானியானது சரீரத்துக்குள் நடப்பதும் அது சரீரத்துக்கு ஹயாத்தைக் கொடுப்பதும் எதைப்போலென்றால் எரிகிற ஒரு விளக்கை வீட்டின் பல பக்கங்களிலும், காட்டினால் அப்போது அவ்வீட்டின் பல பக்கங்களிலும்

உபாயத்தினல் வெளியே கொண்டு வருகிறது. பட்சிகளை ஆகாயத்தி லிருந்து பூமியிலிறக்குகின்றது. யானை, ஒட்டகம், குதிரை முதலிய வலிய மிருகங்களைத் தனக்குக் கீழ்படியச் செய்கிறது; உலகத்தின் விஞ்ஞைதங்களையும் அருமையான சல்விகளையும் கற்கின்றது. இவைக ளெல்லாம் வெளியரங்கமான ஐயறிவுகளால் அதற்குச் சித்தியாகின்றன.

இதினும் பெரிய ஓர் புதுமையுண்டு. அது யாதெனில் கல்புக் குள்ளே யிருந்து ஆலமு ரூஹானி யென்று சொல்லப்படுகிற ஆலமுல் மலகூத்தான பரலோகத்துக்கு ஒரு வழி திறந்திருக்கிறது. இன்னும் கல்புக்கு வெளியே யிருந்து ஆலமு ஜிஸ்மானி யென்று சொல்லப்படுகிற ஆலம் மஹ்சூஸாத்தின் பக்கம் ஐந்து வாசல்கள் இருக்கின்றன. அநேக ஜனங்கள் இந்த ஆலமு ஜிஸ்மானியைத்தான் அறிந்திருக்கிறார்கள். இதுவோ பொய்யானது இதற்கு யாதொரு ஹகீகத்தில்லை (சுயார்த்த மில்லை) இன்னும் இந்த ஐயறிவின் வழியினுலே தான் இல்மு உண்டா கிற தென்று அவர்கள் நினைக்கிறார்கள். இவற்றுல் உண்டாகும் இல்முகளோ மிகவும் சுருக்கமானவைகளே யாம்.

கல்புக்குள்ளே யிருந்து இல்மின் பக்கம் வழி யுண்டென்பதற்கு இரண்டு திருஷ்டாந்தங்க ளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று நித்திரை யாயிருக்கும். ஏனென்றுல் நித்திரையில் ஐயறிவின் வழி அடைபட்டுப் போகிறபடியால் அந்த உள்வாசல் திறக்கின்றது. ஆலமுல் மலக்கூத் தில் நின்றும் லௌகு மஹபூலில் நின்றும் கைபு என்னும் மறைவான பொருள்கள் தெரியவருகின்றன. இனி ஆகப்போகிற காரியத்தை அது எப்படியாகுமோ அப்படியே பரிஷ்காரமாயாவது அல்லது தஃபீர் செய்ய வேண்டிய ஒரு சொப்பன உபமானத்திலாவது அறிந்துங் கண்டுங் கொள்கிறன், விழிப்பில் அறிவை யடைவது வெளிப்படையா

(ரூ) வெளிச்சம் பரவுகின்றதைப் போல்வதாம். ஆகவே, ரூஹ¤ ஹைவா னியானது விளக்கின் சுடர் போலும் அதலுலுண்டான ஹயாத்து அச்சுட ரின் வெளிச்சம் போலுமாம். இந்த நுண்ணிய ஆவியின் மூலமாகத்தான் ரூஹ¤ இன்ஸானிக்குச் சரீரத்துடன் சம்பந்தமும் ஆட்சி அதிகாரங்களு மிருந்து வந்தன. மரணத்தின் போது அந்த ஆவி போய் விட்டது. போய் விடவே ரூஹைப் புறப்படுத்துவது திரும்ப அனுப்புவது பிடித்துக் கொள்வது முதலியவைகளால் ரூஹ¤ இன்ஸானியானது சரீரத்துடன் சம்பந்தப்படுவ தென்பதும் சம்பந்தப்படாமை என்பதும் ஏற்படுகிறது, ஆதலால் எதார்த்தத்தில் ரூஹ¤ ஹைவானிக்குரிய குணங்களான வபாத்து முதலிய சிபத்துகளை ரூஹ¤ இன்ஸானியின் மேல் ஏற்றி வழக்கியலாகச் சொல்லப்பட்டது. அதேப்படி என்றுல் ஒரு அரசனுக்கு ராஜ்ஜியத்தின் மேல் ஆட்சி யதிகாரங்கள் நடந்து வந்தன. அந்த அரச னுடைய நாயிபாகிய பிரதிநிதியும் லஷ்கர்களும் அந்த ராஜ்ஜியத்தி லிருந்தார்கள். ஒரு வல்லரசன் அந்த ராஜ்ஜியத்தின் மேல் படை

யிருப்பதால், விழித்திருப்பவனுக்கு அறிவு உண்டாகு மென்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனல் விழித்திருக்கையில் மனிதன் கைபு என்னும் மறைவான வஸ்துக்களைப் பார்க்கிறதில்லை யென்பதையும் ஐயறிவுகளின் வழி அடைப்பட்டிருக்கிற நித்திரையிலேயே அவைகளைப் பார்க்கிறு னென்பதையும் இவர்கள் நன்றாய் அறிந்திருக்கின்றார்கள். மனமின் ஹகீகத்தை இந்த .கிதாபில் விளக்கிச் சொல்ல முடியாது. என்றாலும் பின்வரும் சங்கதியை மாத்திரம் அறிந்து கொள்ளுங்கள். அதாவது கல்பு ஓர் கண்ணாடி போலிருக்கிறது. லௌகு மகபூலும் அப்படியே யாம். அதில் சகலமும் வெளிப்படும். ஆனல் அப்படியே வெளிப்படுவதற்கு கல்பு சுத்தமாயும், ஐயறிவுகளுக்கு புலப்படுகிற இவ்வுலக விவகாரங்களில் சம்பந்தப்படாததாயும், ஆலமுல் மலக்கூத்துக்கு நேர்பட்டதாயு மிருக்க வேண்டும். இவ்வுலகத்துடன் பராக்காயிருக்கிற வரையில் ஆலமுல் மலக்கூத்துக்கு நேர்படுவது அவனுக்கு வாய்க்காது. நித்திரையில் இவ்வுலகத்தை விட்டு நீங்குகின்றுதலால் ஆலமுல் மலகூத்தைப் பார்க்கிறன். நித்திரையில் ஐயறிவுகள் அதன் தன் தொழிலைச் செய்யாமல் சும்மாவிருந்த போதிலும் கியால் என்னும் நினைவு தங்கி யிருக்கிறது. இதனலே தான் எதைப் பார்த்தாலும் நினைவின் மாதிரியான கோலத்தில் பார்க்கின்றன் பரிஷ்காரமாய்ப் பார்க்கிறதில்லை. மவுத்தாய்ப் போனல் அப்போது நினைவுமிருக்கிறதில்லை, ஐயறிவுகளு மிருக்கிறதில்லை. அப்போது வஸ்துக்களைத் திரை யின்றியும் நினைவின்றியும் பார்க்கிறன். அப்போது அவனுக்கு "பின்பு நாம் உன்னை விட்டும் உன் திரையைத் திறந்து விட்டோம். இன்று உன் பார்வையானது கூர்மையா யிருக்கிறது" என்று சொல்லப்படும். அவன் அதற்கு ஜவாபாக :—

எங்கள் ஆண்டவனே நாங்கள் பார்த்துக் கொண்டோம், கேட்டுக் கொண்டோம், நாங்கள் சாலிஹான அமல் செய்வதற்காகத் திரும்ப எங்களை அனுப்பிவை என்று சொல்வான்.

(ரு) யெடுத்து அந்தப் பிரதிநிதியையும் லஷ்கர்களையும் கொன்றே அல்லது அவர்களை அந்த ராஜ்ஜியத்தி லிருந்து துரத்தியோ அவன் வெற்றி யடைந்தால் அப்போது நாம் அந்த அரசன் கொல்லப்பட்டான் அல்லது அவ்வி ராஜ்ஜியத்தி லிருந்து நீக்கப்பட்டான் அல்லது அந்த ராஜ்ஜியம் அவனிடத்திலிருந்து பிடுங்கிக் கொள்ளப்பட்டது என்று வழக்கியலாகச் சொல்லுகிறோம். இப்படிச் சொல்லுவதில் அந்த ராஜ்ஜியத்தில் அவனுக்கிருந்த ஆட்சியதிகாரங்கள் இல்லாமல் போய் விட்டன என்பது தான் நமது கருத்து. கொலை யுண்ணல், நீக்கப்படுதல் ஆகிய இக்குணங்கள் எதார்த்தத்தில் அந்த பிரதிநிதிக்குள்ளவைகளாம். அவைகளை அரசன் மேல் ஏற்றிக் கூறுவது வழக்கியல். இன்னும் இதில் அஷ்அரியாக்களுடைய அகீதாவும் இபுனு ராவந்தியுடைய அகீதாவும் தப்பென்பது

மற்றொரு திருஷ்டாந்தம் யாதெனில், பிராஸத்து என்னும் யூக மும் இல்ஹாம் என்னும் உதிப்புமேயாம். தன் கல்பி லிருந்து யூக மான சங்கதிகளும் நல்ல ஊசாட்டங்களும் உதிக்காதவன் ஒருவனு மிருக்கமாட்டான், இவை ஐயறிவுகளின் வழியாய் வருவனவல்ல. மேலும் கல்பில் நின்றுமே உண்டாகின்றன. இவை எங்கிருந்து வந்தன வென்பதை மனிதன் அறிகிறதில்லை. இந்த விபரத்தினால் எல்லா இல்மு களும் ஐயறிவுகளின் வழியினாலேயே உண்டாகின்றன வென்பது கூடாதென்றும், அவற்றின் உதவியில்லாமலும் அறிவு உண்டாகலா மென்றும், கல்பாகிறது இந்த ஆலத்தைச் சேர்ந்ததல்லவென்றும் அது ஆலமுல் மலக்கூத்தில் நின்றுமுள்ள தென்றும் இந்த ஆலத்துக்காக உண்டாக்கப்பட்ட புலன்கள் அவசியம் அந்த ஆலத்தைப்பார்க்க வொட்டாமல் தடுக்குமென்றும், மனிதன் இதைவிட்டு நீங்காதவரையில் அந்த ஆலத்தின் பக்கம் ஒருபோதும் போகமுடியா தென்றும் தெரிய லாகும்.

(பஸல்) அருமையானவனே! நித்திரை அல்லது, மவுத்தினாலன்றி மற்றப்படி ஆலமுல் மலக்கூத்தின் பக்கம் கல்புடைய வாசல் திறக்க ஏதுவில்லையென்று நினைக்காதே. மேலும் ஒருவன் பாடுபட்டு ஆசை கோபம் முதலிய துர்க்குணங்களை விட்டு கல்பைச் சுத்தப் படுத்தி ஒழிந்த ஓரிடத்தில் உட்கார்ந்து கண்களை மூடி மற்றும் புலன் களையும் அதனதன் தொழிலில் நின்றும் அப்புறப்படுத்தி கல்பிலி ருந்து ஓயாமல் அல்லாஹ் என்ற சத்தம் பிறக்கும்படி கல்பை ஆல முல் மலக்கூத்துக்கு நேர்படுத்தித் தன்னையும் எல்லா உலகத்தையும் மறந்து அல்லாவை நினைத்துக்கொண்டிருப்பானாகில் அவன் விழித் திருந்தாலும் கல்பின் வாசல் திறக்கும். மற்றவர் மனமில் காணுகிற புதுமைகளை இவன் விழிப்பில் காணுவான். மலக்குகளுடைய ரூஹ் கள் நல்ல நல்ல ரூபங்களாகி இவனுக்குத் தென்படும். நபிமார்களைச்

(ரூ) முன் கூறி யிருக்கிற நியாயங்களால் வெளியாகும். ஏனென்றால் ரூஹானது பாகமேற்காத பலபரமாணுக்களால் சேர்க்கப்பட்ட நுண்ணு டம்புமல்ல, இருதயகமலத்திலிருப்பதும் பாகத்தை ஏற்காததுமான பரமா ணுவுமல்ல. மேலும் அது ஒரு தானத்தில் உறைவதுமல்ல. ஒரு உறப் புக்கு ஒருபாகமாகச் சேர்க்கப்பட்ட ஒரு அணுவுமல்ல ஒரு ஜிஸ்மு மல்ல இவையெல்லாவற்றையும்விட்டு அது சுத்தமானது. இன்னும் சிலர் ரூஹாகிறது அல்லாஹ் தஆலாவில் நின்றும் ஒரு அணுவா யிருக்கிறதென்று சொல்லுகிறார்களே இதுவும் தப்புதான் என்பதுவெளிப் படை. ஏனெனில் அல்லாஹ் தஆலா பலஅணுக்களால் சேர்க்கப்பட்ட ஒரு சமுதாயமல்ல. அப்படியிருந்தால் அவனின் ஒரு அணு அவனில் நின் றும்பிரிந்து இன்ஸானுடைய சரீரத்தோடுசேர்ந்து விட்டதென்றாகும். அவனை இக்குணத்தைவிட்டு மிகவும் தூய்யவனாயிருக்கிறான். இன்னும் ரூஹ் அல்லாஹ் தஆலாவுடைய சிபத்துகளில் ஒன்றென்றுசில சூபி

சந்தித்து அவர்களால் பிரயோஜனங்களை அடைந்து உதவியும் பெறுவான். பூமியுடையவும் வானத்துடையவுமான மலக்கூத்து அவனுக்கு காண்பிக்கப்படும். எவனுக்குஇந்த வழிதிறக்குமோ அவன்சொல்லவராத புதுமையான காட்சியைக்காண்பான். இன்னும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் "பூமி எனக்கு காண்பிக்கப்பட்டது. அதன் மஷ்ரிகுகளையும் அதன்மக்ரிபுகளையும் நான் பார்த்தேன்" என்று திருவுளமானதும், இதுபோலவே நாம் இபுராஹீமுக்கு வானங்களுடையவும் பூமியுடையவுமான இராஜாங்கத்தைக் காண்பித்தோம் அவர் எகீனுள்ளபேர்களில் நின்றும் ஆயிருப்பதற்காக என்று அல்லாஹு தஆலா திருவுளமானதும் இந்த சங்கதியைக் குறித்ததாகவே யிருக்கிறது. மேலும் நபிமார்கள் அலைஹிமிஸ்ஸலாமுடைய சகல இல்முகளும் இதேவழியில் நின்றுமாயிருந்தன. ஐயறிவுகளின் வழியாலும் பிறர் அறிவித்ததினாலுமல்ல. எல்லாவற்றிற்கும் தவக்கம் முஜாஹதா என்னும் பெரும் பிரயாசையான பாடேயாம். அதெவ்வாறெனில் அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு முஜாஹதாவைப் போதிக்க நாடி واذكر اسم ربك وتبتل اليه تبتيلا நீயுன்ரட்புடைய நாமத்தை நினைப்பாயாக இன்னும் பற்றுழிந்து அவன் பக்கம் வருவாயாக என்று திருவுளமாயிருக்கிறான். இதன் கருத்து எல்லா வஸ்துக்களையும்விட்டுப் பற்றுழிந்து தன்னை அல்லாஹுக்கு ஒப்புக்கொடு; தன்யாவுடைய காரியங்களையும் நோக்குதல் செய்யாதே, அவனே உன் சகல காரியங்களையும் சீர்ப்படுத்துவான் என்பதாம். رب المشرق والمغرب لا اله الا هو فاتخذه وكيلا மஷ்ரிகுமக்ரிபுகளின் ரப்பான அவனேயன்றி வேறு நாயகனில்லை. ஆதலால் அவனையே வக்கீலாய்ப் பிடித்துக்கொள்வாயாக. அதாவது தன் காரியங்களை அவனிடம் சாட்டிவிடு; பின்புகவலையற்றிரு. கல்குகளுடன் யாதொரு காரியம் வைத்துக்கொள்ளாதே என்பதாம்.

(ரு) யாக்கள் சொல்லுகிறார்களே அதுவும் தப்பென்பது புத்திமான்களுக்கு மறைந்ததல்ல. ஏனெனில் ஜெய்து ஒருவஸ்துவை அறிந்தவனையும் அம்று அதை அறியாதவனையுமிருப்பது அனுபவமாதலால் இவர்களிருவரிலும்அறிவையுடையதாயிருக்கிற ரூஹு அல்லாஹு தஆலாவுடைய சிபத்தாயிருந்தால் அம்றுவின் அறியாமை யென்னும் தோஷம் அல்லாஹு தஆலாவைச் சார்கின்றது. இதுவுந்தவிர அல்லாஹு தஆலா ரூஹானதுஎன்றப்புடைய அம்ரில் நின்றுமாயிருக்கு மெனச்சொல் என்றதில் அது ஆலமுல் அம்ருவில் ஒன்றென்பதற்கு அதாவது எதற்கு ஒரு அளவும் மட்டுதிட்டமும் இல்லையோ அந்த ஆலத்தில் சேர்ந்த தென்பதற்கு பரிஷ்காரமான தலீலாயிருக்கிறது. ஆகக்கூடி ஆகிறத்தென்னும் பரலோக காரியங்களையும் மனேதத்துவங்களையும் அறிகிற சக்தி எதில் இருக்கிறதோ. இன்னும் எதைத் திருத்துவதினால் அல்லாஹு தஆலாவினிடம் நெருங்

واصبر على ما يقولون واهجرهم هجرا جميلا அவர்கள் சொல்வதைச் சகித்துக் கொண்டிருப்பாயாக. இன்னும் அவர்களை அழகான விடுதலாக விட்டு விடுவாயாக என்று அல்லாஹ்¬ தஆலா அருளின இந்த எல்லாப் போதனைகளும் முஜாஹதா வென்னும் பிரயாசையைக் குறித்தவைகளாகவே யிருக்கின்றன. இவை எதற்கெனில், கல்புகளின் பகையையும், துன்யாவுடைய முஹப்பத்தையும், ஐயறிவுகளின் தொழிலையும் விட்டு கல்பு சுத்தமாய் ஒழிந்திருப்பதற்கேயாம்; இது தான் தசவ்வுபுடையவர்களின் வழி. இது துபுவ்வத்துடைய வழியென்றும் சொல்லப்படுகிறது. என்கிலும் உஸ்தாதிடத்திற் படித்து இல்மை யடைவது உலமாக்களின் வழியா யிருக்கும். இதுவும் பெரிய வேலைத்தான். என்றாலும் ஒருவர் படித்துக் கொடுக்கிறதின்றி சுயமா யுண்டாகிற அன்பியா அவ்லியாக்களுடைய இல்மோடு சேர்த்துப் பார்க்க அது மிகவும் சிறிதேயாம். அந்த வழியின் நன்மை அநேகம் பேருக்குப் பரிகூயினாலும், புத்தியின் அத்தாட்சியினாலும் தெரியவந்திருக்கிறது. இந்த இல்மானது உனக்கு ஆசையினால் உண்டாக வேண்டும் அல்லது, ஒருவர் உனக்குப் படித்துக் கொடுப்பதினால் உண்டாக்க வேண்டும். அல்லது, புத்தியின் அத்தாட்சியினால் உண்டாக வேண்டும். அப்படியு முண்டாகா விட்டால் கடைசியில் நீ இந்த மூன்று தரஜாக்களையும் விட்டு நசீபு கெடாமலும் காபீராகாமலு மிருப்பதற்காக நீ இந்தச் சங்கதியின் மேல் ஈமானுவது கொண்டு இதை உண்மையாக்கி வைக்க வேண்டும். இது கல்புடைய ஆலத்தின் புதுமைகளில் நின்று முள்ளது. இதனால் மனிதனுடைய கல்பின் பெருமை வெளியாகும்.

(பஸல்) அருமையானவனே! இது காரியம் நபிமார்களுக்கே சொந்தமான தென்றுநினைக்காதே. ஏனென்றால் எல்லாம் மனிதருடைய

(ரு) குமோ இன்னும் எதுவிளித்துக் கூப்பிடவும் நெறித்துப் பேசவும் படுகிறதோ இன்னும் எதை அக்லு என்றும் கல்பு என்றும் நப்சு நாதிகா என்றும் ஹகீகத் இன்ஸானி என்றும் சொல்லப்படுகிறதோ இன்னும்

ونفس وما سواها فالهمها فجورها وتقواها قد افلح من زكيها وقد خاب من دسيها

அல்லாஹ்¬ தஆலா திருவுளமானது போல் எதைச் சுத்தப்படுத்துவதினால் ஜெயம் பெறுவதற்குக் காரணமாகுமோ அது ரூஹ்¬ ஹைவானியல்ல. ரூஹ்¬ ஹைவானிக்குப் பரலோக காரியங்களையும் மனைதத்துவங்களையும் அறிய சக்தி கிடையாது. அதில் அந்த சக்தி யிருந்தால் ஜீவராசிகள் எல்லாமே பரலோக காரியங்களையும் தத்துவங்களையும் விசாரணை செய்கின்றனவா யிருக்கவேண்டும். இதுவோ அசம்பாவிதம். இன்னும் அது நப்ஸானியாகிய அல்லது நபாதிய்யாகிய குவ்வத்துமல்ல. அக்லு என்னும் ஆதேயப் பொருளுமல்ல. ஆதேயப் பொருளுக்கு உணரும் தர்மமில்லை.

ஜௌஹரான கல்பாகிறது தன் சுய உற்பத்தியில் இத்தகுதியுடையதா யிருக்கிறது. எப்படி இரும்பானது தன் சுய உற்பத்தியில் கண்ணடியாகிற தகுதியுடையதாயும், உலகத்தின் சாயை அதில் தோற்றுவதாயு மிருக்கிறதோ அப்படியே மனிதனுடைய கல்புமாம். ஆனல் இரும்புக் குத் திருபிடித்து அது கெட்டுப் போனல் எப்படி அது கண்ணடியாகா தோ அப்படியே எந்த கல்பின் பேரில் ஆசையும், அவாவும், பாவங்களும் மேலிட்டிருக்குமோ அந்த கல்பில் இத்தகுதி இராது. அதெப்படி யென் றல், كل مولود يولد على الفطرة فابواه يهودانه وينصرانه ويمجسانه அதீசில் பிறக்கிற ஒவ்வொரு பிள்ளையும் நல்ல பிறவியாகப் பிறக்கி றது பின்பு அதன் தாய் தந்தையர் அதை எஹூதியாகவும், நஸரானி யாகவும், மஜூஸியாகவும் செய்து விடுகிறார்கள், என்று வந்திருக் கிறது. இன்னும் எல்லாரிலும் இத்தகுதி யிருப்பதைப் பற்றி அல் லாஹ் தஆலாவும் அறிவித்திருக்கிறன். அதெப்படி யென்றல், الست بربكم قالوا بلى அலஸ்துபிறப்பிகும் காலூபலா "நான் உங்கள் நாயகனல்லவா?" வென்க "ஆம் மெய்தான் என்றார்கள்" என்பதே.

ஒருவன் ஒரு புத்திமானை நோக்கி "இரண்டானது ஒன்றைவிட அதிகமல்லவா?" என்று கேட்டால், "ஆம் இது மெய்தான்" என்று அவன் விடை யளிப்பான். இது சங்கதியை இதற்கு முன் அவன் தன் காதினுற் கேட்டிரா விட்டாலும் நாவினுற் சொல்லிரா விட்டாலும்

(ரு) ரூஹ் இன்சானியோ உணரும் தன்மையுள்ளதா யிருக்கிறது. இன்னும் அது பாகத்தை ஏற்காத பரமாணுவுமல்ல. பல அணுக்க ளால் சேர்க்கப்பட்ட சமுதாயப் பொருளுமல்ல. ஆனல் ரூஹ் ஹைவானியின் உதவியினல் சரீரத்தை ஆண்டு வருவதாயும் அதன் கட்டு கலையாமல் காத்துவருவதாயு மிருக்கிற பாகமேற்காத ஜௌஹரான ஒரு ஆதாரப் பொருளா யிருக்கிறது. அது தனக்கோர் தலமென்பதும் திசையென்பது மில்லாமல் சுத்தமா யிருக்கிறது. அது சரீரத்துக்கு உள்ளே யிருப்பதுமல்ல புறம்பே யிருப்பதுமல்ல. சரீரத்துடன் சேர்ந் திருப்பதுமல்ல. அதைவிட்டுப் பிரிந்திருப்பதுமல்ல. இதுதான் மஷ்ஹா யீன இஷ்ராகிய்யீன் என்ற ஹுகமாக்களின் சித்தாந்தமா யிருக்கிறது. இன்னும் சுன்னத்து ஜமா அத்தை உடையவர்களில் தீர்ந்த விசாரணைக் காரர்களின் உதாரணமாக :— அபூஜேய்து தபூசி இமாம் ராகிபு இமாம் கஸ்ஸாலி முதலானவர்களின் வாக்கியமும் இதுதான். இன்னும் முஃதஸிலியாகிய மிஃமருமீ இமாமிய்யாக்களின் ஒரு கூட்டமும் இதை தான் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சூபியாக்களின் தீர்ந்த விசாரணைக் காரர்களான மஹான்களுடைய சித்தாந்தமும் இதுவாகவே யிருக்கிறது. இன்னும் அந்த மஹான்களில் காமிலானவர்களுடைய முஷாஹதா என்னும் ஞான கதப்பிரத்தியக்ஷமும் இதில்தான் முடிவை அடைகின்றது. (முப்தீ ஷாஹ்த்தீன்)

அவன் மனம் இது மெய்யென்று ஒப்புக் கொள்ளும். இது எப்படி எல்லா மனிதருக்கும் இயற்கைக் குணமா யிருக்கிறதோ அப்படியே அல்லாஹு தஆலாவை அறிவதும் எல்லாருக்கும் இயற்கையா யிருக்கிறது. அதெப்படி யென்றால்,

அவர்களை யார் படைத்ததென்று நீர் அவர்களைக் கேட்பீராகில் அல்லா படைத்தானென்று திட்டமாக அவர்கள் சொல்லுவார்கள் என அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறான். இன்னும் இதுகாரியம் நபிமார்களுக்கே சொந்தமல்ல வென்று புத்தியின் அத்தாட்சியினாலும் பரிட்சையினாலும் தெரியவந்திருக்கின்றது. எனென்றால் நபிமார்களும் மனிதர்களா யிருக்கிறார்கள். قل انما انا بشر مثلكم உங்களைப்போல் நானும் ஒரு மனிதன் என்று நீர் சொல்லும்.

ஆனால் ஒருவருக்கு இந்த வழிதிறந்து கல்புகளுடைய நன்மை அவருக்குக் காண்பிக்கப்பட்டு அவர், அந்த நன்மையின் பக்கம் கல்புகளை அழைப்பாராகில் அந்த நன்மைக்கு ஷரீ அத்து என்றும் அவரை நபிகளென்றும் அவருடைய ஹாலாத்துகளை மூஃஜிஸா என்றும் சொல்கிறார்கள். அவர் அந்த நன்மையின் பக்கம் ஜனங்களை அழைக்கவில்லையானால் அவரை ஒலி என்றும் அவருடைய ஹாலாத்துகளை கறுமத்து என்றும் சொல்கிறார்கள். எவரில் இந்த ஹாலுகள் வெளியாகுமோ அவர் ஜனங்களை நன்மையின் பக்கம் அழைக்க முயலுவது அவர்பேரில் வாஜிபல்ல. மேலும் ஷரீ அத்து புதிதாயிருந்து வேறு ஷரீ அத்து தேவையில்லாததினாலாவது அல்லது, அழைப்பதற்கு வேண்டிய ஷராத்துகளில் யாதொரு ஷரத்து அந்த ஒலியில் இல்லாததினாலாவது அவரை அந்த வேலையில் பாரக்காக்காமலிருப்பது அல்லாஹு தஆலாவுடைய வல்லமையிலுள்ளதாயிருக்கும். ஆதலால் நீ ஒலிமார்களுடைய விலாயத்தின் பேரிலும் கறுமத்தின் பேரிலும் ஈமான் கொள்வது விதியாயிருக்கும். இக்காரியத்தின் ஆரம்பம் பெரும் பிரயாசையான பாட்டைப் பொருத்ததா யிருக்கின்றது. இதில் இக்தியாருக்கு இடமுண்டு. ஆனால் விதைத்தவன் அறுப்பான், தேடினவன் அடைவான், நடந்தவன் சேருவான் என்பது போன்ற காரியமல்ல. எந்தக்காரியம் அருமையானதா யிருக்கிறதோ அது சித்தியாவதற்குள்ள விதிகள் அனந்தமிருக்கின்றன. அது சித்திப்பதும் மகாகஷ்டம். மஃரிபத்துடைய மகாமில் மனிதனுடைய இந்த அஹ்வால் மிகச்சிறந்ததா யிருக்கும். கஷ்டமும் காமிலான பீரும் இல்லாமல் இதைத்தேடுவது பிரயோசனம் கொடாது. பின்பு இந்த இரண்டும் வாய்த்தாலும் தேடுகிறவன் அல்லாஹு தஆலாவுடைய உதவியில்லாமல் தன் நாட்டத்தைப் பெறமாட்டான். வெளியரங்கமான இல்மின் பூர்த்தியும் மற்றும் சாதாரண காரியங்களும் சுத்தியாகுவது அல்லாஹு தஆலாவுடைய உதவியைப் பொருத்ததாக யிருக்கிறது.

(பஸல்) மனிதனுடைய கல்புக்கு இல்மினுல் உள்ள பெருமைக்கு ஓர் நமூனு வென்னும் மாதிரியைத் தெரிந்து கொண்டாய். இனி குதறத் தினுலும் அதற்கோர் பெருமையுண் டென்றேமே அதையும் அறிந்து கொள், அதுவும் மலக்குகளுடைய குணமா யிருக்கும். மற்றும் ஜீவ ராசிகளுக்கு அதில்லே, அது யாதெனில் ஆலமுல் அஜ்ஸாம் என்னும் சடலோகமானது மலக்குகளுக்கு வசப்பட்டிருக்கிறது. அவர்கள் அல்லா வுடைய உத்தரவினுல் வேண்டும்போது மழைபொழியச் செய்கிறார்கள். வசந்தகாலத்தில் சுகவாயுவைக் கொண்டு வருகிறார்கள். தாயின் கர்ப் பத்தில் ஜீவவர்க்கங்களின் ரூபத்தையும், பூமியில் மூலவர்க்கங்களின் ரூபத்தையும் உண்டாக்குகிறார்கள். இவ்விதமான வேலைகளுக்காக மலக்குகளின் ஒவ்வொரு கூட்டம் குறிப்பா யிருக்கிறது. இதுபோல் மனிதனுடைய கல்புக்கும் தத்துவ முண்டு. ஆலமுல் அஜ்ஸாம் அதற்கு வசப்பட்டிருக்கிறது. அதன் சரீரமே அதன் ஆலமாயிருக்கும். சரீரமானது கல்புக்கு வசப்பட்டிருக்கிறது. கல்பானது விரலுடைய அதிகாரத்தில் இல்லே என்பதும் விரலில் அறிவும் நாட்டமும் கிடையா தென்பதும் பரிஷ்காரமாய்த் தெரிகின்றது. கல்பு உத்திரவு செய்தால் அதன் உத்திரவின் பேரில் விரல் அசைகின்றது. கல்பில் கோபம் பிறக் தால் சரீரம் முழுமையும் வியர்த்துப் போகிறது. இது மழைக்கு உபமான மாயிற்று. கல்பில் காமம் பிறந்தால் காற்றுண்டாகி காமம் உறுப்பின் பக்கம் போகின்றது. சோறுண்ண நாடினுல் நாவின் கீழிருக் கிற ஓர் சக்தி எழுந்து வாயுட்கொண்ட உணவை விழுங்கக்கூடிய வித மாய்ப் பதப்படுத்தும் பொருட்டு அமிர்தத்தைச் சிந்துகின்றது. சரீரத் தின் பேரில் கல்புடைய அதிகாரம் நடந்துவருவது தெரியாததல்ல. என்கினும் ஒருவருடைய கல்பானது மற்றொருவருடைய கல்பினும் அதிக மகிமையும் வலுவுமுள்ளதா யிருக்கவும், மலக்குகளைக் கொண்டு அதிக ஒப்பாயிருக்கவும்கூடும். அப்படி யிருந்தால் அவன் சரீரத்துக்குப் புறம்பா யிருக்கிற இதர சரீரங்களும் அவனுக்கு வசப்படும். எப்படி யென்றுல் அவனுடைய பயங்கரம் சிங்கத்தின்மீது விழ அது அடங்கி வசப்பட்டது. அவன் ஒரு நோயாளிக்காக துஆசெய்ய அவன் சவுக்கிய மடைந்தான். அல்லது, சவுக்கியமா யிருந்தவனுக்கு பத்துஆ செய்ய அவன் நோயாளியானுன். அல்லது, ஒருவன் வரவேண்டுமென்று நாட அவன் ஆசையுடன் வந்துசேர்ந்தான். அல்லது மழை பொழிய வேண்டு மெனக்கருத உடனே அது பொழிய ஆரம்பித்தது. புத்தி யின் அத்தாட்சியால் இவைகளெல்லாம் உண்டாகக் கூடியவைகளா யிருக்கின்றன. பரிட்சையினுலும் தெரிய வருகின்றன.

திருஷ்டிபடுவதும், சூனியம் பலிப்பதும் இதே வகையிற் சேர்ந்த வையாயும் இதர சரீரங்களில் கல்புதாக்குகிற காரியங்களின் தொகை யில் நின்று முள்ளவையாயு மிருக்கின்றன. உதாரணமாக, கெட்டதும் பொருமையுள்ளதுமா யிருக்கிற ஒரு நப்சுக்கு ஒரு நல்ல மிருகம்

தென்பட்டு அந்த நப்ஸு அதைப் பொருமையான பார்வையாய்ப் பார்த்தால் அம்மிருகம் உடனே செத்துப்போம். இப்படி ஹதீதிலும் வருகிறது.

العين تدخل الرجل القبر والجمل القدر கண் திருஷ்டியானது மனிதனை கபரிலும் ஒட்டகத்தைச் சேம்புச் சட்டியிலும் நுழைத்து விடும் என்று ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். ஆனதால் இதுவும் கல்புடைய குதரத்தின் புதுமைகளைச் சேர்ந்ததா யிருக்கும். இவ்விதமான குணம் ஒரு மனிதனில் வெளியாகி அவன் ஜனங்களை நல்வழிக்கு அழைப்பானுகில் அக்குணத்தை மூஃஜிஸா என்றும் அப்படி அழைக்கா விட்டால் அதை கரும்மத்து என்றும் அவன் நல்ல காரியங்களைச் செய்கிறவனு யிருந்தால் அவனை ஒலி அல்லது, நபி என்றும் கெட்ட காரியங்களைச் செய்கிறவனு யிருந்தால் அவனை சாஹிறு என்றும் சொல்கிறார்கள். ஆகக்கூடி சிஹறும், கரும்மத்தும், மூஃஜிஸாவும் மனிதனுடைய கல்பின் காஸியத்துகளில் நின்று முள்ளவைகளா யிருக்கின்றன. இவைகளுக் கிடையில் பெரிய வித்தியாச மிருந்தாலுஞ் சரி.

(பஸல்) எவனுயினும் மேற்சொன்ன சங்கதிகளை அறியவில்லையானால் அவன் நுபுவ்வத்தினுடைய உண்மை தெரியாதவனு யிருக்கிறான். ஆயினும் பின்வரும் சங்கதியையாவது அவன் செவியுற்றிருப்பான். அதாவது நுபுவத்தும் விலாயத்தும் கல்புடைய மகிமையினால் உண்டாகின்றன. அதனால் சித்தியாகுவது மூன்று காஸியத்துகளென்னும் சிறந்த குணங்களா யிருக்கும். முதலாவது :—மற்றும் ஜனங்களுக்குச் சொப்பனத்தில் வெளியாகுவது இவனுக்கு விழிப்பில் வெளியாகும். இரண்டாவது :—மற்றும் ஜனங்களுடைய கல்பு அவர்களுடைய சரீரத்தில் மாத்திரம் தாக்கும். இவனுடைய கல்பானது இவன் சரீரமல்லாத இதர சரீரங்களிலும் தாக்கி ஜனங்களைத் திருந்தவும் கெடுதியினின்று நீங்கவும் செய்கின்றது. மூன்றுவது :—மற்றும் ஜனங்களுக்கு ஒருவர் படித்துக் கொடுக்கிறதினால் உண்டாகிற இல்முகள் இவனுக்குப் படித்துக் கொடுக்கிறதின்றி தனக்குள்ளிருந்தே உண்டாகின்றன என்பனவேயாம். கூரிய புத்தியும், தெளிவான மனமும் உள்ள ஒருவன் சில இல்முகளைப் பிறரிடம் படிக்கிறதன்றி தன்னால் தானே அறிந்து கொள்ளக்கூடும். இது போல் எவனுடைய கல்பு அதிகமாய்த் தெளிவடைந்து ஒளி யுற்றிருக்கிறதோ அவன் எல்லா இல்முகளையுமாவது அல்லது மிகுந்த இல்முகளையாவது தன்னால் தானே அறிந்து கொள்ளக்கூடும். இந்த இல்முக்கு "இல்முல் லதுன்னீ" என்று சொல்லப்படும். இது وعلمناه من لدنا علما "வஅல் லம்னாஹு மில்ல துன்னு இல்மா" நாம் அவனுக்கு நம்மிடத்தில்

நின்றும் இல்மை அறிவித்தோம் என்று அல்லாஹு தஆலா திருவுள மானது போலவாம்.

எவரில் இந்த மூன்று காஸியத்துகளும் சேர்ந்திருக்கின்றனவோ அவர் பெரிய நபியாக அல்லது, ஒலியாக இருப்பார். இந்த மூன்றில் ஏதாவது ஒன்றிருக்குமாயினும் ஏதோ தரஜா உண்டாகும். இனி ஒவ்வொரு தரஜாவிலும் வெகு வித்தியாசமிருக்கிறது. எனெனில் ஒருவன் இம்மூன்றில் நின்றும் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் கமாலுள்ளவனு யிருப்பான். ஒருவன் பூரணமான கமாலுள்ளவனு யிருப்பான். நம்முடைய நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கமால் யாதெனில், இந்த மூன்று காஸியத்துகளும் அவர்களில் பூரணமான விதமாய்ச் சேர்ந்திருந்ததேயாம். அல்லாஹு தஆலா அவர்களுடைய நுபுவ்வத்தினால் கல்புகளுக்கு வழி காட்டவும், அதனால் கல்புகள் அவர்களைப் பின்பற்றவும், நற்பதவியின் மார்க்கத்தை அவர்களால் தெரிந்து கொள்ளவும் வேண்டு மென்று நாடி யிருந்தபடியால் இம்மூன்று காஸியத்துகளில் ஒவ்வொன்றுக்கும் அறிகுறியான நமூனுக்களை ஒவ்வொருவருக்கும் தந்தருளினான். இவற்றுள் முதலாவது காஸியத்துக்கு நமூனுவாகிறது நித்திரையும், இரண்டாவது காஸியத்துக்கு நமூனுவாகிறது சரியான யூகமும் மூன்றுவது காஸியத்துக்கு நமூனுவாகிறது இல்முகளில் நேரான மனமுமா யிருக்கும். எந்த பொருளுக்கு மனிதனில் நமூனு இல்லையோ அந்தப் பொருளின் மேல் அவன் ஈமான் கொள்ளுகிறதில்லை. ஏனெனில் எதற்கு அவனில் நமூனு யில்லையோ அதன் ரூபம் அவன் புத்தியில் அமையாததினாலென்க. இதனாலே தான் நாயகத்தனத்தின் உண்மையை நாயகனன்றி மற்றவன் அறியா னென்றது. இதன் உண்மையை விளக்க வேண்டுமானால் விரியும், மஆனி அஸ்மா யில்லா என்னும் கிதாபில் நல்லவிதமாய் எழுதப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய கருத்தென்ன வென்றால், அன்பியாக்களுக்கும் அவுலியாக்களுக்கும், இம் மூன்று காஸியத்துகளுடன் இன்னும் நாம் அறியாதது நம்மில் அதற்கு நமூனு இல்லாததுமான வேறு காஸியத்துகளு மிருக்கலாம் மென்பதே. ஆதலால் நாயகமே நாயகன் தவிர மற்றவன் அறியானென்று சொல்வது போல் ரசூலே ரசூல் தவிர மற்றவர் அறியார் என்று நாம் சொல்கின்றோம். நமக்கு இதற்கு மேல் அதிகமாய்த் தெரியாது. நமக்கு நித்திரை யென்பதே தெரியா திருந்தால், ஒருவன் கீழே விழுந்து கிடக்கிறானென்றும் அவன் கண் திறந்து பார்க்காமலும் கூப்பிட்டால் பேசாமலும் மனத்தால் யோசிக்காமலும் இருக்கிறானென்றும் அப்படி யிருப்பதுடன் நாளைக்கு ஆகப்போகிற ஒரு காரியத்தை அவன் பார்த்துக் கொண்டிருக்கிறானென்றும் அவன் கண் திறந்து பார்க்கிறவனுயும் காதி

ஞற் கேட்பவனுயு மிருந்தால் அதை அவன் பார்க்கானென்றும் நமக் குச் சொல்லப்பட்டால் இதை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட் டோம். ஏனென்றால் நித்திரையென்பது நமக்குத் தெரியாததால் அதிற்காணும் காட்சியும் நம்முடைய மனதில் அமையாது. மனிதன் தான் அறியாத வஸ்துவை ஒப்புக்கொள்ளமாட்டான். இதனுலேதான் அல்லாஹ் தஆலா بل كذبوا بما لم يحيطوا بعلمه ولما يأتهم تأويله என்கினும் அவர்களுக்குத் தெரியாததும் அதன் தாவீல் இன்னும் அவர்களுக்கு வராததுமான சங்கதியை அவர்கள் பொய் யென்கிறார் கள் என்றும் واذلم يهتدوا به فسيقولون هذا افك قديم அதைக் கொண்டும் அவர்கள் நேர்வழி அடையவில்லை யானுல் இது பூர்வகா லப் பொய்யெனச் சொல்வார்கள் என்றும் திருவுளமாயிருக்கிறன். ஆனதால், அன்பியா அவுலியாக்களுக்கு மற்றவர்கள் சுத்தமாய் அறி யாத ஒரு காஸியத்திருந்து அதனுல் அவர்கள் இன்பம் அடைவார்க ளென்பதை நீ ஆச்சரியமாய் நினைக்காதே. எவனுக்குப் பாடலின் மேல் விருப்ப மில்லையோ அவனுக்குச் சங்கீதமெட்டில் இன்பமுண் டாகாதென்றும், அதன் இன்பத்தை எவனும் அவனுக்கு அறிவிக்க முடியாதென்றும், குருடனுயிருக்கிறவன் காட்சியின் இன்பத்தை அறியமாட்டான் என்றும் நீ அறிந்திருக்கிறுய். ஆதலால் நபிமார்களில் நுபுவ்வத்துக்குப் பிறகு சில அறிவுகளை உண்டாக்குவதும் அதற்கு முன்னே அதை ஒருவரும் அறியாதிருப்பதும் அல்லாவுடைய வல்ல மையை நோக்க ஆச்சரியமல்ல.

மேற்சொல்லிய சங்கதிகளால் மனிதனுடைய பெருமையும் சூபிய்யாக்களுடைய வழியும் உனக்குத் தெரியலாயிற்று. இல்மாகிறது திரையாயிருக்கிறதென்று சூபிய்யாக்கள் சொல்லுகிறதை அகத்தியம் நீ கேட்டிருப்பாய். அதை நிராகரிக்காதே. அது உண்மைதான். ஏனென்றால் ஐம்றிவுகளால் அறியும் பொருட்களிலும் அவற்றின் வழியாலுண்டாகும் இல்முகளிலும் நீ பாக்காயிருக்கிறவரையில் தடை பட்டவனுகவே யிருப்பாய். கல்பானது ஒரு குளம்போலும் ஐயறிவு களானவை அந்த குளத்துக்குள் பாய்கிற ஐந்து கால்வாய்கள் போலு மிருக்கின்றன. அக்குளத்தின் அடித்தரையிலிருந்து தெளிவான ஜலம் சுரக்கவேண்டுமென்று நீ நாடுவாயாகில் அதற்குச்செய்யவேண்டிய பிர யத்தனம் யாதெனில், முந்தித்தண்ணீர் வந்து பாயாதபடி அந்தக்கால் வாய்களை அடைக்கவேண்டும். பின்பு குளத்திலிருக்கிற தண்ணீரை இறைத்துவிடவேண்டும். அந்தத்தண்ணீரினுல் படிந்திருக்கிற வண்ட லாகிய கருஞ்சேற்றை வாரி வெளியே கொட்டவேண்டும். பின்பு அக் குளத்தின் அடித்தரையைத் தோண்டவேண்டும். அப்படித்தோண்டி

ஞல் அதிலிருந்து தெளிவான ஜலம்சுரந்து பொங்கி வழிய ஆரம்பிக்கும். வெளித்தண்ணீர் குளத்திலிருக்கிறவரையில் உள்நீர் சுரக்கவழியில்லை. இதுபோலவே வெளியிலிருந்துவந்த ஒவ்வொரு வஸ்துவையும்விட்டு கல்பு காலியாகாதவரையில் அந்தரங்கமான இல்முஉண்டாகாது. ஆனால், ஆலிமானவன் தான்கற்ற இல்மைவிட்டு கல்பைக் காலியாக்கிப்பின்பு அந்த இல்முடன் கல்பைச் சேர்க்காமலிருப்பானுகில் அந்தச்சென்ற இல்மு அவனுக்குத்திரையாக மாட்டாது. அவனுக்கு கல்பின் வாசல் திறக்க இடமுண்டு. இன்னும் பல எண்ணங்களிருந்தும் ஐயறிவு களால் அறியும் பொருட்களிலிருந்தும் கல்பை ஒழிப்பானுகில் சென்ற எண்ணங்கள் அவனுக்குத் திரையாகமாட்டா.

திரையாகுவதற்குக் காரணம் யாதெனில் ஒருவன் சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாதாகிய நிண்ணயங்களைக்கற்று இல்முல் கலாமில் சொல்லப்படுகிற அதன் அத்தாட்சிகளையும் அறிந்து இதைத் தவிரவேறு இல்மு இல்லையென்று நிண்ணயங் கொள்ளுவானுகில், வேறு பேச்சு அவன் கல்பில்வரும்போது இது நான் முன் கேட்டிருந்த வார்த்தைக்கு விரோதமாயிருக்கிறதென்றும் அதற்கு விரோதமானதெல்லாம் பிசகென்றும் அதை நிராகரித் தொழிக்கிருன். இப்படிபட்டவனுக்கு காரியத்தின் உண்மை ஒருபோதும் தெரிய லாகாது. ஏனெனில் அவாம் என்னும் சாமானிய ஜனங்களுக்கு கற் பிக்கப்படுகிற நிண்ணயமானது ஹகீகத்தென்னும் உட்பொருளுக்கு மேற்கூடான தோலாயிருக்கிறது. அதுவே ஹகீகத்தல்ல. மேற்றோலை விட்டு உட்பொருளான மணியை அடைய வேண்டியதுபோல் மேற் கூடாகிய அகிதாவில் நின்றும் உட்பொருளாகிய ஹகீகத்தை அறி வதுதான் பூரணமான மஃரிபாவா யிருக்கும். எவனொருவன் நிண்ணய உறுதிக்காகத் தக்கமுறை கற்கின்றனே அவனுக்கு ஹகீகத்து வெளியாகாது. தான் கற்றிருப்பதே சகல இல்முகளுமென்று அவன் எண்ணியிருப்பதால் இந்த எண்ணம் அவனுக்குத் திரையாகும். இன் னும் ஏதோகொஞ்சம் படித்தவனுக்கு மமதையாகிய பெருமை மேலிட்டிருக்கும். இப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் தடைபட்டவர் களாகவே இருக்கிறார்கள். தர்க்கிகளுடைய கதியும் இப்படியேயாம். ஒருவன் இந்தப் பெருமையை ஒழிப்பானுகில் இல்மு அவன் விஷயத் தில் திரையாகாது. மேலும் அந்த வழியின் திறப்பு அவனுக்கு நல்லவிதமாய் உண்டாகும். அவனுடைய தரஜா அதிக நிறப்பமாகும். அவன் வழியில் எவ்வித கெடுதியும் சம்பவிக்காது. எவனொருவன் இல்மில் நிலைபாடாகவில்லையோ அவன் பெரும்பாலும் தப்பெண்ணங் களான சிறையிற் சிக்குண்கிருன். கொஞ்ச சந்தேகமும் அவனுக்குத்

திரையாகின்றது. ஆலிமானவனே இவ்விதமான எண்ணங்களைவிட்டும் கவலையற்றிருக்கிறான். கல்பின்வாசல் திறந்திருக்கிற ஒருவர் இல்மு திரையாயிருக்கிறதென்று சொல்லக்கேட்பாயாகில் அவர் சொன்ன அந்த சொல்லுக்குப் பொருளென்னவென்று ஆராய்ந்தறிவது அவசிய மாயிருக்கும். அதை நிராகரிக்கக் கூடாது.

ஆனால், இந்தப்பக்கங்களில் எழும்பி யிருக்கிற முல்ஹிதுகளான இந்தத் துன்மார்க்கருக்கு ஒருபோதும் அவ்வழியின் திறப்பில்லை. சூபிகளென்று வெறும்பேர் வைத்துக்கொண்ட சிலர் பிதற்றியிருக்கிற வீண்பேச்சுகளை இவர்கள் குருட்டுப் பாடம்செய்து கொண்டார்கள். நாள் முழுமையும் தங்களைக் கழுவுவதும் லுங்கி, அப்பு சட்டை, தொழுகை விரிப்பு முதலியவைகளால் தங்களைப் பகட்டிக்காட்டுவதும் இல்மையும் உலமாக்களையும் இகழ்வதுந்தான் இவர்களுக்கு வேலையா யிருக்கிறது. இவர்கள் சிரசாக்கினை விதியானவர்களாயும், மனிதஷைத் தான்களாயும் அல்லா ரஸூலுக்குச் சத்துராதிகளாயு மிருக்கிறார்கள். எனென்றால், அல்லாவும் ரஸூலும் இல்மையும் உலமாக்களையும் புகழ்ந்து எல்லாரையும் இல்மின்பக்கம் அழைத்திருக்கிறார்கள். நரக வரிசண்டம் பூரணப்பாத்திரனுகிய இந்தத் துர்ப்பாக்கியனுக்கு கல்பு வழியும் திறக்கவில்லை. இவன் இல்மும் படிக்கவில்லை. அப்படியிருக்க இம்மாதிரியான பேச்சுகள் பேச இவனுக்கு என்ன அந்தஸ்திருக்கிறது? இவனுக்கு உவமை யாதெனில், ஒருவன் கீமியாவினால் ஏராளமான தங்கமுண்டாகிறதென்றும் தங்கத்தினும் கீமியாவே மேலானதென் றும் ஒருவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டான். பிறகு இவன் முன் பாக தங்கபொக்கிஷத்தைத் திறந்துவைத்து உனக்குத் தேவையான அளவு நீ எடுத்துக்கொள் ளென்றால் இவன் அதை அலட்சியம்செய்து தங்க மென்னத்திற்கு தங்கத்தினும் மேலான கீமியாவையே சம்பா திக்க வேண்டும் என்று சொல்லித் தங்கத்தையும் கையால் தொடுகிற தில்லை. கீமியாவும் இவனிடத்தில் கிடையாது. நிர்பாக்கியனும் தரித்திரனும் இருக்கிறான். கீமியாவானது தங்கத்தினும் மேலான தென்ற சொல்லை மாத்திரம் கேட்ட சந்தோஷத்தினால் மகிழ்ந்து பெருமையடிக்கின்றான். இதில் கீமியாவாகிறது அன்பியா அவுலி யாக்களுடைய இல்முக்கு உவமையாயும், தங்கமாகிறது உலமாக் களுடைய இல்முக்கு உதாரணமாயுமிருக்கிறது. கீமியாகாரனுக்குத் தங்க முதலாளியின்பேரில் எல்லா விஷயத்திலும் பெருமையுண்டு. என்கினும், இவ்விடத்தில் ஒரு நுட்பமிருக்கிறது அதென்னவென்றால், ஒருவனிடத்தில் நூறு தங்கக்காசுக்குமேல் அதிகமாய்ச் செய்யக்

கூடாத கொஞ்சம் கீமியாயிருந்தால் அவன் ஆயிரம் தங்கக்காசு வைத்திருக்கும் முதலாளியின் மேல் பெருமை பாராட்டமாட்டான்.

கீமியாவின் கிதாபுகளும், அதைத்தேடி அலேபவர்களின் சங்கதிகளும் அனந்தமிருக்கின்றன. இக்காலத்தில் அதன் உண்மை ஒருவருக்கும் தெரியவில்லே. அதைதேடுவதற்காக எழும்புகிற அநேகம்பேர் கடைசியில் மோசம் போகிறார்கள். சூபிகளுடைய காரியமும் இதேவிதமாயிருக்கிறது. அவர்களில் கமால் உள்ளவர்கள் இல்லே. அப்படியிருந்தாலும் கொஞ்சம்பேர் இருக்கிறார்கள். அவர்களிலும் பூரணத்தன்மையை அடைந்தவர்கள் அருமையாயிருக்கிறார்கள்; ஆனதால் எவனில் சூபியாக்களின் மகிமை ஏதோ கொஞ்சம் வெளியாகுமோ அவன் எல்லா ஆலிம்களின்பேரிலும் பெருமைபாராட்டமுடியாதென்று அறிந்துக்கொள். எனென்றால் இவர்களில் அநேகம்பேருக்குத் துவக்கத்தில் கொஞ்சம் மகிமையுண்டாகிறது. பின்பு அதைவிட்டும் விழுந்து போகிறார்கள். பூரணத்தை அடைகிறார்களில்லே. இன்னும் சிலருக்கு உண்மையல்லாத ஒருவிதமான பிரமை மேலிடுகிறது. அதை அவர்கள் ஒருமகிமை என்று எண்ணிக்கொள்கிறார்கள். உண்மையில் அப்படியல்ல. சொப்பனத்தில் எப்படி சில சமயம் உண்மையும் சில சமயம் பலவிதமான எண்ணங்களுமாயிருக்கின்றனவோ அப்படியே இந்தக் காரியமும் ஆகின்றது. ஆகையால் எவனொருவன் இது காரியத்தில் பூரணத்தை அடைந்திருக்கிறானே அவனே உலமாக்களின்பேரில் வரிசையுடையவனாகுவான். இப்படி பூரணத்தை அடைந்தவன் மற்றவர்கள் படித்தறியும் இல்மை இவன் படிக்காமல் தன்னில் தானே அறிந்துக் கொள்ளுவான். இப்படிப்பட்டவர்கள் மிகவும் அருமையாயிருக்கிறார்கள். ஆனதால் சூபியாக்களின் உண்மையான வழியின்பேரிலும் அவர்களுடைய மகத்துவத்தின் பேரிலும் நீ ஈமான் கொள்வது விதியாயிருக்கும். இக்காலத்திலுள்ள முல்ஹிதுகளாகிய துன்மார்க்கருடைய நிலேமையைப்பார்த்து மெய்யான சூபிகள்மேல் தர் எண்ணங்கொள்ளாதே. அவநம்பிக்கைப்படாதே. அந்தத் துன்மார்க்கரில் யாராவது ஒருவன் இல்மையும் உலமாக்களிலும் தூஷணம் செய்வானாகில் மதிகேட்டினால் அப்படிச் செய்கிறானென்று எண்ணிக்கொள்.

ஒருக்கால் நீ மனிதனுடைய நற்பதவியானது அல்லாவை அறிவதைப் பொருத்ததா யிருக்கிற தென்று எப்படி அறியலாமெனக்கேட்பாய். அதற்கு மறுமொழியாவது:—ஒவ்வொரு பொருளுக்கும் எந்தக் காரியத்தில் இன்ப மிருக்கிறதோ அந்தக் காரி

யத்திலேயே அதற்குப்பதவியுண்டு. ஒவ்வொரு பொருளின் சுபாவம் எதை விரும்புகிறதோ அதிலேயே அதற்கு இன்பமுண்டு. ஒவ்வொரு பொருளும் எதற்காகப் படைக்கப்பட்டதோ அதையே அதன் சுபாவம் விரும்பும். அதெப்படியென்றால், ஆசையின் இன்பம் மனிதன் தான் இச்சித்த பொருளை அடைவதிலாயிருக்கும். கோபத்தின் இன்பம் பகைவனுக்குப் பிரதி செய்வதிலாயிருக்கும். கண்ணின் இன்பம் அழகிய ரூபங்களைப் பார்ப்பதிலாயிருக்கும். காதின் இன்பம் நல்ல ராகமான ஓசையைக் கேட்பதிலாயிருக்கும். இதுபோலவே கல்பின் இன்பமாகிறது அது எதற்காகப் படைக்கப்பட்டதோ அதில் இருக்கிறது. கல்பை எதற்காகப்படைத்த தென்றால், வஸ்துக்களின் உண்மையை வகுத்தறியவேயாம். இது மனிதனுடைய கல்புக்கே சொந்தமாயிருக்கிறது. ஆனால் ஆசையும் கோபமும் ஐயறிவுகளால் பொருட்களை அறிவதுமான இக்குணங்கள் மிருகங்களுக்கும் உண்டு. மனிதனுடைய கல்பை வஸ்துக்களின் உண்மையை அறியப்படைத்திருப்பதினால் தான் அவன் யாதொரு பொருளின் உண்மையை அறியாதிருந்தால் அதை அறியவேண்டுமென்ற ஆசை அவன் மனதிலிருக்கிறது. இன்னும் அவன் யாதொரு பொருளை அறிந்துகொண்டால் அப்படி அறிந்தபொருள் சதுரங்க விளையாட்டைப்போல் அற்பமானதாயிருந்தாலும் அதைப்பற்றி மகிழ்ந்து பெருமையடிக்கின்றான். அதை அறிந்தவனிடம் நீ ஒருவருக்கும் இதைபடித்துக்கொடுக்காதே என்றால் அதை சகித்துக் கொண்டிருக்க அவனால் முடிகிறதில்லை. அருமையான விளையாட்டைக் கற்றிருக்கிறேனென்கிற மகிழ்சியினால் அதை பிறருக்குக் கற்றுக்கொடுத்துத் தன் பெருமையை வெளிப்படுத்த நாடுகின்றான். இதனால் கல்புடைய இன்பமாகிறது விஷயங்களை அறிவதிலாயிருக்கு மென்று நீ தெரிந்து கொண்டாய்.

இனி அந்த அறியப்படும் பொருள் எவ்வளவு அதிக சிறந்திருக்கிறதோ அவ்வளவு அதிக இன்பத்தை அடைவாய் என்பதையும் உணர்ந்துகொள். உதாரணமாக ஒருவன் ஒரு மந்திரியினுடைய இரகசியங்களை அறிந்தவனுக்கால் ஓர் இன்பத்தை அடைவான். அரசனுடைய இரகசியங்களை அறிந்து ராஜ்ஜியத்தின் காரியங்களை ஆலோசிப்பவனுக்கும்போது முன்னிலும் அதிக இன்பத்தை அடைவான். ஒருவன் அங்க கணிதத்தினால் வானங்களின் ரூபத்தையும் அவைகளின் பெருப்பத்தையும் அறியும்போது அடையும் இன்பமாகிறது அவன் சதுரங்க விளையாட்டறிந்ததனால் அடைந்த இன்பத்தைவிட அதிகமாயிருக்கும். சதுரங்கம் விரிப்ப திப்படி யென்றறிந்தவன் அடையும் இன்பத்தைவிட அதைவிளையாடுவ திப்படி என்றறிந்தவன் அடையும் இன்பம் அதிகமாயிருக்கும்.

இதுபோலவே அறியப்படும் விஷயம் எவ்வளவு சிறந்ததாயிருக்கிறதோ அவ்வளவே அதை அறியும் அறிவு சிறந்ததாயும் அதனுலுண்டாகும் இன்பம் அதிகமாயுமிருக்கும். யாருடைய ஜாத்திலுல் எல்லாப் படைப்புகளுக்கும் மகிமை யுண்டோ, எவன் சர்வலோகத்துக்கும் பாதஷாவா யிருக்கிறனே, ஆலத்தின் சகல புதுமைகளும் யாருடைய கிரியைகளின் அடையாளங்களா யிருக்கின்றனவோ அந்த மவுஜூதான அல்லாஹு தஆலா எல்லாவற்றினும் அதிக சிறந்தவனு யிருக்கிறன். ஆதலால் எந்த அறிவும் அவனை அறியும் அறிவுக்குமேற் சிறந்ததாகாது. எந்த அறிவின் இன்பமும் இந்த அறிவின் இன்பத்துக்கு இணையாகாது, எந்தக்காட்சியின் இன்பமும் இந்தகாட்சியின் இன்பத்துக்கு ஈடாகாது. இதைத்தான் கல்புடைய சுபாவம் விரும்புகின்றது. எந்த கல்பு இதைவிரும்பவில்லையோ அந்தகல்பாகிறது சோற்றின் விருப்பமில்லாமல் மண்ணையே அதிகமாகத்தின்ன ஆசைப்படுகிற நோயாளியின் சரீரம் போலாகும். இவனுக்குப் பசியெழும்பி மண்ணின் துராசை நீங்கும்படி பரிகாரம் செய்யாவிட்டால் இவன் இவ்வுலகத்தின் துர்ப்பாக்கியனுகி திடீரென்று மடிந்துபோவான். இதுபோல் யாருடைய கல்பில் துன்யாவுடைய பொருட்களின் ஆசையானது அல்லாவுடைய மஃரிபாவின் ஆசையைவிட மேலிட்டிருக்கிறதோ அவன் கல்பு நோய் கொண்டிருக்கிறது. அவன் அதற்குப் பரிகாரம் செய்யாவிட்டால் அவ்வுலகத்தின் துர்ப்பாக்கியனுகி கடைசியில் ஹலாக்காகுவான். மனிதனுடைய தேக சம்பந்தமான சகல இச்சைகளும் ஐயறிவால் அடையும் எல்லா இன்பங்களும் மரணத்தோடு ஒழிந்துபோகும். அதில் எடுத்த பிரயாசையும் போய்விடும். கல்பு சம்பந்தமான மஃரிபாவுடைய இன்பமோ மரணத்திலுல் இரட்டிப்பாகும். ஏனென்றுல் மரணத்திலுல் கல்பு ஹலாக்காகிறதில்லை. மஃரிபா நிலையாயிருக்கும். மேலும் அது இன்னும் அதிகப் பிரகாசமாகும். இந்தச் சங்கதியின் பூராவான விவரம் கிதாபின் கடைசியில் முஹப்பத்துடைய அசலில் சொல்லப்படும்.

(பஸல்) மனிதனுடைய கல்பின் விசேஷங்களைக் குறித்துச் சொல்லப்பட்ட இவ்வளவு சங்கதி இந்தக்கிதாபில் போதுமாயிருக்கிறது. இன்னும் அதிக விரிவாய் அறிய விரும்புகிறவன் அஜாயிபுல் கல்பி என்னும் கிதாபில் நாம் பயான் செய்திருக்கின்றோம், பார்த்துக்கொள்ளவும். இந்த இரண்டு கிதாபினுலுங்கூட தன்னை அறிதல் பூரணமாய் வாய்க்காது. ஏனென்றுல், இப்போது சொல்லியவை அதன் எல்லா சிபத்துகளினின்றும் சிலவற்றின் விவரமாயிருப்பதினுலென்க. தன்னை அறியும் விவாத்தில் கல்பு சம்பந்தமாய் இதுவரையில் பேசிவந்தது ஒரு முகுனுயிருக்கும்.

இனி இரண்டாவது முகுளுகிறது மனிதனுடைய தேகமா யிருக்கும். அதிலும் அநேக புதுமை களிருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பின் உள்ளேயும் வெளியேயும் பற்பல விஞ்ஞதமான வஸ்துக்களும் அருமையான பூசாயங்களு மிருக்கின்றன. மனிதனுடைய சரீரத்தில் பல்லாயிரம் நரம்புகளும் எலும்புகளு மிருக்கின்றன. ஒவ்வொன்றின் குணமும் ரூபமும் வெவ்வேறுயும் ஒவ்வொன்றையும் உண்டாக்கினதில் நாடிய கருத்து வெவ்வேறுயு மிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் நீ அறியாம லிருக்கிறாய். கை ஒன்றை வாங்குவதற் கென்றும், கால் நடப்பதற் கென்றும், நாவு பேசுவதற் கென்றும் இவ்வளவு மாத்திரம் அறிந்திருக்கிறாய். என்கினும் கண்ணானது விதவிதமான பத்து வகுப்புகளால் உண்டாக்கப்பட்டிருக்கிற தென்றும், அவ்வகுப்புகளில் ஒன்று குறைந்து போனால் நேத்திரப்பழுதுண்டாகு மென்றும், ஒவ்வொரு வகுப்பினால் நாடிய கருத்தென்ன வென்றும், நேத்திரத்துக்கு அது ஏன் தேவையாயிற் றென்றும் நீ அறிகிறாயில்லை. கண்ணின் அளவு சிறியதா யிருந்தாலும் அதன் இல்முடைய விரிவு பெரிய கிதாபு களிலும் அடங்காது. இதையே நீ அறியா விட்டால் உள்ளுறுப்பான ஈரல், மண்ணீரல் முதலியவைகள் ஏன் படைக்கப்பட்டன வென்பதும் உனக்குத் தெரியாது. ஈரலை உண்டாக்கினது எதற்கென்றால், இரைப் பையிலிருந்து அதனிடம் போகின்ற பலவகையான ஆகார சத்துக்கள் எல்லாவற்றையும் ஓர் நிறமான இரத்தமாக்கி சகல உறுப்புகளுக்கும் ஆகாரமாகுந் தன்மையை அதில் உண்டாக்கவேயாம். ஈரலில் இரத்தம் கொதித்துப் பதப்படும் போது அதனால் கொஞ்சம் வண்டல் அதில் தங்கி விடுகிறது. அது சிலேத்துமமா யிருக்கும். அந்த சிலேத்தும நீரை ஈரலில் நின்றும் இழுத்துக் கொள்ளுவதற்காக மண்ணீரல் உண்டாக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரத்தத்தின் மேல் மஞ்சள் நிறமான ஒரு நுரை சேருகின்றது. அது பித்தமா யிருக்கும். அந்த பித்த நீரை இரத்தத்தில் நின்றும் பிரித்துக் கொள்வதற்காக பித்தை உண்டாக்கி இருக்கிறது. இன்னும் இரத்தம் ஈரலை விட்டுப் புறப்படும் போது தடிப்பில்லாமல் நீர் போல் தெளிந்திருக்கும். அந்த நீரை இரத்தத்தில் நின்றும் இழுத்துக் கொள்வதற்காக குண்டிக்காய்க ளுண்டா யிருக்கின்றன. ஏனெனில் பித்த நீரும் சிலேத்தும நீரு மில்லாமல் இரத்தம் சுத்தமாகி நரம்புகளிற் செல்லுவதற்கேயாம். பித்துக்கு யாதொரு ஆபத்து வந்தால் பித்த நீர் தங்கி விடுகின்றது. அதனால் பாண்டுரோகமும் மற்றும் பித்த சம்பந்தமான வியாதிகளும் உண்டாகின்றன. மண்ணீரலுக்கு யாதொரு ஆபத்து அணுகினால்

ஈலேத்துமை நீர் இரத்தத்துடன் இருந்து விடுகின்றது. அதனால் கரும்பித்த வியாதிகள் ஜனிக்கின்றன. குண்டிக்காய் பிணி கொண்டால் அப்போது இரத்தம் தடிப்பாகாமல் நீர்த்திருக்கும். அதனால் மகோதர வியாதி யுண்டாகும். இது போலவே வெளி யுறுப்பு, உள்ளுறுப்பு முதலிய ஒவ்வொரு உறுப்பையும் ஒவ்வொரு காரியத்துக்காகப் படைத்திருக்கிறது. அதில்லாமற் போனால் தேக சவுக்கியத்திற்குக் கெடுதி யுண்டாகும். சரீரம் சிறிதா யிருக்கின்றது, என்கினும் அது சர்வலோகத்துக்கும் அறிகுறியான நமூனுவா யிருக்கிறது. அதனால் உலகத்திலுண்டா யிருக்கிறவை அதில் தென்படுகின்றன. எலும்பானது மலை போலும் வியர்வையானது மழை போலும், உரோமங்களானவை மரஞ் செடிகள் போலும், தலை மூளையானது வானம் போலும், புலன்களானவை நட்சத்திரங்கள் போலுமா யிருக்கின்றன. இதை விரித்தால் பெருகும்; இவையன்றி முன் சொன்னது போல் பன்றி, நாய், ஓநாய், மேயுமிருகம், ஷைத்தான், மலக்கு முதலிய உலகத்தின் சகல ஜீவராசிகளுக்கும் இதில் நமூனு இருக்கிறது. அன்றியும் உலகத்திலிருக்கிற ஒவ்வொரு தொழிலாளிகளும் இதில் தென்படுவார்கள். அதெப்படியென்றால், இரைப்பையில் ஆகாரத்தைச் செமிக்கப் பண்ணுகிற சக்தியானது சமையற்காரன் போலிருக்கிறது. ஆகாரசத்தை ஈரலுக்கும், சக்கையை மலப்பைக்கும் தள்ளுகிற சக்தியானது செக்கன் போலிருக்கிறது. ஈரலில் சென்ற ஆகார சத்துக்கு இரத்த வர்ணத்தைக் கொடுக்கிற சக்தியானது சாயக்காரன் போலிருக்கிறது. பெண்பிள்ளையுடைய ஸ்தனத்தில் உதிரத்தைப் பாலாகவும், ஆண்பிள்ளையுடைய முதுகிலும் பீஜங்களிலும் அதை விந்துவாகவும் செய்கிற சக்தியானது வண்ணன் போலாகும், ஒவ்வொரு உறுப்பிலு மிருந்து ஈரலில் உள்ள ஆகார சத்தைத் தன் பக்கம் இழுக்கிற சக்தியானது வலிப்பான் போலாகும். ஈரலில் நின்றும் நீரை யிழுத்து நீர் பையில் போகச் செய்கிற குண்டிக்காயின் சக்தியாகிறது தண்ணீர்க்காரன் போலிருக்கிறது. சக்கையை வெளியே தள்ளும் சக்தியானது தோட்டி போலாகும் பித்தம் ஈலேத்துமம் இவைகளை எழுப்பித் தேகத்தைக் கெடுக்கும்படி செய்கிற சக்தியானது கலகம் விளைக்கும் கள்ளன்போலாகும். பித்தம் முதலிய மற்றும் வியாதிகளை அகற்றுகின்ற சக்தியானது நீதமுள்ள தலைவன் போலாகும்.

இவ்விஷயங்களையும் விரித்தால் பெருகும். ஆதலால் நீ அறிய வேண்டிய தென்ன வென்றால், பலவகையான ஆலம் உனக்குள்ளே யிருக்கின்றன. ஒவ்வொன்றும் உன் வேலையி லிருக்கிறது. நீ கவலை யற்றுத் தூங்குகிறாய். இவைகள் உன் பணி விடையை வெகு

சுறுசுறுப்பாய்ச் செய்து கொண்டிருக்கின்றன. நீ அவைகளை அறிகிறாயில்லை. அவர்களை உன் பணிவிடையில் அமைந்திருக்கிற ஆண்டவனுக்கு நன்றியறிந்து ஷுகுறு செய்கிறாயில்லை. ஒரு பாதுஷாவான்வன் ஒரு வேலைக்காரனை ஒருநாள் உன்னிடத்திற் கனுப்பினால் நீ வயது முழுவதும் அவனின் நன்றியறிந்து அவனைப் புகழ்ந்து கொண்டிருப்பாய். நீ ஜீவித்திருக்கிற பரியந்தம் கொஞ்சநேரமாவது உன் வேலையை மறக்காத ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை உனக்கு வேலையாட்களாக உன்னில் அமைத்திருக்கிற அல்லாஹ் தஆலாவை நினைக்கிறாயில்லை.

தேக இணைப்பையும், உறுப்புகளின் பிரயோஜனங்களையும் அறிவது ஒரு பெரிய இல்மாயிருக்கும். ஜனங்கள் இதை மறந்தவர்களாயிருக்கிறார்கள். அப்படி ஒருவன் அதைப் படித்தாலும் வைத்தியத்திற் பண்டிதனாக வேண்டுமென்று படிக்கின்றான். வைத்திய சாஸ்திரம் தேவையானதாயிருந்தபோதிலும் அதுவும் சொற்ப இல்முதான். தரீகத்துடன் அதற்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. ஒருவன் அல்லாவுடைய புதுமைகளைப் பார்க்கும் பொருட்டுத் தன் சரீரத்திலே நோட்டமிடுவானாகில் அவனுக்கு அல்லாஹ் தஆலாவுடைய சிபத்துகளில் நின்றும் மூன்று சிபத்துகள் தெரியலாகும் :— முதலாவது இந்தச் சரீரமாகிய கூட்டைப் படைத்தவன் குதுரத்தென்னும் பூரண சக்தியுடையவனாயிருக்கிறான். அவனுடைய குதுரத்தில் எவ்வித குறைவுமில்லை, அவன் நாடுகிறதைச் செய்யக்கூடியவனாயிருக்கிறான் என்பதாம்; ஏனெனில் ஒருதுளி நீரினால் இவ்விதமாகிய மனிதனை அவன் உண்டாக்கினானே இதைப்பார்க்கிலும் உலகத்தில் பெரிய புதுமை என்ன இருக்கிறது. இப்படிச் செய்யும் குதுரத்துள்ள வல்லவனுக்கு மாறுத்தானவர்களை ஹராத்தாக்குவது மிகவெளிது. இரண்டாவது :— அவன் இல்மென்னும் பூரண ஞானமுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய அறிவானது சகல காரியங்களையும் சூழ்ந்தறிகின்றது என்பதாம். ஏனென்றால் பூரண அறிவில்லாமல் இவ்வித புதுமையான பொருட்களை அருமையான பூரணங்களோடு அமைக்க முடியாது. மூன்றாவது :—அவன் றஹ்மத்துள்ளவனாய் அதாவது அன்பும் இரக்கமும் கிருபையுள்ளவனாய் இருக்கிறான் என்பதாம். ஏனென்றால், அவன் இந்தச் சரீரத்துக்கு அகத்தியம் வேண்டிய பொருளாகிய இரு தயம், ஈரல், தலைமூளை முதலிய மூல உறுப்புகளைக் கொடுத்திருப்பதுடன் அகத்தியம் வேண்டியவைகளாயில்லாமல் கொஞ்சம் தேவையாகும் பொருட்களாகிய கை, கால், கண், நாவு முதலிய உறுப்புகளையும்

கொடுத்திருக்கிறான். இன்னும் சுத்தமாய்த் தேவையில்லாமல் அதிக அழகுக்கு மாத்திரம் காரணமா யிருக்கிற சில பொருட்களையும் அமைத் திருக்கிறான். அவை உரோமத்தின் கருப்பு, உதட்டின் சிவப்பு, புரு வங்களின் வளைவு, இமைகளின் நேர்மை முதலியவைகளேயாம்; இந்தக் கிருபை மனிதனுக்கு மாத்திரம் செய்தானென்றல்ல, சகல ஜீவ ராசி களுக்கும் செய்திருக்கிறான். உதாரணமாக கொசு, தேள், குளவி, ஈ முதலிய எல்லாவற்றிற்கும் என்னென்ன வேண்டியவைகளா யிருந் தனவோ அவைகளைக் கொடுத்தான். பின்பு அவற்றிற்கு ரூபங்களை அமைத்ததோடு அவற்றின் வெளியுருவத்தை நல்ல நல்ல சித்திரங்களா லும் அலங்கரித்தான்.

இப்படி மனிதனுடைய சரீர உற்பத்தியின் விவரத்தில் நோட்ட மிடுவது அல்லாஹ் தஆலாவுடைய சபத்துகளை அறிவதற்குத் திறவு கோலாகும். இது காரணத்தினாலேயே இந்த இல்மு சிறந்ததாயிற்று. வைத்தியனுக்கு அது தேவையா யிருப்பதினால் அல்ல. பாடலுடைய வும், கோர்வையுடையவும், சிற்பவேலையுடையவுமான நுட்பங்களை நீவெவ் வளவு அதிகமாய் ஆராய்ந்தறிகிறாயோ அவ்வளவு அதிகமாய் வித்வானு டையவும், கோர்வை செய்தவருடையவும், சிற்பியுடையவுமான பெருமை உன்கல்பில் குடிகொள்ளும்; இதுபோல் அல்லாஹ் தஆலாவுடைய படைப்புகளின் புதுமைகளை ஆராய்ந்தறிவதும் அவனை அறிவதற்குத் திறவுகோலாகும். இது தன்னை அறிவதற்கு ஒரு வழியாயிருக்கும். ஆயினும் கல்பின் அறிவோடு சேர்த்துப் பார்க்க இது மிகவும் சுருக்க மானதேயாம். எனென்றால், இது சரீரத்தின் இல்மா யிருப்பதினா லென்க. சரீரமானது ஏறும் புரவி போலும், கல்பாகிறது, ஏறிய சவார் போலுமிருக்கிறது. ஏறுகிறவனுக்கென்று புரவி படைக்கப்பட்டதே தவிர புரவிக்கென்று ஏறுபவனைப் படைக்கவில்லை. ஆனதால் உற்பத் தியைக் கொண்டு நாடினது ஏறுகிறவனையே அன்றி புரவியை அல்ல. ஆயினும் இவ்வளவாவது சொல்லிவந்தது எதற்கெனில் மற்றும் பொருட்களிலும் நீயே உனக்கு சமீபமா யிருப்பதுடன் இந்த அஸ்பாபு களால் உன்னை நீ பூராவாய் அறிய முடியாதென்று நீ உணர்ந்து கொள் வதற்கேயாம். எவன் தன்னை அறியாமல் அன்னிய பொருளை அறிந் திருப்பதாய் சொல்லுகிறானே அவனுக்கு உபமானம் யாதெனில், தனக்கு உண்கச் சோறில்லாத ஏழையான ஒருவன் இந்தப் பட்டணத்தி லுள்ள எல்லா ஏழைகளுக்கும் நான் சோறு கொடுக்கிறேன் என்று சொல்வதுபோ லிருக்கிறது. இந்தச் சொல் சுத்த உபயோகமற்றதும், நட்க்காததுமா யிருக்கிறது.

அருமையானவனே! இந்த வார்த்தைகளால் மனிதனுடைய கல் பாகிய ஆதாரப் பொருளின் பெருமையை நீ அறிந்து கொண்டாயல்லவா? இப்போது கேள்; இந்த விலைப்பெற்ற மாணிக்கத்தை உனக்குக் கொடுத்து உன் பார்வைக்கு அது மறைக்கப் பட்டிருக்கிறது. அதை நீ தேடாமல் பழுதாக்குவாயாகில், இன்னும் அலட்சியமாய் அதை மறந் திருப்பாயாகில் பெரிய கஷ்டத்துக்குக் காரணமாகும். ஆதலால் இப் போது நீ உன் கல்பைத்தேடவும், துன்யாவுடைய காரியங்களிலிருந்து அதை அப்புறப்படுத்தவும் அதைப் பூரணமான பதவிக்குச் சேர்க்கவும் பிரயாசைப்படு.

அப்படிச் செய்வாயாகில் அதன் பெருமை அவ்வுலகத்தில் வெளி யாகும். அதாவது :—துக்கமில்லாத சந்தோஷத்தையும், அழிவில்லாத நித்திய ஜீவனையும், தாழ்வில்லாத வல்லபத்தையும், ஐயமில்லாத ஞானத் தையும், களங்கமில்லாத காட்சியையும் காண்பாய். என்கிலும் இவ் வுலகத்தில் அதன் பெருமை யாதெனில் அந்த மெய்யான சிறப்பையும் மேன்மையையும் அடையும் தகுதி அதிலிருப்பதேயாம். அதிலில்லா விட்டால் இன்றையில் அதைக் காண மிகக் குறையுள்ளதும் சக்தி யற்றதுமான பொருள் வேறில்லை. ஏனென்றால், பசி, தாகம், உஷ்ணம், சீதளம், நோய்நொடி, துக்கம், கோபம், ஆசை, அவா இவைகளிற் சிக் குண்டிருக்கிறது. இப்போது எந்த வஸ்து அதற்குச் சவுக்கியத்தையும் இன்பத்தையும் கொடுக்கின்றதோ அந்த வஸ்து பின்னிட்டு அதற்கு கஷ்டங் கொடுப்பதா யிருக்கும். இன்னும் அவ்வுலகில் அதற்கு லாபங் கொடுப்பது இவ்வுலகத்தில் கஷ்டமும் துக்கமுமா யிருக்கும்.

இவ்வுலகில் எவன் மேன்மையுடையவனுகின்றானே அவன் இல் லினலாவது, பலத்தினலாவது, மன உறுதியான தைரியத்தினலாவது அழகினலாவது ஆகின்றான். இவ்விடத்தில் அவனுடைய இல்லை நோட்டமிடும் பக்ஷத்தில் அவனிலும் அறிவீனமுள்ளது ஒன்றும் தென்படமாட்டாது. அவன் தலை மூளையில் ஒரு நரம்பு கோணினல் அவன் பைத்தியம் கொண்டவனுய்ப் போகிறான். இதற்குக் காரணமும் பரிகாரமும் யாது என்று அவனுக்குத் தெரியவில்லை. அதற்கு மருந்து அவனுக்கு எதிரில் இருந்து அவன் அதை அறியாம லிருக்கவும்கூடும். இன்னும் அவன் பலத்தையும், சக்தியையும் நோட்டமிட்டால் அவனி லும் பலஹீனமானது ஒன்று மிருக்காது. ஏனென்றால் ஒரு சுயுடன் எதிர்க்க அவனுல் முடியவில்லை. ஒரு கொசுவை அவன்பேரில் சாட்டி னல் ஹலாக்காகுவான், ஒரு குளவி அவனைக் கொட்டினல் நித்திரையில்

லாமல் பதறுகிறான், அவனுடைய மன உறுதியை நோக்கினாலோ ஒரு காசு அவன் கையிலிருந்து தப்பிப் போனால் மனமுடைந்து மதிமயங்கு கின்றான். பசிக்கு ஒருபிடி ஆகாரம் அகப்படாவிட்டால் புத்தி மாறிப் போகின்றான். இவனிலும் அற்பன் யாராகுவான். அவனுடைய அழகை யோசித்தாலோ மலக்கூட்டின் மேல் மூடிய ஒரு தோலாக யிருக்கிறது. இரண்டு நாள் அவன் தன்னைக்கழுவாவிட்டால் அவனு டைய பங்கம் வெளியாகும். அவனில் நின்றும் நாற்றமெழும்பிவிடும். அவன் எப்போதும் தனக்குள்ளே வைத்துக் கொண்டிருக்கிறதும், தான் அதற்கு இடமாயிருக்கிறதும் தினந்தோறும் தன்கையால் அதை இரண்டுதரம் கழுவுவதுமான அந்த வஸ்துவிலும் அதிக நாற்றமுள்ளது ஏதாயிருக்கும்.

நக்கல்—ஷெய்கு அபூஸயீது றஹிமஹுல்லா என்றவர்கள் ஒரு நாள் சூபியாக்களுடன் எங்கேயோ போய்க் கொண்டிருக்கும்போது புழுக்கடை வாரிக் கொண்டிருந்த ஓரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். வழியில் மலம் விழுந்து கிடந்தது. கூடவந்தவர்கள் எல்லாரும் மூக்கைப் பிடித்துக்கொண்டு இங்கும் அங்கும் விலகியோட ஆரம்பித் தார்கள். ஷெய்கு அபூஸயீது ரஹிமஹுல்லா அவ்விடத்தில் நின்று கொண்டு ஓ ஜனங்களே! இந்த மலமானது என்னிடம் சொல்லுகிறது யாதெனில், நான் நேற்று கடை வீதியிலிருந்தேன், எல்லாரும் காசு கொடுத்து என்னை வாங்கினார்கள். ஒரே ஒரு இரவுமாத்திரம் நான் இவர் களோடிருந்தேன் என் கெதி இப்படியாயிற்று. ஆனதால் நான் இவர் களை விட்டு ஓடுகிறதா? அல்லது இவர்கள் என்னைவிட்டு ஓடவேண்டுமா? சொல்லுமெனக் கேட்கிற தென்றார்கள். உண்மையில் மனிதனைவன் இவ்வுலகத்தில் சுத்தக் கேவலமாகவே யிருக்கிறான். கீமியாயெ ஸஆ தத்து என்னும் நற்பதவியின் இரசவாதத்தை கல்பென்னும் பொருளின் மேல் போடுவானாகில் நாளைக்கு அவனுடைய பதவி உயரும். மிருகங் களுடைய பதவியில் நின்றும் மலக்குகளுடைய பதவிக்குச் செல்வான். துன்யாவின் பக்கம் முகம் நோக்குவானாகில் நாயும் பன்றியும் இவனிலும் மேலாகும். ஏனென்றால் அவை மண்ணுகிக் கஷ்டத்திலிருந்து விடு பட்டுப்போம், இவன் வேதனையில் அகப்படுவான். ஆதலால் நீ உன் சிறப்பையும், பெருமையையும் எப்படி அறிந்தாயோ அப்படியே உன் இழிவையும் தாழ்வையும் தெரிந்துகொள். இவ்வகையாகவும் தன்னை அறிவது அல்லாவை அறிவதற்குத் திறவுகோலாகும். இவ்விடத்தில் தன்னை அறியும் விவரம் இவ்வளவு போதும். இதற்குமேற்சொல்ல இந்த கிதாபில் இடமில்லை.

2-வது உன்வான்

அல்லாவை அறிவது.

அருமையானவனே! அறிந்துகொள். முன்னுள்ள நபிமார்களின் கிதாபுகளில் "அய் மனிதனே! நீ உன் நபுசை அறி, அப்படி அறிந்தாயாகில் உன் ரப்பை அறிவாய்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் ஹதீதுகளில் ஒருவன் தன் நபுசை அறிந்தானுகில் அவன் திடனுகத் தன் ரப்பை அறிந்தான் என்று வந்திருக்கிறது. இவைகளால் மனிதனுடைய கல்பாகிறது கண்ணாடிபோல் இருக்கிறதென்றும், அதில் பார்ப்பவன் அல்லாவைக்கண்டு கொள்வான் என்றும் தெரியவருகின்றது. ஆனால், அநேகம் பேர் தன்னைப்பார்ப்பதினால் அல்லாவை அறிகின்றார்களில்லை. ஆகவே அந்தப்பார்வை மஃரிபத்துடைய பார்வையென்றுயிற்று. மஃரிபாவாகிறது இருவகைப்படும். அதில் ஒரு வகை மிகவும் கஷ்டமானது, அது அநேகருடைய புத்தியில் அமைகிறதில்லை. அதை விளங்கச்சொன்னாலும் அவர்களறிய மாட்டார்கள். ஆதலால் அதை விவரிப்பதும் சரியல்ல. மற்றொருவகை எல்லாரும் அறியக்கூடியது. அதுயாதெனில், மனிதன் தன்னுடைய ஜாத்தாகிய உண்மையைக் கொண்டு அல்லாவுடைய ஜாத்தை அறிவதும் தன்னுடைய சிபத்துகளைக்கொண்டு அல்லாவுடைய சிபத்துகளை அறிவதும் தன்னுடைய சரீரமாகிய இராஜ்ஜியத்தின் மேல் தனக்கிருக்கிற ஆளுகையைக் கொண்டு சர்வ லோகங்களின் மேல் அல்லாவுக்கிருக்கிற ஆளுகையை அறிவதுமாயிருக்கும்.

இதன் விபரமாவது:—மனிதன் முதலில் தன்னுடைய இருப்பைப்பற்றி நோட்டமிடுவானுகில், இதற்குச் சில வருஷங்களுக்கு முன்னே இவன் இல்லாமை என்னும் திரைக்குள் இருந்தானென்பதும், அப்போது இவனுக்குப் பேரும் அடையாளமும் இருந்ததில்லை என்பதும் தெரியலாகும். எப்படியென்றால்.

هل اتى على الانسان حين من الدهر لم يكن شيئا مذكورا
انا خلقنا الانسان من نطفة امشاج نبتليه فجعلنه سميعا بصيرا

திடனுக மனிதன்மீது காலத்தில் நின்றும் ஓர் காலம் வந்தது. அதில் அவன் திகுரு செய்யப்பட்ட ஒரு வஸ்துவாயுமிருந்ததில்லை. திடனுக நாம் இன்ஸானைக்கலப்பாகிய இந்திரியத்தினால் படைத்தோம். நாம் அவனைப் புரட்டிக்கொண்டிருந்து பின்பு அவனை கேட்கிறவனுயும், பார்க்கிறவனுயும் செய்துவிட்டோம். என்று அல்லாஹ் தஆலா திரு

வுளமாயிருக்கிறுன். எதைக்கொண்டு மனிதனுடைய படைக்கோலம் வெளியாகின்றதோ அது நாற்றமும் அருவருப்புமுள்ள கேவலமான நீரின் ஒரு துளியாயிருக்கும்.

அதில் புத்தியுமில்லே, பார்வையுமில்லே, காலுமில்லே, கையுமில்லே, கண்ணுமில்லே, நரம்புமில்லே, எலும்புமில்லே, ஜவ்வுமில்லே, சதையுமில்லே, தோலுமில்லே, மேலும் ஒருவிதமாகிய வெண்மையான நீராயிருந்தது. பின்பு அதிலிருந்து இந்த எல்லா விநோதங்களும் வெளியாயின. இவன் தானே தன்னே உண்டாக்கிக்கொண்டானு அல்லது வேறுயாராவது உண்டாக்கினுர்களா என்பதை யோசிப்பானுகில், இப்போது பூர்த்தியாயிருக்கிறஇவனுல் ஒருரோமத்தையும் உண்டாக்கமுடியவில்லே. ஆதலால், முன்னே நீரின் ஒரு துளியாயிருந்தவன் சந்தேகமின்றி இன்னும் அதிக கேவல ஸ்திதியிலிருந்தானென்றும், அப்போது இவன் தன்னே எப்படி உண்டாக்கிக்கொள்ள முடியுமென்றும் தெரிந்து கொள்வான். ஆதலால் அவன் தன் இருப்பினுல் அகத்தியம் அல்லாவுடைய இருப்பை அறிவான். இன்னும் தன்சரீரத்துக்கு உள்ளேயும், வெளியேயுமிருக்கிற விநோதங்களே உற்று நோக்குவானுகில் தன்னே உண்டாக்கினவனுடைய குதுரத்தாகிய வல்லமையை அறிவதுந் தவிர இவ்விதகேவலமான நீர்த்துளியினுல் இப்பேர்ப்பட்ட கல்வியும், அழகும், ஆச்சரியமும் உள்ள மனிதனே உண்டாக்குவதிலும் பெரிய வல்லமை என்ன இருக்கிறதென்றும் உணர்ந்து கொள்வான்.

இன்னும் தன்னுடைய அருமையான சிபத்துகளென்னும் குணதிசயங்களேயும், உறுப்புகளின் பிரயோஜனங்களேயும் நோட்டமிட்டு கை, கால், கண், நா, பல் முதலிய வெளியுருப்புகளில் நின்றும் ஈரல், மண்ணீரல், பித்து, நீர்ப்பை முதலிய உள்ளுறுப்புகளில் நின்றும் ஒவ்வொன்றையும் உண்டாக்கினதில் என்ன பூராயனமிருக்கிறதென்று உற்றுப் பார்ப்பானுகில் தன்னே உண்டாக்கினவனுடைய இல்மென்னும் பூரணஞானத்தை அறிவதுந்தவிர இந்த இல்மை ஒன்றும் மிகைக்காதென்றும் தெரிந்து கொள்வான். எனென்றுல் எல்லா அறிவாளரும் தங்களுடைய அறிவை இதுகர்ரியத்தில் தொடுப்பித்து அவர்களுக்கு நீடிய வயதும் கொடுத்து இந்த எல்லா உறுப்புகளில் நின்றும் ஒரு உறுப்பை இதினும் அதிக நல்லமாதிரியான ஒரு கோலத்தில் அமைக்க வேண்டுமென்று ஆலோசிப்பார்களாகில் அது அவர்களால் முடியாது.

உதாரணமாக:—பற்களின் கோலத்தை அமைக்க ஆலோசித்தால் முன் பல்லின் முனையானது உரொட்டியை நறுக்கும் பொருட்டு கூர்மையாயும், மற்றும் பற்களின் முனே ஆகாரத்தை மசிய

அரைக்கும் பொருட்டு அகலமாயும் இருக்கிறது. நாவானது தானியத்தை திருகையில் தள்ளுவதற்காகத் திருகை அரைப்பவர்கள் வைத்திருக்கின்ற தடுப்புபோல் ஆகாரத்தை அப்பற்களின்மேல் தள்ளிக் கொண்டிருக்கிறது; நாவின் கீழிருக்கின்ற சக்தியானது ஆகாரம் தொண்டையில் அடைக்காமல் இறங்கும்படியான பதத்தில் அதை நனைக்கும் பொருட்டு அப்போது தேவையான அளவுக்கு நீர்க்குமிழிப் போல் கொஞ்சங் கொஞ்சமாக அமிர்தத்தைச் சிந்துகின்றது. உலகத்திலுள்ள புத்திமான்களெல்லோரும் சேர்ந்து இதினும் அதிக நல்ல மாதிரியான வேறொரு கோலத்தை யோசித்தெடுக்க முடியாது. இது போலவே கைவிரல்கள் ஐந்தாயும் அதில் நான்கு ஒரு விதமாயும் பெருவிரல் வேறு விதமாயும் இருக்கின்றன. இது அளவில் கட்டையாயிருந்தும் எல்லா விரல்களோடு சேர்ந்து வேலை செய்கிறது. எல்லா விரல்களையும் சுற்றிவருகின்றது. ஒவ்வொரு விரலிலும் மூன்று கணுக்களும் பெருவிரலில் இரண்டு கணுக்களுமிருக்கின்றன. நாடினால் மூடிக்கொள்ளவும், அல்லது மண்வெட்டிபோல் ஆக்கிக்கொள்ளவும், அல்லது கரண்டிபோல் குவித்துக் கொள்ளவும், அல்லது முடக்கி ஆயுதமாக்கிக் கொள்ளவும், அல்லது விரித்துத் தட்டமாக்கிக் கொள்ளவும், இன்னும் அநேகமாதிரியாய் உபயோகித்துக் கொள்ளவுமான விதமாய் ஆண்டவன் அமைத்திருக்கிறான். உலகத்திலுள்ள கல்விமான்களெல்லோரும் சேர்ந்து இந்த விரல்களை அமைக்கும் விஷயத்தில் வேறொரு மாதிரியை யோசிப்பார்களாகில் எப்படியென்றால், எல்லா விரல்களும் ஒரேவிதமாகும்படி, அல்லது மூன்று ஒரு பக்கமும் இரண்டு மற்றொருபக்கமும் இருக்கும்படி, அல்லது ஐந்து விரல்கள் ஆறாய் அல்லது நாலாய்ப் போகும்படி, அல்லது மூன்று கணுக்களாயிருப்பது இரண்டு அல்லது நாலாகும்படி இவ்விதம் அவ்விதம் அவர்கள் எதை யோசித்தாலும் சொன்னாலும் அவையாவும் குறையுள்ளனவாயிருக்கும். அல்லாஹ் தஆலா அமைத்திருப்பதே சரியான விதமென்று ஏற்படும்.

இந்த விளக்கத்தினால் அந்த சிருஷ்டிகளுகிய அல்லாஹ் தஆலாவுடைய இல்மானது இவனைச் சூழ்ந்திருக்கிறதென்றும், அவனுக்கே சகல பொருளின் ஞானமிருக்கிறதென்றும், தேகவுறுப்புகளில் நின்றும் ஒவ்வொரு உருப்பிலும் இவ்வளவு பூராயங்களிருக்கின்றனவென்றும் தெரியலாகும். மனிதன் இந்தப் பூராய்ங்களை எவ்வளவு நன்றாய் அறிகின்றானோ அவ்வளவு நன்றாய் அல்லாஹ் தஆலாவுடைய இல்மின் மகிமையை அறிந்து ஆச்சரியமுற்றிருப்பான்.

இன்னும் மனிதன் தனக்குத் தேவையான பொருட்களை உற்று நோக்குவானாகில் அதாவது சரீர இருப்புக்கு ஊண், உடை, இடம்

இவை தேவையா யிருப்பதையும் இவைசமைவதற்கும் மழை, காற்று சூடு குளிர்ச்சிகள் தேவை யாகுவதையும், அவ்வுண் முதலியவற்றை உற்பத்திசெய்யும் தொழில்கள் தேவையாவதையும், அத்தொழில் களுக்கு இரும்பு, செம்பு பித்தளை மரம் முதலியவைகளால் கருவிகள் தேவையாகுவதையும், அக்கருவிகளை எப்படிச் செய்வதென்ற அறிவு தேவையாவதையும் இப்படி ஒவ்வொன்றையும் உற்றுநோக்கு வானுகில் எல்லாப் பொருட்களும் இதற்குமேல் நல்லமாதிரி இல்லை யென்று சொல்லக்கூடிய விதமாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன வென்று தெரிந்துகொள்வான். ஒவ்வொன்றில் நின்றும் இத்தனை வகைகளை அவன் உண்டாக்காமற்போனால் இவ்விதம் ஆகவேண்டு மென்று ஒரு வனுடைய புத்தியில் அமையவும் அமையாது, இவ்விதம் செய்ய வேண்டுமென்று அவனிடம் கேட்கவும் வாது. ஒருவர் கேட்கிற தன்றியே எல்லாம் அவனுடைய உட்கிருபையினாலேயே எப்படி வேண் டுமோ அப்படி அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் உணர்ந்து கொள் வான். இவ்விடத்தில் அவனுக்கு இன்னும் ஒரு சிபத்து வெளியாகும். அந்த சிபத்தினாலேயே அவுலியாக்களானவரின் ஜீவ வாழ்விருக்கிறது. அது சகல படைப்புகளின் பேரிலும் அல்லாஹ் தஆலாவுக்கிருக்கிற அன்பும் இரக்கமும் தயவுமாயிருக்கும். سبقت رحمتي غضبي என் கோபத்திலும் என் கிருபை முந்திவிட்டதென்று திருவுளமாயிருக்கிறான். இன்னும் பால் குடிக்கிற பிள்ளையின் மேல் அதன் தாய்க்கிருக்கிற கிரு பையினும் அடியார்மேல் அல்லாவுக்கிருக்கிற கிருபை அதிக மென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுள மாயிருக் கிறார்கள்.

ஆகவே மனிதன் தன்னுடைய இருப்பைக்கொண்டு ஹக்குடைய இருப்பையும் தன் கை, கால் முதலிய உறுப்புகளை வருத்தறிவதினால் ஹக்குடைய குதறத்தாகிய வல்லபத்தையும் உறுப்புகளுடைய பூர்த மையான பிரயோஜனங்கள் பூராயங்கள் இவைகளை உற்றறிவதினால் ஹக்குடைய இல்மென்னும் பூரண ஞானத்தையும் இன்றியமையாத தற்காக அல்லது தேவைக்காக அல்லது அழகுக்காகப்படைக்கப்பட்டி ருக்கிற ஒவ்வொரு பொருளிலும் நோட்டமிடுவதினால் ஹக்குடைய றஹ்மத்தென்னும் அன்பையும் அறிந்து கொள்வான். இவ்விதமாகத் தன்னை அறிவதும் ஹக்கை அறிவதற்குத் திறவுகோலாகும்.

(பஸல்) எப்படித்தான் சிபத்துகளைக்கொண்டு அல்லாவுடைய சிபத்துகளையும், தன் இருப்பைக்கொண்டு அல்லாவுடைய இருப்பை யும் அறிந்தாயோ அப்படியே அவனுடைய தன்வீஹ் என்னும் தூய் மையையும் தன்னுடைய தூய்மையினால் அறிந்துகொள். அல்லா

ஹுத் தஆலாவின் விஷயத்தில் தூய்மைக்குப் பொருள் யாதெனில், அவன் ஒருவருடைய புத்தியில் வருவதை விட்டும் இன்னும் அவனை யாதொரு தலத்தில் சேர்ப்பதை விட்டும் அவன் பரிசுத்தமாய் யிருக் கிறான் என்பதேயாம். மனிதன் இதற்கு அறிகுறியான நமூனைவைத் தன்னில் காணுகிறான். அதெப்படி யென்றால், நாம் கல்பு என்று சொல்லுகிற அவனுடைய ரூஹின் உண்மையும் ஒருவருடைய புத்தி யில் வருவதை விட்டும் நினைவில் அமைவதை விட்டும் சுத்தமாயிருக் கிறது. எந்தப் பொருளுக்கு நிறங்குறிகளில்லையோ அந்தப் பொருள் எவ்விதத்திலும் நினைவில் அமையாது. ஏனென்றால் கண்ணானது ஒரு பொருளை அல்லது அதன் இனத்தைக் கண்டிருந்தால் அதுதான் நினைவில் அமையும். உதாரணமாக: நிறமும் ரூபமும்போல் இவை கண்ணுடைய அதிகாரத்துக்கும் நினைவின் அதிகாரத்துக்கும் உட் பட்டவை.

மனம் ஒரு வஸ்துவை அறியநாடி அது எப்படி என்று கேட் கிறதே அதற்குப் பொருள் யாதெனில், அதன் ரூபம் எப்படி இருக் கிறது? பெரியதாயிருக்கிறதா? அல்லது சிறிதாயிருக்கிறதா? அல்லது வேறு எப்படி யிருக்கிறது? என்பதேயாம். எந்த வஸ்துவுக்கு இக் குணமில்லையோ அதில் எப்படி என்ற வினவுக்கிடமில்லை. இப்போது தன் உண்மைப் பொருளாகிய கல்பைப்பார். மஃரிபாவுக்குக் காரணமா யிருக்கிற அந்த உன் கல்பானது பாகத்தை ஏற்பதல்ல. அளவுக்கும் மட்டு திட்டத்துக்கும் எப்படி என்பதற்கும் அதில் இடமில்லை. ரூஹு எப்படிப்பட்ட பொருள் என்று ஒருவன் கேட்பானுகில் அதற்கு ஜவாபாவது, எப்படி என்ற வினவுக்கு அதில் இடமில்லை என்பதேயாம். நீ தன்னை இந்த சிபத்துகளால் அறிந்தாயாதலால் இப்போது அல் லாஹு தஆலாவுடைய ஜாத்தென்னும் சுயவடிவம் பரிசுத்தமான தென்று தெரிந்துகொள்.

இப்படி இம்மாதிரி என்று சொல்லக்கூடாத மவுஜூது என்னும் ஒரு உண்மையுடையானு மிருப்பானே? என்று ஜனங்கள் மயங்குகிறார் கள். அவர்கள் தாங்களே அப்படியிருப்பதை அறிகிறார்களில்லை. மேலும் மனிதன் தன்னில் தேடிப்பார்ப்பானுகில் இப்படி, இம்மாதிரி யென்று சொல்லக்கூடாத அநந்தமாயிரம் பொருள்களைக் காண்பான். உதாரணமாக:—ஆசையும் நோயும் போல், இவை கண்ணுக்குப் புலப் படுகிறவைகளல்ல, இவை எப்படிப்பட்டவை என்பதைத் தேட நாடினால் காணமுடியாது. ஏனென்றால் இந்தப்பொருள்கள் நிறமும் ரூபமும் உள்ளனவல்ல வாகையால் இந்தக்கேள்விக்கு இவை இட மாகா. இன்னும் ஒருவன் ஓசை, அல்லது வாசனை அல்லது சுவை இவற்றின் உண்மையை அதாவது அது எப்படிப்பட்ட

தென்று தேடிப்பார்ப்பானுகில் கண்டுகொள்ளமாட்டான். ஏனெனில் எப்படி எம்மாதிரி என்பது நிஜவின் தேட்டம்; அதுகண்ணென்னும் புலனுக்குவாய்த்திருக்கிறது; நிஜவானது ஒவ்வொரு பொருளிலும் கண்ணின் பாகத்தைத் தேடுகிறது. காதின் அதிகாரத்துக்குட்பட்ட ஓசையில் கண்ணுக்கு யாதொரு பாகமில்லை, அது எப்படி எம்மாதிரி யென்பதைத் தேடுவது கூடாது. ஏனெனில் நிறமானது எப்படி காதுக்கு வசியமாகாதோ அப்படியே ஓசையானது கண்ணுக்கு வசிய மாகாது. இதுபோலவே எந்த வஸ்துவை கல்பாகிய புலன் அறியுமோ அந்த வஸ்து மற்றும் புலன்களுக்கு வசியமாகாது. எப்படி எம்மாதிரி என்பது ஐயறிவுக்கு வசியமாகிற பொருள்களில்தான் உண்டாகின்றது. இதன் நிச்சயிப்பை மஃகூலாத்துடைய கிதாபுகளில் நாம் சொல்லி யிருக்கிறோம். இந்தக் கிதாபில் இவ்வளவு போதும்.

இதனுல் நாடியகருத்து:—மனிதன் தன்து ஒப்பின்மையைக் கொண்டு அல்லாஹு தஆலாவுடைய ஒப்பின்மையை அறிவான் என்றும், எப்படி ரூஹாகின்றது சத்துப்பொருளாயும் சரீரத்துக்குப் பாதுஷாவாயுமிருக்கிறதோ இன்னும் சரீரத்தில் நின்றும் ஒப்புவமை யுள்ள ஒவ்வொருவஸ்துவும் அதன் ராஜ்ஜியமாயிருக்கிறதோ இன்னும் தான் ஒப்புவமையில்லாததா யிருக்கிறதோ அப்படியே சர்வ லோகத் தின் பாதுஷாவாகிய அல்லாஹு தஆலா ஒப்புவமை இல்லாதவனு யிருக்கிறனென்றும் எந்த வஸ்துக்கள் ஒப்புவமையுள்ளனவா யிருக் கின்றனவோ அவை அவனுடைய ராஜ்ஜியமாகிய உலகமாயிருக்கின்றன வென்றும் அறிந்து கொள்வான் என்பதேயாம்.

அல்லாஹு தஆலாவுடைய தூய்மையின் மற்றொரு வகையாகி றது அவனை யாதொரு தலத்தில் சேர்க்கப்படாதென்பதாம். அதே போல் ரூஹையும் யாதொரு உறுப்பில் சேர்க்கப்படாது. ஏனென்றால், ரூஹு கையிலிருக்கிறதென்றுவது, காலில் இருக்கிறதென்றுவது, தலையில் இருக்கிறதென்றுவது, குறிப்பான யாதொரு உறுப்பிலிருக் கிறதென்றுவது சொல்லமுடியாது. எல்லா உறுப்பு களும் பாகத்தை ஏற்பனவாயிருக்கின்றன, பாகத்தை ஏற்காதபொருள் அதை ஏற்கும் பொருளில் ஒருபோதும் அடங்காது. ஏனென்றால், அப்போது அது வும் பாகத்தை ஏற்பதாய்ப்போம், யாதொரு உறுப்புடன் அது சம் பந்தப்படாதிருந்தும் ஒரு உறுப்பும் அதன் அதிகாரத்தை விட் டொழியவில்லை. எல்லாம் அதன் அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கின் றன. அது எல்லாவற்றிற்கும் பாதுஷாவாயிருக்கிறது. இதுபோல் சர்வ லோகமும் அல்லாஹு தஆலாவுடைய அதிகாரத்துக்கு உட்பட் டிருக்கிறது. பின்பு அவனை யாதொரு தலத்துடன் சேர்ப்பதை

விட்டும் அவன் பரிசுத்தமாயிருக்கிறான். ரூஹுடைய எதார்த்தமான உண்மையைச் சொன்னால் இது சங்கதி வெளியாகும். ஆனால் அதைச் சொல்ல உத்திரவில்லை. ان الله خلق ادم على صورته திடனாக அல்லாஹ் தஆலா ஆதமைத் தன்னுடைய சூரத்தின்மேல் படைத்தான் என்று வந்திருக்கிற ஹதீதினாலும் இது வெளியாகலாம்.

ஹக்கு தஆலாவுடைய ஜாத்தும், அவனது சிபத்துகளும், அவனுடைய தன்ஸீஹென்னும் தூய்மையும், இவை யாவும் தன் நபுஸை அறிந்த காரணத்தால் தெரியலாயின. இப்போது ஹக்குடைய மஃரிபாவின் மற்றொரு விஷயம் மீதியாயிருக்கிறது. அது யாதெனில், இப்படி இவ்விதமென்று சொல்லக்கூடிய உலகமாகிய அவனுடைய இராஜ்ஜியத்தில் அவனுக்கிருக்கிற ஆளுகையை அறிவதாமென்க.

அதாவது :—மலக்குகளுக்கு அவன் ஏவுகிறதும், மலக்குகள் அதைச் செய்கிறதும், மலக்குகளால் காரியங்களை நடத்துகிறதும், வானத்தில் நின்றும் பூமியின்மேல் கட்டளைகளை அனுப்புகிறதும், வானங்கள் நட்சத்திரங்கள் இவைகளைச் சுற்றிவரச் செய்கிறதும், புவனவாசிகளின் காரியங்களை வானலோக சம்பந்தமாக்கியிருக்கிறதும், இரவுத்தின் திறவுகோலை வானத்தினிடம் ஒப்புவித்திருக்கிறதும் இந்த எல்லாக் காரியங்களும் நடக்கிறவிதமெப்படி என்றறிவதேயாம். நபுடைய மஃரிபாவில் நின்றும் இது ஒருபெரிய பாபாயிருக்கும். இது மஃரிபத்துல் அப்ஆலி என்று சொல்லப்படும். மேற்கூறிவந்த மஃரிபாவுக்கு மஃரிபத்து ஜாத்தி வஸ்ஸிபாத்தி என்று சொல்லுகிறார்கள். இந்த மஃரிபத்துல் அப்ஆலை அறிவதின் திறவுகோலும் நபுஸை அறிவதாயிருக்கும். உன்னுடைய இராஜ்ஜியத்தில் உனக்கிருக்கிற அதிகாரத்தை நீ அறிய வில்லையானால் ஆலத்தின் பாதுஷாவாகிய அல்லாஹ் தஆலாவுடைய இராஜரீகத்தை எப்படி அறிவாய்? முதலில் உன்னுடைய ஒரு செயலை யோசித்துப்பார். அதாவது:—

நீ பிஸ்மில்லாவைக் காகிதத்தின்மேல் எழுத நாடுவாயாகில் உன் கல்பில் ஒரு நாட்டம் பிறக்கிறது. கல்பென்றது மார்பின் இடது பக்கத்திலிருக்கிற சதைக்கட்டியை அல்ல. பின்பு இருதயத்தில் உசும் புதல் உண்டாகிறது. ஒரு நுட்பமான ஆவியானது இருதயத்தினின் றெழும்பித் தலைமூளைக்குப் போகின்றது. அந்த ஆவியை தபீபுகளான ஆயுர்வேத பண்டிதர்கள் ரூஹ் என்று சொல்லுகிறார்கள். இந்த ரூஹாகிறது ஐயறிவுகளுக்கும் அசைவுக்கும் ஆதாரமாயிருக்கிறது. இந்த ரூஹ் மிருகங்கள் முதல் மற்றும் பிராணிகளுக்கு முண்டு. மரணத்துக்கு இந்த ரூஹுடன் தான் சம்பந்தமிருக்

கின்றது. நாம் கல்பு என்று சொல்கிற அந்த ரூஹு மிருகங்களுக்கும் மற்றும் பிராணிகளுக்கும் கிடையாது. அது ஒருபோதும் மரணமாகிறதில்லை. ஏனெனில் அது அல்லாவை அறியுந்தானமாயிருப்பதினாலென்க. பின்பு இந்த ரூஹு தலை மூளைக்குச் சென்றால், இன்னும் நினைவென்னும் சக்திக்குத் தானமாகிய அந்த மூளையான பொக்கிஷத்தில் பிஸ்மில்லாவுடைய ரூபம் வருமாகில் அப்போது தலை மூளையில் நின்றும் ஒரு கூறானது அஃஸாபு பக்கம் போகின்றது. அஃஸாபென்பது தலைமூளையில் நின்றும் பிரிந்து தேகமுழுமைக்கும் செல்வனவும், விரல்களின் முனைகளில் நூலைப்போல் வரியப்பட்டிருப்பனவும் மெலிந்தவர்களின் கைகளில் தோன்றப்படுவனவுமான நரம்புகளாயிருக்கும். ஆகக்கூடி அந்நரம்புகள் அசைந்து விரலின் முனையை அசைக்கின்றன. விரல் எழுதுகோலை அசைக்கின்றது. எழுதுகோல் மையை அசைக்கின்றது பின்பு கண்ணுகிய புலனுடைய உதவியால் பிஸ்மில்லாவின் ரூபம் நினைவென்னும் பொக்கிஷத்திலிருந்தபடி காகிதத்தின்மேல் வெளியாகின்றது.

ஆகையால் எப்படி இந்த வேலையின் ஆரம்பம் உன்னில் பிறந்த ஒரு நாட்டமாயிருக்கின்றதோ அப்படியே எல்லாக் காரியங்களின் ஆரம்பமாகிறது. ஹக்கு தஆலாவுடைய சிபத்துகளினின்றும் ஒரு சிபாத்தாயிருக்கும். அந்த சிபத்து இரூதா என்று சொல்லப்படும். இன்னும் எப்படி உன் நாட்டத்தினுடைய கூறானது முதலில் உன் இருதயத்தின் பேரிலுண்டாகிப்பின்பு இருதயத்தின் மூலமாய் மற்றும் உறுப்புகளுக்குச் செல்கின்றதோ அப்படியே ஹக்குடைய நாட்டத்தின் கூறானது முதலில் அருஷின் பேரிலுண்டாகி அங்கிருந்து மற்றும் பொருள்களுக்குச் செல்லுகின்றது. இன்னும் எப்படி ஒரு நுட்பமான ஆவியானது அந்தக் கூறை இருதயத்தின் நரம்புகள் வழியால் தலை மூளைக்குச் செலுத்துகின்றதோ, இன்னும் அந்த ஆவியை ரூஹு என்று சொல்லுகிறார்களோ, அப்படியே அல்லாவுக்கும் நுட்பமான ஜௌஹர் இருக்கிறது. அது அந்த இரூதாவின் கூறை அறுஷில் நின்றும் குருசிற்குச் செலுத்துகின்றது. அந்த ஜௌஹரை மலக்கு என்றும் ரூஹு என்றும் ரூஹுல் குதுசி என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் அதிகாரத்திலும் அனுபோகத்திலும் தலை மூளையானது எப்படி இருதயத்தை தொடர்ந்ததாயும் அதற்கு கீழ்ப்பட்ட தாயுமிருக்கிறதோ அப்படியே குருசியானது அருஷைத் தொடர்ந்த தாயும் அதற்குக் கீழ்ப்பட்டதாயுமிருக்கிறது. இன்னும் உன் நாட்டத்தின் கூறானது இருதயத்தினின்றும் தலைமூளைக்குச் செல்வதுபோல் ஹக்குடைய இரூதாவின் கூறும் அறுஷில் நின்றும் குருசிற்கு

வருகின்றது. இன்னும் எப்படி நீ நாடியதாயும் உன் செயலாயு மிருக்கிற பிஸ்மில்லாவின் ரூபம், உன் தலை மூளை யென்னும் பொக்கிஷத்தில் முன்னே அமைந்திருந்தபடி வெளியாகின்றதோ அப்படியே ஆலத்தில் உண்டா யிருக்கிற ஒவ்வொரு பொருளின் ரூபம் முதலில் லவ்ஹு மகுபூலில் வெளிப்பட்டு பின்பு அதன் படி காரியம் வெளியாகின்றது. இன்னும் தலை மூளைக்குச் சென்ற அந்த நுட்பமான சக்தியானது எப்படி அஃஸாபு என்னும் நரம்புகளை ஆட்டுகின்றதோ அப்படியே அறுஷு குருஸிகளின் மேல் சாட்டப்பட்டிருக்கிற அந்த ஜௌஹர்கள் என்னும் மலக்குகள் வானத்தையும் நட்சத்திரங்களையும் ஆட்டுகிறார் கள். இன்னும் தலை மூளையிலிருக்கிற அந்த சக்தியானது எப்படி நரம்புகளின் மூலமாய் விரலை ஆட்டுகின்றதோ அப்படியே அந்த ஜௌஹர்க ளென்னும் மலக்குகள் நட்சத்திரங்களாலும் அவற்றின் ஒளியாலும் கீழுலகத்தின் மூலங்களாகிய நாலு அஞஸிர்க ளென்று சொல்லப்படுகிற சதுர்ப்பூதங்களின் சுபாவ குணங்களாகிய உஷ்ணம் சீதளம், கொழுமை, வறளை இவைகளை ஆட்டுகிறார்கள். இன்னும் எப்படி எழுதுகோலானது பிஸ்மில்லாவின் ரூபம் வெளியாகும்படி மையைச்சிந்தி எழுத்தின் ரூபத்தை கூட்டுகின்றதோ அப்படியே உஷ்ண சீதளங்களானவை நீர் நிலங்களையும், மற்றும் சேர்க்கையான பூதங்களையும், ஆட்டி ரூபத்தை கூட்டுகின்றன. இன்னும் எப்படிக் காகிதமானது தன் பேரில் செல்லுகின்ற மையை ஏற்று எழுத்தின் ரூபத்தைச் சேர்க்கின்றதோ அப்படியே கொழுமையானது அந்தச் சேர்க்கை பூதங்களை ரூபம் ஏற்கும்படி செய்கிறது. வறளையானது அந்த ரூபம் கலையாதபடி காக்கின்றது; கொழுமை யில்லா விட்டால் அந்தச் சேர்க்கை பூதங்கள் ரூபத்தை ஏற்கமாட்டா. வறளையில்லாமற் போனால் உறுவம் நிலைக்காது. இன்னும் எப்படி எழுதுகோலானது தன் தொழிலை முடிப்பது கொண்டு பிஸ்மில்லாவின் ரூபம் கண்ணின் உதவியால் நிஜவாகிய பொக்கிஷத்தி லிருந்தபடி வெளியாகின்றதோ அப்படியே உஷ்ணமும் சீதளமும் அந்தச் சேர்க்கை பூதங்களை மலக்குகளின் உதவி யால் அசைப்பது கொண்டு ஜீவவர்க்கம், மூலவர்க்கம், முதலியவை களின் ரூபங்கள் லவ்ஹு மகுபூலில் உள்ள ரூபங்களின்படி வெளியா கின்றன. இன்னும் எப்படி பிஸ்மில்லாவை எழுத நாடிய நாட்டத்தின் கூறானது முந்தி இருதயத்தின் மேலுண்டாகி, மற்றும் உறுப்புகளில் வியாபிக்கிறதோ அப்படியே ஆலமுல் அஜ்ஸாமை உண்டாக்க நாடிய நாட்டத்தின் கூறானது அறுஷின் பேரிலுண்டாகின்றது. இன்னும் உன் நாட்டத்தின் கூறை முதலில் உன் இருதயம் ஏற்று அதன் பிறகு உறுப்புகள் ஏற்கின்றதால் நீ இருதயவாசி யென்று அறியும் பொருட்டு

இருதயத்தை உன் பக்கம் சேர்ப்பதுபோல் (அல்லாஹு தஆலாவுடைய இரூதாவின் கூறை முதலில் ஏற்கிற) அறுஷின் மூலமாய் எல்லாவற்றின் பேரிலும் மிகைப்பிருப்பதால் (அறுஷை அவன் பக்கம் சேர்த்து) அவன் அறுஷில் இருக்கிறவ னென்று ஜனங்கள் எண்ணினார்கள். இன்னும் எப்படி நீயும் இருதயத்தின் மேல் மிகைத்தாயோ, இன்னும் எப்படி உன் இருதய காரியம் சரியாய் முடிந்ததோ, இன்னும் எப்படி உன் சரீர மாகிய ராஜ்ஜியத்தின் காரியங்களுக்கு நீ பிரயத்தனம் செய்யமாட்டு கிறாயோ அப்படியே அல்லாஹு தஆலாவானவன் அறுஷைப் படைத்து அதன் மேல் மிகைப்புள்ளவனாயினான். அறுஷு சரியாய் நிலைப் பட்டது (ஆலமென்னும்) இராஜ்ஜிய காரியத்தின் பிரயத்தனம் பூராய் முடிந்தது.

استوى على العرش يدبر الامر அறுஷின் மேல் சரியானான் காரி கயங்களின் பிரயத்தனம் செய்கிறான் என்றது இதைக் குறித்த வாக்கிய மேயாம். நீ இந்த எல்லாச் சங்கதிகளையும் மெய்யென்று நம்பு, கல்புக் காரர்களுக்கு முகாஷபா வென்னும் ஞான திருஷ்டியினாலும் இது மெய் யென்றே தெரியவந்திருக்கிறது. இன்னும் திடனாக அல்லாஹு தஆலா ஆதமைத் தன்னுடைய கோலத்தின் மேல் படைத்தான். என்றதின் உண்மையை அந்த கல்புக்காரர்கள் நன்றாய் அறிந்திருந் கிறார்கள்.

பாதுஷாவை பாதுஷாவன்றி மற்றவன் அறிய மாட்டா னென்று எண்ணிக்கொள். உனக்கு உன் இராஜ்ஜியத்தின் பேரில் இராஜரீகம் கொடுக்கப்படவில்லையானால் இன்னும் அல்லாஹு தஆலாவுடைய ஆலமான இராஜ்ஜியத்தில் நின்றும் ஒரு சிறிய இராஜ்ஜியத்தை உன் வசம் ஒப்புவிக்காமற் போனால் ஆலத்தின் பாதுஷாவான ஆண்டவனை நீ சுத்தமாய் அறிய மாட்டாய். ஆகையால் அவன் உன்னைப் படைத்து அவனது இராஜ்ஜியம் போல் உனக்கு ஒரு இராஜ்ஜியத்தையும் தந்து அவ்விராஜ்ஜியத்தின் மேல் உனக்கு இராஜரீகமும் கொடுத்து உன் இருதயத்தை உனக்கு அறுஷாகவும், இருதயத்திலிருந் தெழும்புகிற ரூஹு ஹைவானியை உனக்கு இஸ்ரூபீலாகவும், தலை மூளையை உனக்கு கூர்ஸியாகவும், நிஃமெவென்னும் சக்தியை உனக்கு லவ்ஹு மகபூலாகவும், கண், காது முதலிய மற்றும் புலன்களை உனக்கு மலக்கு களாகவும், அஃஸாபு என்னும் நரம்புகள் பிரியும் தானமாகிய மூளைக் கூடான கபாலத்தை உனக்கு நட்சத்திரவானமாகவும், விரல் எழுதுகோல் மை இவை போன்ற அனுஸர்களை உனக்கு வசப்படும்படி யாகவும், உன்னை ஏகனுகவும், ஒப்புவமை இல்லாதவனுகவும் அமைத் தான். அந்த பாதுஷாவான ஆண்டவனுக்கு நன்றி யறிந்து துதி

செலுத்து. அவன் உனக்கு எல்லாவற்றின் பேரிலும் இராஜரீகத்தைக் கொடுத்து, அய்மனிதனே பத்திரம்! நீ உன்னையும் உன் ராஜரீகத்தை யும் மறந்துபோகாதே. மறப்பாயாகில் தன்னைப் படைத்த நாயகனை மறந்தவனுயிருப்பாய் என்று எச்சரிக்கை செய்திருக்கிறன். ஆகையால், فان الله خلق ادم علي صورته فاعرف نفسك يا انسان تعرف ربك திடனுக அல்லாஹ¨ தஆலா ஆதமைத் தன் சூரத்தின்மேல் படைத் தான்; ஆகவே ஓ இன்ஸானே! நீ உன் நபுசை அறி; அப்படி அறிந்தா யாகில் உன் நாயகனை அறிவாய் என்றது.

(பஸல்) பின்பு மனிதனுடைய ராஜரீகத்தைப்பற்றியும் இராஜாதி ராஜனுகிய அல்லாஹ¨ தஆலாவுடைய ராஜரீகத்தைபற்றியும் மேற் கூறிவந்த சங்கதிகளால் பெரிய இரண்டு இல்முகளின் பக்கம் சயிக்கினை செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது:—மனிதனுடைய நபு சின் இல்மாயிருக்கும். அதாவது:—அவனுடைய உறுப்புகளுக்கு அவன் தத்துவங்களோடும் சிபத்துகளோடும் எவ்வாறு சம்பந்த முண்டென்பதையும் அந்த தத்துவங்களுக்கும் சிபத்துகளுக்கும் கல் புடன் எப்படி சம்பந்தமுண்டென்பதையும் அறிவதேயாம். இதில் இன்னுமொரு இல்மு மிகவும் நீளமானதாயிருக்கிறது, அதை இந்த கிதாபில் நிச்சயித்துச் சொல்லமுடியாது. இரண்டாவது:—ஆலத்தின் பாதுஷாவாகிய அல்லாஹ¨ தஆலாவுடைய இராஜரீகத்தைக் குறித்த இல்மாயிருக்கும். அதாவது அவனுடைய இராஜாங்கம் மலக்குகளைக் கொண்டு கொளுகுதலாயிருக்கிறதும், மலக்குகள் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டிருக்கிறதும், வானங்கள், அர்ஷ¨, குருஸி இவை மலக்குகளின் வசப்பட்டிருக்கிறதுமான இவ்விஷயங்களின் இல்மேயாம். இந்த இல்மும் விரிவானதாயிருக்கிறது.

இவ்வளவு சயிக்கினை செய்தது எதற்கெனில், எவன் கூரிய புத்தியுள்ளவனுயிருக்கிறனோ அவன் இந்த எல்லா விஷயங்களையும் நிண்ணயங்கொண்டு அல்லாஹ¨ தஆலாவுடைய மகிமையை அறிந்து கொள்வதற்கும் இன்னும் எவன் மூடனுயிருக்கிறனோ அவன் தன் னுடைய அறிவின்மையை உணர்ந்து இவ்வித ஜமாலுள்ள பாதுஷா வுடைய தீதாரைக் காட்சி செய்யாமல் தூர்ப்பாக்கியனுயிருப்பதால் நான் மிகவும் நஷ்டமடைந்தவனுயிருக்கிறேன் என்று அவன் தெரிந்து கொள்ளவுமேயாம். அல்லாஹ¨ தஆலாவுடைய ஜமால் என்பது ஜனங்களுக்கு என்ன தெரியும்; இவ்வளவுசொன்னதெல்லாம் ஜனங்கள் தங்கள் ஹகீகத்தாகிய நிசவடிவத்தை அறியும் பொருட்டேயாம்.

(பஸல்) பேதையான தபீஇய்யி என்னும் இயற்கைவாதியும் தஜூமி என்னும் நட்சத்திரவாதியும் காரியங்களை அஸிர் வசத்தி லும் நட்சத்திரங்களின் வசத்திலும் சாட்டியிருக்கிறார்கள். இவர்கள் ஒருவன் எழுதிக்கொண்டிருக்கிற காகிதத்தின் மீது நடக்கும் எறும்பு களுக்குச் சமானமாகிறார்கள். அவற்றில் ஓர் எறும்பு காகிதம் கறுப் பாக்குவதையும் அதன்மேல் சித்திரம் வெளியாகுவதையும் கண்டு (இது எதனல் உண்டாகிறதென்று தெரியாமல் மயக்கமுற்றிருக்கும் போது) எழுதுகோல் அதற்குத்தென்பட்ட உடனே இந்த காரியத் தின் உண்மை எனக்குத் தெரிந்துவிட்டதென்றும் இந்தச் சித்திரத்தை இவ்வெழுதுகோல் தான் எழுதுகிறதென்றும் மகிழ்கின்றது. இது இயற்கைவாதிக்கு உபமானமாயிருக்கும். ஏனென்றல் கடைசியாய் அசைக்கும் அஸிரைத் தவிர வேறென்றையும் அவன் கவனிக்கா ததினலேயாம். மற்றொரு எறும்பு வந்தது. அதன் கண் * விசாலமா யும் பார்வை மிகக் கூர்மையாயுமிருந்ததால் இந்தச் சித்திரத்தை எழுது கோல் தான் எழுதுகிறதென்பது பிசகென்றும் இந்த எழுதுகோல் வேறென்றின் வசப்பட்டிருப்பதாய் நான் காண்கிறேன். ஆத லால் எழுதுகோல் தவிர இவ்விடத்தில் இன்னும் ஏதோ ஒன்றிருந்து இந் தச் சித்திரத்தை எழுதுகிறதென்றும் யோசித்து விசாலக்கண்டது. அப்போது அது இந்த விரல் தான் இச்சித்திரத்தை எழுதுகிறதென் றும் நான் அறிந்ததுதான் சரியென்றும் மகிழ்கின்றது. இது நட் சத்திரவாதிக்கு உபமானமாயிருக்கும். ஏனென்றல் அவனுடைய கோட்டம் கொஞ்சம் தூரம் போயிற்று. அஸிர்கள் நட்சத்திரங்களின் வசப்பட்டிருக்கின்றன வென்பதைத் தெரிந்துகொண்டான். பின்பு நட்சத்திரங்கள் மலக்குகளின் வசப்பட்டிருக்கின்றன வென்பதை அவன் அறியவில்லை. அதற்குப் பின்னிருந்த வகுப்புகளில் அவன் புத்தி செல்லவில்லை.

ஆலமூல் அஜ்ஸாமின் விஷயத்தில் நட்சத்திரவாதிக்கும் இயற் கைவாதிக்கும் இப்படி விகற்பம் ஏற்பட்டிருக்கிறதுபோல் ஆலமூல் அர்வாஹில் ஏறினவர்களிலும் விகற்பமுண்டு. அதெப்படி யென்றல் அநேகம்பேர் ஆலமுல் அஜ்ஸாமுக்குமேல் ஏறிப்பார்க்க அஜ்ஸா மேயன்றி வேறென்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை. ஆலமூல் அர்வாஹில் மிஃராஜ் உடைய பாதை அவர்களின்பேரில் அடைப்பட் டுப்போயிற்று; ஆதலால் அவர்கள் மூன்றின வகுப்பிலேயே இறங்கி

* சிதலேறும் பாதிமுக் கறிவின்மு வறிவுயிர்—என்ற சூத்திரப்படி எறும்புக்குக் கண்ணறிவில்லை என்பது எதார்த்தமாகிற பக்ஷத்திலும் இங்கு உபமானத்தின் பொருட்டு எறும்புக்குக்கண்ணமைத்துச் சொன் னதில் ஏதும் தோஷமில்லை என்றறிக.

விட்டார்கள். ஒளியுலகமாகிய ஆலமுல் அர்வாஹில் வகுப்புவகுப்பாகக் கணவாய்களும் திரைகளும் அநந்தமிருக்கின்றன. வானங்களின் மலக் கூத்து யாருக்குக் காண்பிக்கப்பட்டதோ அவர்களுடைய மிஃராஜு இதுவேயாம். உதாரணமாக:—அல்லாஹு தஆலா இபுராஹீம் கலீலுல்லா அலைஹிஸ்ஸலாமவர்கள் விஷயத்தில் திருவுளமாயிருக்கிறான்:

இன்னும் இதுபோலவே நாம் இப்ராஹீமுக்கு வானங்கள், பூமிகளுடைய மலக்கூத்தை காண்பித்தோம் (இன்னும்) அவர் எகீனுள்ளவர்களில் நின்றும் ஆயிருப்பதற்காக என்றும் வானங்களையும் பூமியையும் படைத்தவன் பக்கம் என் முகத்தைத் திருப்பினேன் என்று இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் சொன்னதாயும் திருவுளமாயிருக்கிறான்.

இன்னும் திடனாக அல்லாஹு தஆலாவுக்கு ஒளியில் நின்றும் எழுபதினாயிரம் திரைகள் உண்டாயிருக்கின்றன வென்றும், அவை திறக்கப்படுமாகில் அவனுடைய ஜமாலின் ஒளி எதன் மீது விழுமோ அதை அது கொளுத்திவிடும் என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இதன் விளக்கத்தை மிஸ்காத்துல் அன்வாரிலும் மிஸ்பாஹுல் அஸ்ராரிலும் நாம் எழுதியிருக்கிறோம். ஆனதால் அவ்விடத்தில் பார்த்துக்கொள்ளவும்.

பேதையான இயற்கைவாதி அனஸிருடைய சுபாவங்களான உஷ்ணம், சீதளம் முதலியவைகளால் உலகம் உற்பத்தியாகின்றதெனச் சொல்லுகின்றானே இது உண்மைதான். ஏனென்றால் அல்லாஹு தஆலாவுடைய காரியங்களுக்கிடையில் அனஸிர்களில்லாமல் போனால் வைத்தியம் தப்பென்றாகிறது. ஆனால் இவன் பிசகிப்போன காரணம் யாதெனில் இவன் பார்வை சுருங்கியிருந்தது. இருதயச் சரக்கான புத்தியை மூந்தின மன்ஜிலிலேயே வைத்துக் கொண்டு தங்கிவிட்டான், எஜமானத்துவம் செய்தானில்லை, வேலையும் சரியாய்ப் பார்க்கவில்லை. அனஸிரானவை செருப்புவிடும் ஸ்தானத்தில் நிற்கின்ற சின்னவேலைக்காரர்களுக்கு ஒப்பாகும்.

இன்னும் நட்சத்திரவாதியானவன் அல்லாஹு தஆலாவுடைய காரியங்களில் கிரகங்களைக்கொண்டுவந்தானே இதுவும் உண்மைதான். ஏனென்றால் அப்படியில்லாவிட்டால் இரவும் பகலும் ஒரேமாதிரியாயிருக்கும். குளிர்காலமும் வெயிற்காலமும் சரியாய்ப் போகும். சூரியனானது பூமிக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் கொடுக்கிற ஒரு கிரகமாயிருக்கிறது. வேனிற்காலத்தில் உஷ்ணத்துக்குக் காரணம் சூரியன் நடுவானத்துக்கு நெருங்குவதேயாம். குளிர்காலத்திலோ அது தூரமா

யிருக்கிறது. சூரியனுக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் கொடுத்த அல்லாஹு தஆலா சனி யென்னும் கிரகத்தை குளிர்ச்சியும் வறட்சியு மூள்ளதாயும் வெள்ளி என்னும் கிரஹத்தை அதிக உஷ்ணமுள்ள தாயும் படைத்தால் அது என்ன ஆச்சரியம். இதனல் இஸ்லாமுக்கு யாதொரு கெடுதியுமில்லை. ஆனல் இந்த நட்சத்திரவாதி கிரகங்கள் தாமே இக்காரியங்களை யெல்லாம் செய்வனவென்றெண்ணுகிறனே இதுதான் பிசகு. அவை வேறொன்றுக்கு வசப்பட்டிருக்கின்றன வென்பதை இவன் அறியவில்லை. والقمر والنجوم مسخرات بامره சந்திரனும் நட்சத்திரங்களும் அவனுடைய ஏவலுக்கு வசப்பட்டன வாயிருக்கின்றன. அவை தாமே வேலை செய்வனவல்ல. மேலும் நரம்புகள் எப்படித் தலைமூளையிலிருக்கிற சக்தியின் மூலமாய் விரலை அசைக்கிற காரியத்திலிருக்கின்றனவோ அப்படியே மலக்குகள் மூல மாய் நட்சத்திரங்கள் வேலையில் ஏவப்பட்டிருக்கின்றன. நட்சத் திரங்கள் சோப்தாரென்னும் தடிசேவகர்களின் ஸ்தானத்திலிருக் கின்றன. என்கினும் அவைகளும் கடைசியான வேலைக்காரர்களிற் சேர்ந்தவைகளேயாம். ஆனல் நான்கு அனலிர்போல் செருப்பு விடுகிற ஸ்தானத்தில் இல்லை இதுவோ கடைசி வேலைக்காரனுயிருக் கிறது எழுது வதில் எழுதுகோலின் கதியைப்போல்.

(பஸல்) ஜனங்களிலிருக்கிற அநேக விகற்பங்களை ஒருவாறு நோக்கில் அவர்களெல்லாரும் சொல்வது உண்மையாகவே யிருக்கிறது. ஆனல் அவர்கள் ஒருவஸ்து முழுவதையும் பார்க்காமல் சிலவற்றை மாத்திரம் பார்த்துக்கொண்டு நாம் எல்லாவற்றையும் பார்த்து விட்டோ மென்று எண்ணிக் கொண்டார்கள். இவர்களுக்கு உபமானமாவது சில பிறவிக்குருடர்கள் தங்கள் ஊரில் ஒருயானை வந்திருக்கிறதென்று கேள்விப்பட்டு அது எத்தன்மையான மிருகமென்றறிய நாடி எல் லாரும் அதனிடம் போய் ஒருவன் அதன் காலையும், ஒருவன் அதன் காதையும், மற்றொருவன் அதன் கொம்பையும் இப்படி ஒவ்வொரு வரும் ஒவ்வோர் உறுப்பைத்தடவிப்பார்த்தார்கள். பின்பு இவர்கள் வேறே குருடர்களிடத்திற் போனபோது அவர்கள் யானை எப்படி இருக்கிறதென்று இவர்களைக் கேட்டார்கள். காலைத்தொட்டவன் யானை தூண் போலிருக்கிறதென்றும், கொம்பைத் தொட்டவன் உலக்கைபோலிருக்கிறதென்றும், காதைத்தொட்டவன் கம்பளி போலி ருக்கிறதென்றும் இப்படி அவரவர்களுக்குப் புலப்பட்டதைச் சொன் னர்கள். இவ்விடத்தில் எல்லாரும் உண்மையே சொல்லுகிறார்கள்.

என்கினும் ஒவ்வொருவனும் தனக்குப் புலப்பட்ட தெவ்வளவோ அவ்வளவே யானை முழுவதும் மென்று எண்ணிக் கொண்டு படியால் எல்லார் பேரிலும் தப்பிருக்கிறது. இது போலவே நட்சத்திரவாதியும் இயற்கைவாதியும் அல்லாஹ் தஆலாவுடைய வேலைக்காரர்களில் நின்றும் ஒரு வேலைக்காரனைப் பார்த்து அந்த வேலைக்காரனுக்கிருக்கிற அதிகாரத்தையும் ஆரபாரத்தையும் கண்டு மலைத்து இவனே இராஜனென்று சொல்லத் துணிகிறார்கள்.

(பஸல்) கிரகங்கள், நான்கு அனலிர்கள், பன்னிரண்டு இராசிகள் அறுஷ் இவைகளுக்கு உபமானமாகிறது ஒரு பாதுஷாவைப் போலாகும். அந்த பாதுஷாவுக்கு ஒரு சொந்த அரண்மனையும், அந்த அரண்மனையைச் சூழ ஒரு மாளிகையும், அந்த மாளிகைக்கு பனிரண்டு உப்பரிகைகளு மிருக்கின்றன. அந்த அரண்மனையில் பாதுஷாவுடைய மந்திரி வாசஞ் செய்கிறான். அவ்வரண்மனையைச் சூழ்ந்த மாளிகையின் ஒவ்வொரு உப்பரிகையிலும் மந்திரியுடைய நாயிபாகிய ஒவ்வொரு பிரதிநிதி உட்கார்ந்திருக்கிறான். சோப்தார்களாகிய ஏழு தருப்பு சிப்பாய்கள் அந்தப் பன்னிரண்டு உப்பரிகைகளையும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். மந்திரியானவன் தன் நாயிபுகளுக்கு அனுப்புகிற கட்டளைகளை இந்தச் சோப்தார்கள் கேட்டு அதன் படி நடக்கிறார்கள். இன்னும் காலாள் சிப்பாய்கள் நாலு பேர் இந்த ஏழு சோப்தார்களுக்குத் தூரமாக நின்று சமுகத்திலிருந்து என்ன கட்டளை வருகிறதென்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலாள் சிப்பாய்களிடம் நான்கு வலைகளிருக்கின்றன. இவர்கள் இவ்வலைகளை வீசி உத்திரவின் படி ஒரு கூட்டத்தைச் சமுகத்துக்கு பிடித்து அனுப்புகிறார்கள். ஒரு கூட்டத்தை சமுகத்திலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள். ஒரு கூட்டத்துக்கு இரட்சிப்பும் ஒரு கூட்டத்துக்கு சிட்சிப்பும் செய்து வருகிறார்கள்.

அந்த அரண்மனையென்பது அறுஷ். அதிலிருக்கிற மந்திரியென்பது முகர்ரபாகிய ஒரு மலக்கு. மந்திரியுடைய நாயிபுகளென்பது முகர்ரபாகிய மலக்குகளிலும் தாழ்ந்த பதவியுள்ள வேறே மலக்குகள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை சாட்டப்பட்டிருக்கிறது. ஏழு சோப்தாரர்களென்றது ஏழு கிரகங்களாயிருக்கும். மாளிகையென்றது நட்சந்திரங்களின் வானமாயிருக்கும். பனிரண்டு உப்பரிகைகளென்றது பன்னிரண்டு இராசிகளாயிருக்கும். ஏழு கிரகங்களும் ஏழு தருப்பு சிப்பாய்களைப் போல் உப்பரிகைகளிடம் நின்று கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உப்பரிகையென்னும் இராசியில்

கின்றும் அக்கிரகங்களுக்கு வெவ்வேறு உத்திரவு வருகிறது. நாலு அனலிர் என்னும் நெருப்பு காற்று தண்ணீர் மண் இவை நான்கு காலாள் சிப்பாய்களா யிருக்கின்றன. இவை தங்களுரை விட்டும் வெளியே போகிறதில்லே. நான்கு இயற்கைக் குணங்களான உஷ்ணம் சீதளம், வறளே, கொழுமை இவை நான்கு வலேகளா யிருக்கின்றன.

ஒருவனுடைய சுபாவம் மாறி அவன் இல்வாழ்க்கையைத் துறந்து, துன்யாவை வெறுத்துத் துக்கமும் பயமும் அவனுக்கு மேலிட்டு அதனுல் அவன் லோக போகத்தைத் தள்ளித் தன் முடிவைப் பற்றின கவலேயில் வீழ்வானுகில், அப்போது வைத்தியன், அவனேப் பார்த்து இவன் பிணி கொண்டிருக்கிறன், இந்த பிணிக்குச் சித்தப் பிரமை என்று பெயர், இவனுக்கு அப்திமூன் கியாழம் கொடுத்தால் இந்தப் பிணி தீரும் என்று சொல்லுகிறன். இயற்கை வாதியானவன் இந்தப் பிணிக்குக் காரணம் வறட்சியா யிருக்கும், குளிர் காலத்தின் வறண்ட காற்றினுல் இவன் தலே மூளேயில் வறட்சி அதிகரித்திருக்கிறது. வசந்த காலத்தின் சுகவாய்வு வந்து அந்த வரட்சியைத் தணிக்காதவரையில் இதற்குச் சிகிச்சை செய்ய முடியாது என்று சொல்லுகிறன். நட்சத்திரவாதியோ இது இந்தப் பருவத்தி லுண்டான பித்தமா யிருக்கிறது. பித்தமாகிறது புதன் என்னும் கிரஹத்தால் உண்டாகின்றது.. புதனுக்கு செவ்வா யென்னும் கிரஹத்துடன் பொருத்தமில்லே, யாதலால் இரண்டு நற்கிரகங்கள் ஒன்று சேருகிற லக்கினத்துக் கெதிரில் புதன் வராத வரையில் இவன் பித்தம் தெளியாது என்கின்றன். இவர்கள் எல்லோரும் உண்மையே சொல்லுகிறர்கள். இவர்களுடைய கல்வியான சரக்கு இவ்வளவு தான். ஆனல் அல்லாஹு தஆலா தனது சமுகத்தில் அவனுடைய நற்பதவியைத் தீர்ப்பு செய்து புதன் செவ்வாய் என்னும் இரண்டு சுறுசுறுப்பான பிரதான சேவகர்களேச் சவுக்காலடித்து அவனிடம் அனுப்பிச் சமுகத்தின் காலாள் சிப்பாய் என்னும் காற்றினுல் அவன் தலே மூளேயில் வறட்சியைப் போட்டு லோக போகத்தை அவனுக்கு வெறுப்பாக்கித் துக்கமும் பயமுமான சாட்டியால் அவனே அடித்துத் தேட்டமென்னும் நாமத்தினுல் அல்லாஹு தஆலா தன் சமுகத்தில் அழைக்க ஏற்பாடு செய்திருக்கிறதை இவர்கள் அறிய மாட்டார்கள். இந்த இல்மு வாகடத்திலுமில்லே, சோதிடத்திலுமில்லே, இயற்கையிலும் கிடையாது. மேலும் இந்த இல்மானது நபுவத்துடைய இல்மென்னும் ஞானசாகரத்தி லிருந்து வெளியாயிற்று. அந்த ஞான சமுத்திரமானது இராஜ்ஜியத்தின் பல பக்கங்களேயும் இராஜ சமுகத்தி லிருக்கிற ஆலிம்கள், மந்திரிகள், பிரதானிகள், சின்ன வேலேக்காரர்கள் முதல் மற்றெல்லோரையும் வியாபகமாய் சூழ்ந்

தறிகின்றது. இன்னும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கிற வேலை இது வென்றும், யாருடைய உத்தரவின்மேல் அவர்கள் தங்கள் வேலையில் ஆடுகிறார்கள் என்றும் ஜனங்களை அவர்கள் எங்கே அழைக்கிறார்களென்றும் எங்கேயிருந்து விரட்டுகிறார்களென்றும் அந்த ஞானசாகரம் சூழ்ந்தறிகின்றது.

ஆகவே, வைத்தியனும், இயற்கைவாதியும், சோதிடனும் சொன்னவை உண்மையேயாம். என்கினும் பாதுஷாவுடையவும் சேனைத் தலைவருடையவுமான இரகசியத்தை அவர்கள் அறியவில்லை. அல்லாஹ¨ தஆலா இப்படியே நோய், துன்பம், பைத்தியம், கஷ்டம் முதலான உபாயத்தினல் கல்புகளைத் தன் சமுகத்திற்கு அழைக்கின்றான். இன்னும் இது நோயல்ல, நம்முடைய உட்கிருபையென்னும் வலையாயிருக்கும். இதனல் நம்முடைய தோஸ்துகளை நம்முடைய சமுகத்துக்கு அழைக்கிறோம் என்றும்.

திடனுகத் துன்பமாகிறது அன்பியாக்களுக்கும் பின்பு அவர்களை யோத்தவர்களுக்கும் சாட்டப்பட்டதாயிருக்கும். இவர்கள் பிணி கொண்டவர்களென்று நீங்கள் எண்ணவேண்டாம். இவர்கள் நம் முடைய சொந்த ஜனங்களாயிருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறான். مرضت فلم تعدني مرضت நான் பிணிகொண்டேன் என் பிணியைப் பற்றி நீ வினவவில்லை என்று அவர்கள் விஷயமாய் (மற்றவர்களை) விளித்துச் சொல்லப்படுகிறது.

பின்னர் அறிந்துகொள் அந்த மூன்றின உபமானமாகிறது மனிதன் தன்னுடைய சரீரத்தில் செய்கிற ராஜரீகத்தைக் குறித்ததாயிருந்தது. இந்த உபமானமோ அவன் தன்னுடைய சரீரத்துக் குப்புறம்பே செய்கிற ராஜரீகத்தைப் பற்றினதாயிருக்கிறது. இதனல் இந்த மஃரிபத்தல் அப்ஆலியும் நபுசுடைய மஃரிபாவினலேயே உண்டாகவேண்டியதாயிருக்கிறது. இதனலேயே நாம் நபுசுடைய மஃரிபாவை முன்றின உன்வானுக்கினோம்.

(பஸல்)இப்போது سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر இந்தக் கலிமாவுடைய பொருளை அதாவது அல்லாஹ¨ தஆலாவைத் துய்தாக்குகிறேன். அல்லாஹ¨ தஆலாவுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ¨ தஆலாவன்றி வேறு நாயகனில்லை அல்லாஹ¨ தஆலா மிகப்பெரியவன் என்ற வாக்கியங்களுக்குப் பொருளென்னவென்று அறி. இந்தச் சுருக்கமான நான்கு வாக்கியங்களும் அல்லாஹ்வுடைய மஃரிபாவைச் சேகரித்துக் கொண்டவைகளாயிருக்கின்றன. எப்போது நீ உன்னுடைய தூய்மையை அறிந்தாயோ அப்போது அல்லாஹ¨ தஆலா துய்யவன் என்பதின் பொருள் உனக்கு

வெளியாயிற்று. இன்னும் எப்போது நீ உன்னுடைய இராஜரீகத்தைக் கொண்டு அல்லாஹ்வுடைய இராஜரீகத்தை அறிந்தாயோ அதாவது எழுத்துக்காரனுக்கு வசப்பட்டிருக்கிற எழுதுகோல் போல் எல்லாக் காரணங்களும் அல்லாவுடைய உத்திரவுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன வென்று எப்போது தெரிந்து கொண்டாயோ அப்போது அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என்பதின் பொருள் உனக்குத் தெரியலாயிற்று. அதெப்படி யென்றால் சகல செல்வங்களையும் அளிப்பவன் அவனேயன்றி வேறுயாருமில்லை யாதலால், அவனே புகழுக்கும் நன்றியறிதலுக்கும் உரியவனாயிருக்கிறான் என்று உணர்ந்துகொண்டாய். இன்னும் எப்போது நீ அவனுக்கன்றி மற்ற வருக்குச் சர்வாதிகாரமில்லை யென்று அறிந்தாயோ அப்போது அல்லாஹ்வுதஆலாவன்றி வேறு நாயகனில்லை என்பதின் பொருள் உனக்குத் தெரியலாயிற்று.

இனி அல்லாஹ்வுதஆலா மிகப்பெரியவன் என்பதின் பொருளைத் தெரிந்துகொள். இன்னும் நீ இப்போது அறிந்தவை எல்லாவற்றிலும் அல்லாஹ்வுதஆலாவுடைய இரகசிய மொன்றையும் நீ அறியவில்லை யென்று எண்ணிக்கொள். ஏனென்றால் அல்லாஹ்வுதஆலா மிகப்பெரியவன் என்றது அடியான் தன் புத்தியினால் அறியக் கூடாதபடி அல்லாஹ்வுதஆலா மகாபெரியவனாயிருக்கிறானென்பதேயாம். மற்றொன்றைக்காண அவன் பெரியவனென்பது அதற்குப் பொருளல்ல. ஏனெனில் அதைக்காண அவன் பெரியவனென்பதற்கு அவனுடன் வேறே யாதொரு வஸ்துவுமில்லை. சகலமும் அவனது ஜாத்தாகிய சுயரூபத்தின் ஒளியில் நின்று மாயிருக்கின்றன. சூரியனது தன் ஒளியிலும் பெரிதென்று சொல்வதற்கு அவ்வொளி சூரியனைத் தவிர வேறல்லவே. ஆகையால் அல்லாஹ்வுதஆலா மிகப்பெரியவன் என்பதற்குப் பொருள் அவன் மனிதனுடைய புத்திக்கு எட்டாத மகா பெரியவனென்பதேயாம்.

இனி அல்லாஹ்வுதஆலாவுடைய தூய்மையானது மனிதனுடைய தூய்மைக்கு ஒப்பாமென்பதை விட்டும் அல்லாஹ்வுதஆலாவினிடம் காவல் தேடுகிறேன். ஏனெனில் அவன் எப்படைப்புக்கும் ஒப்பாகாத மகா துப்பரவான பரிசுத்தனாயிருக்கிறான். மனிதன் கணக்கென்ன? இன்னும் அவனுடைய இராஜரீகமானது மனிதன் தன்னுடைய சரீரத்தின்மேல் செய்கிற இராஜரீகத்துக்குச் சமானமாயிருக்குமென்பதை விட்டும் இன்னும் அவனுடைய இல்மு குதரத்து முதலிய சிபத்துகளானவை மனிதனுடைய சிபத்துகள் போலிருக்கின்றன வென்பதை விட்டும் அல்லாஹ்வுதஆலாவினிடம் காவல் தேடுகிறேன். ஆனால் உன் மனித சக்திக்கு தகுந்த அளவாக அல்லாஹ்வுதஆலாவுடைய ஜமாலின் காட்சியில்

நின்றும் உனக்கு ஒரு பிரயோஜனமுண்டாகும் பொருட்டு மேற் சொன்னதெல்லாம் ஒரு நமூனாவாகிய அறிகுறியா யிருக்கும். இந்த நமூனா எப்படி யிருக்கிறதென்றால்:—ஒருபையன் நம்மிடத்தில் இராஜ ரீகம் செய்வதிலுண்டாகிற இன்பம் எப்படியிருக்குமென்று கேட்பா னாகில், பந்துவிளையாட்டின் இன்பத்தைப் போலிருக்குமென்று அவ னுக்கு நாம் சொல்லுவது போலிருக்கிறது. அவனில் இல்லாதவேறே இன்பத்தைச் சொன்னால் அவன் அதை அறியமாட்டான். எதற்கு அவனில் அறிகுறியிருக்கிறதோ அதைத்தான் அவன் அறிவான். இராஜரீகத்துடைய இன்பத்துக்கும் பந்து விளையாட்டின் இன்பத்துக் கும் யாதொரு சம்பந்தமில்லை யென்று நன்றாய்த் தெரிகின்றது. என் கினும் இன்பம் என்னும் பேர் இரண்டிலும் நிஜமாகின்றது. இம்மூகாந் தரத்தினால் நாமத்தில் இரண்டும் சரியாகின்றன. ஆகவே இது பிள்ளை கள் அறியத்தக்க நமூனா யிருக்கிறது. ஹக்குத் தஆலாவுடைய பூரண ஹகீகத்தை ஹக்குத் தஆலாவன்றி மற்றவர் எவரும் அறியார்.

(பஸல்) அல்லாஹ் தஆலாவுடைய மஃரிபாவின் விளக்கம் விரி வாயிருக்கிறது. இந்த கிதாபில் அதை விரித்துச்சொல்ல முடியாது. மஃரிபாவைப் பூரணமான விதமாய்த் தேடிக்கொள்வதற்குத் தூண்டு தலாய் இவ்வளவு விருப்பூட்டினதுபோதும். ஏனெனில் நற்பதவி யானது இதில் உண்டாயிருக்கிறது. மேலும் மனிதனுடைய நற்பதவி யாகிறது அல்லாவை அறிவதிலும் அவனை வணங்குவதிலுமா யிருக்கும். அவனை அறிவதினால் நற்பதவியுண்டாகிற காரணம் இதற்கு முன்னே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வணக்கமும் இபாதத்தும் நற்பதவிக்கு காரணமாகுவதேனெனில், மனிதன் மவுத்தானால், அல் லாஹ் தஆலாவினிடம் சேருகிறவனா யிருக்கிறான்.

والیه المرجع والمصیر மீளுவதும் சேர்வதும் அவன் பக்கமே யாம். எவன் மற்றொருவனோடு வசிக்கப் போகிறானோ அவன் இன் புற்று வாழ்வதற்கு அந்த மற்றொருவனை அவன் ஆசிக்க வேண்டும். எவ்வளவு அதிகமாய் ஆசிப்பானோ அவ்வளவு இன்பம் அதிகமாகும். ஏனென்றால், தான் ஆசைகொண்ட மஹ்பூபைப் பார்ப்பதில் பெரிய சுகமும் இன்பமு மிருக்கிறதினாலென்க.

அல்லாஹ் தஆலாவை அறிவதினாலும் அவனை அதிகமாய் திகுரு செய்வதினாலுமே யன்றி மற்றப்படி. அவனுடைய ஆசை கல்பின் பேரில் மிகைக்காது. ஏனென்றால் எவன் மற்றொருவனை நினைக்கி கின்றானோ அவன் அந்தச் சினேகனை அதிகமாய் நினைக்கின்றான். அல் லாஹ் தஆலாவை அதிகமாய் திகுரு செய்கிறவன் அவனுடைய தோஸ்துகளிற் சேருகின்றான். இதனாலேதான் அல்லாஹ் தஆலா انا بدک اللازم فالزم بدک நான் உனக்கு ஆதாரமாயிருக்கிறேன்.

என்னோடு உனக்குச் சம்பந்தமிருக்கிறது. ஒரு மூச்சாவது நீ என்னை மறக்காதே என்று தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹி அனுப்பினன்.

கல்பின்பேரில் திகுரு அதிகப்படுவதற்கு மனிதன் எப்போதும் இபாதத்து செய்யவேண்டும். அப்படி இபாதத்து செய்ய மனவோர்மை உண்டாவதற்கு இச்சை பாராட்டுவதற்குரிய சம்பந்தங்கள் இவனை விட்டும் நீங்கிப்போகவேண்டும். அந்தச் சம்மந்தங்கள் நீங்கிப்போவதற்கு இவன் பாவங்களைச் செய்யாதிருக்க வேண்டும். ஆதலால் பாவங்களை விடுவதானது மனவோர்மைக்குக் காரணமாகின்றது. இபாதத்து செய்வதினால் கல்பின்பேரில் திகுரு அதிகரிக்கின்றது. இந்த இரண்டும் அல்லாஹு தஆலாவுடைய முஹப்பத்துக்குக் காரணமாயிருக்கின்றன. முஹப்பத்தானது இன்பத்துக்கு வித்தாயிருக்கிறது. இதிலேதான் வெற்றியும் ஜெயமும் உண்டாயிருக்கிறது. அதெப்படியென்றால், திடனுக ஈமான் கொண்டவர்கள் ஜெயம் பெற்றார்கள் என்றும், தன்னைச் சுத்தப்படுத்தித் தன்றப்புடைய நாமத்தை திகுரு செய்து பின்பு தொழுதவன் ஜெயம் பெற்றன் என்றும் அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறன்.

அமல்களெல்லாம் இபாதத்தாகாமல், சிலது இபாதத்தாயும், சிலது அப்படியாகாமலு மிருக்கின்றன. இன்னும் இச்சைகளையெல்லாம் விடுவது அசாத்தியமாயும், மேலும் ஆகாத காரியமாயுமிருக்கின்றது. ஏனென்றால் ஊணை விட்டால் மடிந்துபோவான். போகஞ் செய்தலை விட்டால் சந்ததியற்றுப்போகும். ஆகையால் சில இச்சைகள் விடத்தக்கனவாயும், சில இச்சைகள் அனுசரிக்கத்தக்கனவாயுமிருக்கின்றன. பின்னர் செய்யத்தக்கவை இவை. விடத்தக்கவை இவை என்று பிரிக்கும்பொருட்டு ஒரு ஹத்து வேண்டியதாயிருக்கிறது, அந்தஹத்து மனிதன் தானே தன் புத்தியினால் ஏற்படுத்தினதாயும் தன் நோட்டத்தினால் தெரிந்து கொண்டதாயுமிருக்கும். அல்லது வேறொருவருடைய புத்தியினால் எடுத்ததாயிருக்கும். ஆனால் தானே தன் புத்தியில் ஆராய்ந்தெடுப்பதின்பேரில் மனிதனை விடுவதுகூடாது. ஏனெனில் ஆசாபாசம் அவனை மேலிட்டிருப்பதால் அது எப்போதும் அல்லாவுடைய பாதையை அவனுக்கு மறைத்துவைக்கின்றது. அவன் இச்சித்ததையெல்லாம் அவனுக்கு நல்லதாக்கிக் காட்டுகின்றது. ஆதலால் சுயதந்திரம் என்னும் கடிவாளம் அவன் கையிலிருப்பது கூடாது. மேலும் அன்னியர் கையிலிருக்க வேண்டும். அன்னியர் எல்லாருமே அந்தக்கடிவாளத்தைப் பிடிக்கத் தகுந்தவர்களல்லர். மேலும் அறிவுடையோராயிருக்க வேண்டும். அவர்கள் யாரெனில் நபிமார்களேயாம். ஆகவே ஷரீஅத்தைப் பின்பற்றுவதும் அதன் கட்டளைகளை நிறை

வேற்றுவதும் நற்பதவிக்கு அவசியமான காரணமாகும். வணக்கம் என்பதற்கு அர்த்தம் இதுதான். எவன் ஷரீஅத்துடைய ஹத்துக் களைத் தாண்டுகிறானே அவன் தன்னுலேயேமடியும் அபாயத்தில் விழு கிறான். இதனுலேதான் எவன் அல்லாஹ்தஆலா உடைய ஹத்து களைத் தாண்டுகிறானே அவன் திடனுகத் தன் நப்சுக்கு அநியாயம் செய்தான் என்று அல்லாஹ்தஆலா திருவுளமாயிருக்கிறான்.

(பஸல்) அல்லாஹ்தஆலாவுடைய கட்டளைகளின் ஹத்துகளை விட்டும் மீறிபோனவர்களான அஹ்லுல் இபாஹத்தி களின் அறியாமை எழுவிதமாயிருக்கிறது.

முதலாவது அல்லாஹ்தஆலாவின்பேரில் ஈமான் கொள்ளாத வர்களின் அறியாமையாம். இவர்கள் அல்லாஹ்தஆலாவைத் தங்கள் புத்தியினுல் அவன் எப்படிப்பட்டவ னென்று தேடிப்பார்த்து அவனைப் பெற்றுக் கொள்ளாததினுல் அவன் இல்லை யென்று நிராகரிப் பவர்களாய்ப் போனர்கள். இயற்கையினுலும், நட்சத்திரங்களாலும் எல்லாகாரியங்களுமாகின்றன வென்றும், மனிதனும் மற்றும் ஜீவரா சிகளும், இந்தப்புதுமையான உலகமும் இத்தயாதி பூராயங்களோடும் தன்மையோடும் தன்னுல் தானே உண்டாகின்றன, அல்லது இது எப் போதும் உள்ளதாயிருக்கிறது, அல்லது இது இயற்கையின் செயலா யிருக்கும் என்று எண்ணுகிறார்கள். நட்சத்திரவாதியாகிய சோதிட னுக்குத் தன் சங்கதியே தனக்குத் தெரியாதிருக்க இவன் மற்றதை அறிவதெங்கே. இவர்கள் சொல்வதெப்படியிருக்கிற தென்றுல் அழகா யெழுதப்பட்டிருக்கிற ஒரு காகிதத்தைப்பார்த்த ஒருவன் இது தன் னுல் எழுதப்பட்டிருக்கிறது, எழுத்துக்காரனுடைய நாட்டமும், அறி வும், தத்துவமும் இதற்குத் தேவையில்லை, அல்லது எப்போதும் இவ்வெழுத்து இதேவிதமாய் அமைந்திருக்கிறதென்று சொல்வதற் குச் சமானமாயிருக்கிறது. எவன் இவ்வளவு குருட்டுத்தன முடையவ னுயிருக்கின்றானே அவன் ஒருபோதும் வழிகேட்டில் நின்று நீங்க மாட்டான். இந்த இயற்கைவாதி நட்சத்திரவாதிகளின் பிசகு இதற்கு முன்னே சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாவது:—ஆகிறத்தின்மேல் ஈமான் கொள்ளாதவர்களின் அறியாமையாயிருக்கும். இவர்கள் மனிதனைவன் புற்பூண்டுகளுக்குச் சமானமாயிருக்கிறான்; அல்லது மற்றும் ஜீவராசிகள்போல் மரணத்தி னுல் அழிந்துபோகிறான்; அவனுக்குக் கேள்வி கணக்குமில்லை, அதாபு மில்லை, தவாபுமில்லை யென்று எண்ணுகிறார்கள்; இவ்வகுப்பான் இப் படி எண்ணுவதற்குக் காரணம் யாதெனில், இவன் தன் நபுசை அறிந்

தகிலுல் கழுதை, மாடு, புற்பூண்டாதிகளைப்படியோ அப்படியே தன்னையும் அவற்றுள் ஒன்றாக நினைத்துக் கொண்டான். தன்னுடைய ரூஹின் உண்மையை உணர்ந்தானில்லை. அது நித்தியமானதென்றும், அது ஒருபோதும் சாகிறதில்லை யென்று இவன் அறியவில்லை. இதன் விவரம் நாலாவது உன்வானில் வரும்.

மூன்றாவது:—அல்லா ரசூலின்பேரில் கொஞ்சம் ஈமான்கொண்டு ஷரீஅத்துடைய மஸ்ஞலை உள்ளபடி தெரிந்து கொள்ளாதவர்களின் அறியாமையாம். இவர்கள் அல்லாஹு தஆலா நம்முடைய இபாதத்துக்கும் வணக்கத்துக்கும் ஹாஜத்துள்ளவனல்ல வென்றும், நம்முடைய பாவத்தை அவன் ஒரு பொருட்டாய் எண்ணமாட்டா னென்றும், அவன் பெரிய பாதுஷாவாயிருக்கிறா னென்று அடியார்களுடைய வணக்கம் அவனுக்குத் தேவையில்லை யென்றும், வணக்கமும் பாவமும் அவனிடத்தில் ஒரேவிதமா யிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் குர்ஆனில்,

من تزكى فانما يتزكى لنفسه و من جاهد فانما
يجاهد لنفسه و من عمل صالحا فلنفسه

"எவன் திருத்தமடைகின்றானோ திடனாக அவன் தன் நபுசுக்காகவே திருத்தமடைகிறான் என்றும், எவன் பாடுபடுகிறானோ திடனாக அவன் தன் நபுசுக்காகவே பாடுபடுகின்றான் என்றும், எவன் நல்ல அமலைச் செய்கிறானோ அது அவன் நபுசுக்கேயாம்" என்றும் அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறதை இந்த அறிவீனர்கள் கோட்டைவிடுகிறதில்லை. ஷரீஅத்து இன்னதென்று தெரியாத இந்த நிர்ப்பாக்கியன் "மனிதனனவன் தன்வேலையை அல்ல, அல்லாஹ்வுடைய வேலையைச் செய்யவேண்டு மென்பதே ஷரீஅத்துக்கு அர்த்தம்" என்று எண்ணுகிறான். இது பிணிகொண்டிருக்கிற ஒருவன் பத்தியங் காக்காமல் நான் வைத்தியனுடைய சொல்லைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அதனால் வைத்தியனுக்கு என்ன நஷ்டம் என்று சொல்வதுபோ லிருக்கிறது. இவன் வைத்தியனுக்கு யாதொரு நஷ்டமில்லை யென்பதுசரியே. ஆயினும், இவன் மரணத்துக்குள்ளாகுவது நிஜம்; அப்படி மரணம் சம்பவிப்பது வைத்தியனுடையவேண்டுதலினால் அல்ல. மேலும் இவன் பத்தியங்காக்காததே இவனுடைய மரணத்துக்குக் காரணமாயிற்று. வைத்தியன் இவனுக்கு ஒரு வழியைக்காட்டினான். இவன் அதன்படி நடக்காமல் மீறினால் வழிகாட்டினவனுக்கு அதனால் என்ன நஷ்டம்? இவனுடைய மீறுதலே இவனை மரணத்துக்குள்ளாக்கும். எப்படி தேகப் பிணியானது இவ்வுலகில் மரணத்துக்கு காரணமா

கின்றதோ அப்படியே ஆண்மப்பிணியானது அவ்வுலகில் தர்ப்பத விக்குக் காரணமாகும். இன்னும் ولا ينجو الا من اتي الله بقلب سليم எப்படி அவிழ்தமும் பத்தியமும் தேக ஆரோக்கியத்துக்குக் காரணங் களா யிருக்கின்றனவோ அப்படியே வணக்கமும் மஃரிபாவும் ஆண்ம சுகத்துக்குக் காரணங்களா யிருக்கின்றன.

நாலாவது :—வேறு முகாந்தரமாய் ஒருவாறு ஷரீஅத்தைத் தெரிந்து கொள்ளாதவர்களின் அறியாமையாம். இவர்கள் ஆசை, கோபம், ரியா முதலியவைகளி னின்றும் கல்பை சுத்தமாக்கும்படி ஷரீ அத்து கூறுகிற தென்றும், மனிதனை இக்குணங்களோடு உண்டாக்கி யிருப்பதால் அப்படி சுத்தமாக்குவது அசாத்திய மென்றும், இது கரியனை வெண்மையாக்க நாடினது போலிருக்கிற தென்றும் சொல்லு கிறார்கள். ஷரீஅத்து அப்படிக் கூறவில்லை என்பதை இந்த மூடர்கள் அறியவில்லை. ஷரீஅத்தானது கோபத்தையும், ஆசையையும் அடக்கி அவைகளை புத்திக்கும் ஷரீஅத்துக்கும் மீறுமலிருக்கும்படி செய்து கொள்ளுங்க ளென்றும், ஷரீஅத்துடைய ஹத்துக்களை கவனியுங்க ளென்றும், சிறு பாவங்களை மன்னிக்கப்படுவதற்குப் பெரும் பாவங்களை விட்டுப் பேணுதலா யிருங்க ளென்றும் கட்டளை செய்கிறது. இது சாத்தியப்படுங் காரியமாம். அநேகம் பேர் இதை அடைந்திருக்கிறார் கள். கோபஞ் செய்ய வேண்டாம் என்றும், போகஞ் செய்ய வேண்டா மென்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆக்கியாபிக்க வில்லை. அவர்களுக்கு ஒன்பது நம்பிராட்டிமார்க ளிருந்தார்கள். انا اغضب كما يغضب البشر நான் உங்களைப் போல் ஒரு மனிதனு யிருக்கிறேன் என்றும் மனிதன் கோபிப்பது போல் கோபிப்பேன் என்றும் சொல்லுகிறவர்களா யிருந்தார்கள். இன்னும் அல்லாஹு தஆலா والكاظمين الغيظ இந்த ஆயத்தில் கோபத்தை அடக்குகிற வர்களென்று புகழ்ந்தானேயன்றி ஒரு போதும் கோபமே வராதவர்க ளென்று சொல்லவில்லை.

ஐந்தாவது :—சிலர் அல்லாஹு தஆலாவுடைய கிருபையான ரஹ்மத்தைப் பற்றிச் சொல்லுகிற அறியாமையா யிருக்கும். அதாவது அல்லாஹு தஆலா ரஹீமாயும் கரீமாயு மிருக்கிறா னென்றும், நாம் எப்படி யிருந்தாலும் அவன் நம்மீது கிருபை புரிவா னென்றும், சொல்லுகிறார்கள். ஆனால் அவன் எப்படி கரீமா யிருக்கிறானே அப்படியே கஹ்ஹாருமா யிருக்கிறா னென்பதை இவர்கள் அறியவில்லை. இவர்கள் பயிர்த் தொழிலும் வர்த்தகமும் செய்யாத வரையில் பணக் காரர்களாகிறதில்லை. கஷ்டம் எடுத்துக் கொள்ளாத வரையில் கல்வி மான்களாகிறதில்லை. துன்யாவைச் சம்பாதிப்பதில் இவர்கள் ஒரு போதும் குறை செய்கிறதில்லை. அவன் ரஹீமாயும் கரீமாயு மிருக்

கின்றுனுதலால் நாம் பயிர்த் தொழிலும் வர்த்தகமும் செய்யாம லிருந்த போதிலும் அவன் நமக்கு இரணமளிப்பா னென்று சும்மா விருக்கிறார்க ளில்லே. அல்லாஹ் தஆலா இரணமளிப்பதற்கு அவன் தானே பிணை யாகி وما من دابة في الارض الا على الله رزقها ஊறும் பிராணியில் நின் றும் உலகத்தில் ஒன்றுமேயில்லே. அதன் இரணம் அல்லாவிடத்தில் இருந் தேயோழிய வென்றும் ஆகிறத்துடைய காரியத்தை (அதாவது அமல் செய்வதை) அடியான் பேரில் சாட்டி وان ليس للانسان الا ما سعى மனிதனுக்கு அவன் முயற்சித்ததன்றி வேறேன்றில்லே யென்றும் திரு வளமா யிருக்கிறன். இதில் இவர்களுக்கு நம்பிக்கையில்லே ஆதலால் துன்யாவைச் சம்பாதிப்பதில் மிகப் பிரயாசை யெடுத்துக் கொள்ளுகிறார் கள். ஆகிறத்துடைய விஷயத்தில் மாத்திரம் அல்லாஹ் தஆலா வுடைய கிருபையைச் சொல்ல வருகிறார்கள். இது வெறும் பேச்சும் ஷைத்தானுடைய போதனையுமா யிருக்கிறது. இதற்கு யாதொரு அத்தாட்சியுமில்லே.

ஆறுவது :—கர்வங் கொண்டவர்களின் அறியாமையா யிருக்கும். இவர்கள் தங்கள் கர்வத்தினுல் நாங்கள் மேலான பதவியில் சேர்ந்து விட்டோ மென்றும், நாங்கள் பாவஞ் செய்வது எங்களே நஷ்டப்படுத்தா தென்றும், எங்கள் இஸ்லாமில் எவ்வித கெடுதியுமுண்டாகா தென்றும் சொல்லுகிறார்கள். பெரும்பாலும் இந்த மூடர்கள் எவ்வளவு அற்பர் களா யிருக்கிறார்க ளென்றால், யாராவ தொருவன் இவர்களே மரியாதைத் தாழ்வாகப் பேசி இவர்களுடைய பெருமையை முறித்தால் வயது முழுமையும் அவன் பேரில் பகை பாராட்டுகிறார்கள். இவர்கள் இச் சித்த ஒரு பிடிச்சோறு இவர்களுக்குக் கிடைக்கா விட்டால் துன்யா வுடைய வாழ்க்கை இவர்கள் கண்களில் இருண்டு போகின்றது. இந்த மூடர்கள் இன்னும் மனுஷத் தன்மையிலேயே நிறப்பத்தை அடைய வில்லே. ஒருவன் உதாரணமாக பகை, இச்சை, ரியா முதலியவைகளே விட்டும் நீங்கி யிருக்கிறன். அப்படி யிருப்பதுடன் மேற் கண்ட படி கர்வமாய்ப் பேசுவனுகில் அவனும் மூடனேயாம். ஏனென்றால் இவனுடைய பதவி நபிமார்களுடைய பதவிக்கு மேலாகாது. நபிமார் கள் தங்கள் பிசகையும் வழுவையும் குறித்து அழுகிறவர்களாயும் சாளயப்படுகிறவர்களாயும் தவ்பாச் செய்கிறவர்களாயு மிருந்தார்கள். இன்னும் அஸ்ஹாபுகள் சிறுபாவங்களேயும் செய்யாமற் பேணுகிறவர்க ளாயும் ஒரு வஸ்து ஹலால் என்பதில் சந்தேக முண்டானுல் அதையும் விட்டு விடுகிறவர்களாயு மிருந்தார்கள். இந்த மூடன் ஷைத்தா னுடைய வலேயில் சிக்கவில்லே யென்றும் தன்னுடைய பதவி நபிமார்க ளுடைய பதவிக்கு மேல் ஏறிப்போயிற் றென்றும் எப்படித் தெரிந்து கொண்டான்.

ஆனல், நபிமார்களானவர்கள் ஜனங்களுடைய பிரயோஜனத்துக் காகவும் அவர்களைத் திருத்துவதற்காகவும் அப்படிச் செய்தார்க ளென்று சொல்லுவானுகில் இவனும் ஜனங்களுடைய பிரயோஜனத் துக்காக ஏன் அப்படிச் செய்யக்கூடாது? இவனுடைய நடக்கையைப் படிக்கிறவனெல்லாம் கெட்டுப்போகிறதை இவன் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்றனே. ஜனங்கள் கெட்டுப்போவதினல் எனக்கொன்றும் நஷ்டமில்லையென்று சொல்லுவானுகில், பின்பு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு அதனல் என்ன நஷ்டமிருந்ததென்று அவர்கள் தங்களைத் தக்வாவுடைய கஷ்டத்துக்குள்ளாக்கி யிருந்தார்கள். சதகாவினல் வந்த பேரீத்தம்பழத்தை வாயிலிருந்து ஏன் துப்பிவிட் டார்கள்? வாயுட்கொண்ட அப்பழத்தை தின்றுவிட்டால் அதனல் ஜனங்களுக்கு என்ன நஷ்டமிருந்தது? அதைத் தின்பது எல்லோருக் கும் ஆகுமாயிருந்ததே. அப்படித் தின்பதில் நஷ்டமிருந்ததென்றல் கணக்கில்லாத கட்டளையங்கள் இந்த மூடனை ஏன் நஷ்டப்படுத்த மாட்டா? கடைசியாக இவனுடைய பதவியானது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய பதவிக்குமேல் உயராதிருந்தும் சாரா யத்துடைய நூறு கோப்பைகளின் பதவியானது ஒருபேரீத்தம் பழத்தி னுடைய பதவிக்குமேல் உயர்ந்தவிட்டது. ஆகவே நூறுஜாடி சாராய மாஞ்லும் இவனைக் கெடுக்காதென்றவரையில் இவன் தன்னைப் பெருங்கட்டலில் வைத்துக்கொண்டான். ஒரு பேரீத்தம்பழம் நஷ்டப் படுத்துமென்றவரையில் ரசூல் நாயகமவர்களைக் கொஞ்சந் தண்ணீ ருள்ள குட்டையில் விட்டான்.

ஆனதால், ஷைத்தானவன் இவனுடைய மீசைகளை முறுக்கி விட்டு விளையாடுங்காலம் வந்திருக்கிறது. லோகமடையர்கள் இவனை விக்ட குருவாய் நியமித்திருக்கிறார்கள். புத்திமான்கள் இவனுடைய கதையைச் சொல்லி இவன்பேரில் நகைத்தால் புதுமை என்ன? ஆயி னும் எவன் தன் இச்சைகளை அடக்கவில்லையோ அவன் மனிதனல்ல வென்றும், ஒரு மிருகமாயிருக்கிறனென்றும், தினுடைய பெரியோர் கள் எண்ணுகிறார்கள். இன்னும் மனிதனுடைய நப்ஸானது பெருஞ் சூதனு யிருக்கிறதென்றும் அது பேசுவதெல்லாம் பொய்யென்றும் நான் கீழ்படிந்து விட்டேனென்று அது பெருமை அடிக்கிறதென்றும் அந்தப்பெரியோர்கள் அறிந்திருக்கிறார்கள். அப்படிக் கீழ்படிந்து போனது நிசமென்பதற்கு அதனிடத்தில் அத்தாட்சி கேளுங்கள். அத்

தாட்சி வேறென்றுமில்லை. அது தன் இச்சைக்கு வழிபடாமல் ஷரீ அத்துக்கு வழிபடுவதே அத்தாட்சியாம். எப்போதும் சந்தோஷத் தோடு ஷரீஅத்துக்கு வழிபடுமானால் அது சொல்வது மெய்தான். சாக்குபோக்கு தேடுமாகில் ஷைத்தானுடைய அடிமையாயிருக்கும். அது விலாயத்தை விளம்பரம் செய்தாலும் சரி. சாகிறவரையில் இந்த அத்தாட்சியை அதனிடத்தில் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வழிகேட்டினால் ஹலாக்காகுவான். ஷரீஅத்தைப் பின்பற்றுவது இஸ்லாமுடைய மூன்றின பதவியாயிருக்கிறதென்று அவன் அறியவில்லை.

ஏழாவது:—மறைந்திருப்பதினாலும் இச்சையினாலும் உண்டாகு வதாம். அறியாமையினால் அல்ல. இவ்வகையாருக்கு மேற்கண்டவர் கள் சொல்கிற சந்தேகங்கள் ஒன்றும் தெரியாது. என்கினும் ஒரு கூட்டத்தாரை இபாஹத்துடைய பாதையில் நடக்கவும், பஸாதும் பகடியுமான வார்த்தைகளைப் பேசவும், நாங்கள் தசவ்வுபும் விலாயத்து முள்ளவர்களென்று விளம்பரம் பண்ணவும், பகீர்களுடைய உடை உடுத்திருக்கவும் இவன் கண்டபோது இச்சைமேலிட்டதினால் இவனுக் கும் அந்த நடத்தை பிரியமாயிற்று. ஆகவே பஸாதைப் பொருந்திக் கொண்டான். இது என்னை வேதனைக்கு ஆளாக்குமென்று இவன் ஒப் புக்கொள்கிறதில்லை. மேலும் இது பஸாதல்லவென்றும், இது பஸா தென்பது படுதூறென்றும், இது (இரகசியமான) ஒரு பேச்சாயிருக் கிறதென்றும் சொல்லுகிறான். படுதூறுக்கும் அந்த பேச்சுக்கும் இவன் அர்த்தம் ஒன்றும் அறிந்திருப்பதில்லை. இப்படியானவன் மறதிக்கும் இச்சைக்கும் வசப்பட்டிருக்கிறான். இப்லீஸானவன் இவன் பேரில் மிகைத்துப்போனான். இவனுக்கு இவன் பேச்சில் சந்தேகமில்லை ஆதலால் நஸிஹத்தினால் இவன் திருந்தமாட்டான். பெரும்பாலும் இவ்வகையார் கீழ்கண்ட ஆயத்தில் குறிக்கப்பட்டிருக்கிற ஜனங்களைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள். அது வருமாறு:—

انا جعلنا على قلوبهم اكنة ان يفقهوه وفي اذانهم
وقرا وان تدعهم الى الهدى فلن يهتدوا اذا ابدا

திடனாக அவர்கள் அதை விளங்கிக் கொள்ளாதபடி நாம் அவர் களுடைய கல்புகளின் பேரில் திரைகளையும் அவர்களுடைய காது களில் கனத்தையும் ஆக்கிவிட்டோம். அவர்களை நீர் நல்வழிக்கு அழைப் பீராகில் ஒருபோதும் அவர்கள் நல்வழியை அடையார்கள் என்பதே.

ஆகவே, இவர்களோடு தலீலைக் கொண்டல்ல வாளைக் கொண்டு பேசுங்கள். இபாஹத்துடையவர்களின் தப்பு விஷயமாகவும் அவர்களுக்கு நஸிஹத்தாகவும் இவ்வளவு எழுதினது போதும்.

இந்த வழி கேட்டுக்குக் காரணமாகிறது இவன் தன் நபுசையும் அல்லாவையும் அறியா திருப்பதும் ஷரீஅத்துடைய வழியைத் தெரிந்து கொள்ளா திருப்பதுமேயாம். மனிதனுக்கு அவன் சுபாவம் விரும்பின காரியத்தில் அறியாமை என்னும் மடத்தன மிருக்குமாகில் அவன் அதை விட்டு நீங்குவது கஷ்டமேயாம். இதனாலே தான் ஒரு கூட்டத்தார் எவ்வித சந்தேகமு மில்லாமல் இபாஹத்துடைய பாதையைத் தெரிந்து கொண்டு நாங்கள் மயக்கத்தி லிருக்கிறோ மென்கிறார்கள். எந்த விஷயத்தில் உங்களுக்கு மயக்கமிருக்கிற தென்று நீ அவர்களை கேட்டால் அதற்கு பதில் சொல்ல அவர்களால் முடிகிறதில்லை. எப்படி முடியும்? இவர்களுக்குத் தேட்டமுமில்லை சந்தேகமுமில்லையே. இவர்களுக்கு உபமானமாகிறது :—ஒருவன் நான் நோயாளியா யிருக்கிறே னென்று வைத்தியனிடம் சொல்லுகிறான். ஆனால் தனக்கிருப்பது இன்னவிதமான நோயென்று வெளிப்படுத்துகிறானில்லை. நோய் இன்ன தென்று அறியாத வரையில் வைத்தியன் அவனுக்கு எப்படிப் பரிகாரம் செய்வான்? முடியாது முடியாது!

ஆதலால், தனக்கு இன்ன விஷயத்தில் மயக்கம் என்று எடுத்துக் காட்டாத இந்த ஏழை மதிக்குச் சொல்ல வேண்டிய தென்ன வென்றால் அப்பா! நீ எதில் மயக்கமா யிருக்க நாடுகிறாயோ அதில் மயங்கிக் கொண்டிரு. ஆனால் நீ ஒரு படைப்பா. யிருக்கிறாய்; உன்னைப் படைத்தவன் சர்வவல்லமையும் சர்வஞானமுள்ள நாயகனா யிருக்கின்றான், அவன் நாடுகிறதைச் செய்கிறான். இதில் மாத்திரம் நீ சந்தேகம் வைக்க வேண்டாம் என்பதே. இதை மேற்கூறி வந்தபடி அவனுக்கு அத்தாட்சியாக அறிவிக்க வேண்டியது.

மூன்றுவது உன்வான்.

துன்யாவை அறிவது.

அருமையானவனே ! கேள் துன்யாவானது தீனுடைய பாதையி லிருக்கிற மன்ஜிலுகளில் ஒரு மன்ஜிலா யிருக்கிறது. அல்லாஹ் தஆலாவுடைய சமூகத்திற்கு யாத்திரை செய்பவர்கள் நடக்கும் வழி யாயு மிருக்கிறது. யாத்திரைக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய சாமான் களை வாங்கிக் கொள்ளும் பொருட்டு காட்டி னிடத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட ஒரு சந்தைக் கடையாயு மிருக்கிறது. துன்யா. ஆகிறத்து என்கிற இரண்டும் இரண்டு நிலைமைகளுக்குச் சொல்லப்படுகின்றன. அதாவது மரணத்துக்கு முன்னேயும் அதற்குச் சமீபமாயு மிருக்கிற நிலைமைக்கு துன்யா என்றும், மரணத்துக்குப் பின்னேயுள்ள நிலைமைக்கு ஆகிறத்து என்றும் சொல்லப்படும்.

துன்யாவினுல் நாடப்பட்ட முக்கிய நோக்க மென்ன வென்றால் ஆகிறத்துக்கு வேண்டிய தங்காரிப்பேயாம். ஏனென்றால், ஒவ்வொரு மனிதனும் தான் படைப்புண்ட ஆரம்பத்தில் சாதாவாயும் பூரணத் தன் மையை அடையாதவனுயும் படைக்கப்பட்டிருக்கிறான். என்கினும் பூரணத் தன்மையை உண்டாக்கிக் கொள்ளவும், மலக்கூத்துடைய சூரத்தைத் தன் கல்பில் பதிவு செய்து கொள்ளவும், அதனுல் அல் லாஹ் தஆலாவுடைய சமூகத்துக்கு அருகனுகி அவனுடைய ஜமா லைத் தரிசிக்கவுமான தகுதியுடையவனு யிருக்கிறான். இவனுடைய பதவி இதில் தான் பூர்த்தியாகின்றது. இவனைப் படைத்தது இதற்காக வேயாம். இவனுடைய கண் திறக்காத வரையில் அல்லாஹ் தஆலா வுடைய ஜமாலைத் தரிசிக்க இவனுல் முடியாது. இந்தக் கண் திறப்பா கிறது மஃரிபாவினுல் உண்டாகுவதா யிருக்கும். அந்த மஃரிபாவுக்குத் திறவு கோலாகிறது, அல்லாவுடைய படைப்புகளான புதுமைகளை அறி வதேயாம். அந்தப் புதுமைகளை அறிவதற்கு ஐயறிவுகள் வேண்டும். அந்த அறிவுகளானவை மண், தண்ணீர் முதலியவற்றுல் உண்டாக்கப் பட்டிருக்கிற இந்தச் சரீரமின்றி நிலைப்பது அசாத்தியம். ஆகவே மனிதன் இந்நில நீராலாகிய உலகத்துக்கு வந்தது தன்னையும், தன் சரீரத்தை அண்டி நிற்கிற ஐயறிவுகளால் உலகத்தையும் அறிந்து

அதனால் தன் தங்கரிப்பாகிய அல்லாஹு தஆலாவுடைய மஃரிபாவை உண்டாக்கிக்கொள்ளவேயாம். இந்த ஐயறிவுகள் இவனெடிருந்து விஷயங்களை இவனுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறவரையில் இவன் துன்யாவில் இருக்கிறானென்றும் ஐயறிவுகளைவிட்டொழித்துத் தன் ஜாத்தியான அம்சங்களோடிருப்பானுகில் இவன் ஆகிறத்தை நோக்கிச் சென்றான் என்றும் சொல்லுகிறார்கள். மனிதன் துன்யாவில் இருப்பதற்கு இதுவே காரணமாம்.

(பஸல்) துன்யாவில் மனிதனுக்கு இரண்டு வஸ்துக்கள் தேவையாகின்றன. அவற்றுள் ஒன்று கல்பைக்கெடுக்கின்ற காரணங்களைவிட்டு அதைக்காப்பதும், அதன் ஆகாரத்தைத் தேடிக் கொள்வதுமாம். மற்றொன்று சரீரத்தைக் கெடுக்கின்ற காரணங்களைவிட்டு அதைக்காப்பதும், அதன் ஆகாரத்தைத் தேடிக் கொள்வதுமாம். கல்புடைய ஆகாரமென்பது அல்லாஹு தஆலாவை அறிவதும் அவனை ஆசிப்பதுமாம். ஏனெனில் ஒவ்வொன்றின் ஆகாரமாகிறது அதனதன் சுபாவம் எதை விரும்புகிறதோ அதுவேயாம். கல்புடைய கேட்டுக்குக்காரணம் யாதெனில், அல்லாஹ்வின் ஆசையிலன்றி மற்றவர்களின் ஆசையில் அமிழ்ந்துவதேயாம். கல்புக்காகச் சரீரத்தைப் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் சரீரமானது சாகிறதாயும் கல்பானது சாகாமல் நிலைத்திருப்பதாயுமிருக்கிறது. கல்புடைய விஷயத்தில் சரீரமானது ஹஜ்ஜுக்காக மக்காயாத்திரை செய்கிற ஹாஜியின் விஷயத்தில் ஒட்டகம்போல் வாகனமாயிருக்கிறது. ஹாஜியின் தேவைக்கு ஒட்டகமென்பதன்றி ஒட்டகத்தின் தேவைக்கு ஹாஜி யென்பதில்லை. ஆயினும் கஃபாவுக்குப் போய்ச் சேருகிறவரையில் ஹாஜியானவன் ஒட்டகத்தைத் தீனியினாலும் தண்ணீரினாலும் போஷித்துக்காக்கக் கடமைப்பட்ட வனாயிருக்கிறான். ஆனால் இந்த போஷிப்புமிதமாயிருக்கவேண்டும். நாள்முழுவதும் அதற்குத் தீனிபோட்டுத் தண்ணீர் காட்டுவதிலும் அதைச் சிங்காரிப்பதிலும் பாராக்காயிருப்பானுகில் தூரவர்களான யாத்திரைக்காரர்களை விட்டுத் தூரப்பட்டவனுகிக் கேட்டை அனுபவிப்பான். இதுபோலவே மனிதனனவன் தன்னுடைய சரீரத்தின் பாதுகாப்புக்காக நாள்முழுவதும் ஆகாரம் தேடுவதிலும் அதற்குக் கெடுதிவராமல் அதைக்காப்பதிலுமே பொழுது போக்குவானுகில் தனது நற்பதவியை விட்டுத் தூரப்பட்டவனுயிருப்பான்.

துன்யாவில் சரீரத்துக்காக மூன்று வஸ்துக்கள் தேவையாயிருக்கின்றன. அவை:—ஊண், உடை, இடம் இவைகளேயாம்.

ஊணுகிறது சரீரத்துக்கு ஆகாரமாயும், உடையாகிறது (அதன்மானத்தையும் கூடி, குளிர்ச்சியிலுல் அதற்குண்டாகிற ஆபத்துகளையும் விட்டுக் காத்துக்கொள்கிற) போர்வையாயும், இடமாகிறது கூடி, குளிர்ச்சிகளையும் கேட்டைவிளைக்கின்ற மற்றும் காரணங்களையும் தடுக்கிற தடையாயுமிருக்கின்றது. சரீரத்தைக்காக்கும் பொருட்டு மனிதனுக்கு துன்யாவில் இந்த மூன்று வஸ்துக்கள் தவிர வேறொன்றும் தேவையில்லை. மேலும் துன்யாவின் மூலங்கள் இவைகளேயாம். கல்புடைய ஊணுகிய மஃரிபா ஏவ்வளவு அதிகமானாலும் நலமேயாம். சரீரத்துடைய ஊணுகிய தீனி மிதமிஞ்சினுல் கேட்டை விளைக்கும். ஆனல் அல்லாஹு தஆலா மனிதனில் இச்சையைப் படைத்தது எதற்கெனில், அவனேறும் வாகனமாயிருக்கிற சரீரத்துக்குக் கெடுதியுண்டாகாதபடி அதைக்காக்கும் பொருட்டு அதற்குவேண்டிய ஊண், உடை, இடம் இவைகளைத் தேடிக்கொள்ளவேயாம். (இச்சையில்லாமற் போனுல் அவன் எதையும் தேட முயலமாட்டான்) ஆனல் இந்த இச்சை தன் ஹத்துக்குமேல் மீறி அதிகத்தைத்தேடும் சுபாவமுள்ள தாய்ப் படைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இதை ஒரு ஹத்தில் நிறுத்தப் பொருட்டு புத்தியையும் படைத்தான். அந்த ஹத்துகளைக் காண்பிக்கும்படி நபிமார்கள் மூலமாய் ஷரீஅத்தை அனுப்பினுன்.

ஆனல், குழந்தைப் பருவத்தில் இச்சை அவசியமாகையால் அதை முதலில் உண்டாக்கி அதன்பிறகு புத்தியைப் படைத்தான். பின்பு இந்த இச்சையானது முதலில் வந்து குடியேறி மிகைத்து விட்டதாகையால் இதற்குப் பிந்திவந்த புத்திக்கும் ஷரீஅத்துக்கும் இது அடங்காமல் மீறுகின்றது. மீறவே மனிதனனவன் ஊண், உடை, இடம் இவைகளைத் தேடுவதிலேயே காலமுழுதும் பாராக்காயிருந்து தன்னை மறந்து போகிறுன். ஊண், உடை, இடம் இவை ஏன் தேவையாயின வென்பதையும், தான் இவ்வுலகத்துக்கு ஏன் வந்தான் என்பதையும் அறியாமலிருக்கின்றுன். ஆகிரத்துடைய தங்கரிப்பாகிய கல்புடைய ஊணை, அதாவது அல்லாஹு தஆலாவுடைய மஃரிபாவைத் தேடாமல் மறந்துபோனுன். இந்த விவரத்திலுல் துன்யா இன்னதென்றும் அதன் ஆபத்துகள் இன்னவை யென்றும் துன்யாவிலுல் நாடிய நோக்கம் இன்னதென்றும் நன்முய்த் தெரிந்து கொண்டாய். இப்போது துன்யாவுடைய கீமைகளையும் அதன் வேலைகளையும் தெரிந்து கொள்.

(பஸல்) அருமையானவனே! துன்யா வென்பது பூமியின்மே லுண்டாயிருக்கிற மூன்று வஸ்துக்களைக் குறிக்கும் பொருளேயாம். அவை:—மூலவர்க்கம், ஜீவவர்க்கம், தாதுவர்க்கம் என்பவைகளே. பூமி யானது குடியிருப்புக்கும் மேற்கண்ட தாவர, ஜீவ, தாதுக்கள் என்னும் மூவர்க்க உற்பத்திக்கும் இடமாயிருக்கிறது. மூலவர்க்கத்திற் சேர்ந்த கோதுமை, நெல் முதலியவை புசிப்புக்கும், ஜீவவர்க்கத்திற் சேர்ந்த மாடு, ஒட்டகம், குதிரை முதலியவை வேலைக்கும் புசிப்புக்கும் ஏறு வாகனத்திற்கும், தாது வர்க்கத்திற் சேர்ந்த இரும்பு, செம்பு, பித்தளை முதலியவை ஆயுதங்களுக்கும் தேவையா யிருக்கின்றன.

மனிதனனவன் தன்னுடைய கல்பை ஒரு பொருளின் ஆசை யிலும் தேட்டத்திலும் ஆக்குவானுகில் அதை சரிப்படுத்துவதற்காகச் சரீரத்தில் முயற்சிக்கிறான். ஆகவே அவன் தன் கல்பை துன்யா வுடைய ஆசையில் அமிழ்த்துவானுகில் அதனல் அது கேட்டை அடை வதற்குக் காரணங்களான அவா, உலுத்தத்தனம், பொறுமை, பகை முதலிய குணங்கள் கல்பில் பிறக்கின்றன. இக்காரியங்களின் சரீரத் தைப் பராக்காக்கினல் அதன் மூலமாய்த் தன்னை மறந்து துன்யா வுடைய காரியங்களின் கல்பு சிக்குண்டு அவற்றிலிருந்து நீங்கமுடியாத படி ஓரே பராக்காய் விடுகின்றன்.

துன்யாவுடைய மூலங்கள் எப்படி ஊண், உடை, இடம் என மூன்றாயிருக்கின்றனவோ அப்படியே அவற்றிற்கு வேண்டிய தொழில் களின் மூலங்களும் மூன்று யிருக்கின்றன. அவை:—பயிர்த் தொழில் நெசவுத் தொழில், கம்மாளத் தொழில் இவைகளேயாம். என்கினும் இவை ஒவ்வொன்றுக்கும் எத்தனையோ கிளைகளிருக்கின்றன. அதெப் படி யென்றல் சிலர் அத்தொழில்களுக்கு வேண்டிய பொருள்களைச் சித்தம்செய்து வைக்கிறார்கள், உதாரணமாக:—பஞ்சு கொட்டுகிற வனும் நூல் நூற்பவனும் நெசவுக்காரனுக்கு வேண்டிய சாமான்களைத் தயார் செய்கிறார்கள்; தையற்காரனே நெய்து முடிந்த ஆடையைத் தைத்து முடிக்கிறன்; இவர்களெல்லோருக்கும் மரம், இரும்பு, தோல் முதலியவற்றல் ஆயுதங்களும் கருவிகளும் தேவையாயின. ஆகவே தச் சனும் கருமானும் கம்மானும் வெளிப்பட்டார்கள். வெளிப்படவே இவர்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் மற்றொரு வகுப்பாருக்கும் மற்றொரு வகுப்பாருடைய உதவி வேண்டியதாயிற்று. ஏனென்றல், அவரவர்களும் தனியாய்த் தங்கள் வேலையைச் செய்து கொள்ளக் கூடா தவர்களா யிருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் எல்லாரும் கூட்டமாய்ச் சேர்ந்தார்கள். தையற்காரன் நெசவுக்காரனுடைய வேலையையும் கருமா னுடைய வேலையையும் செய்கிறன். கருமான் அவ்விருவருடைய வேலை யைச் செய்கிறன். இப்படியே ஒவ்வொருவனும் மற்றொருவனுடைய

காரியத்தில் உதவியா யிருக்கிறான். ஆனால் ஒவ்வொருவனும் தன் பாத்தியம் மற்றவனுக்குக் கிடைக்கப் பொருந்துகிறதில்லை யாதலால் இவர்களில் விவகாரமும் வியாச்சியமும் ஏற்பட்டன. பின்பு இவற்றிற்காக இன்னும் மூன்று வேலை அவசியமாயின. முதலாவது அரசும் அதிகாரமும், இரண்டாவது நியாயத் தீர்ப்பும் நீதி செலுத்தலும், மூன்றுவது இவற்றின் சட்ட திட்டங்களைத் தெரிவிக்கின்ற பிக்ஹு என்னும் நீதி சாஸ்திரமுமேயாம். இவை மற்றும் தொழிலாளிகள் செய்வது போல் கையாற் செய்யப்படும் தொழில்களல்ல வென்றாலும் இவைகளும் ஒவ்வொரு தொழிலா யிருக்கின்றன. இக்காரணங்களாலேயே துன்யாவுடைய வேலைகள் மிகுத்து, ஜனங்கள் தங்களை உற்றுணர எதுவில்லாமற் போயிற்று.

இந்த எல்லாக் கஷ்டங்களுக்கும் ஊண், உடை, இடம் இம்மூன்றே காரணமென்றும் இம்மூன்று வஸ்துகளுக்காகவே இந்த எல்லா இம்சைகளும் உண்டாயின வென்றும், இம்மூன்றும் சரீரத்துக்காகத் தேவையாயின வென்றும், சரீரம் கல்புக்கு வாகனமா யிருக்கும் பொருட்டு அவசியமாயிற்றென்றும், கல்பானது ஹக்குடைய மஃரிபாவுக்காக அளிக்கப்பட்டிருக்கிற தென்றும், அறியாமல், தன்னையும் கஃபாவையும் சபரையும் மறந்து நாள் முழுதும் ஒட்டகத்தின் பாதுகாப்பி லிருந்து ஹாஜியைப் போல் இவர்கள் தன்னையும் அல்லாவையும் மறந்து எப்போதும் சரீரத்தின் பாதுகாப்பிலேயே இருந்து விட்டார்கள். மேற் கூறப்பட்டது தான் துன்யா வென்பதின் உண்மை.

ஆதலால், இதில் எவன் தன் சுகத்தை விடாமலும் ஆகிரத்தின் மேல் நாட்டம் வைக்காமலும் தேவைக்கு மேல் அதிகமாய் சம்பாதிக்கும் பொருட்டு துன்யாவுடைய காரியங்களை ஏற்றுக் கொண்டு மிருக்கிறானே அவனுக்கு துன்யா வென்பதின் சங்கதி ஒன்றும் தெரியாது. இந்தத் தெரியாமைக்கும் காரணம் யாதெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் "இந்தத் துன்யாவாகிறது ஹாரூத் மாரூத்தினும் பெரிய வஞ்சகியா யிருக்கிறது அதை விட்டு தப்பித்துக் கொள்ளுங்கள்" என்று திருவுளமா யிருக்கிறார்கள். அதன் வஞ்சகமே மேற்கண்ட தெரியாமைக்கு காரணமா யிருக்கிறது. துன்யாவினுடைய வஞ்சகம் இப்படியா யிருப்பதால், அதன் வஞ்சகத்தையும் அதனுடைய செய்கையின் உபமானத்தையும் ஜனங்களுக்குக் காட்டுவது கடமையாயிற்று. இப்போது அதன் உபமானங்களை அறிவாகிய காதைக் கொண்டுக்கேள்.

(பஸல்) அருமையானவனே! துன்யாவுடைய முந்தின வஞ்சகம் யாதெனில் அது எப்போதும் உன்னோடிருப்பதென்று நீ எண்ணிக் கொள்ளும்படி தன்னை உனக்குக் காட்டுகின்றது உண்மை

யில் அப்படியல்ல. மேலும் உன்னைவிட்டு மெள்ள மெள்ள நகர்ந்து ஓட்டம் பிடிப்பதா யிருக்கிறது. இந்த வஞ்சகத்துக்கு உபமானமாக நிழலைச் சொல்லலாம். நிழலாகிறது நிலையா யிருப்பதுபோல் தோன்று கிறது; ஆயினும் அது ஓயாமல் நகர்ந்து கொண்டே யிருக்கிறது. இது போலவே உன் வயதானது மெள்ள மெள்ளச் சென்றுகொண்டே யிருக்கிறது. நிமிஷந்தோறும் அது குறைந்து கொண்டே போகின்றது. இப்படி உன்னைவிட்டு ஓடுகிறதாயும் உன்னைப் பிரயாணப்படுத்துகிற தாயு மிருப்பதே தன்யாவாம். இது உனக்கு தெரியவில்லை.

இரண்டாவது:—அதன் வஞ்சகமும் அதற்கு உபமானமும் யாதெனில் அது உன்னைத் தன்னுடைய ஆசையில் அமிழ்த்திக் கொள் ளும் பொருட்டு உனக்குப் பிரியங் காட்டுகின்றது. அது உன்னை டிணங்கி யிருக்குமென்றும் மற்றவரிடம் போகாதென்றும் நீ நினைத்துக் கொள்ளும்படி வெளிப்படையில் காட்டுகின்றது. பின்பு திடீரென்று உன்னை விட்டு நீங்கி உன்பகைவனிடத்தில் போய்விடுகின்றது. இதற்கு உபமானம் எப்படியெனில், ஆடவர்களின் மனதில் ஆசையை மூட்டி அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய்க் கொலை செய் கிற பாதகியான ஒரு வேசியோ லென்க. ஈஸா அலைஹிஸ்ஸலா மவர் கள் தங்கள் முகாஷபாவில் தன்யாவை ஒரு கிழவியின் ரூபத்தில் கண்டு அதனிடத்தில் உனக்கு எத்தனை புருஷர்க ளிருக்கிறார்களென்று கேட்டதற்கு எண்ணிறந்த புருஷர்க ளுண்டென்று சொல்லிற்று. பின்பு ஈஸா அலைஹிஸ்ஸலாம் அந்தப் புருஷர்க ளெல்லாம் இறந்து போனார்களா? அல்லது உன்னைத் தலாக்கு சொல்லி விட்டார்களா? என்று கேட்க, அல்ல, அல்ல; நானே அவர்க ளெல்லாரையும் கொன்று போட்டேனென்று சொல்லிற்று. அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொன்னதாவது:—இவ்விதமாக நீ மற்றவருக்குச் செய்யும் நடக்கை யைக் கண்டிருந்தும் உன்னை விரும்புகிறார்களே! பயந்து அறிவை அடைகிறார்களில்லையே! அந்த மூடர்களைப்பற்றி ஆச்சரியப் படுகிறேன்! اللهم أعصمنا من سخرها ஆண்டவனே! எங்களைத் தன்யாவுடைய வஞ்சகத்தில் நின்றும் காத்துக் கொள்.

மூன்றாவது:—அதன் வஞ்சகமும் உபமானமும்: அறிவீனன் கண்டு ஏமாறும்படி அது தன் வெளிக் கோலத்தை அலங்கரித்துத் தனக்குள்ளே யிருக்கிற பலாவையும் துன்பத்தையும் மூடிக்கொண் டிருக்கிறது. இது அந்தக்கெட்ட ஒரு கிழவியானவள் தன் முகத்தை மூடிக்கொண்டு ஆடையாபரணங்களால் தன்தேகத்தை அலங்கரித்துக் காட்டுவதற்குச் சமானமா யிருக்கிறது. யாராவதொருவன் தூரத்தி லிருந்து அவளைப் பார்க்கும்போது அவளுடைய தேக சிங்காரத்தால் அவள்மேல் மோகிக்கிறான். அருகிற்சென்று முகமூடியை நீக்கிப்

பார்த்தால் வெட்க மடைகிறான். ஹதீதில் வந்திருக்கிறதாவது:— கியாமத்து நாளில் துன்யாவை அவலக்ஷணமான ஒரு கிழவியின் கோலத்தில் கொண்டு வருவார்கள். அவள் கண்கள் பச்சை நிறமாயும் பற்கள் வெளியே புறப்பட்டுமிருக்கும். ஜனங்கள் அவளைப் பார்ப்பார் களாகில் ஆ! நாங்கள் அல்லாவிடத்தில் காவல் தேடுகிறோம், அசங்கித மான கோலத்தையுடைய இவள் யார்? என்று கேட்பார்கள். அதற்கு ஜவாபாக ஓ ஜனங்களே! எதற்காக நீங்கள் ஒருவருக்கொருவர் பொறு மையும், பகையும், கொலையும், குடல்வாய் முறிவும் செய்து கொண் டிருந்தீர்களோ இன்னும எதனுடைய வஞ்சகத்தில் அகப்பட்டிருந்தீர் களோ அந்த துன்யாதான் இதுவென்று சொல்லப்படும்; பின்பு அதை நரகத்தில் போடுவார்கள்; அப்போது அது என் ஆண்டவனே! என்னை டிருந்த என் நேசர்களெங்கே யிருக்கிறார்களென்று கேட்கும். அல் லாஹ் தஆலா அவர்களையும் நரகத்தில் போட்டு விடும்படி உத்திரவு செய்வான் என்பதே.

இன்னுமோ ருபமானம்:—ஒருவன் ஆதியிலிருந்து அந்தம் வரை யில் எத்தனை நாட்களாகின்றன வென்றும், அதன் காலம் எவ்வளவா கிறதென்றும், எண்ணிப் பார்ப்பானுகில், துன்யாவாகிறது முசாபிர்கள் நடக்கும் பாதைபோ லிருக்கிறதென்றும், அதன் துவக்கம் தொட்டி லாயும் அதன் முடிவு கபராயு மிருக்கிற தென்றும் இவ்விரண்டுக்கும் நடுவே எத்தனையோ மன்ஜில்களிருக்கின்றன வென்றும் அவனுக்குத் தெரியவரும். ஒரு வருஷமானது ஒரு மன்ஜில் போலும், ஒரு மாத மானது ஒரு காதம் போலும், ஒரு நாளாகிறது ஒரு மயில் போலும், ஒரு மூச்சாகிறது ஒரு அடி போலு மிருக்கிறது. அவன் எப்போதும் நடந்துகொண்டே யிருக்கிறான். பாதையில் நின்று ஒருவனுக்கு ஒரு காதமும், ஒருவனுக்கு அதிலும் கொஞ்சமும், ஒருவனுக்கு அதிகமும் மீதியிருக்கிறது. இவன் எப்போதும் இங்கேயே இருக்கலாம் என்கிற எண்ணத்திலல் சும்மா உட்கார்ந்திருக்கிறான். பத்து வருஷம் வரை யில் தனக்குத் தேவை யில்லாத வஸ்துக்களுக்காக இப்போதே பிரயத் தனம் செய்கிறான். இவனே பத்து நாளையில் மாண்டு மண்ணுக்குள் மறையப் போகிறான்.

இன்னுமோ ருபமானம்:—துன்யாவுடைய சபலத்தில் ஆகிரத்தில் உண்டாகப் போகிற மான பங்கத்தையும் மனமடிவையும் குறிக்கும். அதாவது, ஒருவன் நல்ல பசையும் ருசியுமான ஒரு தினையை அதிக மாய்த் தின்றான். அதனால் அவனுடைய வயிறு கெட்டுப்போயிற்று. பின்பு அஜீரணத்தினால் வாந்தியும் வயிற்றுக் கழிச்சலும் உண்டாகி ஜனங்களில் அவமானப் பட்டான். கடைசியில் அவன் கைசேதப்பட்டு ஆ! தின்ற ருசிபோய் அவமானம் தங்கிவிட்டதே என்று வியாகூலப்படு

கிறான். எப்படி அதிக ருசியான பண்டங்களின் மலமானது அதிக துர்க்கந்தமுள்ளதா யிருக்கிறதோ அப்படியே துன்யாவில் அடைந்த இன்பம் எவ்வளவோ அவ்வளவே அதன் முடிவு கெட்டதா யிருக்கும். சக்ராத்தின் போது இது சங்கதி தானே வெளியாகும். அதெவ்வா றெனில், ஒருவனுக்கு தவுலத்தும், தோட்டம் துரவுகளும், அடிமைப் பயல்களும், வெள்ளாட்டிகளும், பொன் வெள்ளி நாணயங்களும் அதிகமா யிருந்தால் அவனுக்கு சக்ராத்தின் போது அவைகளை விட்டுப் பிரிவதால் உண்டாகிற வியாகூலமானது கொஞ்ச ஆஸ்தி வைத்திருந்த வனுடைய வியாகூலத்திலும் அதிகமா யிருக்கும். அந்த வியாகூலம் மரணத்தினால் நீங்கிப் போகிறதில்லை, மேலும் அதிகரிக்கின்றது. ஏனென்றால் துன்யாவுடைய ஆசையானது கல்பில் உறைந்த குணமா யிருப்பதாலும் அந்தக் குணத்தோடு கல்பு சாகாமல் நித்தியமா யிருப்ப தாலுமேயாம்.

இன்னுமோர் உபமானம்:—துன்யாவாகிறது, முதலில் வரும்போது மிகவும் சிறியதாய்த் தோன்றுகிறது. இதன் வேலைகள் அதிகரிக்கா வென்று ஜனங்கள் நினைக்கிறார்கள், ஆனால் அந்த ஒரு வேலையுடன் அதற்குச் சம்மந்தமான நூறுவேலைகள் உண்டாகின்றன, மனிதனுடைய வய்து முழுமையும் அதில் கழிந்து போகின்றது. ஹஸரத்து ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் துன்யாவைத் தேடுகிறவன் கடல் நீரைக் குடிப்பவன் போலாகிறானென்று திருவுளமா யிருக்கிறார்கள் அதை எவ்வளவு அதிகமாய்க் குடிக்கின்றானோ அவ்வளவே தாகமேலிடும். அதைக் குடித்துக் குடித்துக் கடைசியில் மரித்துப் போவான். ஒரு போதும் அவன் தாகம் தீருகிறதில்லை. இன்னும் நீரில் இறங்குகிறவன் கட்டாயமாய் நினைகிறது போல் துன்யாவுடைய காரியங்களில் பிரவே சிக்கிறவன் அகத்தியம் அசுத்தனாகுவான் என்று நபி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

இன்னுமோர் உபமானம் :—துன்யாவில் வருகிறவன் விருந்தளிக் கும் ஒரு கனவானுடைய விருந்தாளியைப் போலிருக்கிறான். விருந் தளிக்கும் அந்தக் கனவானோ எப்போதும் விருந்துண்பவர்களுக்காக வீட்டை அலங்கரித்து வைக்கின்றான், அடிக்கடி விருந்து செய்கிறான். விருந்துண்பவன் வாசனை யடையும் பொருட்டு அவனுக்கு முன்னால் பொன் தட்டில் அகிற்கட்டை முதலிய வாசனைத் திரவியங்களோடு வெள்ளித் தூபகலசத்தையும் கொண்டு வந்து வைக்கின்றான். எவன் அந்த விருந்தளிப்பவனுடைய வழக்கத்தை அறிந்தவனும் புத்திசாலி

யாயு மிருக்கிறுனே அவன் அகிற்கட்டை முதலிய வாசனைத் திரவியங் களைத் தூபகலசத்திலிட்டு பரீமள மடைந்து தட்டத்தையும் தூப கலசத்தையும் வைத்து விட்டு நன்றி யறிதலான புகழ்ச்சி கூறிப் போய் விடுகின்றுன். எவன் மூடனு மிருக்கிறுனே அவன் இந்தத் தட்டத் தையும் தூப கலசத்தையும் அகிற்கட்டை முதலிய வாசனைத் திரவியங்க ளோடு தனக்குக் கொடுக்கிறுர்க ளென்றும் போகும் போது கொண்டு போகலா மென்றும் எண்ணிக் கொள்ளுகிறுன். வெளியே புறப்படுகிற வேளையில் அவனிடத்தி லிருந்து அதைப் பிடுங்கிக் கொண்டால் துக்கப் பட்டுத் தூஷணம் பேசுகிறுன். இது போலவே துன்யாவும் முசாபிர் களின் தர்மத்துக்காக வழியில் கட்டப்பட்டிருக்கிற ஒரு அன்னசத்தி ரமா யிருக்கிறது. அதில் போஜனம் அருந்திப் புறப்பட வேண்டுமே தவிர மற்றப்படி அந்தச் சத்திரத்தி லிருக்கும் சாமான்களில் ஒன்றை யும் இச்சிக்கலாகாது.

இன்னுமொன்று :—துன்யாவுடைய காரியங்களிற் பிரவேசித்து ஆகிறத்தை மறந்து போகிறவர்களைப் பற்றின உபமானம் :—இவர்கள் ஒரு கப்பலில் ஏறின ஜனங்கள் போல் ஆகிறுர்கள். அந்தக் கப்ப லானது ஒரு தீவிற் போய் சேர்ந்தது. அதிலிருந்தவர்கள் எல்லாரும் மலஜல உபாதை கழிப்பதற்காகவும் தேகசுத்தி செய்வதற்காகவும் அத்தீவில் இறங்கினுர்கள். அப்படி இறங்கும் போது கப்பற்காரன் சத்தமிட்டு ஓ ஜனங்களே! நீங்கள் அதிக நேரம் தாமதம் செய்ய வேண் டாம், தேக சுத்தம் தவிர வேறு காரியங்களில் பாராக்காகாமல் உடனே வந்து சேருங்கள், கப்பல் சிக்கிரத்தில் பிரயாணமாகு மென்று சொல்லி விட்டான். பின்பு இந்த ஜனங்கள் அத்தீவிற் போனுர்கள். அவர்களில் பெரிய புத்திமான்களா யிருந்தவர்கள் சிக்கிரத்தில் தேகசுத்தி செய்து கொண்டு திரும்பி வந்தார்கள். கப்பலில் ஒருவரு மில்லாமல் இடம் காலியாயிருக்கக்கண்டு நல்லஇடம் பார்த்து உட்கார்ந்து கொண்டார்கள். இன்னும் சில ஜனங்கள் அந்தத் தீவின் புதுமைகளைப் பார்த்து மயங்கி தீவைச் சுற்றி யுலாத்தவும், அவ்விடத்திலுள்ள நல்ல நல்ல புஷ்பங்களை யும், நல்ல இராகம்பாடுகிற பக்ஷிகளையும், சிவந்த நிறமான ஒருவிதக் கற் களையும் பார்த்துக் கொண்டிருந்து பின்பு திரும்பி வந்தார்கள். கப்பலில் அவர்களுக்கு இடம் தாராளமாய் அகப்படவில்லை. நெருக்கமும் இருட்டுமுள்ள இடத்தில் வருத்தத்தோடு உட்கார்ந்தார்கள். இன்னும் சில ஜனங்கள் உலாத்தினதும் வேடிக்கை பார்த்ததும் போதாதென்று அவ்விடத்தி லிருந்த கல்ல வர்ணமான பொடிகற்களையும் வாரி கட்டிக் கொண்டு திரும்பி வந்தார்கள். கப்பலில் அவர்களுக்கே இடமில்லா

மல் நெருக்கமான இடத்தில் உட்கார்ந்தார்களாதலால் அந்தக்கல் மூட்டைகளைத் தங்கள் தோள்மீது சுமக்கநேரிட்டது. இரண்டுநாள் சென்று அந்தக் கற்களின் நிறம்போய் கருப்பாய்விட்டதுந் தவிர அதில் நின்றும் ஒருவிதமான நாற்றமும் வீசத்தொடங்கினது. அதைப் போட்டு விடவும் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் மனம் நாணிவெட்கத்தை யடைந்தார்கள். சுமையும் தோளை விட்டுக்கழியவில்லை. இன்னும் சில ஜனங்கள் அந்தத்தீவின் புதுமை களைப் பார்ப்பதில், கப்பல் பிரயாணப்பட்டுப் போய்விடுகிறவரையில் சுற்றியுலாவினர்கள், கப்பற்காரன் கூவிச்சொன்னதை அவர்கள் இல க்ஷியம் செய்யவில்லை. கடைசியில் அந்தத்தீவில் தங்கி, சிலர் பசியினால் மாண்டுபோனர்கள், சிலரைத் துஷ்டமிருகங்கள் கொன்றுபோட்டன.

இவ்வுபமானத்தில் கூறியிருக்கிற நான்கு கூட்டங்களில் மூந் தினவர்கள் பேணுதலுள்ள மூமீன்களுக்கு ஒப்பாவார்கள்; கடைசி யான கூட்டம் காபிர்களுக்குச் சமானமாவார்கள். இவர்கள் தன்னையும் அல்லாஹ்வையும் ஆகிரத்தையும் மறந்து துன்யாவில் அமிழ்ந்தினர்கள். استحبوا الحيوة الدنيا على الاخرة துன்யாவுடைய வாழ்க்கையை ஆகிறத்தினும் மேலாக உவந்தார்கள். மத்திய இரண்டு கூட்டங்களும் மூமின்களில் பாவிகளைப்போலாவார்கள். இவர்கள் ஈமானுடைய அடி வேரைக்காத்துக் கொண்டார்கள். ஆயினும் துன்யாவை விடவில்லை. ஒரு கூட்டம் ஏழ்மைத் தனத்தில் இன்பம் பாராட்டினர்கள். மற்றொரு கூட்டம் இன்பம் பாராட்டினதுடன் ஏராளமான பொருளைச் சேகரித் துச் சுமை கனத்தவர்களாய்ப்போனர்கள்.

(பஸல்) அருமையானவனே! துன்யாவுடைய பழிப்பைப்பற்றி இப்போது நீ கேட்டுவந்த சங்கதிகளால் துன்யாவில் உள்ளவைக ளெல்லாம் கெட்டவை யென்றும் நினைக்காதே; மேலும் துன்யாவுடன் சம்பந்த மில்லாத அநேக வஸ்துக்கள் துன்யாவிலிருக்கின்றன. உதா ரணமாக:—இல்மு, அமல் இவை துன்யாவில் தானுண்டாகின்றன. இவை மனிதனோடு ஆகிறத்துக்குப் போகின்றன. இல்மானது அது தானாகவே மனிதனோடிருக்கும். அமலாகிறது அது தானாகவே மனி தனோடிராது. என்கினும் அதனாலுண்டாகிய ஒரு கூறு இருக்கும் அந்த கூறு என்பது இருவகைப்படும். ஒன்று பாவங்களை விட்டதினால் உண்டாகிய மனச்சுத்தமும் மற்றொன்று எப்போதும் இபாதத்து செய்ததினாலுண்டாகிய திக்ரின் ஆசையுமாம். இவை யெல்லாம்

மவுத்துக்குப்பின் நிலைத்திருக்கிற நற்கிரியைகளா யிருக்கின்றன. والباقيات الصالحات خير عند ربك நிலைத்திருக்கிற நல்ல அமல் கள் உம்முடைய ரப்பிடத்தில் கைரானவை என்று அல்லாஹ் தஆலா திருவுளமாயிருக்கிறான்.

இல்மினால் உண்டாகிற இன்பமானது அல்லாஹ்வுடைய திகுரு முனாஜாத்துகளின் இன்பத்திலும் மேலிட்டதாயிருக்கும், இந்த இன் பம் துன்யாவில் தானுண்டாகிறது, என்கினும் துன்யாவுடன் இதற் குச் சம்பந்தமில்லை, ஆகையால் இன்பங்களெல்லாம் கெட்டவை யென்று நினைக்கலாகாது. மேலும் எது நிலைத்திராதோ அந்த இன் பந்தான் கெட்டது. நிலைத்திராத இன்பமும் எல்லாம் கெட்டதல்ல. இதுவும் இருவகைப்படும். ஒன்று தீனுடைய காரியங்களுக்குச் சார் பெனக் கருதப்பட்ட இன்பமும், மற்றொன்று அப்படிக் கருதப்படா ததுமாம். உதாரணமாக:—நிக்காஹ், மிதமான ஊண், உடை, இடம் இவற்றால் உண்டாகிற இன்பம் துன்யாவுடன் சம்பந்தப்பட்டதாயும், மவுத்துக்குப் பிறகு நிலைத்திராமல் அழிந்துபோவதாயு மிருக்கிறது. என்கிலும் ஆகிறத்துடைய காரியத்துக்கும் இல்மு அமல்களுக்கும் மூமின்கள் பல்குவதற்கும் உதவியாயிருக்கிறது. ஒருவன் தீனுடைய காரியங்களில் மனவோர்மை யுண்டாகிறதை நிய்யத்து செய்து மேற் கண்டவைகளை மிதமாகத் தேடிக்கொள்வானுகில் அவன் துன்யா தாரல்ல.

ஆனதால், தீனை நாடாமல் மறதியாயும் பெருமையாயும் இவ்வுல கத்துடன் மனஞ் சார்தலாயும் ஆகிரத்தை இலேசா யெண்ணியும் தேடப்படுகிற துன்யாவே கெட்டதாயிருக்கிறது. இதற்காகவே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

الدنيا ملعونة وملعون ما فيها الا ذكر الله وما والاه

துன்யாவும் அதிலுள்ளவைகளும் லஃனத்து பெற்றதாயிருக்கும் அல்லாஹ்டைய திகுரும் அதற்கு உதவி யிருப்பதும் நீங்கலாக என்று திருவுளமாயிருக்கிறார்கள். துன்யா இன்ன தென்பதையும் அதில் நாடப்பட்டது இன்னதென்பதையும் குறித்து இவ்விடத்தில் இவ்வளவு சொன்னது போதும். மற்றவை இந்தக்கிதாபின் மூன்று வது றுகுனுகிய முஹ்லிகாத்தில் சொல்லப்படும்.

———

நான்காவது உன்வான்.

ஆகிறத்தை அறிவது.

அருமையானவனே! ஒருவன் ஆகிறத்து இன்னதென்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவன் மவுத்து இன்னதென்று தெரிந்து கொள்ளவேண்டும். மவுத்து இன்னதென்று அறியவேண்டுமானால் ஹயாத்து இன்னதென்று அறியவேண்டும். ஹயாத்தை அறிய வேண்டுமானால் ரூஹை அறியவேண்டும். ரூஹை அறிவதற்கு நபுசை அறியவேண்டும். நபுசை அறிவதைப் பற்றின சில விவரம் மேலே சென்று விட்டது.

அறிந்துகொள்:-மனிதன் இரண்டு வஸ்துக்களால் சேர்க்கப் பட்டிருக்கிறான். ஒன்று ரூஹு; மற்றொன்று சரீரமாகிய கூடு. ரூஹானது ஏறுகிறவன் போலும், சரீரமானது ஏறப்படும் வாகனம் போலுமிருக்கிறது. ரூஹுக்குச் சரீர சம்பந்தத்தினால் ஆகிரத்தில் ஒரு பதவி கிடைக்கும். அதாவது சொர்க்கம் போகும், அல்லது நரகம் புகும். இன்னும் ரூஹுக்குச் சரீர சம்பந்த மில்லாமல் அதன் சுயஜாத்தினாலும் ஒரு பதவியுண்டு, சரீரமில்லாமலும் அதற்குச் சொர்க்க நரகங்களும் நற்பதவி தீர்ப்பதவிகளு மிருக்கின்றன. அப்படிச் சரீர சம்பந்தமன்றி ரூஹுக்கு மாத்திரம் கிடைக்கிற இன்ப சுகங்களுக்கு ஆன்ம சொர்க்க மென்றும் அதற்குண்டாகிற கஷ்ட நஷ்டங்களுக்கு ஆன்ம நரகமென்றும் நாம் சொல்கிறோம். சரீர சம்பந்தமான சொர்க்க நரகங்கள் பிரசித்தமாயிருக்கின்றன. சொர்க்கத்தில் ஆறுகள், ஹூறுகள், விருக்ஷங்கள், மெத்தை மாளிகைகள், புசிப்புக்கு நல்ல மதுரமான பதார்த்தங்கள், பானம் பண்ணுவதற்கு அதிக இன்பமான குடிப்புகள் முதலியவைகளிருக்கின்றன. நரகத்தில் பாம்பு, தேள், கள்ளி முதலியவைகளிருக்கின்றன. சொர்க்க நரகங்களுடைய வர்ணிப்பு குர்ஆனிலும், ஹதீதுகளிலும் தெளிவாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் அதை அறிந்து கொள்ளக்கூடும். அதன் விபரம் இஹ்யா உலூமுத்தீன் என்னும் கிதாபில் திருநூல் மவுத்தென்னும் பாபில் சொல்லப் பட்டிருக்கிறது.

இவ்விடத்தில் மவுத்து இன்னதென்றும் ஆன்ம சொர்க்க நரகங்களின் விவரத்தையும் எழுதுவோம். ஏனென்றால் இது சங்கதி ஒவ்

வொருவருக்கும் தெரிந்திருக்காது. அல்லாஹு தஆலா ஹதீது குதுசியில் என்னுடைய சாலிஹான அடியார்களுக்கு யாதொரு கண் பார்க்காததும் யாதொரு காது கேட்காததும் மனிதனுடைய கல்பின் பேரில் ஊசாடாததுமான நிஃமத்துகள் சித்தமா யிருக்கின்றன வென்று திருவுளமா யிருப்பது ஆன்ம சொர்க்கத்தை குறித்ததேயாம்.

اعدت لعبادي الصالحين ما لا عين رات ولا
اذن سمعت ولا خطر علي قلب بشر

"கல்புக்குள்ளே யிருந்து ஆலமுல் மலக்கூத்தென்னும் ஆன்ம லோகத் தின் பக்கம் ஒரு வழியிருக்கிறது. அதனல் இந்தச் சங்கதிகள் வெளி யாகின்றன. இதில் யாதொரு ஐயம் திரிபுகளிருக்கிறதில்லை. அவன் எவனுக்கு இந்தக் கல்புவழி திறக்குமோ அவன் ஆகிறத்துடைய நற் பதவி தூப்பதவிகளைச் சந்தேகமின்றி தெரிந்து கொள்ளுகிறான்.

அப்படி தெரிந்து கொள்வது கேள்வி மூலமாயுமல்ல, மேலும் பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்றது. எப்படி வைத்தியனனவன் இவ்வுல கத்தில் சரீர சுக துக்கங்களாகிய சவுக்கியத்தையும் பிணியையும் அறிந் திருக்கிறானே இன்னும் அதற்கு மருந்து, பத்தியம், அதிகம் புசித்தல், பத்தியம் தவிர்த்தல் போல் சில காரணங்களு மிருக்கின்றனவோ. அப் படியே ரூஹுக்கும் சுக துக்கங்களுண்டென்று முஷாஹதாவினல் தெரிய வருகிறது. மஃரிபத்துல் இபாதத்தும் அதன் சவுக்கியத்துக்குக் காரணமான அவிழ்தமா யிருக்கிறது. அறிவின்மையும், பாவமும் அதைக் கொல்லுகிற நஞ்சா யிருக்கிறது.

இந்த இல்மு மிக அருமையானது அநேக உலமாக்கள் இதை மறந்தவர்களாய் மாத்திரமல்ல, நிராகரிக்கிறவர்களாயு மிருக்கிறார்கள். சரீர சம்மந்தமான சொர்க்க நரகங்களே மாத்திரமே இவர்கள் அறிந் திருக்கிறார்கள். ஆகிரத்திடைய விசாரணையில் இவர்கள் கேள்வி மூல மாயும் தக்லீதினலும் தெரிந்து கொண்டார்களே அதையன்றி வேறொன் றையும் அறியவில்லை. நாம் இந்த பயானைக் குறித்து திருஷ்டாந்தங் களுடன் அறபி பாஷையில் கிதாபுகள் எழுதி யிருக்கிறோம். ஆனல், எவன் புத்திமானயும் பாரபக்ஷம் முதலிய அழுக்குகளை விட்டு மனஞ் சுத்தமானவனயும் இருக்கின்றானே அவன் இந்த வழியை அடைவதற் கும் ஆகிறத்துடைய சங்கதி அவன் மனதில் அமைவதற்கு போதுமான அளவாய் சில அறிவுகளை இந்த கிதாபில் எழுதுகிறோம்.

(பஸல்) மவுத்து இன்னதென்று அறிய நாடுவாயாகில் அறிந்து கொள்: மனிதனுக்கு இரண்டு ரூஹுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று, மற்றும் ஜீவராசிகளுடைய ரூஹைச்சேர்ந்தது. அது ரூஹு ஹைவானியென்று சொல்லப்படுகிறது. ரூஹுஹைவானிக்கு இடம் இருதய கமலமாயிருக்கும். இருதய கமலமென்பது மார்பின் இடது பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கிற ஒரு சதைக்கட்டியாம். ரூஹு ஹைவானியென்பது சுபாவம் சரியானதும் அதிநுட்பமானதுமான ஒரு ஆவியாயிருக்கிறது. அந்த ஆவியானது சரீரத்தின் அக்லாத்து என்னும் உதிரவாத பித்த சிலேத்துமங்களால் உண்டாகின்றது. இந்த ஆவியாகிய ரூஹானது இருதயத்தில் நின்றும் புறப்பட்டு நரம்புகள் வழியாய்த் தலைமூளைக்கும் மற்றும் உறுப்புகளுக்கும் செல்லுகின்றது. ஐயறிவுகளுடையவும் அசைதல் உடையவுமான சக்திக்கு இதுவே ஆதாரம். இது தலைமூளைக்குச் செல்லுமாகில் அதன் கூடு தணிந்து மிதமாகின்றது. அதனால் கண்ணானது பார்க்கும் சக்தியையும் காதானது கேட்கும் சக்தியையும் அடைகின்றது. இது போலவே மற்றும் பொறிகள் அதனதன் தொழிலுக்குரிய சக்தியைப் பெறுகின்றன.

இந்த ரூஹுக்கு உபமானமாகிறது விளக்கின் ஒளிபோலாகும். எப்படியென்றால் விளக்கொளியானது வீட்டில் வியாபிக்கின்றது. அது எங்கெங்கே செல்லுகின்றதோ அங்கங்கே வீட்டின் சுவர்கள் வெளிச்சமடைகின்றன. பின்பு எப்படி விளக்கின் வெளிச்சமானது அல்லாஹு தஆலாவுடைய வல்லமையினால் சுவரின்மேல் வெளியாகிறதோ அப்படியே இந்த ரூஹுடைய குணத்தினால் கண், காது, முதலிய எல்லா உறுப்புகளிலும் பார்வை, கேள்வி முதலிய சக்திகள் உண்டாகின்றன. யாதொரு நரம்பில் முடிச்சு விழுந்துபோனால் அந்த முடிச்சுக்கு அப்புறமிருக்கிற பாகம் தொழிலற்றும் திமிர்த்தும் போகின்றது. அறிவும் இயக்கமும் அதில் இருக்கிறதில்லை. வைத்தியன் தன் சிகிச்சையினால் அந்த முடிச்சை அவிழ்க்கத்தான் பிரயாசைபடுகிறான். இன்னுமொருவாறு இந்த ரூஹாகிறது விளக்கின் சுடர் போலும், இருதய கமலமானது விளக்கின் திரிபோலும், ஆகாரமானது விளக்கின் எண்ணெய்போலு மிருக்கிறது. எப்படி எண்ணெய் வார்க்காததினால் விளக்கு நூர்ந்துபோகிறதோ அப்படியே ஆகாரம் அருந்தாததினால் அந்த ரூஹின் சுபாவம் கெட்டு மனிதன் மாண்டுபோகிறான். இன்னும் எப்படி அதிக நாள் எண்ணெயிலூறி அழுக்கேறிய திரியானது பின்பு எண்ணெயை ஏற்கின்றதில்லையோ அப்படியே இருதயமும் முதிர்வயதினால் ஆகார மேற்காததாய்ப்போகிறது. இன்னும்

எப்படி எண்ணெயும் திரியுமிருந்தும் விளக்கின்மேல் யாதொன்றைத் தட்டுகிறதினால் அது நூர்ந்துபோகின்றதோ அப்படியே மனிதனுக்கு யாதொரு பெரிய காயம்பட்டால் அவன் மடிந்துபோகின்றான்.

இன்னும் இந்த ரூஹின் சுபாவம் சரியாயிருக்கின்றவரையில், அல்லாஹ்வுடைய உத்திரவைக் கொண்டு மலக்குகளுடைய ஒளிகளின் மூலமாய் ஆட்டமும், அறிவுமான சக்தியை இது ஏற்கின்றது. உஷ்ண சீதங்களின் மேலீட்டினால் அல்லது இன்னும் யாதொரு காரணத்தினால் எப்போது இந்த ரூஹின் சுபாவம் கெடுகின்றதோ அப்போது இந்தச் சக்தியை இது ஏற்கின்றதில்லை. கண்ணாடியானது எதுவரையில் தெளிவாயிருக்கின்றதோ அதுவரையில் வஸ்துக்களின் நிழலாகிய பிரதி பிம்பம் அதில் தோன்றுகிறது. அதில் அழுக்கேறும்போது வஸ்துக்களின் நிழல் அதில் தோன்றுகிறதில்லை, அப்படித் தோன்றுமிருப்பது வஸ்துக்கள் அழிந்துபோயின வென்றல்ல. மேலும் அதில் ரூபத்தை ஏற்கும் தகுதியில்லை, ஆதலால் வஸ்துக்களிருந்தும் அவற்றின் ரூபம் அதில் தோன்றவில்லை. இதுபோலவே அந்த நுட்பமான ஆவியென்னும் ரூஹு ஹைவானியின் சக்தியாகிறது அதன் சுபாவம் சரியாயிருப்பதின்பேரில் நிலைபெற்றதாயிருக்கிறது. சுபாவம் கெடுமானால் அது அந்த சக்தியை ஏற்காது. அப்படி ஏற்காததினால் உறுப்புகள் அதன் ஒளியை அடையாமல் அறிவும் ஆட்டமும் அற்றுப்போகின்றன. அப்போது அவன் மவுத்தாய்ப் போனானென்று சொல்லுகிறார்கள். இதுதான் மவுத்துக்குப் பொருள். இந்தச் சுபாவம் சரிதப்பிப் போகும் படியான காரணங்களைச் சேகரிக்கிறவர் அல்லாஹ்வுடைய படைப்புகளில் நின்றும் ஒரு படைப்பாயிருக்கிறார், அவரை மலக்குல் மவுத்து என்று சொல்லுகிறார்கள். ஜனங்கள் அவருடைய பேரை அறிந்திருக்கிறார்கள், அவருடைய ஹகீகத்தை அறிவது கஷ்டமாயிருக்கிறது. ஹைவானாத்தென்னும் ஜீவாசிகளினது மவுத்தின் விளக்கம் இதுவேயாம்.

ஆனால் மனிதனுடைய மவுத்து வேறே விதமாயிருக்கின்றது ஏனென்றால் அவனுக்கு இந்த ஹைவானியாகிய ரூஹைத்தவிர இன்னுமொரு ரூஹு இருக்கிறது, அதை ரூஹு இன்ஸானி யென்றும் கல்பு என்றும் சொல்லுகிறார்கள். இந்த ரூஹு பாகத்தை ஏற்காது. ஆதலால் இது ஜிஸ்மல்ல, அல்லாஹ்வுடைய மஃரிபா இதில் இறங்குகின்றது. அல்லாஹு தஆலா எப்படி ஒருவனும் பாகத்தை ஏற்காதவனும் இருக்கின்றானோ அப்படியே அவனை அறியும் அறிவும் ஒன்றும் பாகத்தை ஏற்காததாயும் பாகத்தை ஏற்கிற எந்த வஸ்துவிலும் அடங்காததாயும் இருக்கின்றது. எது ஒன்றும் பாகத்தை ஏற்காததாயும் இருக்கின்றதோ அதில்தான் அந்த மஃரிபா உண்டாகும்.

பின்பு விளக்கின் திரியையும் சுடரையும் ஒளியையும் நோட்டமிடு. திரியாகிறது சரீரம்போலும், சுடராகிறது ரூஹு ஹைவானி போலும், ஒளியாகிறது ஒருவாறு ரூஹு இன்ஸானிபோலு மிருக்கிறது. ஒளி யானது சுடரிலும் அதிநுட்பமானதாயும் சயிக்கினையால் காட்டக் கூடா ததாய் மிருக்கிறதுபோல் ரூஹு இன்ஸானியாகிறது ரூஹு ஹைவானி யிலும் அதிநுட்பமானதாயும் சயிக்கினையால் காட்டக்கூடாததாயு மிருக்கிறது. நுட்பமென்பதை நோக்கு வாயாகில் இந்த உபமானம் சரியாகும். வேறு விதத்திலுல் பார்த்தால் சரியாகாது, ஏனென்றால் ஒளியானது சுடரைத் தொடர்ந்ததாயும் சுடரோடு ஒழிந்துபோவதாயு மிருக்கிறது. ரூஹு இன்ஸானி அப்படி ரூஹு ஹைவானியைத் தொடர்ந்ததல்ல. மேலும் அது தன்னில் நிலையான ஆதாரப் பொரு ளாயிருக்கிறது. ரூஹு ஹைவானி அழிந்து போகிறதினால் அது அழிகிறதில்லை, ஆதலால் நீ அதற்குச் சரியான உபமானத்தை நாடுவா யாகில் விளக்கின் ஒளியிலும் அதிநுட்பமானதாயும் அதன் நிலை விளக் கினால் அல்லாமல் விளக்கின் நிலை அதனால் ஏற்படுவதாயு மிருக்கிற ஒரு ஒளியை நியமனம் செய்துகொள். அப்போது இந்த உபமானம் சரியாகும்.

பின்பு இந்த ரூஹு ஹைவானியாகிறது ஒரு விதத்தில் ரூஹு இன்ஸானிக்கு வாகனமாயும் ஒரு விதத்தில் அதற்கு ஆயுதமாயுமிருக் கின்றது. எப்போது இந்த ரூஹு ஹைவானியின் சுபாவம் கெடு கின்றதோ அப்போது சரீரம் சாகின்றது; ரூஹு இன்ஸானியோ சாகா மல் நிலைத்திருக்கிறது. என்கினும் ஏறும் வாகனமும் ஆயுதமுமில்லா மல் தனித்துவிடுகின்றது. வாகனம் சாகிறதினால் ஏறுகிறவன் சாகிற தில்லை. இதுபோல் ஆயுதமும் முறிவதால் ஆயுதபாணிக்கு யாதொரு அழிவில்லை. இந்த ஆயுதத்தை இவனுக்குக் கொடுத்தது எதற்கெனில் அல்லாவுடைய மஃரிபாவையும் முஹப்பத்தையும் வேட்டையாடுவதற் கேயாம். வேட்டையாடி முடிந்தால் ஆயுதமொழிந்து போவது அவனு டைய நன்மைக்குக் காரணமாகும் ஏனென்றால் அதன் சுமை அவனை விட்டும் நீங்கிவிடுகின்றது. மவுத்தானது மூமினுக்கு தோவ்பாவா யிருக்கும் என்று நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்களே அதற்குப் பொருள் யாதெனில் வேட்டை யாடுவதற்கென்று வலையைத்தூக்கிச் சுமக்கின்ற ஒருவனுக்கு வேட்டை கிடைத்த பிறகு வலையொழிந்து போவது அவன் விஷயத்தில் நன்மை

யாயிருக்கு மென்பதேயாம். ஆனல் அப்படி வேட்டை அகப்படு முன் வலே கிழிந்துபோனல் அவன் பெரிய கைசேதத்திலும் துக்கத் திலும் விழுவான். அல்லாஹ¨ தஆலா காக்கவேண்டும். இந்தத் துக்கமும் கைசேதமும் முந்தி கபருடைய அதாபாயிருக்கும்.

(பஸல்) பின்பு தெரிந்துகொள். ஒருவனுடைய கைகால்கள் சுத்து சுரணையில்லாமல் திமிர்த்துப் போமாகில் அவன் ஸலாமத்தா யிருக்கிறன். ஏனென்றல், அவன் என்பதற்குக் கைகால் முதலிய உறுப்புகள் பொருளல்ல. மேலும் அவை அவன் வழங்கும் அவயவங் களாயிருக்கின்றன. நீ என்பதற்குப் பொருள் கையுமல்ல, காலுமல்ல, வயிறுமல்ல, முதுகுமல்ல. இந்தச் சரீரமான கூடுமல்ல வென்றயின போது இந்த எல்லா உறுப்புகளும் திமிர்த்துபோனல் நீ ஸலாமத்தா யிருக்கலா மென்றயிற்று.

இப்படிச் சரீரம் முழுவதும் சுரணையில்லாமல் திமிர்த்துப் போ வதே மவுத்துக்குப் பொருளாம். ஏனென்றல் கை திமிர்த்துப் போ வதின் பொருளாகிறது அதை உன் இஷ்டப்படி எடுக்கவும் வைக்கவும் அது உனக்கு ஐக்கியப்படாமலிருப்பதேயாம். அப்படி ஐக்கியப்படு வதற்கு தத்துவமென்று சொல்லப்படுகிற ஒரு குணமே காரணமா யிருந்தது. அந்தக் குணமென்பது ரூஹ¨ ஹைவானியான விளக்கில் நின்றும் அதற்கு வந்து கொண்டிருந்த ஒரு ஒளியேயாம். எப்போது அந்த ரூஹ¨ வரும் வழிகளாகிய நரம்புகளில் முடிச்சுகள் உண்டா யினவோ அப்போது அவ்வுறுப்பில் அத்தத்துவம் அற்றுப் போய் அது வசப்படுவது கஷ்டமாய் விட்டது. இதுபோலவே சரீரம் முழு மையும் உனக்கு வசப்பட்டு வருவதானது ரூஹ¨ ஹைவானியின் மூலமாயிருக்கிறது. பின்பு எப்போது அதன் சுபாவம் கெட்டுப் போகின்றதோ அப்போது சரீரம் உனக்கு வசப்படாது. அப்படி வசப் படாமலிருப்பதற்கே மவுத்தென்று சொல்லுகிறார்கள். நீ உன் ஸ்தா னத்தில் நிலையாயிருக்கிறாய் உனக்கு வசப்பட்டு வந்த உன் தேகம் அழிந்துபோனலுஞ் சரி. இப்படியா யிருப்பதில் நீ என்பதற்கு உன் தேகம் எப்படிப் பொருளாகும்? ஆகாதென்றல் உன் இருப்பு இந்த உடலேக் கொண்டல்ல. இது அழிந்துபோனல் பரவாயில்லே. நீ உன் சுய ஜாத்தினல் இதுபோலவே ஜீவித்திருப்பாய். ஆனல் உன்னுடைய குணங்கள் இருவகைப்படும்: அவற்றுள் ஒருவகை சரீரசம்பந்தமானவை உதாரணமாக:—பசி, தாகம், நித்திரைபோல்வன. இவைகளுக்குச் சரீரம் தேவையாயிருக்கிறது. இவை மவுத்துக்குப்பின் நிலைத்திருப்ப னவல்ல, மற்றொருவகை சரீர சம்பந்தமில்லாதவை. அவை அல்லாவை

அறிவது, அவனுடைய ஜமாலைத் தரிசித்து ஆனந்தமடைவது போன்றவைகளேயாம். சரீர சம்பந்தமில்லாத இக்குணங்கள் உன் சொந்தமான சுபாவகுணங்களா யிருக்கின்றன. இவை மவுத்துக்கு பின்பும் உன்னோடிருக்கும் நிலைத்திருக்கிற நன்மைகள் என்பதற்கு பொருள் இதுவேயாம்.

அல்லாவை அறிவதற்குப் பதிலாக அறிவின்மையை உண்டாக்கிக் கொள்ளுவாயாகில் அதாவது அல்லாவை அறியாம லிருந்தாயாகில் இதுவும் உன்குணமா யிருக்கின்ற தாகையால் இந்த அறியாமையும் உன்னோடிருக்கும். இது உன் ரூஹுடைய குருட்டுத் தனமாயும் உன் தர்ப்பதவிக்கு வித்தாயு மிருக்கிறது.

من كان في هذه اعمى فهو في الاخرة اعمى واضل سبيلا எவன் இந்தத் துன்யாவில் குருடனு யிருந்தானோ அவன் ஆகிரத்திலும் குருடன் என்றும் அவன் பெரிய வழிகேடன் என்றும் அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறான். பின்பு நீ இந்த இரண்டு ரூஹுகளையும் இவைகளில் ஒன்றோடு மற்றொன்றுக்கிருக்கிற சம்பந்தத்தையும் இவ் விரண்டுக்கு மூள்ள வித்தியாசத்தையும் அறியாம லிருக்கிற வரையில் மவுத்து இன்னதென்று உனக்கு ஒருபோதும் தெரியலாகாது.

(பஸல்) இப்போது அறிந்துகொள். இக்கீழுலகத்தைச் சேர்ந்த ரூஹு ஹைவானியானது அக்லாத்தினுடைய நுட்பமான ஆவியால் உண்டானது. அக்லாத் தென்பது வாதம், பித்தம் சிலேத்துமம், கரும்பித்தம் இவை நான்கேயாம். இந்நான்குக்கும் நீர், நெருப்பு, நிலம் காற்று இவைகளே மூலமாம். ரூஹு ஹைவானியின் சுபாவம் பேதப்படுவதும் சரியா யிருப்பதும் உஷ்ணம், சீதம், கொழுமை, வறளை இவைகளின் கூடல் குறைதலால் உண்டாகுவதேயாம். இந்த ரூஹு ஹைவானியானது ரூஹு இன்சானிக்கு வாகனமா யிருக்கவேண்டிய நிமித்தம் மேற்கண்ட நான்கு அக்லாத்துகளையும் கூடாமல் குறையாமல் ரூஹில் மிதமாய் வைக்கும் முறையைக் காட்டுவதற்கே வைத்திய சாஸ்திரம் ஏற்பட்டது. ரூஹு இன்ஸானியானது இல்வுலகத்தில் முசாபிர் போல் வந்திருக்கிறது. இவ்வுலகம் அதன் சுய தேசமல்ல. என்றாலும் அது இப்பிரதேசத்தில் வந்தது எதற்கெனில் அல்லாஹு தஆலா திருவுளமானது போல் அவன் வழிகாட்டலால் சரியானபடி நேரே நடந்து தனக்கு வேண்டிய தங்கரிப்புகளைச் சம்பாதித்துக் கொள்ளவேயாம். அது வருமாறு :—

قلنا اهبطوا منها جميعا فاما يا تينكم منى هدى فمن تبع
هداى فلا خوف عليهم ولا هم يحزنون

"நீங்கள் எல்லாரும் இதைவிட்டு இறங்குங்கள். பின்பு என்னில் நின்றும் உங்களுக்கு வழிகாட்டல் வருமாகில் பின்பு யார் என் வழி காட்டலைத் தொடர்ந்தார்களோ அவர்கள்மீது அச்சமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் என்று நாம் சொன்னோம்" என்பதே.

انى خالق بشرا من طين فاذا سويته ونفخت فيه من روحي

இன்னும் "திடனாக நான் மண்ணில் நின்றும் மனிதனை உண்டாக்குகிறவனாயிருக்கிறேன். பின்பு அவனை நான் சரிப்படுத்தி என்னுடைய ரூஹில் நின்றும் அவனில் ஊதினேன்" என்று அல்லாஹ் தஆலா திருவுளமாயிருக்கிற ஆயத்தில் இந்த இரண்டு ரூஹ்களையும் குறித்து சயிக்கினை யிருக்கிறது. ஒருரூஹை மண்ணின் பக்கம் சேர்த்து அதன் சுபாவம் சரியாயிருத்தலுக்கு "அவனை நான் சரிப்படுத்தினேன்" என்றும் மற்றொரு ரூஹைத் தன்பக்கம் சேர்த்து "என்னுடைய ரூஹில் நின்றும் அவனில் ஊதினேன்" என்றும் திருவுளமானான். அதாவது அவனை நான் தயார் செய்து என்னுடைய ரூஹை ஏற்கும் பக்குவத்தில் ஆக்கினேன் என்பதேயாம். கத்தான் திரியைத் தீ பற்றும் பக்குவத்திலாக்கிப் பிறகு அதை நெருப்பில் காட்டி ஊத அது பற்றிக் கொள்ளுகிறதை ஒருவாறு இதற்கு உபமானிக்கலாம்.

எப்படி ரூஹ் ஹைவானிக்கு ஓர் நிதானமான சுபாவமிருக்கின்றதோ இன்னும் அந்த ரூஹைக் கெடுக்கிற நோயைக் கண்டித்து அதைக் காக்கும் பொருட்டு வைத்திய சாஸ்திரத்தில் அந்த நிதானத்தின் முறைகள் கூறப் பட்டிருக்கின்றனவோ அப்படியே ரூஹ் இன்ஸானிக்கும் ஓர் நிதானமும் அந்த நிதானத்தைக் காக்கும் முறைகள் கூறப்பட்டுள்ள ஷரீ அத்துக்கு ஒற்றுமையான இல்முல் அக்லாகும் இல்முர்ரியாலத்தும் உண்டாயிருக்கின்றன. இது அவன் ஆரோக்கியத்துக்குக் காரணமாகும். இதன் விபரம் மூன்றுவது ருக்குனாகிய முஹ்லிகாத்தில் வரும்.

பின்னர் மனிதனுடைய ரூஹ்களின் உண்மையை எவன் அறியவில்லையோ அவன் ஆகிரத்துடைய உண்மையை நன்றாய் அறிய மாட்டானென்று இதனால் தெரியலாயிற்று. எப்படி ஐம்பை அறிவதானது அல்லாவை அறிவதற்குத் திறவுகோலாயிற்றோ, அப்படியே ரூஹ்களுடைய உண்மையை அறிவதானது ஆகிரத்தை அறிவதற்குத் திறவுகோலாயிருக்கிறது. அல்லாவின்பேரிலும் ஆகிரத்தின்பேரிலும்

ஈமான்கொள்வதே தீனுடைய அஸ்லு என்னும் அடித்தளமாயிருக் கிறது. இதன் நிமித்தமே நாம் இந்த மஃரிபாவை முற்படுத்தினோம். ஆனல் இதனுடைய சிபத்துகளில் நின்றும் பிரதானமான ஒரு இரகசியத்தைச் சொல்லவில்லே. ஏனென்றல் அதைச்சொல்ல உத்திர வில்லே; அது சங்கதி ஒவ்வொருவனுடைய மனதிலும் அமையாது. அல்லாஹ் தஆலாவின் எல்லா மஃரிபாவும் ஆகிறத்துடைய மஃரிபாவும் இதன் மேல் நிலேபெற்றிருக்கிறதால் நீ தானே பாடுபட்டு வணங்குவதினல் அதை அறிய முயலு. ஏனென்றல் ஒருவர் அதைச் சொல்லக் கேட்பாயாகில் நீ சகிக்கமாட்டாய். அநேக ஜனங்கள் இந்த சிபத்தை அல்லாஹ் தஆலாவின் விஷயத்தில் கேட்டு அதைச் சம்மதிக்கவில்லே. இது சாத்தியமான சங்கதியல்லவென்றும் இது அவன் விஷயத்தில் தன்ஸீஹ் அல்லவென்றும் மேலும் தஃதில் என் றும் நிராகரித்துச் சொல்ல ஆரம்பித்தார்கள். ஆகவே மனிதன் விஷயத்தில் அதை நீ எப்படி ஒப்புவாய். மேலும் அந்த சிபத்து அல்லாஹ் தஆலா விஷயத்தில் குர்ஆனிலும் தெளிவாய்ச் சொல்லப்படவில்லே. ஹதீதுகளிலும் வரவில்லே. இதனலேயே ஜனங்கள் அதைக் கேள்விப்படும்போது நிராகரிக்கிறார்கள். இன் னும், كلموا الناس على قدر عقولهم ஜனங்களிடத்தில் அவர்களு டைய புத்தியின் அளவுக்குத் தக்கபடி பேசுங்கள் என்று நபிமார் களுக்கு உத்திரவாயிருக்கிறது. இன்னும் எந்த வார்த்தை ஜனங்க ளுடைய புத்தியில் அமையாதோ அதை அவர்களிடத்தில் சொல்ல வேண்டாமென்றும் அவர்கள் அறியக்கூடிய சங்கதியையே சொல் லுங்கள் என்றும் சில நபிமார்களுக்கு வஹி வந்ததென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஏனென்றல் புத்தியில் அமையாமற்போனல் நிராகரிப் பார்கள். இது அவர்கள் விஷயத்தில் கெடுதியாயிருக்கும்.

(பஸல்) இந்த எல்லாச் சங்கதிகளாலும் மனிதனுடைய ரூஹானது தன்னிலே நிலேயாயிருக்கிற தென்றும் அது தன் ஜாத்து சிபத்துகளுடைய நிலேக்குச் சரீரம் தேவையற்ற தென்றும் அறிந் திருப்பாய். மவுத்து என்பதற்குப் பொருள் அது மரித்துப்போவ தென்பதல்ல. மேலும் சரீரத்தை விட்டு அதன் அனுபோகம் நின்று போவதே கருத்தாம்.

ஹஷ்ராபஃசு என்பதற்குப் பொருள் இல்லாமல் நின்றும் பின்பு அந்த ரூஹ் உண்டாக்கப்படுகிறதென்றல்ல. மேலும் அதற்குச் சரி யான அர்த்தம் அதற்கு ஒரு சரீரம் கொடுக்கப்படுமென்பதேயாம். அதாவது முன் கொடுக்கப்பட்டிருந்ததுபோல் ஒரு சரீரம் அதன் அனுபோகத்தில் ஆக்கப்படும். இது மிகவும் இலேசு. முன்னே

சரீரம் ரூஹு இவ்விரண்டையும் உண்டாக்க வேண்டிய தாயிருந்தது. இப்போது ரூஹு இன்ஸானியோ நிலையாயிருக்கிறது. இன்னும் சரீரத்தின் பாகங்களும் உள்ளனவா யிருக்கின்றன. புதியதாய் உண்டாக்குவதைவிட அவைகளை ஒன்று சேர்ப்பது நமது நோட்டத்தில் இலேசாயிருக்கிறது. என்றினும் அல்லாஹு தஆலாவுடைய செயலில் கஷ்டம், இலேசு என்னும் பண்புகளுக்கு இடமில்லை. ஏனெனில் அவன் இக்குணங்களைவிட்டும் சுத்தமானவனா யிருக்கிறான்.

மறுதரம்உயிர்கொடுத் தெழுப்புவதற்கு முன்னிருந்த சரீரமே வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனென்றால், சரீரமானது குதிரை போல் ஏறும் பிராணியாயிருக்கிறது. குதிரை மாறிப்போனால் என்ன? ஏறுகிற சவார் அவனுகவே யிருக்கிறான். குழந்தைப்பருவத்திலிருந்து முதுமைவரையில் சரீரபாகங்கள் ஆகாரபாகங்களால் மாறுதல் அடைந்து கொண்டிருந்தன. ரூஹு இன்ஸானியோ ஆதியிலிருந்த படியேயிருக்கிறது. அதில் யாதொரு மாறுதல் உண்டாகவில்லை. மறுதரம் உயிர்கொடுத் தெழுப்புவதற்கு இதே சரீரம் வேண்டுமென்று வாதிப்பவர்கள்மேல் பலரால் பல ஆட்சேபங்கள் நடந்தன. அவர்கள் அந்த ஆட்சேபங்களுக்குப் பலஹீனமான விடையளித்தார்கள். அந்த ஆட்சேபங்களாவன:—

ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத்தின்று இருவருடைய அவயவங்களும் ஒன்றுபோலால் ஹஷ்ரில் யாருடைய சரீரம் யாருக்குக் கொடுக்கப்படும்? மனிதனுடைய தேகத்தில் நின்றும் ஒரு உறுப்பு அறுத்தெடுக்கப்பட்டு அதன் பிறகு அவன் இபாதத்து செய்தால் கியாமத்து நாளில் அவன் எப்படி தவாபுபெறுவான்? அந்த அறுப்புண்ட உறுப்பு அவனோடிருக்குமா? அல்லது இராதா? இராது என்றால் கைகால் கண் முதலிய உறுப்புகளில்லாமல் அவன் சொர்க்கம் போவதெப்படி? அந்த அறுப்புண்ட உறுப்பு அவனோடிருக்குமென்றால் இபாதத்து செய்யும்போது மற்ற உறுப்புகளோடு அதுவும் சேர்ந்து இபாதத்து செய்யவில்லையே? பின்பு தவாபு பெறுவதில் மாத்திரம் எப்படி அவைகளோடு சேரும்? என்பவைகளே.

ஜனங்கள் இப்படியான அநேக வீண் ஆட்சேபங்களை அவர்கள் மேல் எழுப்புகிறார்கள். அதற்கவர்கள் பலஹீனமான சமாதானங் கூறுகின்றார்கள். இவ்வளவுசிரமம் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியமிருந்ததில்லை. அருமையானவனே கேள். மறுதரம் உயிர்கொடுத் தெழுப்புவதற்கு இதே சரீரம் தேவையில்லை என்று தெரிந்து கொண்டாயாதலால் இம்மாதிரியான வீண் ஆட்சேபங்களை எழுப்பவும் சிரமப்பட்டு

அவைகளுக்குச் சமாதானங் கூறவும் தேவையில்லை. இந்த ஆக்ஷேப சமாதானங்களுக்கு மூலகாரணம் யாதெனில், தான் என்பது இந்தத் தேகந்தான் என்று அவர்கள் பொருள் கொண்டிருக்கிறார்கள், ஆதலின் இதே தேகமா யிராமற் போனால் அவன் முன்னிருந்த மனிதனுக மாட்டான் என்று மறுக்கின்றார்கள். இதன் நிமித்தமே அவர்கள் சந்தேகத்தில் ஆழ்ந்தார்கள். அவர்களுடைய இக்கோட்டை பாட்டின் ஆதாரம் உறுதியானதன்று.

(பஸல்) ஒருக்கால் நீ புக்கஹாக்களும் முத்தகல்லிமுகளும் மனிதனுடைய ரூஹு மவுத்திலில் அழிந்து போகிறதென்றும் பின்பு அது உண்டாக்கப் படுகிறதென்றும் பிரசித்தமான மதஹபு வைத்திருக்கிறார்களே மேற்சொன்னது இதற்கு விரோதமா யிருக்கின்றதே என்று சொல்லக்கூடும். அருமையானவனே கேள் இந்த மஸ்அலாவில் நீ இப்போது சொன்னபடி எவர்கள் மதஹபு வைத்திருக்கிறார்களோ அவர்கள் * தஹ்கீக்குடையவர்களில் சேர்ந்தவர்களுமல்லர் ↑ தக்லீதுடையவர்களிற் சேர்ந்தவர்களுமல்லர். ஏனென்றால், தஹ்கீகுடையவர்களிற் சேர்ந்தவர்களா யிருந்தால் சரீரம் மரிப்பது மனிதனுடைய ஹகீகத்தாகிய ரூஹை அழிக்காதென்று அறிந்திருப்பார்கள். தக்லீதுடையவர்களிற் சேர்ந்தவர்களா யிருந்தால் குர்ஆனும் ஹதீதுகளாலும் மனிதனுடைய ரூஹு அவன் மவுத்துக்குப் பிறகு அழியாமல் நிலைத்திருக்கிறதை அறிந்து கொள்ளுவார்கள்.

மவுத்துக்குப் பிறகு ரூஹுகள் நல்லவர்களுடைய ரூஹுகள் என்றும் கெட்டவர்களுடைய ரூஹுகள் என்றும் இருவகைப் படுகின்றன. நல்லவர்களுடைய ரூஹைக் குறித்து குர்ஆனில்,

ولا تحسبن الذين قتلوا في سبيل الله امواتا
بل احياء عند ربهم يرزقون فرحين بما اتاهم الله من فضله .

"அல்லாஹுடைய பாதையில் வெட்டுண்டவர்களை மவுத்தானவர்களென்று நீர் எண்ண வேண்டாம். மேலும் அவர்கள் தங்கள் றப்பிடத்தில் ஹயாத்தானவர்களா யிருக்கிறார்கள். அல்லாஹு தஆலா தனது அருளினால் அவர்களுக்குக் கொடுக்கிறதைக் கொண்டு அவர்கள் களிப்புற்றவர்களா யிருப்பதுடன் ரிஸ்கலிக்கப் படுகிறார்கள்" என்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறான்.

---

* தஹ்கீகு—விசாரணையால் தெளிதல்.

↑ தக்லீது—சொன்னதை ஒப்பல்.

இனி கெட்டவர்களுடைய ரூஹைக் குறித்துச் சொல்லப்படுகிற தென்னவென்றால் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பதருடைய யுத்தத்தில் கொலையுண்ட காபிர்களை நோக்கி, இன்னானே! இன்னானே !! அல்லாஹு தஆலா தன்னுடைய பகைவர்கள் விஷயமாய் எனக்கு சொல்லியிருந்த வார்த்தைப் பாடுகளெல்லாம் மெய்யாயின. அவன் உங்களுக்குச் செய்திருந்த வேதனைகளின் வார்த்தைப் பாடுகள் நிறைவேறின. மவுத்துக்குப் பிறகு நீங்கள் உயிரை மெய்யெனக் கண்டீர்கள் என்று சொல்லத் தொடங்கினார்கள்! அப்போது அஸ்ஹாபுகள் நாயக மவர்களை நோக்கி யாரஸூலல்லா இவர்கள் மரித்துப் போனார்களே, தாங்கள் ஏன் இவர்களோடு பேசுகிறீர்களென்று கேட்டதற்கு நாயக மவர்கள் முஹம்மதுடைய உயிர் யார்வசமிருக்கிறதோ அந்த ஆண்டவன் பேரில் ஆணையாக நான் சொன்ன இந்த வார்த்தைகளை நீங்கள் கேட்டதற்கு மேல் இவர்கள் நன்றாய்க் கேட்கிறார்கள் என்று திருவுளமானார்கள்.

இன்னும் மவுத்தானவர்களின் விஷயத்தில் வந்திருக்கிற ஹதீதுகளை அதாவது:—மவுத்தானவர்கள் தங்கள் துக்கங் காப்பவர்களையும் தங்களை ஸியாரத்து செய்பவர்களையும் இன்னுமிந்த ஆலத்தில் உண்டாகிற காரியங்களையும் அறிகிறார்களென்று வந்திருக்கிற ஹதீதுகளை எவன் அறிந்தானோ அவன் கொஞ்சமும் சந்தேகமில்லாமல் ரூஹுகளின் இல்லாமை ஷாஹில் ஏற்படவில்லை என்று தெரிந்து கொள்ளுவான். கபராகிறது நரகத்துடைய பொதும்புகளில் நின்றும் ஒரு பொதும்பாயிருக்கும், அல்லது சொர்க்கத்துடைய தோட்டங்களில் நின்றும் ஒரு தோட்டமாயிருக்கும். ஆகவே உன் சரீரம் சாகிறதுகொண்டு தன்னுடைய ஜாத்தும் சிபத்துகளும் அழிந்து போகிறதில்லையென்றும், ஆனால் உன் தலை மூளை முதலிய கருவிகளின் மூலமாய் உன்னிலிருந்த ஐயறிவுகளும் ஆட்டங்களும் நினைவுகளும் ஒழிந்து போகின்றனவென்றும், இங்கிருந்து எப்படிப் போனையோ அப்படியே அங்கும் தனித்து ஒன்றியாயிருப்பாயென்றும், நீ உறுதியாய் எண்ணிக் கொள். எப்போது ஏறும் புரவியாகிய குதிரை சாகின்றதோ அப்போது ஏறுகிறவன் அறிவில்லாதவனாயிருந்தால் அறிவுள்ளவனாக மாட்டான். குருடனாயிருந்தால் கண்ணுள்ளவனாக மாட்டான். ஆனால், வாகனமில்லாத காலாளாகுவான். சரீரமானது குதிரையைப் போல் ஏறும் புரவியாயிருக்கிறது; நீயோ ஏறுகிற சவாராயிருக்கிறாய்.

இதனாலேதான் தன்னையும் இவ்வுலகத்தையும் மறந்து தன்னிலும் அல்லாவுடைய திக்ரிலும் அமிழ்ந்துகின்றவர்களுக்கு ஆகிரத்துடைய சங்கதிகள் தெரியலாகின்றன. ஏனென்றால், அவர்களுடைய

ரூஹு ஹைவானியானது தன் சுபாவம் சரியாயிருப்பதை விட்டு மாறவில்லையானாலும் அல்லாஹ்வுடைய பயமும் ஆகிரத்துடைய அச்சமும் உண்டாய்விட்டால் அப்போது ரூஹு ஹைவானியானது அவர்களைத் தன் பக்கம் பராக்கு செய்யவைக்காது. இவர்களுடைய நிலைமையானது மவுத்தானவனுடைய நிலைமைக்கு அடுத்திருக்கிறது. ஆதலால் எந்த விஷயம் பற்றவர்களுக்கு மவுத்தின் பிறகு வெளியாகின்றதோ அந்த விஷயம் இவர்களுக்கு இவ்விடத்திலேயே வெளியாகும். பின்பு எப்போது இவன் தன் உணர்ச்சியில் வந்து ஐயறிவுகளால் விஷயங்களை அறிகின்றானோ அப்போது பெரும்பாலும் அந்த வெளிப்பாடுகளில் ஒன்றும் இவன் ஞாபகத்திலிருக்கின்றதில்லை. ஆனால் அதன் ஒரு கூறுமாத்திரம் தங்கி நிற்கும். சொர்க்கம் இவனுக்குக் காட்டப்பட்டிருந்தால் அதனாலுண்டான ஆனந்தக்களிப்பு இவனேடிருக்கின்றது. நரகம் காட்டப்பட்டிருந்தால் அதன் தக்கமும் விசனமும் இவனேடிருக்கிறது. அந்தக் காட்சியில் நின்றும் யாதொன்று இவனுக்கு ஞாபகமிருந்தால் அதைச் சொல்லுகின்றான். உதாரணமாக:—

ஒருதரம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தொழுகையில் தங்கள் திருக்கரத்தை நீட்டினார்கள். பின்பு சொர்க்கத்தில் நின்றும் எனக்குத் திராக்ஷைப்பழக் குலை காட்டப்பட்டதென்றும் அக்குலையை நான் இவ்வுலகத்துக்குக் கொண்டு வரலாமென்று நாடிக் கையை நீட்டினேன் என்றும் திருவுளமானார்கள். இந்த திராக்ஷைப் பழக்குலை இவ்வுலகத்துக்குக் கொண்டுவரக் கூடிய தென்று நீ நினைக்காதே. இது முடியாதகாரியம் அப்படிக்கொண்டு வரக்கூடியதாயிருந்தால் நாயகமவர்கள் கொண்டுவந்திருப்பார்கள். இது முடியாதென்பதின் உண்மையை அறிவது மகா கஷ்டம். இதை நீ அறியவேண்டிய அவசியமுமில்லை, இன்னும் இது விஷயத்தில் உலமாக்களுடைய ஸ்தானங்களும் பேதப்பட்டிருக்கின்றன. அதெப்படியென்றால் சிலர் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்டதும் மற்றவர்களுக்குத் தென்படாமற் போனதுமான திராக்ஷைப் பழமாவது என்ன? அது எப்படியிருக்குமென்கிற யோசனையில் விழுகிறார்கள். இன்னும் சிலர் இதன் விசாரனையால் தெரிந்துகொண்டதென்னவென்றால்; றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தொழுகையில் கையை அசைத்தார்களாதலால் கொஞ்ச அமல் தொழுகையை முறிக்காதென்றும், الفعل القليل لا يبطل الصلوة . இதுதான் முன்னோர் பின்னோர்களின் இல்மாயிருக்கிறதென்றும் எண்ணிக் கொள்கிறார்கள். எவன் இவ்வளவை அறிந்துகொண்டு இதன் பேரிலேயே திருப்தியடைந்தானோ இன்னும் இதன் ஹகீகத்தை விசாரணை

செய்ய முயலவில்லையோ அவன் வெறுங்கையனை தரித்திரனேயாம். ஷீஅத்துடைய இல்மில் நின்றும் இவ்விடத்தில் காடப்பட்டது யாதெனில், (இந்தத்திராக்ஷைக்குலையின் சங்கதியை) ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமிடத்தில் கேட்டு அறிவித்தார்கள் என்று. நீ எண்ணுமலிருப்பதேயாம். ஜிப்ரயீலிடம் கேட்பதென்பதற்குப் பொருள் நீ எப்படி அறிந்திருக்கிறாயோ அப்படியே இக்காரியத்தையும் மற்றுங் காரியங்களைப்போ லென்று எண்ணியிருக்கிறாய். அப்படியல்ல றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொர்க்கத்தைப் பார்த்தார்கள். சொர்க்கத்தை இவ்வுலகத்தில் பார்க்கமுடியாது. தாங்களே அவ்வுலகத்திற்குப் போனார்கள் இவ்வுலகத்தை விட்டு மறைந்தார்கள். இது அவர்களுடைய மிஃறாஜில் நின்றும் ஒருவகை மிஃறாஜாயிருந்தது.

ஆனால் இவ்வுலகத்தைவிட்டு மறைவது இரண்டுவகையினுலாகின்றது. அதில் ஒன்று ரூஹு ஹைவானி மரித்துப்போவதினுலும் மற்றொன்று அது மந்தப்படுவதினுலுமாம். என்கினும் இவ்வுலகத்தில் சொர்க்கத்தைப் பார்க்கமுடியாது. வானம் பூமிகளுடைய ஏழு தட்டுகளானவை பிஸ்தாத்தோலில் எப்படி அடங்காவோ அப்படியே சொர்க்கத்தில் நின்றும் ஓரணுவும் இவ்வுலகத்தில் அடங்காது. எப்படி ஏழு வானங்களுடையவும் பூமிகளுடையவுமான ரூபவடிவங்களை கேள்வியென்னும் புலன் அறியாதோ இன்னும் கண்ணும் அவற்றைக் கண்டடையாதோ அப்படியே அவனுடைய எல்லாப் புலன்களும் சொர்க்கத்துடைய எல்லா அணுக்களையும் அடையக்கூடா தனவாயிருக்கின்றன. அவ்வுலகத்துடைய புலன்களே வேறுயிருக்கின்றன.

(பஸல்) இப்போது கபருடைய அதாபின் பொருளை அறிவது அவசியமாயிற்று. அருமையானவனே அறிந்துகொள். இந்த அதாபு ஜிஸ்மானியென்றும் ரூஹானி யென்றும் இருவகையாயிருக்கின்றது. ஜிஸ்மானியான அதாபை எல்லாரும் அறிந்திருக்கிறார்கள். ரூஹானியான அதாபை எவன் தன் ரூஹுடைய ஹகீகத்தை அறிந்து அது தன்னிலே நிலையாயிருக்கிறதென்றும், அதன் நிலைக்குச் சரீரம் தேவையில்லை யென்றும், மவுத்துக்குப் பின் அது நிலையாயிருக்கிறதென்றும் மவுத்து அதை இல்லாமலாக்காதென்றும் ஆனால் கைகால் முதலிய உறுப்புகளும் கண்காது முதலிய கருவிகளும் அவனிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்ளப்படுகின்றன வென்றும், தெரிந்து கொண்டானேனே அவனே ரூஹானியான அதாபை அறிவான். எப்போது இந்தப் புலன் பொறிகளையும், மனவிமக்களையும், நிதி நிலங்களையும், ஆளடிமைகளை

114-2053

யும், மாடு கன்றுகளையும், வீடு வாசல்களையும், உறவு சம்பத்துகளையும், வானம் பூமி முதலிய சகல பொருள்களையும் அவனிடத்திலிருந்து வாங்கிக் கொள்ளப்படுகின்றனவோ அப்போது இவ்வஸ்துக்களின் ஆசையில் அவன் மனம் சுழன்றிருக்கும். இவைகளை விட்டுப் பிரிந்ததினால் அகத்தியம் அவன் துக்கத்தில் ஆழ்ந்துவான். இவைகளில் ஒன்றின் பேரிலாவது இவன் மனம் சாராதிருந்தால் இன்னும் இவைகளை இவன் ஆசை கொள்ளாமல் மவுத்தையே ஆசித்தவனுயிருந்தானுகில் சுகத்தையடைவான். அல்லாவுடைய ஆசையினாலும், அவனுடைய திக்ரினாலும், துணை சம்பாதித்துக் கொண்டவனுயும், துன்யாவுடைய அஸ்பாபுகளை வெறுத்தவனுயும், இருந்தானுகில் மவுத்துக்குப் பின் தன்னுடைய அந்த மெய்யான மஃஷூக்கைப்பெற்றுக் கொள்ளுகிறதினாலும், தடங்கலாயிருந்த தடைகள் நீங்கிப் போகிறதினாலும் அழிவில்லாத ஆனந்தத்தை அடைவான். எவனுடைய நாட்டமும் தேட்டமும் துன்யாவாயிருந்ததோ இன்னும் துன்யாவிலிருக்கும் போது எவன் ஆகிறத்து உண்டோ இல்லையோ என்று சந்தேகத்திலிருந்தானே அவன் துன்யாவை விட்டேகும்போதுதான் உவந்திருந்த பொருள்களை விட்டுப் பிரிவதினால் மாறுத துக்சத்தைக் காண்பான். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஒரு: புரி

احبب ما احببت فانك مفارقه "நீ எதை உவந்து கொள்ளுகிறுயோ உவந்து கொள். திடனுக நீ அதை விட்டுப் பிரிகின்றவனுயிருக்கிறுய்" என்று திருவுளமாயிருக்கிறுர்கள். துன்யாவை வெறுத்து அல்லாஹு தஆலாவைத் தன்னுடைய மஹ்பூபா யெண்ணியிருந்தவன் எவனே அவன் துன்யாவை விட்டுப் போகும்போது துன்பத்தையும் கஷ்டத்தையும் விட்டு நீங்கிச் சுகத்தைகாண்பான். ஆனதால் எவன் இந்தச் சங்கதியை அறிந்தானே அவனுக்கு கபருடைய அதாபின் விஷயத்தில் கொஞ்சமும் சந்தேகம் இராது. பேணுதலுள்ளவர்களுக்கு இந்த அதாபில்லை. மேலும் யார் துன்யாவுள்ளவர்களாயும் அதை உவந்தவர்களாயு மிருந்தார்களோ அவர்களுக்கே இந்த அதாபுண்டு. இதனால், الدنيا سجن المومن وجنة الكافر "துன்யா வானது மூமினுக்கு சிறைச்சாலையாயும் காபிருக்குச் சொர்க்கமாயு மிருக்கிறது" என்ற ஹதீதின் பொருள் தெரியலாகும்.

(பஸல்) கபருடைய அதாபுக்குக் காரணம் துன்யாவுடைய உவப்பாயிருக்கிறதென்று நீ அறிந்துகொண்டாய். இப்போது அந்த அதாபு ஒருவிதமல்ல வென்பதையும் துன்யாவுடைய உவப்புக்குத் தகுந்தபடி சிலருக்கு அதிகமாயும் சிலருக்குக் கொஞ்சமாயு மிருக்கு

மென்பதையும் தெரிந்துகொள். ஒருவனுக்கு துன்யாவுடைய பொருள்களில் நின்றும் ஏதோ ஒரு பொருளிருந்து அவன் மனம் அதை உவந்திருந்தால் அவனுக்கு உண்டாகும் அதாபாகிறது நிதி நிலங்களும், ஆளடிமைகளும், மாடு கன்றுகளும், அதிகாரத்துவமும் மற்றும் துன்யாவுடைய சகல செல்வங்களுமிருந்து ஒவ்வொன்றிலும் மனம் பற்றியிருந்தவனுக்கு உண்டாகிற அதாபுக்குச் சரியாகாது. இவ்வுலகத்தில் எவனுடைய பொருளையும் மனைவி மக்களையும் கொள்ளை கொண்டார்களோ, இன்னும் எவனை அதிகாரத்திலிருந்து நீக்கப் பட்டதோ, இன்னும் எவனுடைய சொத்து சுதந்திரங்களையும் மனைவி மக்களையும் மற்றும் துன்யாவுடைய எல்லாப் பொருள்களையும் பறித்துக் கொண்டு அவனைத் தனியாய் விட்டு விட்டார்களோ அவனுக்கு உண்டாகிற விசனத்தைக் காட்டிலும் தன்னுடைய ஒரு குதிரையை மாத்திரம் களவில் கொடுத்தவனுக்கு உண்டாகிற விசனம் குறைவாகவே யிருக்கும். இப்படி எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு தனியாய் விட்டுவிடுவதே மவுத்துக்கும் பொருளாயிருக்கிறது. ஆதலால் ஒவ்வொருவருக்கும் உண்டாகிற அதாபாகிறது துன்யாவுடைய சுகத்துக்குக் காரணமாயிருந்த பொருள்களோடு அவர்கள் எவ்வளவு மனம் பற்றுதலாய் இருந்தார்களோ அவ்வளவாகவே இருக்கும். எவனுக்கு எல்லா விதத்திலும் துன்யாவுடைய பொருள்கள் கிடைத்து அதில் அவன் முற்றிலும் ஆழ்ந்துபோனானோ அவனுக்குப் பெரிய அதாபாகும்.

ஒருதரம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் இந்த அதாபுடைய பயானைச் சொல்லத் தொடங்கி ஓ ஜனங்களே! அல்லாஹு தஆலா, ومن أعرض عن ذكري فان له معيشة ضنكا யாராவதொருவன் என்னுடைய திக்ரைவிட்டு முகம் திருப்பினால் அவனுக்குக் கஷ்டமான ஜீவிப்பிருக்கிறது என்று திருவுளமாயிருக்கிற இந்த ஆயத்து எதுவிஷயத்தில் இறங்கினது உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் அல்லாவும் அவன் றசூலும் மிக அறிந்தவர்களென்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் சொன்னதாவது :—

காபிருக்கு அவனுடைய கபரில் தொண்ணூற்றொன்பது பெரும் பாம்புகளை அவன்பேரில் சாட்டப்படும். அந்த பாம்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒன்பது தலைகளிருக்கும். அவை கியாமத்து நாள் வரையில் அவனைக் கடித்துக்கொண்டும் நக்கிக்கொண்டும் அவன்மேல் சிறிவிழுந்துகொண்டு மிருக்கும் என்று திருவுளமானார்கள்.

கல்புக்காரர்கள் இந்தப் பாம்புகளே அகப்பார்வையால் பார்க்கின்றார்கள். அறிவில்லாத மூடர்களோ கபரில் எங்களுக்கு ஒன்றும் தென்படவில்லை யென்றும் அப்படி ஏதாவது உண்டா யிருந்தால் நாங்களும் பார்ப்போமே என்றும் சொல்லுகிறார்கள். இவர்களுக்கு ஜவாபு பின் வருமாறு சொல்லுங்கள். அதாவது :—இந்தப் பாம்புகள் வெளியே யிருந்து வந்தவைகள் அல்ல; இறந்தவனுடைய ரூஹுக்குள்ளேயே பதுங்கி யிருந்தவைகளா யிருக்கின்றன. வெளியே யிருந்து வந்தவைகளா யிருந்தால் அவை மற்றவர்களுக்கும் தென்படும். இந்த சர்ப்பங்கள் இவனுடைய ரூஹுக்குள்ளே மறைந்திருந்ததை இவன் அறியாதவனு யிருந்தான். இன்னும் தெரிந்து கொள். இந்தப் பாம்புகள் இவனுடைய துர்க்குணங்களில் நின்றும் சனித்தவைகளா யிருக்கின்றன; அதன் ஒன்பது தலைகளானவை அந்தத் துர்க்குணங்களின் கிளைகளா யிருக்கின்றன. ஆகவே இந்தப் பாம்பின் உற்பத்திக்குக் காரணம் துன்யாவுடைய உவப்பேயாம். பின்பு துன்யாவுடைய உவப்பினால் உண்டாகிற துர்க்குணங்களின் கணக்குப்படி அதன் தலைகள் முளைக்கின்றன. அதெப்படி யென்றால் :—பொறுமை கபடம், ரியா, பெருமை அவா, வஞ்சகம், பகை, பொருளாசை அதிகார விருப்பம் முதலியன போலென்க. இந்தப் பாம்பின் மூலத்தையும் இதன் பற்பல தலைகளையும் புத்தி யென்னும் ஒளியால் பார்க்கலாம். என்றாலும் எண்ணிக்கை இத்தனை யென்பது நுபுவத் தென்னும் ஒளியினால் மாத்திரம் தெரியலாகும். துர்க்குணங்களின் எண்ணிக்கை போல் இப்பாம்புகள் உண்டாகின்றன. அத்துர்க்குணங்கள் இத்தனை என்பது நமக்குத் தெரியமாட்டாது. முன்னே காபிருடைய ரூஹுக்குள்ளே மறைந்து அவனுக்குத் தெரியாமற் கிடந்த இந்தப் பாம்புகள் இப்போது அவனுக்கு வெளிப்பட்டன. இதற்கு காரணம் யாதெனில் அவன் அல்லாவையும் ரசூலையும் அறியாமல் துன்யாவுடைய ஆசையில் முற்றிலும் ஆழ்ந்து போனான். அல்லாஹ் தஆலா திருவுளமா யிருக்கிறது போல் அது வருமாறு :— ذلك بانهم استحبوا الحيوة الدنيا على الاخرة இதாகிறது அவர்கள் ஆகிரத்தைக் காண துன்யாவுடைய வாழ்க்கையை உவந்ததினாலா யிருக்கு மென்றும்,

اذهبتم طيبا تكم في حيا تكم الدنيا واستمتعتم بها

துன்யாவுடைய வாழ்க்கையில் அடைந்த இன்பங்களைப் போக்கடித்தீர்கள் அவைகளைக் கொண்டு பிரயோஜன மடைந்து வீட்டீர்கள் என்றும் திருவுளமா யிருக்கிறான்.

இந்தப் பாம்பு வெளியே யிருக்குமாகில் கொஞ்ச நேரமாவது அவனுக்கு ஆறுதல் கொடுக்குமாகையால் அதாபின் காரியம் கொஞ்சம் இலேசா யிருக்கலாம். இது ரூஹுக்குள் குடி கொண்டதாயும் அவனுடைய துர்க்குணங்களால் சனித்ததாயும் இருப்பதால் அதற்குத் தப்பியோட இவனுல் எப்படி முடியும்? தான் இச்சித்து வந்த அடிமைப் பெண்ணை கிரயத்துக்குக் கொடுத்து விட்ட ஒருவன் பிறகு அவள் மேல் இச்சை எழும்பும் போது அவனுடைய உயிருக்குள்ளே இருந்து அவனை வாட்டுகிற அந்தப் பாம்பு எது? அவள் மீது அவன் கொண்டிருந்த மையலேயாம். இது மனதில் மறைந்திருந்தது. இந்தக் கடிப்புண்டாகிற வரையில் பாம்பிருந்தது அவனுக்குத் தெரியவில்லை. இது போலவே இந்தத் தொண்ணூற்றொன்பது பாம்புகளும் மவுத்துக்கு முன்னே அவனுக்குள்ளே யிருந்தன. அவன் அவைகளை அறியாதவனு யிருந்தான். இப்போது அவைகளின் கடிப்பு வெளியாய் விட்டது. தான் ஆசைக் கொண்ட பொருள் தன்னோடிருக்கிற வரையில் தன் ஆசையே சுகத்துக்குக் காரணமா யிருந்தது போல் அப்பொருள் தன்னை விட்டுப் பிரியும் போது அந்த ஆசையே துக்கத்துக்கும் காரணமாய் விட்டது. அதன் மேல் ஆசையில்லா திருந்தால் அது தன்னை விட்டுப் பிரிந்த போது துக்கமும் உண்டாகாது. இதுபோலவே துன்யாவுடைய உவப்பானது சுகத்துக்கும் துக்கத்துக்கும் காரணமா யிருக்கிறது. அதிகாரத்தின் ஆசையானது பெரிய பாம்பைப் போலும் பொருளின் ஆசையானது சிறிய பாம்பைப் போலும் வீட்டின் ஆசையானது தேளைப் போலு மிருந்து அவனுடைய உயிரை வாட்டுகின்றது. இதே மாதிரியாக மற்றவைகளையும் யோசித்துக் கொள். எப்படி அந்த அடிமைப் பெண்மேல் ஆசைக் கொண்டவன் அவள் பிரிந்த போதுண்டான துக்கத்தினுல் கடலிலாவது கெருப்பிலாவது விழுந்து தன்னை மாய்த்துக் கொள்ள அல்லது தன்னை ஒரு தேளாவது கொட்டி அந்த உபத்திரவத்திலாவது இந்த துக்கம் நிவர்த்தியாக வேண்டு மென்று நினைக்கிறனை அப்படியே இந்த அதாபில் அகப்பட்டவனும் ஆ! இந்தத் துக்கத்துக்கு பதிலாக இவ்வுலகத்தில் காணக்கூடிய பாம்பு தேள்கள் கடித்ததாலும் பரவாயில்லையே என்று நினைக்கின்றான். ஏனென்றால் துன்யாவிலுள்ள பாம்பு தேள்கள் சரீரத்தைக் கடிக்கின்றன. அது உயிருக்குள்ளே யிருந்து வேதனை செய்கின்றது.

உண்மையில் ஒவ்வொரு பாவியும் தன் அதாபுக்கு மூலமா யிருப்பதை இவ்விடத்தி லிருந்தே கொண்டு போகின்றான். அது அவனுக்குள்ளே யிருக்கின்றது. இதனாலே தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் انما هي اعمالكم ترد اليكم "இந்த அதாபாகிறது உங்கள் அமல்களா யிருக்கு மென்றும் அது உங்களுக்கே திருப்பப்

படுகிற தென்றும்" திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும்

كلا لو تعلمون علم اليقين لترون الجحيم ثم لترونها عين اليقين

இதற்காகவே அல்லாஹ் தஆலாவும் "உங்களுக்கு இல்முல் யகீன் இருக்குமாகில் நீங்கள் நரகத்தைக் காண்பீர்கள்" என்றும், ان جهنم لمحيطة بالكافرين "திடனாக நரகமாகிறது காபிர்களைக் கொண்டு சூழ்ந்ததா யிருக்கிற தென்றும்" (இனிச் சூழ்வதாகு மென்றல்ல) திருவுளமா யிருக்கிறான்.

(பஸல்) ஒருக்கால் நீ இந்தப் பாம்பை வெளிக்கண்ணால் பார்க்கலா மென்று லாஹிறு ஷாஹினால் விளங்குகிறதே உயிருக்குள்ளே இருக்கிற அந்தப் பாம்பு தென்படவில்லையே என்று சொல்லுவாய். அறிந்து கொள் இந்தப் பாம்பு இறந்தவனுக்குத் தென்படுகிறது. இவ்வுலகத்திலிருக்கிறவர்கள் அதைக் காண்கிறதில்லை. ஏனென்றால் அவ்வுலகத்துடைய பொருள்களை வெளிக் கண்ணால் பார்க்க முடியாது. இறந்தவனுக்கோ அவ்வுலகப் பொருள்கள் தென்படுகின்றன. ஆதலால் இந்தப் பாம்பு அவனுக்கு உருப் பெற்றுத் தோற்றுகின்றது. இவ்வுலகத்தில் பார்த்தது போலவே அவன் அந்தப் பாம்பை நன்றாய்ப் பார்க்கின்றான். என்கினும் நீ அதைப் பார்க்க மாட்டாய். அதெப்படி யென்றால் நித்திரை செய்து கொண்டிருக்கிறவன் சொப்பனத்தில் சில சமயம் தன்னைப் பாம்பு கடிக்கிறதாகக் காண்கின்றான். அவனிடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிற மற்றவர்களுக்கு அந்தப் பாம்பு தென்படுகிறதில்லை. அது மற்றவர்களுக்குத் தென்படாம லிருந்தாலும் தூங்குகிறவனிடத்தில் அது உள்ளதா யிருக்கிறது. அதனால் உண்டாகும் துன்பத்தை அவன் அனுபவிக்கிறான். விழித்திருக்கிறவன் விஷயத்தில் அது இல்லாததேயாம். இவன் அதைப் பார்க்காததினால் அவனுக்கு அந்தப் பாம்பினாலுண்டாகிற அவஸ்தை குறைகிறதில்லை. பின்பும் நீ இதை மறுத்து, அவனுக்குத் தோன்றுவது உண்மையில் பாம்பல்ல வென்றும் இது ஒரு நினைவா யிருக்கிற தென்றும் சொல்லுவாயாகில் இது உன் விளக்கத்தின் பிசகாகும். ஏனென்றால் அனுபவத்துக்கு வரப்பட்ட பொருள் உள்ள தென்றும் அனுபவத்துக்கு வராத பொருள் இல்லாததென்றும் சொல்லப்படுகின்றது. நீ நித்திரையில் கண்டு அனுபவித்த பொருளை மற்றவர்கள் பார்க்கா விட்டாலும் அது உன்னிடத்தில் உள்ளதா யிருக்கிறது. இது போல் நீ கண்டு அனுபவிக்காத பொருளை மற்றவர்கள் பார்த்தாலும் அது உன்னிடத்தில் இல்லாததேயாம். இறந்தவன் விஷயத்திலும் தூங்குகிறவன் விஷயத்திலும் அவஸ்தையும் அதற்குக் காரணமும் உள்ளதா யிருக்கிற போது மற்றவன் அதைக் கண்டுக் கொள்ளாமற் போனால் அதனால் என்ன குற்றம். ஆனால்

இறந்தவனுக்கும் தூங்குகிறவனுக்கும் வித்தியாச மென்ன வென்றால் தூங்குகிறவன் உடனே விழித்துக் கொள்ளுகிறதினால் அந்த அவஸ்தையினின்று நீங்கி விடுகின்றான். இதனாலே தான் அந்த அவஸ்தையை நீலவென்று சொல்லுகிறார்கள். மவுத்துக்குப் பின்னுள்ள ஜீவியத்துக்கு முடிவில்லை. ஆதலால் இறந்தவன் அந்த அவஸ்தையிலிருந்து நீங்க வழியில்லாமல் அதிலேயே சிக்குண்டிருக்கிறான். இவ்வுலகத்தில் ஐயறிவுகளுக்குப் புலப்படுகிற பொருள்க ளெப்படியோ அப்படியே அவ்வுலகத்தில் அந்தப் பாம்பு அவனோடு நிலைத்திருக்கும்.

கபறில் வேதனை செய்கிற பாம்பு தேள்களை இவ்வுலகத்திலிருக்கிற ஜனங்கள் பார்க்கக்கூடு மென்று ஷரீஅத்தில் வரவில்லை. ஆனால் ஒருவன் இவ்வுலகத்தை விட்டு அப்புறப்படுவானுகில் அதாவது தூங்கி விடுவானுகில் அப்போது அந்த இறந்தவனுடைய கதியை இவனுக்குக் காண்பிக்கப்பட்டால் அந்த பாம்பு தேள்களுக்கு நடுவே தன்னைக் காண்பான். நபிமார்களும் ஔலிமார்களும் அந்தப் பாம்பு தேள்களை விழிப்பிலுங் காண்பார்கள். ஏனென்றால் மற்றவர்களுக்கு நித்திரையில் தெரிகின்ற பொருள் அவர்களுக்கு விழிப்பிலும் தெரிகின்றது. ஐயறிவுகளுக்குப் புலப்படுகிற இவ்வுலகமானது அவர்கள் விஷயத்தில் அவ்வுலக காட்சியை தடுக்கிறதில்லை. மூடர்களுக்கு அவ்வுலக காரியத்தின் வழி தெரியாத நிமித்தம் கபறில் கண்ணுக்கு ஒன்றும் தென்படவில்லையென்று கபறுடைய அதாபை அவர்கள் நிராகரிக்கின்றார்கள். இதனாலே தான் இந்த பயானை விரித்துக் காட்ட வேண்டியதாயிற்று.

(பஸல்) ஒருக்கால் நீ கபறுடைய அதாபுக்கு தன்யாவுடைய உவப்பே காரணமாயிருந்தால் இவ்வுலகத்தில் பெண்ஜாதி பிள்ளைகளையும் ஆஸ்தி அதிகாரங்களையும் உவக்காதவன் ஒருவனுமில்லை. ஆதலால் எல்லாருக்கும் கபறுடைய அதாபுண்டாகு மென்றும் ஒருவராவது அதை விட்டுத் தப்ப முடியா தென்றும் சொல்லக்கூடும். அப்படியல்ல வென்று நாம் விடையளிப்போம். ஏனென்றால் சில ஜனங்கள் தன்யாவின் இச்சை யில்லாதவர்களாயும் மனப்பூர்வமாய் அதை வேண்டாது விட்டு விட்டவர்களாயும் இவ்வுலக விவகாரம் எப்போது ஒழியுமோ வென்று மவுத்தை ஆசை வைத்தவர்களாயு மிருக்கிறார்கள். ஏழைகளாயிருக்கிற அநேக மூமின்களுடைய ஹால் இப்படியே இருக்கிறது. ஆனால் மூமின்களில் யார் சீமான்களோ அவர்கள் இரண்டு வகுப்பாவார்கள். ஒரு வகுப்பார் தன்யாவுடைய பொருள்களையும் இச்சிக்கிறார்கள். அல்லாவையும் உவந்து கொள்ளுகிறார்கள். தன்யாவுடைய இச்சையிலும் அல்லாவுடைய உவப்பு அவர்களுக்கு

அதிகமாக யிருந்தால் அவர்களுக்கும் அதாபுண்டாகாது. அவர்களுக்கு உபமானமாகிறது:—ஒருவனுக்கு தன்ஊரில் ஒரு வீடு இருக்கிறது; அதை அவன் பிரியம் வைத்திருக்கிறான். ஆனால் அந்த வீட்டின் மேலிருக்கிற பிரியத்தைக் காட்டிலும் அதிகாரப்பிரியம் அவனுக்கு அதிகமாயிருக்கிறது. அவனுக்கு சுல்தானிடத்திலிருந்து வேறே ஊருக்கு அதிகாரியாய்ப் போகும்படி கட்டளை வந்தால் அப்போது அவன் தன் ஊரையும் வீட்டையும் விட்டுப் பிரிவதைப்பற்றி விசனப்படமாட்டான். ஏனென்றால் ஊருடையவும் வீட்டுடையவுமான பிரியமானது அதிகார ஆசைக்கு முன்னே அற்பமாகின்றது. அந்தப் பிரியத்தின் கூறு ஒன்று மிருக்கிறதில்லை. ஆதலால் அன்பியாக்களும் அவுலியாக்களும் பூமிப்புள்ள மூமின்களும் மனிவிமக்கள் பகூத்திலும் ஊர் பகூத்திலும் ஏதோ கொஞ்சம் மனஞ் சார்ந்தவர்களாயிருந்தாலும் அல்லாவுடைய உவப்பு வெளியாகும்போது இந்த எல்லாப் பொருள்களும் அவர்களுக்கு அற்பமாய்த் தோன்றுகின்றன. மவுத்தின்போது இந்த ஆசையின் இன்பத்தை அவர்கள் அடைகின்றார்கள். ஆதலால் அவர்கள் விட்டுப்பிரிந்த பொருள்களைப்பற்றி அவர்களுக்கு யாதொரு கவலையுமிருக்கிறதில்லை.

ஆனால் அல்லாவைக் காட்டிலும் துன்யாவை அதிகமாய் உவந்திருந்த மற்றொரு வகுப்பார் அந்த அதாபுக்குத் தப்பமாட்டார்கள். இப்படியான ஜனங்களே மிகுதமா யிருப்பதால்தான் அல்லாஹ் தஆலா وان منكم الا واردها كان على ربك حتما مقضيا ثم ننجي الذين اتقوا அதன்மேல் போகாதவன் உங்களில் ஒருவனுமில்லை யென்றும் பின்பு தக்வா செய்தவர்களை நாம் கரை சேர்ப்போமென்றும் திருவுளமா யிருக்கிறான். இந்த ஜனங்கள் ஒரு காலம் வரையில் அதாபை அடைவார்கள். அந்த காலமோ துன்யாவுடைய காலத்தினும் நீண்டதாயிருக்கும். அப்பால் அவர்கள் துன்யாவுடைய இன்பங்களை மறக்கின்றார்கள். கல்பில் மறைந்திருந்த அல்லாவுடைய உவப்பு பின்பு வெளியாகின்றது. இவர்களுக்கு உபமானமாவது:—ஒருவன் ஒரு வீட்டை மற்றொரு வீட்டைக்காண அல்லது ஒரு பட்டணத்தை மற்றொரு பட்டணத்தைக் காண அல்லது ஒரு பெண்ஜாதியை மற்றொரு பெண் ஜாதியைக்காண அதிகமாய் நேசிக்கிறான்; ஆனால் மற்றொன்றையும் அற்பமாய் நேசித்து வந்தான். அதிகமாய் நேசிக்கிற அந்தமற்றொன்றை விட்டும் அவனைப் பிரித்துவிட்டால் சில நாள்வரையில் அதன் தக்கம் அவனை வாதனை செய்கின்றது. கடைசியாய் அந்த மறந்து அற்பமாய் நேசித்து வந்த மற்றொன்றில் அவன் மனம் சார்கின்றது. மனதில் மறைந்திருந்த அந்த நேசமென்றவேர் வெகுநாளைக்குப் பிறகு

தளிர்த்தெழும்புகின்றது. ஆனல் எவனுக்கு அல்லாவுடைய உவப்பு கொஞ்சமு மில்லையோ அவன் அந்த அதாபிலேயே கிடப்பான். ஏனென்றல் எதை விட்டு அவனைப் பிரித்து விட்டார்களோ அதன் பேரிலேயே அவன் ஆசையெல்லா மிருந்தது. ஆதலால் அவன் எப்படி அதன் துக்கத்திலிருந்து மாறுவான்? காபிருக்கு நித்திய வேதனையாகுமென்றதின் ஒரு காரணம் இதுவேயாம்.

அறிந்து கொள்! ஒவ்வொருவரும் நான் அல்லாவை உவந்திருக் கிறேன் அல்லது துன்யாவைவிட அல்லாவை அதிகமாய் உவந்திருக் கிறேன்! என்று சொல்லுகிறார்கள். ஆனல் இந்தச் சொல் நிசமா பொய்யா என்று அறிவதற்கு ஒரு உரைக்கல்லிருக்கிறது. அது யாதெ னில் ஒருவனுடைய ஆசையானது ஒரு காரியத்தைச் செய்யும்படி அவனைத் தூண்டுகிறபோது அல்லாஹ¨ தஆலாவுடைய ஷரீஅத் தானது அதுகூடாதென்று தடைசெய்தால் அப்போது அவன் மனம் அல்லாஹ¨ தஆலாவுடைய உத்திரவின் பக்கம் அதிகமாய்ச் சார வேண்டும். அப்படிச் சார்ந்தால் அவனுக்கு அல்லாவுடைய உவப்பு அதிகமாயிருக்கிறதென்று எண்ணிக் கொள்ளவேண்டியது. அதெப் படி யென்றல் ஒருவனுக்கு இரண்டு சினேகிதர்களிருந்து அவர்களில் ஒருவனை அதிகமாயும், மற்றொருவனை அற்பமாயும் அவன் நேசித்தால் அந்த இருவருக்கும் சண்டை நேர்ந்த காலத்தில் இவன் அற்பமாய் நேசித்த சினேகனைவிட்டு அதிகமாய் நேசித்த சினேகன்பக்கம் சார் கின்றன். இதனல் இவன் அவனை அதிகமாய் நேசிக்கிறவனென்று தெரியலாகும். இப்படிச் சோதிக்காதவரையில் வாய்ப்பேச்சு ஒரு பிர யோசனத்தையும் கொடாது. அந்தப்பேச்சு பொய்யா யிருக்கிறது. இதனலேதான் றஸூல் ஸல்லல்லாஹ¨ அலைஹி வஸல்லமவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ¨ என்று சொல்லுகிறவர்கள் துன்யாவுடைய சரக்கை தீனுடைய சரக்குக்கு மேலாகத் தெரிந்து கொள்ளாதிருக்கிற வரையில் அல்லாவுடைய அதாபை விட்டும் தங்களைக்காத்து கொள்ளு கிறார்களென்றும் அப்படி மேலாகத் தெரிந்து கொள்ளுவார்களாகில் அல்லாஹ¨ தஆலா அவர்களை நோக்கி நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் இவ்விதமான செய்கையுடன் நீங்கள் லாஇலாஹ இல்லல்லாஹ¨ என்று சொல்வது பொய்யா யிருக்கிறதென்று சொல்லுகிறனென்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

இந்த எல்லா விபரத்திலும் கபறுடைய அதாபை விட்டும் தப்பு கிறவன் யார் என்பதையும் அநேக ஜனங்கள் அதைவிட்டும் தப்ப மாட்டார்கள் என்பதையும் கல்புக்காரர்கள் அகப் பார்வையினல்

பார்க்கிறார்களென்று நீ அறிந்திருப்பாய். ஆனால் தன்யாவுடைய கொஞ்சுதல்களில் அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருக் கிறதுபோல் இந்த அதாபின் கடினத்திலும் காலத்திலும் கனவித்தியாச மிருக்கும்.

(பஸல்) சில மூடர்கள் கபறுடைய அதாபுக்கு காரணம் இது வாகவே யிருந்தால் நாங்கள் அதைப்பற்றி அச்சப்பட வேண்டியதில்லை யென்றும் எங்களுக்கு தன்யாவுடன் யாதொரு சம்பந்தமில்லை யென் றும் தன்யாவுடைய வாழ்க்கை இருந்தாலும் இல்லாமற் போனாலும் அது எங்களுக்கு ஒரோஹாதிரியா யிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்வது கூடாதகாரியம். அதைச் சோதிக்காத வரையில் இந்தச் சொல்லை ஒப்பமாட்டோம் (உவமையில்) அவனுடைய பொருள் களை எல்லாம் கள்ளர் கொண்டு போய்விட்டால் அல்லது அவனுக் கிருந்த மரியாதைகளெல்லாம் அன்னியருக்குக் கிடைத்தால் அல்லது அவனுடைய முரீதுகளெல்லாம் அவனைவிட்டு மாறிப்போய் அவனைத் துஷிக்க ஆரம்பித்தால் அப்போது அவன் அதைப்பற்றி விசனப் படா மல் யாருடைய சொத்தோ களவுபோய்விட்டது போலும் யாருடைய மரியாதையோ தப்பிப் போனது போலும் இருந்தானுகில் அவன் சொல் வது சரியாகும். அப்படிச் சொத்து களவுபோகாமலும் முரீதுகள் மாறிப்போகாமலு மிருந்தால் அப்பொருள்களைத் தன்னைவிட்டு நீக்கியும் ஜனங்களை விட்டுத் தனித்தும் தன்னைச் சோதித்துப் பார்ப்பானுகில் அப்போது அவன் தன்னை நம்பலாம் ஏனென்றால் அநேக ஜனங்கள் தங்கள் பெண்ஜாதியைப் பற்றியும் தங்கள் அடிமைப் பெண்ணைப் பற்றியும் தங்களுக்கு யாதொரு இச்சையில்லை யென்று எண்ணி யிருக் கிறார்கள். பின்பு பெண்ஜாதியைத் தலாக்கு சொல்லிவிட்டால் அல் லது அடிமைப்பெண்ணை விற்றுவிட்டால் அப்போது அவர்களுடைய கல்பில் மறைந்திருந்த ஆசையென்னும் அக்கினியெழும்பி அவர்களை வாட்டுகின்றது. அதனால் பைத்தியம் கொண்டவராய்ப் போகிறார்கள். ஆனதால் எவன் கபருடைய அதாபை விட்டு ஈடேற்றம் பெற நாடு கின்றானோ அவன் தனக்கு அவசியமான மீட்டுக்கன்றி மற்றபடி தன்யா வுடைய எந்த வஸ்துவிலும் மனஞ் சாராதவனு யிருக்கவேண்டும். ஒரு வன் மலங்கழிக்கு மிடத்திற்குப் போக நேரிட்டால் அவன் தன் ஹாஜத்தைக் கழிக்கிற நேரத்துக்கு மேல் அதிகமாய் அந்த விடத்தி லிருக்க அவனுக்குப் பிரியமாகின்றதில்லை. ஆனதால் வயிற்றைக் காலி யாக்குவதில் அவனுக்கு எவ்வளவு இச்சையிருந்ததோ அவ்வளவே

அந்த வயிற்றுக்கு ஆகாரம் கொடுப்பதிலும் இச்சைஅற்பமா யிருக்க வேண்டும். இவ்விரண்டு காரியங்களும் அவசியமானவைகளா யிருக்கின் றன. எல்லாக் காரியங்களையும் இதன்படியே யோசித்துக் கொள்.

பின்பு துன்யாவுடைய பற்றுகளைவிட்டும் கல்பை ஒழிக்க அவ ஞல் கூடாமற்போனல் அவன் கல்பில் அல்லாவுடைய திகுரு மேலிடு வதற்காகவும் அதனல் துன்யாவுடைய பிரியத்தைக் காட்டிலும் அல் லாஹுடைய ஆசை அதிகப்படுவதற்காகவும் அவன் எப்போதும் அல்லாவை வணங்கிக் கொண்டும் அவனை திகுரு செய்துகொண்டு யிருக்கவேண்டியது. இன்னும் தனக்கு துன்யாவுடன் யாதொரு சம் பந்தமில்லை யென்று தான் சொல்லுகிற இந்தச் சொல்லுக்குச் சார்பாக ஷரீஅத்தைப் பின்பற்றுவதினலும், நப்சுடைய இச்சையினும் அல்லா ஹுடைய கட்டளையை முற்படுத்துவதினலும் அத்தாட்சி கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். இது விஷயத்தில் நப்சு அவனுக்கு வசப் படுமாகில் அப்போது கபருடைய அதாபுக்குத் தப்பலாமென்று அவன் ஆதரவுவைப்பான். அப்படி நப்சானது வசப்படாவிட்டால் அவன் தன்னை கபருடைய அதாபுக்கு ஒப்புக்கொடுக்கச் சித்தமாயிருப்பான். ஆனல் அல்லாஹு தஆலா பிழைபொறுக்கிறவனு யிருக்கிறன், அவன் நாடினல் மன்னிக்கவும் கூடும்.

(பஸல்) இப்போது நாம் ஆன்ம சம்பந்தமான நரகமென்பதின் பொருளை பயான் செய்கிறோம். ஆன்மசம்பந்தமான நரகமென்பதில் நமது கருத்து சரீர சம்பந்தமில்லாமல் ரூஹுக்கு மாத்திரம் உண்டா கிற நரகமேயாம். نار الله الموقدة التي تطلع على الافئدة அல்லா ஹுடைய நெருப்பாகிறது எரிக்கப்பட்டதா யிருக்கிறது அது கல்பு களைத் தாவிப் பிடிக்கின்றது என்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருப்பது இந்த நரகத்தைப்பற்றியே சயிக்கினையா யிருக்கிறது.

பின்பு அறிந்துக்கொள். ஆன்ம சம்பந்தமான நரகத்தில் மூன்று விதமான நெருப்புகளுண்டு. அவற்றுள் ஒன்று துன்யாவில் உவந்தி ருந்த பொருள்களைவிட்டுப் பிரிவதினலுண்டாகிய நெருப்பு; இரண்டா வது அருவருப்பான பாவங்களாலுண்டாகிய வெட்க நெருப்பு; மூன் றுவது அல்லாஹு தஆலாவுடைய ஜமாலை தரிசிக்க அருகனல்லா மலும் அதன் ஆதரவு நீங்கியும் போவதினலுண்டாகிய நெருப்பு. இந்த மூன்று நெருப்புகளும் (சரீரத்தை அல்ல) ரூஹைக் கொண்டு கொளுகினவைகளா யிருக்கின்றன. ஜனங்கள் இம்மூன்று நெருப்பை யும் இவ்வுலகத்திலிருந்தே தங்களோடு கொண்டுபோகின்றார்கள். அச்ச மூண்டாகும் பொருட்டு இதன் பொருளை ஒரு உபமானத்தால் உனக்கு விளக்கிக் காட்டுகின்றோம்.

முதலாவது—துன்யாவில் உவந்திருந்த பொருள்களை விட்டுப் பிரிந்ததினாலுண்டாகிய நெருப்பென்றது. இந்த நெருப்பு உண்டாவதற்குக் காரணம் கபறுடைய அதாபின் விவரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தான் இச்சித்த பொருள் தன்னோடிருக்கிற வரையில் தன் இச்சையும் அதற்குரியவைகளும் தன் கல்புக்குச் சொர்க்கமாயிருக்கும். அந்தப் பொருள் தன்னைவிட்டும் பிரிந்தால் அந்தப் பிரிவினையே தனக்கு நரகமாயிருக்கும். ஆகையால், الدنيا جنة الكافر துன்யாவாகிறது காபிருடைய சொர்க்கமாயிருக்கும் என்றபடி துன்யாவை இச்சித்தவன் துன்யாவிலிருக்கிற வரையில் சொர்க்கத்திலிருக்கிறான். மவுத்தின்போது அவன் இச்சித்த பொருளை அவனிடத்திலிருந்து பறித்துக் கொள்கிறார்களாதலால் ஆகிரத்தில் அவன் நரகத்திலிருப்பான். ஆனதால் ஒரே பொருள் விகற்பமாகிய இரண்டு நிலைமைகளில் சுகத்துக்கும் துக்கத்துக்கும் காரணமாகும் (அதாவது தான் இச்சித்தபொருள் தன்னோடிருக்கிற நிலைமையில் அது சுகத்துக்குக் காரணமாயிருந்தது. அது தன்னை விட்டுப் பிரிந்த நிலைமையில் அதுவே துக்கத்துக்குக் காரணமாயிற்று) துன்யாவில் இந்த நெருப்புக்கு உபமானம் யாதெனில், ஓர் அரசனுக்கு உலகமுழுவதும் வசப்பட்டிருக்கிறது. சகல ஜனங்களின்பேரிலும் அவன் அதிகாரம் செலுத்துகின்றான். எப்போதும் அழகிய அடிமைப் பெண்களோடும் யௌவன ஸ்திரீகளோடும் இன்பம் பாராட்டுகின்றான். நல்ல நல்ல தோட்டங்களையும் பூங்காவுகளையும் உன்னத மாளிகைகளையும் உல்லாசமாய்ச் சுற்றிஉலாவுவதில் பராக்காயிருக்கின்றான். அவன் இப்படியான சுகபோகத்தில் இருக்குங் காலத்தில் திடீரென்று ஒரு பகைவன் வந்து அவனைச் சிறை பிடித்துத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டான். பிரஜைகள் பார்க்க அவனை நாய் பிடிக்கும் வேலையில் நியமனம் செய்தான். அவன் கண்பார்க்க அவனுடைய ஸ்திரீகளையும் அடிமைப்பெண்களையும் தன் ஆட்சியில் வைத்து வேலை வாங்குகின்றான். அவனுடைய அடிமைப் பயல்களையும் தன் பணிவிடையில் வைத்துக்கொண்டான். அவனுடைய பொக்கிஷத்திலிருந்த விலையுயர்ந்த பொருள்களையெடுத்து அவனுடைய விரோதிகளுக்குக் கொடுத்து விட்டான். இப்போது பார் இவனுக்கு எவ்வளவு வருத்தமிருக்கும். இராஜ்ஜியத்தையும், மனைவி, மக்களையும், அடிமைப் பெண்களையும், வேலையாட்களையும், பொக்கிஷத்தையும், பொன் பொருள்களையும் விட்டுப் பிரிந்ததினாலுண்டாகிய நெருப்பானது அவனுடைய உயிரைத் தாவிப்பிடித்துப் பற்றியெரிகின்றது. ஆ! துக்கமே என்னை ஒரே வெட்டாக வெட்டியிருந்தால் அல்லது என் தேகத்தைக் கடினமான வேதனைக்கு ஒப்புக் கொடுத்திருந்தால் இந்த

உயிர்வேதனைக்குத் தப்பி யிருப்பேனே என்று நினைக்கிறான். இது ஒரு நெருப்புக்கு உபமான மாயிற்று. செல்வம் எவ்வளவுக்கு அதிகமா யிருக்கிறதோ இன்னும் இராஜரீகம் எவ்வளவுக்குப் பூர்த்தியாயிருக் கிறதோ அவ்வளவு அதிகமாய் இந்த நெருப்பு ஜ்வாலித்தெரியும். ஆகவே துன்யாவில் யார் அதிக இன்பத்தை யடைந்து கொண்டிருந்தார் களோ அவர்களுடைய இன்பமானது அவ்வளவு துன்பமாய் மாறும். அந்த இன்பங்களை விட்டுப் பிரிந்ததினாலுண்டாகிய நெருப்பானது உயிருக்குள்ளே அதிகமாய் ஜ்வாலித் தெரியும்.

இந்த நெருப்புக்கு இவ்வுலகத்தில் உபமானம் காட்டமுடியாது. ஏனென்றால் இவ்வுலகத்தில் எந்த துக்கமும் கல்பில் நிலைத்திருக்கிற தில்லை. ஐயறிவுகளும் துன்யாவுடைய காரியங்களும் கல்பைப் பராக் காக்கி வைக்கின்றதால் இந்தப் பராக்கானது கல்பின் விஷயத்தில் ஒரு திரையாயிருக்கிறது. ஆதலால் கல்பில் வந்த துக்கம் நிலைத்திரா மல் நீங்கிப்போகின்றது. இதனாலேதான் வியாதியில் வருத்தப்படுகின்ற நோயாளியானவன் தன்னுடைய கண், காதுகளை யாதொரு பராக்கில் செலுத்தினால் அப்போது அவனுடைய வருத்தம் கொஞ்சம் குறை கின்றது. அப்பராக்கை விட்டொழியும்போது அந்த வருத்தம் அதிகரிக் கின்றது. இன்னும் யாதொரு துன்பத்தை அடைந்திருக்கிற ஒருவன் தூங்கியெழுந்தால் அந்தத் துன்பம் அவனுக்குக் கனமாய் தெரிகின் றது. இதேனென்றால் உயிரானது நித்திரையின்போது ஒன்றோடும் கலக்காமலிருந்து பின்பு விழித்த ஆரம்பத்தில் அது ஐயறிவுகளோடு சேர்வதற்கு முன்னே எது அந்த உயிரில் உறைகின்றதோ அதன் குணம் பெரியதாகவே யிருக்கும். இன்னும் நித்திரையிலிருந்து எழுந்த ஆரம்பத்தில் நல்ல குரலோசையைக்கேட்டால் அதன் இன்பம் அதிக மாயிருக்கும். இதற்குக்காரணம் யாதெனில் ஐயறிவுகளின் விவகாரங் களைவிட்டு ஆத்துமா சுத்தமாயிருப்பதேயாம். இவ்வுலகத்தில் ஒரு போதும் ஆத்துமா அப்படிச் சுத்தமாகாது. மவுத்தாய்ப் போவதினால் ஐயறிவுகளின் விவகாரம் அற்றுப்போகின்றது. அப்போது ஆன்மாவா னது தனியாய் நிற்கும். ஆதலால் அதில் உறைந்திருக்கிற துக்க மென்றாலும் சுகமென்றாலும் அப்போது பெரியதாகவே யிருக்கும். அந்த நெருப்பு துன்யாவுடைய நெருப்பைப்போலிருக்கு மென்று நினைக்காதே. துன்யாவுடைய நெருப்பை எழுபது தடவை தண்ணீரால் கழுகி பின்பு அது துன்யாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

இரண்டாவது:—அருவருப்பான பாவங்களைச் செய்ததாலுண்டா கிய வெட்கநெருப்பென்றோம். அதற்கு உபமானம் யாதெனில், ஒரு பாதுஷாவானவன் ஒரு அற்ப மனிதனைத் தன்னுடைய ஸ்தானத்தி

லாக்கி இராஜ்ஜியத்தினுடைய காரியங்களில் அவனுக்குத் தன்னுடைய அதிகாரத்தையும் கொடுத்தான். இன்னும் தன்னுடைய ஸ்திரீகளிருக்கும் அரண்மனைக்குள்ளே அவனைத் தாராளமாய்ப் போகும் படிக்கும் எந்த இராஜ ஸ்திரீயும் அவனுக்கு வெட்கி மறையக் கூடாதென்றும் உத்திரவு செய்து அவனைப் பெரிய நம்பிக்கை யுள்ளவனாக மதித்துத் தன்னுடைய பொக்கிஷங்களெல்லாவற்றையும் அவன் வசம் ஒப்புவித்தான். அந்த அற்பன் தனக்குக் கிடைத்த இந்த பெருமைகளையெல்லாம் கண்ட போது அந்தரங்கத்தில் மீறி நடக்கவும், பாதுஷாவுடைய பொக்கிஷத்தில் கையாட்சி செய்யவும், இராஜ ஸ்திரீகளோடு சோர மார்க்கமாய்ச் சுகம் பாராட்டவும் துணிந்தான். ஆனால் பகிரங்கத்தில் தன்னை வெகு விசுவாச முள்ளவன் போல் காண்பிக்கிறான். இப்படியிருக்கையில் ஒரு நாள் இவன் அந்தப் புரத்தில் இராஜ ஸ்திரீயுடன் கள்ளத்தனமாகக் கலந்து கொண்டிருக்கும் போது பாத்ஷா இவனுக்குத் தெரியாமல் ஒரு சாளரத்தின் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறதை திடீரென்று இவன் கண்டு ஆ! ஆ! பாத்ஷாவல்லவோ பார்த்துக் கொண்டிருக்கிறான், தினந்தோறும் இவன் இப்படியே பார்த்திருக்கக்கூடும், நாம் செய்த தரோகமான இந்த குற்றம் அதிகப்பட வேண்டுமென்றும் அதற்குத் தக்கபடி என்னைக் கடினமாக வதை செய்து கொல்ல வேண்டு மென்றுங் கருதி யல்லவோ இவ்வளவு நாள் என்னைச் சும்மா விட்டிருக்கிறான். ஆ! நான் என்ன செய்வேன் என்று உள்ள முடைந்து உருகுகின்றான். இப்போது வெட்க மென்னும் நெருப்பு இவன் மனதை எப்படிச் சுடுமென்று யோசி. இவனுடைய சரீரமோ சவுக்கியமா யிருக்கிறது உயிரானது புழுக்க மடைந்து ஆ! பூமி வெடித்து என்னை விழுங்கா விட்டால் இந்த பங்கத்துக்கும் வெட்கக் கேட்டுக்கும் தப்பிப் போவேனே என்று நினைக்கிறான்.

. இது போலவே நீ இவ்வுலகத்தில் அநேக வேலைகளைச் செய்கின்றாய். அவை வெளிரங்கத்தில் நல்லவை போல் தோற்றுகின்றன. உண்மையில் அவை அநேக பங்கங்களுக்குக் காரணங்களா யிருக்கின்றன. உதாரணமாக :—நீ இன்றையில் ஒருவரைப் பற்றிப்புரங் கூறுவாயாகில் நாளை கியாமத்தில் உன் சகோதரனுடைய சதையை நீ பொரித்த கோழியைப் போல் ருசியுடன் தின்று கொண்டிருக்கக் காண்பாய். பின்பு நன்றாய் நோட்டமிட்டு இது என் சகோதரருடைய சதை யென்றறிந்தாயாகில் இதில் உனக்கு எவ்வளவு வெட்க முண்டாகும்? உன் மனம் என் எரியாது? புறங்கூறுவதின் உண்மை இது தான். இன்று உனக்கு இது தெரிகிறதில்லை என்றாலும் இது நாளை கியாமத்தில் வெளியாகும்.

இதனுலே தான் ஒருவன் தன் சொர்ப்பனத்தில் பிணத்தின் சதையைத் தின்னக் காண்பானுகில் அவன் புறங்கூறுகிறு னென்பது அதற்குத் தஃபீர் என்றது. இன்னும் நீ ஒரு சுவரின் மேல் கல்விட்டெறிந்து கொண்டிருந்தாய். அப்போது ஒருவன் வந்து இந்தக் கல்லானது சுவ ருக்கு மேலால் உன் வீட்டில் விழுந்து உன் குழந்தைகளுடைய கண் களிற் பட்டு கண் கலங்கிக் போய்விற்றென்று சொன்னுல் நீ திடுக்கிட்டு சரேலென்று உள்ளே போய் உன் அருமைக் குழந்தைகளுடைய கண் கள் கலங்கிப் போனதைப் பார்ப்பாயாகில் அப்போது எப்பேர்ப்பட்ட நெருப்பு உன் மனதில் பிடிக்கும். கல்லெறிந்ததைப் பற்றி நீ எவ்வளவு வெட்க மடைவாய். எவன் இவ்வுலகத்தில் ஒரு முஸ்லிமின் மேல் பொறுமை வைக்கின்றுனே அவன் கியாமத்தில் தன்னை இவ்விதமாகவே பார்ப்பான். பொறுமையின் உண்மை இது தான். அதாவது:— உன் எதிரி கெட்டுப்போக வேண்டுமென்று நீ நினைப்பாயாகில் உன் நினைப்பி னுல் அவனுக்கு ஒரு கேடும் சம்பவிக்காது. மேலும் அது உனக்கே கேடாய் முடியும். உன்னுடைய வணக்கங்க ளெல்லாம் அவன் பட்டோ லையில் எழுதப்பட்டன. நீ ஒரு அமலு மில்லாமல் வெறுங்கையனுய்ப் போனுய். நாளை கியாமத்தில் உன் வணக்கங்கள் உன் பிள்ளைகளுடைய கண்களைப் பார்க்கிலும் உனக்கு அதிக பிரயோஜனத்தைத் தரும். ஏனென்றுல், அவை உன் நற்பதவிக்குக் காரணமாகின்றன. குழந்தை கள் அப்படியாகின்றதில்லை. நாளை கியாமத்தில் குணங்க ளெல்லாம் அவற்றின் அந்தரங்கத்தின் படி உருவ மெடுக்கின்றவைகளா யிருப்ப தால் அவை அவ்விடத்தின் பழிப்புக்குக் காரணமாகும். நித்திரையானது அவ்வுலகத்துக்கு அடுத்திருப்பதைப் பற்றியே சொர்ப்பனத்தில் சில பொருள்கள் அவற்றின் அந்தரங்கத்தின் படி உருவ மெடுக்கின்றன. உதாரணமாக :—இபுனுஸீரீன் றஹிமஹுல்லா விடத்தில் ஒரு மனிதன் போய் சொர்ப்பனத்தில் என் கையில் ஒரு முத்திரை மோதிர மிருக் கிறது போலும், அதனுல் நான் ஆண் பிள்ளைகளுடைய வாயின் பேரிலும் பெண் பிள்ளைகளுடைய பர்ஜின் பேரிலும் முத்திரை வைக் கிறது போலும் கண்டே னென்று சொன்னன். அதற்கவர்கள் அம் மனிதனை நோக்கி நீ மூவத்தினு? என்று கேட்டார்கள். அதற்கவன் ஆம் என்றன். அப்போதவர்கள் அம்மனிதனைப் பார்த்து, நீ றமலா னில் சுபுஹு ஆவதற்கு முன்னே பாங்கு சொல்லுகிறுய் என்றார்கள். இப்போது இவ்விடத்தில் யோசித்துப்பார். றமலானில் பாங்கு என்பது உண்ணல், குடிக்கல், ஜிமாஉ செய்தல் இவைகளை விட்டுத் தடை செய்கிற ஒலி ரூபமான ஒரு பொருளா யிருக்கிறது. இப்பொருளின்

அந்தாங்கம் சொர்ப்பனத்தில் அவர்களுக்கு எப்படி அறிவிக்கப்பட்டது பார். கியாமத்துடைய இந்தக் காட்சி உனக்கு சொர்ப்பனத்தில் அறிவிக்கப்பட்டிருக்க ஒன்றும் உனக்குத் தெரியாம லிருப்பது அதிசய மாயிருக்கிறது. இது போலவே கியாமத்தில் தன்யாவானது அந்தக் கெட்ட கிழவியின் ரூபத்தில் கொண்டுவரப்படு மென்றும், அதைப் பார்க்கிறவர்க ளெல்லாம் இதை விட்டு நாங்கள் அல்லா விடத்தில் காவல் தேடுகிறே மென்று சொல்லுவார்க ளென்றும், அதற்கு ஜவாபாக, ஓ ஜனங்களே ! எதனுடைய தேட்டத்தில் நீங்கள் மாய்கிறவர்களா யிருந் தீர்களோ அந்தத் தன்யா தான் இது வென்று சொல்லப்படு மென்றும் அப்போது அதனலுண்டாகிற வெட்கத்தினின்று நீங்குவதற்கு நரகத் தில் விழ அவர்களுக்குப் பிரியமா யிருக்கு மென்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

இந்த வெட்க நெருப்பிற்கு இன்னுமோர் உபமானமாவது :—ஒரு பாத்ஷாவானவன் தன் மகனுக்கு விவாகஞ் செய்வித்தான். அவன் அன்றிரவு தன் பெண்ஜாதியிடம் போக ஆசை கொண்டு அதிகமாய்ச் சாராயத்தைக் குடித்து அந்த மயக்கத்துடன் பெண் வீட்டைத் தேடிப் புறப்பட்டான். விதி வசத்தால் வழியை மறந்து பட்டணத்தைத் தாண்டி வெளியே போய் விட்டான். அவ்விடத்தில் ஒரு கட்டிட மிருந்தது. அதில் விளக்கெரிந்துக் கொண்டிருந்ததைக் கண்டு இது தான் பெண் வீடு என்று நினைத்து உள்ளே பிரவேசித்தான். அவ்விடத்தில் சிலர் படுத்திருக்கிறதைக் கண்டு சில சப்தமிட்டு அவர்களைக் கூப்பிட்டான். ஒருவரும் ஜவாபு சொல்லாததினால் எல்லாரும் தூங்கி விட்டார்களென் றெண்ணிக் கொண்டான். புதிய போர்வையால் முகத்தை மூடிக் கொண்டிருக்கிற ஒருத்தியைக் கண்டு இவள் தான் என் பெண்ஜாதி யென்று நினைத்து அவளருகிற் படுத்து முகமூடியை நீக்கினான். அவள் தலையில்நின்றும் கமகம வென்று வாசங்கமழ்ந்ததினால் சந்தேகமின்றி இவளே என் பெண்ஜாதி இவளுக்கு அத்தர் முதலான பரிமளம் பூசி யிருக்கிறார்க ளென்றெண்ணிக் கொண்டு அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டு அவளுடன் கலவை செய்ய ஆரம்பித்தான். தன்னுடைய நாக்கை அவளின் வாயிலிட்டுச் சுழற்றிப் பலவிதமான இன்பங்கள் பாராட்டி அவளருகிற் படுத்தான். அவளுடைய வாயிலிருந்து வடிகின்ற உமிழ் நீர் இவன் மேல் படும் போது தனக்குப் பன்னீர் தெளித்து மரி யாதை செய்கின்றார்கள் என்று எண்ணிக் கொண்டான்.

பின்பு பொழுது விடிந்து அவனுக்கு மயக்கந் தெளிந்த போது பார்க்க அந்தக் கட்டிடம் மஜூஸுகளின் கபறஸ்தானா யிருக்கிறது, அதில் படுத்திருந்தவர்கள் செத்த சவங்களா யிருக்கிறார்கள். தன்

பெண்ஜாதியாய் எண்ணிக்கொண்ட அந்தப்புதிய போர்வைக்காரி அன்று செத்த அசிங்கிதமான ஒரு கிழவியாயிருக்கிறாள். அந்த வாசனையானது அவள்மேல் போடப்பட்டிருந்த கூட்டு மணத்தினால் கமழ்ந்து கொண்டிருந்தது. அவன்மேல் பட்டுக்கொண்டிருந்த அந்த ஈரமானது அவளுடைய வாயிலிருந்து வடிந்து கொண்டிருந்த அசுத்த மான நீராயிருந்தது. இன்னும் அவன் நன்றாய் நோட்டமிட்டு பார்க் கும்போது தன்னுடைய தேகம் முழுவதும் அசுத்த நீரினால் நனைந் திருக்கவும், அவளுடைய வாய் நீரினால் தன்னுடைய வாய் கசந்திருக் கவும் கண்டு, ஆ! இந்தப் பங்கத்திலும் அசுத்தத்திலும் நான் மரித்துப் போனால் நல்லதென்று நினைத்தான். இன்னும் தன் தகப்பனும் மற்றும் சேனைகளும் வந்து தன்னை இக்கதியில் கண்டுக்கொள்வார்களோ என்னவோ வென்று பயந்தான். இவன் இப்படியாய் யோசித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் பாஷாவானவன் தன்னோடு அமீர்களையும் பிரபுக்களையும் கூட அழைத்துக் கொண்டு இவனைத் தேடபுறப்பட்டு திடீரென்று அவ்விடத்திற்கு வந்துவிட்டான். இவனை இக்கதியி லிருக்கக் கண்டார்கள். அப்போது இராஜகுமாரன் சகிக்கமுடியாத வெட்கத்தினால் ஆ! பூமிவெடித்து என்னை விழுங்கிவிட்டால் இந்தப் பங்கத்தினின்றும் தப்பித்துக் கொள்வேனே என்று வெந்து புழுங்கு கின்றான்.

ஆதலால் துன்யாவை விரும்பினவர்கள் துன்யாவுடைய எல்லா இன்பங்களையும் நாளை கியாமத்தில் இதே விதமாய்க் காண்பார்கள். துன்யாவுடைய இச்சைகளால் அவர்களுடைய கல்புகளிலே தங்கி நின்ற கூறானது இராஜகுமாரனுடைய வாயிலிருந்த கசப்புக்கும் அசுத்தத் துக்கும் சமானமாகும். மேலும் அதனாலுண்டாகிற பங்கம் இன்னும் அதிகமாயிருக்கும். அவ்வுலகத்தி லுண்டாகிற பங்கத்துக்கு இவ்வுல கத்தில் உபமானம் காட்டமுடியாது. என்றாலும் கல்பைக் கொளுத்து கிற நெருப்பை விளங்கிக்கொள்ள இது ஒரு நமூனாவா யிருக்கிறது. சரீரத்துக்கு இது தெரியாது. இதற்கு வெட்க நெருப்பென்று சொல் லப்படும்.

மூன்றாவது:—அல்லாவுடைய ஜமாலைத் தரிசிக்க அருகனல்லா மலும் அதன் ஆதாவு நீங்கியும் போவதினாலுண்டாகிற நெருப்பென் றேமே இந்த நெருப்புக்குக் காரணம் யாதெனில், இவ்வுலகத்திலிருந்து கொண்டுபோன அறிவின்மையும் குருட்டுத்தனமுமேயாம். அதாவது இவ்வுலகத்தில் அவன் அல்லாவை அறியவில்லை. களங்கமில்லாத கண்ணாடியில் முகம் தெரிவதுபோல் கல்பில் அல்லாவுடைய ஜமாலான காட்சி தோற்றுவதற்கு இவன் பாடுபட்டு வணங்குவதினால் கல்பைச் சுத்தமாக்கவில்லை. மேலும் பாவங்களும் துன்யாவுடைய இச்சைகளு மான அழுக்கானது இவன் கல்பை கறுப்பாக்கி விட்டது. இந்த

நெருப்புக்கு உபமானம் பின் வருவதுபோலாகும். அதாவது இருள் மூடிய ஓர் இரவில் நீ ஒரு கூட்டத்துடன் சேர்ந்து பொடிக் கற்களால் நிறைந்திருக்கிற ஓர் இடத்திற்கு போனாய். அந்தக் கற்களின் நிறமோ தெரியவில்லை. உன்கூட இருந்தவர்கள் உன்னை விளித்து, சினேகா! இப்பொடிக் கற்களில் அனேக பிரயோஜனங்களிருக்கின்றன வென்று நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆதலால் நீ சுமக்கக்கூடிய வரையில் இக்கற்களை எடுத்துக் கட்டிக் கொள்ளென்று சொன்னார்கள். அவர்களும் தங்களால் கூடியவரையில் அவைகளை வாரிக்கட்டிக் கொண்டார்கள். நீயோ ஒன்றையும் எடுக்காமல் இவை நாளைக்கு உபயோகப் படுமோ என்னவோ? இப்படிச் சந்தேகமா யிருக்கிற வஸ்துவை இப்போது கஷ்டத்துடன் சுமந்து செல்வது பெரிய மடத்தனமா யிருக்கிறதென்று சொல்ல ஆரம்பித்தாய். தோழர்கள் சுமையைத் தூக்கிக் கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டார்கள். நீயோ வெறுங்கையனாய் அவர்களோடு செல்லுகின்றாய். அப்படிச் செல்லும்போது சிலசமயம் அவர்களை ஏளனம்பண்ணி நகைக்கின்றாய், சிலசமயம் அவர்களை மூடர்களென்றெண்ணி அவர்களின்மேல் பரிதாபப்படுகிறாய். இன்னும் புத்தியுள்ளவன் என்னைப்போல் சவுக்கியத்துடன் நடப்பான் என்றும் மூடனாயிருப்பவன் வீணாசையினால் கழுதைப் போல் பொதிசுமந்து செல்லுகின்றான் என்றும் அவர்களை இகழ்ந்து பேசுகின்றாய். கடைசியாய் வெளிச்சத்தில் வந்து பார்க்க அந்தப் பொடிக்கற்கள் இரத்தினங்களாயும் மாணிக்கங்களாயும் நீருள்ள உயர்ந்த முத்துக்களாயு மிருக்கின்றன. ஒவ்வொரு முத்தினுடைய விலை இலட்சம் பவுன்களாயிருக்கின்றது. அதை யெடுத்துக்கொண்டு வந்தவர்கள் ஆ! ஆ! நாம் இன்னும் அதிகமாய் கொண்டுவராமற் போனோமே என்று ஆசைப்பட ஆரம்பித்தார்கள். நீயோ உன்சந்தேகத்தினால் வஞ்சிக்கப்பட்டுக் கெட்டாய். இப்போது கைசேதமென்னும் நெருப்பு உன்மனதிலிருந்தெழும்பி உன்னைக்கொளுத்துகின்றது. அந்த ஜனங்கள் அவ்விரத்தினங்களை விற்று உலகத்தின் இராஜரீகத்தைக் கைக்கொண்டார்கள். நல்ல நல்ல ருசிகரமான உணவுகளைத் தின்னவும் மனதுக்கு இன்பமான இடத்திலிருந்து சுகம் பாராட்டவும் ஆரம்பித்தார்கள். இனி உன்னை உண்கச்சோறும் உடுக்கப் புடவையுமில்லாத தரித்திரனாக வைத்து உன்னிடத்தில் வேலைகொள்ளப் போகிறார்கள். அப்போது நீ அவர்களிடத்தில் கெஞ்சி அந்த நிமித்தத்தில் எனக்கும் கொஞ்சம் கொடுங்கள் என்று கேட்பாய். அவர்கள் அதற்குப் பிரத்தியாக, قوله تعالى ان تسخروا منا فانا نسخر منكم كما تسخرون நீ அன்று எங்களை ஏளனம் பண்ணி நகைத்துக் கொண்டிருந்தாய். நாங்கள் இன்று உன்னை நகைப்போம் என்று சொல்லுவார்கள்.

சொர்க்கத்துடைய நிஃமத்துகளையும் அல்லாஹு தஆலாவுடைய தீதாரையும் அடைய அருகனல்லாமல் போவதிலுண்டாகிற துக்க நெருப்புக்கு இதுவே உபமானமாம்.

அந்த இருள் என்பது துன்யாவும் இரத்தினங்களென்பது இபாதத்துகளுமாயிருக்கின்றன. எந்த ஜனங்கள் துன்யாவில் இபாதத்தென்னும் இரத்தினங்களை எடுத்துக்கொள்ளவில்லையோ இன்னும் நாளைக்குக் கிடைக்கப்போகிற அதுவும் சந்தேகமாயிருக்கிற பிரயோசனத்துக்காக இன்று ஏன் கஷ்ட மெடுத்துக் கொள்ளவேண்டு மென்று சொன்னார்களோ அந்த ஜனங்கள் நாளை கியாமத்தில், افيضوا علينا من الماء அபீலு அலைனா மினல்மாயி என்று கதருவார்கள்.

இந்த நிர்ப்பாக்கியர்கள் ஏன் கைசேதப்படமாட்டார்கள்? ஆரிபுகளுக்கும் ஆபிதுகளுக்கும் அவ்விடத்தில் மேன்மைகளும் பெருமைகளும் கிடைத்து அதனால் அவர்கள் ஒரு ஸாஅத்துநேரம் அடைகின்ற நிஃமத்துகளுக்கு துன்யாவுடைய எல்லா நிஃமத்துகளும் ஈடாகமாட்டாவே. எவனை எல்லாரிலும் கடைசியாக நாகத்திலிருந்து விடுவிப்பார்களோ அவனுக்கும் துன்யாவுடைய நிஃமத்துகளுக்கு இரண்டத்தினையான நிஃமத்துகள் கொடுக்கப்படும். இப்படிச் சொர்க்க நிஃமத்துகளை துன்யாவுடைய நிஃமத்துக்கு ஒப்பிட்டது நிஃமத்தின் அளவை அல்ல. மேலும் ரூஹில் உண்டாகிற ஆனந்தத்தையும் இன்பத்தையுமே இவ்விடத்தில் நிஃமத் தென்றது. அதற்கு உதாரண மென்னவென்றால் ஒரு முத்தானது பத்து பவுனுக்குச் சமமாயிருக்கிறதென்றால் இவ்விடத்தில் முத்தினுடைய மதிப்பே கருத்தாகும். நிறையும் அளவுமல்ல.

(பஸல்) ஆன்ம சம்பந்தமான மூன்றுவித நெருப்பையும் நீ அறிந்து கொண்டாய். இந்த நெருப்பு தேக சம்பந்தமான நெருப்பினும் அதிக காந்தலான தென்பதையும் இப்போது தெரிந்துகொள். தேகத்திலுண்டான வருத்தத்தின் கூறு உயிருக்குள் உறையாதவரையில் தேகத்துக்கு அந்த வருத்தம் தெரிகிறதில்லை. அதாவது புறம்பேயிருந்துண்டான வருத்தத்தை முதலில் தேகம் பரிசித்தபோதிலும் அதை உயிர் உணர்ந்த பிறகுதான் தேகத்தில் வருத்தம் அதிகரிக்கின்றது. ஆகவே உயிருக்குள்ளேயே யிருந்து எழும்பின நெருப்பும் துக்கமும் அகத்தியம் அதிக கடினமாகவே யிருக்கும். நாம் கூறிவந்த மூன்றுவித நெருப்பும் உயிருக்குள்ளிருந்தே எழும்புகிறதாயிருக்கிறது, புறம்பே இருந்து வருகிறதல்ல.

ஒரு பொருளின் சுபாவ விருப்பத்துக்கு நேர்மாறான மற்றொரு பொருள் அதை பிகைக்கும் பொழுது அப்பொருளுக்குப் பலவிதத்தில் வருத்தமுண்டாகிறது. உதாரணமாக தேகத்தின் சுபாவ விருப்பம் யாதெனில் அதன் இணைப்பில் இடையூறு வரக்கூடாதென்பதும் அதன் உறுப்புகள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்க வேண்டுமென்பதுமேயாம். புண் முதலிய காரணங்களால் அதன் உறுப்புகள் ஒன்றை விட்டு ஒன்று பிரிகின்றபோது அதற்கு நேர்மாற்றம் சம்பவிக்கின்றதால் அதற்கு வருத்தமுண்டாகின்றது. எப்படிப் புண்ணானது உறுப்புகளைப் பிரிக்கின்றதோ அப்படியே நெருப்பும் ஒன்றில் தாக்கி அதன் உறுப்புகளைப் பிரிக்கின்றதால் (அவ்வுறுப்பின் கடினத்துக்கும் மிருதுவுக்கும் தக்கபடி) ஒவ்வோர் உறுப்பிலும் வெவ்வேறுவிதமான வருத்தம் உண்டாகின்றது. புண்ணைவிட நெருப்பு மிகவும் கடினமானதாயிருப்பதினாலேயே அதனாலுண்டாகிற வருத்தம் அதிகமாயிருக்கிறது. இதுபோல் கல்பின் சுபாவம் எதை விரும்புகின்றதோ அதற்கு நேர்மாற்றமானது அதில் உண்டாகுமானால் அதன் வருத்தம் கல்புக்குள்ளேயே அதிக கடினமானதாயிருக்கும். கல்பின் சுபாவமானது அல்லாஹ்வுடைய மஃரிபாவையும் அவனுடைய தீதாரையும் விரும்புகின்றது. அதற்கு நேர்மாற்றமான குருட்டுத்தனம் அதில் உண்டாகுமாகில் அதன் வருத்தம் அதிகமாகவே இருக்கும்.

இவ்வுலகத்தில் மனிதனுடைய கல்புகள் பிணிகொள்ளாதிருந்தால் இந்தக் குருட்டுத்தன மென்னும் ரோகத்தை அவர்கள் காண்பார்கள். திமிர்வாத ரோகமுள்ள தேகத்தில் நெருப்பின் சூடு தாக்குகிறதில்லை. அந்த ரோகம் நீங்கினால் நெருப்பின் சூடு தாக்கி ஒரு மிக்கப் பெரிய வருத்தத்தை அடைகிறான். இதுபோலவே துன்யாவில் எல்லாருடைய கல்பிலும் திமிர்வாத ரோகம் பிடித்திருக்கிறது. இந்த ரோகம் மரணத்தோடு ஒழிந்து போகின்றது. பின்பு இந்த நெருப்பு திடீரென்று உயிருக்குள்ளேயிருந்து எழும்புகின்றது. வெளியேயிருந்து வருகிறதல்ல, ஏனென்றால் இவன் இவ்வுலகத்திலிருந்து போகுமபோது இவன்தானே தன்னோடு இதைக்கொண்டு போயிருக்கிறான். இது இவன் கல்பில் மறைந்திருந்தது. இவனுக்கு, இல்மூல் யகீன் இல்லாதபடியால் இந்த நெருப்பை இவன் அறியாமலிருந்தான். இப்போது இல்மூல் யகீன் கிடைத்தபடியால் அறிந்து கொண்டான்.

ஷரீஅத்தில் தேக சம்பந்தமான சொர்க்க நரகங்களை குறித்து விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதேனென்றால் எல்லா ஜனங்களும்

அதை அறியக்கூடியவர்களா யிருக்கிறார்கள். ஆனால் ஆன்ம சம்பந்தமான நரகத்தைப்பற்றி நீ ஒருவனிடத்தில் சொன்னயாகில் அவன் அதை மிகவும் இலேசாக எண்ணுகிறான். அதனுடைய கடினத்தை அவன் அறிகின்றதில்லை. இதற்கு உபமானமாவது:— நீ ஒரு பையனை நோக்கி, "தம்பி! நீ ஏதாவது கொஞ்சம் கல்வியைப் படித்துக்கொள்: அப்படி படிக்காமற்போனால் உன் தகப்பனுடைய தவுலத்து உனக்குக் கிடைக்காது. நீ அந்த சுகபோகத்திற்கு அருகனல்லாமற் போவாய்" என்று சொல்வாயாகில் அந்த தவுலத்துடையவும் சுக போகத்துடையவுமான பொருள் அவனுக்குத் தெரிகின்றதில்லை. யாதலால் அந்தச் சொல் அவனுடைய மனதில் உறைகிறதில்லை. நீ படிக்காமற்போனால், உஸ்தாது உன் காதைப்பிடித்து முறுக்குவார் என்று அவனுக்குச் சொல்வாயாகில் அவன் அதற்குப் பயப்படுகிறான். எனென்றால் இந்தச் சொல் அவன் மனதில் உறைகின்றது.

எப்படி அதபில்லாத பையனை உஸ்தாது தண்டிப்பதும் அவன் தன் தகப்பனுடைய தவுலத்துக்கு அருகனல்லாமற் போவதும் உண்மையாயிருக்கிறதோ அப்படியே தேக சம்பந்தமான நரகமும் அல்லாஹ்வுடைய சமுகத்திற்கு அருகனல்லாமற் போவதினாலுண்டாகிற நெருப்பும் உண்மையாயிருக்கிறது. இப்படி அல்லாஹ்வுடைய சமுகத்திற்கு அருகனல்லாமற்போவதைக் குறித்துச் சரீர சம்பந்தமான நரகத்தை சொன்னதானது தகப்பனுடைய தவுலத்துக்கு அருகனல்லாமற் போவதைக் குறித்து உஸ்தாதுடைய தண்டனையைச் சொன்னது போலாகும்.

(பஸல்) ஒருகால் நீ இந்தச் சங்கதிகளை தக்லீதினாலும் கேள்வியினாலுமன்றி மற்றபடி இதனுடைய ஹகீகத்தைப் புத்தியினாலும் அகப்பார்வையினாலும் அறியமுடியாதென்று உலமாக்கள் கிதாபுகளில் எழுதியிருக்கிறார்களே முன் சொல்லிவந்தது இதற்கு விரோதமாயிருக்கிறதே என்று சொல்லக்கூடும்.

அருமையானவனே! கேள். உலமாக்கள் அப்படி சொல்வதற்குக் காரணம் முன்னே கூறப்பட்டிருக்கிறது. இது அதற்கு விரோதமானதல்ல. ஏனென்றால் இவர்கள் ஆகிறத்தின் விஷயத்தில் சொல்லியிருக்கிறதெல்லாம் சரியாகவே யிருக்கிறது. ஆனால் இவர்கள் ஐயறிவுகளால் அறியப்படும் பொருள்களை மாத்திரமேயன்றி அதற்கு மேல் வகுப்பிலிருக்கிற ஆன்மலோகங்களை அறியவில்லை. அல்லது

அறிந்திருந்து அதை ஜனங்கள் அறியமாட்டார்க ளென்று விளக்கிக் காட்டவில்லை. சரீர சம்பந்தமான விஷயங்களை ஷரஹுடையவர்களிடத்தில் கேட்பதன்றி அவை தெரியலாகா. ஆனால் இந்த மற்றொரு விதம் ரூஹுடைய ஹகீகத்தை அறிவதின் கிளையா யிருக்கிறது. இதை அகப் பார்வையால் அறியமுயலு. எவன் தன் ஊரை விட்டுப் புறப்பட்டு தீனுடைய பாதையில் சபர் செய்கிறவனு யிருக்கிறானே அவனே இதை அறிவான். ஊர் என்றதில் நமது கருத்து பட்டணமும் வீடு மல்ல. இது சரீரத்தின் ஊரா யிருக்கிறது. சரீரத்தின் சபர் அவ்வளவாய்ச் சிறந்ததல்ல. ஆனால் ரூஹுக்கு அது புறப்பட்ட இடமொன்றிருக் கிறது. அது தான் அதன் ஊர் இவ்விடத்தி லிருந்து அது சபர் செய்ய நேரிடும். வழியிற் சில மன்ஜில்க ளென்ற இறங்கு மிடங்களிருக்கின் றன. ஒவ்வொரு மன்ஜிலிலும் வெவ்வேறு ஆலமிருக்கிறது. முந்தின மன்ஜிலாகிறது * மஹ்ஸூஸாத்துடைய ஆலமாம், பின்பு † முகய்யலாத் துடைய ஆலம், பின்பு ‡ மவுஹூமாத்துடைய ஆலம், பின்பு ||மஃகூலாத் துடைய ஆலம். இது நாலாவது மன்ஜிலா யிருக்கிறது. இந்த நாலாவது மன்ஜிலில் தான் இவன் தன் ஹகீகத்தை அறிகின்றவனாகின்றான். இதற்கு முன்னே இவனுக்குத் தன் ஹகீகத்து ஒன்றும் தெரிகின்ற தில்லை. இந்த ஆலம்களைப் பின் கூறும் உபமானத்தினால் விளங்கிக் கொள்ளக்கூடும். அதாவது :—

மனிதன் மஹ்ஸூஸாத்துடைய ஆலத்திலிருக்கிற வரையில் அவ னுடைய பதவியானது விளக்கில் வந்து விழுகிற விட்டிற் பூச்சியின் பதவிக்குச் சமமாகும். ஏனென்றால் அதற்குப் பார்வை யென்னும் புலனிருக்கிறது என்கினும் நினைவென்னும் தத்துவம் கிடையாது. இதனாலே தான் அது இருட்டில் நின்றும் ஒரு இடம் தேடிப்பறந்து வருகையில் விளக்கின் சுடரைக் கண்டால் அதை ஒரு வலை யென் றெண்ணி அதிற் புகுதலாமென்று அதன் மேல் வந்து விழுகின்றது. விளக்கின் சூடுதாக்கி வலியடைந்தும் அதற்கு நினைவென்னும் தத்துவ மில்லாதபடியால் மறு தடவையும் அதன் மேல் வந்து விழுந்து மாய் கின்றது. நினைவென்னும் தத்துவம் அதற்கிருந்தால் முன் தாக்கின சூடு அதன் நினைவி லிருக்கு மாதலால் பின்பும் அதன் மேல் வந்து விழாது. ஆகவே இந்த மஹ்ஸூஸாத்துடைய ஆலம் முந்தின மன்ஜிலா யிருக்கும்.

இரண்டாவது மன்ஜிலாகிறது முகய்யலாத்துடைய ஆலமாம். மனிதன் இந்த ஆலத்தி லிருக்கிற வறையில் மிருகங்களுடைய பதவியி லிருக்கின்றான். ஒரு வஸ்துவைக் கொண்டு வருத்த மடையாத வரை

---

* ஐயறிவுகளுக்குப் புலப்படுகிறவை. † நினைவுக்குப் புலப்படு கிறவை. ‡ ஐயத்துக்குப் புலப்படுகிறவை. || புத்திக்குப் புலப்படுகிறவை.

யில் அதை விட்டுத் தப்பித்துக் கொள்ள வழி பார்க்கிறதில்லே. ஒரு வஸ்துவில் தனக்கு அபாய மிருக்கிறதை ஒரு தரம் கண்டால் மறு தடவை அதை விட்டுத் தப்பித்துக் கொள்ள வகை செய்து கொள்ளு கிறான்.

மூன்றுவது மன்ஜிலாகிறது, மவ்ஹூமாத்துடைய ஆலமா யிருக் கும். மனிதன் இந்த ஆலத்துக்கு வந்தால் ஆட்டுடையவும் குதிரை யுடையவுமான பதவியிலாகின்றான். அதாவது :—முன் ஒரு போதும் பார்த்திராத அபாயத்தை அறிந்து கொள்ளுகிறான். இதனால் தனக்கு வருத்தம் சம்பவிக்கு மென்றுணர்ந்து கொள்ளுகிறான். ஓநாயை எப் போதும் பார்த்திராத ஆடும், புலியை எப்போதும் பார்த்திராத குதிரை யும் அவைகளைக் காணும் போதும் ஓட்டம் பிடிக்கின்றன. இதனால் தனக்கு அபாயம் நேரிடுமென்றுணர்ந்து கொள்ளுகின்றன. ஓநாயைப் பார்க்கிலும் புலியைப் பார்க்கிலும் மாடும் ஒட்டகமும் யானையும் தேகத் தில் அதிக காத்திரமுள்ளவைகளா யிருந்தும் இவைகளைக் கண்டால் எந்த ஆடும் குதிரையும் பயந்து ஓட்டம் பிடிக்கிறதில்லே. இது அவை களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு அறிவா யிருக்கிறது. இதனால் அவை தங்களுடைய வைரிகளை அறிந்து கொள்ளுகின்றன. இவை யெல்லா மிருந்தும் நாளைக்கு உண்டாகப் போகிற ஒரு தன்புத்தி னின்றும் தப்பித்துக் கொள்ள அவை வகை செய்து கொள்கிறதில்லே. ஏனென்றால் இது மஃகூலாத்துடைய ஆலமாகிய நாலாவது மன்ஜில் உண்டாவதா யிருப்பதினாலென்க.

மனிதன் இந்த நாலாவது மன்ஜிலுக்குச் செல்லுவானாகில் எல்லா மிருகங்களுடைய எல்லையை விட்டும் தாண்டி விட்டான். இது வரை யில் மிருகங்களோடிருந்தான். இப்போது இன்ஸானியுடைய ஆலத்தின் ஆரம்பத்துக்கு வந்து சேர்ந்தான். இந்த ஆலத்தில் ஐயறிவுகளுக்கும் நினைவுக்கும் ஐயத்துக்கும் புலப்படாத பொருள்களைக் காண்கிறான். இனி உண்டாகப் போகிற காரியங்களி னின்றும் தப்பித்துக் கொள்ள காவல் செய்கிறான். விஷயங்களின் உண்மையைப் பிரித்தறிகின்றான். ஒவ்வொரு வஸ்துவின் முழு ரூபத்தையும் பொதிந்திருக்கிற அதன் சாரத்தை அறிந்து கொள்ளுகிறான். இவ்வுலகத்தில் தென்படுகிற எந்தப் பொருள்களும் அளவில் அடங்கினவைகளா யிருக்கின்றன. ஏனென்றால் ஐயறிவுகளுக்குப் புலப்படுகிற எந்தப் பொருளும் சடமா யிருப்பதை விட்டும் புறம்பாகாது. பின்பு சடமெல்லாம் அளவில் அடங்கினவைகளே யாம்.

முந்தின மன்ஜிலாகிய ஆலம் மஹ்ஸூஸாத்தில் இவனுடைய நடையாகிறது யாவரும் நடக்கக் கூடிய தரை வழி நடைக்குச் சமானமாகும். நாலாவது மன்ஜிலாகிய ஆலம் மஃகூலாத்தில் இவன் நடப்பதானது விஷயங்களின் உண்மையை அறிவதிலா யிருப்பதால் அது தண்ணீரின் மேல் நடப்பது போலாகும். ஆலம் மவ்ஹூமாத்தில் இவன் நடப்பது கப்பலில் ஏறிச் செல்வது போலாகும். இது நிலத்தில் நடப்பதற்கும் நீரில் நடப்பதற்கும் நடுத்தரமா யிருக்கிறது. இன்னும் ஆலம் மஃகூலாத்துக்கு அப்புறம் ஓரிடமிருக்கிறது. அவ்விடத்திற்கு அன்பியாக்களும், அவுலியாக்களும், தஸவ்வுபுடையவர்களும் போகின்றார்கள். அதற்கு உபமானம் ஆகாயத்தில் பறப்பது போலாகும். இதனாலே தான் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் நீரின் மேல் நடப்பவர்களா யிருந்தார்களென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடத்தில் ஜனங்கள் சொன்னதற்கு. او ازداد يقينا لمشى في الهواء "மெய்தான் அவருடைய யகீன் அதிகமானால் ஆகாயத்தில் பறப்பார்" என்று திருவுளமானார்கள். ஆனதால் மனிதன் சபர் செய்கிற மன்ஜிலுகளில் அவனுக்குப் புறப்படுகிற ஆலம்கள் மூன்று யிருக்கின்றன. எப்போது மன்ஜிலுகள் முடிவாகின்றனவோ அப்போது அவன் ஒருக்கால் மலக்குகளுடைய வகுப்பில் வந்து சேரக்கூடும். ஆனதால் மிருகங்களுடைய தாழ்ந்த பதவிகளி லிருந்து மலக்குகளுடைய உயர்ந்த பதவிகள் வரையில் மனிதன் ஏறுகிற மன்ஜிலுகளா யிருக்கின்றன. இது அவனுடைய இரக்கமும் ஏற்றமுமா யிருக்கின்றது. இவன் தாழ்ந்த வகுப்பில் விழுந்து கிடப்பானே அல்லது உயர்ந்த பதவிக்குச் செல்வானே என்ற ஒரு பெரிய பயம் அவனைத் தொடர்ந்து நிற்கிறது. இதன் விபரத்தைக் குறித்து குருஆனில் வந்திருக்கிறதாவது :—

انا عرضنا الامانة على السموات والارض والجبال فابين ان يحملنها واشفقن منها وحملها الانسان انه كان ظلوما جهولا.

"நாம் நம்முடைய அமானத்தை வானங்களின் பேரிலும் பூமியின் பேரிலும் மலைகளின் பேரிலும் எடுத்துக் காட்டினோம். பின்பு அதைத் தூக்க முடியாதென்று அவை விலகிக் கொண்டன. இன்னும் அதற்குப் பயந்தன. இன்னும் இன்ஸான் அதைத் தூக்கிக் கொண்டான். திடனாக அவன் அன்னியாயக்காரனும் அறிவில்லாதவனுமிருந்தான்" என்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறான். எந்த வஸ்து தாது வர்க்கத்திற் சேர்ந்ததா யிருக்கின்றதோ அதன் பதவி மாறமாட்டாது. அது அறிவற்றதா யிருக்கிறது. அதற்கு யாதொரு பயமும் நேரிடாது. மலக்குகள் உயர்ந்த பதவியி லிருக்கிறார்கள்.

அவர்கள் தங்களுடைய ஸ்தானத்தை விட்டு இரங்க மாட்டார்கள். மிருகங்கள் தாழ்ந்த வகுப்பில் இருக்கின்றன. இவை உயர்ந்த வகுப்பில் ஏறுகிற தகுதியில்லாதவைகளா யிருக்கின்றன. மனிதன் இவ்விரண்டுக்கும் மத்தியி லிருப்பதால் இது பயப்பட வேண்டிய இடமா யிருக்கிறது. ஏனென்றால் இந்த ஸ்தானத்தி லிருந்து மேலே ஏறுவதினால் மலக்குகளுடைய வகுப்பில் சேரவும் கீழே இரங்குவதினால் மிருகங்களுடைய வகுப்பில் விழவுமான நிலைமையில் இந்த ஸ்தானம் இருப்பதினாலென்க. ஆகவே அமானத்தை தூக்குவதென்பதற்குப் பொருள் அபாயமான வேலையை ஏற்றுக்கொள்வ தென்பதேயாம். பின்பு மனிதனுக்கன்றி மற்றெந்தப் படைப்புக்கும் அல்லாவுடைய அமானத்தென்னும் சுமையைத் தூக்க வல்லமையில்லை.

ஆகக்கூடிய முடிவு என்ன வென்றால் அநேகம் பேர் சொல்லாத சங்கதியை நாம் சொல்லி விட்டோம். முஸாபிரானவன் எப்போதும் முகீம்களுக்கு மாற்றமா யிருப்பது புதுமையல்ல. முஸாபிர் அருமையாயும் முகீம்கள் அதிகமாயு மிருப்பது உனக்குத் தெரிந்த விஷயமே. எவன் முந்தின மன்ஜிலுகளாகிய :மஹ்ஸூஸாத்திலும் முகய்யலாத்திலும் தரிபட்டிருக்கிறானே அவனுக்கு ஒரு போதும் விஷயங்களின் உண்மை வெளியாகா தென்றும் அவன் ரூஹுடைய சங்கதிகளை அறியமாட்டா னென்றும் இதனாலே தான் இதனுடைய விவரம் கிதாபுகளில் அருமையா யிருக்கிற தென்றும் நீ நிதானித்துக் கொள். இந்தப் பயானை இவ்வளவோடு போதுமாக்குவோம். இதற்கு மேல் அதிகமாக ஆகிரத்துடைய மஃரிபத்து எவருடைய புத்தியிலும் அமையாது. மேலும் இவ்வளவு கூட அமைவது கஷ்டமா யிருக்கும்.

(பஸல்) விஷயங்களைத் தங்கள் புத்தியினால் அறியும் சக்தியும் ஷரீ அத்தைக் கொண்டு அதை ஏற்றுக் கொள்ள அருளும் இல்லாத அனேக மூடர்கள் ஆகிரத்துடைய விஷயத்தில் மதிமயக்க முள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்குச் சந்தேகம் மேலிட்டிருக்கிறது. இச்சைகளின் மிகைப்பினால் ஆகிரத்தை நிராகரிக்க அவர்களுக்குப் பிரியமாகின்றது. அப்போது அந்த நிராகரிப்பு அவர்களுடைய மனதில் வேர் பிடித்து முளைத்தெழும்ப ஆரம்பிக்கின்றது. ஷைத்தான் அதை வளர்க்கிறவனாகின்றான். ஷரஹில் சொல்லி வரப்பட்ட நரகத்துடைய சங்கதிகள் அச்சமூட்டுவதற்கு மாத்திர மென்றும் சொர்க்கத்துடைய சங்கதிகளெல்லாம் ஏமாற்றலா யிருக்கிற தென்றும் தங்கள் மனதில் எண்ணிக் கொள்ளுகிறார்கள். இதனால் முற்றிலும் நப்ஸுடைய இச்சைகளுக்கு வழிபடுகிறார்கள். ஷரஹின்படி நடக்கிறார்களில்லை. ஷரஹைத் தொடர்ந்து நடப்பவர்களைக் கண்டால் அவர்களை இவர்கள்

மிசவும் கேவலமாய் நிணைத்து இவர்கள் மருள் பிடித்தவர்களா யிருக் கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பேர்ப்பட்ட மூடனுக்கு அந்த இரகசியங்களை அத்தாக்ஷிகளால் அறியும் தகுதி எங்கே யிருக்கிறது. இல்லை யாதலால் ஒரு வெளியரங்கமான பேச்சில் கொஞ்சம் யோசித்துப் பார்க்கும் படி பின் வருமாறு சொல்லி இவனை நல்வழிக்கு அழையுங் கள். அதாவது :—

இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும் அறிவையுடைய எல்லாப் பெரியோர்களும் உலமாக்களும் அவுலியாக்களும் பிசகிப் போனார்க ளென்றும் மருள் கொண்டார்க ளென்றும் உன் எண்ணத்தில் மிகைத்திருக்கிற பகூத்தில் கடைசியில் இந்த உன் எண்ணம் பிசகா யிருக்கவும் நீயே மருள் பிடித்தவனு யிருக்கவும் கூடும். ஏனென்றால் ஆகிரத்துடைய உண்மையும் ஆன்ம சம்பந்தமான அதாபையும் நீ அறியாதவனு யிருப்பதினாலும், ரூஹ்களுடைய உபமானத்தை இவ் வுலகத்தி னின்றும் தெரிந்து கொள்ளாதவனு யிருப்பதினாலு மென்க பின்பு அவன் தன் பிச்சை ஒப்புக் கொள்ளாமல் இரண்டானது ஒன்றி னும் அதிக மென்று நான் எப்படி அறிந்திருக்கிறேனோ அப்படியே ரூஹ்களுடைய ஹகீகத் தென்பது ஒன்றுமே யில்லை யென்றும் ஆன்ம சம்பந்தமும் தேக சம்பந்தமுமான சொர்க்க நரக சுகதுக்கங்க ளெல்லாம் பொய்யென்று நிச்சயந்தேகமாய் அறிந்திருக்கிறே னென்றும் சொல்லுவானாகில் இவனுடைய சுபாவம் கெட்டுப் போயிற்று. இவன் திருந்துவானென்ற ஆசை வைக்க வேண்டாம். இவனை பின்வரும் ஆயத்திற் கூறி யிருக்கிற கூட்டத்தில் ஒருவனு யிருக்கிறான்.

அதாவது :— وان تدعوهم الى الهدى فلن يهتدوا اذا ابدا

"நீர் அவர்களை நல்வழிக்கு அழைப்பீராகில் அவர்கள் ஒரு போதும் நல்வழிக்கு வாமாட்டார்கள்" என்று அல்லாஹ் தஆலா திருவுளமா யிருக்கிறான்.

ஆனால் அவன் இப்படி ஆகிறத்தை அறவே மறுத்துப் பேசாமல் அது சம்பவிப்பது அசாத்திய மென்று எனக்கு ஏற்படவில்லை யென் றும், அது சம்பவிக்கவும் கூடுமென்றும் ஆனால் இது புத்திக்கு வெகு தூரமா யிருக்கிற தென்றும், இது விஷயம் எனக்குச் சந்தேகமறத் தெரியவில்லை யென்றும், மேலும் அது சம்பவிக்காது என்கிற எண்ணமே அதிகமாயும் சம்பவிக்கு மென்கிற எண்ணம் அற்பமாயு மிருக்கிற தென்றும் அற்பமான எண்ணத்தினால் வயது முழுமையும் நான் ஏன் கஷ்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் நப்சுடைய இன்பங் களை நான் ஏன் விட்டிருக்க வேண்டு மென்றும் சொல்லுவானாகில் நம்

அவனுக்கு விடை யளிப்போம். அதாவது :—இப்போது நீ அது சம்பவிக்கு மென்கிற எண்ணம் அற்பமாய் இருக்கிற தென்று சொன்ன யல்லவா? இந்தச் சொல்லைக் கொண்டு புத்தியின் படி நீ ஷரஹைத் தொடரக் கடமைப் பட்டவனு யிருக்கிறாய், எனென்றால் அபாயம் பெரியதா யிருந்தால் அற்ப எண்ணத்தினாலும் அந்த அபாயத்தி னின்றுந் தப்ப வழி பார்க்கிறார்கள். அதெப்படி யென்றால் நீ ஆகாரம் அருந்த நாடிச் சோற்றில் கையிட்ட நேரத்தில் இந்தச் சோற்றில் சர்ப்பம் வாயிட்டிருக்கிற தென்று ஒருவன் சொல்லுவானுகில் கட்டாய மாய் நீ கையைச் சோற்றி லிருந்தெடுத்துக் கொள்ளுவாய். அவன் பொய் சொல்லுகிறா னென்கிற எண்ணம் உனக்கிருந்தாலும் அதைப் பாராட்டாமல் அது நிச்சயமா யிருக்கவுங் கூடுமென்றெண்ணி இதை நான் உண்கா விட்டால் என்ன? பசியின் வேதனையைப் பொறுத்துக் கொள்வது எனக்கு எளிதா யிருக்கிறது. அப்படியல்ல வென்று இதை நான் உண்பேனுகில் ஒருக்கால் அவன் சொல்லுவது உண்மையா யிருக் கிற பக்ஷத்தில் நான் மரித்து போவே னென்று அதை உண்காமலே விட்டு விடுகிறாய். இன்னும் இது போலவே நீ பிணி கொண்டு இதனால் இறந்து போவேனென்கிற பயம் உனக்குண்டான போது தஃவீசு எழுதுகிற ஒருவன் வந்து எனக்குக் கால் ரூபாய் கொடு உனக்குத் தஃவீசும் சக்காமும் ஸ்தாபித்துத் தருகிறேன், அதனால் நீ ஆரோக்கி யத்தை அடைவாய் என்று சொல்லுவானுகில் இந்தத் தஃவீசுக்கும் ஆரோக்கியத்துக்கும் யாதொரு சம்பந்தமில்லை என்று உன் மிகைப்பான எண்ணத்தி லிருந்தாலும் அப்போது நீ ஒருக்கால் இவன் சொல்கிறது நிஜமா யிருக்கும் பக்ஷத்தில் எனக்கு சவுக்கிய முண்டாகும். பொய்யா யிருந்தாலும் மென்ன? கால் ரூபாய் போனால் போகட்டுமே என்று நினைக்கிறாய்.

இன்னும் ஒரு சோதிடன் வந்து சந்திரன் இன்ன லக்கினத்தில் வரும் போது இன்ன கசப்பான மருந்தைத் தின்பாயாகில் சவுக்கிய மடைவா யென்று சொன்னால் அவன் பேச்சை நம்பி அந்தக் கசப்பைத் தின்னக் கஷ்டமெடுத்துக் கொண்டு, இவன் சொல்வது மெய்யா யிருக் கவுங் கூடுமென்றும் அப்படி மெய்யாயில்லா விட்டாலு மென்ன? இந் தக் கசப்பைத் தின்னும் கஷ்டமானது மரணத்தை நோக்க இலேசா யிருக்கிற தென்றும் எண்ணுகிறாய்.

ஆகையால் எந்த புத்திமானிடத்திலும் இலட்சத்து இருபத் தினாலாயிரம் நபிமார்களுடைய சொல்லும் அந்தச் சொல்லின் பேரில் எல்லா அறிவாளர்களும் உலமாக்களும் அவ்லியாக்களும் ஓர் மித்தி ருப்பதும், சோதிடன், தஃவீசு எழுதுகிறவன் காபிரான வைத்தி

யன், இவர்களின் சொல்லைவிட நம்பிக்கைக்கு குறைந்த தாயிராது. நீ இவர்களுடைய சொல்லைச்சார்ந்து மரணமென்னும் பெரிய அபாயத்தினின்றும் தப்புவதற்காக (பகிபொறுத்தல், கைக்காசு கொடுத்தல், கசப்பைத் தின்னல் முதலான) அற்பகஷ்டத்தை எடுத்துக் கொண்டாய் அல்லவா?

இன்னுமிதுபோலவே அதிக நஷ்டத்தை நோக்க அற்ப நஷ்டமனது ஒரு பொருட்டாயிராது. ஒருவன் துன்யாவுடைய வயது எவ்வளவென்றும் முடிவில்லாத அபது என்னும் ஆகிறத்துடைய காலம் எவ்வளவென்றும் கணக்கிட்டுப் பார்ப்பானுகில் துன்யாவில் எடுத்துக் கொள்ளும் கஷ்டமானது ஆகிற்த்திலுண்டாகப்போகிற அந்தப்பெரிய ஆபத்தை நோக்க அற்பமானதென்று உணர்ந்து கொள்வான். நீ யுன் மனதில் நபிமார் முதலானவர்கள் சொன்னது உண்மையா யிருந்து நான் நித்திய வேதனையில் அகப்படுவேனுகில் நான் என்னசெய்வேன் என்றும் அநித்தியமாகிய இந்தத் துன்யாவில் சுகத்தை அடைவது எனக்கு என்னபயனே விளைக்குமென்றும் ஒருக்கால் இவர்கள் சொல்வது உண்மையாயிருக்கவுங் கூடும் என்றும் நினைக்கிறாய். அபது என்பதின் பொருள் என்னவென்பாயாகில் கேள்:-உலகமுழுவதிலும் கேழ்வரகை நிரப்பி ஒரு பக்ஷியை விட்டு ஆயிரம் வருஷத்துக்கு ஒருவித்தாகத் தின்னச் செய்து அப்படியே அந்த வித்துக்களெல்லாம் தின்று முடித்தால் அப்போதும் அபது என்னுங்காலத்தில் அற்பமும் குறையாது. இப் பேர்ப்பட்ட முடிவில்லாத நித்தியகாலத்தில் ஆன்ம சம்பந்தமான அதாபென்றாலும் தேக சம்மந்தமான அதாபென்றாலும் நினைவினு லுண்டாகிற அதாபென்றாலும் எப்படி சகிக்கிறது! இதை நோக்கத் துன்யாவுடைய வாழ்க்கை அற்பத்தினும் அற்பமேயாம். எந்தப்புத்திமானும் இது சங்கதியை நன்றாய் யோசிக்காமலும் இப்போர்ப்பட்ட பெரிய அபாயத்துக்கு பயந்து நடப்பது கடமையென்றெண்ணாமலு மிருக்க மாட்டான். இதில் கஷ்ட்மிருந்தாலும் சந்தேகமிருந்தாலுஞ்சரி. ஏனென்றால் உல்கத்தின் ஜனங்கள் வர்த்தகத்துக்காக கப்பல் ஏறி கடல் யாத்திரை செய்வதில் கஷ்டங்களை அடைகின்றார்கள். இவையெல்லாம் (லாபம் கிடைக்குமென்ற ஸ்திரமான எண்ணத்தினால் அல்ல. கிடைக்குமோ கிடைக்காதோ வென்ற) சந்தேகத்தினால் எடுத்துக் கொண்ட கஷ்டங்களேயாம்.

ஆதலால் ஆகிறத்துடைய அதாபைப்பற்றி ஸ்திரமான நம்பிக்கையில்லாமற்போனாலும் அற்பமான எண்ணமாவது வைத்திருப்பவன் பேரில் இரக்கமுள்ளவனு யிருப்பானுகில் இந்த கஷ்டத்தை எடுத்துக் கொள்வான். இதனாலேதான் ஹஜரத் அமீறுல் மூமினீன் அலீகர்

மல்லாஹ¬ வஜ்ஹஹ¬ அவர்கள் ஒருநாள் முல்ஹிதென்னும் தன் மார்க்கனேடு தர்க்கித்து ஆகிறத்து இல்லவே யில்லையென்று நீசாதிப்பது உண்மையாயிருந்தால் நீயும் தப்பினாய் நாமும் தப்பினோம். நாம் சொல்வது போல் ஆகிறத்து உண்மையா யிருந்தால் அப்போதும் நாம் தப்பிக் கொண்டோம் நீ நித்தியவேதனையில் சிக்கிக்கொள்வாய் என்று சொன்னர்கள். அமீறுல் மூமினின் அவர்கள் இப்படிச் சொன்னது அந்த முல்ஹிதுடைய கேவலமான புத்திக்கு ஒருவாறு உணர்வு உண்டாகவே யாம். தங்களுக்கு அதில் சந்தேக மிருந்த தென்றல்ல. நேரான வார்த்தை அந்த முல்ஹிதுடைய புத்தியில் அமையாதென் றெண்ணியே இப்படிச் சொன்னர்கள்.

துன்யாவில் ஆகிறத்துடைய தங்கரிப்பைச் சேர்க்க எவன் முயலா மலிருக்கிறானே அவன் பெரிய மூடனாயிருக்கிறானென்று இதனால் உனக்குத் தெரியலாகும். அறிவின்மையும் மறதியுமே அதற்குக் காரணமா யிருக்கின்றது. துன்யாவுடைய இன்பங்கள் அவனைக் கொஞ்சநேரமாவது யோசிக்கும்படி சாவகாசம் கொடுக்கின்றதில்லை. அப்படியில்லாவிட்டால் ஆகிறத்தை உண்மையென்று ஸ்திரமாய் நம்பியிருக்கிறவன் பேரிலும் இன்னும் அது சம்பவிக்கக் கூடும் மென்று மிகைப்பான எண்ணத்திலாவது அற்பமான எண்ணத்திலாவது அறிந்திருக்கிறவன் பேரிலும் இவர்கள் எல்லா பேரிலும் புத்தியின் பிரகாரம் அந்தப் பெரிய அபாயத்தினின்றுந் தப்பிக்கும் வழியை அனுசரிப்பதும் இனி பயபக்திகளான பூணிப்புடைய மார்க்கத்தை எடுத்துக் கொள்வதும் விதியா யிருக்கும். والسلام على من اتبع الهدى வஸ்ஸலாமு அலாமனித்தபஅல் ஹ¬தா.

முற்றிற்று.

இப்போது தன்னை அறிவது, அல்லாவை அறிவது, துன்யாவை அறிவது, ஆகிறத்தை அறிவது, இவைகளைச் சொல்லப்பட்ட இஸ்லாமுடைய உன்வான்களின் பயான் முற்றுப் பெற்றது.

இனி இஸ்லாமுடைய நடவடிக்கைகளைப் பொதிந்த ருக்னுகளை நாம் ஆரம்பம் செய்வோம்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

கீமியாயெ ஸஆதத்து.

முதலாவது ருகுனு.

இபாதாத்து.

இஸ்லாமுடைய உன்வான்களின் மஃரிபாவை அறிந்ததினுல் தன் நப்ஸையும், அல்லாஹு தஆலாவையும், துன்யாவையும் ஆகிறத்தையும் நீ தெரிந்து கொண்டாய். இனி இஸ்லாமுடைய நடவடிக்கைகளின் ருகு னுகளையும் கவனிப்பாயாக. மேற்கூறிய விபரங்களால் மனிதனுடைய நற் பதவியானது அல்லாவை அறிவதின் பேரிலும் அவனை வணங்குவதின் பேரிலும் நிலைபெற்றதா யிருக்கிற தென்று நீ யுணர்ந்திருப்பாய். இந் நான்கு உன்வான்களையும் நீ தெரிய விளங்கிக் கொண்டதினுல் மஃரி பத்தின் அஸ்லாகிய மூலம் உனக்குத் தெரியலாயிற்று. பின்வரும் நான்கு ருகுனுகளை அறிவதினுல் வணக்கம் செய்ய அது உனக்கு ஆதாரமா யிருக்கும்.

அந்நான்கு ருகுனுகளுள் ஒன்று நீ தன்னுடைய வெளியரங் கத்தை வணக்கங்களால் அழகு படுத்துவதாம். இது இபாதாத்து என்ற ருகுனுயிருக்கிறது. இரண்டாவது நீ தன்னுடைய ஜீவியத்தை யும் ஆட்டம் அடக்கங்களையும் ஒழுக்கத்தில் வைப்பதாம். இது முஆமலாத்து என்ற ருகுனுயிருக்கிறது. மூன்றுவது நீ துர்க்குணங் களை விட்டு நீங்குவதாம். இது முஹ்லிகாத்து என்ற ருகுனு யிருக் கிறது. நான்காவது நற்குணங்களால் நீ தன்னை அலங்கரிப்பதாம். இது முஞ்சியாத்து என்ற ருகுனுயிருக்கிறது.

இந்நான்கினுள் இபாதாத்து என்ற இந்த முதலாவது ருகுனுக்குப் பத்து அஸ்லுகளென்னும் மூலப் பிரிவுகளுண்டு. முதலாவது அஸ்லு சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாதாவாகிய நிண்ணயத்தைச் செம்மையாக்குவதின் பயான். இரண்டாவது இல்மைத் தேடுவதின் பயான். மூன்றுவது சுத்தமாகுவதின் பயான். நான்காவது தொழு கையின் பயான். ஐந்தாவது ஸக்காத்தின் பயான். ஆறுவது நோன் பின் பயான். ஏழாவது ஹஜ்ஜின் பயான். எட்டாவது குர்ஆன்

ஓதுவதின் பயான். ஒன்பதாவது திகுரு, தஸ்பீஹு இவைகளின் பயான். பத்தாவது அவ்ராதுகளை ஓதுகிற ஒழுங்கு, நேரங்களைப் பேணுவது இவைகளின் பயான்.

முதலாவது அஸ்லு.

சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாது.

அருமையானவனே! எவன் முஸ்லிமா யிருக்கின்றானே அவன் தன் நாவினாற் சொல்லுகிற லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல் லாஹி என்னும் கலிமாவின் பொருளை மனதால் உணர்ந்து சந்தேக மில்லாமல் அதை ஒப்புகொள்வது அவன் பேரில் பர்லாகும். இப்படி அற்ப சந்தேகமு மில்லாமல் அவன் மனம் இதை ஒப்புக் கொண்டால் இஸ்லாமின் ஆதாரத்துக்கு இவ்வளவே போதுமா யிருக்கிறது. அத் தாட்சிகளுடன் அதை அறிவது ஒவ்வொரு முஸ்லிமையும் பூண்ட பர்லுஐனல்ல, ஏனென்றால் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அறபியர்களுக்கு அத்தாட்சிகளை ஆராயவும், இல்மூல் கலா மைப் படிக்கவும், சந்தேகங்களை எழுப்பி அவைகளுக்குச் சமாதானஞ் சொல்லவும் கட்டளை இடவில்லை. மேலும் உண்மையென்று ஒப்புக் கொள்வதையே போதுமாக்கினார்கள். அவாம் களென்னும் சாமானிய ஜனங்களுக்கு இதற்குமேல் அதிகம் தேவையில்லை. ஆனால் யாராவது அவாம்களைச் சந்தேகத்தி லிழுத்து விட்டு அதனால் அவர்கள் வழி கெட்டுப் போகிறதா யிருந்தால், அப்போது யார் எழுதப்படிக்கத் தெரிந் தவர்களாயும் இந்த இஃதிகாதுடைய ஆதாரங்களைச் சொல்லத் திறமையுடையவர்களாயு மிருக்கிறார்களோ அவர்கள் அந்தச் சந்தே கத்தை அத்தாட்சிகளால் அகற்றி நிவர்த்திக்க வேண்டும். இது இல் மூல் கலாம் என்று சொல்லப்படுகிறது. இதைக் கற்பது பர்லுல் கிபாயாவாயிருக்கும். ஒரு ஊரில் ஒன்று அல்லது இரண்டு பேர் இந்த இல்மறிந்தவர்கள் இருந்தால் போதும். ஆமியென்னும் சாமானிய மனிதன் இஃதிகாதுடையவனு யிருக்கிறான். இல்மூல் கலா மறிந்த முத்தகல்லிம் கொத்துவாலைப் போல் அந்த ஆமியின் இஃதி காதைக் காத்துக்கொள்ளுகிறவனுகிறான். ஆனால் மஃரிபத்துடைய உண்மையான வழி இந்த. இரண்டைத் தவிர வேறுயிருக்கிறது. அதன் ஆரம்பம் பாடுபடுவதும் வணங்குவதுமேயாம். ஒருவன் அந்த வழியில் நடக்காத வரையில் மஃரிபத்துடைய பதவிக்குச் செல்ல மாட்டான். அப்படி நடக்காதவன் அதை எடுத்துப் பேசுவதும் அவனுக்கழகல்ல. ஏனென்றால் அதனாலுண்டாகும் நஷ்டம் அதன் லாபத்தைவிட அதிகமா யிருக்கும். இதற்கு உபமானமாவது

ஒருவன் பத்தியங்காக்காமல் மருந்து தின்றால் இதில் அவன் மாண்டு போவான் என்ற பயமிருக்கிறது. ஏனென்றால் அந்த மருந்து அவனுடைய இரைப்பையினுடைய அக்லாத்தின் தன்மையை ஏற்கும்; அதனால் சுகம் வாய்க்காமல் பிணியே அதிகரிக்கும். இஸ்லாமுடைய உன்வானில் நாம் கூறியிருப்பது உண்மையான மஃரிபத்துக்கு மாதிரியாயிருக்கிறது. தகுதியுள்ளவன் அதைத் தேடிக்கொள்ளவும். எவனுக்குத் தன்யாவுடன் பற்றுதல் இல்லையோ இன்னும் வயது முழுமையும் அல்லாவுடைய தேட்டத்திலிருந்தானே அவனே அந்த மஃரிபாவின் உண்மையைத் தேடக்கூடும். இந்தக் காரியம் மிகவும் கஷ்டமும் நீளமுமானது. ஆகையால் பொதுவாக எல்லா ஜனங்களுக்கும் உபயோகப்படுகிற சுன்னத்து ஜமாஅத்துடைய இஃதிகாதை நாம் இவ்விடத்திற் கூறுவோம். இந்த இஃதிகாது நற்பதவிக்கு வித்தாயிருப்பதால் ஒவ்வொருவரும் இந்த இஃதிகாதை தங்கள் மனதில் குடியேற்றுவார்களாக.

இ ஃ தி கா து.

அருமையானவனே! உணர்ந்துகொள். நீ ஒரு படைப்பாயிருக்கிறாய். உன்னைப் படைத்தவனொருவனுண்டு. அவனே பதினெண்ணாயிரம் ஆலம்களையும் படைத்தவன், அவன் ஒருவன்; அவனுக்கு இணையில்லை. அவன் ஏகனானவன். அவனுக்கு நிகரில்லை; அவன் உண்மைக்குத் துவக்கமில்லை; ஆதலால் அவன் எப்போதுமிருக்கிறான். அவன் உண்மைக்கு முடிவில்லை ஆதலால் அவன் நித்தியமாயிருப்பான். சதாகாலத்தினும் அவனின் இருப்பு அத்தியாவசியம். இன்மையான இல்லாமை என்பது அவனைச் சேரவழியில்லை. அவன் யாதொரு காரணம் தேவையற்றவனாதலால் அவன் தன்னைக் கொண்டே நிலைத்திருக்கிறவன். எந்த வஸ்துவும் அவனின் தேவை யற்றதாகாது. மேலும் அவனின் நிலை அவன் தன்னைக்கொண்டும் மற்றப்பொருள்களின் நிலை அவனைக் கொண்டுமாயிருக்கிறது.

தன்ஸீஹு (தூய்மை) அவன் ஜௌஹர் என்னும் ஆதாரப் பொருளும் அறிவு என்னும் ஆதேயப் பொருளுமல்லன். அவன் ஒன்றில் விடுதி விடவுமாட்டான். அவன் ஒரு வஸ்துவைப் போலுமல்லன். ஒரு வஸ்து அவனைப் போலுமில்லை. அவன் அரூபியானவன்; அவன் எத்தனை, எப்படி என்பதை விட்டும் சுத்தமானவன். இத்தனை, இப்படி என்று நமது புத்தியில் வருமே அதை விட்டும் அவன் தூய்மையானவன். ஏனெனில் இவை படைப்புகளின் குணங்களாயிருக்கின்றன. எந்தப் படைப்பின் குணத்தையும் அவன் ஏற்பவனல்லன்; ஏதொன்று நினைவிலுள் உருப்பெற்று தோற்றுமோ

அதைப் படைத்தவனுமவனே. சிறிது பெரிது மட்டு திட்டம் என்னும் பண்புகள் அவனைச் சாரவழியில்லை. இவையனைத்தும் சடங்களின் பண்புகளாம். அவன் சடமல்லன், அவனுக்கு யாதொரு சடத்துடன் சம்பந்தமில்லை. அவன் யாதொரு தலத்தின் மேலுமில்லை. ஒரு தலத்திலுமில்லை. மேலும் அவன் தலத்தை ஏற்பவனல்லன். ஆலத்திலுள்ளனவெல்லாம் அறுஷுக்குக் கீழே யிருக்கின்றன. அறுஷானது அவன் வல்லமைக்கு வசப்பட்டிருக்கிறது. அவன் அறுஷின் மேலிருக்கிறான் என்பது ஒரு சடம். மற்றொரு சடத்தின் மேலிருப்பதுபோல் அல்ல ஏனென்றால் அவன் சடமல்லன். அறுஷு அவனைச் சுமக்கிறதுமல்ல. மேலும் அறுஷும் அறுஷைச் சுமக்கிறவர்களும் எல்லாம் அவன் கிருபையும் வல்லமையுமான கைக்குள்ளடங்கினவர்களாயிருக்கிறார்கள். அறுஷை உண்டாக்குவதற்கு முன்னே ஆதியில் என்ன தன்மையிலிருந்தானே அப்படியே இன்னு மிருக்கிறான்; எப்போதுமிப்படியே யிருப்பான். அவனுடைய தாத்தும் சிபத்துகளும் மாறுதலடைவனவல்ல. அப்படி மாறுதலடைவது நிறைவிலிருந்து குறைவுக்கு மாறினால் இது கர்த்தத்துவத்துக்குத்தகாது. குறைவிலிருந்து பூரணத்தன்மைக்கு மாறினால் இதற்கு முன்னே குறையுள்ளவனு யிருந்தானென்றும் பூரணத்தன்மை வேண்டியவனு யிருந்தானென்றுமாகும். அப்படி வேண்டுதலுள்ளவன் படைப்புகளில் ஒருவனுகிறான். கர்த்தத்துவத்துக்கு அருகனுகான். இப்படி அல்லாஹு தஆலா எல்லாப் படைப்புகளின் குணங்களையும் பண்புகளையும் விட்டுத் தூய்மையுள்ளவனுதலால் அவன் இவ்வுலகத்தில் அறிவினால் உணரக்கூடியவனுகவும் அவ்வுலகத்தில் காணக்கூடியவனுகவு மிருக்கிறான். எப்படி இவ்வுலகத்தில் அவனை இப்படி இவ்விதமென்பதன்றி அறிகின்றார்களோ அப்படியே அவ்வுலகத்தில் இப்படி இவ்விதமென்பதன்றி அவனைக்காண்பார்கள். என்கினும் அவ்வுலகத்தின் காட்சி இவ்வுலகத்தின் காட்சியைப்போல் அல்ல.

குதுரத்து (வல்லமை) அல்லாஹு தஆலா ஒரு வஸ்துவைப்போல் அல்லாமலிருப்பதுடன் சகல வஸ்துக்களின் பேரிலும் வல்லமையுள்ளவனுயிருக்கிறான். அவன் வல்லமை பூரணமானது; அதில் எவ்விதக் குறையுமில்லை. மேலும் நாடினதைச் செய்தான், நாடுவதைச் செய்வான், ஏழுவானம் பூமி அறுஷு கூர்ஸி மற்றுமுண்டான யாவும் அவனின் வல்லமையான கைக்கு வசப்பட்டிருக்கின்றன. அவற்றில் வேறொருவனுக்கு அதிகாரமில்லை. சிருஷ்டிகளை உற்பத்தி செய்வதில் அவனுக்குதவியானவனும் கூட்டானவனும் ஒருவனுமில்லை.

இல்மு (அறிவு) அல்லாஹு தஆலா அறிவையுடையவன். அவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறான். அவன் அறிவானது

எல்லா வஸ்துக்களையும் சூழ்ந்தறிகின்றது. வானத்திலிருந்து பூமி வரையில் எந்த வஸ்தும் அவன் அறிவதன்றி அசைகிறதில்லை; யாவும் அவன் உத்திரவினால் அசைகின்றன. அவன் வல்லமையினால் எல்லாம் உண்டாகின்றன. மேலும் மைதான வெளியின் மணலுடையவும் மரங்களின் இலைகளுடையவுமான எண்ணிக்கையும், மனங்களின் நினைவுகளும், ஆகாயத்தின் அணிக்களும் அவனுடைய இல்மில் ஏழு வானங்கள்போல் வெளியாயிருக்கின்றன.

இராஜத்து (நாட்டம்) ஆலத்திலுள்ள சகல வஸ்துக்களும் அவனின் நாட்டத்தினாலே உண்டாயிருக்கின்றன. நன்மை, தீமை, வணக்கம், பாவம். ஈமான், குபுரு, இலாபம், கஷ்டம், விர்த்தி, குறைவு, சுகம், துக்கம், சௌக்கியம், நோய் இவைமுதல் எவையும் கொஞ்சமானாலும் அதிகமானாலும், சிறிதானாலும், பெரியதானாலும் சகலமும் அவன் கற்பனையினாலும் கட்டளையினாலும் நாட்டத்தினாலுமே உண்டாகின்றன. சர்வலோகத்திலுமுள்ள ஜின்னுகளும், ஷைத்தான்களும், மனிதர்களும், மலக்குகளும், ஒன்று சேர்ந்து ஆலத்திலுள்ள ஒரு அணுவை அசைக்கவாவது அல்லது, அதை வேறுதலத்தில் அமைக்கவாவது அல்லது, அதிகப்படுத்தாவாவது குறைக்கவாவது எத்தனிப்பார்களாகில் அவனின் நாட்டமின்றி ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது. மேலும் அவனின் நாட்டமின்றி ஒரு வஸ்து உண்டாகவுமாட்டாது அவன் உண்டாகவேண்டுமென்று நாடின பொருளை உண்டாகக் கூடாதென்று தடுக்க ஒருவராலும் ஆகாது. இப்போதுண்டாயிருக்கிறவைகளும், (இனியுண்டாகப் போகிறவைகளும்) இதற்கு முன் உண்டாயிருந்தவைகளும், சகலமும் அவன் கற்பனையினாலும் பண்படுத்தலாலுமேயாகிறவைகள்.

ஸம்உ, பஸ்று (கேள்வி, பார்வை) சகல வஸ்துக்களையும் அவன் அறிகின்றதுபோல் சகல வஸ்துக்களையும் பார்க்கின்றான். கேட்கின்றான், அவை தூரமாயிருந்தாலும் சமீபமாயிருந்தாலும் சரி. இருளும், வெளிச்சமும் அவன் பார்வையில் ஒன்றாயிருக்கிறது. இருளான இரவில் நடக்கிற எறும்பின் காலடியோசையைக் கேட்கின்றான். தஹ்த்துஸராவாகிய பாதாளத்திலிருக்கும் யாதொரு புழுப் பூச்சியின் நிறத்தையும் ரூபத்தையும் பார்க்கிறான். கண்ணின்றிப் பார்க்கிறான். காதின்றிகேட்கிறான். அவன் எப்படி நேட்டமின்றியும் ஆராய்தலின்றியும் அறிகின்றானே அப்படியே யாதொரு கருவியின்றிப் படைப்புகளைப் படைக்கின்றான்.

கலாம் (திருவசனம்) அவனுடைய வசனத்தை யொப்புக்கொள்வது எல்லார்பேரிலும் கடமையாயிருக்கிறது. அல்லாஹுத் தஆலா அருளியிருக்கிற எல்லாச் சங்கதிகளும் உண்மையாயிருக்கும். நரகத்

தின் ஆபத்துகள், சொர்க்கத்தின் நல்மாராயங்கள், ஏவல், விலக்கல், வார்த்தைப்பாடு, அச்சமூட்டல் எல்லாம் அவன் திருவசனமாயிருக்கும். அவன் எப்படி நித்தியஜீவனும், பூரண ஞானமும், பார்வையும், கேள்வியும், வல்லமையும் உள்ளவனுயிருக்கின்றனோ அப்படியே திருவசனமும் உடையவனுயிருக்கின்றன். மூஸா அலைஹிஸ்ஸலாமுடன் நேரடியே பேசுகின்ற ஒருவர் மூலமின்றி நேரே வசனித்தான். அவன் வசனிப்பது தொண்டை, நா, உதடு, வாய் இவற்றினலன்று. மனிதனுடைய இருதயத்திலுண்டாகும் வார்த்தைக்கு எப்படி எழுத்தும் சப்தமுமில்லையோ அப்படியே அல்லாஹுத் தஆலாவுடைய திருவசனம் எழுத்து சப்தம் இவைகளை விட்டுத் தூய்மையானது. அன்பியாக்கள் மீதிறங்கிய தௌறாத்து, ஸபூர், இஞ்சீல் குர்ஆன் மற்றும் ஸுஹ்புகளனைத்தும் அவன் திருவசனமாயிருக்கின்றது. திருவசனம் அவன் சிபத்துகளில் ஒன்றாக இருக்கும். அவன் சிபத்துகளனைத்தும் அவன் ஜாத்தைப் போல் அனுதியாயெப்போது முள்ளவை. அத்திருவசனம் நம்முடைய மனதில் பாடமிடப்பட்டும் நாவினல் ஓதப்பட்டும், முஸ்ஹபில் எழுதப்பட்டு மிருக்கின்றது. நாம் பாடமிடப்பட்டதும், ஓதப்பட்டதும், எழுதப்பட்டதுமான அப்பொருள் படைக்கப் படாதது. நாம் பாடம் செய்வதும், ஓதுவதும், எழுதுவதுமான நம்செயல் படைக்கப்பட்டது.

அப் ஆல் (செயல்) சர்வலோகமும் அவற்றிலுள்ள யாவும் அல்லாஹுத் தஆலாவுடைய படைப்புகளாயிருக்கின்றன. ஒவ்வொன்றையும் அதிப்போதிருக்கும் அமைப்பை விட இன்னும் மேலாக அமைக்க விடமில்லாதபடி பூரணமான விதமாய் அமைத்திருக்கிறன். எல்லா புத்திமான்களும் ஒன்றுசேர்ந்து தங்கள் கூறிய புத்தியினல் இவ்வுலக வமைப்பை இப்போதிருக்கும் ரூபத்தினும் இன்னும் அதிக நல்ல ரூபத்திலாகவேண்டு மென்றுவது அல்லது, கூட்டவாவது குறைக்கவாவது ஆலோசிப்பார்களாகில் அது முடியாது. அந்த யோசனை தப்பாயொழியும். அவனின் ஹிக்மத்து மஸ்லஹத்தென்னும் ஆழிய பூராயவிணக்கமான நுட்ப விரகசியத்தை யறியாது மறந்தவராகுவார்கள். மேலும் உவமையில் ஒவ்வொரு பொருளும் வைக்கவேண்டிய இடத்தில் ஒழுங்காய் வைக்கப்பட்டிருக்கிற ஓர் வீட்டில் வழிதெரியாமல் அப்பொருள்களின்மேல் வந்து விழுந்து ஏன் இதை வழியில் வைத்தீர்களென்று சொல்லுகிற ஓர் குருடனுக்கு இவர்கள் ஒப்பாகுவார்கள். அக்குருடன் சொன்னபடி அப்பொருள் வழியில்வைத்திருக்கிற தென்று மற்றவர்கள் சொல்வதுண்டோ இல்லை. அக்குருடனுக்குவழி தெரியவில்லையென்றே சொல்வார்கள். ஆனதால் அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு பொருளையும் நீதமாய் ஆழிய பூராயத்தினல் பூரணமாகவும் எது எப்படி

வேண்டுமோ அது அப்படியாகவும் அமைத்திருக்கின்றான். இதைவிட இன்னும் அதிக பூரணமாகக் கூடியதா யிருந்து அவன் அப்படி அமைக்க வில்லை யென்றால் அதற்குக் காரணம் சக்தி போதாமை, அல்லது உலோபகுணமா யிருக்க வேண்டும. இந்த இரண்டு குணங்களும் அல்லாஹ் தஆலாவின் விஷயத்தில் கூடாதவை. ஆகையால் துன்ப மென்கினும், நோயென்கினும், தரித்திர மென்கினும் அறிவின்மை அசக்தி முதல் அவன் படைத்த யாவும் நீதியேயாம். அவனுல் அநீதி சம்பவிக்க விடமில்லை. ஏனெனில், ஒருவன் பிறருடைய சுயாதீனத்தில் கையாட்சி செய்வது தான் அநீதி. அல்லாஹ் தஆலா பிறர் ஆதீனத்தில் அனுபோகஞ் செய்கிறனென்று சொல்லவிடமில்லை. ஏனென்றால் அவனேடு வேறொரு சுயாதீனனில்லை. இப்போதிருப்பதும், இதற்கு முன்னிருந்ததும், இனியாகப் போகிறதும் சர்வமும் அவனின் சுதந்தரங்களேயாம். அவனே சர்வசுதந்திரன். அவனுக்குச் சரிசமானம் ஒன்றுமில்லை.

ஆகிரத்து (முடிவு நாள்) அல்லாஹ் தஆலா ஆலமென்னும் உலகத்தை (ஆலமுல் அஜ்ஸாம்) சடலோக மென்றும் (ஆலமுல் அர்வாஹ்) சித்து லோகமாகிய ஆன்மலோக மென்றும் இருவகையாய்ப் படைத்து ஆலமுல் அஜ்ஸாமை ஆலமுல் அர்வாஹ்க்கு நிலைக்களமாக்கினான். அதேனெனில் ஆகிறத்துக்கு வேண்டிய தங்கரிப்புகளை இந்த ஆலத்தில் நின்றும் சேடிக் கொள்ளவேயாம். இவ்விடத்தி லிருப்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு காலத்தைக் குறிப்பிட்டான். அந்தக் காலம் கழிந்து போவதற்கு (அஜல்) மரணம் என்று சொல்லப்படும். அந்தக் காலம் அதிகப்படவு மாட்டாது குறையவு மாட்டாது. குறிப்பிட்ட அந்தக் காலம் வரும்போது உடலை விட்டு உயிரைப் பிடித்துப் போடுகிறது, கணக்கு கேட்டு பிரத்தியளிக்கும் நாளாகிய கியாமத்தில் அந்த உயிரை மீண்டும் சரீரத்திற் புகவிட்டு எல்லாரையும் எழுப்பச் செய்வான். ஒவ்வொருவனும் தன் அமலால் நாமா வென்னும் கிரியா பத்திரத்தைப் பார்வை யிடுவான். அது அவன் செய்த கிரியைகளை யெல்லாம் அவனுக்கு நினைப்பூட்டும். பாவபுண்ணியத்தினுடைய அளவை அதற்குத் தகுமான மீஸான் என்னும் ஓர் தராசில் நிறுத்து அவனுக்குக் காண்பிக்கப்படும். அந்தத் தராசு இவ்வுலகத்தின் தராசுக்கு ஒப்பானதல்ல.

சிறுத்துல் முஸ்தகீம் (பாலம்) சிறுத்தின் மீது நடந்துச் செல்லுங்களென்று எல்லாருக்கும் கட்டளையாகும். எவன் இவ்வுலகத்தில் சிறுத்துல் முஸ்தகீம் என்னும் நேரான வழியில் சரியாய் நடந்தானே அவன் அந்த சிறுத்தின் மீது இலகுவாய் நடந்துச் செல்வான். நேரான வழியைத் தெரிந்தெடுக்காதவன் அதன் மீது நடந்துச் செல்ல முடியாமல் நரகில் வீழ்வான். எல்லாரையும் அப்பாலத்தின் மீது நிறுத்தி அவரவர்

கள் செய்த அமல்களைக் குறித்துக் கேள்வி கேட்கப்படும். மூமினிடத்தில் ஈமானுடைய உண்மையைக் குறித்து வினவப்படும். மனதில் உண்மையான விசுவாச மில்லாமல் வெற்றுரையாடும் முனாபிகீன்களையும் அல்லாவுக் கென்றே கலப்பற்ற நெஞ்சோடில்லாமல் பிறர் புகழை விரும்பியாவது இகழைப் பயந்தாவது அமல் செய்த ரியா உள்ளவர்களையும் கடினமாய்ப் பயமுறுத்தி மனக்கலக்க முண்டாக்கப்படும். ஒரு கூட்டம் கணக்கு கேட்காமலே சொர்க்கத்திற் கொண்டு போகப்படும், ஒரு கூட்டத்தின் கணக்கு இலகுவாகவும், மற்றோர் கூட்டத்தின் கணக்கு கடினமாகவும் கேட்கப்படும். கடைசியாய் ஈமானில்லாத காபிர்களனைவரும் நரகத்திற்கனுப்பப்படுவார்கள். அவர்கள் அதிலிருந்து மீண்டும் விடுவிக்கப்பட மாட்டார்கள். உத்திரவுக்கு வழிப்பட்ட முஸ்லிம்கள் சொர்க்கத்திற் கனுப்பப்படுவார்கள். உத்திரவை ஏற்று அதின் படி நடக்காத பாவிகளில் ஏவன் அன்பியாக்கள் பெரியோர்கள் முதலானவர்களின் ஷபாஅத்தை அடைவானே அவன் மன்னிக்கப் படுவான்; ஷபாஅத்துக்கு அருகனல்லாதவனை நரகிற் கொண்டு போய் பாவத்தினளவு அவனை அதாபு செய்து கடைசியில் அவன் சொர்க்கத்திற் சேர்க்கப்படுவான்.

அன்பியா (நபிமார்) அல்லாஹ¤ தஆலா அடியார்களின் அமல்களிலும் குணங்களிலும் சிலதை அவர்களின் நற்பதவிக்கும் சிலதை தாழ்ப்பதவிக்கும் காரணமாகின்ற தன்மையில் அமைத்திருப்பதினாலும் மனிதன் தானே அவற்றை யறிய அவனுக்குச் சக்திபோதா தாகையினாலும் அவன் தன் அன்பாகிய கிருபையினால் நபிமார்களை யுண்டாக்கி அவர்களுக்கு நபிப்பட்டம் கொடுத்து ஜனங்களுக்கு அவர்களின் நற்பதவி தாழ்ப்பதவியைக் குறித்துப் பிரசங்கித்து அதன் வழியைக் காண்பிக்கும்படி ஆக்கியாபித்தனுப்பினன். ஏனென்றால் அல்லாஹ¤ தஆலா விடத்தில் சாக்கு போக்கு சொல்ல ஒருவருக்கும் இட மில்லாமலிருக்கவேயாம். ஆனதால் நபிமார்க ளெல்லாரிலும் கடைசியாக நம் முடைய றசூல் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹ¤ அலைஹி வஸல்லமவர்களை அனுப்பினன். அவர்களால் நுபுவ்வத் தென்னும் தீர்க்க தரிசனம் மீண்டும் அதிகரிக்க விடமில்லாத படி பூரணத்தை யடைந்தது. முஹம்மது ஸல்லல்லாஹ¤ அலைஹிவஸல்லமவர்களைப் பின் பற்றும்படி சகல ஜின், மனுக்களுக்கும் கட்டளை செய்தான். அவர்களை எல்லா நபிமார்களுக்கும் சர்தாராக்கினன். இன்னுமவர்களின் அஸ்ஹாபுகளையும் தோழர்களையும் மற்றும் நபிமார்களுடைய அஸ்ஹாபுகள் தோழர்களை விட அதிக வரிசையுள்ளவர்களாக்கினன்.

இரண்டாவது அஸ்லு

இல்மைத் தேடுவதின் பயான்

طلب العلم فريضة على كل مسلم இல்மைத் தேடுவது இஸ்லா மானவர் எல்லார் பேரிலும் பர்லா யிருக்கு மென்று றசூல் ஸல்லல் லாஹூ அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இந்த இல்மு எதுவென்பதில் உலமாக்களுக்குள் விகர்ப்பமுண்டு. இல்முல் கலாமி னுல் அல்லாஹூ தஆலா அறியப்படுகின்ற ஞகையால் ஹதீதில் சுட்டி யது இல்முல் கலா மென்று முத்தகல்லிமுகளும், பிக்ஹுடைய இல் மினுல் ஹலால் ஹறாம் பிரித்தறியப்படுகிறதால் அது பிக்ஹுடைய இல்மா யிருக்கு மென்று புக்ஹாக்களும், குர்ஆனும் ஹதீதும் ஷரஹுடைய மற்றும் இல்முகளுக்கு ஆதாரமா யிருப்பதால் இதைக் கற்பதே ஹதீதின் தாத்பரியமென்று முஹத்திஸுகளும், அல்லாஹூ தஆலாவின் சமுகத்தில் அடியான் செல்வதற்கு அவன் கல்பிலிருந்தே வழியுண்டாகின்றதால் கல்பின் அஹ்வால்களைக் குறித்த தஸவ்வு புடைய இல்மே அதுவென்று சூபியாக்களும் சொல்லுகிறார்கள். இப் படி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இல்மைக் கனப்படுத்திப் பேசு கின்றார்கள். ஆனுல் இது குறிப்பான ஒரு இல்மைக் கொண்டு சொந்த மாகாதென்றும் இல்முகள் எல்லாமே வாஜிபாகா வென்றும் நாம் தாத் பரியப் படுகிறோம். பின்விவரிக்கும் ஒரு வியாக்யானத்தினுல் இந்தச் சந்தேகம் நிவர்த்தியாகும். அதாவது:—ஒருவன் சுபுஹூ நேரத்தில் இஸ்லாமானுல் அல்லது பாலிகானுல் இந்த எல்லா இல்முகளையும் கற் பது அவன் மேல் வாஜிபாகாது. மேலும் அந்த நேரத்தில் அவன்மேல் வாஜிபாகுவது யாதெனில், லாஇலாஹ இல்லல்லாஹூ முஹம்மதுர் றசூலுல்லாஹி என்னும் கலிமாவின் பொருளை அவன் அறியவேண்டும். இது சுன்னத்து ஜமாஅத்தடைய அகீதாவை அறிவதினுல் சித்தி யாகும். இதை அத்தாட்சியுடனறிய அவசியமாகாது. என்கினும் அவன் அதை உண்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் எல்லா விவரங்களுங்கூட அவசியமாகாது. ஆயினும் அல்லா றசூல் களுடைய சிபத்துகளின் மீதும் ஆகிரத்து, சொர்க்கம், நரகம், உயிர்த் தெழும்புவது, கணக்கொப்பிக்க ஹஷ்றுடைய மைதானத்தில் கூடி நிற்பது முதல் அவற்றின் சிபத்துகளின் மீதும் அவன் ஈமான் கொள்ள வேண்டும். தன்னைப் படைத்தவனும் பல சிபத்துகளுள்ளவனுமான

ஒரு சிருஷ்டிகர்த்தன் உண்டென்றும் அவன் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் மூலமாய், "எவன் வழிபட்டு வணங்கினானே அவன் சுற்பதிவியடைவான். எவன் பாவஞ்செய்தானோ அவன் துர்ப்பதவியில் மடிவான்" என்று நமக்கு அறிவித்தானென்றும் அவன் உணர்ந்து கொள்ளவேண்டும். இப்படி யுணர்ந்த பின் இரண்டு விதமான இல்மு அவன் மேல் வாஜிபாகும். அதில் ஒன்று இருதய சம்பந்தமுள்ளது. மற்றொன்று அவயவத்தாற் செய்யும் அமல்களுடன் சம்பந்தமுள்ளது. இந்த அவயவ அமல்களுடன் சம்பந்தமுள்ள இல்மும் (முபாஹாத்து) செய்யத்தகுந்த அமலின் இல்மென்றும் (மன்ஹியாத்து) செய்யத்தகாத அமலின் இல்மென்றும் இருவகைப்படும். செய்யத்தகுந்த அமலின் இல்முக்கு உதாரணம்:—அவனுக்கு லுஹறு தொழுகையின் நேரம் வந்தால் ஒலுமுழுக்கில் நின்றும் தொழுகையில் நின்றும் எவ்வளவு பர்லோ அவ்வளவைக் கற்றுக் கொள்வது அவன் மேல் பர்லாகும். ஆனால் எது சுன்னத்தோ அதைக் கற்றுக் கொள்வது சுன்னத்தாகும். பர்லாகாது. இதேமாதிரி மக்ரிபு தொழுகையின் நேரம் வந்தால் அதற்கு மூன்று றக்ஆத்துகள் பர்லென்பதை அவன் அறிவது பர்லாகும். அதற்கு மேல் அதிகம் கடமையாகாது. றமலான் மாதம் வந்தால் றமலானுடைய நோன்பின் இல்மு பர்லாகும். அப்போது நிய்யத்து செய்வது வாஜிபென்றும் சுபுஹுமுதல் சூரியன் அஸ்தமிக்கிறவரையில் உண்ணல், குடித்தல், ஜிமாஉ செய்தல் இவைகள் ஹறாமென்றும் அவன் அறிந்து கொள்ளவேண்டும். இருபது தீனார் தங்கக்காசு வைத்திருக்கிறவன் ஸக்காத்துடைய இல்மைக்கற்பது கடமையாகாது. ஆனால் அந்த முதலின் மேல் ஒருவருஷம் சென்று போனால் அப்போது அதற்கு எவ்வளவு ஸக்காத்து? யாருக்கு கொடுப்பது? அதன் ஷர்த்துகள் எவை? என்பவைகளை அறிவது அவன்மேல் பர்லாகும். ஹஜ்ஜுக்குப் புறப்படாத வரையில் ஹஜ்ஜின் இல்மு பர்லாகாது. ஏனென்றால், ஹஜ்ஜுடைய காலம் வயது முழுமையும்மாயிருப்பதினாலேயாம். இப்படியே எந்தவேலை எப்போது சம்பவிக்குமோ அப்போது அதன் இல்மு பர்லாகும். எப்படியென்றால் நிக்காஹு செய்தால் அப்போது அதன் இல்மு வாஜிபாகும். பெண் ஜாதிக்காக புருஷன்மேல் விதித்த ஹக்கென்ன வென்பதையும், அவள் ஹைலாயிருக்கும் போது அதைவிட்டுச் சுத்தமாகி அவள் குளிக்கிறதற்கு முன்னும் அவளை ஜிமாஉ செய்வது ஹறாமென்பதையும் அவன் அறிந்து கொள்ள வேண்டும். இது போலவே ஒருவன் தான் செய்கிற தொழிலின் இல்மும் அவன் மேல் வாஜிபாகும். வர்த்தக னாயிருந்தால் வட்டியின் மஸ்அலாக்களையும் கிரய பூர்த்திக்கு வேண்

டிய ஷர்த்துகளையும் அவன் அறியவேண்டும். ஏனெனில் பாஸிதான கிரயத்தைவிட்டுத் தப்பித்துக் கொள்ளவேயாம்.

இதற்காகவே உமர் றலியல்லாஹு அன்ஹு கடைக்காரர்களை சவுக்காலடித்து இல்மு கற்றுக்கொண்டு வரும்படி அனுப்புகிறவர் களாயும் வர்த்தகன் தனக்குத் தெரியாமல் ஹறாமைத் தின்பானுகை யால் கிரய விஷயமான இல்மை அறியாதவன் வர்த்தகம் செய்யக் கூடாதெனச் சொல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். ஒவ்வொரு கைத் தொழிலின் இல்மும் இதுபோலவேயாம். ஹஜ்ஜாமாயிருக்கினும் மனிதனுடைய தேகத்தில் எதைத் தறிக்கக்கூடும், எந்தப்பல்லைப் பிடுங்கக்கூடும், காயங்களில் எவ்வளவு மருந்தைப் பிரயோகிக்கவேண் டும் என்பவைகளை அவன் அறியவேண்டும். இதன்படியே மற்றவை களையும் நிதானித்துக் கொள்ளவும். இந்த இல்முகள் ஒவ்வொருவரு டைய நிலைமைக்குத் தக்கவாறு பேதப்படும். எப்படி யென்றால் ஜவுளிவர்த்தகம் செய்பவன்மேல் ஹஜ்ஜாமுடைய தொழிலின் இல்மு வாஜிபாகாது. ஹஜ்ஜாமத்து செய்பவன்மேல் ஜவுளிவர்த்தகத் தின் இல்மு வாஜிபாகாது. இந்த உதாரணங்கள் செய்யத்தகுந்த அமலின் இல்மைக் குறித்தவைகள். இனி செய்யத்தகாத அமலின் இல்மும் வாஜிபாகும். அதவும் அவரவர்களின் நிலைமைக்குத் தக்கபடி வித்தியாசப்படும் அதற்கு உதாரணம்:—ஒருவன் பட்டுடை தரிக்கின்றான். அல்லது சாராயம் குடிக்கிற அல்லது பன்றியிறைச்சி தின்கிற வூரில் குடியிருக்கிறான். அல்லது வம்பாய் அபகரிக்கப்பட்ட ஓரிடத்தில் வாசஞ்செய்கிறான். அல்லது தன்னிடம் ஹறாமான பொருளைவைத்துக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்டவன் அதை விட்டுவிடுவதற்காக அதன் இல்மை அது அவனுக்கு போதிப்பது ஹரா மென்பதின் காரணத்தை அவனுக்குச் சொல்வதும் ஆலிம் கள் பேரில் வாஜிபாகும். ஒரு வீட்டில் பல பெண்களுடன் வசிக்க அவனுக்கு நேரிட்டால் மஹ்ரமானவர்கள் மஹ்ரமல்லாதவர்கள் இவர் களைப்பிரித்தறிந்து யாரைப்பார்க்க ஆகும் யாரைப்பார்க்க ஆகாது என் பதை அவன் அறிவது வாஜிபாகும். இதவும் அவரவர் நிலைமைக் குத் தக்கபடி வித்தியாசப்படும். ஏனென்றால், எவன் எந்த வேலையிலிருக் கின்றானோ அவன் அந்த வேலையின் இல்மைத்தவிர இதரவேலையின் இல்மை அறிவது அவனுக்கு வாஜிபாகாது. உதாரணமாக:— ஹைலுடைய நேரத்தில் தலாகு சொல்லக்கூடா தென்பதை அறி வது பெண்பிள்ளைபேரில் வாஜிபாகாது. மேலும் அதை அறிவது தலாக்கு சொல்பவன்மேல் வாஜிபாகும். இனி இருதய சம்பந்த முள்ள இல்மும் இருதயத்தின் ஹால்களைப் பொருத்ததென்றும் நிண்ணயங்களைப் பொருத்ததென்றும் இருவகைப்படும். ஹால் களைப் பொருத்த இல்மாவது:—கபடம், பொறுமை, பெருமை,

தர் எண்ணம் முதலிய குணங்கள் ஹராமென்றறிவதேயாம். இந்த இல்மு எல்லார்பேரிலும் பூண்ட பர்லு ஐனியிருக்கும். ஏனென்றால் ஒரு மனிதனும் மேற்கண்ட குணங்களை விட்டொழியாஞகையால் இது உலகத்தை வளைந்த ஒரு நோயாகும். ஆனதால் அதையறிந்து அதற்குப் பக்குவஞ் செய்வது கடமையாகும். அறிவின்றி அதற்குப் பக்குவஞ்செய்ய முடியாது. ஆனால் பிக்ஹில் கூறப்பட்ட கிரயம் ஒப்பந்தம் கூலி, வாடகை, அடமானம் முதலியவற்றின் இல்மு பர்லுகிபாயாவென்கினும் எவன் அத்தொழில்களில் பிரவேசித்திருக்கிறானே அவன்மேல் அதன் இல்மு பர்லுஐனாகும். பெரும்பாலார் இத்தொழில்களில் ஒன்றையாவது கைக்கொள்ளாமலிருக்க முடியாது. இனி நிண்ணயங்களைப் பொருத்த இல்மு எப்படியென்றால் நிண்ணயத்தில் அவனுக்கு யாதொரு சந்தேகம் தோன்றினால் அந்தச் சந்தேகத்தை மனதிலிருந்து அப்புறப்படுத்துவது அவன்பேரில் வாஜிபாகும். அந்த நிண்ணயம் அஸலில் வாஜிபானதாயும் அதில் சந்தேகம் வைப்பதுகூடாத தாயுமிருக்கவேண்டும். இந்தச் சங்கதிகளால் இல்மைத் தேடுவது எல்லா முஸ்லிம்களின்பேரில் பர்லாயிருக்கின்றதென்று தெரியலாயிற்று. ஏனென்றால் ஒரு இல்மாவது தேவையில்லாத முஸ்லிம் ஒருவனுமில்லை ஆனால் இல்முபலவகையாயும் ஒவ்வொருவனுடைய நிலமைகளுக்கும் காலங்களுக்கும் தக்கவாறு விதியாசப்பட்டதாயுமிருக்கிறது. என்கினும் ஒருவகை இல்மேனும் தேவையில்லாதவன் எவனுமிருக்கமாட்டான். இதன் நிமித்தமே இல்மைத்தேடக் கடமைப்படாத முஸ்லிம் எவனுமில்லையென்று நபிகூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். அதாவது:—எவன் எந்த வேலை செய்ய வேண்டுமோ அந்த வேலையின் இல்மைக் கற்பது அவன் மேல் கடமையாகுமென்பதேயாம்.

(பஸல்) ஒவ்வொருவனும் தான்செய்கிற வேலையின் இல்மைக் கற்பது கடமையென்று தெரியவந்ததினால் இல்மு படிக்காதவன் எப்போதும் அபாயத்திலிருக்கிறானென்பது வெளியாகும். ஏனெனில் அவனுக்கு ஏதாவதொரு வேலைவந்து சேரிட்டால் அதை அறிவின்மையால் செய்தொழிப்பான். அதில் கெடுதியிருக்கிறதென்றுணரமாட்டான். தான் அதிகமாய்ச் செய்ய நேரிடுகிற காரியத்தின் இல்மை அறியாமல் அதைச்செய்தால் அதன் இல்மு எனக்குத் தெரியாதென்று அவன் சொல்லுகிற சமாதானம் அங்கீகரிக்கப்படாது. உதாரணமாக:—ஹைலுள்ள நேரத்தில் அல்லது, அதைவிட்டுச் சுத்தமாகி அவள் குளிக்கிறதற்கு முன்னே தன்பெண்ஜாதியைப் புணர்ந்த ஒருவன் இது ஹராமென்று எனக்குத்தெரியாதென்றால் அவன் சொல்வது கபூல் செய்யப்படாது. இதுபோலவே இரவில் சுபுஹுக்கு முன்னே ஹைலைவிட்டுச் சுத்தமான ஒரு பெண்பிள்ளை மஸ்அலா

தெரியாததினால், மக்ரிபு, இஷாத் தொழுகைகளை கலாச் செய்யவில்லை யானாலும், அல்லது ஹைலுள்ள நேரத்தில் தன் பெண்ஜாதியைத் தலாகு சொன்ன ஒருவன் இது ஹராமென்ற மஸ்அலாவை அவன் அறியா திருந்தாலும் நாங்கள் தெரியாமற் செய்தோம் என்று இவர்கள் சொல்லும் சமாதானம் ஏற்றுக் கொள்ளப்படாது. அப்படிச் சொல்லு கிறவனுக்கு இல்மைத் தேடுகிறது பர்லென்று நாம் சொல்லியிருந்தோம்: நீயேன் அந்த பர்லை நழுவவிட்டா யென்று சொல்லப்படும். ஆனால் ஒரு காரியம் அருமையாய்ச் சம்பவிக்கிறதாயும் அதுவும் சம்பவிக்கு மென்கிற எகீனில்லாததாயு மிருந்தால் அதைப் பற்றின இல்மைக் கற் காததற்கு அவன் சொல்லுகிற சமாதானத்தை ஏற்றுக் கொள்ளக்கூடும்

(பஸல்) இல்மு படிக்காதவன் எப்போதும் இந்த அபாயமான நிலைமையி லிருக்கிறா னென்று நீ தெரிந்து கொண்டதினால், இல்மு கற்பதை விட மனிதனுக்குச் சிறந்த வேலை யொன்றுமில்லை யென்று னக்கு நன்கு விளங்கும். ஒவ்வொருவனும் தன்யாவைச் சம்பாதிப்ப தற்கு ஒவ்வொரு தொழிலைக் கைக்கொள்ளுகிறான். இல்மானது அநேகருக்கு மற்றத் தொழில்களால் உண்டாகும் பலனை விட அதிக பலனைத் தருகின்றது. எனென்றால் இல்மைக் கற்கிற ஒருவன் நான்கு நிலைமைகளில் ஒன்றை விட்டொழிய மாட்டான். முதலாவது ஒருவன் தன்யாவுடைய பொருளை அவசியமான அளவு சுதந்தர பாத்தியத்தினா லாவது வேறு விதத்தினாலாவது அடைந்திருப்பானால், இல்மானது அவன் பொருளை பாதுகாக்க உதவியாயும், தன்யாவில் மதிப்புக்கோர் மூலமாயும் ஆகிறத்தில் நற்பதவிக்குக் காரணமாயு மிருக்கும். இரண் டாவது ஒருவன் தன்னிடம் அவசியமான அளவு போஜனத்துக்கில்லாத வனா யிருக்கிறான். என்கினும் உள்ளது போதுமென்றெப்பிக் கொள் ளும் குணமாகிய கனாஅத்தைக் கைக் கொண்டிருக்கிறான். இஸ்லாமில் பாக்கியவந்தரான சீமான்கள் சொர்க்கம் போக ஐநூறு வருஷத்திற்கு முன்னே நிர்ப்பாக்கியரான ஏழைகள் அதிற் பிரவேசிப்பார்கள் என்று கூறப்பட்டுள்ள ஏழைகளின் பெருமையை அறிகின்றான். இக்குண முள்ளவன் விஷயத்தில் இல்மானது தன்யாவில் சுகத்துக்கும் ஆகிறத் தில் நற்பதவிக்கும் காரணமாகும். மூன்றாவது ஒருவன் தான் இல்மு படித்தால் பைத்துல்மாலில் நின்றுமாவது அல்லது இஸ்லாமானவர்க ளாவது தனக்கு ஹலாலான போஜனங் கிடைக்கு மென்றும், ஹராமான பொருளைச் சம்பாதிக்கவும், பாதுஷாக்களிடத்தில் பிச்சை யிரக்கவும் அவசியமில்லை யென்றும் அறிகின்றான். ஆனதால் இல்மைக் கற்பதானது இந்த மூவர்களின் விஷயத்தில், தனிலும் தன்யாவிலும் மற்ற தொழில் செய்வதை விட அதிக நன்மையுள்ளதா யிருக்கும். நான்காவது ஒரு வன் ஜீவனம்சத்துக்கு ஒன்று மில்லாதவனா யிருக்கிறான். அவன்

இல்மு படிப்பதினால் துன்யாவைச் சம்பாதிக்கலா மென்று கருதுகின் றான். இக்காலமானது ஹறாமிலும் அநியாயத்திலும் சேகரிக்கப் பட்டுள்ள பாஷாக்களின் வருமானங்களால் ஏற்படுத்தப்படுகிற யெளமிய்யாவன்றி அல்லது ஜனங்களிடத்தில் முகஸ்துதி கூறியும் தாழ்மைக் காட்டியும் ஜீவனம் சம்பாதிப்பதன்றி வேறு ஜீவனம் செய்ய அவனால் முடியாத காலமா யிருக்கிறது. இப்படியானவன் விஷயத்தி லும், இன்னும் இல்மினால், பொருள், கீர்த்தி, பிரஸ்தாபம் இவைகளை ஆசிக்கிற ஒவ்வொருவன் விஷயத்திலும் அதிக மேலான தென்ன வென்றால், அவன் தன் பேரில் பூண்ட பாரு ஐயிருக்கிற இல்மைக் கற்றுக் கொண்டதின் பின்னால் யாதொரு தொழிலைச் செய்ய முயலுவ தேயாம். ஏனெனில் இப்படிப்பட்டவன் அதிக இல்முகளைக் கற்பானா னில் மனித ஷைத்தான்களில் நின்றும் ஒரு ஷைத்தானாகுவான். வெகு ஜனங்கள் இவனால் கெட்டுப் போவார்கள். இவன் ஹறாமான பொருளை வாங்குவதையும், துன்யாவைச் சம்பாதிப்பதற்கே இவன் எல்லாத் தந்திரங்களும் செய்கிறானென்பதையும் ஒரு அறிவில்லாதவன் காண் பானாகில், தானும் இவனைப் போலாகுவான். கடைசியில் எல்லாரும் கெட்டுப் போவார்கள். இப்படியான உலமாக்கள் எவ்வளவு குறைந் திருக்கிறார்களோ அவ்வளவு நன்மையாகும். இப்படிப் பட்டவன் தீனுடைய காரியத்தினால் துன்யாவைக் சம்பாதிக்காமல் துன்யா வுடைய காரியங்களின் உதவியினாலேயே அதைச் சம்பாதிப்பது மேன்மையாகும்.

ஆனால், تعلمنا العلم لغير الله فابى العلم ان يكون الا لله "நாங் கள் அல்லாஹ்வுக்கன்றி பிரிது பொருளை ஆசித்து இல்மைப் படித் தோம். பின்பு அந்த இல்மானது தானே எங்களை அல்லாஹ்வுடைய வழிக்கு இழுத்து விட்டது" என்று சிலர் சொல்லி யிருக்கிறதை ஆதாரமாகக் கொண்டு இல்மானது இவனை துன்யாவின் தோட்டத்தி லிருந்து நீக்கிவிடுமென்று ஒருவன் சொல்லும் பக்ஷத்தில் அதற்கு விடையாவது :—அவர்களை அல்லாஹ்வுடைய வழிக்கு இழுத்து விட்ட இல்மு குர்ஆன், ஹதீஸ், ஆகிறத்தின் அகிமயங்கள், ஷரீஅத்தின் ஹகாயிக்குகள் இவைகளின் இல்மா யிருந்தது அன்றியும் அவர்க ளின் அந்தரங்கத்தில் நற்குணங்களை ஏற்குந் தன்மை யிருந்தது. அதா வது :—அவர்கள் தங்களைப் பிடித்த துன்யாவின் ஆசை வெறுத்து அதை யொழிக்க முயற்சிப்பவர்களாயும் தீனுடைய பெரியோர்கள் துன்யாவை வெறுத்து அதை விட்டுப் பேணுகிறவர்களா யிருப்பதைக் கண்டு நாமும் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென்கிற ஆசை யுள்ளவர் களாயு மிருந்தார்கள். இல்மு இப்படியும் காலம் அப்படியுமா யிருக்கும் பக்ஷத்தில் இந்த இல்மினால் இவர்கள் அல்லாஹ்வுடைய வழிக்குத் திரும்புவார்கள் என்ற ஆசையுண்டு. என்னினும் இப்பக்கங்களில் படிக்

கிற இல்முல் பில்ஸபா, இல்முல் கலாம், மற்றும் வீணை சங்கதிகள் போன்ற இந்த இல்முகளும் துன்யாவை வேட்டை பிடிக்கத் தங்கள் இல்முகளே வலையாக்கிக் கொண்ட இந்த ஸமானுவிலுள்ள உலமாக்களின் சகவாசமும், அவர்களிடம் இல்மு படிப்பதும் மனிதனே துன்யாவுடைய விருப்பத்தி லிருந்து மாறச் செய்யாது கேள்விக்கும் கண்ணுல் நேரே பார்ப்பதற்கும் வெகு வித்தியாசமுண்டு.

ஆனதால் நீ நோட்ட மிட்டுப்பார். இவர்கள் துன்யாவுடைய உலமாக்களா? அல்லது ஆகிறத்துடைய உலமாக்களா? இவர்களின் நிலைமைகளைப் பார்ப்பதினுல் ஜனங்களுக்கு லாபமுண்டாகின்றதா? நஷ்டமுண்டாகின்றதா? என்று யோசி. ஆனுல் எங்கேயாவது அல்லுவுடைய பயபக்தியுள்ள முத்தக்கியான ஒருவர் முன்னோர்களான உலமாக்களின் வழியை அனுசரித்தவராயும் துன்யாவுடைய மாயா வஞ்சகத்தினின்று தப்பிக்கச் செய்கிற இல்மை கற்பிக்கிறவராயு மிருந்தால் அப்படிப்பட்ட ஆலிமுடைய சகவாசமும் அவரைப் போய்க் கண்டு கொள்வதும் எல்லாருக்கும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இல்மு படிக்கத் தேவையுமில்லை, பிரயோஜனங் கொடுக்கிற இல்மை ஒருவன் படிப்பானுகில் அது எல்லாத் தொழில்களிலும் மேலானதா யிருக்கும். பிரயோஜனங் கொடுக்கிற இல்மென்றது யாதெனில் எதனுல் துன்யாவுடைய தாழ்மையும் ஆகிரத்தின் பெருமையும் தெரியலாகுமோ இன்னும் துன்யாவை விரும்பி ஆகிறத்தை மறந்தவர்களின் மடத்தனம் எதனுல் வெளியாகுமோ இன்னும் அகம், பெருமை, பொருமை, ஆசை, உலக விருப்பம் முதலான துர்க்குணங்களின் கெடுதியையும் அதை யொழிக்கும் உபாயத்தையும் எதனுல் உணரக்கூடுமோ அதுவே பிரயோஜனங் கொடுக்கிற இல்மென்றது. நோயுள்ள ஒருவனுக்குக் கிடைக்கிற மருந்து போலும் தாகமுள்ளவனுக்குக் கிடைக்கின்ற தண்ணீர் போலும் இந்த இல்மு துன்யாவின் ஆசையுள்ளவனுக்குப் பிரயோஜனத்தைத் தரும். இவன் இதை விட்டு மன்திக்கு, ஹிக்மத்து, இல்முல் கலாம், ஸர்பு நஹ்வு இவைகளைப் படிக்க முயலுவானுகில் இவன் தன் வியாதியை அதிகரிக்கச் செய்கிற ஒரு வஸ்துவைத் தின்ற நோயாளிக்குச் சமானமாகுவான். ஏனென்றுல், பெரும் பாலும் இந்த இல்முகள் பொருமை, ரியா, அகம், பெருமை, கர்வம், வஞ்சனை, அதிகார விருப்பம் முதலிய துர்க்குணங்களின் விதையை மனதில் தூவுகின்றன. அதிகமாகப் படிக்கப் படிக்க இதன் வேர் மனதில் அதிக உறுதியாய்ப் பற்றிப் பிடிக்கும். இந்த இல்முகளில் பராக்கா யிருக்கிறவர்களிடம் சகவாசஞ் செய்வானுகில் கடைசியில் அதை விட்டுத் தவுபாச் செய்ய அவனுக்குக் கஷ்டமாகின்றது.

மூன்றுவது அஸ்லு.

சுத்தத்தின் பயான்.

ان الله يحب التوابين ويحب المتطهرين தவுபாச் செய்கிற வர்களையும், சுத்தமுள்ளவர்களையும் அவன் உவந்து கொள்ளுகிறதாக அல்லாஹ் தஆலா திருவுளமாய் யிருக்கிறான். இன்னும் றஸூல் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் الطهور شطر الايمان சுத்தம் ஈமானின் பாதி பாகமா யிருக்கிற தென்றும், بنى الدين على النظافة சுத்தமென்னும் அஸ்திவாரத்தின் மேல் தீன் எழுப்பப்பட்ட தென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இந்தப் பெருமையும், மகிமையும் தேக வஸ் திர சுத்தத்துக்குள்ள தென்று நீ நினைக்காதே. மேலும் சுத்தத்தின் வகுப்புகள் நான்காகின்றன.

முதலாவது வகுப்பு :—قل الله ثم ذرهم அல்லாவன்றி மற்ற தின் நினைவை விட்டு இருதய உள்ளத்தைச் சுத்தமாக்குவதாம். அல் லாஹ் என்று சொல் பின்பு அவர்களை விட்டுவிடு என்றதின் கருத்து, மற்றவைகளின் நினைவை விட்டு உள்ளம் ஒழிந்திருந்தால் அது ஹக்கின் பக்கம் நோக்கு மென்பதேயாம். இதுவே لا إله إلا الله இல்லல்லாஹு என்ற கலிமாவின் நிச்சயிக்கப்பட்ட தீர்மானம். சித்திகீன்களுடைய ஈமானின் சுத்தம் இதுவேயாம். அல்லாவின் நினைவேயன்றி மற்றதை விட்டு உள்ளத்தைச் சுத்தமாக்குவது ஈமானின் பாதிபாகமா யிருக்கும். ஹக்கல்லாததை விட்டு மனசுத்தமாகாத வரையில் அது ஹக்குடைய திக்ரைக் கொண்டு சிர்திருந்தாது.

இரண்டாவது வகுப்பு :—பொறுமை, கர்வம், பெருமை, ரியா, பகை, ஆவல் முதலிய துர்க்குணங்களை விட்டு இருதயம் சுத்தமாகுவ தும், தாழ்ச்சி, உள்ளது போது மென்ற மனத்திருப்தி, பாவத்தைக் குறித்து மனம் நாணல், பொறுமை, அல்லாவின் அச்சம் அவனின் ஆசை, அன்பு முதலிய நற்குணங்களால் அது அலங்கரிக்கப் பெறுவது மாம். இது முத்தகீன்களுடைய ஈமானின் சுத்தமாம். இப்படித் துர்க் குணங்களை விட்டு சுத்தமாகுவதும் ஈமானின் பாதி பாகமா யிருக்கும்.

மூன்றுவது வகுப்பு :—தேக உருப்புகளை ஒழுக்கம், வணக்கம் இவற்றில் சிர்திருத்தம் பொருட்டு பொய், புறம், கோள், ஹரா மான பொருளைத் தின்பது, திருடுவது, அன்னிய ஸ்திரீகளை நோக்கு

வது முதலிய பாவங்களைவிட்டு அவ்வுறுப்புகளைச் சுத்தப்படுத்துவதாம். இது ஜாஹிதீன்களுடைய ஈமானின் சுத்தமாம். இப்படி ஹறாமான சகல காரியங்களையும் விட்டு அவயவங்களைச் சுத்தமாக்குவதும் ஈமானின் பாதிபாகமா யிருக்கும்.

நான்காவது வகுப்பு:—விவகாரத்தில், தொழுகையைக் கொண்டு காபிர்ல் நின்றும் முஸ்லிமைப் பிரித்தறிய வேண்யடிதாகையால், அத் தொழுகையின் றுகூஉ, ஸுஜூது முதல் மற்றும் றுக்னுகளால் சர்வாங்கமும் அழகுறும் பொருட்டு நஜாஸத்தென்னும் அஸுஊலிகளை விட்டு தேகம், வஸ்திரம் இவைகளைச் சுத்தப்படுத்துவதாம். இது முஸ்லிம்களுடைய ஈமானின் சுத்தமாம். இந்த தேக வஸ்திர சுத்தமும் ஈமானின் பாதிபாகமா யிருக்கும்.

இம்முகாந்திரத்தினுல் எல்லா வகுப்புகளிலும் சுத்தமானது ஈமானின் பாதிபாகமென்று தெரியலாயிற்று. இன்னும் சுத்தமானது ஈமானின் முற்பாதிபாகமா யிருப்பதைப் பற்றி சுத்தமென்னும் அஸ்திபாரத்தின்மேல் தீன் எழுப்பி யிருக்கிறதென்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். ஆனால் தேக வஸ்திர சுத்தமே சுத்தத்தின் கடைசி வகுப்பாம். என்கினும் இது இலேசானதாயும், மனதுக்கு உற்சாகத்தை உண்டாக்குவதாயும், சௌக்கியத்தைக் கொடுப்பதாயும், பிறர் பார்க்கக்கூடியதாயும், வணக்கம் முள்ளவனென்றும் மதிக்க ஜனங்களுக்கு ஓரடையாளமாயு மிருப்பதால் எல்லா ஜனங்களும் இந்த சுத்தத்தை அனுஷ்டிக்கவும், இதில் பிரயாசை யெடுத்துக் கொள்ளவும் அவர்களுக்கு எளிதாயிற்று. ஆனால் பெருமை, பொறுமை ரியா உலக விருப்பம் இவற்றை விட்டு இருதயத்தைச் சுத்தப்படுத்துவதிலும் பாவத்தை விட்டு சரீரத்தைச் சுத்தப் படுத்துவதிலும் மனதுக்கோர் இன்பமில்லை யாகையாலும் இருதயம் அல்லா நோக்குமிடமேயன்றி ஜனங்கள் பார்க்குமிட மன்றுகையாலும் ஒருவரும் இந்தச் சுத்தத்தை விரும்புகிறதில்லை.

(பஸல்) இந்த வெளியரங்கமான சுத்தம் கடைசி வகுப்பானதாயிருந்தாலும் இதன் ஒழுக்கங்களைப் பேணி வஸ்வாஸுக்கும், இஸ்றுபுக்கும் இடங்கொடா திருந்தால், இதனுடைய வரிசையும் பெரிதேயாம். அவற்றிற்கிடங் கொடுக்கும் பக்ஷத்தில் அந்தச்சுத்தம் மக்றூஹும் அருவருப்பு முள்ளதாகும். மேலும் அவன் பாவியாய் விடுவான். சூபியாக்களின் வழக்கமா யிருக்கிற காரியங்களான மோஜா அணிதல், தலைமேல் துப்பட்டி போர்த்தல், எகீனுக சுத்தமா யிருக்கிற தண்ணீரைத் தேடல், பிறர் தொடா திருக்கும்படி தண்ணீர்ப் பாத்திரத்தைப் பதனப்படுத்தல் முதலிய இந்தப் பேணுதல் களெல்லாம் மிக நன்மையானவை.

புக்கஹாக்கள் இவைகளைக் கவனிப்பதில்லை. சூபியாக்கள் இந்தப் பேணுதல்களுக்குள்ள விதிகளில் ஒன்றைவிட்டாலன்றி மற்றப்படி புக்கஹாக்கள் அவர்கள் மேல் ஆக்ஷேபம் செய்யக்கூடாது. இன்னும் இந்தப் பேணுதல் செய்யாதவர்கள் மீது ஆக்ஷேபம் செய்வது சூபியாக்களுக்கும் ஆகாது. ஏனெனில் இந்தப் பேணுதல் மிக நன்மையானவை யென்கிறும் இவற்றிற்காக அனுசரிக்க வேண்டிய விதிகள் ஆறுண்டு.

முதலாவது விதி:—இந்தப் பேணுதலில் நேரம் போக்குவதினால் இதினும் அதிக நன்மையான ஒரு காரியம் தப்பிப் போகாமலிருக்க வேண்டும். ஏனென்றால் ஒருவனுக்கு இல்மைக் கற்கவாவது அல்லது அதிக கஷ்புக்குக் காரணமா யிருக்கிற தபக்குர் செய்யவாவது சக்தி யிருக்கின்றது அல்லது தன் ஜீவனத்துக்காவது, பெண்ஜாதி பிள்ளைகளைப் பரிபாலிக்கவாவது பிச்சையிரக்காமல் யாதொரு தொழில் செய்யக்கூடியவனு யிருக்கிறான். இப்படிப் பட்டவன் சுத்தங்காப்பதில் காலங்கழிப்பதனால் இந்தக் காரியங்களைச் செய்யக்கூடாதிருக்கிற பக்ஷம் அவன் அந்தப் பேணுதல்களை விட்டுவிடவேண்டும். ஏனென்றால் சுத்தங் காப்பதைவிட இந்தக் காரியங்கள் மிக அவசியமானவை யாதலாலென்க. இதற்காகவே சங்கைமான்களாகிய சஹாபாக்கள் இந்தப் பேணுதல்களை அனுசரிக்காமல் மார்க்க யுத்தம், கைத்தொழில் கல்விப்பயிற்சி முதலிய முக்கியமான காரியங்களில் முயற்சியுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்கள் காலில் பாதரக்ஷை யில்லாமல் நடப்பார்கள். தரையில் தொழுகுவார்கள். மண்ணின் மீதுட்காருவார்கள். உணவு உண்ட பிறகு கைகளைக் குதிக்கால்களில் துடைத்து விடுவார்கள். மிருகங்களின் வியர்வை படாதபடி காக்கமாட்டார்கள். அவர்கள் இருதய சுத்தத்திற்காக பிரயாசைப் படுகிறவர்களா யிருந்தார்கள். தேக சுத்தத்தின் பொருட்டு அவர்களுக்கு அவ்வளவு முயற்சியிருந்ததில்லை. ஒருவன் இவ்விலக்ஷணம் பொருந்திய குணத்தால் அலங்கரிக்கப் பெற்றிருப்பானகில் சூபியாக்கள் அவன் மீது ஆக்ஷேபஞ் செய்யத்தகாது- சோம்பேறித்தனத்தால் இந்தப் பேணுதல்களை விட்டு விட்ட ஒருவன் இதை அனுஷ்டிப்பவர்கள் மீது ஆக்ஷேபிப்பது அழகன்று. ஏனெனில் பேணுதலற்றிருப்பதைவிட பேணுதலா யிருப்பது மேன்மையாதலாலென்க.

இரண்டாவது விதி:—இந்தப் பேணுதலில் பெருமையும் ரியாவென்ற புகழாசையும் வராமல் அவன் காக்கவேண்டும். ஏனென்றால் எவன் இந்தப் பேணுதல்களை அனுசரிக்கிறானோ அவன் மனதில் நான் பெரிய வணக்கமுள்ளவனென்றும், என்னை நான் இவ்வளவு சுத்த

மாக வைத்துக் கொள்ளுகிறே னென்றும் பெருமையான எண்ணம் வரும். அதனால் இந்தப் பேணுதலில் அவனுக்கு அதிக ஆவலுண்டா கும். இன்னுமவன் பாதரக்ஷையின்றி தரையில் கால் வைக்க நேரிட் டால், அல்லது ஒருவருடைய பாத்திரத்தால் ஒலுச் செய்ய சம்பவித் தால், அப்போது ஜனங்களுடைய பார்வையில் தன் மதிப்பு குறை கின்றதென்று மயங்குகின்றான். ஆனதால் இவன் ஜனங்கள் பார்க்கத் தரையில் நடந்தும் பேணுதலை விட்டு றுக்ஸத்தின் படி அமல் செய்தும் விட்டுப் போன பேணுதல்களைத் தனிமையில் மீள வைத்தும் தன்னைச் சோதித்துப் பார்க்க வேண்டும். இதற்கு இவன் மனம் நாணுமாகில் ரியாவாகிய புகழாசை யென்னும் பொறியில் இவன் சிக்குவான் என் றெண்ண வேண்டியது. அப்படியானால் இவன் வெறுங்காலாய் நடப் பதும், தரையில் தொழுவதும், பேணுதலை விட்டு விடுவதும் இவன் மேல் வாஜிபாகும். ஏனெனில் புகழாசை ஹறுமாயும், பேணுதல் சுன்னத்தாயு மிருப்பதினாலென்க. பேணுதலை விடுவதன்றி ஹறுமை விட்டுத் தப்ப வழியில்லையாயின் அப்போது பேணுதலை விடுவது வாஜி பாகும்.

மூன்றுவது விதி:—ஒவ்வோர் சமயம் பேணுதலை விட்டு றுக்ஸத் தின் வழியை அனுசரிக்க வேண்டும். பேணுதலையே தன்மேல் பர்லாக்கிக் கொள்ளக் கூடாது. எப்படி என்றால் நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு முஷ்ரிக்குடைய பாத்திரத்தாலும், உமர் றலியல்லாஹு அன்ஹு ஒரு மஜூஸ்ய ஸ்திரீயினுடைய பாத்தி ரத்தாலும் சுத்தி செய்திருக்கிறார்கள். இன்னுமிந்த மஹான்கள் அநேக நேரங்களில் தரையில் தொழுகிறவர்களாயும் யாராவ தொருவர் தன்னிலும் மண்ணிலும் கொஞ்சமும் வித்தியாசப் படுத்தாமல் தரையில் நித்திரை செய்தால், அவரை மிகப் பெரியவரென்று எண்ணுகிறவர்க ளாயு மிருந்தார்கள். ஆனதால் ஒருவன் அவர்களுடைய குணத்தை அனுசரிக்காமல் தழுவ விட்டாலும் அவர்களைப் பின்பற்ற அவன் மனம் பொருந்தவில்லையானாலும் பேணுதலில் அவன் மனம் ஆவல் கொண் டிருக்கிற தென்பதற்கு இதோர் அத்தாட்சியா யிருக்கும். அப்படி யானால் இந்தப் பேணுதலை விட்டு விடுவது கடமையாகும்.

நான்காவது விதி:—எந்தப் பேணுதலில் ஒரு முஸ்லிமுடைய மனதுக்கு வருத்த முண்டாகின்றதோ அந்தப் பேணுதலை விட்டு விட வேண்டும். எனென்றால், ஜனங்களை மனதோவச் செய்வது ஹறுமாயும் பேணுதலை விடுவது ஹறுமல்லவாயு மிருப்பதினாலென்க. உதாரண மாக:—ஒருவன் இவனுடன் கை கொடுத்து முஸாபஹா செய்யவாவது கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்யவாவது நாடி இவனிடம் வருங்

கினுன் ; அவன் கையிலும் முகத்திலும் வியர்வையா யிருக்கிறதினுல் இவன் அவனுக்கு கை கொடாமல் தன்னைப் பின்னுக்கிழுத்துக் கொண்டால் இது ஹறுமா யிருக்கும். மேலும் நற்குணங்களால் முஸ்லீ முடைய மனதைச் சந்தோஷப்படுத்துவது ஆயிரம் பேணுதலை விட அதிக நன்மையா யிருக்கும்; இது போலவே ஒருவன் இவனுடைய தொழுகை விரிப்பில் அடி வைத்தால் அல்லது இவன் பாத்திரத்தால் ஒலு செய்தால் அல்லது இவன் கூஜாவி லிருந்து தண்ணீர் குடித்தால் அவனைத் தடை செய்வதும் அவன் மேல் கோபங் காட்டுவதும் கூடாது. ஏனெனில் ஒரு தரம் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுவினிடம், ஜம் ஜம் தண்ணீர் வேண்டு மென்றார்கள். அதற்கவர்கள் யாரசூலல்லா இந்தத் தண்ணீரில் பலர் கைபட்டுக் கைப்பா யிருக்கின்ற தாகையால் நான் தங்களுக்காக பிரத்தியேகமாய் வேறே ஒரு குடம் மொண்டு வருகிறே னென்றார்கள். அதற்கு றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள் நீர் அப்படிச் செய்ய வேண்டாம். எனக்கு முஸ்லிம்களுடைய கையின் பறக்கத்து மிகப் பிரியமா யிருக்கின்ற தென்றார்கள். அறிவில் லாத சில காரிகள் இந்த நுட்பத்தை யறியாமல் சுத்தங்காக்காதவனை விட்டுத் தங்களைக் காத்து அவனை மனநோவச் செய்கிறார்கள். தாய் தந்தையர் எப்போதாவது அவர்களின் தண்ணீர்ப் பாத்திரத்தையாவது வஸ்திரத்தையாவது எடுக்க நேரிட்டால் அவர்களைக் கடிந்து பேசுகின் றார்கள். இவை யெல்லாம் ஹறுமா யிருக்கிறது. வாஜிபல்லாத இந்தச் சுத்தங்காப்பதின் பொருட்டு இது எப்படிக் கூடும்? எந்த ஜனங்கள் இந்தப் பேணுதல்களை அனுசரிக்கின்றார்களோ பெரும்பாலும் அவர் களுக்கோர் கர்வ முண்டாகின்றது. நாம் இப்படிச் சுத்தங்காப்பதால் ஜனங்கள் நம்மைத் தங்களினும் சிறந்தவர்களாக மதிக்க வேண்டுமென்று கருதுகின்றார்கள். ஒருவனை மனநோவச் செய்யவும், தங்கள் சுத்தத் தைக் காட்டிப் பிறரைக் குற்றங் கூறவும், தங்கள் பெருமையை வெளிப் படுத்தவுமே இவர்கள் பேணுதல் செய்வது பெரும் பாக்கிய மென் றெண்ணுகிறார்கள். சங்கையுள்ள சஹாபாக்கள் எந்த விஷயத்தை யிலேசா யெண்ணினார்களோ அந்த விஷயத்தைக் கைக்கொள்ள இவன் மனம் பொருந்துகிறதில்லை. உதாரணமாக ஒருவன் கட்டிகளால் மாத் திரம் மலஜலசுத்தி செய்வானுகில் அதை இவன் பெரும்பாவமென் றெண்ணுகிறான். இதெல்லாம் தூர்க்குணங்களாயும் உள்ளத்தின் அசுத் தத்திற்கு அடையாளமாயு மிருக்கின்றன. அருவருப்பான அழுக் காறுகளை விட்டு இருதயத்தைச் சுத்தமாக்குவது பர்லா யிருக்கும். ஏனெனில் இருதய அசுத்தம் அபாயத்திற்குக் காரணமாகின்றதாலும் பேணுதலை விடுவது அப்படி யாகாமையினுலுமேயாம்.

ஐந்தாவது விதி:—இதேமாதிரி உண்ணல் உடுத்தல் வசனித்தல் இவைகளிலும் அந்தப் பேணுதலே கவனம் வைக்கவேண்டும் ஏனெனில் இது மிக முக்கியமானதாலென்க. ஒருவன் அதிக முக்கியமான காரியத்தை விட்டுவிடுவானுகில் அவன் பெருமைக்காக அல்லது வழக்கத்திற்காக இந்தப் பேணுதல் செய்கிறானென்று அது அறிவிக்கும். உதாரணமாக ஒருவன் உண்ண அவசியமில்லாத உணவைத்தின்றால் வழக்கத்தின்படி அவன் கை வாய்களைக் கழுவாதிருக்கிறவரையில் தொழமாட்டான். அது நஜீஸல்லவென்றும் நஜீஸானால் தின்ன ஹறாமாயிருக்குமென்றும் இவன் அறிகின்றானில்லே. அப்படி நஜீஸாயிருந்தால் இவன் அவசியமின்றி ஏன் அதைத் தின்றான்; அது சுத்தமானதாயிருந்தால் ஏன் கை கழுவாமல் தொழக்கூடாது; பின்பு அவா முன்னஸுகள் உட்கார்ந்திருந்த ஒரு விரிப்பில் இவன் தொழாதிருக்கும்போது அவர்கள் வீட்டிற் சமைத்த உணவை இவன் ஏன் உண்ணுகிறான்; உணவில் பெரிய பேணுதல் வேண்டுமே! பெரும்பாலும் இவர்கள் பாஜாரிகளின் வீட்டிற்சமைத்த போஜனத்தை யுண்கிறார்கள். ஆனல் அவர்களின் பிடவைகளில் தொழுகிறார்களில்லே. இது உண்மையான பேணுதலுக் கத்தாட்சியன்று.

ஆறுவது விதி:—இந்தப்பேணுதலில் மூன்று தரத்துக்குமேல் அதிகமாய்க் கழுவுதல்போன்ற விலக்கான காரியங்கள் சேரக்கூடாது. நான்கு விடுத்தம் கழுவக்கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் சுத்திசெய்வதில் காலதாமத மாகாதிருக்கவும், முஸ்லிமான சகோதரனைப் பேணுதலில் வைப்பது கூடாதென்பதற்கும், தண்ணீரை மிதமிஞ்சிச் செலவிடக் கூடாதென்பதற்குமேயாம். அல்லது அப்படிச் செய்வதால் தொழுகையை முந்தின நேரத்தை விட்டுப் பிற்படுத்துகின்றான், அல்லது தான் இமாமாயிருக்கிறான் ஜமாஅத்தைக் காக்கவைக்கிறான், அல்லது ஒரு முஸ்லிமுக்கு ஒரு வேலையைப்பற்றி வாக்கு கொடுத்திருந்தான், இவனை எதிர்பார்ப்பதில் அவனுக்குச் சாமதம் ஆகின்றது. அல்லது அத்தாமதத்தினல் அவன் தொழிலுக்குப்போக வேண்டிய நேரம்போய் விடுகின்றதும் அதனல் அவன் மனைவி மக்கள் கஷ்டமடைகின்றார்கள். இப்படியான காரியங்கள் பர்லல்லாத இந்தச் சுத்தங்காப்பதின் பொருட்டு ஹலாலாகமாட்டா. அல்லது பள்ளிவாசலில் ஒருவனுடைய பிடவை தன்மேல் படாதிருக்கும் பொருட்டு நீளமான விரிப்பை விரித்துக்கொள்கிறான். இதில் மூன்று கெடுதிகளிருக்கின்றன. முதலாவது:-பள்ளிவாசலில் நின்று மொருபாகத்தை மற்றொரு முஸ்லிமிடத்திலிருந்து அபகரித்துக் கொண்டான். இவன் சஜ்தா செய்யப்போதுமான இடம்மாத்திரமே இவனுக்கு பாத்தியமாம்.

இரண்டாவது:—இதில் சப்பு நெருங்கிச் சேராது. ஒருவனுடைய புயம் மற்றொருவனுடைய புயத்தைத்தொடும்படி நிற்க வேண்டு மென்று ஹதீதில் வருகின்றது. மூன்றுவது:—நாய்க்கும் நஜீஸுக் கும் விலக்குவதுபோல் ஒரு முஸ்லிமை அருவருத்து விலக்குகின்றன். இது தகுதியல்ல. சுத்தங்காப்பதின் பொருட்டு அறிவீனன் இம்மா திரியான அநேகம் கெடுதிகளில் விழுகின்றன். அதுகெடுதியென்று உணர்கின்றனில்லே.

(பஸல்) வெளியரங்க சுத்தம் அந்தரங்க சுத்தத்தினின்றும் பிரத்தி யேகமானதென்றும் அந்தரங்க சுத்தம் மூன்றுவகை யென்றும் அவற் றுள் முதலாவது பாவங்களைவிட்டு அவயவங்களைச் சுத்தி செய்வதென் றும், இரண்டாவது தர்க்குணங்களைவிட்டு இருதயத்தைச் சுத்திசெய்வ தென்றும், மூன்றுவது அல்லாவன்றி மற்றதை விட்டு உள்ளத்தைச் சுத்திசெய்வதென்றும் நீ தெரிந்துகொண்டா யல்லவா? இதுபோலவே வெளியரங்க சுத்தமும் மூன்றுவகைப்படும். முதலாவது, நஜீஸுக ளென்னும் மலஜலமுதலான அருவருப்புகளை விட்டுச் சுத்தமாகுவது. இரண்டாவது, ஹதசு ஜனபத் தென்னும் சிறு தொடக்கு பெருந் தொடக்குகளை விட்டுச் சுத்தமாக்குவது. மூன்றுவது, உரோமம், நகம், அழுக்கு முதலியவைபோன்ற சரீரக்கழிவுகளில் நின்றும் சுத்தமாக்குவதாம்.

முதலாவது வகை நஜீஸுகளைவிட்டும் சுத்தமாக்குவது.

போதையைக்கொடுக்கும் சாராயம் நீங்கலாக தாதுவர்க்கங்களில் நின்றும் அல்லாஹுத் தஆலா உற்பத்தி யாக்கியவையாவும் சுத்த மேயாம். சாராயம் கொஞ்சமென்கினும் அதிகமென்கினும் நஜீஸாம். நாயும் பன்றியும் நீங்கலாக மற்றும் ஜீவவர்க்கம் யாவும் சுத்தமாயிருக் கும். மனிதனும், மீனும் வெட்டுக்கிளியும் ஈ, தேள், வண்டு தானியத்திலுண்டாகிற புழு பூச்சிகள்போல் தேகத்தில் ஓடும் இரத்த மில்லாத பிராணிகளும் நீங்கலாக மற்றும் செத்துப்போன பிரர்ணி கள் யாவும் நஜீஸாகும். விந்து, *மூட்டை, பட்டுப்பூச்சி இவைபோல் பிராணியின் கருவாயிருப்பது நீங்கலாக பிராணிகளின் உள்ளே

---

* ஹனபி மதுஹபில் மனிதனுடைய மணியாலுலும் மற்ற ஹைவான்களுடைய மணியாலுலும் அசுத்தமேயாம். அது தேகத்திலா வது வஸ்திரத்திலாவது பட்டு ஈரமாயிருந்தால் கழுவிப்போடுகிறது கொண் டும், காய்ந்து போனல் சுறண்டி உதறிவிடுகிறது கொண்டும் தேகமும் வஸ்திரமும் சுத்தமாய்விடும். ஆனல் பன்றி, நாய், யானை இவைகளின் மணிப்பட்டால் அது காய்ந்திருந்தாலும் கழுவ வேண்டும். முந்தின மஸ் அலாவில் சுறண்டி உதறி விட்டால் சுத்தமாய்விடுமென்றது உறுப்பைத் தண்ணீர்கொண்டு சுத்தப்படுத்தி யிருந்தால்தான்.

மாறுதலடைந்த யாவும் நஜீஸாயிருக்கும். வியர்வை, தண்ணீர் இவை போல் மாறுதலடையாதவை சுத்தமாம். எந்தப்பொருள் அசுத்தமோ அதோடு தொழுவது துருஸ்தில்லை. ஆனால் கஷ்டத்தின் நிமித்தம் ஐந்து வஸ்துக்கள் பொறுக்கப் பட்டிருக்கின்றன. முதலாவது, மூன்று கற்களால் துடைத்த பிறகு தரிபட்டிருக்கிற நஜீஸின் வாடை முதலிய குணமாம். ஆனால் இது பொறுக்கப்படுமென்கிற மலங்கழிக்கும் போது அது தன் இடத்தைவிட்டுங் கடக்காமலிருந்தால்தான். இரண்டாவது, வழியின் சேறும். அதில் நஜீஸிருப்பதை எகீனை அவன் கண்டாலும் சரியே. ஆனால் அதில் நின்றும் அவன் தன்னைக்காக்கமுடியாத அளவைப் பொறுக்கப்படும் என்கினும், ஒருவன் சேற்றில் விழுந்து விட்டாலும் அல்லது மிருகம் அவன் பிடவையைக் கெடுத்து விட்டாலும் இது அருமையாய்ச் சம்பவிப்பதாகையால் பொறுக்கப் படாது. மூன்றுவது, மோஜாவில் படுகிற நஜீஸாம். இதில் எவ்வளவை விட்டுங் காக்கமுடியாதோ அவ்வளவு பொறுக்கப்படும். மோஜாவை அணிந்து தொழுகிறதா யிருந்தால் அதைப் பூமியில் தேய்ப்பான். நான்காவது, பிடவையில் பட்டிருக்கிற கொசுவின் இரத்தமாம். அது கொஞ்சமென்கினும் அதிகமென்கினும் அதில் வியர்வை கசிந்திருந்தாலும் பொறுக்கப்படும். ஐந்தாவது, சினப்புகளினின்று வெளிப்படுகிற மஞ்ச நீராம். மனிதனுடைய தேகத்தின் தோல் இதை விட்டொழியாது. இது போலவே சொறி சிறங்குகளினின்றும் புறப்படுகிற நீரும் பொறுக்கப்பட்டதா யிருக்கும். ஆனால் கொப்பளம் பெரியதா யிருந்து அதில் சீழ் அதிகமாய் வெளிப்பட்டால் அது கட்டியைப் போலாகும். அதைக்கழுவுவது வாஜிபாகும். கழுகின பிறகுள்ள கூறு பொறுக்கப்படும். அந்த இரத்தத்தைக் கழுவுகிறது அவசியமாகும். பின்பு ஒருகாயம் ஆறுமலிருந்து அதை கழுவுகிறதில் அபாய மிருந்தால் தொழுகையை கலாச்செய்வான். ஏனெனில் இது அருமையாய்ச் சம்பவிக்கிற சங்கட மாதலாலென்க.

(பஸல்) ஒரு இடம் அசுத்தமாய் விட்டால் அதன் மேல் ஒருதரம் * தண்ணீர் ஊற்றுவதினால் சுத்தமாய்விடும். என்கினும் அதன் மேல் நஜீஸின் தடிப்பு இருந்தால் அந்தத் தடிப்பு நீங்குகிற வரையில் கழுவ வேண்டும். கழுவியும, தேய்த்தும், நகத்தால் பலதரம் சுறண்டியும் நிறமும் வாடையும் போகாமல் அதில் தரிப்பட்டிருந்தால் அந்த விடம் சுத்தமேயாம்.

---

* ஹனபி மதுஹபில் அதன் மேல் மூன்று தடவை தண்ணீர் ஊற்றுவது அவசியம்.

அல்லாஹு தஆலா உண்டாக்கின தண்ணீர் யாவும் சுத்தமாயிருக்கும். ஆனால் நான்கு வகையான தண்ணீர் சுத்தமாக்குவன வன்று அவற்றுள் ஒன்றுவது ஹதசு என்ற சிறு தொடக்கில் ஒரு தரம் வழங்கப்பட்ட தண்ணீராம். இது தன்னிலே சுத்தமானது, ஒலு முழுக்குக்கு உதவாது. இரண்டாவது நஜீஸில் வழங்கப்பட்ட தண்ணீராம். இது தன்னிலேயும் சுத்தமல்ல. ஒலுமுழுக்குகளுக்கும் உதவாது. ஆனால் நஜீஸின் பொருட்டால் அதன் வாடை, நிறம், சுவை இம்மூன்று குணங்களும் மாறுதலடையாதிருந்தால் அது சுத்தமாயிருக்கும். மூன்றுவது இருநூற்றைம்பது மணுவுக்குக் குறைந்த தண்ணீரில் *நஜீஸு விழுந்து அதன் குணங்கள் மாறுதிருந்தாலும் அது அசுத்தமாயிருக்கும். நான்காவது, குங்குமப்பூ, சவுக்காரம், உசலயிலை, மாவு முதலியவைபோல் எந்த சுத்தமான பொருள்களை விட்டுத் தண்ணீரைக் காக்கக் கூடுமோ அந்தப் பொருளால் தண்ணீரின் நிறமும் வாடையும் சுவையும் மாறிப் போனால் அது தன்னிலே சுத்தமாயிருக்கும், ஒலு முழுக்குக்கு உதவாது. ஆனால் அதன் மாறுதல் கொஞ்சமாயிருந்தால் அது ஒலு முழுக்குகளுக்கும் உபயோகப்படும்.

இரண்டாவது வகை தொடக்கை விட்டு சுத்தமாகுவது.

இதில் மலஜலங்கழித்தல், சுத்திசெய்தல், ஒலு, முழுக்கு, தயமம் இவைகளின் ஒழுக்கங்களைக் குறித்த ஐந்து பஸலுகளிருக்கின்றன.

முதலாவது பஸல்:—மலஜலங்கழித்தலில் ஒழுக்கங்களைக் குறித்தது. காடாயிருந்தால் ஜனங்களின் பார்வையை விட்டுத் தூரமாக வேண்டும், கூடுமானால் சுவற்றின் பின்புறம் போக வேண்டும், உட்காரு முன் நிர்மானமாகக் கூடாது. சூரிய சந்திரர்களுக்கு எதிரில் உட்காரக் கூடாது. கிப்லாவின் பக்கம் முகம் நோக்கியாவது, முதுகு காட்டியாவது உட்காரக் கூடாது. ஆனால் அதற்காகக் கட்டப்பட்ட ஜாகையிலிருந்தால் அப்படி உட்கார ஆகும். என்றாலும் கிப்லாவை வலது புறமாவது இடது புறமாவது ஆக்கிக் கொள்வது மேலாம். ஜனங்கள் கூடுகிற இடத்தில் மலங்கழிக்கக் கூடாது. நிலத் தண்ணீரிலும் கனியுள்ள மரத்தின் கீழும் நீருக்கிருக்கக் கூடாது. யாதொரு வலையிலும் மலஜலங் கழிக்கக்கூடாது. கெட்டியான தரையின் மீதும் காற்றின் எதிரிலும் நீருக்கிருக்கக்கூடாது. ஏனெனில் துளிகள் தெறிக்காமலிருக்கவேயாம். சங்கடமிருந்தாலன்றி மற்றப்படி நின்று கொண்டு நீருக்கிருக்கக் கூடாது. ஒலுசெய்கிறவிடத்திலும் குளிக்கிற விடத்

---

* ஹனபி மதுஹபில் பத்திலேபத்தை எற்றிய ஹவுலைக்காண சுறைந்திருந்தால் அதில் நஜீஸு விழுகிறது கொண்டு அசுத்தமாகும்.

திலும் நீருக்கிருக்கக்கூடாது. மலத்துக்கு உட்காருவதில் இடது காலில் சார்ந்திருக்க வேண்டும். புகும்போது இடது காலையும் புறப் படும்போது வலதுகாலையும் முன்னே வைக்கவேண்டும். அல்லாஹ்-டைய திருநாமம் எழுதப்பட்டிருக்கிற எந்த வஸ்துவையும் தன்னுடன் வைத்துக்கொள்ளக் கூடாது. தலைதிறந்துகொண்டு மலத்துக் கிருக்கப் போகக்கூடாது. புகும்போது,

اعوذ بالله من الرجس النجس الخبيث المخبث الشيطان الرجيم

அவூது பில்லாஹி மினர்ரிஜ்ஸின் நஜ்ஸில் கபீதில் முக்பிதிஷ் ஷைதானிர்றஜீம் என்றும் அதைவிட்டுப் புறப்படும்போது,

الحمد لله الذى اذهب عني ما يؤذيني وابقى في جسدى ما ينفعني

அல்ஹம்து லில்லா ஹில்லதீ அத்ஹப அன்னீ மாயூதீனி வஅப் கா பீஜஸதீ மாயன் பஃனீ என்றும் ஓதவேண்டும்.

இரண்டாவது பஸல்:—மலஜலங் கழித்த பின் அவற்றினின்று சுத்தியாகுவதைக் குறித்தது. மலங்கழிக்கப் போகு முன் மூன்று கற்களை அல்லது மண் கட்டிகளைச் சரிபடுத்தி வைத்துக்கொள்ள வேண் டும். அதை விட்டொழிந்த பின் இடது கையிலுல் கட்டியை உயர மல்லாத விடத்தில் ஆசன வரம்புக்குள் வைத்து நஜீஸின் தானம் வரை யில் இழுத்துக்கொண்டு போய் நஜ்ஸைத் துடைக்க வேண்டும். துடைத்த பிறகு அந்த கட்டியை மறுதானத்தில் துடைக்க கூடாது. இப்படி மூன்று கட்டிகளை வழங்கிப் பிறகு சுத்தியாகாவிட்டால் கட்டி கள் ஒத்தைப் படையாகும்படி இன்னும் இரண்டு கட்டிகளை வழங்க வேண்டும். அதன் பிறகு ஒரு பெரிய கல்லை வலது கையிலும் கோசத் தை இடதுகையிலும் பிடித்துக்கொண்டு அந்தக் கல்லின் மேல் கோசத் தை மூன்று தரம் மூன்று இடத்தில் ஒற்றவேண்டும். கோசத்தை இடது கையினுல் அசைக்க வேண்டும். வலது கையினுல் அசைக்கக் கூடாது. இம்மட்டில் போதுமாக்கிக் கொண்டாலும் ஆகும். ஆனல் கட்டிகளைக்கொண்டு சுத்திசெய்த பிறகு தண்ணீரால் கழுவுவதுமேல். கழுவும்போது தண்ணீர் மேலே தெறிக்காதிருக்கும்படி அந்த இடத் தைவிட்டும் அப்புறம் நகர்ந்து வலது கையினுல் தண்ணீரை ஊற்றி இடது உள்ளங்கையினுல் வழவழப் பில்லாதபடி தேய்த்துக் கழுவ வேண்டும். சுத்தமாய் விட்ட தென்று உணர்ந்து கொண்டப் பிறகு அதிக தண்ணீரை ஊற்றக்கூடாது. தண்ணீரை உள்ளே செலுத்த பிரயாசைப் படக்கூடாது. என்கினும் கழுவும்போது தன்னைத்தளர விடவேண்டும். அப்படி விடுவதில் தண்ணீர் செல்லாத விடம் உள்ளு றுப்பைச் சேர்ந்ததாகையால் அது நஜீஸல்ல, ஆனதால் வஸ்வாஸ்

என்னும் விபரீத எண்ணத்துக்கு இடங்கொடுக்கக் கூடாது. இது போலவே நீருக்கிருந்து சுத்தமாகுவதிலும் மூன்றுதரம் கையைக் கோசத்தின் கீழ் தடவி விடவேண்டும். மூன்று தரம் உதறிவிட வேண்டும். மூன்றுதரம் கழுவேண்டும். இதற்கு மேல் அதிகம் கஷ்டப்படவேண்டியதில்லை. அதனால் வஸ்வாஸ் உண்டாகும். நோந் தோறும் இவ்வளவு செய்தபின் ஈரம் வெளியாயிற்றென்று மனதுக்கு வஸ்வாஸ் தோன்றினால் இஜாரின்மேல் தண்ணீர் தெளிக்கவும். அதேனெனில் இது தண்ணீரின் ஈரமென்று மனதில் எண்ணம் வரவே யாம். வஸ்வாஸை நிவாரணம் செய்வதற்காக இப்படிச் செய்யும்படி நபிஸல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். தண்ணீரைக் கொண்டு கழுவியான பிறகு கையைச் சுவற்றின் மீதா வது பூமியின் மேலாவது தேய்த்துக் கொஞ்சமும் வாடையில்லாதபடி கழுவவேண்டும். கழுவும்போது,

اللهم طهر قلبى من النفاق و حصن فرجى من الفواحش

அல்லாஹும்ம தஹ்ஹிர் கல்பீ மினந் நிபாகி வஹஸ்ஸின் பர்ஜீ மினல் பவாஹிஷி என்று துவா ஓதவேண்டும்.

மூன்றுவது பஸல் :—ஒலுவைக் குறித்தது. மலஜலத்தினின்று சுத்தியானதின் பிறகு மிஸ்வாக்கு செய்யவேண்டும். வலது பக்கம் துவக்கம் செய்து முந்தி மேற்பல்லையும் பிறகு கீழ்பல்லையும் விளக்கி இதுபோலவே இடது பக்கத்திலும் செய்து பல்லின் உட்பக்கத்தை யும் இதே ஒழுங்காய் விளக்கவேண்டும். பின்பு நாக்கையும் தொண் டைக் குழியையும் தேய்க்கவேண்டும். மிஸ்வாக்கை அவசியமான காரியமென்று எண்ணவேண்டியது. ஏனென்றால் மிஸ்வாக்கு செய்த பின் தொழப்படுகிற ஒரு தொழுகையானது எழுபது தொழுகையின் வரிசையுள்ளதென்று ஹதீதில் வந்திருக்கிறது. மிஸ்வாக்கு செய்யும் போது அல்லாஹு தஆலாவுடைய திக்ரின் பாதையைச் சுத்தமாக்கு கிறேனென்று நிய்யத்து செய்யவேண்டும். ஒலுமுறியும் போதெல் லாம் மிஸ்வாக்கு செய்யவேண்டும். ஏனெனில் நபிஸல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இப்படிச் செய்கிறவர்களா யிருந்தார்கள். ஒலு செய்யவில்லையானாலும் வாய்க்கழுவாமல் தூங்கினதினால் அல்லது வெகு நேரம் வாய்மூடி யிருந்ததினால் அல்லது துர்வாசமுள்ள ஒரு வஸ்து வைத் தின்றதினால் வாயில் ஒருவித மாறுதலைக் காணும்போது மிஸ் வாக்கு செய்வது சுன்னத்தா யிருக்கும். மிஸ்வாக்கு செய்தான பிறகு உயரமான விடத்தில் கிப்லாவை நோக்கி உட்கார்ந்து.

بسم الله الرحمن الرحيم ۰ اعوذ بك من همزات
الشيطن واعوذ بك رب ان يحضرون

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்; அவூதுபிக மின்ஹமஸா திஷ்ஷைதானி வஅவூதுபிக றப்பி அன்யஹ்லுறூன் என்று துவா ஓதி மூன்று தரம் இரண்டு கைகளையும் கழுவி,

اللهم انى اسالك اليمن والبركة واعوذ بك من الشوم والهلك

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல்யும்ன வல் பறகத, வஅவூது பிக மினஷ்ஷூமி வல்ஹலக்கி என்று ஓத வேண்டும். தொழுகை துருஸ்தாகுவதற்காக அல்லது தொடக்கு நீங்குவதற்காக ஒலுச் செய்கிறேனென்று நிய்யத்து செய்ய வேண்டும். முகம் கழுவுகிற வரையில் இந்த நிய்யத்தை மறக்காமல் காக்க வேண்டும். பின்பு மூன்று தரம் வாய்க் கொப்பளித்து நோன்பில்லா விட்டால் கர்கரா செய்து அதாவது தொண்டைக் குழி மட்டும் தண்ணீர் செல்லும்படி அண்ணாந்து கொப்பளித்து,

اللهم اعنى على ذكرك وشكرك وتلوة كتابك

அல்லாஹும்ம அஇன்னீ அலாதிக்ரிக வஷுக்ரிக வதிலாவத்தி கிதாபிக என்று ஓத வேண்டும்; பின்பு மூன்று தரம் நாசியில் தண்ணீர் செலுத்திச் சிந்திப்போட்டு,

اللهم ارحنى رائحة الجنة وانت عنى راض

அல்லாஹும்ம அரிஹ்னீ ருயிஹத்தல் ஜன்னத்தி வஅன்த்த அன்னீ ருலின் என்று ஓத வேண்டும்; பின்பு மூன்று தரம் முகத்தைக் கழுவி,

اللهم بيض وجهى بنورك يوم تبيض وجوه اوليائك

அல்லாஹும்ம பய்யிள் வஜ்ஹீ பிநூரிக யௌமதப்யல்லு வுஜூஹுன் அவ்லியாஇக என்று ஓத வேண்டும். நெற்றியின் மீதிருக்கிற ரோமக்கால்களில் தண்ணீர் செலுத்த வேண்டும். ஆனல் தாடியின் உரோமம் அடர்த்தியா யிருந்தால் அதன் மேல் தண்ணீர் ஊற்றிக் கழுவ வேண்டும். தாடியைக் கோதவேண்டும். காதின் தலைப்பி லிருந்து நெற்றியின் மூலை வரையில் முகத்தின் ஹத்தா யிருக்கும். கண்ணின் மூலையின் சாரியிருக்கிற சுறுமா முதலியவற்றின் அசடுகள் நீங்கும் படி விரலால் கண்ணைச் சுத்தப்படுத்த வேண்டும். பின்பு மூன்று தரம் வலது கையை புஜத்தின் மத்திவரையில் கழுவ வேண்டும். கழுவுதல் புஜத்தின் கீழ்ப்பாகத்தை எவ்வளவு நெருங்கி யிருக்குமோ அவ்வளவு உத்தமமாகும். இப்படி வலது கையைக் கழுகின பிறகு,

اللهم اعطنى كتابى بيمينى وحاسبنى حسابا يسيرا

அல்லாஹும்ம அஃதினீ கிதாபீ பியமீனீ வஹாஸிப்னீ ஹிஸாபன் யஸீரு என்று ஓத வேண்டும். பிறகு இடது கையையும் இதே மாதிரி கழுவி,

اللهم انى اعوذبك ان تعطينى كتابى بشمالى اومن وراء ظهرى

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக அன்துஃதியனீ கிதாபீ பிஷிமாலீ அவ்மின்வரூஇ லஹ்ரீ என்று ஓத வேண்டும். விரலில் மோதிரம் இருந்தால் அதன் கீழ் தண்ணீர் செல்லும் படி அதை அசைத்து விட வேண்டும். பின்பு இரண்டு கைகளையும் நனைத்து விரல்களை ஒன்றோடொன்று பொருத்தி தலையின் முன் பக்கத்தில் வைத்து பிடரி வரையில் நடத்திக் கொண்டு போய் பிறகு அந்த விடத்திற்கே திருப்பிக் கொண்டு வரவேண்டும். ஏனெனில் ரோமத்தின் இருபக்கமும் நனையவேயாம். இது ஒருதரமாயிற்று. இதே மாதிரி * மூன்று தரம் செய்ய வேண்டும். அப்போது,

اللهم غشنى برحمتك وانزل على من بركاتك
واظلنى تحت عرشك يوم لا ظل الا ظلك

அல்லாஹும்ம கஷ்ஷினீ பிறஹ்மதிக வஅன்ஸில் அலய்யமின் பறகாதிக வஅலில்லனீ தஹ்த அர்ஷிக யௌமலாலீல்ல இல்லாலில்லுக என்று ஓத வேண்டும். பின்பு இரண்டு காதுக்கும் மஸ்ஹ் செய்து மூன்று தரம் விரலை காதின் துவாரத்தில் விட்டு பெருவிரலை காதின் பின் புறம் இறக்க வேண்டும். அப்போது,

اللهم اجعلنى من الذين يستمعون القول فيتبعون احسنه

அல்லாஹும்ம மஜ்அல்னீ மினல்லதீன யஸ்தமிவூனல் கௌல பயத்தபிவூன அஹ்ஸனஹ் என்று ஓத வேண்டும். பின்பு பிரடிக்கு மஸ்ஹ் செய்ய வேண்டும். அப்போது,

اللهم فك رقبتى من النار واعوذبك من السلاسل والاغلال

அல்லாஹும்ம பக்கி றகபதீ மினங்நாரி வஅவூதுபிக மினஸ்ஸலாஸிலி வல்அக்லால் என்று ஓத வேண்டும். பின்பு வலது காலை மூன்று தரம் கெண்டைக்காலின் மத்தி வரையில் கழுவ வேண்டும். விரல்களை இடது கையின் சுண்டு விரலைக் கொண்டு கீழ்புறத்தில் நின்றும் கோத வேண்டும். கோதலை வலது காலின் சுண்டு விரலினின்றும் ஆரம்பித்து இடது காலின் சுண்டு விரலில் முடிக்க வேண்டும். வலது காலைக்கழுவும் போது,

---

* ஹனபி மதுஹபில் ஒரே தரம் மஸ்ஹ் செய்ய வேண்டும்.

اللهم ثبت قدمي على الصراط يوم تزل الاقدام في النار

அல்லாஹும்ம ஸப்பித் கதமீ அலஸ்ஸிரூத்தி யௌமதஸில்லுல் அக்தாமு பின்னர் என்று ஓதவேண்டும். இடது காலையும் இதே மாதிரி கழுவவேண்டும். அப்போது,

اللهم اعوذبك ان تزل قدمي على الصراط يوم
تزل الاقدام المنافقين

அல்லாஹும்ம அவூதுபிக அன்தஸில்ல கதமீ அலஸ்ஸிரூத்தி யௌம தஸில்லுல் அக்தாமுல் முனபிகீன் என்று ஓதவேண்டும். ஒலு செய்தான பிறகு,

اشهد ان لا اله الا الله وحده لا شريك له واشهد ان محمدا عبده
ورسوله اللهم اجعلني من التوابين واجعلني من المتطهرين
واجعلني من عبادك الصالحين

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ கலஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வறசூலுஹு அல்லாஹும்ம மஜ்அல்னீ மினத்தவ்வாபீன வஜ்அல்னீ மினல்முத்த தஹ்ஹிரீன வஜ்அல்னீ மின் இபாதிக்கஸ்ஸாலிஹீன் என்று ஓத வேண்டும். அறபுவாக்கியத்தின் அர்த்தம் அறியாதவன் இந்த துஆக் களின் மஃனைவைப் படித்துக் கொள்ளக் கடவன். ஏனெனில் அவன் தான் சொல்வது இன்னதென்றுணர்ந்து கொள்ளவேயாம். இன்னும் எவன் ஒலுசெய்யும்போது அல்லாஹு தஆலாவை திக்று செய்வானே அவனுடைய உறுப்புகளின் எல்லாக் குற்றங்களும் சுத்தமாகின்றன வென்றும், திக்ரில்லாவிட்டால் தண்ணீர்ப்பட்ட உறுப்பு மாத்திரம் சுத்தமாகுமென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஒலு முறியாமற்போனு லும் ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாய் ஒலுச்செய்ய வேண்டும். ஏனென்றால் எவன் புதிதாய் ஒலுச்செய்வானே அவனின் ஈமானை அல்லாஹு தஆலா புதிதாக்குவானென்று ஹதீதில் வந்திருக்கிறது. ஒலுச் செய்து முடிந்தால் நான் இப்போது சுத்தி செய்த உறுப்புகள் ஜனங்கள் பார்க்கும் இடமென்றும் கல்பானது அல்லாஹு தஆலா பார்க்கும் இடமென்றும் எண்ணிக் கொள்ள வேண்டியது. ஒருவன் வெளியுறுப்புகளை மாத்திரம் சுத்தி செய்து துர்க்குணங்களை விட்டுத் தௌபாவினால் கல்பை சுத்தப் படுத்த வில்லையானால் அவனுக்கு உப மானமாவது ஒரு பாஷாவை விருந்துக்கழைத்த ஒருவன் தன் வீட் டுத் தெரு வாசலைத் சுத்தப்படுத்தி அந்த பாஷா உட்காருந்தான். மாகிய உள்வாசலில் நஜீஸை நிரப்பிவைத்தது போலாகும்.

(பஸல்) ஒலுவில் மக்றூஹான காரியங்கள் ஆறுண்டு. முதலாவது தன்யாவுடைய பேச்சுபேசுகிறது. இரண்டாவது கையை முகத்தின் மேல் அடிக்கிறது. மூன்றுவது கையை உதறுகிறது. நான்காவது வெயிலில் சூடேறின தண்ணீரால் ஒலுசெய்கிறது. ஐந்தாவது மித மிஞ்சி தண்ணீரைச் செலவு செய்கிறது. ஆறுவது மூன்று தடத்துக்கு மேல் அதிகமாய் கழுவுகிறது. ஆனால் தூசிபடியா மலிருப்பதற்கென்று நிய்யத்து செய்து முகத்தைத் துடைப்பதும் ஒலுவின் அடையாளம் தரிபட்டிருப்பதற்காக அதைத் துடைக்காதிருப்பதும் இந்த இரண்டு விஷயங்களும் நகல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் இரண்டுக்கும் உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிய்யத்து இப்படியாயிருக்கிற பக்ஷம் இரண்டு காரியத்திலும் ஜவாபு கிடைக்கும். செம்பு முதலிய பாத்திரத்தில் ஒலுச்செய்வதைவிட மண்பாத்திரத்தில் செய்வது மேலாகும். இதில் தாழ்ச்சி இருக்கிறது.

நான்காவது பஸல் முழுக்கைக் குறித்தது. ஒருவன் ஜிமாஉ செய்தால் அல்லது நித்திரையிலாவது விழிப்பிலாவது இந்திரியம் வெளிப்பட்டால் முழுகுவதும் அவன் மேல் வாஜிபாகும். தேகமுழுமையும் கழுவதும், ரோமக்கால்களில் தண்ணீர் செலுத்துவதும், தொடக்கை நீக்க நிய்யத்து *செய்வதும் முழுக்கில் பர்லாம். முந்தி பிஸ்மில்லா சொல்வதும் மூன்றுதரம் கைகழுவதும் உடம்பில் நஜீஸ் பட்டிருந்தால் அதைக் கழுவுவதும் முழுக்கில் சுன்னத்தாம். பிறகு சுன்னத்துகளைப் பேணுவதுடன் ஒலுசெய்யவேண்டும். முழுகியாகிறவரையில் காலைக் கழுவக்கூடாது. பின்பு மூன்றுதரம் வலது பாரிசத்தின் பேரிலும், மூன்றுதரம் இடது பாரிசத்தின் பேரிலும், மூன்றுதரம் தலையின் பேரிலும் ஜலத்தை ஊற்ற வேண்டும். எந்தவிடத்தில் கைசெல்லுகின்றதோ அந்தவிடத்தைத் தேய்க்க வேண்டும். எந்தவிடம் அடைந்திருக்கிறதோ அந்த விடத்துக்குத் தண்ணீர் சேரும்படி செய்ய வேண்டும். ஏனெனில் இது பர்லாயிருப்பதினாலேயாம். மானத்தைக் கையால் தொடக்கூடாது.

ஐந்தாவது பஸல்:—தயம்மத்தைக் குறித்தது. ஒருவனுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை யானாலும், அல்லது அவன் தன் தோழர்களுடன் குடிக்க மாத்திரம் போதுமான அளவு தண்ணீர் கிடைத்தாலும் அல்லது வழியில் துஷ்டமிருகமாவது பகைவனாவது இருந்தாலும், அல்லது தண்ணீர் வேறொருவனிடமிருந்து அவன் அதை அதிக விலைக்கு விற்றாலும், அல்லது தண்ணீரை வழங்குவதால் அபாயம் நேரிடத்தக்க அல்லது அதிகரிக்கத்தக்க நோயாவது காயமாவது இருந்தாலும் இந்த எல்லாச் சமயங்களிலும் தொழுகையின் நேரம் வந்

*—ஹனபீ மதுஹபில் ஒலு, முழுக்குகளுக்காக நிய்யத்து செய்வது பர்லல்ல.

தால் சுத்தமான மண்ணைத்தேடி ‡தயம்மம் செய்யவேண்டும். அதெப் படி என்றால் ↑புழுதி பறக்கும்படி இரண்டு கைகளாலும் அம்மண்ணின் மீது அடிக்கவேண்டும், விரல்களை ஒன்றோடொன்று சேர்த்து வைக்க வேண்டும், தொழுகை துருஸ்தாகிறதற்காக தயம்மம் செய்கிறே னென்ற நிய்யத்துடன் முகமடங்கலுக்கும் இரண்டு கைகளைக்கொண்டு மஸ்ஹ் செய்யவேண்டும். ரோமங்களுக்கு ஊடேமண் செல்வதற் குப் பிரயாசைப்பட வேண்டியதில்லை. பின்பு மோதிரத்தைக் கழற்றி விட்டு மறுதடவை இரண்டு கைகளையும் மண்ணின்மேல் அடிக்க வேண்டும், விரல்களை விடுத்து வைக்கவேண்டும். பின்பு வலது கை விரல்களின் பின்புறத்தின் பேரில் இடது கைவிரல்களின் உட்புறத்தை வைத்து இடது கைவிரல்களை வலது கையின் முதுகின்பேரிலும், இடது உள்ளங்கையை வலது கையின் உட்புறத்தின்பேரிலும், இடது பெரு விரலை வலது கை பெருவிரலின் பேரிலும், தடவவேண்டும். பின்பு இதுபோலவே வலது கையை இடது கையின் பேரில் தடவ வேண்டும். இரண்டு உள்ளங்கைகளைச் சேர்த்தும் விரல்களைக்கோத் தும் தேய்க்கவேண்டும். இப்படிச் செய்யும் பக்ஷத்தில் ஒரு அடிபோ தும். இப்படிச் செய்யக்கூட வில்லையானால் இரண்டு அடிகள் ஆகும். இந்த தயம்மத்தைக் கொண்டு ஒரு பர்லைத் தொழுதால் சுன்னத்து எவ்வளவானாலும் தொழுகலாம். ஆனால் மறு தொழுகையை நாடினால் *புதியதாய் தயம்மம் செய்து கொள்ளவேண்டும்.

மூன்றுவது வகை சரீரக்கழிவுகளினின்று சுத்தமாக்குவது.

இந்தக்கழிவு இருவகைப்படும். முதலாவது வகை தலை ரோமங்க ளிலும் தாடியிலும் படுகிற அழுக்காம். இதை சிப்பினாலும் தண்ணீரி னாலும் வெந்நீரினாலும் தலை கழுகும் பூவினாலும் போக்கவேண்டும். றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமர்கள் ஸபரிலும் ஹலரிலும் எப்போதும் தங்களுடன் சிப்பு வைத்திருப்பார்கள். தேகத்தினின்று அழுக்கைப்போக்குவது சுன்னத்தாயிருக்கிறது. கண்ணில் சார்ந்த பீளையை ஒலுவின்போது விரலால் சுத்தப்படுத்த வேண்டும். காதில்

‡ஹனபிய்யா யிருந்தால் சுண்ணாம்பு, காரை, அரிதாரம், கனியிலி ருந்து வெட்டியெடுத்து, இன்னும் உருக்கப்படாதபோன், வெள்ளிகளின் சன்னங்கள் முதலியனபோல் பூமியின் இனத்திலும் தயம்மம் செய்ய லாம்.

↑இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களிடத்தில் பூமியில் தயமம் செய்வதற்கு அதன்மேல் புழுதியிருக்க வேண்டுமென்ற விதி யில்லை.

*இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களிடத்தில் ஒரே தயம்மம் கொண்டு பல பர்லுகளைத் தொழுவது துருஸ்தாயிருக்கும்.

அடைந்த குரும்பியை குளித்தபின் வழக்கப்படி எடுக்கவேண்டும். மூக்கில் ஒட்டிய அசடை அதில் தண்ணீர் செலுத்துவதினாலும், பல்லில் படிந்த ஊத்தையை மிஸ்வாக்குசெய்து வாய்கொப்பளிப்பதினாலும் போக்கவேண்டும். விரல்களின் கணுக்களில் அல்லது காலில் அல்லது குதிக்காலில் அல்லது நகத்துக்குள் அல்லது சர்வாங்கத்தின் மீது படிகிற அழுக்கு இவைகளனைத்தையும் போக்குவது சுன்னத்தாயிருக்கும்.

அறிந்துகோள்: தேகத்தில் எங்கேயாவது அழுக்கிருந்தால் அது ஒலுமுழுக்கு இவைகளாலுண்டாகும் சுத்தத்தைக் கெடுக்காது. அந்த அழுக்கு தேகத்தின் தொலியில் தண்ணீர் சேர்வதைத் தடை செய்யாது. என்கினும் நகத்திற்குள் வழக்கத்திற்கு விரோதமாக அதிக அழுக்கிருந்தால் அப்போது அதற்குள் தண்ணீர் செல்லத் தடையாகும். இப்படிப்பட்ட அழுக்கை வெந்நீரினாலும் உஷ்ணமான நீராவியினாலும் நீக்குவது சுன்னத்தாயிருக்கும்.

(பஸல்) குளிக்கிற வெந்நீர்ப் பொரைக்கு ஒருவன் போனால் அவன்மேல் நான்கு காரியம் வாஜிபும் பத்துகாரியம் சுன்னத்துமாயிருக்கும். இரண்டு வாஜீபுகள் அவனின் மானத்துடன் சம்மந்த முள்ளவை. (முதலாவது) அவன் தொப்புழ் முதல் முழங்கால்வரையுமுள்ள பாகமாகிய தன்மானத்தை ஒருவருக்கும் காண்பிக்கக் கூடாது. (இரண்டாவது) அதை எவரும் தொடும்படி விடக் கூடாது. ஏனெனில் பார்ப்பதை விட தொடுவது விசேஷமாதலாலென்க.

இன்னுமிரண்டு வாஜிபுகள் மற்றவர்களுடைய மானத்துடன் சம்பந்த முள்ளவை. (முதலாவது) தான் ஒருவருடைய மானத்தைப் பார்க்கக் கூடாது. (இரண்டாவது) யாராவது நிர்மாணமாயிருந்தால் அவர்களை அதட்டி மானத்தை மறைக்கும்படி ஏவ வேண்டியது. ஒருவரைப் பற்றி பயமில்லாதபோது ஏவாதிருந்தால் பாவியாவான்.

இப்னு உமர் றலியல்லாஹு அன்ஹுமா வெந்நீர்ப் பொரையில் சுவற்றின் பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டும் கண்ணைக் கட்டிக் கொண்டும் உட்காருவார்களென்று ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. பெண்பிள்ளைகள் பேரிலும் இதே விஷயங்கள் வாஜிபாயிருக்கும். ஆனால் பெரிய அவசியமான காரியமிருந்தாலன்று மற்றப்படி பெண் பிள்ளைகள் வெந்நீர்ப் பொரைக்குப் போகக் கூடாதென்று ஷாஹில் சுத்தமாய்த் தடை செய்யப்பட்டிருக்கிறது.

சுன்னத்துகளாவன:—தொழுகையின் போது சுத்தமாயிருப்பதற்கு (ஜனங்கள் பார்க்க இச்சித்தல்ல) சுத்தியாகிறேனென்று முதலில் நிய்யத்து செய்யவேண்டும். வெந்நீர்ப் பொரைக்காரன் சந்தோ

ஷத்துடன் ஜலத்தை ஊற்றும்பொருட்டும், தான் கொடுத்தது இவ் வள வென்று அவன் தெரிந்துகொள்ளும் பொருட்டும், முந்தியே அவன் கூலியைக் கொடுத்துவிடவேண்டும். உள்ளேபோவதற்காக முன்னே இடது காலை வைக்கவேண்டும். அப்போது.

بسم الله الرحمن الرحيم

اعوذ بالله من الرجس النجس الخبيث المخبيث الشيطان الرجيم

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் அவூது பில்லாஹி மினர் ரிஜ்ஸிந் நஜ்ஸில் கபீதில் முக்பிதிஷ் ஷைத்தா னிர்றஜீம் என்று ஓத வேண்டும். ஏனெனில் வெந்நீர்ப்பொரை ஷைத்தானுடைய வாசஸ்தல மாதலாலென்க. பின்பு வெந்நீர்ப் பொரை காலியாகும்படி முயற்சிக்க வேண்டும். அல்லது அவ்விடத்தில் ஒருவருமில்லாத நேரத்திற்போக வேண்டும். வியர்வை நன்றாய் வெளிப்படும்படி புழுக்கமான விடத் திற்குப் போய்விட வேண்டும்.

போஜல் ஜலத்தை அதிகமாய்ச் செலவு செய்யக் கூடாது. வெந்நீர்ப்பொரைக்காரன் கண்டால் கோபிக்கமாட்டானென்ற அளவு ஜலத்தை செலவுசெய்யவேண்டும். வெந்நீர்ப்பொரைக்குட் போஜல் ஒருவர் மீதும் ஸலாம் சொல்லக்கூடாது. கைகொடுத்து முஸாபஹா செய்வது ஆகும். யாராவது ஸலாம் சொன்னால் ما شاء الله ஆபாக்கல்லாஹு என்று ஜவாபு சொல்லவேண்டும். அதிகமாய்ப் பேசக்கூடாது. குர்ஆனில் எதையாவது ஓதினால் சப்தமில்லாமல் மெதுவாய் ஓதவேண்டும். உயர்ந்த சப்தத்தோடு அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர்றஜீம் என்று ஓதினால் ஆகும். இனி, சூரியன் அஸ்தமிக்கும்போதும், மக்ரிபு இஷா இந்நேரங்களுக்கு மத்தியிலும் வெந்நீர்ப்பொரையில் போகக்கூடாது. ஏனெனில் இது ஷைத்தான்கள் பரவுகிற நேரமாதலாலென்க. உஷ்ணமான விடத்தில் போகும்போது நரக்காக்கினியை நினைக்கவேண்டும். ஒரு ஸாஅத்துக்கு மேல் அதிகமாய் உட்காரக்கூடாது. இதேனெனில் நரகமென்னும் சிறைச்சாலையில் என்னகதியாகுமோவென்று சற்று உணர்வுவரும் பொருட்டேயாம். மேலும் எந்தப்பொருளையும் பார்ப்பதினால் ஆகிறத்தின் அமளிகளைச் சிந்திக்கின்றவனே புத்திமான். எப்படி என்றால் இருளைக்கண்டால் கபுருடைய அந்தகாரத்தை நினைப்பான், பாம்பைக் கண்டால் நரக சர்ப்பத்தை ஞாபகம் செய்வான், பயங்கரமான ரூபத்தைக்கண்டால் முன்கர், நகீர், நரகத்தின் மலக்குகள் இவர்களைத் தியானிப்பான். பயங்கர சப்தத்தைக்கேட்டால் சூர் ஊதலைச் சிந்திப்பான். ஒருவரின் நலவையாவது கேட்டையாவது கண்டால் கியாமத்து நாளிலுண்டாகும்

பெருமை சிறுமையை ஆலோசிப்பான். ஷரஹுடைய சுன்னத்துகள் இவைகளேயாம். என்கிலும் மாதத்துக்கொருதரம் சுண்ணும்பை வழங்குவது பிரயோஜனமுள்ள தென்றும், வெந்நீர்ப்பொசையினின்று வெளியே வந்த பிறகு குளிர்ந்த ஜலத்தைக் காலில் வார்க்கவேண்டுமென்றும், அப்படிச் செய்வதால் கால்விரல் களிலுண்டாகும் நுக்றஸ் என்னும் வியாதியும் தலைநோயுமுண்டாகா வென்றும், குளிர்ந்த ஜலத்தைத் தலையில் வார்க்கக்கூடாதென்றும், வேனிற்காலத்தில் வெந்நீர் பொசையினின்று வந்த பிறகு நித்திரை போய்விட்டால் அவிழ்த்தபானம் பண்ணுவது பிரயோஜனங் கொடுக்குமென்றும், அத்திப்பா வென்னும் ஆயுர்வேத பண்டிதாள் கூறியிருக்கிறார்கள்.

இரண்டாவது வகை தேகத்தில் மிஞ்சியவைகளை விட்டுச் சுத்தியாகுவது. அவை ஏழுபொருள்களுண்டு. முதலாவது தலையின் ரோமம். இதை க்ஷவரத்தினால் நீக்குவது உத்தமமாயும் சுத்தத்துக்கு அதிக சமீபமாயுமிருக்கிறது. என்கினும் ஷரபையுடையவர்களென்னும் மேன்மக்கள் உரோமம் வளர்ப்பதாகும். ஆயினும் சிறிது ரோமத்தைச் சிரைப்பதும் சுப்பாய்களைப்போல் தலையில் பலவிடங்களில் மயிர் விடுவதும் மக்றூஹாயிருக்கும். இச்செயல் கூடாதென்று விலக்கு வந்திருக்கிறது. இரண்டாவது மீசை ரோமம். இதை உதட்டுக்குச் சரியாய்த் தறித்துவிடுவது சுன்னத்து. அப்படியே விட்டுவிடுவது ஆகாது. மூன்றுவது கமுக்கட்டின் ரோமம். ஆரம்பத்திலேயே இதைப் பிடுங்குகிற வழக்கம் செய்திருந்தால் நாற்பது நாளைக்கொருதரம் பிடுங்குவது சுன்னத்து. அப்படி வழக்கம் செய்திராவிட்டால் வலியுண்டாகாதிருக்கும்படி அதை க்ஷவரத்தினால் நீக்குவது உத்தமமாகும். நான்காவது அரையின் ரோமம். இதை க்ஷவரத்தினாலாவது சுண்ணும் பிளாலாவது களாவது சுன்னத்தாயிருக்கும். நாற்பது நாளைக்குமேல் அதிக தாமதம் கூடாது.

ஐந்தாவது நகம். இதில் அழுக்கு சேராதிருக்கும்படி இதைத் தறிக்கவேண்டும். அப்படி அழுக்கு சேர்ந்தால் அதனால் ஒலு முழுக்கின் சுத்தங்கெடாது. ஏனெனில் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு கூட்டத்தின் கைகளில் இந்த அழுக்கைக்கண்டு நகத்தைத் தறிக்கும்படி அவர்களுக்கு ஆக்கியாபித்து தொழுகையை கலாசெய்யும்படி கட்டளையிடாததினாலென்க. நகங்கள் அதிகமாய் வளர்ந்துபோனால் ஷைத்தான் அவற்றின்மேல் உட்காருகிறானென்று ஹதீதில் வந்திருக்கிறது. எல்லாவிரல்களினும் சிறந்த விரலினின்று ஆரம்பிக்கவேண்டும். கையானது காலினும் சிறந்தது.

வலது கையானது இடது கையினும் சிறந்தது. கலிமா விரல் அதாவது சுண்டு விரலானது மற்ற விரல்களினும் சிறந்தது. ஆதலால் கலிமா விரலை ஆரம்பித்து மீண்டும் அதனிடம் வரும்படி அதற்கு வலப் பக்கமாய்த் தறித்துக்கொண்டு போகவேண்டும். இரண்டு கைகளையும் விரல்களாலான ஒரு வளையம்போல் பாவிக்கவேண்டும். ஆதலால் கலிமா விரலை ஆரம்பித்து வலது கை சுண்டு விரல் வரையில் தறித்துக் கொண்டுபோய் பின்பு இடது கை சுண்டு விரலிற்றொடங்கி வலது கைப் பெரு விரலில் முடிக்கவேண்டும். ஆறுவது பிள்ளை பிறக்கும் போது அதன் தொப்புழை அறுப்பதும், ஏழாவது ஆண் பெண், இவர் களுக்கு கத்ணை செய்வதுமாம்.

(பஸல்) தாடி நீளமாயிருந்தால் ஒரு பிடியை விட்டு மற்றதைக் கத்தரித்துப் போடுவதாகும். இப்னு உமர் றலியல்லாஹு அன்ஹு மாவும் தாபியீன்களில் ஒரு கூட்டமும் இப்படிச் செய்திருக்கிறார்கள். இன்னும் சில உலமாக்கள் தறிக்காமல் அப்படியே விட்டு விடுவது நேரென்று சொல்லியிருக்கிறார்கள். அறிந்துகொள் தாடியில் பத்து வஸ்துக்கள் மக்றூஹாயிருக்கும். முதலாவது:—கரு நிறக்கப்புகட்டு வது. இந்தக் கருங்கப்பு நரகத்துடையவர்களுக்கும், காபிர்களுக்கு முள்ளதென்றும் முதல் முதல் கப்புகட்டினவன் பிர்ஔன் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஆகிர் ஜமானுவில் சில ஜனங்கள் உண்டாகு வார்கள். அவர்கள் தாடிக்குக் கருங்கப்பு கட்டுவார்கள். அவர்கள் சொர்க்கவாடையை முகரமட்டார்களென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானதாக இப்னு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா ரிவாயத்து செய்திருக்கிறார்கள். இன்னும் தங்களை வாலி பர்களுக்கு ஒப்பாக்குகிற கிழவர்கள் மிகக் கெட்டவர்களென்றும் கிழவர்களுக்கு ஒப்பாக்குகிற வாலிபர்கள் வெகு நல்லவர்களென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இப்படிக் கருங்கப்பு கட்டுவது கூடாதென் பதற்குக் காரணம் ரூப பேதஞ்செய்யக் கருதுவது தப்பென்பதேயாம். இரண்டாவது:—சிகப்பு அல்லது மஞ்சள் கப்பாம். யுத்தவீரர்கள் தங்களை எதிரிகளாகிய காபிர்கள் பரிகசிக்காதிருக்கவும் அற்பமாய்க் காணுதிருக்கவும் இந்தக்கப்பு கட்டுவார்களாகில் இது சுன்னத்தாயிருக் கும். இந்த நிய்யத்து கொண்டு சில உலமாக்கள் கருங்கப்பும் கட்டி யிருக்கிறார்கள். இந்த நிய்யத்தில்லா விட்டால் †கருங்கப்பு கூடாது. மூன்றாவது:—ஜனங்கள் தன்னைப் பெரிய மனிதனென்றெண்ணி மரி

†எந்தக் கப்புங்கூடாதென்று பகருத்தீனே அஹ்மதுலக்னவி அவர் கள் செய்த ஹிந்தி தர்ஜுமாவில் கண்டிருக்கிறது, பார்ஸீ கீமியாயே ஸஆதத்தினாலும் இதே கருத்து விளங்குகிறது.

யாதை செய்யும் பொருட்டு கந்தகத்திலுல் தாடியை வெண்ணிறமாக்குவது. இது மூடத்தனத்திற்கு ஓரடையாளமாகும். ஏனெனில் மனிதனுக்கு புத்தியினுலும் கல்வியினுலுமே பெருமையுண்டு. கிழத்தனத்தினுலும் வாலிபத்தினுலுமல்ல நபிகுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வபாத்தாகும்போது அவர்கள் முபாரக்கான தாடியில் இருபதுக்கு மேல் அதிக நரை ரோமங்களிருந்ததில்லை யென்று அனஸ் றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள். நான்காவது:— தாடியிலுமும் நரைமயிரைக் கத்தரித்துப்போடுவதும் கிழத்தனத்துக்கு வெட்கப்படுவதுமாம். இவனுக்கு உபமானம், அல்லாஹு தஆலா தனக்கொரு ஒளிப்பொருளைக்கொடுக்க அதற்கவன் வெட்கப்படுவது போலாகும். மூடத்தனமே இதற்குக்காரணமாம். ஐந்தாவது:—அற்ப ஆசையின் பொருட்டால் தாடியில்லாத பால்யனைப்போல் தோன்ற வாலிபதசையின் ஆரம்பத்திலேயே தாடியின் ரோமங்களைப் பிடுங்கிப் போடுவது. இதற்குக்காரணம் அறிவின்மையேயாம். ஏனெனில் அல்லாஹு தஆலாவுக்குச் சில மலக்குகள் இருக்கிறார்கள். அவர்கள் ஓதுகிற தஸ்பீஹு யாதெனில்,

سبحان من زين الرجال باللحى والنساء بالذوائب

ஸுப்ஹான மன்ஸய்யனர் ரிஜால பில்லுஹா வன்னிஸாஅ பிஸ் ஸவாயிபி அதாவது புருஷர்களை தாடிகளாலும் ஸ்திரீகளைக் கன்னகிர்தாக்களாலும் அலங்கரித்த அல்லாவுக்கு ஸ்தோத்திர மென்பதேயாம். ஆறுவது:—பெண்களுக்கு அழகாய்த் தோன்றவும் அவர்கள் மனம் இவனைச் சாரவும் தாடியைப் புருவின் வாலைப்போல் கத்தரிப்பதாம். ஏழாவது:—தலைமயிரில் நின்றும் தாடியில் அதிகப்படுத்துவதும் பேணுதலுள்ளவர்களின் வழக்கத்துக்கு அதிகமாய் கிர்தாக்களை காதின் சோணையினின்று விட்டு விடுவதுமாம். எட்டாவது:—தன் தாடியின் கருமையையாவது வெண்மையையாவது கண்டு அதிசயிப்பதாம். எவன் தன்னைக்கண்டு ஆச்சரியப்படுகிறானே அவன்மேல் அல்லாஹு தஆலா உவப்பு வைக்கிறதில்லை. ஒன்பதாவது:—ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காக (சுன்னத்தை நிறைவேற்றுவதற்கல்ல) தாடியை வார்ந்துச் சீவுகிறது. பத்தாவது:—தன்னுடைய ஸுஹ்வென்னும் தவத்தைக்காட்டுவதற்காக ரோமங்களைச் சீவிவராமல் விரிகோலமாய் விட்டுவிடுகிறது. ஏனெனில் இவன் தன்ரோமங்களைச் சீவி வாரவுங்கூட தன்னைப்பாவா பண்ணுமலிருக்கிறானென்று ஜனங்கள் நினைக்கவேயாம். சுத்தவிதிகளின் விஷயமாய் இத்தனை உறைத்தது போதும்.

நான்காவது அஸ்லு.

தொழுகையின் பயான்.

அருமையானவனே! அறிந்து கொள்:—தொழுகையானது இஸ்லாமின் தூணையும், தீனின் அடித்தளமாயும், எல்லா வணக்கங்களினும் முதன்மையானதாயு மிருக்கிறது. எவன் இந்த ஐந்து பர்லு தொழுகைகளையும் அந்தந்த நேரத்தில் அவைகளின் விதிகளை அனுசரிப்பதுடன் தொழுகின்றனே அவன் அல்லாஹ்வுதஆலாவுடைய காவலில் இருப்பானென்று அவனுக்காக உறுதி மொழி கூறப்பட்டது. இன்னும் பெரும்பாவங்கள் தவிர மற்றும் அவனுண்டாகும் குற்றங்களுக்கு இந்த ஐந்து தொழுகைகளும் கபாராவாகின்றன. றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அஸ்ஹாபுகளை நோக்கி ஒருவன் வீட்டுத் தலைவாசலில் சுத்தமான ஒரு ஆறு ஓடி அவன் தினந்தோறும் ஐந்து விடுத்தம் அந்த ஆற்றில் குளித்தால் அவன் தேகத்தில் அழுக்கிருக்குமா? என்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் இருக்க மாட்டாதென்றுரைக்க; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எப்படித் தண்ணீர் அழுக்கைப் போக்குகின்றதோ அப்படியே ஐந்து தொழுகைகளும் பாவங்களைப் போக்கி விடுகின்றன வென்று திருவுளமானார்கள். இன்னும் தொழுகையானது தீனின் தூணுதலால் அதை விட்டவன் தீனைப்பாழாக்கினனென்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அஸ்ஹாபுகள் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், யாறசூலல்லா! எல்லா அமல்களினும் மிக்க நன்மையான அமலென்ன வென்று கேட்க, அது நேரத்தோடு தொழுகிற தொழுகை யென்றும் தொழுகையானது சொர்க்கவாயலின் திறவுகோ லென்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் விடை பகர்ந்தார்கள். இன்னும் அல்லாஹ்வுதஆலா விடத்தில் தவ்ஹீதுக்குப் பின் எல்லா பர்லுகளினும் அதிக உவப்பானது தொழுகை யென்றும், தொழுகையை விடவேறொரு அமல் அதிக உவப்பானதா யிருந்தால் மலக்குகளை அந்த அமலிலேயே பராக்கா யிருக்கச் செய்வா னென்றும், எல்லா மலக்குகளும் தொழுகையின் றுக்னுகளில் பராக்கா யிருக்கிறார்க ளென்றும் அவர்களில் ஒரு கூட்டம் றுகூவிலும், ஒரு கூட்டம் ஸுஜூதிலும், ஒரு கூட்டம் நிலையிலும், ஒரு கூட்டம் இருப்பிலு மிருக்கிறார்க ளென்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். இன்னும் எவன் மனமுராணுய் ஒரு

தொழுகையை விட்டு விடுகிறானே அவன் காபிரானு னென்று திரு வுளமானார்கள். இதன் தாத்பரியம் அவன் தன் ஈமான் நிர்மூலமாய்ப் போவதற்கு நெருங்கி யிருக்கிறா னென்பதேயாம். இது ஒரு யாத்தி ரைக்காரனிடம் இருக்கிற தண்ணீர் கானகத்தில் (கவிழ்ந்து) கொட்டிப் போனால் அவன் செத்தான் என்று நாம் சொல்லுகிறது போலாகும். செத்தான் என்பதில் சாவுக்கு நெருங்கி யிருக்கிறா னென்பதே கருத்து. இன்னும் கியாமத்து நாளில் முந்தி தொழுகையைப் பார்ப்பார்கள்; அது குறைவின்றிப் பூர்த்தியா யிருந்தால் அது கபூல் செய்யப்படும். மற்ற அமல்கள் எப்படி யிருந்தாலும் அத்தொழுகையைத் தொடர்ந்து அவை களும் கபூலாய் விடுமென்றும், அது பூர்த்தி யின்றிக் குறைவா யிருந்தால் மற்றும் அமல்களுடன் அதை அவன் முகத்தில் திருப்பி எறியப் படுமென்றும், இன்னும் எவன் நன்றாய்ச் சுத்தியாகி நேரத்தோடு மனத் தாழ்ச்சியுடன் றுகூவு ஸுஜூதுகளைப் பூர்த்தியாக்கித் தொழுகின்றானே அவன் தொழுகை வெண்மையும் பிரகாசமுமாகி அர்ஷு வரையில் போய் அத்தொழுதவனை நோக்கி நீ என்னைக் காத்தது போல் அல்லா உன்னைக் காப்பானாகவு மென்று சொல்லுகிற தென்றும், எவன் நேரம் தப்பியும் நன்றாய்ச் சுத்தியாகாமலும் றுகூஉ சுஜூதை மனத் தாழ்ச்சி யோடு பூர்த்தியாய்ச் செய்யாமலும் தொழுகின்றானே அவன் தொழுகை கறுப்படைந்து வானம் வரையில் போய் அல்லாஹ்வுதஆலா நாடிய காலம் வரையில் அவனை நோக்கி நீ என்னைப் பழுதாக்கினது போல் அல்லாஹ்வுதஆலா உன்னை கறுபாக்குவானாக என்று சொல்லிக் கொண்டிருக்கிற தென்றும், அதன் பின்பு அத்தொழுகையைப் பழந் துணியைப் போல் சுருட்டி அவன் முகத்தி லெறியப் படுமென்றும் இன்னும் தொழுகையில் கள்ளத்தனம் செய்கின்றவனே கள்ளர்களில் மிகக் கெட்டவ னென்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

வெளியரங்கமான தொழுகையைத் தொழுகிற விதம்.

அருமையானவனே! கேள்:—தொழுகையின் வெளிப்படையான செயல்களனைத்தும் ஒருடலுக்குச் சமானமா யிருக்கின்றன. அதற் கொரு அந்தரங்கமும் உண்டு. அதுவே அவ்வுடலுக்குயிராம். நாம் முன்னே அதன் வெளிப்படையை விவரிக்கின்றோம் அதாவது:—

மனிதன் தன் தேகவஸ்திர சுத்தியாகி, மானமறைய உடையுடுத்தி யான பிறகு சுத்தமானவிடத்தில் கிப்லாவை நோக்கி நிற்பான். இரண்டு பாதங்களுக்கு நடுவே நாலு விரற்கடையளவு இடம் விட்டும், முதுகு நிமிர்ந்தும், தலை சற்று குனிந்தும், சஜ்தாவின் தானத்துக்கப்பால் பார்வை தாண்டாமலு மிருக்கும்படி சரியாய் நிற்பான். ஷைத்தான் தன்னைவிட்டுத் தூரமாகவேண்டுமென்ற எண்ணத்துடன் குல்அவூது

பிறப்பின்னுஸ் என்ற சூரத்தை ஓதுவான். தன்னைத் தொடருகிறவர் கள் யாராவதிருந்தால் சப்தமிட்டு பாங்குசொல்வான். அப்படி யாரு மில்லாவிட்டால் * இகாமத்துமட்டும் சொல்வான். மனதில் உதாரண மாக ஹுஹரின் பர்லு தொழுகையை அல்லாஹ்க்காகத் தொழுகி றேன் என்ற அர்த்தம் அறிவதோடு நிய்யத்து செய்வான். விரல்களின் மூனை காதுக்குச்சரியாயும் பெருவிரலின் மூனை காதின் சிறு சோணைக் குச் சரியாயும் உள்ளங்கை தோள்புயத்துக்குச் சரியாயும் ஆகும்படி கையை உயர்த்துவான். இந்த ஸ்தலத்தில் கைநிலைப்பட்டப்பின் அல் லாஹு அக்பர் என்று சொல்லி நெஞ்சின் கீழ் கொண்டுவந்து வைப் பான், வலது கையைமேலேவைப்பான். வலதுகைக் கலிமாவிரலையும நடுவிரலையும் இடதுகைப் பின்புறத்தின்மீது படியவிட்டு மற்றவிரல் களை இடதுகையின் மேல் வளையவிட்டுவைப்பான். ஆனல் காதினிட மிருந்து கையை இறக்கி நேரே கீழேதொங்கவிட்டுப் பின்பு உயர்த்தி மார்பின்மேல் வைக்கமாட்டான். மேலும் தக்பீருடன் கையை இறக் கும்போதே அதை நெஞ்சின்மேல் வைப்பான். இதுவே மிகச்சரி யானதாயிருக்கின்றது. இதற்கிடையில் கையை உதறமாட்டான், அங்குமிங்கும் கொண்டுபோகமாட்டான். தக்பீரில் அல்லாஹு அக்பருக்குப் பின்னல் வாவ் என்ற அக்ஷரமுண்டாகும்படி அல் லாஹு அக்பறு என்றுவது அக்பரில் ப வென்ற அக்ஷரத்துக்குப் பின்னல் அலிப் உண்டாகும்படி அக்பார் என்றுவது அதிகமாய் நீட் டிச் சொல்லமாட்டான். இவையனைத்தும் வஸ்வாஸுக் காரர்களுடை யவும் ஜாஹில்களுடையவுமான காரியமாம். எப்படித் தொழுகைக்கு வெளியே இந்தச்சொல்லைப் பிரயாசையில்லாமல் சுலபமாய்ச் சொல்லு கின்றனை அப்படியே தொழுகையிலும் சொல்லுவான். இவ்விதம் தக்பீர் சொல்லிக் கைகட்டியானதின் பிறகு,

---

* ஹனபி மதுஹபில் பர்லுத்தொழுகைக்காக பாங்கும் இகாமத் தும் சுன்னத்தாயிருக்கும். எந்தப்பள்ளியில் முஅத்தினும் இமாமும் நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ அந்தப்பள்ளியில் மூன்தின ஜமாஅத்துக் காக பாங்கும் இகாமத்தும் சுன்னத்தாயிருக்கிறது. அதற்குப்பின்னல் ஜமாஅத்தாய் தொழுதாலும் தனியாய்த்தொழுதாலும் பாங்கும் இகாமத் தும் சொல்லக்கூடாதென்றும், அப்படிச்சொல்வது மக்ருஹு என்றும், ஆனல் இகாமத்துமட்டும் சொன்னல் ஆகும் என்றும், மேலும் அது நன்மையென்றும், தஹாவி முதலிய கிதாபுகளால் விளங்குகிறது. எந்தப்பள்ளியில் முஅத்தினும் இமாமும் குறிக்க படவில்லையோ அந்தப்பள்ளியில் அல்லது பள்ளியல்லாத வேறுயிடத்தில் தனியாயாவது ஜமா அத்தாயாவது தொழுதால் பாங்கும் இகாமத்தும் சொல்ல வேண்டும். ஆனல் பள்ளியில் சொன்ன பாங்கு சத்தம் எந்த விடத்தில் எட்டினதோ அந்தவிடத்தில் தொழுகிறவன் மீண்டும் பாங்கு சொல்லவேண்டியதில்லை. இகாமத்து மட்டும் சொல்வான்.

الله اكبر كبيرا والحمد لله كثيرا فسبحان الله بكرة واصيلا

அல்லாஹு அக்பர் கபீரு வல்ஹம்துலில்லாஹி கஸீரு பஸுப்ஹா னல்லாஹி புக்றத்தன் வஅஸீலா என்றோதுவான். பிறகு இன்னீ வஜ்ஜஹ்த்து* முடிய ஓதுவான். பிறகு,

سبحانك اللهم وبحمدك وتبارك اسمك وتعالے
جدك ولا اله غيرك اعوذ بالله من الشيطان الرجيم
ان الله هو السميع العليم بسم الله الرحمن الرحيم

ஸுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலாஇலாஹ கைறுக அவூதுபில்லாஹி மினஷ் ஷைத் தானிர்றஜீம் இன்னல்லாஹ ஹுவஸ்ஸமீவுல் அலீம் பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் என்றோதி அல்ஹம்து சூறத்தை ஓதுவான். தஷ்தீ தகளென்னும் இரட்டிக்க வேண்டியவைகளை நன்றாய் இரட்டித்து உச் சரிப்பான். ஹர்புகள் தாறு மாறுகும்படி வரம்பு கடந்து உச்சரிக்க மாட்டான். கூடியவரையில் லாதுக்கும் லொய்க்கும் உள்ள வித்தியா சத்தை வெளிப்படுத்துவான். அல்ஹம்து முடிந்தவுடன் ஆமீன் சொல்லுவான். கொஞ்சம் பொருத்து குர்ஆனில் நின்றும் தான் நாடு கிறயாதொரு சூறத்தை ஓதுவான். சுபுஹுத் தொழுகையிலும், மக்ரிபு, இஷாத் தொழுகைகளின் இரண்டு றக்அத்துகளிலும் சப்த மிட்டு ஓதுவான். முக்ததியாயிருந்தால் †சப்தமிட்டோத மாட்டான்.

பின்பு சூறத்தின் சுடைசிச் சொல்லுடன் சேர்க்காமல் றுகூவுக் குத் தக்பீர் சொல்லி றுகூவு செய்வான். அந்தத் தக்பீரில் முன் தக் பீர் தஹ்ரீமாவின்போது கையை உயர்த்தினதுபோல் ‡ உயர்த்து வான். றுகூவில் இரண்டுகைகளையும் முழங்காலின்மீது விரல்களை விடுத்து ↑ நேரே வைப்பான். முழங்காலை முழங்காலோடு சேர்க்காமலும் வளைக்காமலும் நேராய்வைப்பான். முதுகையும் தலையையும் சரியாய்ப் பலகைப்போல் லாம் என்னும் அளவு சாயலிலாகும்படிவைப்பான். இரண்டு புஜங்களையும் இரண்டு விலாவைவிட்டு அகட்டிவைப்பான்.

---

* ஹனபியானவன் சனா, அவூது, பிஸ்மில்லா இவைகளை மாத் திரம் ஓதுவான். ஆனால் தக்பீர் தஹ்ரீமாவுக்கு முன் நின்றவனுக இன்னி வஜ்ஜஹ்துவை முடிய ஓதுகிறது முஸ்தஹப்பா யிருக்கும்.

† ஹனபியான முக்ததீ மெதுவாயாவது சப்தமிட்டாவது ஓதக் கூடாது.

‡ஹனபியானவன் கையை உயர்த்தமாட்டான். அது மக்றூஹா யிருக்கும்.

↑ஹனபியானவன் விரல்களை விடுத்து முழங்கால்களைக் கெட்டி யாய் பீடிப்பது சுன்னத்தாயிருக்கும் மிப்தாஹ்.

பெண்பிள்ளை தன் புஜத்தை விலாவைவிட்டுப் பிரிக்காமல் சேர்த்து வைப்பாள். றுகூவில் سبحان ربي العظيم وبحمده ஸுப்ஹான றப்பியல் அலீம் ‡வபிஹம்திஹி என்று மூன்று தரம் சொல்லுவான். இமாமா யில்லாவிட்டால் ஏழுதரம் சொல்லுவான். மேலும் †பத்து தரம் சொல்வது உத்தமம். பின்பு றுகூவை விட்டு நேராய் நிமிர்ந்து நின்று கையை உயர்த்தி, سمع الله لمن حمده ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ் என்று சொல்லுவான். இன்னும் சற்று நின்று,

ربنا لك الحمد ملاء السموات وملاء الارض وملاء ما شئت من شيء بعد

றப்பனா லகல் ஹம்து மில் அஸ்ஸமாவாத்தி வமில்அல் அர்லி வமில் அமாஷிஃத மின்ஷைஇன் பஃதஹு என்று சொல்லுவான். சுபுஹில் இரண்டாவது றக்ஆத்தில் துவாகுனூத்* ஓதுவான். பின்பு தக்பீர் சொல்லி சஜ்தா செய்வான். பூமிக்கு அடுத்திருக்கிற உறுப்பை முந்தி பூமியில் வைப்பான். அதாவது முந்தி முழங்காலையும் பின்பு கையையும் பின்பு நெற்றியையும் மூக்கையும் வைப்பான். இரண்டு கைகளையும் விரல்களை விடுத்து ↑தோளுக்குச்சரியாய்ப் பூமியில் வைப்பான். மணிக்கட்டு முதல் முழங்கை வரையுமுள்ள பாகத்தை பூமியில் படியவைக்க மாட்டான். புஜம், விலா, இவைகளுக்கும், துடை வயிறு இவைகளுக்கும் மத்தியில் திறப்பிருக்கும்படி வைப்பான். பெண்பிள்ளை எல்லா உறுப்புகளையும் ஒன்றோடொன்று சேர்த்து வைப்பாள். பின்பு, سبحان ربي الاعلى وبحمده சுபுஹான றப்பியல் அஃலா வபிஹம்திஹி என்று மூன்று விடுத்தம் சொல்லுவான். இமாமல் லாதவன் மூன்றுதரத்துக்குமேல் அதிகமாய்ச் சொல்வது உத்தமம். பின்பு தக்பீர் சொல்லி சஜ்தாவில் நின்றுமெழும்பி இடது காலின்மேல் உட்கார்ந்து இரண்டு கைகளையும் துடையின் மீது வைத்து,

رب اغفر لي وارحمني وارزقني واهدني
واجرني واعف عني وعافني

றப்பிக்பிர்லீ வர்ஹம்னீ வர்ஸுக்னீ வஹ்தினீ வஅஜ்ர்னீ வஃபு அன்னீ வஆபினீ என்றோதுவான். பிறகு முன்போலவே மறு சஜ்தா செய்வான். பின்பு சற்று உட்கார்ந்து தக்பீர் சொல்லிக் கொண்டே

---

‡ஹனபி மதுஹபில் வபிஹம்திஹி சேர்ப்பது சுன்னத்தல்ல.

†ஹனபி மதுஹபில் தஸ்பீஹுகள் ஒற்றைப்படையிருப்பது முஸ்தஹப்பு; மிப்தாஹ்.

*ஹனபியானவன் குனூத்து ஓதமாட்டான் என்கினும் வித்றுத் தொழுகையில் ஓதுவான்.

↑ஹனபி மதுஹபில் விரல்களை ஒன்றோடொன்று சேர்த்து வைப்பது முஸ்தஹப்பு.

எழுந்து நின்று இரண்டாவது றக்அத்தை முந்தின றக்அத்தைப் போல் தொழுவான். அல்ஹம்துக்கு முன்னே *அவூதுபில்லா சொல்லிக்கொள்வான்.

இரண்டாது றக்அத்தின் சஜ்தா செய்தான பிறகு இரண்டு சஜ்தாவுக்கிடையில் முன் உட்கார்ந்ததுபோல் தஷஹ்ஹுதுக்காக இடது காலின் மேல் உட்காருவான். அதுபோலவே கைகளை துடையின்மேல் வைப்பான். ‡ஆனால் இவ்விடத்தில் வலதுகையின் கலிமாவிரல் தவிர மற்ற விரல்களை மூடிக்கொள்வான். கலிமா விரலை அப்படியே நேராய் வைத்துக் கொண்டிருப்பான். ஷஹாதத்தில் இல்லல்லாஹு என்று சொல்லும்போது அந்த விரலால் இஷாரஹ் செய்வான். லாஇலாஹ என்கிறபோது இஷாரஹ் செய்யமாட்டான். பெருவிரலையும் முடக்காமல் நேராய் வைப்பானாகில் ஆகும். இரண்டாவது தஷஹ்ஹுதிலும் இதுபோலவே செய்வான். ஆனால் இரண்டு கால்களையும் வலது புறமாய்க் கீழே புறப்படுத்திக் கொள்ளுவான். இடது சவனத்தைப் பூமியின்மேல் வைத்து உட்காருவான். முந்தின தஷஹ்ஹுதில், اللهم صل على محمد و على ال محمد அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலாஆலி முஹம்மதின் ↑என்று ஓதி எழுந்து விடுவான். இரண்டாவது தஷஹ்ஹுதில் ஸலவாத்து முழுமையும் ஓதவதுடன் துவாவையும் சேர்த்தோதுவான். السلام عليكم و رحمة الله و بركاته அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு என்று சொல்லும்போது முகத்திற் பாதி பாகத்தை இவன் பின்னல் இருப்பவன் பார்க்கக்கூடிய விதமாய் வலது புறம் முகத்தைத்திருப்புவான், பிறகு இடது பக்கமும் இதுபோலவே ஸலாம் திருப்புவான். இந்த இரண்டு ஸலாமிலும் தொழுகையில் நின்றும் புறப்படுவதை நிய்யத்து செய்வான். இன்னும் ஹாலிறீன்களுக்கும் மலக்குகளுக்கும் நான் ஸலாம் சொல்லுகிறேனென்றும் நிய்யத்துசெய்வான்.

---

*ஹனபியா யிருந்தால் பிஸ்மில்லா மாத்திரம் சொல்லி கிர்அத்தைத் தொடங்குவான்.

‡ஹனபியானவன் கையை முழங்கால்களின் பேரில் வைத்துக் கொண்டிருந்து லாஇலாஹ என்கிறபோது கலிமாவிரலை உயர்த்தி இல்லல்லாஹு என்கிறபோது வைத்துவிட வேண்டும், அப்படி உயர்த்தும்போது பெரு விரலையும் நடுவிரலையும் சேர்த்து வளையமிட்டும் மற்ற விரல்களை முடக்கியும் கொள்ளவேண்டும் அல்லது கலிமாவிரலை மட்டும் உயர்த்தலாம்.

↑ஹனபியானவன் முன் இருப்பில் ஸலவாத்து ஓதக்கூடாது; ஓதினால் ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும்.

(பஸல்) தொழுகையின் மக்றாஹுகளாவன:—பசி நேரத்திலும், தாகவேளையிலும், கோபத்தின் போதும், மலஜல உபாதையின் சமயத்திலும், இப்படி மனவோர்மையைத் தடுக்கிற மற்றுங் காரியங்களின் கவலையின் போதும் தொழுவது மக்றாஹு. இரண்டு கால்களையும் சேர்த்து வைப்பதும், ஒருகாலை உயர்த்திக் கொள்வதும், ஸஜ்தாவில் காலின்மேல் உட்காருவதும், இரண்டு சவனத்தின் மேல் உட்காருவதும், முழங்காலை நெஞ்சோடு அணைத்துக் கொள்வதும், கையைப் பிடவைக்குள் அல்லது சட்டைக்குள் வைப்பதும், ஸஜ்தாவில் முன்னுல் பின்னுல் நின்றும் பிடவையைத் தூக்கிக் கொள்வதும், ஜுப்பாவுக்குள்ளே இடுப்புக்கட்டு கட்டுவதும், கையை விட்டுவிடுவதும், எப்பக்கமும் பார்ப்பதும், விரல்களை நெட்டி முறிப்பதும், தேகத்தைச் சொறிந்து கொள்வதும், கொட்டாவி விடுவதும், தாடிரோமத்தைக் கொண்டு பாக்காகுவதும், ஸஜ்தாவுக்காகப் பொடிக்கற்களை அப்புறம் தள்ளிவிடுவதும், ஸஜ்தாவின் போது பூமியின் மேல் ஊதுவதும், விரல்களை மூடிக்கொள்வதும், முதுகை வளைப்பதுமான இக்காரியங்கள் தொழுகையில் மக்றாஹுகளாம். இதன் கருத்து கண், கை முதலிய சகல உறுப்புகளையும் அதபாய் வைக்க வேண்டு மென்பதேயாம். அப்படி வைப்பதினுல் அவன் தொழுகை குறைவின்றிப் பூர்த்தியாகி ஆகிரத்தில் பயன்படக் கூடியதாகும். தொழுகையில் பதினுன்கு பர்லுகளுண்டு. ஒன்றுவது நிய்யத்து. இரண்டாவது தக்பீர் தஹ்ரிமா, மூன்றுவது நிலை, நான்காவது சூரத்து, *பாத்திஹா ஓதுவது, ஐந்தாவது றுகூஉ, ஆறுவது அதில் தரிக்குதல், ஏழாவது றுகூவில் நின்றும் சிறு நிலைக்கு வருவது, எட்டாவது அதில் தரிக்குதல், ஒன்பதாவது சஜ்தா செய்தல், பத்தாவது அதில் தரிக்குதல், பதினென்றுவது இரண்டு ஸஜ்தாவுக்கிடையில் சிறு இருப்பு இருத்தல், பன்னிரண்டாவது, கடைசி தஷஹ்ஹுது, பதிமூன்றுவது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீது ஸலவாத்து ஓதல், பதினுன்காவது ஸலாம் சொல்லுதல். ஒருவன் இத்தனை காரியங்களைச் செய்வாஞகில் அவன் தொழுகை கூடிவிட்டது. அவன் அசாக்கினையாகிய சிரச்சேதத்துக்குத் தப்பினுன். என்றாலும் அத்தொழுகை அல்லாஹுதஆலா விடத்தில் கபூலானதும் ஆகாததும் சந்தேகமேயாம். இதற்கு உதாரணம், ஒருவன் அங்கப்பழுதுள்ள ஒரு அடிமைப் பெண்ணை பாஷாவுக்குக் காணிக்கையாய்க் கொண்டு போனுல் பாதுஷா அவளை அங்கீகரிப்பது சந்தேகமேயாம்.

---

* ஹனபி மதுஹபில் மொத்தமாய் கிர்அத்து பர்லு, என்கினும் சூரத்து பாத்திஹா ஓதுவதும் அத்துடன் பெரிய ஒரு ஆயத்தை அல்லது சிறிய மூன்று ஆயத்துகளை சேர்ப்பதும் வாஜிபு. இன்னும் ஹனபி மதுஹபில் முஹக்கீன்களிடத்தில் றுகூவு ஸுஜூதுகளில் தரிக்குதல், சிறு நிலை, சிறு இருப்பு இவை வாஜிபு.

தொழுகையின் அந்தரங்கமான உயிர்

அருமையானவனே! அறிந்துகொள். மேற்சொன்னவை யாவும் தொழுகையின் வெளிப்படையான உரூவையும் அதன் ரூபத்தையும் குறித்தனவா யிருந்தன. அந்த ரூபத்துக்கு உயிராயிருக்கிற ஓர் அந்தரங்க முண்டு. அதாவது ஒவ்வொரு தொழுகைக்கும் திக்றுக் கும் உரித்தன ஒரு உயிர் இருக்கின்றது. அந்த உயிரில்லா விட்டால் தொழுகை பிணம்போல் உயிரில்லாக் கூடாயிருக்கும். தொழுகைக்கு மூலமாகிய உயிர் இருந்து அதன் ரூபமாகிய செயல்களும் அதபு களும் பூர்த்தியாகாதிருந்தால் அத்தொழுகை காது மூக்கருந்தும் கண் பிதுங்கி வெளியில் விழுந்து மிருக்கிற ஒரு மனிதனுக்குச் சமான மாகும்.

தொழுகையின் ரூபமான செயல்களிருந்து அதன் அந்தரங்க மான உயிரில்லாவிட்டால் அது கண்ணிருந்து அதில் பார்க்கும் சக்தி யும், காதிருந்து அதில் கேட்கும் சக்தியுமில்லாத ஒருவனுக் கொப் பாகும். அந்த உயிர் யாதெனில் தொழுகையை தவக்கி அதை முடிக்குமட்டும் அத்தொழுகை முழுவதிலும் உள்ளச்சமாயும் ஹுலூறு கல்பாயுமிருப்பதே அதன் உயிராம். ஏனென்றால் மனிதன் தன் கல்பை அல்லாவிடத்திலாகவும் பயபக்தியோடும் கனப்படுத்துவ தோடும் அவனை திக்று செய்யவுந்தான் தொழுகும்படி ஆக்கியாபித் தது. அதெப்படி என்றால், اقم الصلوة لذكري "என்னை திக்று செய்வதற்காக நீ தொழு" என்று அல்லாஹுதஆலா திருவுளமா யிருக்கிறான். இன்னும் அநேகம் தொழுகையாளிகளுக்கு அவர் கள் தொழுகையின் ஜவாபு ஆறிலொன்று அல்லது பத்திலொன்றுக்கு மேல் எழுதப்படுகிறதில்லை யென்றும், தொழுகையின் எந்தப் பாகத் தில் கல்பு ஹாலிறு யிருந்ததோ அந்தமட்டே எழுதப்படுமென்றும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் ஒருவன் மற்றொருவனை இனிமேல் காணக்கூடாதபடி விட்டுப் பிரிவதெப்படியோ அப்படியாய்த் தொழவேண்டு மென்று திருவுளமா யிருக்கிறார்கள். அதாவது தொழுகையில் தன் இச்சையையும் அல்லா வைத் தவிர மற்றவைகளின் எண்ணத்தையும் தன்னை விட்டு நீக்கித் தொழுகையில் முழுகிவிடவேண்டு மென்பதேயாம். இதைக்குறித்து ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொல்லியிருக்கிறதாவது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் என்னோடும் நான் அவர்க ளோடும் பேசிக் கொண்டிருப்போம். அச்சமயம் தொழுகை நேரம்

வந்து விட்டால் அவர்கள் என்னை யறிய மாட்டார்கள், நான் அவர்களை அறியவு மாட்டேன் என்பதே. இதன் கருத்து:—தொழுகை நேரம் வந்தவுடன் அல்லாவைக் கனப்படுத்தி வணங்குவதில் அப்படி ஆழ்ந்து விடுவார்கள் என்பதேயாம். இன்னும் எந்தத் தொழுகையில் கல்பு ஹாலிறுகவில்லையோ அந்தத் தொழுகையை அல்லாஹு தஆலா பார்க்கிறதுமில்லை என்று நபூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் இப்றாஹீம் கலீலுல்லா அலை ஹிஸ்ஸலாமவர்கள் தொழுகும் போது அவர்கள் மனக் கொதிப்பின் இரைச்சல் இரண்டு மைல் தூரம் கேட்கப்படுகிறதா யிருந்தது. இன்னும் நபூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தொழுகையில் பராக் காய் விட்டார்களானால் அவர்கள் மனம் ஜலத்தால் நிரம்பிய பெருஞ் செம்புச்சட்டி தீயின் மேல் கொதிக்கிறது போல் கொதித்திரைச்ச லிடு கிறதா யிருந்தது. இன்னும் அலி றலியல்லாஹு அன்ஹு தொழுக நாடினால் அவர்கள் தேகம் நடுக்கமுற்று நிறம் பேதிக்கிறதாயும், அச் சமயம் ஏழு வானங்களும் பூமிகளும் தூக்க முடியாத அமானத்தைத் தூக்குகிற வேளை வந்ததென்று அவர்கள் சொல்லுகிறவர்களாயு மிருந் தார்கள். இன்னும் தொழுகையில் உள்ளச்சமில்லாதவன் தொழுகை தருஸ்தில்லை யென்று சுபுயானு ஸௌரி றஹிமஹுல்லா சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் எந்தத் தொழுகையில் கல்புஹாலிறுக வில்லையோ அது அதாபுக்குக் காரணமாகு மென்று ஹஸன் பஸரி றஹிம ஹுல்லா சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் ஒருவன் தன் தொழுகை யில் வலதிடது பக்கங்களில் யார் நிற்கிற தென்று பார்க்கும் பொருட்டு மனமுரணுய் நோக்குவானுகில் அவன் தொழுகை கூடாதென்று மஆதுப்னு ஜபல் றலியல்லாஹு அன்ஹு சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் அபூஹனீபா, ஷாபியி ரஹிமஹுல்லாஹு இவர்களும் இன்னும் அநேக உலமாக்களும் முந்தின தக்பீரின் போது கல்பு ஹாலிறு யிருந்தால் தொழுகை தருஸ்தாய் விடுமென்று சொல்லி யிருக்கிறார்கள். என்றாலும் இவர்கள் காலத்தின் பக்குவத்தை நோக்கி அதாவது ஜனங்களின் பேரில் கப்லத் தென்னும் மறதி மேலிட்டிருப்ப தைப் பார்த்து அவசியத்துக்காக இப்படிப்பட்ட பத்வா கொடுத்திருக் கிறார்கள். இந்தத் தொழுகை தருஸ்தாய் விடுமென்று இவர்கள் சொன்னதின் தாத்பரியம் யாதெனில் அப்படித் தொழுதவன் அசாக் கினைக்குத் தப்பினன் என்பதேயாம். ஆயினும் தொழுகையின் எந்தப் பாகத்தில் கல்பு ஹாலிரா யிருந்ததோ அது தான் ஆகிறத்தில் பயன் படத்தக்கதாகும். இதன் முடிவு யாதெனில் ஒருவன் தக்பீர் தஹ்ரீ மாவின் போது மாத்திரம் கல்பை ஹாலிராக்கித் தொழுதாலுகில்

அவன் கதி, அறவே தொழுகாதவன் கதியினும் மேலாகலா மென்று ஆதரவிருக்கின்றது. என்கினும் ஒரு வழியாய்ப் பார்த்தால் அறவே தொழுகாதவன் கதியினும் இவன் கதி கேடாய் முடியலா மென்ற அச்சமுமிருக்கிறது. ஏனென்றால் ஒருவன் ஒரு வேலைக்கு வந்து அதில் சோம்பேறித்தனஞ் செய்வானுகில் வேலைக்கே வராதவனைக் கடிந்து கொள்வதினும் அவனை அதிகமாய்க் கடிந்து கொள்ளப்படுகின் றதாலென்க. இதனாலே தான் இப்படிப்பட்ட தொழுகை இம்சை யான அதாபுக்குக் காரணமாகு மென்று ஹஸன் பஸரி றஹிமஹுல்லா சொன்னது. அவர்கள் மாத்திரமா சொன்னார்கள்; ஹதீதிலும் எவ னொருவன் தகாச் செயல்கள் வராதபடி தொழுகையை காக்கவில்லையோ அவன் தொழுகை அவனுக்கு ஒரு பலனுந் தராதென்றும் அவன் அல்லாஹ் தஆலாவின் சமுகத்தினின்று தூரமாய்ப் போவானென் றும் வந்திருக்கிறது. இந்தச் சங்கதிகளால் எந்தத் தொழுகையில் அதன் றுகுனுகளில் முழுவதிலும் கல்பு ஹாலிரா யிருந்ததோ அது தான் பூர்த்தியான உயிருள்ள தொழுகை யென்றும், எந்தத் தொழுகை யில் தக்பீர் தஹ்ரீமாவின் போது மாத்திரம் கல்பு ஹாலிரா யிருந்ததோ அது இன்னும் இரண்டொரு மூச்சில் சாகப் போகிற ஒரு ஜீவனைப் போல் அற்ப உயிருள்ள தொழுகை யென்றும் உனக்கு விளங்கி யிருக்கும்.

தொழுகையுடைய றுகுனுகளில் அந்தரங்கமான உயிர்.

அருமையானவனே! நீ பாங்கு சப்தத்தைக் கேட்பாயாகில் உன் மனம் அதைக் கவனிக்கும்படி செய்ய வேண்டும். உன் வேலை ஜோலி. காரியாதிகளை விட்டுவிட வேண்டும். முற்காலத்தி லிருந்த பெரியோர்கள் இப்படியே செய்கிறவர்களா யிருந்தார்கள். பாங்கு சப்தம் வந்தவுடன் அவர்களில் கருமாரத் தொழில் செய்கிறவர்கள் இரும்பை யடிக்கச் சம்மட்டியைக் தூக்கி யிருந்தால் பிறகு அதை அடிக்க மாட்டார் கள். சம்மாரத் தொழில் செய்கிறவர்கள் செருப்பில் ஊசியைக் குத்தி யிருந்தால் அதை வெளியே இழுக்கவும் அசைக்கவும் மாட்டார்கள். இந்தக் கூப்பிடும் சப்தத்திலுல் கியாமத்து நாளில் கூப்பிடும் சப்தத்தை நினைக்கிறவர்களாயும், இந்தக் கூப்பிடுதலுக்குத் தரிதமாய் ஓடுகிறவன் கியாமத்து நாளின் கூப்பிடுதலில் நல்மாராயமான சப்தத்தைக் கேட்பா னென்று சொல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். அருமையானவனே! இந்தக் கூப்பிடுதலுக்கு உன் மனம் சந்தோஷப்படுமாகில் அந்தக் கூப் பிடுதலுக்கும் சந்தோஷமாய் இருப்பாய்.

சுத்தம்:—இதன் அந்தரங்கம் யாதெனில் தேகவஸ்திர சுத்தமானது ஒரு பொருளுக்கிட்டிருக்கும் மேலுரையின் சுத்தம் போலென்றும், தவ்பாவினாலும், மனனாலுவதினாலும், துர்க்குணங்களைத் தூரப் படுத்துவதினாலும், இருதயத்தைச் சுத்திசெய்வது அந்தச் சுத்தத்துக் கும் உயிரென்றும் நீ யுணர்ந்துகொள். ஏனெனில் இருதயம் அல்லா ஹுதஆலா பார்க்குமிடமாயும், தொழுகையின் உயிர்நிலை ஸ்தானமாயு மிருக்கிறது. தேகமோ தொழுகையின் ரூபத்துக்கு மாத்திரம் நிலைக் களமா யிருக்கிறது.

மானமறைப்பது:— இதன் வெளியரங்கமான அர்த்தம் உன் வெளி யுறுப்புகளினின்றும் அருவருப்பானதை ஜனங்கள் காணுதபடி மறைத் துக் கொள்வதேயாம். இதன் அந்தரங்கமான உயிர் யாதெனில் உன் இருதயத்திலிருக்கிற அருவருப்பான துர்க்குணங்களை அல்லாஹு தஆலா பார்க்காதபடி மறைத்துக் கொள்வதாம். ஆனால் அல்லாவுக்கு மறைவான பொருள் ஒன்றுமில்லாததால் அதைமறைக்க முடியாதென் றெண்ணி நீ யுன்னிருதயத்தை அந்த அருவருப்புகளினின்றும் சுத்தப் படுத்து. அப்படிச் சுத்தப்படுத்துவதற்கு நீ யுன் சென்ற பாவங்களை நினைத்து மனம்வெட்கி, இனிமேல் நான் இப்படிச் செய்யமாட்டேன் என்ற வைராக்கியம் பூண்டு தௌபாச் செய்யவேண்டும். இப்படித் தௌபாச் செய்வது மனிதனைப் பாவத்தினின்று சுத்தமாக்கி விடுகின் றது. இப்படிச்செய்ய உன்னால் முடியாமற் போனால் அச்சமூ நாணமூ மென்கிற திரையால் அந்த அருவருப்புகளை மறைத்து எஜமானிட மிருந் தோடிப்போய்க் கெட்டலைந்து மனமுறிந்து மீண்டு திரும்பிவந்து வெட்கத்தினாலும் பங்கத்தினாலும் எஜமானன் சமுகத்தில் ஏறெடுத்துப் பார்க்காமல் தலைகுனிந்து நிற்கிற குற்றமுள்ள குலாமைப்போல் நீ அல்லாவுடைய சன்னிதானத்தில் மனமுடைந்து வெட்கமடைந்து நில்.

கிப்லாவை நோக்குவது:—இதன் வெளியரங்கமான அர்த்தம் நீயுன் முகத்தை எல்லாபக்கங்களை விட்டுத்திருப்பி அது ஒரே திசை நோக்கி யிருக்கச் செய்வதாம். இதன் அந்தரங்கம் யாதெனில் இருதயத்தை இரண்டுலகத்தின் பொருள்களினின்றுந் திருப்பி அதை அல்லாஹு தஆலாவின் நினைவில் அமையச் செய்வதேயாம். இப்படிச் செய்தால் வெளியரங்கமும் அந்தரங்கமும் இரண்டும் ஒரு வழியில் நிற்பதாகும்.

எப்படி வெளியரங்கமான தேகத்தின் கிப்லாவொன்றோ அப்படியே அந்தரங்கமான இருதயத்தின் கிப்லாவும் ஒன்றேயாம். இந்த கிப்லா

அல்லாஹ் தஆலாவாயிருக்கும். இருதயம் பல எண்ணங்களில் திரும்பினால் இது வெளியரங்கமான முகத்தை கிப்லாவை விட்டுத் திருப்பினது போலாகும். எப்படி முகத்தை கிப்லாவை விட்டுத் திருப்பினால் தொழுகையின் ரூபமிருக்காதோ அப்படியே மனதை அல்லாவின் நினைவிலிருந்து திருப்பினால் தொழுகையின் உயிர் இராது. இதனாலேதான் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், ஒருவன் தொழுகைக்காக நின்று அவன் இச்சையும் இருதயமும், முகமும் இம் மூன்றும் அல்லாஹ் தஆலா வோடிருந்தால் அவன் அன்னை வயிற்றில் அன்று பிறந்தவனைப்போல் தொழுகையில் நின்றும் புறப்படுவான் என்று திருவுளமா யிருக்கிறார்கள். இதன் கருத்து அவன் பாவங்களை விட்டுச் சுத்தமாகுவான் என்பதேயாம். வாஸ்தவத்தில் எப்படி முகத்தை கிப்லாவை விட்டுத் திருப்புவது தொழுகையின் ரூபத்தைக் கெடுக்கின்றதோ அப்படியே இருதயத்தை அல்லாஹ் தஆலாவின் புறம்நோக்கச் செய்யாதிருப்பது தொழுகையின் உயிரைக் கெடுக்கின் றது. மேலும் இருதயத்தை நோக்குவதுதான் அதிகமேலாயிருக்கும். ஏனென்றால் அந்தரங்கத்துக்கு வெளியரங்கம் உரையாயும் அந்த உரைக் குள்ளிருக்கும் பொருளே நாம் உபயோகிக்கக் கருதப்பட்டதாயு மிருக் கின்றதாலும் உரைக்குத் தனிமையில் அவ்வளவாய் மதிப்பில்லாததி னாலேயுமாம்.

நிலை:- இதன் வெளியரங்கமான அர்த்தம் நீயுன் தேகத்தால் அல்லாஹ் தஆலாவுடைய சமுகத்தில் குலாமைப் போல் தலைக் குனிந்து நிற்பதுதான். இதன் அந்தரங்கம் யாதெனில் உன் இரு தயம் எல்லா ஆட்டங்களையும்விட்டு ஒருநிலையில் அடங்கி நிற்பதேயாம். அதாவது மனம் பல எண்ணங்களை விட்டொழிந்து அது அல்லாஹ் தஆலாவைக் கனப்படுத்துவதோடும் தாழ்மையோடும் வணக்கத்தில் நிலைக்கவேண்டும். இன்னும் கியாமத்து நாளில் அல்லாஹ் தஆலா வின் சமுகத்தில் நிற்பதையும், அப்போது தன் இரகசியங்க ளெல்லாம் வெளியாகுமென்பதையும், நினைவுகூர்ந்து இப்போதும் தன் இருதயத்தி லிருக்கிற இரகசியங்களெல்லா வற்றையும் அல்லாஹ் தஆலா கண்டறி கின்றானென்றும் அவன் என் வெளியரங்கத்தையும் அந்தரங்கத் தையும் அறிந்தவனா யிருக்கின்றா னென்றும் நீ எண்ண வேண்டும். ஒருவன் தொழுகும் போது அவன் எப்படித் தொழுகிறா னென் பதை ஒரு ஸாலிஹான மனிதன் பார்த்துக் கொண்டிருந்தால் அப் போது அவன் தன் உறுப்புகளை யெல்லாம் அதபாய் வைத்துக் கொள்ளுகிறான். அப்பக்கம் இப்பக்கம் பார்க்கின்றானில்லை. அவசர மாய்த் தொழுகவும் அங்கு இங்கு பார்க்கவும் வெட்கப் படுகின்றான். அல்லாஹ் தஆலா தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறா னென்பதை

இவன் நன்றுயறிந்திருந்தும் அவனுக்கு இவன் வெட்கப்படாமலிருக்கின்றான். இது மிகப் புதுமையேயாம். ஒரு சக்தியற்ற கேவல அடிமைக்கு வெட்கப்பட்டு அவன் பார்க்க அதபாய்த் தொழுகிற இவன் அல்லாஹ்வ தஆலாவுக்குப் பயந்து வெட்காமல் அவன் பார்ப்பதை அலக்ஷியமாய் எண்ணுகின்றான். ஆ! இதென்ன மூடத்தனம், இதனாலேதான் அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹு றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நோக்கி, யாறசூலல்லா! அல்லாஹ்வ தஆலாவுக்கு எப்படி வெட்கப்படுகிறதென்று கேட்டபோது, நீயுன் குடும்பத்தாரில் ஒரு சாலிஹான வணக்கமுள்ளவருக்கு எப்படி வெட்கப்படுகின்றாயோ அப்படியே அல்லாஹ்வ தஆலாவுக்கும் வெட்கப்படு என்று திருவுளமானார்கள். இப்படியாய்க் கனப்படுத்தி வணங்கும் பொருட்டே சில அஸ்ஹாபுகள் தொழுகையில் நின்றால் பக்ஷிகள் அவர்களைக்கண்டு மிரண்டோடாமல் அவர்களை ஒருகல் லென்று அவைகள் நினைக்கும் விதமாய்ப்பதுமைபோல் அசையாமல் நிற்பார்கள். எவனுடைய மனதில் அல்லாஹ்வ தஆலாவுடைய கம்பீரம் அமைந்திருக்கின்றதோ, இன்னும் அல்லாஹ்வ தஆலா தன்னைப்பார்க்கிறானென்று எண்ணுகிறானோ, அவனுடைய கைகால் முதலிய உறுப்புகள் அதபாய் அடங்கியிருக்கும். இதற்காகவே றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒருவன் தொழுது கொண்டிருக்கும்போது அவன் தன் தாடியில் கை போட்டுக் கொண்டிருக்கக்கண்டு இவன் மனதில் அச்சமிருந்தால் அந்த அச்சம் இவன் கையிலும் வெளியாகுமென்று திருவுளமானார்கள்.

றுகூஉ ஸுஜூது:—இவைகளின் வெளியரங்கமான அர்த்தம் தேகத்தின் தாழ்ச்சியேயாம். இவைகளால் நாடப்பட்டது இருதயத்தின் தாழ்ச்சியாயிருக்கும். முகத்தைப் பூமியின் மேல்வைப்பது தேகவுறுப்புகளினின்றும், மிகச்சிறந்ததை மண்ணின்மேல் வைப்பதென்றும், மண்ணைவிட அதிகதாழ்ந்தது ஒன்றுமில்லை யென்றும் எவன் எண்ணுகின்றானோ, அவன் இந்த மண்ணை என்உற்பத்திக்குமூலமென்றும், இந்தமண்ணிற்கே திரும்புவேனென்றும் ஞாபகம்செய்யவும், தன் மூலமாகிய மண்ணின் அந்தஸ்து எவ்வளவோ அவ்வளவே பெருமை பாராட்டவும், தன் கேவல ஸ்திதியை நிதானித்துக் கொள்ளவுமே றுகூஉ ஸுஜூதுகள் ஏற்பட்டன. இப்படியே ஒவ்வொரு செயலுக்கும் ஒரு அந்தரங்கமிருக்கிறது. அதையுணராமல் மறந்துபோனால் தொழுகையின் வெளியுருவந் தவிர வேறொன்றும் அவனுக்கு சித்தியாகாது.

கிருத்து, திக்றுகள் இவைகளின் அந்தரங்கமான உயிர்.

அருமையானவனே! தொழுகையில் ஓதவேண்டிய கலிமா ஒவ்வொன்றுக்கும் ஒரு உயிர் இருக்கின்றது. அதை அறிவது அவசியமாயிருக்கும். இன்னும் அதைச் சொல்லுகிறவன் நிஜவந்தனாயிருக்கும் பொருட்டு அவனில் அச்சொல்லுக்குரிய குணம் காணப்பட வேண்டும். அதெப்படியென்றால்,

அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் சொன்னால், இதன் அர்த்தம் அல்லாஹு தஆலா வானவன் புத்தியினால் அறியக்கூடாத மகா பெரியவனென்பதேயாம். இப்படியான அர்த்தம் அறியாதவன் அறிவீனனாயிருக்கிறான். இப்படி அறிந்தவன் மனதில் அல்லாஹு தஆலாவன்றி வேறு பொருள் பெரிதாயிருந்தால் அவன் அல்லாஹு அக்பர் என்ற சொல்லில் நிஜவந்தனாகான். அவனே நோக்கி நீ சொன்னது வாஸ்தவந்தான் என்றாலும் நீ உன் சொல்லில் பொய்யனாயிருக்கிறாயென்று சொல்லப்படும். எவன் அல்லாஹு தஆலாவுக்கு வழிபடுவதினும் அதிகமாய் வேறொரு பொருளுக்கு வழிபடுகின்றானே அவனுக்கு அப்பொருள் அல்லாவினும் பெரியதாயிருக்கிறது. எதற்கு அவன் வழிபடுகின்றானே, அதே அவன் ஆண்டவனாகும். افرايت من اتخذ الهه هواه தன் இச்சையைத் தன் ஆண்டவனாகப் பிடித்துக்கொண்டவனை நீர் கண்டீரா? என்று அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறான்.

வஜ்ஜஹ்த்து வஜ்ஹிய என்றோதினால், இதன் அர்த்தம் நான் என் கல்பின் முகத்தை எல்லா ஆலம்களை விட்டுத் திருப்பி அல்லாவின் பக்கம் நோக்கினேன் என்பதாயிருக்கும். இப்படிச் சொல்கிற இவன் மனம் வேறு பொருளில் சார்ந்திருக்குமாகில், இவன் சொன்னது பொய்யேயாம். இப்படி அல்லாஹு தஆலாவிடத்தில் இவன் பேசத்தொடங்கின ஆரம்பத்திலேயே இவன் பேச்சு பொய்யாயிருந்தால் இவன் கேடான அபாய நிலைமையிலிருக்கிறானென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது.

ஹனீபன் முஸ்லிமன் என்றோதினால், தான் விசுவாசமுள்ள முஸ்லிமென்பதைச் சொல்லிக் காட்டினான். "எவனுடைய கையினாலும் நாவினாலும் முஸ்லிம்கள் இம்சையுறாமல் ஸலாமத்தாயிருக்கிறார்களோ அவனே முஸ்லிம்" என்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். ஆதலால் தன்னிடத்தில் பிறரை இம்சிக்காத அக்குணமிருக்க வேண்டும், அல்லது இனிமேலாவது அப்படியாகுவதற்கு எண்ணம் வைக்கவேண்டும்.

அல்ஹம்துலில்லாஹி என்றேதினுல், இது நன்றியறிதலுக்குச் சொல்ல வேண்டிய புகழா யிருப்பதினுலும், இதை நாவினுற் சொல்லும் போதும் மனதும் அதற்கிணங்கி யிருக்க வேண்டுமாதலாலும், அப் போது அல்லாஹ¨ தஆலா தனக்கு அளித்திருக்கிற பாக்கியங்களை நினைத்து அவனின் நன்றி யறிந்து முழுமனதால் அவனைத் துதிக்க வேண்டும்.

இய்யாக்க நஃபுது என்று சொல்லும் போது, உனக்கே வணங்குகிறே னென்ற கலப்பின்மை அவன் மனதில் காணப்பட வேண்டும்.

இஹ்தினஸ் என்று சொல்லும் போது அவன் தனக்கு நேர்வழியைக் காட்டும்படி கேட்கின்றதுகையால் கேட்கிறவன் குணமாகிய கெஞ்சியழுதல் தன்னிடத்தில் காணப்பட வேண்டும்.

தஸ்பீஹ¨ தஹ்லீல் கிர்அத்து முதலிய ஒவ்வொரு கலிமாவிலும் அதன் பொருளை அறிகின்றது போல் அதற்குரிய குணமும் அவனில் காணப்பட வேண்டும். இவற்றை விரித்தால் பெருகும். தொழுகையின் அந்தரங்கத்தைக் கொண்டு பயன் பெறக் கருதுகிறவன் தொழுகையில் மேற்சொன்ன விதமாய் ஆக வேண்டும். அப்படியாகா விட்டால் அவன் உயிரில்லா உருவமே போதுமென்றெப்புக் கொண்டவனுகினன்.

கல்பு ஹ¨லூராகுவதற்குச் செய்ய வேண்டிய பக்குவங்கள்.

அருமையானவனே ! தொழுகையில் கல்பு ஹ¨லூராகாமலிருப்பதற்கு இரண்டு காரணங்களுண்டும். அவற்றி லொன்று வெளிக் காரணமும், மற்றென்று உட்காரணமுமாம்.

வெளிக்காரணம் யாதெனில், கண், காது இவைகளுக்கு புலப்படுகிற யாதொரு காக்ஷியும் சந்தடியுமுள்ள இடத்தில் தொழுவதாம். மனமானது கண், காது இவைகளைத் தொடருவதாகையால் அவை சென்ற வழி மனமுஞ் செல்கின்றது. இதற்கு செய்ய வேண்டிய பக்குவமாவது :—ஒரு பொருளுமில்லாம லொழிந்திருக்கிற காலியான இடத்தில் தொழுக வேண்டும். அங்கே ஒரு சப்தமும் வராது, இருட்டான இடமா யிருந்தால் மிக உத்தமம். இல்லா விட்டால் கண்களை மூடிக் கொள்ள வேண்டும். விசாலமான யிடத்தில் மனங்குவியாமல் வியாபிக்கின்ற தாகையால் அநேக ஆபிதுகள் இபாதத்துக்காக நெருக்கமும் இருட்டுமான ஒரு வீட்டைப் பிரத்தியேகமாய்க் கட்டிக் கொள்கிறவர்களா யிருந்தார்கள். இப்னு உமர் றலியல்லாஹ¨ அன்ஹ¨மா தொழுகும் போது தங்களிட மிருக்கிற குர்ஆன், யுத்தவாள், மற்றும் பொருள் இவைகளின் மேல் மனஞ் செல்லாம லிருக்கும் பொருட்டு அவைகளைத் தங்களிட மிருந்து பிரித்து அப்புறம் வைத்து விடுவார்கள்.

உட்காரணம் யாதெனில், மனதில் பாவுகின்ற பல எண்ணங்களாம். இதற்குப் பக்குவஞ் செய்வது மகா கஷ்டம். இது இருவகைப்படும். அவற்றுள் ஒரு வகை :—இதற்கு முன் மனம் எந்த காரியத்தில் பாக்கா யிருந்ததோ அந்தக் காரியத்தைப் பற்றிய எண்ணமேயாம். இதற்குச் செய்யவேண்டிய பக்குவமாவது:-முன்னே அந்தக் காரியத்தை முடித்துக் கொண்டு பிறகு தொழுகையில் புக வேண்டும். இதனாலே தான் اذا احضر العشا والعشا فابدءا بالعشا இராச் சோறும், இஷாத் தொழுகையும் இரண்டும் ஹாலிராஞல் முந்தி சோற்றை உண்ணுங்களென்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். மற்றொரு வகை :—கொஞ்ச நேரத்தில் முடியாத வேலையைப் பற்றிய கவலை அல்லது தானே வந்து மனதில் குழுகின்ற வீணை பல எண்ணங்களாம். இதற்குச் செய்ய வேண்டிய பக்குவமாவது :—

தொழுகையில் தான் ஓதுகிற குர்ஆன், மற்றும் திக்ரு இவைகளின் பொருளை அறிவதில் மனதை நாட்டி அவைகளின் கருத்தை யுணர வேண்டும். இதனால் அந்த எண்ணங்கள் ஒழிந்துபோம். ஆனால் அந்த எண்ணங்கள் மிகைக்காமலும் அந்த வேலையைப் பற்றின இச்சை மனதில் உறுதியாய் பிடிக்காமலு மிருந்தால் தான் இந்த பக்குவத்தால் அது ஒடுங்கும். அப்படிக் கில்லாமல் அந்த வேலையின் இச்சை உறுதியாய்ப் பிடித்துக் கொண்டால் இந்த பக்குவத்தால் அந்த எண்ணம் நீங்காது. வேறு பக்குவம் செய்ய வேண்டும். அது யாதெனில், இந்த எண்ண மென்கிற வியாதியின் மூலத்தை அடியோடு களைந்தெடுக்கும் பொருட்டு விரோசனத்துக்கு (பேதி மாத்திரை) எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த விரோசன மருந்து யாதெனில் :—எப்பொருளைப் பற்றி மனதில் கவலை யுண்டாகின்றதோ அப்பொருளை வேண்டாது விட்டு விடுவதேயாம். அப்படி விட்டு விட்டால் அந்தக் கவலை யென்னும் வியாதியினின்று சௌக்கிய மடைவான்; இல்லா விட்டால் ஒரு போதும் அந்த வியாதி நீங்காது. அவன் தொழுகை பல சிந்தனைகளோடு சேர்ந்திருக்கும். உதாரணம்:—ஒருவன் ஒரு மரத்தடியிலிருந்து கொண்டு பக்ஷிகள் கீச்சிடும் சப்தம் தனக்கு கேட்காமலிருக்க வேண்டு மென்று கோலால் அவைகளை ஓட்டினால் அவை அப்போது விலகிப் போய் பிறகு தரிதமாய் வந்து கூடும். பக்ஷிகளை வாராதிருக்கும்படி அவன் செய்ய வேண்டிய பக்குவம் யாதெனில், அந்த மரத்தை அடியோடு வெட்டி யெறிவதேயாம். ஏனெனில், மரமிருக்கிற வரையில் அது பறவைகளின் வாசஸ்தலமா யிருக்கும். இது போலவே ஒரு வேலையைப் பற்றி மனதில் இச்சாவிருக்கும் வளர்ந்தெழும்பி யிருந்

தால் அகத்தியம் அதில் பல எண்ணங்களான குருவிகள் வந்து கூடும். இதனாலேதான் ஒருவர் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு ஹதியாவாக அனுப்பியிருந்த அழகிய பூட்டாவிழுந்த ஒரு வஸ்திரத்தை அவர்கள் அணிந்து தொழுது கொண்டிருக்கும் போது அவர்கள் பார்வை அந்த பூட்டாவின்மேல் விழுந்தது. தொழுதான பிறகு அதைக்களைந்து உடையவருக்கு கொடுத்து விட்டார்கள். இன்னுமோர் தடவை தொழுது கொண்டிருக்கும் போது தங்கள் பாதரட்சையில் மாட்டியிருந்த புதிய வாரின்மேல் தங்கள் நோக்கம் போக அது தங்களுக்கு அழகாய் தோன்றினதைப் பற்றி இந்தவாரைக் கழற்றி விட்டு பழைய வார் போடுங்களென்று ஆக்யாபித்தார்கள். இன்னுமொருதரம் புதிய செருப்பொன்று செய்வித்திருந்தார்கள். அது தங்கள் பார்வைக்கு நன்றாயிருக்கக் கண்டதால் உடனே சஜ்தா செய்தெழுந்து நான் இப்படிப் பார்த்ததின் நிமித்தம் அல்லாஹு தஆலா என்னைத் தனக்குப் பகைவனுக்காதிருக்கும் பொருட்டு நான் அவனுக்குத் தாழ்ச்சி செய்தேனென்று சொல்லி பிறகு வெளியே வந்து முதலில் தங்களுக் கெதிர்ப்பட்ட பகீருக்கு அதைக் கொடுத்து விட்டார்கள். இன்னும் தல்ஹா றலியல்லாஹு அன்ஹு தம் தோட்டத்தில் தொழுது கொண்டிருக்கும் போது அழகான ஓர் பறவை மரங்களில் பறந்துட்காருவதையும் அதை விட்டப்புறம்போக அதற்குக் கூடாதிருப்பதையும் கண்டு அவர்கள் மனம் அதிற்சார்ந்ததினால் எத்தனை றக்அத்துகள் தொழுதோமென்பது நினைவில்லாமல் அவர்களுக்கு மறந்துபோயிற்று. றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்து தங்கள் மனக்கேட்டைப் பற்றி முறையிட்டுப் பிறகு அக்குற்றம் நிவர்த்தியாகுவதற்கு அத்தோட்டத்தை தானம் செய்துவிட்டார்கள். முன்னுள்ள பெரியோர்கள் இப்படியான காரியம் அநேகமாய்ச் செய்திருக்கிறார்கள். இதுவே ஹஜ்ஜுக்கு கல்புக்குச் செய்யவேண்டிய பக்குவமென்று அவர்கள் என்னினார்கள். இதன் முடிவு யாதெனில்:—தொழுகைக்கு முன்னே அல்லாஹு தஆலாவுடைய திக்ரு கல்பின் பேரில் மிகைத்திராவிட்டால் தொழுகையில் கல்பு ஹாலிராகாது. இன்னும் தொழுவதற்கு முதலே கல்பில் குடிகொண்டிருக்கிற எண்ணம் தொழுகையில் நீங்கமாட்டாது. ஆதலால் ஹஜ்ஜுக்கு கல்போடு தொழுகவேண்டுமென்று நாடுகிறவன் தொழுகையிற் புகுதமுன்னே பல எண்ணங்களிலிருந்து கல்பை ஒழிக்கவேண்டும். அப்படி ஒழிப்பதற்கு துன்யாவுடைய ஜோலிகளைத் துறப்படுத்தவேண்டும். துன்யாவுடைய பொருள்களில் நின்றும் தனக்கு அவசியமாய்த் தேவையான அளவே போதுமென்று ஒப்புக் கொள்ளவேண்டும். அதுவும் இபாதத்தில் மனஞ்சிதறாமல் ஒருமிப்பதற்கென்று அவன்

கருதவேண்டும். இப்படியாகாமற்போனல் ஒருபோதும் தொழுகை முழுவதிலும் கல்பு ஹாலிராகாது. என்கினும் ஏதோ ஒரு றக்குனில் கொஞ்சநேரம் ஹாலிராகும். இப்படித் தொழுகை முழுவதிலும் கல்பு ஹாலிராகாமற் போனல் நப்லுகளை அதிகமாய்த் தொழுது அவை களில், உதாரணமாக நாலு றக்அத்துடைய கத்ருக்கு ஹாலிராகும்படி செய்ய வேண்டும். இதேதெனில் நப்லுகளானவை பர்லுகளிலுள்ள குறைகளை அடைக்கு மாதலாலென்க.

இமாம் ஜமாஅத்து சுன்னத்தென்பது

ஜமாஅத்துடன் தொழுகிற ஒரு தொழுகை தனித்துத்தொழுகிற இருபத்தேழு தொழுகைகளுக்குச் சமானமாகுமென்று றஸூல் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இன் னும் எவன் இஷாத் தொழுகையை ஜமாஅத்தோடு தொழுதானே அவன் பாதிராத்திரி வரையில் விழித்து வணங்கினவன் போல் ஆகினு னென்றும், இன்னும் எவன் ஸுப்ஹு தொழுகையை ஜமா அத்தோடு தொழுதானே அவன் இரவு முழுவதும் இபாதத்து செய்தவன் போல் ஆகினுனென்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

இன்னும் எவன் ஒருவன் இடைவிடாது நாற்பது நாளைக்கு ஜமா அத்தோடு எந்த வக்திலும் முந்தின தக்பீர் தவறிப்போகாதபடி தொழுது கொண்டானே அவன் நிபாகைவிட்டு நீங்கினுனென்று ஒரு சீட்டும், நரகத்தை விட்டுத் தப்பினுனென்று மற்றொரு சீட்டும் ஆக இரண்டு விடுதலை சீட்டுகள் அவனுக்காக எழுதப்படுகின்றன வென் றும் திருவுளமா யிருக்கிறார்கள். இதனாலேதான் முன்னுள்ள பெரி யோர்களில் சிலர் தங்களுக்கு முந்தின தக்பீர் தவறிப்போனல் அதற் காக மூன்று நாளைக்குத் துக்கப்படுகிறவர்களாயும் ஜமாஅத்தே தவறிப் போனல் ஏழுநாளைக்குத் துக்கப்படுகிறவர்களாயு மிருந்தார்கள். இன் னும் ஸயீதுப்னு முஸைய்யிபென்பவர்கள், நான் இருபது வருஷகாலம் பாங்கு சொல்வதற்கு முன்னே பள்ளிவாசலுக்குப் போகிறவனு யிருந் தேனென்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் அநேக உலமாக்கள் ஒருவன் யாதொரு சங்கடமன்றி தனித்துத் தொழுதால் அவன் தொழுகை கூடாதென்று சொல்லி யிருக்கிறார்கள். ஆதலால் ஜமா அத்தை அவசியமான காரிய மென்றெண்ணி இமாமத்துக்கும் இக்தி தாவுக்குமுள்ள அதபுகளை ஞாபகம் வைக்க வேண்டும். அந்த அதபு களாவன:—முதலாவது ஜனங்களுடைய சம்மதியின் மேல் இமா மத்துச் செய்யவேண்டும். ஜனங்கள் எவரின் பேரில் வெறுப் புள்ளவர்களா யிருக்கிறார்களோ அவர் இமாமத்து செய்ய நாட்டம் வைக்கக் கூடாது. ஒருவனை இமாமாக்க ஜனங்கள் நாடினுல் அவன்

அதைக் தட்டக்கூடாது. ஏனென்றால் இமாமத்துடையவரிசை பாங்கு சொல்வதின் வரிசையைக் காண பெரிதாயிருக்கின்றதா லென்க. உடையைச் சுத்தியாய்வைப்பதில் பேணுதல் செய்யவேண்டும். தொழுகையின் வக்தை எதிர்பார்த்து கொண்டிருக்கவேண்டும். முந்தின வக்தில் தொழுகவேண்டும். ஜனங்கள் வருவதை எதிர்பார்க்கக்கூடாது. ஏனென்றால் முந்தின வக்தின் வரிசை ஜமாஅத்துடைய வரிசையிலும் அதிகமாயிருக்கும். அஸ்ஹாபுகள் இரண்டுபேர் ஹாலிராஞல் மூன்றும் பேரை எதிர் பார்க்காதவர்களாயிருந்தார்கள். இன்னும் ஒரு ஜஞாவின்பேரில் நான்குபேர் ஹாலிருஞல் ஐந்தாம்பேரை எதிர் பார்க்கமாட்டார்கள். ஒருநாள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இமாமத்துக்குவர கொஞ்சம் தாமதப்பட்டது. அஸ்ஹாபுகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை எதிர்பார்த்துக் கொண்டிராமல் அப்துர் றஹ்மானுபுனு அவுபு றலியல்லாஹு அன்ஹுவை இமாமாக்கித் தொழுது கொண்டிருந்தார்கள். ஒரு றக்அத்தான பிறகு றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் வந்தார்கள். தொழுது முடிந்தபிறகு அஸ்ஹாபுகள் நாயகமவர்களைக்கண்டு பயந்தார்கள். அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அஸ்ஹாபுகளை நோக்கி நீங்கள் நல்லகாரியம் செய்தீர்கள். இனி எந்தவக்திலும் இப்படியே செய்யுங்களென்று திருவுளமானார்கள். அல்லாஹுக்காக என்று கலப்பற்ற நிய்யத்தோடு இமாமத்து செய்யவேண்டும். யாதொரு கூலிவாங்கக் கூடாது. சப்பு சரியாகாதவரையில் தொழுகைக்கு தக்பீர் சொல்லக்கூடாது. தக்பீர்களை உயர்ந்த சப்தமாய்ச் சொல்லவேண்டும். இமாமத்துடைய சவாபண்டாகுவதற்கு இமாமத்து செய்வதை நிய்யத்து செய்ய வேண்டும். இமாமத்தை நிய்யத்து செய்யாவிட்டாலும் தொழுகை தருஸ்தாய் விடும். ஆனால் இமாமத்துடைய சவாபுகிடைக்காது. சப்தமிட்டோதவேண்டிய தொழுகைகளில் கிர்அத்தை நன்றாய்ச் சப்தமிட்டோதவேண்டும். அதில் மூன்று* நிறுத்தல்கள் நிறுத்தவேண்டும். முதலாவது நிறுத்தல் முந்தின தக்பீர் சொல்லி இன்னீ வஜ்ஜஹ்த்து வஜ்ஹிய ஓதும்போது நிறுத்துவது; இது முக்ததிகள் அல்ஹம்து சூறத்தை ஓதிக் கொள்வதற்காம். இரண்டாவது நிறுத்தல் அல்ஹம்து சூறத்தை ஓதி முடிந்த பிறகு சூறத்தை ஓதுமூன் கொஞ்சம் நிறுத்துவது; முக்ததிகளில் யாராவது அல்ஹம்து சூறத்தை ஓதாமலிருந்தால் அதை முடித்துக் கொள்வதற்காம். மூன்றாவது நிறுத்தல் சூறத்து முடிய ஓதியானபிறகு றகூவுடைய தக்பீர்

*இது ஷாபியீ மதுஹபில்தான்; ஹனபி மதுஹபில் இல்லை.

சூறத்தின் கடைசியோடு சேராமல் இரண்டுக்கும் இடையில் பிரிவுகாணும் அளவுக்கு சற்று நிறுத்துவதாம். முக்ததி இமாமுக்குப்பின்னே சூரத்து பாத்திஹாதவிர வேறொன்றும் ஓதக்கூடாது. ஆனல் அவன் இமாமுக்கு தூரமாயிருந்து இமாம் ஓதுகிறது அவனுக்குக் கேட்காமல் போனல் அப்போது அவன் ஓதலாம். இமாம் றுகூவு ஸுஜூது களே நீளமாக்காமல் சுருக்கவேண்டும். அவன் அவைகளில் மூன்று தஸ்பீஹுக்குமேல் அதிகமாய் ஓதக்கூடாது. எவருடைய தொழுகையும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய தொழுகையைக்காண அதிக சுருக்கமாயும் நிரப்பமாயுமிருந்ததில்லை யென்று ஹனசு றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள். சுருக்குவதற்குக் காரணம் யாதெனில், ஜமாஅத்தில் யாராவது பலஹீனனுய் அல்லது யாதொரு வேலையுள்ளவனு யிருப்பானென்பதேயாம். முக்ததி ஒவ்வொரு றுக்குஃயும் இமாமுக்குப் பின்னுக அதாச் செய்ய வேண்டும். இமாமோடு கூடவே செய்யக் கூடாது. இமாமுடைய நெற்றி பூமியில் சேராதிருக்கிறவரையில் முக்ததி ஸஜ்தாவிற் போகக்கூடாது. இமாம் றுகூவுடைய ஹத்துக்குப் போகாதவரையில் முக்ததி றுகூவு செய்யக் கருதக்கூடாது. எனென்றல் தொடர்ச்சியென்பது இதுவேயாம். ஆனல், ஒருவன் மனமுராணுய் இமாமுக்கு முன்னே றுகூவு ஸுஜூது செய்வானுகில் அவன் தொழுகை பலாதாய்விடும். ஸலாமுக்குப் பிறகு இந்த துவாவை ஓதவேண்டும்.

اللهم انت السلام ومنك السلام واليك يعود السلام فحينا
ربنا بالسلام وادخلنا دار السلام تباركت ربنا
وتعاليت يا ذا الجلال والاكرام

அல்லாஹும்ம அன்தஸ்ஸலாமு வ மின்கஸ்ஸலாமு வஇலைக்க யஊதுஸ்ஸலாமு பஹய்யினு றப்பனு பிஸ்ஸலாமி வஅத்கில்னு தாறஸ்ஸலாமி தபாறக்த றப்பனு வதஆலைத்த யாதல்ஜலாலி வல் இக்ரும் இதற்கு பிறகு சிக்கிரம் எழும்பிவிடவேண்டும். துவா செய்யும்போது முகத்தை ஜனங்களின் பக்கம் நோக்கவேண்டும். இமாமுக்கு முன்னே ஜனங்கள் எழும்பக்கூடாது. அப்படி எழும்புவது மக்றூஹாயிருக்கும்.

ஜும்ஆத் தொழுகையின் வரிசை.

அருமையானவனே! அறிந்துகொள், ஜும்ஆவுடைய நாள் மிக பறக்கத்துள்ளது. அதன்வரிசை பெரிதாயிருக்கிறது. அது முஸ்லிம்களுடைய ஈதுப்பெருநாளாயிருக்கும். எவன் சங்கடமின்றி மூன்றுஜும்ஆவை விட்டு விட்டானே அவன் இஸ்லாமைவிட்டு முகம்

திருப்பினு னென்றும், அவன் மனம் கறுப்படைந்து விட்ட தென்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் அல்லாஹு தஆலா ஒவ்வொரு ஜும்ஆவுடைய நாளிலும் ஆறு லக்ஷம் அடியார்களை நரகத்தினின்று உரிமை விடுகிறனென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் ஒவ்வொரு நாளும் சூரியன் நடு வானத்தில் வருகிற வேளையில் நரகத்தை எரிக்கப்படுகின்ற தாகையால் நீங்கள் அந்த வேளையில் தொழ வேண்டா மென்றும், ஆனால் ஜும்ஆ வுடைய நாளில் அப்படி எரிக்கப்படுகிறதில்லை யென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் யாராவ தொருவன் ஜும்ஆவுடைய நாளில் மவுத்தானால் அவனுக்காக ஷஹீதுடைய கூலி எழுதப்படுகிற தென்றும் அவன் கபுறுடைய அதாபில் நின்றும் காக்கப்படுகிறு னென்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

ஜும்ஆத் தொழுகையின் ஷரத்துகள்.

மற்றும் தொழுகைகளுக்கு எந்தெந்த காரியம் ஷறத்தோ அந்தக் காரியம் ஜும்ஆத் தொழுகைக்கும் ஷறத்தா யிருக்கும். ஆயினும் ஜும்ஆவுக்குச் சொந்தமான ஷறத்துக்கள் ஆறுண்டு. அவற்றுள் முதலாவது ஷறத்து வக்தா யிருக்கும். * லுஹறுடைய கடைசி வக்தில் மூன்று ஸலாம் சொல்லி வக்து போன பின் இரண்டாவது ஸலாம் சொன்னால் ஜும்ஆ பாத்திலாய் விடும். அப்போது லுஹறைத் தொழுவது அவசியமாகும். இரண்டாவது ஷறத்து தலமா யிருக்கும். காட்டிலும் கூடாரங்களிலும் ஜும்ஆ துருஸ்தாகாது. என்கினும் பட்டணத்தில் அல்லது அடிமையல்லாத ஆகில் பாலிகாகிய முகீமான ஆண்பிள்ளைகள் நாற்பது பேர் ஹாலிராகிற ஊரில் தொழ வேண்டும். மூன்றுவது ஷறத்து எண்ணிக்கையா யிருக்கும். அதாவது அடிமை யல்லாத ஆகில் பாலிகாகிய முகீமான ஆண் பிள்ளைகள் நாற்பது பேர் இருக்க வேண்டும். இல்லா விட்டால் தொழுகை துருஸ்தாகாது. குத்பாவிலாவது தொழுகையிலாவது இந்த நாற்பது பேருக்குக் குன்றினால் தொழுகை துருஸ்தாகா தென்பதே லாகிறு. நான்காவது ஷறத்து ஜமாஅத்தா யிருக்கும். எனென்றால், ஜும்ஆத் தொழு கையை அவரவரும் தனித்தனியே தொழுது கொண்டால் தொழுகை நிறைவேறாது. ஆனால் ஒருவன் கடைசி றக்ஆத்தைப் பெற்றுக் கொண்டால் மறு றக்அத்தில் அவன் இமாமை விட்டுத் தனிக்கிறவனு யிலும் அவன் தொழுகை கூடிப்போம். ஒருவனுக்கு இரண்டாவது றக்அத்தின் றுகூஉ இமாமுடன் கிடைக்கவில்லையானால் அவன் இமா

* லுஹறுடைய வக்திலேயே ஜும்ஆத் தொழுகை முடிய வேண்டும்.

மைத் தொடர்ந்து லுஹறை நிய்யத்து செய்ய வேண்டும். ஐந்தாவது ஷறத்து இதற்கு முன்னே வேறு ஜமாஅத்து நடந்திருக்கக் கூடாது. ஏனென்றால், ஒரு பட்டணத்தில் ஜும்ஆவுக்காக ஒரு ஜமாஅத்து தவிர மறு ஜமா அத்து தருஸ்தில்லை. ஆனால் பட்டணம் பெரியதா யிருந்து ஒரே ஜும்ஆப் பள்ளியில் எல்லாருக்கும் இடம் போதாம லிருந்தாலும் எல்லாரும் ஒரே பள்ளிக்கு வர கஷ்டமா யிருந்தாலும் இப்படித் தேவையான போது அந்தப் பட்டணத்தில் இரண்டு மூன்று பள்ளிகளில் ஜும்ஆத் தொழுகை ஆகும். தேவை யின்றி பல பள்ளி களில் ஜும்ஆத் தொழுகை நடக்கும் பக்ஷத்தில் எந்தப் பள்ளியில் ஜும்ஆவுக்காக முந்தி தக்பீர் தஹ்ரீமா கட்டப்படுகின்றதோ அது தான் கூடும். ஆறுவது ஷறத்து தொழுகைக்கு முன்னே இரண்டு குத்பா ஓதுவதா யிருக்கும்.

இனி இரண்டு குத்பாவும் அவர்களுக் கிடையில் உட்காருவதும் அவைகளை நின்றோதுவதும் பர்லா யிருக்கும். முந்தின குத்பாவில் நாலு காரியம் பர்லா யிருக்கும். முதலாவது தஹ்மீது; அதாவது ஹம்தைக் கொண்டு புகழ்வது. அல்ஹம்து லில்லாஹ் என்று சொன் னால் போதும். இரண்டாவது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் பேரில் ஸலவாத் ஓதுவது. மூன்றாவது தக்வாவைக் கொண்டு வசிய்யத்து செய்வது. اوصيكم بتقوى الله ஊஸீக்கும் பிதக்வல்லாஹி என்று சொன்னால் போதும். நான்காவது குர்ஆனில் நின்றும் ஒரு ஆயத்து ஓதுவது. இரண்டாவது குத்பாவிலும் இதே காரியங் கள் பர்லா யிருக்கும். ஆனால் குர்ஆன் ஆயத்துக்குப் பதிலாக துவா செய்வது பர்லு. இந்த தொழுகை பெண்பிள்ளைகள், அடிமைகள், சிறு வர்கள் முஸாபிர்கள் இவர்கள் பேரில் வாஜிபில்லை. சோர், தண்ணீர், நோய், நோயாளியைக் காக்க யாருமில்லாம லிருந்தால் அவனைக் காத் துக் கொண்டிப்பது போல் யாதொரு தடையாவது சங்கடமாவது இருந்தால் ஜும்ஆவை விடுவது ஆகும். சங்கட முள்ளவர்கள் ஜும் ஆத் தொழுகை முடிந்த பிறகு லுஹறைத் தொழுவது உத்தமமா யிருக்கும்.

ஜும்ஆத் தொழுகையின் அதபுகள்.

ஜும்ஆவுக்காக பத்து, சுன்னத்துகளையும் அதபுகளையும் அனு சரிக்க வேண்டும். 1-வது அதபு :—வியாழக்கிழமை தினம் கல்பைக் கொண்டும், சாமான்களை ஆயத்தப்படுத்துவது கொண்டும், ஜும்ஆவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதாம்.

அதெப்படியென்றால், வெள்ளியுடை முதலியவை தயார் செய்து கொள்ளவேண்டும்; காலையிலேயே ஜும்ஆவுக்கு வரக்கூடிய விதமாய் வேலை ஜோலி காரியாதிகளை நிறுத்திவிட வேண்டும்; வியாழக் கிழமை அஸர் நேரத்தில் எப்பாராக்கையும் ஒழித்துத்தனியாய் உட்கார்ந்து தஸ் பீஹும் இஸ்திக்பாரும் ஓதிக்கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் இந்த நேரத்தின் வரிசை பெரியதா யிருக்கிறது. இன்னும் இந்த நேரமானது மறு நாள் ஜும்ஆவுக்கு வரப்போகிற ஒரு நல்ல ஸாஅத் துக்கு எதுகையானதாயிருக்கிறது. இந்த இரவில் பெண்ஜாதியுடன் சேர்க்கை செய்வது சுன்னத்தென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதேனென்றால் இருவரும் அந்நாளில் குளிக்கவேயாம்.

2-வது அதபு:—பள்ளிவாசலுக்குச் சீக்கிரம் போகிறதா யிருந் தால் காலையிலேயே குளிக்கவேண்டும். இல்லா விட்டால் தாமதிப்பது உத்தமமாகும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஜும்ஆ வுடைய குளியைப்பற்றி எவ்வளவு தாகீது செய்திருக்கிறார்களென் றால் சில உலமாக்கள் அந்த தாகீதைப்பற்றி ஜும்ஆவுடைய குளியை பர்லென்று எண்ணிக் கொண்டார்கள். மதீனத்தார் யாரையாவது கடிந்து பேச நாடினால் நீ ஜும்ஆவில் குளிக்காதவனைக்காண மிகக் கெட்டவனென்று சொல்லுவார்கள். ஒருவன் ஜும்ஆவுடைய நாளில் ஜுனுபாளியா யிருந்தால் அதற்காகக் குளிக்கும்போது ஜும்ஆவுடைய குளியையும் நிய்யத்து செய்து மறுதரம் தேகத்தின் மேல் தண்ணீரை வார்ப்பது அதிகமேலா யிருக்கும். ஓரே குளியில் தொடக்கை நீக்குவதையும் ஜும்ஆவுடைய குளிப்பின் சுன்னத்தையும் நிய்யத்து செய் வானாலும்போதும். இதில் ஜும்ஆவுடைய குளியின் சவாபும் கிடைக்கும்.

3-வது அதபு:—சுத்தமாயும் அலங்காரமாயும் பள்ளிவாசலுக்கு வருவதாயிருக்கும். சுத்தமாய் வருவதென்பது கூஷவாரத்தினால் தலை ரோமங்களைக்களைந்தும் நகங்களை அறுத்தும் மீசை ரோமத்தை வெட் டியும் சுத்தமாகுவதேயாம். குளிக்கும் தண்ணீர் பொறையில் முன்ன தாய் இந்த காரியங்களைச் செய்திருந்தால் அதுவே போதும். அலங்கார மாய் வருவதென்பது வெள்ளியுடை தரிப்பதாயிருக்கும். ஏனென்றால் அல்லாஹு தஆலா வெள்ளியுடையை உவந்திருக்கிறான். இன்னும் தொழுகையையும் பள்ளிவாசலையும் கண்ணியப்படுத்துகிற நிய்யத் துடன் நல்லவாசம் பூசவேண்டும். ஏனென்றால் அவனில் நின்றும் ஜனங்களை நோவிக்கின்ற கெட்டவாடை வீசாமலிருக்கவும். அவ்வா டை விஷயமாய் ஒருவன் இவனைப் புறங்கூறுதிருக்கவுமேயாம்.

4-வது அதபு:—ஜும்ஆ பள்ளிக்கு விடியற்காலத்திலேயே போக வேண்டும். ஏனென்றால், இதன்வரிசை மிகப் பெரியதா யிருக்கிறது. முற்காலத்தில் ஜனங்கள் இருட்டோடே லாந்தர் கொளுத்திக் கொண்டு போகிறவர்களாயும் அந்நேரத்தில் வரும் ஜனநெருக்கத்தினால் வழியில் கஷ்டத்துடன் நடந்து செல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். இப்னு மஸ்வூது றலியல்லாஹு அன்ஹு ஒரு நாள் ஜும்ஆப் பள்ளிக்குப் போனபோது அவ்விடத்தில் தமக்குமுன்னே மூன்றுபேர் வந்திருக்கக் கண்டு தம்மைத்தாம் நிந்தித்து நீ, நாலாம்பதவியில் ஆனாய், உன் முடிவு எப்படியாகுமோ வென்று சொல்லுகிறவர்களா யிருந்தார்கள். இப்படி முதலில் ஜும்ஆவுக்குப்போகிற சுன்னத்தை ஜனங்கள் விட்டுவிட்டதே இஸ்லாமில் வெளியான முந்தின பிதுஅத்தாயிருக்கும். எஹூதி நஸாரூக்கள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலையிலேயே தங்கள் கனீஸாவென்னும் கோவிலுக்குப் போகிறவர்களாயிருக்க, இஸ்லாமானவர்கள் தங்கள் இபாதத்தின் நாளாகிற வெள்ளிக்கிழமை காலையில் பள்ளிக்குப் போகாதிருந்தால் இவர்கள் கதி எப்படியாகும். ஒருவன் வெள்ளிக் கிழமை முந்தின ஸாஅத்தில் ஜும்ஆப் பள்ளிக்குப்போவானுகில் அவன் ஒரு ஒட்டகையை குர்பானி செய்தவன்போலும், இரண்டாவது ஸாஅத்தில் போனவன் ஒருமாட்டை குர்பான் செய்தவன் போலும், மூன்றுவது ஸாஅத்தில் போனவன் ஒரு ஆட்டை குர்பானி செய்தவன் போலும், நான்காவது ஸாஅத்தில் போனவன் ஒரு கோழியை குர்பானி செய்தவன் போலும், ஐந்தாவது ஸாஅத்தில் போனவன் ஒரு முட்டையை கைறுத்து செய்தவன்போலும் ஆகுனென்று மலக்குகள் எழுதிக்கொண்டிருப்பதாயும், கதீபு தன் இ–த்தைவிட்டுப் புறப்பட்டால் அந்த குர்பானிகளை எழுதுகிற மலக்குகள் தாங்கள் எழுதும் கடிதங்களை சுருட்டிக்கொண்டு குத்பாவை கேட்பதில் பராக்காய் விடுகிறார்களாதலால் அதற்குப்பின் வருகிறவன் தொழுகையின் சவாபு தவிர வேறென்றும் அடைய மாட்டனென்பதாயும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள்.

5-வது அதபு:—தாமதமாய் வந்த ஜனங்களை மிதித்துக் கொண்டு சப்பில் நுழையக்கூடாது. ஏனென்றால் எவன் இப்படி செய்கிறானே அவனை கியாமத்து நாளில் பாலமாக்கப்பட்டு ஜனங்கள் அவன்மேரில் நடந்து செல்லுவார்களென்று ஹதீதில் வந்திருக்கிறது. ஒருவர் இப்படி செய்ததை றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கண்டு தொழுது முடிந்தபின் அவரை விளித்து நீ ஏன் ஜும்ஆத் தொழுக வில்லை என்று கேட்டார்கள். அதற்கவர் யாறசூலல்லா நான் தங்களோடு தொழுதேனென்றார். அப்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் நீ ஜனங்களுடைய தோள்களின் மீது கால் வைத்துச் செல்ல

நான் உன்னைக் கண்டேனே என்றார்கள். எவன் இப்படிச் செய்கின்றானே அவன் தொழுவேயில்லை என்பது இந்த ஹதீதின் தாத்பரியமாகின்றது. ஆனால் முந்தின சப்பில் இடம் காலியா யிருந்தால் அதில் போக நாடுவது ஆகும். ஏனென்றால், முந்தின சப்பை காலியாய் விட்டது ஜனங்களின் குற்றமா யிருக்கும்.

6-வது அதபு :—தொழுகிறவனுக்கு முன்னே நடந்து செல்லக் கூடாது. ஏனென்றால் தொழுகிறவனுக்கு முன்னால் நடப்பது விலக்கா யிருக்கும். தொழுகிறவனுக்கு முன்னால் நடப்பதைவிட நீ காற்றில் பறக்கும் சாம்பலாய்ப் போவது உனக்கு மிக நலவா யிருக்கிற தென்று ஹதீதில் வந்திருக்கிறது.

7-வது அதபு :—முந்தின சப்பைத் தேட வேண்டும். இது முடியாமற் போனால் கதீபுக்கு எவ்வளவு அடுத்திருப்பானே அவ்வளவு நலவா யிருக்கும். ஏனென்றால் அதன் வரிசை பெரியதா யிருக்கிறது. ஆனால் முந்தின சப்பில் சிபாயிகள் இருந்தாலும் அல்லது ஜனங்கள் பட்டுடை அணிந்திருந்தாலும் அல்லது கதீபானவன் கறுப்பு பட்டுடை தரித்திருந்தாலும் அல்லது அவன் வாளில் பொன் வேலை செய்திருந்தாலும் அல்லது இன்னும் யாதொரு தீங்கிருந்தாலும் அப்போது எவ்வளவு தூரமா யிருப்பானே அவ்வளவு மேலாகும். ஏனென்றால் எவ்விடத்தில் நஷ்டமான தீங்கிருக்கின்றதோ அவ்விடத்தில் இஷ்டத்தோடு உட்காரத்தகாது.

8-வது அதபு :—கதீபு குத்பாவுக்காக தன் தலத்தை விட்டு வெளிப்பட்டால் ஒருவரும் பேசக் கூடாது. முஅத்தினுக்கு ஜவாபு சொல்வதிலும் குத்பாவைக் கேட்பதிலும் பராக்காய் விட வேண்டும். யாராவ தொருவன் பேசினால் சயிக்கினையால் அவனைத் தடை செய்ய வேண்டும். நாவினால் தடை செய்யக் கூடாது. ஏனென்றால் எவன் குத்பாவின் போது மற்றவனை நோக்கி நீ சும்மா இரு அல்லது குத்பாவைக்கேள் என்று சொல்லுவானே அவன் வீண் பேச்சு பேசினவனாகுவா னென்றும், எவன் அப்போது வீண் பேச்சு பேசினானே அவனுக்கு ஜும்ஆவுடைய சவாபு கிடைக்கா தென்றும் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். ஒருவன் கதீபுக்கு தூரமா யிருப்பதினால் அவனுக்கு குத்பாவின் சப்தம் கேட்க வில்லையானாலும் அவனும் சும்மா இருக்க வேண்டும். எந்த விடத்தில் பேச்சு நடக்கின்றதோ அந்த விடத்தில் உட்காரக் கூடாது. இன்னும் அப்போது தஹிய்யத்தல் மஸ்ஜிதைத் தவிர வேறென்றும் தொழுகக் கூடாது.

9-வது அதபு :—தொழுது முடிந்த பிறகு அல்ஹம்து, குல்ஹு வல்லாஹு, குல்அவூது பிறப்பில்பலகி, குல்அவூது பிறப்பின்னுஸி, இந்த சூறத்துகளை முறையே ஏழு ஏழு தரம் ஓத வேண்டும். ஏனென்றால் இப்படி ஓதுவது இந்த ஜும்ஆவிலிருந்து மறுஜும்ஆ வரையில் ஷைத்தானை விட்டும் காவல் செய்யுமென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும்,

اللهم يا غني يا حميد يا مبدئ يا معيد يا رحيم يا ودود اغنني بحلالك عن حرامك وبفضلك عمن سواك

அல்லாஹும்ம யா கனிய்யு யா ஹமீது யா முப்திஉ யா முஈது யா றஹீமு யா வதூது அக்னினி பிஹலாலிக்க அன்ஹறாமிக்க வபிபள்லிக்க அம்மன் ஸிவாக்க என்ற இந்த துஆவையும் ஓத வேண்டும். ஒருவன் எப்போதும் இந்த துஆவை ஓதிக் கொண்டு வருவானுகில், அவன் அறியாத புறத்தில் நின்றும் அவனுக்கு ரிஸ்கு வருமென்றும் மற்றும் ஜனங்களை விட்டு அவன் தேவையற்றவனுகுவானென்றும் பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு ஆறு றக்அத்து சுன்னத்து தொழ வேண்டும் ஏனெனில் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இப்படித் தொழுகிறவர்களாயிருந்தார்கள்.

10-வது அதபு :—அஸர் தொழுகை வரையில் பள்ளி வாசலில் இருக்க வேண்டும். மக்ரிபு தொழுகை வரையில் இருந்தால் அதிக வரிசையாயிருக்கும். இப்படி இருப்பது ஹஜ்ஜு, உம்ரு இவைகளுடைய சவாபுக்குச் சரியாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அதிக நேரம் இருக்க சாத்தியப்படாமல் வீட்டுக்குப் போனால் அல்லாவுடைய திக்ரை மறக்காமலிருக்க வேண்டும். ஏனென்றால் ஜும்ஆவுடைய நாளில் வருகிற அந்த முபாறக்கான ஸாஅத்து அவனை மறதியில் காணுமலிருக்கவேயாம். அப்படி மறந்திருக்கும் பக்ஷத்தில் அந்த ஸாஅத்தினால் கிடைக்கும் பெரும் பலனை இழந்தவனுகுவான்.

ஜும்ஆ நாளின் அதபுகள்.

மனிதன் ஜும்ஆவுடைய நாள் முழுவதிலும் ஏழு பலீலத்துகளைத் தேட வேண்டும். 1-வது பலீலத்து:—ஸுபுஹு ஆன உடனே இல்முடைய மஜ்லிஸில் ஹாலிராக வேண்டும், ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பவர்களின் சகவாசத்தையும், கதை படிப்பவர்களின் சகவாசத்தையும் விட்டு நீங்கி எவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலும் நிலைமையைப் பார்ப்பதினாலும் துன்யாவுடைய இச்சை குறைந்து ஆகிறத்துடைய ஆசை மேலிடுகின்றதோ அவனுடைய மஜ்லிஸில் போக வேண்டும். யாருடைய வார்த்தையில் இந்தப் பிரயோஜனமில்லையோ அவனுடைய மஜ்லிஸு இல்முடைய மஜ்லிஸல்ல. எவன்

இந்தப் பிரயோஜனமுள்ள உத்தம குணசீலனு யிருக்கிறானே அவ னுடைய ஒரு மஜ்லிஸில் ஹாலிராகுவது ஆயிரம் றக் ஆத்து தொழு வதைக்காண அதிகவரிசையுள்ளதா யிருக்கும். இப்படி ஹதீதிலும் வருகின்றது.

இரண்டாவது பலீலத்து:—இந்த நாளில் ஒரு முபாறக்கான ஸா அத்திருக்கிறது. எவன் இந்த ஸாஅத்தில் தன் கோரிக்கையைக் கேட் பானே அவனுக்கது சித்தியாகுமென்று ஹதீதில் வந்திருக்கிறது. அந்த ஸாஅத்து வருவது சூரியோதயத்தின் போதோ அல்லது, சூரி யன் நடுவானத்தில் வரும்போதோ அல்லது, சூரியன் அஸ்தமிக்கும் போதோ அல்லது, ஜும்ஆவுக்குப் பாங்கு சொல்லும்போதோ அல் லது, கதீபு மிம்பரில் ஏறும்போதோ அல்லது, தொழுகையில் நிற்கும் போதோ அல்லது, அஸர் தொழுகையின் போதோ எப்போது அது வருமென்கிற காலக்குறிப்பில் விகற்ப மிருக்கிறது. ஆயினும் அது வருகிற நேரம் அறியப்படாததாயும் ஆலத்துல் கதவைப் போல் மறைக் கப் பட்டதாயும் இருக்கிறதென்பதே சஹீஹான கவுலாயிருக்கும். ஆதலால் மனிதன் அந்நாள் முழுமையும் அந்த ஸாஅத்தை எதிர்ப் பார்த்துக் கொண்டு எந்நேரமும் அல்லாவுடைய திக்ரையும் விட்டொழி யாம லிருக்க வேண்டும்.

மூன்றுவது பலீலத்து:—அந்நாளில் அதிகமாய் ஸலவாத்து ஓதவேண்டும். ஏனெனில் ஜும்ஆவுடைய நாளில் எவன் என் பேரில் எண்பதுதரம் ஸலவாத்து ஓதுவானே அவனின் எண்பது வருஷத்துப் பாவங்கள் மன்னிக்கப் படுமென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள். அஸ்ஹாபுகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களை நோக்கி. யாறஸூலல்லா தங்கள் பேரில் எப்படி ஸலவாத்து ஓதுவதென்று கேட்டதற்குப் பின்வரும் ஸல வாத்தை ஓதும்படி. ஆக்யாபித்தார்கள். அதாவது:—

اللهم صل على محمد وعلى ال محمد صلوة تكون لك رضا
ولحقه اداء اعطه الوسيلة والفضيلة والمقام المحمود الذي
وعدته واجزه عنا ما هو اهله واجزه افضل ما جزيت نبيا عن
أمته وصل على جميع إخوانه من النبيين والصديقين والشهداء
والصالحين برحمتك يا أرحم الراحمين

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம் மதின் ஸலாத்தன் தக்கூனுலக ரிலன் வலிஹக்கிஹி அதாஅன் அஃத்தி ஹில்வஸீலத்த வல்பலீலத்த வல்மகாமில் மஹ்மூதல்லதீ வஅத்தஹு

வஜ்ஸிஹி அன்ஞ மாஹுவ அஹ்லுஹு வஜ்ஸிஹி அப்லல மாஜஸைத்த நபிய்யன் அன் உம்மத்திஹி வஸல்லி அலாஜமீஇ இக் வானீஹி மினன் நபிய்யீன வஸ்ஸித்தீகீன வஷ்ஷுஹதாஇ வஸ் ஸாலிஹீன் பிரஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன் என்பதே. ஜும்ஆ வுடைய நாளில் எவன் இந்த ஸலவாத்தை ஏழுதரம் ஓதுவானே அவன் சந்தேகமின்றி றஸூல் ஸல்லல்லாஹு அலேஹிவஸல்ல மவர்களுடைய ஷபா அத்தை அடைவானென்று சொல்லப் பட்டிருக்கிறது. அல்லா ஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் என்று மாத்திரம் ஓதினால் போதும்.

நான்காவது பலீலத்து:—அந்தநாளில் குர்ஆனை அதிகமாய் ஓத வேண்டும். சூரத்துல் கஹ்புமை ஓதவேண்டும். ஏனென்றால் ஹதீதுகளில் அதன் வரீசை அதிகமாய் எழுதப் பட்டிருக்கிறது. முற் காலத்திலுள்ள ஆபிதுகள் ஜும்ஆவுடைய நாளில் குல்ஹுவல்லாஹு அஹது ஆயிரம் விடுத்தமும், ஸலவாத்து ஆயிரம் விடுத்தமும், இஸ்திக் பாரு ஆயிரம் விடுத்தமும்,

سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر

சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர். ஆயிரம் விடுத்தமும் வழக்கமாய் ஓதி வருகிறவர்களா யிருந்தார்கள்.

ஐந்தாவது பலீலத்து:—அந்தநாளில் தொழுகை அதிகமாய்த் தொழவேண்டும். ஏனெனில், ஒருவன் ஜும்ஆப் பள்ளிக்குப் போன உடனே நாலு றக்ஆத்துத் தொழுவானுகில் இன்னும் அதில் ஒவ்வொரு றக்ஆத்திலும் அல்ஹம்து ஒரு விடுத்தமும், குல்ஹு வல்லாஹு ஐம்பது விடுத்தமும் ஓதுவானுகில், சொர்க்கத்தில் அவனுடைய நேரே அவனுக்காவது அல்லது, அவனுக்கு அறிவிக்கிற மற்றொருவனுக் காவது காண்பிக்கப் படாத வரையில் அவன் இவ்வுலகத்தை விட்டுப் போகமாட்டானென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் அந்த நாளில் சூரத்து அன்ஆம், சூரத்து கஹ்பு, சூரத்து தாஹா, சூரத்து யாஸீன் இந்த நான்கு சூரத்துகளைக் கொண்டு நாலு றக்ஆத்துத் தொழுவது முஸ்தஹப்பா யிருக்கும். இந்த சூரத்துகளை ஓதக்கூடா திருந்தால் சூரத்து ஸஜ்தா, சூரத்து லுக்மான், சூரத்து காஃபாத்து சூரத்துதான், சூரத்துல் முல்கு இவைகளை ஓதுவான். இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா ஜும்ஆவுடைய நாளில் தஸ்பீஹ் தொழுகையை தவற விடமாட்டார்கள். அதைத் தொழுகிற விதம் பிர சித்தமா யிருக்கிறது. சூரியன் உச்சியில் வருமளவும் நப்லுகள் தொழு

வதிலும், ஜும்ஆத் தொழுகைக்குப்பின் அஸறு வரையில் இல்முடைய மஜ்லிஸிற்கு போவதிலும், அஸறுக்குப் பின் மக்ரிபு வரையில் தஸ்பீஹு செய்வது, இஸ்திக்பாறு ஓதுவது, இவைகளிலும் பராக்காகுவது மிக உத்தமமா யிருக்கும்.

ஆறுவது பலீலத்து :—ஜும்ஆவுடைய நாளில் ஏதாவது கைறுத்து செய்ய வேண்டும்; சொட்டியின் ஒரு துண்டானலுஞ் சரி. ஏனெனில் அந்நாளில் கைறுத்து செய்வதின் நன்மை மிகப் பெரியதா யிருக்கிறது. ஆனல் குத்பாவுடைய நேரத்தில் யாராவ தொருவன் சுவால் செய்தால் அவனை அதட்ட வேண்டும். ஏனெனில், இப்படி யானவனுக்கு இந்தச் சமயத்தில் ஏதாவது கொடுப்பது மக்றூஹா யிருக்கும்.

ஏழாவது பலீலத்து :—ஒரு வாரம் ஏழு நாளில் ஜும்ஆவுடைய நாளை ஆகிரத்துக்காகச் சொந்தப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்ற ஆறு நாள்களில் துன்யாவுடைய காரியங்களைச் செய்வான். ஆனல் அல்லாஹு தஆலா குர்ஆனில்,

فاذا قضيت الصلوة فانتشروا في الارض وابتغوا من فضل الله

பின்பு தொழுகை தொழுது தீர்ந்தால் பிறகு நீங்கள் பூமியில் பரவிப் போய் அல்லாவுடைய வரிசையில் நின்றும் சம்பாதியுங்க ளென்று, திருவுளமா யிருக்கிறனே என்றல் அதற்கு விற்கல் வாங்கல் முதலிய துன்யாவுடைய சம்பாத்திய மென்பது அர்த்தமல்ல வென்றும், நேலும் இல்மைத் தேடுவது, சகோதரர்களைப் போய்க் காணுவது, வியாதியஸ்தரை வினவப்போவது, ஜனஸாவுடன் போவது, இன்னும் இவை போன்ற காரியங்களே அதற்குப் பொருளென்றும், அனஸு றலியல்லாஹு அன்ஹு சொல்லி யிருக்கிறார்கள்.

மஸ்அலா.

அருமையானவனே! அறிந்து கொள் தொழுகைக்கு வேண்டிய அவசியமான சங்கதிகள் மாத்திரம் இதில் கூறப்பட்டன. வேறே மஸ்அலாக்கள் தேவையானல் உலமாக்களிடத்தில் கேட்டுக் கொள். ஏனென்றல் இந்த கிதாபில் எல்லா மஸ்அலாக்களும் அடங்கா. ஆனல் ஒரே ஒரு மஸ்அலா மாத்திரம் சொல்லி விடுகிறேன். அது யாதெனில்:— தொழுகையின் நிய்யத்தில் அநேகமாய் வஸ்வாஸ் உண்டாகின்ற தல்லவா? அதற்கு மூன்று காரணங்களுண்டு. அவையாவன :—அப்படி வஸ்வாஸ் செய்பவனுக்கு புத்தியில் ஏதாவது இடர் சம்பவித்திருக்கும்,

அல்லது அவன் பித்தனு யிருப்பான். அல்லது அவன் ஷரீஅத்தையும் நிய்யத்துடைய மஃனுவையும் அறியாதவனு யிருப்பான். ஏனென்றால் நிய்யத் தென்பது அல்லாஹுதஆலாவுடைய வணக்கத்திற்காக உன்னே கிப்லாவின் புறம் முகம் நோக்கி நிற்கச் செய்த உன் மனதிலெழும்பிய விருப்பமேயாம். அதெப்படி யென்றால், ஒருவன் உனக்கு இதோவருகிற இன்ன ஆலிமுக்கு நீ எழுந்து மரியாதை செய்யென்று சொல்லுவானுகில், அப்போது நீ, இன்ன ஆலிமுக்கு அவருடைய இல்முக்காக இன்னருடைய உத்திரவின் பேரில் எழுந்து மரியாதை செய்ய நிய்யத்து செய்தே னென்று சொல்ல மாட்டாய். மேலும் உடனே எழுந்திருப் பாய். அப்போது நீ மனதிலாவது நாவினாலாவது சொல்லாமலே தானு கவே இந்த நிய்யத்து உன் மனதில் அமைந்திருக்கும். நீ மனதுக்குள் பேசுவதற்கு ஹதீசுந் நப்ஸ் என்று சொல்லப்படும். அது நிய்யத்தல்ல. உன்னே நிலே நிற்கச்செய்த உன் மனதிலெழும்பிய விருப்பமே நிய்யத்தா யிருக்கும். ஆனால் அந்த நிய்யத்தில் அதன் ஹுக்மு என்ன வென் பதை அறிவது அவசியம். அதாவது லுஹர் தொழுகை அல்லது, அஸர் தொழுகை என்று அந்தந்த தொழுகையை அறிய வேண்டும். மனம் இதை மறவாமல் இது நினைவிலிருந்தால் போதும். அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல். மறந்திருந்தால் நினைவில் வரும்படி செய்து கொள். இவ்வளவே தவிர அதா, பர்லு, லுஹருடைய மஃனு இவை யாவும ஒரே தடவையில் தனித்தனியே கல்பில் ஒருமிக்க வரவேண்டு மென்று எண்ணுதே. என்கினும் மனதுக்கு நெருங்கி வசப்படுவதை ஒன் றோடொன்று சேர்த்துக் கொள்: இவ்வளவு போதும். ஏனென்றால், நீ லுஹரா தொழப்போகிறுயென்று ஒருவன் உன்னைக்கேட்டால், நீ ஆம் என்று விடை யளிப்பாய். நீ ஆம் என்று சொல்லும் நேரத்தில், அதா, பர்லு லுஹரு என்ற இந்த எல்லாப் பொருள்களும் உன் மனதில் அமைந்திருக்கின்றன. இவை தனித் தனியே பிரிந்திருக்கவில்லே. லுஹர் அல்லது அஸர் என்று உன் மனதுக்கு நீ நினைப்பூட்டுவது அம் மனிதன் கேட்டதற்குச் சமானமாயும், அல்லாஹு அக்பர் என்று சொல்வது நீ ஆம் என்றதற்குச் சமானமாயு மிருக்கிறது. இதற்கு மேல் அதிக பிரயாசை எடுப்பாயாகில் உன் மனம் அலேந்து தொழுகை யும் சிதறிப்போம். ஆதலால் இலகுவான காரியத்தைத் தெரிந்து கொள். மற்றுமுள்ள ஒவ்வொரு சிபத்திலும் இவ்வளவு நிய்யத்து செய்வாயாகில் தொழுகை துருஸ்தென்று எண்ணிக் கொள். ஏனென் றால் தொழுகையின் நிய்யத்தானது மற்றுங் காரியங்களுடைய நிய்யத்

தைப்போலவேயாம். இதனுலேதான், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய காலத்திலும் ஸஹாபாக்களுடைய காலத்திலும் ஒருவருக்கும் நிய்யத்தில் வஸ்வாஸ் இருந்ததில்லை. எனென்றால் அவர்கள் இதை இலகுவான காரியமென்று எண்ணியிருந்தார்கள். எவன் இதை இலகுவென்று அறியவில்லையோ அவன் மூடனேயாம்.

பாயிதா.

லுஹாத் தொழுகை:—இத்தொழுகையின் வரிசை மிகப்பெரியதாயிருக்கிறது. றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எட்டு றக்ஆத்து தொழுகிறவர்களாயிருந்தார்களென்று அலிறலியல்லாஹு அன்ஹுவின் உடப்பிறந்தார் உம்முஹானி றலியல்லாஹு அன்ஹா நிவாடத்து செய்திருக்கிறார்கள். இன்னும் ஹலாத்து றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் எப்போதும் லுஹாத் தொழுகை நாலுறக்ஆத்து தொழுகிறவர்களாயும் நாலுக்காண குறைக்காதவர்களாயும் சில வேளை நாலுக்குமேல் அதிகப்படுத்துகிறவர்களாயுமிருந்தார்களென்று ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொல்லியிருக்கிறார்கள். இன்னுமொரு ஹதீதில் ஹலாத் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாமவர்கள் லுஹாத்தொழுகை ஆறு றக்ஆத்து தொழுகிறவர்களாயிருந்தார்களென்று வருகிறது. லுஹாத்தொழுகையின் வக்தாகிறது சூரியன் உயர எழும்பினதிலிருந்து அது நடுவானம் வருவதற்கு முன்வரையிலாயிருக்கும்.

மக்ரிபு, இஷா இவைகளுக்கிடையில் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆறு றக்ஆத்துத் தொழுகிறவர்களாயிருந்தார்கள். இதனுடைய வரிசையும் பெரிதேயாம்.

தறுவீஹு தொழுகை இருபது றக்ஆத்து சுன்னத்து முவக்காவாயிருக்கும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இரண்டு அல்லது மூன்று இரவுகளில் ஜமாஅத்துடன் இதைத் தொழுதார்கள். பின்பு வீட்டை விட்டு அவர்கள் புறப்படவில்லை. அதற்குக் காரணம் இந்தத் தொழுகை உங்கள்பேரில் பர்லாய்போகுமென்று எனக்கு அச்சமாயிருக்கிறதெனப்பகர்ந்தார்கள். வஹியிறங்குவதும் பர்லாகுமென்கிற பயமும் ஒழிந்த காலத்தில் அமீறுல் மூமினீன் ஹலாத்து உமர் றலியல்லாஹு அன்ஹு ஜனங்களைச் சேர்த்து இத்தொழுகையின் பேரில் நிலைநிறுத்தினார்கள்.

இஸ்திகாரா. ஜாபிறுப்னு அப்தில்லா றலியல்லாஹு அன்ஹு ரிவாயத்து செய்கிறது யாதெனில், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குர்ஆனுடைய சூராக்களை எப்படிப் போதித்துக்கொண் டிருந்தார்களோ அப்படியே எல்லாக்காரியத்திலும் இஸ்திகாரா செய் யும்படி கற்பிக்கிறவர்களா யிருந்தார்கள். அதாவது:—ஒருவனுக்கு ஒரு வேலையைப்பற்றிய கவலையுண்டாகி அதன்முடிவு எப்படியாகு மென்பதும், அதைவிடுவது நலவா, செய்வது நலவா என்பதும் அவ னுக்குத் தோன்றுமற்போனால் அவன் இரண்டு றக்ஆத்து தொழ வேண்டும். முந்தின றக்ஆத்தில் சூரத்து பாத்திஹாவும் குல்யா அய்யு ஹல் காபிறூனும், இரண்டாவது றக்ஆத்தில் சூரத்து பாத்திஹா வுடன் குல்ஹுவல்லாஹு அஹதும் ஓதவேண்டும். தொழுதுமுடிந்த பிறகு பின்வரும் துவாவை ஓதவேண்டும்.

اللهم اني استخيرك بعلمك و استخيرك بقدرتك و اسئالك
من فضلك العظيم فانك تقدر ولا اقدر وتعلم ولا اعلم وانت
علام الغيوب اللهم ان كنت تعلم ان هذا الامر خيرلے في ديني
ودنيائي وعاقبة امرى وعاجله واجله فقدره لے ويسره لے وان كنت
تعلم ان هذا الامر شرلے في ديني ودنيائي وعاقبه امرى
وعاجله واجله فاصرفني عنه واصرفه عني وقدر لے اينما كنت
انك على كل شيئ قدير

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீறுக்க பிஇல்மிக்க வஅஸ்த கீறுக்க பிகுத்றத்திக்க, வஅஸ்அலுக்க மின்பள்லிக்கல் அலீம் பயின்னக்க தக்திரு வலா அக்திரு வதஃலமு வலா அஃலமு, வஅன்த அல்லாமுல் குயூப் அல்லாஹும்ம இன் குன்த தஃலமு அன்ன ஹாதல் அம்ற கைறுன்லீ பீதீனீ வதுன்யாயீ வஆகிபத்தி அம்றீ, வஆஜிலிஹிவஆஜி லிஹி பகத்திர்ஹுலீ வயஸ்ஸிர்ஹுலீ வஇன்குன்த்த தஃலமு அன்ன ஹாதல் அம்ற ஷர்ருன்லீ பீதீனீ வதுன்யாயீ வஆகிபத்தி அம்றீ வஆஜி லிஹி வஆஜிலிஹி பஸ்ரிப்னீ அன்ஹு வஸ்ரிப்ஹு அன்னீ வகத்திர்லீ ஐனமா குன்த்த இன்னக்க அலாகுல்லி ஷைஇன் கதீர்.

ஸலாத்துல் ஹாஜத்தி:—ஹாஜத்துத் தொழுகையை இப்னுமஸ் ஊது றலியல்லாஹு அன்ஹு ரிவாயத்து செய்திருக்கிறார்கள்: ஒரு வனுக்கு ஒரு ஹாஜத்தை நேரிட்டு அந்த ஹாஜத்தில் தீன் துன்யா வுடைய பிரயோஜன மூண்டாயிருந்தால் அவன் பன்னிரண்டு றக்

ஆக்து தொழவேண்டும். ஒவ்வொரு றக்ஆத்திலும் சூறத்துல் பாத்திஹாவும், ஆயத்துல் குர்ஸியும் குல்ஹு வல்லாஹு அஹதும் ஓத வேண்டும். தொழுது முடிந்த பிறகு ஸஜ்தாவில் தலைவைத்துக் கொண்டு இந்த துவாவை ஓதவேண்டும்.

سبحان الذي ليس العز الا منه سبحان الذي تعطف المجد
وتكرم به سبحان الذي احصى كل شيء بعلمه سبحان الذي
لا ينبغي التسبيح الا له سبحان ذي المن والفضل سبحان ذي
العز والكرم سبحان ذي الطول والنعم اسئلك بمعاقد عزك
من عرشك ومنتهي الرحمة من كتابك وبسمك الاعظم وجدك
الاعلى وكلماتك التامات التي لا يجاوزهن بر
ولا فاجر ان تصلي على محمد

சுபுஹானல்லதீ லஸல் இஸ்ஸ இல்லாமின்ஹு சுப்ஹானல் லதீ துஃத்தபுல் மஜ்து வதுக்றமுபிஹி சுப்ஹானல்லதீ அஹ்ஸா குல்ல ஷைஇன் பிஇல்மிஹி சுபுஹானல்லதீ லாயன்பகித் தஸ்பீஹு இல்லா லஹு சுபுஹான தில்மன்னி வல்பள்லி சுபுஹான தில்இஸ்ஸி வல் கரமி சுபுஹான தித்தௌலி வன்னிஅம் அஸ்அலுக்க பிம ஆகித்தி இஸ் ஸிக்க் மின் அர்ஷிக்க வமுன்தஹிர் ரஹ்மத்தி மின்கிதாபிக்க வபிஸ் மிகல் அஃலமி வஜத்திகல் அஃலா வ கலிமாத்திக்கத் தாம் மாத்தில்லதீ லாயுஜாவிஸுஹுன்ன பர்ருன் வலாபாஜிருன் அன்துஸல்லிய அலா முஹம்மதின். பின்பு தன் ஹாஜத்தைக் கேட்பானுகில் இன்ஷா அல்லாஹ அவன் தஆ கபூலாகும். ஆனல் எதில் பாவமில்லையோ அந்த ஹாஜத்தைக் கேட்க வேண்டும், ஜாஹில்கள் இந்த தொழுகை யைக் கொண்டு பாவமான காரியங்களுக்கு உதவி தேடுவார்க ளாதலால் அவர்களுக்கு இத்தொழுகையைப் படிப்பிக்க வேண்டா மென்று ஹதீ தில் வந்திருக்கிறது. இந்த பாயிதாவை முத்தர்ஜிமான நான் முஸன்னி புடைய கிதாபு எஹ்யாஉல் உலூமிலிருந்து இங்குஎடுத்தெழுதி யிருக் கிறேன்.

ஐந்தாவது அஸ்லு.

ஸக்காத்தின் பயான்.

அருமையானவனே! தெரிந்துக்கொள். ஸக்காத்தாகிறது இஸ்லாமுடைய றுக்குனுகளில் ஒரு றுக்குனுயிருக்கும். இஸ்லாம் ஐந்து காரியங்களின் பேரில் எடுக்கப்பட்ட தென்றும், அவை லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்ற கலிமாவும், தொழுகையும் ஸக்காத்தும், நோன்பும், ஹஜ்ஜுமா யிருக்குமென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் ஹதீதில் வந்திருக்கிற தென்னவென்றால், பொன், வெள்ளி இவைகளை சுதந்திரமாய் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அவைகளின் ஸக்காத்தைக் கொடாமற் போனால் அவற்றைப் பழுக்கக் காய்ச்சி அவர்களின் நெஞ்சின்மேல் சுடப்படும். அவை நெஞ்சைத் தூளாத்துக்கொண்டு முதுகின் புறம் பாயும். முதுகிலும் சுடப்படும். முதுகைத் தூளாத்துக் கொண்டு நெஞ்சின் புறம் பாயும். இன்னும் மாடு, ஆடு, ஒட்டகம் முதலிய மிருகங்களைச் சுதந்திரமாய் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அவைகளின் ஸக்காத்தை இறுக்காமற் போனால் கியாமத்து நாளில் அம்மிருகங்கள் அவனைத் தங்கள் கொம்புகளால் முட்டவும், கால்களால் மிதிக்கவும் அவைகள் அவன்மேல் சாட்டப்படும். எல்லா மிருகங்களும் ஒருதரம் அவனை மிதித்துக் கொண்டு சென்றபிறகு பழையபடி மறுதடவையும் அப்படியே மிதித்துக் கொண்டு செல்லும். எல்லா கல்குகளுக்கும் கேள்வி கணக்கு தீருகிறவரையில் இதேமாதிரி அவனை மிதித்துத் துவையலாடிக் கொண்டிருக்கும். இந்த ஹதீதுகள் சஹீஹுபுகாரியில் எழுதப் பட்டிருக்கின்றன. ஆதலால் ஸக்காத்துடைய மஸ் அலாக்களை அறிவது முதலுள்ள சிமான்கள் பேரில் பர்லா யிருக்கும்.

ஸக்காத்துடைய வகைகளும்
அது விதியாகுவதற்குள்ள ஷறத்துகளும்.

அருமையானவனே! அறிந்து கொள். ஆறுவகையான ஸக்காத்து பர்லாயிருக்கும். முதலாவதுவகை மிருகங்களின் ஸக்காத்தாயிருக்கும். மிருகங்களென்றது ஒட்டகம், மாடு, ஆடு இவைகளேயாம். குதிரை, கழுதை மற்று மிருகங்களின் ஸக்காத்து விதி

யில்லே. இந்த வகையின் ஸக்காத்து விதியாகுவதற்கு நான்கு ஷறத்துகளுண்டு. முதலாவது ஷறத்து :—அந்த மிருகங்கள் வீட்டில் தீனி போட்டு வளர்க்கப்படாமல், காட்டில் மேய்ந்து வளர்கின்றனவா யிருக்க வேண்டும். இதேனெனில் அவனுக்குப் பெருஞ் செலவு நேரிடா திருக்கவேயாம். ஒரு வருஷம் முழுமையும் வீட்டில் தீனி போட்டிருந் தால் அது ஒரு செலவாக எண்ணப்படும் பக்ஷத்தில் ஸக்காத்து விழுந்துபோம்.

இரண்டாவது ஷறத்து :—அம்மிருகங்கள் ஒரு வருஷம் அவனு டைய சுயாதீனத்தி லிருக்க வேண்டும். வருஷத்துக் கிடையில் அவை அவன் சுதந்தரத்தி லிருந்து நீங்கிப் போனால் ஸக்காத்து விழுந்து போம். ஆனால் அம்மிருகங்கள் வருஷக் கடைசியில் கன்றுகள் ஈன்றால் அக்கன்றுகளும் கணக்கிடப்படும். அம்மிருகங்களின் தொடர்ச்சியினால் அக்கன்றுகளின் ஸக்காத்தும் விதியாகும்.

மூன்றாவது ஷறத்து :—அம்மிருகங்களினால் அவன் சீமானையும், அவை அவன் அனுபோகத்தி லிருக்கின்றனவாயு மிருக்க வேண்டும். அப்படிக் கில்லாமல் அவை காணுமற் போய் விட்டாலும் அல்லது ஒரு கொடியன் அவைகளை அபகரித்துக் கொண்டாலும் அவற்றின் ஸக் காத்து விழுந்துபோம். ஆனால் அந்த எல்லா மிருகங்களுமாவது அவற்றால் விர்த்தியான லாபமாவது திரும்ப அவனுக்குக் கிடைத்தால் அப்போது சென்ற நாளின் ஸக்காத்து அவன் மேல் விதியாகும். ஒரு வனுக்கு அம்மிருகங்களால் உள்ள முதல் எவ்வளவோ அவ்வளவே அவன் கடன் கொடுக்க வேண்டியவனு யிருந்தால் அவன் மேல் அவை களின் ஸக்காத்து விதியில்லை யென்பதே சஹீஹான கவுலா யிருக்கும். எதார்த்தத்தில் அவன் ஏழையா யிருக்கிறான்.

நான்காவது ஷறத்து :—அம்மிருகங்கள் அவனிடம் நிஸாபுடைய கத்துக்கிருப்பது கொண்டு அவன் சீமானு யிருக்க வேண்டும். ஏனென் றால் அவை நிஸாபுடைய கத்றுக்குக் குறைந்திருந்தால் அவன் சீமானாக மாட்டான். ஆதலால் ஒட்டகம் ஐந்துக்குக் குறைந்திருந்தால் அவை களின் ஸக்காத்து விதியில்லை. ஐந்து ஒட்டகங்களில் ஒரு பெட்டை யாடும், பத்து ஒட்டகங்களில் இரண்டு பெட்டையாடுகளும், பதினைந்து ஒட்டகங்களில் மூன்று பெட்டையாடுகளும், இருபது ஒட்டகங்களில் நான்கு பெட்டையாடுகளும் விதியாகின்றன. இந்த ஆட்டின் வயது ஒரு வருஷத்துக்குக் குறைந்திருந்தால் கூடாது. ஆணாடா யிருந்தால் இரண்டு வருஷத்துக்குக் குறையாததா யிருக்க வேண்டும்.

இருபத்தைந்து ஒட்டகங்க ளிருந்தால் ஒரு வருஷத்தின் பெண் ஒட்டக மொன்று கொடுக்க வேண்டும். இல்லா விட்டால் இரண்டு

வருஷத்து ஆண் ஒட்டக மொன்று கொடுக்க வேண்டும். முப்பத்தாறு ஒட்டகங்கள் ஆகாத வரையில் இதற்கு மேல் அதிகமாய்க் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. முப்பத்தாறில் இரண்டு வருஷத்துப் பெண் ஒட்டகம், ஒன்று விதியாகின்றது. நாற்பத்தாறில் மூன்று வருஷத்துப் பெண் ஒட்டகமும், அறுபத்தொன்றில் நான்கு வருஷத்துப் பெண் ஒட்டகமும், எழுபத்தாறில் இரண்டு வருஷத்தில் இரண்டு பெண் ஒட்டகங்களும், தொண்ணூற்றொன்றில் மூன்று வருஷத்து இரண்டு பெண் ஒட்டகங்களும் நூற்றிருபத்தொன்றில் இரண்டு வருஷத்து மூன்று பெண் ஒட்டகங்களும் விதியாகின்றன. இதன் பிறகு ஒவ்வொரு நாற்பதில் இரண்டு வருஷத்துப் பெண் ஒட்டகம் ஒன்றும், ஒவ்வொரு ஐம்பதில் மூன்று வருஷத்துப் பெண் ஒட்டகம் ஒன்று மாகக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

எருதுகள், பசுக்கள் இவைகள் முப்பதுக்குக் குறைந்திருந்தால் அவைகளின் ஸக்காத்து விதியில்லை. முப்பதிருந்தால் ஒரு வருஷத்தின் ஒரு கன்று விதியாகின்றது. நாற்பதில் இரண்டு வருஷத்தின் ஒரு கன்றும், அறுபதில் ஒரு வருஷத்தின் இரண்டு கன்றுகளும் விதியாகின்றன. இதன் பிறகு ஒவ்வொரு முப்பதில் ஒரு வருஷத்தின் ஒரு கன்றும், ஒவ்வொரு நாற்பதில் இரண்டு வருஷத்தின் ஒரு கன்று மாகக்கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

ஆடுகள் நாற்பதிருந்தால் ஒரு ஆடும், நூற்றிருபத் தொன்றில் இரண்டு ஆடுகளும், இருநூற்று ஒன்றில் மூன்று ஆடுகளும், நானூறில் நான்கு ஆடுகளும், கொடுக்க வேண்டும். இதன் பிறகு நூற்றுக்கு ஒன்றுகக் கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். கொடுக்கும் ஆடு பெட்டையாயிருந்தால் அதன் வயது ஒரு வருஷத்துக்குக் குறைந்திருக்கக் கூடாது: ஆண் பிருந்தால் இரண்டு வருஷத்துக்குக் குறையாததாயிருக்க வேண்டும். இரண்டு பேர் தங்கள் ஆடுகளை ஒன்றுய்ச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் பக்ஷம் அவர்களிருவரும் ஸக்காத்து விதிக்கப்படுகிறவர்களா யிருந்தால் அதாவது இருவரில் ஒருவன் காபிராகவாவது முகாதிபாகவாவது இல்லா விட்டால் அந்த இருவருடைய பங்கும் ஒரேமுதலென்ற விதியுள்ளதா யிருக்கிறது. ஆதலால் இருவருடைய பாகமுஞ் சேர்ந்து நாற்பது ஆடுகளுக்கு மேல் இல்லா விட்டாலும் ஒவ்வொருவன் மேலும் அரை ஆடு விதியாகும். நூற்றிருபது ஆடுகளிருந்தால் இருவருஞ் சேர்ந்து ஒரு ஆடு கொடுக்க வேண்டும்.

இரண்டாவது வகை :—தானியங்கள் கனிவர்க்கங்கள் இவைகளின் ஸக்காத்தா யிருக்கும். ஒருவனிடத்தில் எண்ணூறு மன்மணி

கோதுமையாவது, தொலிகோதுமையாவது, திராக்ஷப் பழமாவது, பேரீத்தம் பழமாவது, அல்லது பயறு, கடலை, மொச்சை, அரிசி போல் ஆகாரமாய் உண்ணக்கூடிய மற்றும் யாதொரு பொருளாவது இருந்தால் அதில் உஷ்று ஸக்காத்து பத்திலொரு பாகம் கொடுப்பது விதியாகும். பருத்தி, பாதம், கத்தான் (சணல்) முதலியவைப்போல் எந்தப்பொருள் உணவாகாதோ அதில் உஷ்று ஸக்காத்து விதியாகாது. நானூறுமன் மணிகோதுமையும், நானூறுமன் தொலிகோதுமையு மிருந்தால் அதில் உஷ்று ஸக்காத்து விதியாகாது. ஏனென்றால், ஸக்காத்து விதியாகு வதற்கு ஒரே இனமான பொருள் நிஸாபுடைய அளவுக்கு இருப்பது ஷரத்தாயிருக்கும். நிலத்துக்கு ஆற்றுத் தண்ணீராவது கால்வாய்த் தண்ணீராவது பாய்ச்சாமல் ஏற்றம், கபிலை முதலிய இரைப்பினால் பாய்ச்சியிருந்தாலும் உஷ்று ஸக்காத்து விதியில்லை. ஸக்காத்தில் பச்சை திராக்ஷப்பழமும், பச்சை பேரீத்தம் பழமும் கொடுக்கக் கூடாது. மேலும் நீர்வற்றிக் காய்ந்த திராக்ஷையும் காய்ந்த பேரீந்தும் கொடுக்கவேண்டும். அந்தப் பச்சை திராக்ஷையானது நீர்வற்றிக் காய்ந்த திராக்ஷையாகும் தன்மையுடையதா யிராவிட்டால் அப் போது பச்சை திராக்ஷை கொடுப்பதாகும். திராக்ஷை பழுத்தும் கோதுமையின் மணிகள் முற்றியும் போனால் அவைகளில் நின்றும் பகிர்களின் பாகம் எவ்வளவென்று உத்தேசத்தினால் தெரிந்து கொள் ளாதவரையில் அதில் ஒன்றும் உபயோகிக்கக் கூடாது. அவர்களின் பாகம் இவ்வளவென்று மதிப்பிட்டதின் பின்னால் அவை அனைத்தில் நின்றும் உபயோகிப்பதாகும்.

மூன்றாவது வகை:—பொன், வெள்ளி இவைகளின் ஸக்காத்தா யிருக்கும். வெள்ளியின் இருநூறு திருஹங்களில் ஐந்து திருஹங்கள் வருஷக்கடைசியில் விதியாகின்றன. சுயமான பொன் இருபது தீனர் களில் அரைதீனர் விதியாகும். இது, பத்திலொன்றில் கால்வாசியா யிருக்கும். பொன், வெள்ளி எவ்வளவு அதிகமா யிருக்கின்றதோ அதற்கு இதே கணக்கின்படி கொடுக்கவேண்டும். பாத்திரங்களாயுள்ள வெள்ளி, பொன்னிலும், குதிரைச்சாமான், வாள் முதலியவற்றில் வேலை செய்யப்பட்டுள்ள வெள்ளி, பொன்னிலும், தரிக்க ஆகாத நகைகளி லும் ஸக்காத்து விதியாகும். ஆனால் எந்த நகை ஆணுக்கும் பெண் ணுக்கும் ஆகுமோ அந்த நகையின் ஸக்காத்து விதியில்லை. ஒருவனி டத்தில் கொடுத்து வைக்கப்பட்டிருக்கிற வெள்ளி, பொன் இவன் இஷ்டமானபோது வாங்கிக்கொள்ளக் கூடியதா யிருந்தால் அதன் ஸக் காத்தும் விதியாகும்.

நான்காவது வகை:—வர்த்தக சரக்கின் ஸக்காத்தா யிருக்கும். இருபது தீனரின் அளவுக்கு ஒரு சரக்கை வர்த்தகத்துக்கென்று வாங்கி அதன்மேல் ஒரு வருஷம் சென்றுபோனால் அதே நாணயத்தின் ஸக்காத்து விதியாகும். வருஷம் முழுவதும் சம்பாதித்த லாபத்தையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும். அந்தந்த வருடக்கடைசியில் சரக்கின் கிரயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். வர்த்தகத்துக்கு ஆதியில் வைத்த முதல் பொன்னுயிருந்தால் அதைக் கொண்டே ஸக்காத்து கொடுக்கவேண்டும். பொன், வெள்ளி நாணயத்துக்கு சரக்கு வாங்கவில்லையானால் பட்டணத்தில் வழங்குகிற நாணயத்தைக் கொண்டு ஸக்காத்து கொடுக்க வேண்டும். ஒருவனிடத்தில் ஒரு சரக்கிருந்து அதைக்கொண்டு அவன் வேறு தினுசு வாங்கி வர்த்தகம் செய்ய வேண்டுமென்று நிய்யத்து செய்தால் அப்படி நிய்யத்து செய்த அப்போதே வருஷம் ஆரம்பிக்காது. அது பொன், வெள்ளியா யிருந்தால் அதை நிஸாபுடைய கத்றுக்கு உடையதாக்கிக் கொண்ட அப்போதே வருஷம் ஆரம்பிக்கும். அப்படி வர்த்தகத்துக்காகச் செய்திருந்த நிய்யத்து வருஷத்தின் மத்தியில் மாறிப்போனால் ஸக்காத்து விதியாகாது. வல்லாஹு அஃலம்.

ஐந்தாவது வகை:—பித்துருடைய ஸக்காத்தா யிருக்கும். முஸ்லிமானவன் நோன்பு பெருநாளிரவில் தனக்கும் தன் மனைவி மக்களுக்கும் ஈதுப் பெருநாளன்று உபயோகப்படுகிற ஊணும், வீடு, உடை மற்றும் அவசியமான பொருள்களும்போக மேல் மிச்சமான முதலுள்ள வனுயிருந்தால் அவன் தான் வழக்கமாய்த்தின்று வருகிற தானியத்தில் நின்றும் ஒரு மரக்கால் கொடுக்க வேண்டும். இரண்டே முக்கால் மன்கொண்டது ஒரு மரக்கால். *மணிகோதுமை தின்கிறவன் தொலி கோதுமை கொடுக்கக்கூடாது. தொலி கோதுமை தின்னுகிறவன் மணிகோதுமை கொடுக்கலாம். பலவகையான தானியங்களைத் தின்னுகிறவன் அவைகளில் மேலானதைக் கொடுக்கவேண்டும். கோதுமைக்கு பதிலாக மாவுமுதலியவைகளைக் கொடுக்கக்கூடாது. இதுவே ஷாபியீ றஹிமஹுல்லாவுடைய மத்ஹபா யிருக்கும். பெண்ஜாதி, பிள்ளை, தாய், தகப்பன், அடிமை இவர்கள்போல் யார் யாருடைய அன்னவஸ்திரச் செலவு தன்பேரில் விதியோ அவர்கள் பக்கத்தாலும் பித்துருடைய ஸதகா விதியாகும். ஒரு அடிமை இரண்டு பேரில் கூட்டாயிருந்தால் அவனின் பித்ருடைய ஸதகா அந்த இரண்டு கூட்டாளிகள் பேரிலும் விதியாகும். காபிராகிய அடிமையின் பக்கத்தால் ஸதகா விதியில்லை. பெண்ஜாதியானவள் தன் ஸதகாவைத் தானே கொடுத்தால்

*இந்த மரக்காலுக்கு 284 ரூபாய் நிறையாகின்றது. ஷாஜஹான் சேரைக்கொண்டு இரண்டேமுக்கால் சேரும் இங்கிலீஷ் சேரைக் கொண்டு இரண்டே முக்காலே அரைக்கால் சேரும் ஆகின்றது.

கூடும். புருஷன் தன் பெண்ஜாதியின் ஸதகாவை அவள் உத்திரவின் றிக் கொடுப்பதாகும். ஸக்காத்தின் விஷயமான விதிகளில் இவ்வளவை அறியவேண்டிய அவசிய மிருந்தது. இதற்குமேல் ஏதாவது சம்பவித் தால் உலமாக்களிடத்தில் கேட்டுக்கொள்ளவேண்டியது.

ஸக்காத்து கொடுக்கும் விதம்.

ஸக்காத்து கொடுப்பதில் ஐந்து காரியங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவது காரியம் ஸக்காத்து கொடுக்கும்போது ஸக்காத்துடைய பாலை அதாச்செய்கிறேன் என்று நிய்யத்து செய்யவேண்டும். ஸக்காத்து கொடுப்பதற்கு ஒரு வக்கீலை நியமித்திருந்தால் அப்படி நியமிக்கிற போது நிய்யத்து செய்யவேண்டும். அல்லது அந்த வக்கீல் ஸக்காத்து கொடுக்கும்போது அவனை நிய்யத்து செய்து கொள்ளும்படி அவனுக்கு உத்திரவு கொடுக்கவேண்டும். சிறுவருடைய முதலுக்காக ஸக்காத்து கொடுக்கும்போது வலிக்காரன் நிய்யத்து செய்யவேண்டும்.

இரண்டாவது காரியம்:—வருஷம் சென்றுபோனால் உடனே ஸக்காத்தைத் தரிதமாய் கொடுக்கவேண்டும். ஏனென்றால் காரண மின்றித் தாமதிப்பது கூடாது. பித்துருடைய ஸதகாவை ஈதுடைய நாளுக்குமேல் தாமதமாய் வைக்கக்கூடாது. அதை றமலானிலேயே முன்னதாய்க் கொடுப்பதாகும். றமலானுக்கு முன்னே ஆகாது. முத லுடைய ஸக்காத்தை வருஷம் முழுவதிலும் தீவிரமாய்க் கொடுப்பதா கும். ஆனால் இதற்கொரு ஷறுத்துண்டு. அதாவது:—எவனுக்கு அந்த ஸக்காத்து கொடுக்கப்பட்டதோ அவன் அந்த வருஷம் பூர்த்தி யாகிற வரையில் பகீராயிருக்கவேண்டும். வருஷம் பூர்த்தியாவதற்கு முன்னே அவன் மவுத்தாய்ப்போனாலும் சீமானாய்ப்போனாலும் காபி ராய்ப்போனாலும் மறுவிடுத்தம் ஸக்காத்து கொடுப்பது விதியாகும்.

மூன்றாவது காரியம்:—ஒவ்வொரு தினுசின் ஸக்காத்தை அந் தந்த தினுசில் நின்றுமே கொடுக்கவேண்டும். வெள்ளிக்குப் பொன் னும், தொலிகோதுமைக்கு மணிகோதுமையும், கொடுக்கும் பொரு ளின் கிரயத்தளவுக்கு வேறுபொருளும் கொடுத்தால் இமாம் ஷாபியீ றஹிமஹுல்லாவுடைய மத்ஹபில் கூடாது.

நான்காவது காரியம்:—பொருள் எவ்விடத்திலிருக்கின்றதோ அவ்விடத்திலேயே ஸக்காத்து கொடுக்கவேண்டும். ஏனென்றால் அவ் விடத்திலுள்ள பகீருகள் அதை நம்புதல் வைத்திருப்பார்கள். ஸக் காத்தை வேறே ஊருக்கு அனுப்பி விடுவானுகில் சஹீஹான கவுல்படி ஸக்காத்து நிறைவேறிப்போம்.

ஐந்தாவது காரியம்:—ஸக்காத்து எவ்வளவா யிருந்தபோதிலும் அதை எட்டு கூட்டங்களின்மேல் பாகிக்கவேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் மூன்றுபேருக்குக் குறையக்கூடாது. மொத்தம் இருபத்து நாலுபேருக்குக் குறையாமலிருக்கவேண்டும். ஒரு திருஹம் ஸக்காத்து கொடுக்கவேண்டியதாயிருந்தால், ஷாபியீ றஹிமஹுல்லாவிடத்தில் அதை எட்டு பாகமாக பிரித்து ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு கூட்டத்தில் நின்றும் மூன்றுபேருக்காவது அல்லது, இஷ்டமானால் அதிகம் பேருக்காவது கொடுப்பது விதியாயிருக்கும். பாகிப்பது, சமமா யில்லாவிட்டாலுஞ் சரி. இந்த காலத்தில் மூன்று கூட்டத்தார், அருமையாயிருக்கிறார்கள். அவர்கள் யாரெனில், யுத்தவீரர்களும், முவல்லபத்துல் குலூபுகளும், ஸக்காத்து தண்டல்காரர்களுமேயாம் ஆனால் பகீருகளும், மிஸ்கீன்களும் முகாதிபுகளும், முஸாபிர்களும் கடனுள்ளவர்களும் தென்படுவார்கள். ஆதலால் இந்தக் கூட்டங்களில் நின்றும் ஒவ்வொரு கூட்டத்துக்கு மூன்றுபேராக பதினெந்து பேருக்குக் கொடுக்கவேண்டும். குறைந்தால் கூடாது. இது ஷாபியீ றஹிமஹுல்லாவுடைய மத்ஹபா யிருக்கும். ஷாபியீ றஹிமஹுல்லாவிடத்தில் தினுசுக்கு தினுசே கொடுக்கவேண்டு மென்பதொன்று எல்லாக் கூட்டத்துக்கும் கொடுக்கவேண்டு மென்பதொன்று. இந்த இரண்டு மஸ்அலாக்களும் கஷ்டமானவைகளாயிருக்கின்றன. ஆதலால் அநேகம்பேர் இந்த இரண்டு மஸ்அலாக்களிலும் இமாம் அபூ ஹனீபா றஹிமஹுல்லாவுடைய மத்ஹபைத் தொடருகின்றார்கள். அப்படித் தொடருகிறவர்கள் குற்றம் பிடிக்கப்படார்களென்று நம்புதல் வைக்கின்றேன்.

ஸக்காத்தை அடைய பாத்தியமுள்ள அந்த எட்டுவகையாரும் அவர்களின் இலக்ஷணமும்.

முதலாவது வகையார் பகீருகளாம்:— பகீரென்பவன் தன்னிடத்தில் யாதொரு சொத்தில்லாமலும், யாதொரு தொழில் செய்யக் கூடாமலுமிருப்பவனும். அவனிடத்தில் ஒரு நாளுக்குப் போதுமான உணவும் முழு உடுப்பும் இருந்தால் அவன் பக்கீரல்ல. அரை நாளின் உணவும், அரைவுடுப்புமிருந்தால் அதாவது சட்டையிருந்து தலைப்பாகை யில்லாமற்போனாலும், தலைப்பாகையிருந்து சட்டை யில்லாமற்போனாலும் அவன் பகீரேயாம். ஆயுதத்தைக்கொண்டு வேலை செய்யக்கூடியவனாயிருந்து அவனிடத்தில் ஆயுதம் இல்லாமற்போனால் அவனும் பகீரேயாம். ஒரு தாலிபுல் இல்மு தொழில் செய்வதுகொண்டு அவனுக்கு இல்மு படிக்கத்தடையானால் அவனும் பகீரேயாம். இந்த இலக்ஷணமுள்ள பகீர் என்பவர்கள் சிறுவர்கள் தவிர மற்றவர்கள் மிகவும் குறைவாய்த் தென்படுவார்கள்.

ஆதலால் இதற்குச் செய்யவேண்டிய உபாயம் யாதெனில், அதிக குடும்பஸ்தனு யிருக்கிற ஒரு பகீரைத்தேடி பகீர் என்பவர்களின் பாகத்தைச் சிறுவர்களுக்காக அக்குடும்பஸ்தனுகிய பகீருக்குக் கொடுப்பான்.

இரண்டாவது வகையார் மிஸ்கீன்களாம்:—எவனுக்கு வரவுக்கு மேல் செலவு அதிகமாகின்றதோ அவன் மிஸ்கீன் எனப்படுவான். அவனுக்கு வீடும், உடையு மிருந்தாலுஞ்சரி, ஆனல் அவனிடம் ஒரு வருஷத்துக்கு வேண்டிய உணவு இல்லாமலும், அவன் சம்பாதிப்பது ஒரு வருஷ முழுமைக்கு போதாமலுமிருந்தால் வருஷம் முழுமைக்கும் செல்லுமான அளவு அவனுக்கு ஸக்காத்து கொடுப்பது ஆகும். அவனிடம் வீடும் விரிப்பும் பாத்திரங்களும் கிதாபுகளு மிருந்து அவை அவனுக்குத் தேவையுள்ளனவா யிருந்தால் அவன் மிஸ்கீனேயாம். ஆனல் தேவைக்குமேல் அதிகமா யாதொரு பொரு ளிருந்தால் அவன் மிஸ்கீனுக மாட்டான்.

மூன்றுவது வகையார் தண்டல்காரராம்:—இவர்கள் முதலாளி களிடமிருக்கிற ஸக்காத்தைத் தண்டிச்சேர்த்து ஹக்காளிகளுக்குச் செலுத்துகிற வேலைக்காரர்கள். இவர்களுக்கு ஸக்காத்தில் நின்றுமே சம்பளம் கொடுக்கவேண்டும்.

நான்காவது வகையார் முவல்லபத்துல் குலூபுகளாம்:— முவல்ல பத்துல் குலூபு யாரென்றால், புதிதாய் இஸ்லாமான ஒரு கூட்டத்திற் சிறந்தவனுயிருப்பவனும். இவனுக்குப் பணங் கொடுத்தால் மற்ற வர்களுக்கும் இஸ்லாமாக ஆசையுண்டாகும்.

ஐந்தாவது வகையார் முகாதிபுகளாகிய அடிமைகளாம்:—முகாதிபு கள் யார் என்றால், அடிமைத்தனத்திலிருந்து நீங்கவும் தங்கள் கிர யத்தை இரண்டு மூன்று வருடவைகளில் எஜமானனுக்குச் செலுத்தி விட்டவும் அனுமதி கேட்டுக் கொண்ட அடிமைப்பயல்கள் அல்லது அடிமைப் பெண்களா யிருக்கும்.

ஆறுவது வகையார் கடனுளிகளாம்:—ஆனல் இவர்கள் நன்மை யான காரியங்களுக்காகக் கடன் பட்டிருக்கவேண்டும். அப்படிக் கில்லாமல் தீமையான காரியத்தில் கடன்வாங்கியிருந்தால் அவன் தவுபாச் செய்யாதவரையில் அவனுக்கு ஸக்காத்து கொடுக்கக்கூடாது. சீமானுயிருந்தால் அவனின் கடனைத் தீர்க்கக்கூடாது. என்கினும் அவன் ஒரு இணக்கத்துக்காக அல்லது யாதொரு தீங்கு நிவர்த்திக் காகக் கடன் வாங்கியிருந்தால் அவன் கடனைத் தீர்க்கலாம்.

ஏழாவது வகையார்:—பீஸபீலுக்குப் போகிற யுத்தவீரர்களாம். இவர்கள் சீமான்களா யிருந்தபோதிலும் பைத்துல் மாலில் நின்றும் இவர்களுக்கு எவுமிய்யா நியமிக்கப் படாதிருந்தால் இவர்களுக்கு வேண்டிய வழிச்சாமான்களை ஸக்காத்தில் நின்றும் வாங்கிக் கொடுங்கள்.

எட்டாவது வகையார்:—வழிச்செலவுக்கில்லாத முஸாபிர்களாம். இவன் ஸபரிலிருந்தாலும் அல்லது தன் ஊரிலிருந்து ஸபர்போகிறவனு யிருந்தாலும் இவனுக்கு வழியின் உணவுக்கும், ஏறிப்போகும் சவாரிக் கும் செல்லுமான செலவு கொடுங்கள்.

ஒருவன் நான் பகீர் அல்லது மிஸ்கீன் என்று சொன்னல் அவன் சொல்வது பொய்யென்று வெளியாகாதிருக்கிற வரையில் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனல் முஸாபிரானவன் ஸபர் போகாமலும் யுத்த வீரன் யுத்தத்துக்கு ஏகாமலிருந்தால் அவர்களுக்குக் கொடுத்த ஸக்காத்தை திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள். மற்ற வகையாருக்காக சாக்ஷிவேண்டும், அதாவது அவர்கள் நிஜவந்தர்களா என்று நம்பிக்கை யுள்ளவர்களில் தீர விசாரித்துக் கொள்ளவேண்டும்.

ஸக்காத்து ஏற்பட்டதற்குள்ள இரகசியங்கள்.

அருமையானவனே தெரிந்து கொள். தொழுகைக்கு எப்படி வெளியரங்கமான ஒரு உருவமும் அந்தரங்கமான ஒரு உயிரு மிருக் கின்றதோ அப்படியே ஸக்காத்துக்கும் ஒரு உருவமும் உயிரு மிருக் கின்றது. ஸக்காத்தின் உயிரான அதன் இரகசியத்தை எவன் அறிய வில்லையோ அவனின் ஸக்காத்து பிணம்போல் உயிரில்லா உருவமாகும். ஸக்காத்தின் இரகசியங்கள் மூன்றுண்டு.

முதலாவது இரகசியம் என்னவென்றல்:— அல்லாஹ¤ தஆலா வின் மேல் பிரியம் வைக்கும்படி எல்லாருக்கும் கட்டளை செய்யப் பட்டிருக்கிறது. தனக்கு அல்லாஹ்வின்மீது பிரியமுண்டு என்று சொல்லாத மூமின் ஒருவனு மிருக்கமாட்டான். மேலும் எந்த வஸ்து வையும் அல்லாவினும் அதிகமாய் உவந்து கொள்ள வேண்டா மென்று முஸ்லிம்களுக்கு உத்தரவு செய்யப் பட்டிருக்கிறது. அதெப்படி யென்றல், قل ان كان اباؤكم وابناؤكم الاية உங்கள் தந்தை யரும் மைந்தர்களும் சகோதரர்களும் மனைவிகளும் பந்துக்களும் நீங்கள் சம்பாதித்த திரவியங்களும் எந்த வர்த்தகம் நின்று போகு மென்று நீங்கள் பயப்படுகிறீர்களோ அந்த வர்த்தகமும் நீங்கள் பொருந்திக் கொண்ட வாசஸ்தலங்களும் அல்லாவைக் காட்டிலும் அவன் ரஸ¤லைக்காட்டிலும் அவன் பாதையில் ஜிஹாது செய்வதைக் காட்டிலும் உங்களுக்கு அதிக பிரியமுள்ளனவா யிருந்தால் அல் லாஹ¤ தஆலா தன் ஆக்கினையை அனுப்புகிற வரையில் நீங்கள்

வழி பாருங்கள் என்று திருவுளமா யிருக்கிறான். ஒவ்வொரு மூமினும் தனக்கு எல்லா வஸ்துவின் மீதுள்ள பிரியத்தைக் காட்டிலும் அல்லாவின் மீதுள்ள பிரியம் அதிக மென்று சாதிக்கின்றான். அந்த சாதிப்பின் படியே உண்மையில் தனக்கு அல்லாவின் பிரிய முண்டென்று எண்ணிக் கொள்ளுகிறான். ஆதலால் ஒவ்வொருவனும் அந்த ஆதாரமற்ற சாதனையை நம்பி கர்வங் கொள்ளாமல் எதார்த்தத்தில் அந்தப் பிரியம் தன்னில் உண்டா வென்று கண்டறிவதற்கு ஒரு அத்தாட்சி வேண்டியதாயிற்று. பொருளானது மனிதனுக்குப் பிரியமானதாகையால் அதனால் அவனைச் சோதிக்க நாடி "எல்லா வஸ்துவின் மீதுள்ள பிரியத்தைக் காட்டிலும் உனக்கு அல்லாவின் மீதுள்ள பிரியம் அதிகமாயிருப்பது உண்மையா யிருந்தால் நீ நேசிக்கிற இந்தப் பொருளை அல்லாவுக்காக கொடு, அப்படி கொடுப்பாயாகில் அல்லாவுடைய பிரிய விஷயமான வகுப்புகளில் நீ எந்த வகுப்பில் இருக்கிறா யென்பது உனக்குத் தெரியலாகும்" என்று இவனுக்கு ஸக்காத்து ஏற்படுத்தப் பட்டது. எந்த ஜனங்கள் இந்த இரகசியத்தை அறிந்தார்களோ அவர்கள் மூன்று வகுப்பாய்ப் பிரிந்தார்கள்.

முந்தின வகுப்பார் சித்தீகுகள்:—இவர்கள் தங்களுடைய எல்லாப் பொருளையும் அல்லாவின் பேரில் வாரிச் சொரிந்து விட்டு "இருநூறு திருஹங்களில் நின்றும் ஐந்து திருஹங்களைக் கொடுப்பது உலோபிகளின் செயலா யிருக்கு மென்றும், அல்லாவை அதிகமாய் நேசிக்கிற நாம் எல்லாப் பொருளையும் கொடுக்கக்கடவோ மென்றும் சொன்னார்கள். உதாரணமாக:—அபூபக்கர் சித்தீகு றலியல்லாஹு அன்ஹு தங்களுடைய எல்லா சொத்துகளையும் கொண்டு வந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களின் சமூகத்தில் வைத்த போது நாயகமவர்கள் நீர் உம்முடைய மனைவி மக்களுக்கு என்ன வைத்திருக்கிறீர் என்று விளவினார்கள். அதற்கவர்கள் அல்லாவையும் அவன் றசூலையும் வைத்திருக்கிறேன் என்று விடை பகர்ந்தார்கள். இன்னும் சில அஸ்ஹாபுகள் தங்கள் சொத்தில் அரைவாசியைக் கொடுத்தார்கள். உதாரணமாக:—உமர் றலியல்லாஹு அன்ஹு அரைவாசி முதலை ஆஜர் படுத்தினார்கள். அவர்களை நோக்கி நீர் உம்முடைய மனைவி மக்களுக்கு என்ன வைத்திருக்கிறீர் என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கேட்டதற்கு நான் அரைவாசி முதல் வைத்திருக்கிறேன் என்று பதில் கூறினார்கள். அப்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் بينكما ما بين كلمتيكما பைனகுமா, மாபைன கலிமத்தைக் குமா, உங்கள் வார்த்தையின் வித்தியாசத்தளவே உங்கள் பதவியு மிருக்கிற தென்று திருவுளமானார்கள்.

இரண்டாவது வகுப்பார் சாதுக்கள்:— இவர்கள் தங்கள் பொருளை ஒரே தடவையில் செலவு செய்யாமல் காப்பாற்றி வைத்திருந்து பகீருகளுடைய ஹாஜத்தின் போது கைமுத்து செய்ய எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்களும் பகீருகளோடு ஒத்திருக்கிறார்கள். கொடுக்க வேண்டிய ஸக்காத்து எவ்வளவோ அதை மாத்திரம் கொடுத்து விட்டு இது போதுமென்று சும்மா யிருக்கமாட்டார்கள். மேலும் தங்கள் மனைவிமக்களுக்கு எப்படி உண்ணக் கொடுக்கிறார்களோ அப்படியே தங்களைத் தேடிவரும் பகீருகளுக்கும் கொடுக்கிறார்கள்.

மூன்றுவது வகுப்பார் கறுறுள்ளவர்கள்:— இவர்கள் இருநூறு திருஹங்களில் நின்றும் ஐந்து திருஹங்களுக்குமேல் அதிகங் கொடுக்க முடியாதவர்கள். ஆனல் பர்லு மாத்திரம் நிறைவேற்றுகிறார்கள். அல்லாவுடைய உத்திரவை சந்தோஷத்தோடு அங்கீகரித்துத் தீவிரமாய்ச் செய்கிறார்கள். ஸக்காத்து கொடுப்பதினல் பகீருகளின் மேல் தங்கள் உபகாரச் சுமையை வைக்கமாட்டார்கள். இது கடைசி வகுப்பாயிருக்கும். எவன் தனக்கு அல்லாஹு தஆலா கொடுத்த இருநூறு திருஹங்களில் நின்றும் ஐந்து திருஹம் ஸக்காத்து கொடுக்க மாட்டானே அவனுக்கு அல்லாஹு தஆலாவுடைய பிரியத்துடன் யாதொரு சம்பந்தமில்லை. ஸக்காத்துடைய அளவுக்குமேல் அதிகமாய்க் கொடுக்க எவனல் முடியவில்லையோ அவனுக்கு அல்லாவின் மீதுள்ள பிரியம் அற்பமேயாம். அவன் பகீல்கள் என்னும் உலோபிகளிற் சேர்ந்தவனுகின்றன்.

இரண்டாவது இரகசியம் பகீல் தனமென்னும் உலோப குணமான நஜீஸை விட்டு கல்பைச் சுத்தப்படுத்துவதா யிருக்கும். ஏனென்றல் எந்த கல்பில் உலோபகுணமா யிருக்கின்றதோ அந்த கல்பு நஜீஸா யிருக்கும். வெளியரங்கமான நஜீஸுபட்ட தேகம் எப்படித் தொழத் தகுதியற்றதா யிருக்கிறதோ அப்படியே நஜீஸான கல்பும் அல்லாவுடைய சமுகத்தில் நெருங்கத் தகுதியற்றதா யிருக்கிறது. மனிதன் தன்னுடைய பொருளைச் செலவு செய்யாதிருக்கிற வரையில் அவன் மனம் பகீல்தனம் என்னும் நஜீஸைவிட்டுச் சுத்தமாகாது. ஸக்காத்தானது பகீல்தனமென்னும் நஜீஸை நீக்குகின்றதால் அது நஜீஸைக் கழுவின தண்ணீருக்குச் சமானமா யிருக்கிறது. இதனுலே தான் றஸூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் பேரிலும் அவர்களுடைய அஹ்லு பைத்துகள் பேரிலும் ஸக்காத்தும் ஸதகாவும் ஹறுமென்றது. ஏனென்றல் ஜனங்களுடைய பொருளின் அழுக்கை விட்டும் தங்கள் தூய்தான பதவியைக் காப்பாற்றவேயாம்.

மூன்றுவது இரகசியம் நிஃமத்துடைய ஷுகுறுயிருக்கும். அதாவது:—பாக்கியத்தின் நன்றியறிதலாம். ஏனென்றால் பொருளானது மூமினுடைய விஷயத்தில் எப்படிப்பட்ட பாக்கியமென்றால் அதனால் அவனுக்கு துன்யாவுடையவும் ஆகிரத்துடையவுமான சவுக்கியம் வாய்க்கின்றது. ஆதலால் தொழுகையும் நோன்பும் ஹஜ்ஜும் எப்படி தேகமென்னும் பாக்கியத்துக்கு ஷுகுறுயிருக்கின்றதோ அப்படியே ஸக்காத்தானது பொருளென்னும் பாக்கியத்துக்கு ஷுகுறுயிருக்கிறது. எப்போது மனிதன் இந்தப் பாக்கியத்தால் தான் சீமானுயிருக்கவும் தன்னைப்போலுள்ள மற்ற முஸ்லிமான பிறவிகள் ஏழைகளாயிருக்கவும் கண்டானோ அப்போது அவன் தன் மனதில் எண்ணவேண்டிய தென்னவென்றால், அல்லாவுடைய அடியார்களில் நின்றும் இவனும் என்னைப்போல் ஒரு அடிமையாயிருக்கிறான். இவனிடம் எனக்கு யாதொரு ஹாஜத்தில்லாதபடி என்னைச் சீமானுயும் இவனை என்னிடம் ஹாஜத்துள்ள ஏழையாயும் அல்லாஹு தஆலா ஆக்கி இருக்கிறான். அவன் எனக்குச் செய்த உபகாரத்தின் நன்றியறிதலுக்காக நான் இவனுக்கு உபகாரம் செய்வேன். ஒருக்கால் இது சோதிப்பாயிருந்தாலும் இருக்கலாம். ஆதலால் நான் இவனுக்கு உபகாரம் செய்வதில் குறைசெய்வேனுகில் அல்லாஹு தஆலா என்னை ஏழையாகவும் இவனைச் சீமானுகவும் செய்யக்கூடும் என்பதே. ஆதலால் ஒவ்வொருவரும் ஸக்காத்துடைய இந்த இரகசியங்களை அறியவேண்டும். அப்படி அறிந்தால் அவனின் இபாதத்து உயிரில்லா உருவமென்றாகாது.

ஸக்காத்தின் அதபுகள்.

எவன் தன் இபாதத்து உயிருள்ளதாயிருக்கவும் உயிரிழந்ததென்றாகாமலிருக்கவும் இரட்டிப்பான ஜவாபு கிடைக்கவும் விரும்புகின்றானே அவன் ஏழு அதபுகளைக் கவனிக்கவேண்டும்.

முதலாவது அதபு:—ஸக்காத்து கொடுப்பதில் தீவிரப்படுத்தவேண்டும். ஸக்காத்து வியாகுவதற்கு முன்னே வருஷம் முழுவதிலும் கொடுக்கவேண்டும். இதில் மூன்று பிரயோஜனங்களிருக்கின்றன. முந்தின பிரயோஜனம் இபாதத்துடைய ஆசையின் அடையாளம் அவன்மேல் வெளியாகும். ஏனென்றால் வியான பிறகு கொடுப்பது கடமையான காரியம்; கொடாவிட்டால் அதாபில் சிக்குவான். ஆதலால் அப்போது கொடுப்பது பிரியத்தினால் அல்ல, பயத்தினுலென்றாகும். எவன் ஒவ்வொரு வேலையும் ஆசை அன்பாய்ச் செய்யாமல் பயத்துக்காகச் செய்கின்றானே அவன் கெட்ட அடிமையாயிருக்கின்றான்.

இரண்டாவது பிரயோஜனம்:—பகீருகளின் மனம் சிக்கிரம் சந்தோஷமடைகின்றது. அவர்கள் இருந்தாப் போலிருந்து புதிய சந்தோஷத்தைக்காண்பார்கள். அப்போது கலப்பற்ற நெஞ்சோடு உருக்கமாய் துவாசெய்வார்கள். பகீருகளின் துவாவானது அவன் விஷயத்தில் எல்லா ஆபத்துகளுக்கும் காவலாயிருக்கும்.

மூன்றுவது பிரயோஜனம்:—காலத்தின் ஆபத்துகளை விட்டும் அவன் கவலையற்றிருப்பான். ஏனென்றால் தாமதப்படுத்துவதில் அநேக ஆபத்துகளிருக்கின்றன. ஒருக்கால் அந்த நன்மையை அடைய விடாதபடி ஏதாவதொருதடை நேரவுங்கூடும். மனிதனுடைய கல்பில் நன்மையான காரியஞ்செய்ய விருப்பம் பிறந்தால் அவன் அதை இலேசமாய்க்கிடைத்த பாக்கியமென்று நினைக்கவேண்டும். ஏனென்றால், அது فان قلب المؤمن بين اصبعين من اصابع الرحمان "அல்லாஹ்வுடைய றஹ்மத்தான பார்வையாயிருக்கிறது. சடுதியில் ஷைத்தான் விழுந்து அந்த நன்மையைத் தடை செய்வானதால் உடனே அந்த நன்மையைச் செய்து முடிக்கவேண்டியது."

ஹிக்காயத்து:—பெரியோர்களில் நின்று மொருவர் பைத்துல் கலா வென்னும் மலங்கழிக்கு மிடத்திலிருக்கும்போது அவர் மனதில் தம் சட்டையை பகீருக்குக் கொடுக்கவேண்டுமென்று எண்ணம் வந்தது. உடனே அவர் தம்முடைய மூரீதைக் கூப்பிட்டுச் சட்டையைக்களைந்து அம்மூரீது வசம் கொடுத்தார். அப்போது அந்த மூரீது அவரை நோக்கி, ஷைக்கே தாங்கள் வெளியில் வருகிறவரையில் பொறுக்காத காரணமென்னவென்று கேட்டதற்கு, அப்பெரியோர் ஒருக்கால் என் மனதில் வேறே எண்ணம் வந்து விழுந்து அந்த நன்மையைத் தடைசெய்யுமென்று நான் பயப்படுகிறேனென்றார்.

இரண்டாவது அதபு:—ஸக்காத்து முழுமையும் கொடுக்க நாடினால் முஹர்ரம் மாதத்தில் கொடுப்பான். ஏனெனில் இது பெருமையுள்ள மாதமாயும் வருஷத்துக்குத் துவக்கமான தாயுமிருக்கிறது. அல்லது றமலான் மாதத்தில் கொடுப்பான். ஏனென்றால் கொடுக்கும் நாள் எவ்வளவு பறக்கத்துள்ளதாயிருக்கிறதோ அவ்வளவு இரட்டிப்பான சவாபு கிடைக்கின்றது. றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பெரிய கொடையாளியாயிருந்தார்கள். தங்கள் கையில் என்ன இருக்கின்றதோ அதைக்கொடுத்து விடுவார்கள். றமலான் மாதத்தில் ஒன்றையும் மீதியாய் வைத்துக்கொள்ளமாட்டார்கள். எல்லாவற்றையும் செலவு செய்து விடுவார்கள்.

மூன்றுவது அதபு:—ஸக்காத்தை பிரஸ்தாபத்தில் கொடாமல் மறைவாய்க் கொடுக்க வேண்டும். இதேனென்றால் ரியாவென்ற புகழாசைக்கு அவன் தூரமாகி, இக்லாஸென்ற கலப்பறுதலுக்கு நெருங்க வேயாம். மறைவான சைறுத்து அல்லாஹ் தஆலாவுடைய கோபத்தைத் தணிக்கிறதென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் கியாமத்து நாளில் ஆறு பேர் அறுஷ்டைய நிழலில் இருப்பார்களென்றும், அவர்களில் ஒருவன் நீதமுள்ள பாதுஷாவென்றும், மற்றொருவன் தன் இடது கைக்குத் தெரியாதபடி வலது கையினால் கைறுத்து கொடுத்தவன் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இந்தக் கொடையின் பதவி எப்படி இருக்கிறது பாருங்கள். நீதமுள்ள பாஷாவின் பதவிக்குச் சரியாய்விட்டது. இன்னும் ஸதகாவை மறைவாய்க் கொடுத்தால் அதை அந்தரங்கமான அமல்களில் எழுதப்படுகிறதென்றும், பிரஸ்தாபத்தில் கொடுத்தால் வெளியரங்கமான அமல்களில் எழுதப்படுகிறதென்றும், நான் இப்படியான நன்மை செய்தேனென்று பிறரிடத்தில் சொன்னால் அதை அந்தரங்கமான தப்தரில் நின்றும் வெளியரங்கமான தப்தரில் நின்றும் அழித்து ரியாவுடைய தப்தரில் எழுதப்படுகிற தென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இதனாலேதான் முன்னுள்ள பெரியோர்கள் தங்கள் கைறுத்தை மறைப்பதற்கு அநேக உபர்யங்களைச் செய்தார்கள். அவர்களில் சிலர் குருடனை பகீரைத் தேடி அவன் கையில் வைத்து விட்டு வாய்பேசாமல் வந்துவிடுவார்கள். இன்னும் சிலர் தூங்குகிற பகீரைத் தேடி அவன் துணியில் முடிந்து விட்டு அவன் விழித்துக் கொள்ளாதபடி சத்தங்காட்டாமல் போய் விடுவார்கள். இன்னும் சிலர் பகீரு வருகிற வழியில் போட்டு விடுவார்கள். இன்னும் சிலர் வக்கீல் வசம் கொடுத்து அவன் மூலமாய் பகீருகளுக்குக் கொடுக்கச் செய்வார்கள். இந்த எல்லா உபாயங்களும் எதற்கென்றால், பகீருகளுக்குக்கூடத் தெரியாம லிருப்பதற்கேயாம். ஆனால் மற்றவர்களுக்குத் தெரியாமலிருப்பதும் அவசியமென்றே எண்ணினார்கள். ஏனென்றால் பிறர் அறியக்கொடுப்பதில் ஈயாமை என்ற ஈனக்குணம் ஒழிந்த போதிலும் மனதில் புகழாசை என்ற புல் மூளைத்தழும்புகின்றது. இந்த இரண்டு குணங்களும் மனிதனை மடிக்கின்றவைகள் தான். ஆயினும் ஈயாக்குணம் தேளைப் போல் அற்ப விஷமுள்ளதாயும், புகழாசையானது பாம்பைப்போல் அதிக விஷமுள்ளதாயு மிருக்கிறது. தேளின் பலத்தை ஒடுக்கி அதைப் பாம்புக்கு இரையாக்கினால் பாம்பின் பலம் அதிகரிக்கின்றது. அப்படியானால் அற்ப விஷத்தை அகற்றி அதிக விஷத்தின் ஆபத்திற் சிக்கினவனாகின்றான். இக்குணங்களின் கடிப்பினாலுண்டான புண்ணானது கபுறில் போகும்போது பாம்பு தேள்களின் கடிப்பாலுண்டாகும் புண்ணைப் போலிருக்கும். இதைக்

குறித்து இஸ்லாமுடைய உன்வானில் கூறப்படுகிறது. ஆதலால் பிரஸ்தாபத்தில் ஸதகா கொடுப்பவனுக் குண்டாகும் நஷ்டமானது லாபத்தைக் காட்டிலும் அதிகமா யிருக்கும்.

நாலாவது அதபு:—ரியாவென்ற புகழாசை யில்லாமல் மனஞ் சுத்தமா யிருந்தால், இன்னும் பிரஸ்தாபமாய்க் கொடுப்பதினால் தன்னைப்பார்த்து மற்றவர்களும் ஸக்காத்து கொடுக்க விரும்புவார்கள் என்று அறிந்தால், இப்படிப்பட்டவன் ஸக்காத்தை பிரஸ்தாபத்தில் கொடுப்பது மேலா யிருக்கும். எவன் புகழையும் இகழையும் சமமாய்க் காண்கின்றானே. இன்னும் எல்லாக் காரியத்திலும் அல்லா அறிந்தால் போதுமென்று நினைக்கிறானே அவனே ரியாவென்ற புகழாசை இல்லாதவனாகுவான்.

ஐந்தாவது அதபு:—தான் உபகாரஞ் செய்ததாய்க் கருதுவதினாலும் நோவிப்பதினாலும் ஸதகாவின் நன்மையைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இப்படியே அல்லாஹ¤ தஆலாவும் திருவுளமாயிருக்கிறான். நோவிப்பதென்பது பகீரைக் கண்டு முகத்தைச் சுழிப்பது, அல்லது அவனை உறுக்கிப் பார்ப்பது, அல்லது அவனைக்கடிந்து பேசுவது, அல்லது அவன் பிச்சை இரப்பதைப்பற்றி அவனைக் கனக்குறைவாய் நினைத்து அவனை இலேசாய்க் காண்பது இவை யாவும் நோவிப்பதேயாம். இதற்குக் காரணம் இருவிதமான மடத்தனமா யிருக்கும். அதிலொரு மடத்தன மென்னவென்றால், தன் கையை விட்டுக் காசைக் கொடுக்க அவனுக்குக் கஷ்டமா யிருக்கும். அதனாலே தான் அவன் மனம் நெருக்குண்டு ஏழையின் மேல் எரிந்து விழுகிறான். ஆயிரம் வாங்குவதற்காக ஒரு திருஹம் கொடுக்க எவனுக்கு மனம் பொருந்தவில்லையோ அவன் மடையனேயாம். மனிதன் தான் கொடுக்கும் ஸக்காத்தினால் மேலான சொர்க்கத்தையும் அல்லாஹ¤ தஆலாவுடைய பொருத்தத்தையும் அடைந்து நரகாக்கினைக்கும் தப்புகிறான். இது உண்மை யென்று இவன் ஈமான் கொண்டிருந்தால் இதைக் கொடுப்பது ஏன் இவனுக்குக் கஷ்டமாகும்? மற்றொரு மடத்தனம் என்னவென்றால் தான் சீமானா யிருப்பதைப் பற்றி தனக்கு ஏழையின்மேல் சிறப்புண்டு என்று நினைக்கின்றான். ஆனால் இவனுக்கு ஐநூறு வருஷத்திற்கு முன்னே எவன் சொர்க்கம் போகின்றானே அவன் இவனிலும் மிகச் சிறந்தவனென்பதையும், இவனிலும் அவன் பதவி அதிக மேலானதென்பதையும், அல்லாஹ¤ தஆலா இடத்தில் ஏழ்மைத் தனத்துக்கே பெருமையுண்டென்பதையும், சீமான் தனத்துக்கு யாதொரு பெருமையில்லை என்பதையும் இவன் அறி

கின்றனில்லே. இவ்வுலகத்தில் ஏழைக்குப் பெருமையுண்டென் பதற்கு அடையாளம் யாதெனில், அல்லாஹ் தஆலா சீமானே தன்யாவுடைய வேலையிலும் பொருளின் கவலையிலும் கஷ்டத்திலும் ஆக்கியிருக்கிறன். இதில் நின்றும் இவனுக்குத் தேவையான அளவே இவன் பங்காயிருக்கிறது. இன்னும் பகீருக்கு வேண்டியவைகளை அவனுக்குச் செலுத்திக்கொண்டிருக்கும்படி சீமானுக்கு ஆக்கியாபித் திருக்கிறன். ஆகவே எதார்த்தத்தில் அல்லாஹ் தஆலா சீமானே இவ் வுலகில் பகீருக்குப் பணிவிடைக்காரனுகவும் அவ்வுலகத்தில் பகீர் சொர்க்கம்போய் ஐனூறு வருஷம் செல்ல எதிர்ப்பார்த்துக் கொண்டிருப் பவனுகவும் செய்திருக்கிறன்.

ஆறுவது அதபு:—ஏழைக்கு ஏதோ கொடுத்ததினுல், தான் அவ னுக்கு உபகாரம் செய்ததாயும் அவன் தனக்கு அடங்கியிருக்க வேண்டு மென்றும் கருதக்கூடாது. இப்படிக் கருதுவதானது பகீரிடத்தில் இவன் வேலைவாங்க ஆசிக்கிறன் என்பதற்கு அடையாளமாகும். அப் படியானுல், பகீர் இவன் பணிவிடையில் ஹாஜிராயிருக்க வேண்டு மென்றும் இவனுக்கு அவன் முதலில் ஸலாம் சொல்ல வேண்டுமென் றும் மரியாதை செய்யவேண்டுமென்றும் இப்படி எது காரியத்திலும் இவனே அவன் அதிகமாய் மதிக்கவேண்டு மென்று ஆதரவு வைக்கின் றன். அந்த பகீர் இவனுக்கு ஏதாவதொரு குற்றம் செய்தால் முன் னிலும் அதிக வியப்படைந்து ஆ! நான் இவனுக்கு உபகாரம் செய் திருக்க இவன் எனக்கு இப்படிச் செய்தான் பாருங்கள் என்கிறன்.

இவை யெல்லாவற்றிற்கும் காரணம் அறிவின்மையேயாம். உண் மையாய்ப்பார்த்தால் பகீருதான் இவனுக்கு உபகாரம் செய்திருக் கிறன். எப்படியென்றுல், இவனுடைய ஸதகாவை அவன் அங்கீ கரித்து இவனே நரகாக்கினியிலிருந்து காப்பாற்றினன், இன்னும் ஈயாக் குணமென்னும் நஜீஸைவிட்டு கல்பைச் சுத்தமாக்கினன். உதாரண மாக இரத்தங்குத்தி எடுப்பவன் இவனிடம் யாதொரு கூலிவாங்காமல் இலவசமாய் இவன் தேகத்தினின்று இரத்தங்குத்தி எடுத்தால் அப் போது இவன் தன்னைக்கொல்வதற் கேதுவாயிருந்த கெட்ட இரத்தத் தை அவன் களைந்தெடுத்தானென்று அகத்தியம் அவன் செய்த உப கார நன்றியை இவன் அறிகின்றன். இதுபோலவே இவன் கல்பி லிருந்த ஈயாக் குணமும் கையிலிருந்த பொருளின் ஸக்காத்தும் இவனை ஹலாக்கு செய்வதற்கும் அசுத்தப் படுத்துவதற்கும் காரணமாயிருந்

தது. பகீரானவன் ஸக்காத்தை அங்கீகரித்ததினுல் இவன் அந்த ஹலாச்சுக்குத் தப்பி அந்த நஜீஸில் நின்றும் சுத்தமாயினன். ஆகவே இவன்தான் அவனின் உபகார நன்றியை அறிய வேண்டும். இதுதவிர ஸதக்காவானது முதலில் அல்லாஹ¤ தஆலாவுடைய கிருபைக்கரத்தில் போகிறதென்றும் அதன் பிறகு பகீருடைய கையில் விழுகிறதென்றும் றசூல் ஸல்லல்லாஹ¤ அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். பின்பு அல்லாஹ¤ தஆலாவுக்குக் கொடுக்கிறதை பகீர் நாயிபாயிருந்து வாங்குகிறனென்றுல் அந்த பகீரு இவனுக்கு உபகாரஞ் செய்ததாய் நினைக்க வேண்டுமே தவிர இவன் அவனுக்கு உபகாரம் செய்ததாய் நினைக்கக் கூடாது. எவன் ஸக்காத்துடைய அந்த மூன்று இரகசியங் களே நோட்டமிட்டு அறிகின்றனே அவன் பகீருக்கு உபகாரம் செய்ததாய்க் கருதுவது மடத்தனமென்று தெரிந்துகொள்வான். முன்னுள்ள பெரியோர்கள் தாங்கள் உபகாரம் செய்ததாய்க் கருதுவதை விட்டுப் பேணுவதற்காக அதிக சிரமம் எடுத்திருக்கிறார்கள். பகீருக்கு முன்னே நின்று தாழ்ச்சியோடு ஸதகாவை அவன் எதிரில் வைத்து இதை என் னில் நின்றும் கபூல் செய்ய வேண்டுமென்று சொல்வார்கள்; இன்னும் சிலர் பகீருடைய கை தங்கள் கைக்குக் கீழாகாதபடி அதை அவன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காசுபணத்தைக் கையில் வைத்த படியே பகீருக்கு எதிரில் நீட்டிக்கொண்டு நிற்பார்கள்.

ஏனென்றுல், اليد العليا خير من اليد السفلى மேல் கையானது கீழ்கையினும் கைறுனது என்ற வாக்கியப்படி தன் கையிலும் பகீரின் கை கைறுனதா யிருக்கவேயாம். எவன் தன்னுடைய உபகாரத்தைக் கருதாமே அவனே இப்படிச் செய்யக் கூடியவனுகின்றன். உம்முல் மூமினீன் ஹலரத்து ஆயிஷா ரலியல்லாஹ¤ அன்ஹாவும் உம்மு ஸல்மா ரலியல்லாஹ¤ அன்ஹாவும் பகீருக்கு ஏதாவது அனுப்பினுல் அதைக்கொண்டு போகிறவர்களிடம் பகீர் என்ன துவாசெய்கிறரோ அதை ஞாபகம் வைத்துக்கொண்டு வரும்படி உத்திரவு செய்கிறவர் களா யிருந்தார்கள். ஒவ்வொரு துவாவுக்கும் பதிலாக அதே துவாச் செய்வார்கள். இதேனென்றுல் தங்கள் ஸதகாவில் பிரதிபிரயோஜனம் கலக்காமல் அது சுயமாயிருக்கவேயாம். தாங்கள் உபகாரஞ் செய்த தாய் பகீர் எண்ணியே துவாச் செய்கின்றனென்றும் தங்கள் ஸதகா வை அவன் அங்கீகரித்ததினுல் அவனே தங்களுக்கு உபகாரம் செய் தானென்றும் இவர்கள் எண்ணியே பகீர் துவா செய்வதை விரும்பா

தவர்களாயிருந்தார்கள். உண்மையில் பகீருதான் உனக்கு உபகாரஞ் செய்தவனுகின்றன். ஏனென்றல் அவன் உன்னுடைய இந்தப் பணி விடையை அங்கீகரித்ததினுலேயாம்.

ஏழாவது அதபு:—தன் சொத்தில் நின்றும் சுயமானதாயும் அதிக நல்லதாயும் ஹலாலானதாயுமிருக்கிற பொருளைக்கொடுக்க வேண்டும். ஏனென்றல், எந்தப்பொருளில் சந்தேகத்துக்கு இட மிருக்கின்றதோ அந்தப்பொருளைக் கொடுப்பதினுல் சவாபுகிடைக் காது. அல்லாஹு தஆலா சுத்தமானவன், சுத்தமானபொருளையே அவன் கபூல் செய்வான். எந்தப்பொருளை நீங்கள் அருவருப்புடன் வாங்குகிறீர்களோ அந்தப்பொருளை அல்லாஹுடைய பாதையில் என் செலவுசெய்கிறீர்கள் என்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கி றன். ஒருவன் தன் வீட்டிலிருக்கிற உணவுப் பொருள்களில் நின்றும் கெட்டப் பொருளை விருந்தாளிக்கு முன்னே வைத்தால் அவன் அந்த விருந்தாளியைக் குறைவாயெண்ணினு னென்றிருக்க, அல்லாஹு தஆலாவுடைய பாதையில் கெட்ட பொருளைக் கொடுத்து அவன் அடிமைகளுக்கு நல்ல பொருளைவைப்பது எப்படி ஆகும். கெட்ட பொருளைகொடுப்பதானது இவன் கொடுக்க பிரியமில்லாதவனென் பதை ரூபிக்கின்றது. எந்த ஸதகா மனப்பிரியமாய்க் கொடுக்கப்பட வில்லையோ அந்த ஸதகா கபூலாகுவது சந்தேகமேயாம். றசூல் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறது யாதெனில், "சில சமயம் ஒரு திருஹமானது ஆயிரம் திருஹங்களைக்காண முந்தவுங் கூடும்; அப்படி முந்துகிற திருஹமானது நல்ல பொருளாயும் மனப் பிரியத்தோடு கொடுப்பதாயு மிருக்கும்" என்பதே.

ஸக்காத்து கொடுப்பதற்காக பகீரைத்தேடுவது.

ஸக்காத்தை முஸ்லிமான எந்த பகீருக்குக் கொடுத்தாலும் பர்லு நிறைவேறிப்போம். என்கினும் ஆகிறத்தின் வர்த்தகம் செய்கிறவன் கொடுப்பதில் கொஞ்சம் பிரயாசை எடுத்துக் கொளவேண்டும். ஸக்காத்தை இடமறிந்து கொடுக்கப்பட்டால் அதன் சவாபு இரட்டிப் பாகின்றது. ஆதலால் பின்வரும் ஐந்து ஸிபத்துகளில் ஏதாவதொரு ஸிபத்துள்ள பகீரைத்தேடி ஸக்காத்து கொடுக்கவேண்டும்.

முதலாவது ஸிபத்து:—அவன் தெண்டிப்பும் பேணுதலுமுள்ள வனுயிருக்கவேண்டும். "நீங்கள் உண்ணக்கொடுக்கும் உணவை பேணு தலுள்ளவர்களுக்குக் கொடுங்கள்" என்று றசூல் ஸல்லல்லாஹு,

அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் யாதெனில், இப்படிப்பட்டவர்கள் தாங்கள் வாங்குகிறதைப் புசித்து அல்லாஹ்வை வணங்குகிறார்கள், கொடுக்கிறவன் அந்த வணக்கத்துடைய சவாபில் கூட்டாகின்றான். ஏனென்றால், அந்த வணக்கத்தில் அவனுக்கு உதவி செய்வதினாலேயாம். நகல் செய்யப்பட்டிருக்கிறதாவது ஒரு ஆலிமானவர் சீமானாயிருந்தார்! அவர் எப்போதும் சூபிகளாகிய பகீருகளுக்கு ஸதகா கொடுக்கிறவராயும் "இந்த பகீருகள் அல்லாஹ் தஆலாவை யன்றி மற்றொன்றை நாடுகிறவர்களல்லவென்றும், இவர்களுக்கு ஏதாவது தேவையாகும்போது அது சிக்காவிட்டால் இவர்கள் சிந்தை சிதறிப்போகுமென்றும், துன்யாவின் தேட்டமுள்ள ஆயிரம் கல்புகளுக்கு உதவி செய்வதைக் காட்டிலும் இப்படியான ஒருகல்பை அல்லாஹ்டைய சன்னதிக்குக்கொண்டு போக நான் ஆசிக்கிறேன்" என்று சொல்லுகிறவராயுமிருந்தார். ஜனங்கள் இந்த சங்கதியை குவாஜா ஜுனைது றஹிமஹுல்லா இடத்தில் சொன்னபோது, அவர் அல்லாஹ்வுடைய வலிமார்களில் சேர்ந்தவராயிருக்கிறாரென்று ஜுனைது றஹிமஹுல்லா சொன்னார்கள். அந்த ஆலிம் முதலில் வர்த்தகராயிருந்தார். அப்போது பகீருகள் தம்மிடம் வாங்கும் சரக்குகளுக்கு கிரயம் கேட்கமாட்டார். இதனால் பின்பு அவர் ஏழையாய்ப்போனார். ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் அவருக்குக் கொஞ்சம் முதல்கொடுத்து உம்மைப்போன்ற மனிதனுக்கு வர்த்தகம் நஷ்டம்தராது. ஆகையால் நீர் மீண்டும் வர்த்தகம் செய்யத்தொடங்குமென்று சொன்னார்கள்.

இரண்டாவது ஸிபத்து:—அவன் தாலிபுல் இல்மாயிருக்க வேண்டும். அவனுக்கு ஸக்காத்து கொடுத்தால் அவன் தன்ஜீவனநிமித்தம் வேறுவேலைகளில் பிரவேசிக்காமல் இல்மைக்கற்க அவனுக்குச் சாவகாசம் கிடைக்கும். கொடுக்கிறவன் அவன் படிக்கும் இல்முடைய சவாபில் கூட்டாகுவான்.

மூன்றாவது ஸிபத்து:—அவன் தன் ஏழ்மைத்தனத்தை மறைத்துக் கௌரவமாயும் அழகாயும் ஜீவனம் செய்கிறவனாயிருக்கவேண்டும். அல்லாஹ் தஆலா அவர்கள் பிச்சையிரக்காதிருப்பதினால் அறிவில்லாதவர்கள் அவர்களைச் சீமான்கள் என்று எண்ணுகிறார்கள் என்பதாய்த் திருவுளமானது இந்த ஜனங்களைக் குறித்தேயாம். இவர்கள் தங்கள் ஏழ்மை என்னும் முகத்தின்மேல் கண்ணியமென்

னும் முகமூடியைப் போர்த்திருக்கிறார்கள். இந்த ஸிபத்துள்ள பகீருக்குக் கொடாமல் பிச்சையிரக்க வெட்கப்படாத பகீருக்குக் கொடுப்பது அழகல்ல.

நான்காவது ஸிபத்து:—அவன் குடும்பஸ்தனுய் அல்லது வியாதியஸ்தனு யிருக்கவேண்டும். ஏனென்றால், மனிதனுக்கு ஹாஜத்தும் வருத்தமும் எவ்வளவு அதிகரித்திருக்கிறதோ அவ்வளவே அவனுக்கு சௌக்கிய ஆரோக்கியத்தைக் கொடுப்பதினுலுண்டாகும் சவாபும் அதிகரிக்கிறது.

ஐந்தாவது சிபத்து:—கொடுப்பவனுக்கு அவர்கள் நெருங்கின பந்துக்களா யிருக்கவேண்டும். ஏனென்றால் இவர்களுக்குக் கொடுப்பது ஸக்காத்துமாகின்றது. பந்துவைச் சேரப்பிடித்த பந்துபாசமுமாகின்றது. அல்லாஹுடைய முஹப்பத்து விஷயமாய்த் தன்னோடு எவன் சினேகிதம் வைத்திருக்கிறனே அவனும் பந்துக்களிற் சேர்ந்தவனுகுவான். ஒருவனில் இந்த எல்லா சிபத்துகளுமாவது அல்லது இவைகளில் மிகுந்த ஸிபத்துகளாவது காணப்பட்டால் அவனே ஸக்காத்து கொடுப்பதற்கு மேலாகுவான்.

மேற்கண்ட சிபத்துகளுள்ளவர்களைத் தேடிக் கொடுப்பானுகில் இவன் விஷயத்தில் அவர்கள் செய்யும் துவாவானது இவனைக் காக்கின்ற கோட்டையாகும். இதுவோ இவன் தன் ஈமானுகுணத்தை நீக்கின பயனுக்கும் அல்லாஹு தஆலா கொடுத்த பாக்கியத்துக்கு ஷுகுறு செய்த பயனுக்கும் வேறுன பயனுயிருக்கிறது.

ஸக்காத்தை செய்யிதுமார்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் இது ஜனங்களுடைய பொருளின் அழுக்கா யிருக்கிறது. ஆதலால் இது அலிறலியல்லாஹு அன்ஹுவுடைய அவுலாதுக்குக் கொடுக்கத் தகுதியுடையதல்ல. இன்னும் காபிர்களுக்கும் கொடுக்கக் கூடாது ஏனென்றால் அவர்களுக்குக் கொடுப்பது (முஸ்லிம்களின் பேரில்) பெரிய கைசேதமும் மிகப் பரிதாபமுமாயிருக்கிறது.

ஸக்காத்து வாங்குகிறவர்கள் அனுசரிக்க வேண்டிய அதபுகள்.

ஸக்காத்து வாங்குகிறவன் ஐந்து விஷயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது விஷயம்:—அவன் தன் மனதில் நினைக்கவேண்டிய தென்னவென்றால், அல்லாஹு தஆலா தன் அடியார்களில் சிலரை ஏழையாய்ப் படைத்தான். சிலருக்குத் திரண்ட திரவியங்களைக் கொடுத்தான். என்றாலும் அவன் யார்மீது அதிகக் கிருபை வைத்

தானே அவர்களே துன்யாவுடைய காரியத்தினின்றும் அதைக் காக்கும் கஷ்டத்தினின்றும் காப்பாற்றினான். துன்யாவுடைய காரியங்களையும் அவற்றைப் பாதுகாக்கும் கஷ்டத்தையும் சீமான்களின் தலையிற் சுமத்தினான். இதுவுந்தவிர தான் அதிகமாய் நேசிக்கிற அடியார்கள் துன்யாவுடைய வேலைகளின் பாரமொழிந்து மனவோர்மையுடன் தன்னை வணங்கிக் கொண்டிருக்க அவர்களுக்குத் தேவையான அளவு பொருள் கொடுத்து வரும்படி அந்த சீமான்களுக்குக் கட்டளை செய்தான். அவர்களுக்கு அவசியமானவை கிடைக்காத நிமித்தம் அவர்கள் மனஞ் சிதறும்போது சீமான்கள் மூலமாய் அவை அவர்களுக்குச் சேரும்படி செய்தான். ஏனென்றால் அவர்களுடைய துவாவின் பறக்கத்து சீமான்களின் அமலுக்குக் கபாராவாகவேயாம். ஆதலால் பகீரானவன் சீமான்களில் நின்றும் ஏதாவது வாங்குகிறபோது இபாதத்தில் மனவோர்மை யுண்டாகும் பொருட்டு எனக்குத் தேவையான வஸ்துக்களின் செலவுக்காக இதை வாங்குகிறேன் என்று நிய்யத்து செய்ய வேண்டும். இன்னும் தான் இபாதத்தில் பராக்கா யிருப்பதற்கே சீமானைத் தனக்குப் பணிவிடை செய்யும்படி ஆக்கினனென்றெண்ணி இப்படி ஆக்கின அல்லாஹ் தஆலாவுடைய உபகாரத்துக்கு நன்றி யறிந்து பகீரானவன் இபாதத்தில் பராக்காயிருக்கவேண்டும். உதாரணமாக, பூலோக அரசர்களின் சொந்தப் பணிவிடைக்காரர்கள் அரசர்களின் பணிவிடையை விட்டு நீங்கி துன்யாவுடைய சம்பாத்தியத்தின் நிமித்தம் வேறு வேலைகளில் பிரவேசிக்க அவ்வரசர்கள் சம்மதிக்கிறார்களில்லை. மேலும் அவ்வரசர்கள் தங்கள் பணிவிடைக்கு லாயக்கில்லாத குடியானவர்களையும், பாஸாரிகளையும் தங்கள் பணிவிடைக்காரர்களுக்கு வேலைக்காரர்களாக்கி அவர்களிடம் தீர்வை வரி முதலிய அரசியல் வாங்கி அதனால் தங்கள் பணிவிடைக் காரர்களுக்கு ஜீவனஞ் சம் கொடுக்கிறார்கள். எப்படி இந்தச் சொந்த பணிவிடைக் காரர்களிடம் வேலைவாங்குவது அரசர்களின் கருத்தோ அப்படியே எல்லா அடியார்களும் தனக்கு வணங்கவேண்டு மென்பது அல்லாஹ் தஆலாவின் நாட்டமா யிருக்கிறது. இதனால் ஜின்னையும் மனுவையும் என்னை வணங்குவதற்கே படைத்தேன் என்று திருவுளமாயிருக்கிறான். ஆகையால் பகீரானவன் வணக்கத்தின் நிய்யத்தைக் கொண்டே வாங்கவேண்டும். இன்னும் வாங்குகிறவன் தன் ஹாஜத்துக்காக வாங்கியிருந்தால், கொடுக்கிறவன் வாங்குகிறவனுக்கு மேல் வரிசையுடையவனல்ல வென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இபாதத்தில் மனவோர்மையுண்டாகும் பொருட்டு வாங்குகிற பகீருதான் இந்த ஹதீதில் குறித்த வனுகுவான்.

இரண்டாவது விஷயம்:—தான் வாங்குகிறதை அல்லாஹு தஆலாவில் நின்றும் வாங்கினதாக எண்ணவேண்டும். இன்னும் காசு கொடுக்கும்படி சீமான்களை வசப்படுத்தினு னென்றும், அப்படி வசப் படுவதற்கு அவர்கள் மேல் ஒரு முவக்கலைச் சாட்டினுனென்றும் அறியவேண்டியது. கொடையினுல் மனிதனுக்கு ஈடேற்றமும் சீர் வதித்தனமும் உண்டாகுமென்று அவர்கள் விசுவாசிக்கிற ஈமானே அவர்கள்மேல் சாட்டப்பட்ட முவக்கலாயிருக்கிறது. இந்த முவக்கல் இல்லாவிட்டால் அவன் ஒருவருக்கும் ஒரு காசுகூட கொடுக்கமாட் டான். ஆதலால் இந்த உபகாரமானது சீமானுடன் முவக்கலைச் சாட் டின அல்லாஹு தஆலாவின் உபகாரமா யிருக்கும், என்கினும் தனக்கும் அல்லாவுக்கும் நடுவே நின்றவன் சீமானு யிருக்கிறன். அவன் மூலமாய்த் தனக்கு உபகாரம் செய்யப்பட்ட தாகையால் பகீரு அந்தச் சீமானின் நன்றியறியவேண்டும். ஏனென்றுல், எவன் ஜனங் களின் நன்றியறிய வில்லையோ அவன் அல்லாவின் நன்றியறியவில்லை யென்று ஹதீதில் வந்திருக்கிறது. அல்லாஹு தஆலா அடியார்க ளுடைய செயல்களைத் தானே படைக்கிறவனு யிருந்தும் அவர்களின் செயலைப்பற்றி அவர்களின் நன்றியறிந்து புகழ்ந்திருக்கிறன். அதைப் படி யென்றுல், அடியார்களில் நல்லவர் அவர் தவுபாசெய்கிறவர் என்றும் அவர் உண்மையுள்ள நபியாயிருந்தாரென்றும் திருவுளமா யிருக்கிறன். இப்படியான வாக்கியங்கள் இன்னுமிருக்கின்றன. அல்லாஹு தஆலா எவனை நன்மைக்கு நடுவாக்கி வைத்தானே அவன் அல்லாவுக்குப் பிரீதியுள்ளவனு யிருக்கிறன். எப்படி யென்றுல் "நான் எவனை நன் மைக்காகப் படைத்து நன்மை செய்ய அவனுக்கு சுளுவாக்கினேனே அவனுக்கே சோபனம்" என்று அல்லாஹு தஆலா ஹதீது குதுசியில் திருவுளமானுன். ஆதலால் அவனுடைய பிரீதியுள்ள அடியார்களின் பெருமையை அறிவது அவசியமாயிற்று. நன்றியறிதல் என்பதின் பொருள் இதுவேயாம். இன்னும் அவனுக்காக

طهر الله قلبك في قلوب الابرار ٠ وزكى امرك في عمل الاخيار
وصلى على روحك في ارواح الشهداء

தஹ்ஹ றல்லாஹு கல்பக்க பீகுலூபில் அப்ரார். வஸக்கா அம் ரகபீ அமலில் அக்யார் வஸல்லா அலாறூஹிக பீ அர்வாஹிஷ்ஷு ஹதாஇ என்று துவா செய்யவேண்டும். எவன் உங்களுக்கு நன்றி செய்தானே அவனுக்கு பதில் செய்யுங்களென்றும், அப்படிச் செய்ய

முடியாவிட்டால் பதில் பூர்த்தியாய்விட்டதென்று உங்கள் மனம் சாக்ஷி கூறுமளவு அவனுக்கு துவா செய்யுங்களென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இனி கொடுப்பது அதிகமாயிருந்தாலும் அதை அற்பமாயெண்ணுவதும், வாங்குகிறவன்மேல் பெருமையடிக்காதிருப்பதும் எப்படி கொடுப்பவன்மேல் விதியோ அப்படியே வாங்குகிறவன் ஸதகாவின் ஐபை (குறைவை) மறைப்பதும், கொஞ்சத்தைக் கொஞ்சமாயெண்ணுதிருப்பதும் இலேசாய்க் காணுதிருப்பதும் பூர்த்தியான நன்றியறிதலாம்.

மூன்றுவது விஷயம்:—ஹலாலான சம்பாத்திய மல்லாததை வாங்கக்கூடாது. அக்கிரமக்காரன், வட்டி வாங்குகிறவன் இவர்களின் பொருளை வாங்கக்கூடாது.

நான்காவது விஷயம்:—எவ்வளவு தேவையோ அவ்வளவே வாங்கவேண்டும். ஸபர் போவதற்கு வாங்கினால் வழியின் உணவுக்கும் ஏறிப்போகும் சவாரிக்கும் வேண்டிய செலவுக்குமேல் அதிகமாய்வாங்கக்கூடாது. கடனாளியாயிருந்தால் கடனுக்குமேல் அதிகமாய் வாங்கக்கூடாது. மனிஷி மக்களின் ஜீவனத்துக்குப் பத்து திருஹம் போதுமாயிருந்தால் பதினொரு திருஹம் வாங்கக் கூடாது. ஏனென்றால் தேவைக்குமேல் அதிகமான அந்த ஒரு திருஹம் ஹறாமாகும். வீட்டில் தேவைக்குமேல் அதிகமாயாதொரு சாமானுவது, புடவையாவது, வைத்திருக்கிறவன் ஸக்காத்து வாங்கக்கூடாது.

ஐந்தாவது விஷயம்:—ஸக்காத்து கொடுக்கிறவன் ஆலிமாயில்லாவிட்டால் அவனிடத்தில் நீ கொடுக்கிறது எந்த வகையாருடைய பங்கு? உவமையில், மிஸ்கீன்களுடைய பங்கா? அல்லது கடனாளிகளுடைய பங்கா? என்று கேட்க வேண்டும். அவன் எந்த வகையாருடைய பங்கென்று சொல்லுகிறானே அந்த வகையாரில், தான் சேர்ந்தவனாயிருந்தால் அதை வாங்குவான். அப்படி வாங்குவதிலும் மொத்த ஸக்காத்தின் எட்டிலொரு பாகம் வாங்கக்கூடாது. ஏனென்றால் ஷாபியீ மத்ஹபில் ஸக்காத்தின் எட்டிலொரு பாகத்தைக் குறைந்த பக்ஷம் மூன்று பேருக்குக் கொடுக்க வேண்டும். முழுமையும் ஒருவனுக்குக் கொடுக்கக் கூடாது.

கைமாறுத்துடையவும் ஸதகாவுடையவுமான வரிசை.

றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறதென்ன வென்றால், ஸதகா கொடுங்கள்; ஒரு காய்ந்த பேரீத்தம்

பழத்தைக் கொண்டானலுஞ்சரி, ஏனென்றால் அது பகீருக்கு பலத்தைக்கொடுக்கின்றது. இன்னும் தண்ணீரானது நெருப்பைக்கொல்லுகிறதுபோல் அது பாவத்தைக் கொல்லுகிறது என்பதே. இன்னும் நரகத்தை விட்டுத் தப்பிக்கொள்ளுங்கள். காய்ந்த அரை பேரீத்தம் பழத்தைக்கொண்டானலுஞ் சரி இதுவுங் கூடாவிட்டால் ஒரு நல்ல பேச்சைக் கொண்டானலுஞ் சரியென்று திருவுளமானார்கள். இன்னும் யாரவதொரு முஸ்லிமானவன் ஹலாலான பொருளைக்கொண்டு ஸதகாகொடுத்தால் நீங்கள் ஒரு விலங்கினத்தை வைத்து வளர்ப்பது போல் அல்லாஹு தஆலா அந்த ஸதகாவைத் தன் கிருபைக்காத்தினல் வளர்க்கிறான் என்றும், அப்படி வளர்க்கப்படும் சில பேரீத்தம் பழங்கள் உஹதுமலைக்குச் சரியாய்ப்போகின்றன வென்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் கியாமத்துநாளில் கல்குகளில் கணக்கு நீருகிறவரையில் ஒவ்வொருவனும் தன் கைறுத்துடைய நிழலிலிருப்பான் என்று திருவுளமானார்கள். இன்னும் ஸதகாவானது தீமையுடைய வாசல்களில் நின்றும் எழுபது வாசல்களை அடைக்கின்றதென்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமிடத்தில் எந்த ஸதகா மிக நலவானதாயிருக்குமென்று கேட்டபோது நீ தன் தேக சவுக்கியத்தில் ஜீவிப்பை ஆதாவு வைக்கிறபோதும், மிடிமையின் பயமில்லாத போதும், கொடுக்கிற ஸதகா மிக நலவான ஸதகாவென்றும், அப்படிக் கில்லாமல் உயிர் தொண்டையில் வருமளவும் சும்மா இருந்துவிட்டுப் பின்பு இவனுக்கு இதைக்கொடுங்கள் அவனுக்கு அதைக்கொடுங்களென்று சொல்வதல்ல வென்றும் இப்படி நீ வஸீயத்து செய்தாலும் செய்யாவிட்டாலும் அது அவர்களுக்கு சேருமென்றும் திருவுளமானார்கள். இன்னும் ஒருவன் தன் வாசலில் நின்று இரப்பவனுக்கு ஒன்றுங்கொடுக்காமல் சும்மா அனுப்பிவிடுவானுகில் எழுநாள்வரையில் அவன் வீட்டில் மலக்குகள் வரமாட்டார்களென்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இரண்டு காரியங்களை வேறொருவர் வசம் சாட்டாமல் தங்கள் திருக்கையினல் செய்வார்கள். அவையாவன:—ஸதகாவைத் தங்கள் கையினல் பகீருக்கு கொடுப்பார்கள். ஒலுவின் தண்ணீரை இரவில் தங்கள் கையினல் மூடி பத்திரப்படுத்துவார்கள். இன்னும் ஒருவன் ஒருமுஸ்லிமுக்கு உடுக்கப்பிடவை கொடுப்பானுகில் அந்த பிடவை அவன் தேகத்தின் மேலிருக்கிறவரையில் கொடுத்தவன் அல்லாஹு தஆலாவுடைய

காவலில் இருப்பானென்று றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஐம்பதினாயிரம் திருஹம் கைரூத்து கொடுத்தார்கள்; அம்மாளவர்களின் சட்டையிலோ அப்புகள் போட்டிருந்தன. தங்களுக்காக புதிதாய் ஒரு சட்டையும் தைக்கச்சொல்லவில்லை. இன்னும் இப்னு மஸ்வூது றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறதாவது:—ஒருவன் எழுபது வருஷம் இபாதத்துச் செய்தான். அவனால் ஒரு பெரும்பாவம் நடந்துவிட்டது. அவன் செய்த இபாதத்து முழுமையும் அழிந்து போயிற்று. பிறகு அவன் ஒரு பகீரிடம் போக நேரிட்டு அந்த பகீருக்கு ஒரு ரொட்டியை கொடுத்தான். அதனால் அவன் பாவம் மன்னிக்கப்பட்டு எழுபது வருஷம் இபாதத்தின் பலனும் திரும்ப அவனுக்குக் கிடைத்தது என்பதே. இன்னும் லுக்மான் ஹக்கீம் தங்கள் மகனை நோக்கி மகனே! உன்னால் ஏதாவதொரு பாவம் சம்பவித்தால் நீ ஸதகாகொடு என்று சொன்னார்கள். அப்துல்லா ஹிபுனு உமர் றலியல்லாஹு அன்ஹுமா மிகுதமாய் சர்க்கரையை கைரூத்து செய்வார்கள். அது விஷயமாய் அவர்கள் சொல்லுகிறதாவது:—"நீங்கள் பிரியப்படுகிற வஸ்துவில் நின்றும் நீங்கள் கைரூத்து செய்யாதவரையில் நீங்கள் ஒருபோதும் நன்மையைப் பெற மாட்டீர்கள்" என்று அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறான். நான் சர்க்கரையைப் பிரியமாய்த் தின்பதை அல்லாஹு தஆலா அறிந்தவனாயிருக்கிறான் என்பதே. இன்னும் பகீரானவன் ஸதகாவுக்கு எவ்வளவு ஹாஜத்துள்ளவனாயிருக்கிறானே அதைக்காண ஸதகாவின் சவாபுக்கு அதிக ஹாஜத்துள்ளவனைத் தன்னைக் காணுதவரையில் அந்த ஸதகா கபூல் செய்யப்படாதென்று ஷபீயீ என்பார்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அடிமைவிற்கும் ஒரு வர்த்தகன் அழகிய ஓடிமைப்பெண்ணை விற்க விலை கூறிக்கொண்டிருக்க, ஹஸன் பஸரீ றஹிமஹுல்லாஹ்வும் இவளை இரண்டு திருஹத்துக்குக் கொடுப்பாயா என்று கேட்டார்கள். அதற்கவன் கொடுக்கமாட்டேனென்றான். அப்போது ஹஸன்பஸரீ றஹிமஹுல்லா அவ்வர்த்தகனை விளித்து போ! போ!! இவளினும் அழகான சொர்க்கத்து ஹூரை அல்லாஹு தஆலா இரண்டு தானிய மணிக்கு விற்கிறான் என்றார்கள். அதாவது ஸதகாவுக்கு பதிலாய்க் கொடுக்கிறான் என்பதேயாம்.

ஆறுவது அஸ்லு

நோன்பின் பயான்.

அருமையானவனே! அறிந்துக்கொள், நோன்பாகிறது இஸ்லாமுடைய றுகுனுகளில் ஒரு றுகுனுயிருக்கிறது. எல்லா நன்மைக்கும் பிரத்தியாகப் பத்துமுதல் ஏழுவரையில் கூலி கொடுக்கிறேனென்றும், ஆனல் நோன்பானது எனக்குச் சொந்தமாகையால் அதன் கூலி என்பேரிலாயிருக்கிற தென்றும், அல்லாஹு தஆலா கூறியதாய் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் இச்சைகளை அனுபவிக்காமல் ஸபுரு செய்பவர்களின் கூலி யெண்ணிறந்ததா யிருக்கிற தென்று அல்லாஹு தஆலா திருவுளமா யிருக்கிறன். இன்னும் ஸபுருனது ஈமானில் பாதி பாகமென்றும் நோன்பானது ஸபுறில் பாதி பாகமென்றும் இன்னும் நோன்பாளி யுடைய வாயின் வாடையானது அல்லாஹு தஆலா விடத்தில் கஸ்தூரியினும் அதிக மேலான தென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் என்னுடைய அடியான் எனக்காக உண்ணல், குடித்தல், போகஞ் செய்தல் இவைகளை விட்டு விட்டானுகில் அவனின் கூலி நான் கொடுப்பேனென்று அல்லாஹு தஆலா சொல்லி யிருக்கிறதாய் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் நோன்பாளி நித்திரை செய்வது இபாதத்தென்றும், அவன் மூச்சு வாங்குவது தஸ்பீஹென்றும், அவன் துவா செய்வது கபூல் செய்யப்படுவ தென்றும், இன்னும் றமலான் மாதம் வருகிறபோது சொர்க்க வாசல்களைத் திறந்து நரக வாசல்களை அடைத்து ஷைத்தான்களைச் சிறையில் வைக்கப்படுகிற தென்றும், இன்னும் ஒரு மலக்கு சத்தமிட்டு ஓ நன்மையைத் தேடுகிறவனே! சிக்கிரம்வா, இது உன் நேரமா யிருக்கிறது. ஓ தீமையைத் தேடுகிறவனே! நீ விலகி நில், இது உன் தலமல்ல வென்று கூவிச் சொல்லுகிறார் என்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

எல்லா இபாதத்துகளும் அல்லாஹு தஆலாவுக்கே உடைய தாயிருந்தும் நோன்பை மாத்திரம் தன்பக்கம் சேர்த்து நோன்பு எனக்குடையதென்றும் அதற்கு நான் கூலி கொடுப்பேன் என்றும், அல்

லாஹு தஆலா சொன்னதானது நோன்பின் பெருமையைக் குறிக்கின்றது. இது சர்வலோகமும் அல்லாஹு தஆலா உடைய ஆதீனமாயிருந்தும் கஃபாவைத் தன் வீடென்று சொன்னது போலாகின்றது. நோன்புக்கு இரண்டு குணங்களிருக்கின்றன. அந்தக் குணங்களால் அல்லாஹு தஆலா அதைத்தன் பக்கம் சேர்க்க அது பாத்தியம் பெற்றது. முதலாவது குணம்:—நோன்பென்பது உண்ணல் குடித்தல் போகஞ் செய்தல் இவைகளை விட்டுச் சும்மா இருப்பதாம். இதுவோ மறைவானதாயும் ஜனங்களுடைய பார்வைக்குத் தெரியாததாயு மிருக்கிறது. இதில் ரியாவென்ற புகழாசை நுழைய விடமில்லை. இரண்டாவது குணம் இபுலீஸானவன் அல்லாஹு தஆலாவுக்குப் பகைவனாயிருக்கிறான். இச்சைகளானவை அவனின் சேனைகளாயிருக்கின்றன. நோன்பானது அந்தச் சேனைகளை முறியடிக்கின்றது. எனென்றால் இச்சைகளை விடுவதே நோன்பென்பதற்குப் பொருளாயிருக்கின்றது. இதனாலேதான் சரீரத்தில் ரத்தம் செல்லுவது போல் மனிதனுடைய உள்ளத்தில் ஷைத்தான் செல்லுகிறானென்றும், பசியினால் அவன் செல்லும் வழியை நெருக்க மாக்குங்களென்றும், இன்னும் நோன்பானது கேடயமாயிருக்கிறதென்றும், நஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கின்றார்கள். இன்னும் சொர்க்க வாசலின் கதவைத் தட்டிக் கொண்டிருங்கள் என்று ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா சொல்லியிருக்கிறார்கள். சொர்க்க வாசலை எதனால் தட்டுவதென்று கேட்டதற்குப் பசியினால் என்று அம்மாள் அவர்கள் விடையளித்தார்கள். இன்னும் நோன்பானது எல்லா இபாதத்துகளுக்கும் தலைவாசலாயிருக்கிறதென்று நஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், இச்சைகளானவை மனிதனை இபாதத்து செய்ய வொட்டாமல் தடுக்கின்றன; பசியில்லாமல் திருப்தியாயிருப்பது அந்த இச்சைகளுக்கு உதவியாகின்றது; பசியோ இச்சைகளை முறிக்கின்றது என்பதே.

நோன்பின் பாலுகள்

நோன்பில் ஆறு பாலுகளுண்டு. முதலாவது பாலு:—றமலானுடைய பிறையைத் தேடுவது. இது நாட்கள் இருபத்தொன்பதா அல்லது முப்பதா என்றறிவதற்காயிருக்கும். இது விஷயத்தில் நீதி மானுகிய ஒருவனுடைய சாக்ஷியத்தை நம்பலாம். ஈதுக்காக இரண்டு சாக்ஷிகளுக்குக் குறைந்தால் கூடாது. ஒருவன் எவனை மெய்யனென்று நம்புகிறானோ அவன் பிறைகண்டதாய்க் சொல்லக் கேட்டால் இவன் மேல் நோன்பு விதியாகும். காலியானவர் அவன் சொல்லின் மேல்

நோன்பு வைக்கக்கூடாமை பிறப்பிக்கவில்லை யாதொருஞ்சரி. ஒரு ஊருக்குப்பதினாறு கோஸ் தூரத்திலுள்ள மற்றொரு ஊரில் பிறை கண்டால் இந்த ஊரிலுள்ளவர்கள்மேல் நோன்பு *விதியாகாது. பதினாறு கோஸுக்குக் குறைந்த தூரத்திலுள்ள ஊரில் கண்டால் இந்த ஊரிலும் விதியாகும்.

இரண்டாவது பர்லு:—நிய்யத்தாயிருக்கும். இரவிலேயே ↑நிய்யத்து செய்யவேண்டும். இது றமலானுடைய பர்லான அதா நோன்பென்று நினைவு வைக்கவேண்டும். எந்த முஸ்லிம் இதை நினைவில் வைப்பானோ அவன்மனம் நிய்யத்தை விட்டொழியாது. ஷக்குடைய இரவில் ஒருவன் நாளைக்கு றமலானுயிருந்தால் நான் நோன்பு வைக்கிறேனென்று நிய்யத்து செய்தால் அது றமலானுயிருந்தாலும் நம்புதலுள்ள ஒருவன் சொல்லிக்கொண்டு சந்தேகம் நிவர்த்தியாகிற வரையில் இந்த நிய்யத்து கூடாது. கடைசி இரவில் சந்தேக மிருந்தாலும் நிய்யத்து கூடும். ஏனென்றால் அப்போதும் றமலான் செல்லவில்லையென்பது அதற்கு மூலமாயிருக்கிறது. ஒருவன் இருட்டான இடத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறான். அவன் தன் யோசனையினால் ஆராய்ந்து நேரத்தைக் குறிப்பிட்டு அதன்மேல் நிய்யத்து செய்தால் கூடும். நிய்யத்து செய்தபிறகு இரவில் யாதொன்றைத் தின்றால் நிய்யத்து முறியாது. மேலும் பெண்பிள்ளை தனக்கு ஹைலு நின்றபோகுமென்றெண்ணி நோன்பை நிய்யத்து செய்து அவள் எண்ணப்படியே நின்றுபோனால் நோன்பு கூடும்.

மூன்றாவது பர்லு:—ஞாபகத்துடன் வெளியில் நின்றும் ஒரு வஸ்துவை உள்ளே செலுத்தாமலிருப்பது. ஆனால் இரத்தங்கலாவதும், ஹஜ்ஜாமத்து (சூஷவரம்) செய்விப்பதும், கண்களில் சுர்மா தீட்டுவதும், காதில் குச்சியை நுழைப்பதும், கோசத்தின் துவாரத்தில் பஞ்சு வைப்தும், நோன்புக்குக் கெடுதியாகாது. ஏனென்றால் உள்ளே என்பதின் கருத்து தலைமூளை, வயிறு, இரைப்பை, நீர்ப்பை இவைகள்போல் நிலைக்கள மென்பதாயிருக்கும். நாட்டமின்றி யாதொருவஸ்து உள்ளே சென்றால் உதாரணமாக ஈயாவது புழுதியாவது வாய்கொப்பளிக்கும் நீராவது தொண்டைக்குள் சென்றால் நோன்புக்கு யாதொரு நஷ்டமில்லை. என்கினும் வாய்க்கொப்பளிப்பதில் வரம்பு கடந்து தண்ணீரைத் தொண்டை மட்டும் செலுத்தினால் நோன்பு முறிந்துபோம். ஞாபகமில்லாமல், யாதொன்றைத்தின்றால் நோன்புக்குக் கெடுதியில்லை.

---

*ஹனபி மதுஹபில் மஷ்ரிகிலுள்ளவர்கள் பிறைகண்டால் மக்ரிபில் உள்ளவர்கள் பேரிலும் நோன்பு விதியாகும்.

↑ஹனபி மதுஹபில் ஷரா அரைப்பகல் வரையில் நிய்யத்து செய்வதாகும்.

இரவிருக்கிறதென்று அல்லது சூரியன் அஸ்தமித்ததென்று எண்ணி யாதொன்றைத்தின்ற பிறகு ஸுபுஹுக்குப் பின்னே அல்லது அஸ்த மானதுக்கு முன்னே தின்றதாய்த் தெரியவந்தால் அந்த நோன்பை கலா செய்ய வேண்டும்.

நான்காவது பர்லு:—பெண்ஜாதியுடன் ஜிமாஉ செய்யாமலிருப் பது. முழுக்கு விதிக்கிற விதமாய் அவளிடம் நெருங்கினால் நோன்பு முறிந்துபோம். இரவில் ஜிமாஉ செய்து ஸுபுஹு நேரமான பிறகு குளித்தால் ஆகும்.

ஐந்தாவது பர்லு:—எவ்விதத்தினாலாவது மணி வெளிப்பட நாடா மலிருப்பது. ஒருவன் தன் பெண்ஜாதியினிடம் ஜிமாஉடைய விதமாயல் லாமல் வேறு விதமாய் நெருங்கினான். அவளே வாலிபனு யிருக்கிறான். அவனுக்கு விந்து ஸ்கலிதமாகு மென்கிற அச்சமு மிருக்கிறது; இப் படியா இருப்பதில் மணிஸ்கலிதமாய்ப் போனால் நோன்பு முறிந்து போம்.

ஆறுவது பர்லு:—வேண்டுமென்று வாந்தி பண்ணுமலிருப்பது. தன்னே மீறி வாந்தி வந்தால் நோன்பு முறியாது. ஜலதோஷத்தினு லாவது வேறு காரணத்தினாலாவது சளியைக்காறி உமிழ்ந்து விட்டால் நோன்புக்குக் கெடுதியில்லே. ஏனென்றால் இதை விட்டுக்காப்பது கஷ் டம். ஆனால் வாயில் வந்த சளியை பிறகு விழுங்கிவிட்டால் நோன்பு முறிந்துபோகும்.

நோன்பின் சுன்னத்துகள் ஆறுண்டு.

அவை:—தாமதப்படுத்தி ஸஹர் செய்வதும், பேரீத்தம் பழம் அல்லது தண்ணீரைக்கொண்டு சிக்கிரத்தில் நோன்பு திறப்பதும், ஜவால் நேரத்துக்குப் பிறகு மிஸ்வாக்கு செய்யாதிருப்பதும் *பகீ ருக்கு உண்க வஜீபனம் கொடுப்பதும், குர்ஆனே அதிகமாய் ஓது வதும், பள்ளிவாசலில் இஃதிகாபு இருப்பதுமாம். சொந்தமாக ஆலத்தில் கதறுவருகிற பிந்தின பத்தில் இஃதிகாபு இருக்க வேண் டும். நபிமல் ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லமவர்கள் இந்தப் பத்தில் சுகத்தையும் நித்திரையையும் விட்டுத் தாங்களும் தங்கள் அஹலுபைத்தகளும் கொஞ்ச நேரமாவது இளைப்பாறுமல் எந்நேர மும் இபாதத்தில் பாக்கா யிருப்பார்கள். ஆலத்தில் கதறுனது இரு பத்தொன்று அல்லது இருபத்தி மூன்று அல்லது இருபத்தைந்து அல்லது இருபத்தேழு இந்த இரவுகளில் ஒன்றாயிருக்கும். பெரும்

*ஹனபி மதுஹபில் ஜவால் நேரத்துக்கு முந்தியும் அதற்குப் பிந்தி யும் மிஸ்வாக்கு செய்வது ஆகும்.

பாலும் அது இருபத்தேழாம் இரவில் வருகின்றது. ஆதலால் இந்தப் பத்தில் இடைவிடாமல் இஃதிகாபிருப்பது அதிக மேலாயிருக்கும். நேர்ந்து கொண்டால் இஃதிகாபு விதியாய்ப்போம். அவன் மலஜலங் கழிப்பதற்கன்றி பள்ளிவாசலை விட்டு வெளியில் வரக்கூடாது. ஒலு செய்கிற நேரத்துக்குமேல் அதிகமாய் வீட்டில் தங்கக்கூடாது. ஜனஸா தொழுகைக்காவது நோயாளியை விசாரிப்பதற்காவது சாக்ஷி சொல்வதற்காவது ஒலுவைப் பதிப்பிக்கவாவது வெளியில் வந்தால் இஃதிகாபு முறியாது. அவன் பள்ளிவாசலில் கைகழுவுவதும், உணவு உண்பதும், நித்திரை செய்வதும் ஆகும். மலங்கழிக்க வெளியே போய் வந்தால் நிய்யத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

நோன்பின் ஹகீகத்து அல்லது உயிர்.

அருமையானவனே! அறிந்துக்கொள். நோன்பானது அவாம்களுடைய நோன்பென்றும் காவாஸ்ஸுகளுடைய நோன்பென்றும் காஸ்ஸுல் காவாஸ்ஸுகளுடைய நோன்பென்றும் மூன்று வகுப்பாயிருக்கிறது, அவாம்களுடைய நோன்பென்பது மேற்கூறியதாயிருக்கும். உண்ணல் குடித்தல் போகித்தல் இவைகளை விட்டு நீங்கியிருப்பதே இதன் பூர்த்தியாம். இது தாழ்ந்த வகுப்பான நோன்பு. காஸ்ஸுல் காவாஸ்ஸுகளுடைய நோன்போ எல்லாவற்றிற்கும் உயர்ந்த வகுப்பானது. அது யாதெனில்:—மனிதன் அல்லாவுடைய நினைவு தவிர மற்றவைகளின் நினைவைவிட்டுத் தன் மனதைக்காப்பதாம். அதாவது:—முழுமையும் தன்னை அல்லாஹ்வின் வசம் சாட்டுவதும் அவனையன்றி மற்றவைகளைவிட்டு அகத்தாலும் புறத்தாலும் நீங்கியிருப்பதுமாம். அல்லாவுடைய திக்ரும் அதற்குச் சம்பந்தமான வைகளும் தவிர வேறே விஷயங்களை தியானித்தால் இந்தநோன்பு முறிந்துபோகும். துன்யா சம்பந்தமான விஷயங்களை நினைப்பது ஆகுமென்றாலும் அது இந்த நோன்பை முறிக்கும். ஆயினும் தீனுடைய வழிக்கு உதவியாகிற துன்யாவின் விஷயம் துன்யாவைச்சேர்ந்ததல்ல. மனிதன் நோன்பு திறக்க என்ன செய்வதென்று பகலில் அதற்காக முயற்சிப்பானாகில் அதை அவன்மேல் குற்றமாக எழுதப்படுமென்றும் அதேனென்றால் அல்லாஹ் தஆலா ரிஸ்கு விஷயமாய் அளித்திருக்கும் வாக்கின் மேல் அவனுக்கு முழுநம்பிக்கை இல்லாததாலென்றும் உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள். இது அன்பியாக்களுடையவும் ஸித்தீகுகளுடையவுமான வகுப்பாயிருக்கும். ஒவ்வொருவனும் இந்த வகுப்புக்குச் செல்லமாட்டான். கவாஸ்ஸுகளுடைய நோன்பின் பூர்த்தி யாதெனில் மனிதன் தகாச்செயல்களைச் செய்யாமல் தன் எல்லா உறுப்புகளையும் காப்பதாயிருக்கும். உண்ணல், குடித்தல், போகித்தல் இவைகளை மாத்திரம் விடுவதென்பதல்ல. இந்த நோன்பு ஆறு காரியங்களைக்கொண்டு பூர்த்தியாகின்றது.

முதலாவது:—அல்லாஹ்வுடைய தஆலாவின் பக்கத்தை விட்டு கல்பைத் திருப்புகிறவைகளைப் பார்க்காதபடி கண்ணைக்காப்பதாம். அதிலும் இச்சையை எழுப்புகிற வஸ்துக்களை நோக்காதபடி காக்க வேண்டும். ஏனென்றால் கண் பார்வையானது இபுலீஸுடைய அம்புகளில் நின்றும் நஞ்சூட்டிய ஒரு அம்பாயிருக்கிறதென்றும், எவன் அல்லாஹ்வுடைய பயத்துக்காக அதைக் காப்பானோ அவனுக்கு ஈமான் என்னும் பரிவட்டங்கொடுக்கப்படுமென்றும், அதன் இன்பத்தை அவன் தன் கல்பில் பெற்றுக்கொள்வானென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் பொய், புறம், கோள் பொய்ச்சத்தியம், தர்ப்பார்வை இவை ஐந்தும் நோன்பை முறிக்கின்றனவென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானதாக அனஸ் றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது:—வீண்பேச்சு, வேண்டாத வார்த்தை இவைகளை விட்டு நாவைக்காப்பதாம். அல்லாஹ்வுடைய திக்ரிலும், குர்ஆன் ஓதுவதிலும் பராக்காகவேண்டும். அல்லது பேசாமல் சும்மா இருக்கவேண்டும். தர்க்கிப்பதும் வாதிப்பதும் வீண்பேச்சிற் சேர்ந்ததாயிருக்கும். என்கினும் சில உலமாக்களுடைய மத்ஹபில் பொய் பேசலும் புறங்கூறலும் அவாம்களுடைய நோன்பையும் முறிக்கும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய காலத்தில் நோன்பு வைத்துக் கொண்டிருந்த இரண்டு பெண்பிள்ளைகள் பொறுக்கமுடியாத தாகத்தினால் சாகுந்தருவாயிலானபோது அவர்கள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமுகம் வந்து நோன்பை விட்டுவிட உத்திரவு கேட்டார்கள். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்தப் பெண்பிள்ளைகளை சத்தி எடுக்கும்படி அவர்களிடம் ஒரு பாத்திரத்தை அனுப்பினார்கள். அவர்கள் சத்தி எடுத்தபோது அவர்களில் ஒவ்வொருவருடைய தொண்டையிலிருந்து கட்டியான உறைந்த இரத்தம் வெளிப்பட்டது. ஜனங்கள் இதைப்பார்த்து திகைப்படைந்தார்கள். அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானதாவது:—அல்லாஹ்வுடைய தஆலா ஹலாலாக்கி வைத்த பொருளைக்கொண்டு இவர்கள் நோன்புவைத்து அவன் ஹறாமாக்கின பொருளால் நோன்பு திறந்தார்கள். அதாவது இவர்கள் ஒருவரைப் பற்றிப் புறங்கூறியிருந்தார்கள். இவர்கள் தொண்டையிலிருந்து வெளிப்பட்ட இந்த உறைந்த இரத்தமானது புறங்கூறலால் இவர்கள் தின்றது ஜனங்களின் சதையாயிருக்கிறது என்பதே.

மூன்றாவது:—தகாத வார்த்தைகளைக் கேட்காதபடி காதைக் காப்பதாம். ஏனென்றால் எந்த வார்த்தை பேசத்தகாதோ அந்த

வார்த்தையைக் கேட்கவுந் தகாது. பொய், புறம் இவைகளைக் கேட்பவன் அதைப் பேசுகிறவனைப் போல் பாவியாகின்றான்.

நான்காவது:—தகாச் செயல்களைச் செய்யாதபடி கை கால் முதலிய உறுப்புகளைக் காப்பதாம். எந்த நோன்பாளி இப்படியான தகாக் காரியங்களைச் செய்கின்றானோ அவனுக்கு உபமானமாகிறது, வியாதியுள்ள ஒருவன் பத்தியங்காக்கவென்றும் பழவர்க்கத்தைத் தள்ளிப் பாஷாணந் தின்றது போலாகும். ஏனென்றால் பாவமானது பாஷாணமாயும் சோறானது ஊணுயுமிருக்கின்றது. ஊணை அதிகமாய்த் தின்பது வருத்தப்படுத்தும். என்கினும் மிதமான ஊண் வருத்தப் படுத்தாது. இதின் நிமித்தமே நோன்பாளிகளில் அநேகருக்குப் பசியும் தாகமுமே தவிர வேறொரு பாகமில்லை யென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானார்கள்.

ஐந்தாவது:—நோன்பு திறக்கிற வேளையில் ஹறாமான அல்லது சந்தேகமான பொருளைத் தின்னாமலிருப்பதாம். ஹலாலான பொருளாயிருந்தபோதிலும் அதிகமாகத் தின்னக் கூடாது. ஏனென்றால் இரவில் பகல் சோற்றையும் சேர்த்து உண்பானுகில் அவனுக்கு நோன்பினால் என்ன பிரயோஜனமுண்டாகும். நோன்பு வைப்பது இச்சைகளை முறிக்கத்தானே. இரண்டு வேளையின் சோற்றை ஒரே வேளையில் உண்பதினால் அதிலும் பலவகையான உணவை உண்பதினால் இச்சைகள் முறிவதெங்ஙனம். மேலும் இச்சை அதிகரிக்கும் இரைப்பை வெறும் பையாகாத வரையில் இருதயம் தெளிவுறாது. மேலும் பசியினால் உண்டாகும் சோர்வின் கூறைத் தன்னில் அடையும் பொருட்டுப் பகலில் அதிகமாய்த் தூங்காமல் விழித்திருப்பது சுன்னத்தாயிருக்கிறது. இன்னும் இரவில் அதிகமாகத் தின்பானுகில் துரிதமாய்த் தூக்கம் வரும். இராத் தொழுகை தொழுக அவனால் முடியாது. இதனாலே தான் அல்லாஹு தஆலாவுடைய பார்வையில் நிறைந்த தொப்பையினும் மிகக் கெட்டதாய் வேறொரு நிறைந்த பாத்திரமில்லை யென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஆறுவது:—நோன்பு திறந்த பிறகு அவன் மனம் அச்சத்துக்கும் ஆதரவுக்கும் நடுவே கொளுக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் அவனுடைய நோன்பு கபூலாயிற்று அல்லது இல்லையா என்று அவனுக்குத் தெரியாததினாலேயாம். ஒருதரம் ஈதுப் பெருநாளில் ஹஸன் பஸரி றஹிமஹுல்லா வழியில் செல்லும் போது ஒரு ஜனக் கூட்டம் சிரித்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் சொன்னதாவது "அல்லாஹு தஆலா தன் அடியார்கள் இபாதத் தென்னும் ஓட்டத்தில் ஒருவரைக்காண ஒருவர் முந்துவதற் கென்று றமலான் மாதத்தை ஒரு மைதான வெளிபோல் ஆக்கியிருக்கிறான். அதில் ஒரு

கூட்டம் முன்னேறி விட்டது. ஒரு கூட்டம் பின்னல் தங்கி நிற்கிறது. தங்கள் கதி இன்னதென்று அறியாமல் சிரித்து விளையாடுகிற இந்த ஜனங்களைப் பற்றி நான் ஆச்சரியப் படுகிறேன். அல்லாவின் மீதாணையாக இவர்கள் மூடிக் கொண்டிருக்கிற திரை எடுபட்டுப் போனல் இவர்களில் கபூலான அமலை யுடையவர்கள் ஆனந்த பாஸ்கரத்தில் அமிழ்ந்துவார்கள், ரத்து செய்யப்பட்டவர்கள் துக்க சாகரத்தில் மூழ்குவார்கள். இவர்களில் ஒருவரும் சிரிக்கவும் விளையாடவு மாட்டார்கள்" என்பதே.

அருமையானவனே! இந்த எல்லாச் சங்கதிகளாலும் எவன் நோன்பில் உண்ணல், குடித்தல், போகித்தல் இவைகளை மாத்திரம் விட்டு விட்டானே அவன் நோன்பு உயிரில்லா உருவம் போலிருக்கிறதென்று உனக்குத் தெரியலாயிற்று. மனிதன் தன்னை மலக்குகளுக்குச் சமான மாக்குவதே நோன்பின் அந்தரங்கமாம். ஏனென்றால் மலக்குகளுக்கு இச்சை என்பதே கிடையாது. மிருகங்களுக்கோ இச்சைமேலிட்டிருக்கிறது. இதனாலேதான் அவை மலக்குகளுக்கு தூரப்பட்டனவா யிருக்கின்றன. எந்த மனிதனுக்கு இச்சை மேலிட்டிருக்கின்றதோ அவன் மிருகங்களுடைய வகுப்பில் சேர்ந்தவனா யிருக்கின்றான். எப்போது இச்சை அவனுக்குக் கீழ்படிந்து போகின்றதோ அப்போது அவன் மலக்குகளுக்கு ஒப்பாகுவான். அதாவது அவர்களின் குணத்தினால் அவர்களுக்கு சமீபிக்கிறான், ஸ்தானத்தினால் அல்ல. மலக்குகள் அல்லாஹ் தஆலாவுடைய திருச் சமுகத்தை நெருங்கி யிருக்கிறார்கள். இவனும் அச்சமுகத்துக்கு அருகனாய்ப் போவான் என்பதே. மக்ரிபு தொழுத பிறகு வயிறு நிறைய இரண்டு நேரத்துச் சோறு உண்பானகில் அவனின் இச்சை அதிக பலப்படும். சோர்வடைய மாட்டாது. இப்படியானால் நோன்பின் உயிர் வாய்க்காது.

கலா, கபாரா, இம்ஸாக்கு, பித்யா இவைகளின் பயான்.

ஆக்கில் பாலிகாயிருக்கிற ஒவ்வொரு முஸ்லிமும் யாதொரு சங்கடத்தினாலாவது சங்கடமின்றியாவது நோன்பு வைக்காதிருந்தால் அவன்மேல் கலாவிதியாகும். இதுபோலவே ஹைலுகார், முஸாபிர், நோயாளி, கர்ப்பஸ்திரி, முர்த்தத்து இவர்களின் மேலும் கலா விதியாகும். என்கினும் பைத்தியக்காரர், சிறுவர் இவர்கள்மேல் கலா விதியில்லை.

இனி கபாராவிதியாகுவது எதனாலென்றால், நோன்பு வைத்திருக்கிற போது ஜிமாஉ செய்வதினால் அல்லது தன் இந்தியாரைக் கொண்டுமணி வெளிப்படுத்துவதினாலேயாம். வேறு விதத்தினால் கபாரா விதியாகாது. கபாரா வென்பது ஒரு அடிமையை உரிமை விடுவதா யிருக்கும். அதற்கியலாவிட்டால் தொடர்ச்சியாய் அறுபது நோன்புவைக்க வேண்டும். இதுவும் சாத்தியப்படாமற் போனல் அறுபது

முத்தளவுதானியத்தை அறுபது மிஸ்கீன்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு முத்தென்பது கால்மரக்கால் ஆகின்றது.

இம்ஸாக்கு அதாவது ஒரு நாளில் சென்றதுபோக மீதியானதில் உண்ணுமல், குடிக்காமல் சும்மா இருப்பதாம். எவன் சங்கடமன்றி நோன்பைவிட்டு விட்டானே அவன்மேல் இம்ஸாக்கு விதியாகின்றது. ஹைலுக்காரியின்மேல் இம்ஸாக்குவிதியில்லை. பகலின் மத்தியில் அவள் சுத்தமானலுஞ்சரி. முஸாபிர்மேல் இம்ஸாக்கு விதியில்லை, பகலின் மத்தியில் முகீமானலுஞ்சரி. நோயாளியின்மேல் இம்ஸாக்கு விதியில்லை, பகலின் மத்தியில் சவுக்கிய மடைந்தாலுஞ்சரி. நோக்குடைய நாளில் ஒருவன் பிறைகண்டதாய் சாக்ஷிசொன்னால் அதைக் கேட்டவன் சோறு ஊண்டிருந்தபோதிலும் சாயங்காலம வரையில் நோன்பாளிகளைப்போல் அவன் இம்ஸாக்கு செய்யவேண்டும். ஒருவன் பகலின் இடையில் முஸாபிராய்போனால் அவன் நோன்பை முறிப்பது கூடாது. நோன்பு வைத்துக்கொண்டிருக்கிற ஒரு முஸாபிரானவன் பகலின் நடுவே ஊர்வந்து சேர்ந்தால் அவனும் நோன்பை விடுவது கூடாது.

இனி முஸாபிரானவன் சக்தி குறைவாயிருந்தாலன்றி மற்றப்படி அவன் நோன்பை விடுவதைப்பார்க்கிலும் வைப்பதே உத்தமம்.

கர்ப்பஸ்திரீயும் பால் கொடுப்பவளும் ஒரு முத்தளவு தானியம் பகீருக்கு பித்யாக்கொடுத்து பின்பு நோன்பை கலா செய்யவேண்டும். பால் கொடுப்பவள் பிள்ளையின் ஹலாக்கையும், நோயாளி தன் உயிர் போவதையும் பயந்து நோன்பை விட்டார்களாகில் அவர்கள்மேல் பித்யாவாஜிபாகாது. நோன்பு வைக்க சக்தியில்லாத தளர்ந்த கிழவன் மேல் நோன்பின் கலாவுக்குப்பதிலாக பித்யாவிதியாகும். ஒருவன் றமலானுடைய கலா நோன்பை மறுறமலான் வருகிற வரையில் தாமதப்படுத்துவானாகில் ஒவ்வொரு நோன்பின் கலாவுடன் ஒரு முத்தளவு தானியமும் கொடுப்பது விதியாகும்.

பஸல்:—வருஷ முழுமையிலும் வருகிற முபாரக்கான நாட்களில் நோன்பு வைப்பது சுன்னத்தாயிருக்கும். அவை:—அறபா நாளும் ஆஷூரு நாளும், துல்ஹஜ்ஜு மாதம் முந்தின ஒன்பது நாட்களும், முஹர்றம், றஜபு, ஷஃபான் இம்மாதங்களின் முந்தின பத்து நாட்களுமாம். றமலானுக்குப்பிறகு எல்லா நோன்புகளிலும் வரிசையானவை முஹர்றம் மாதத்தின் நோன்புகளேயாமென்று ஹதீதில் வந்திருக்கிறது. முஹர்ற மாதம் முழுவதும் நோன்பு வைப்பது சுன்னத்து; அதினும் முந்தினபத்தில் சுன்னத்து முவக்கதாவாயிருக்கும்.

இன்னும் முஹர்றமாதத்தின் ஒரு நோன்பாகிறது மற்ற மாதங்களின் முப்பது நோன்புகளைக்காண அதிக வரிசையுள்ளதென்றும்

றமலானுடைய ஒரு நோன்பாகிறது முஹர்ற மாதத்தின் முப்பது நோன்புகளைவிட அதிக வரிசையுடைய தென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் அய்ஹாமுல் ஹரும் என்ற சங்கையான மாதங்களின் வியாழன், வெள்ளி, சனி இந்நாட்களில் ஒருவன் நோன்பு வைப்பானுகில் அவனுக்கு எழுநூறு வருஷத்துடைய இபாதத்தின் தவாபை எழுதப்படுமென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். அந்த மாதங்களாவன:—முஹர்றம், றஜபு, துல்காயிதா, துல்ஹஜ்ஜு இந்த நான்கு மாதங்களேயாம். இவை எல்லாவற்றினும் வரிசையானது துல்ஹஜ்ஜு மாதமாயிருக்கும் ஏனெனில் அது ஹஜ்ஜுடைய வக்தாயிருக்கிறது. அல்லாஹு தஆலா இடத்தில் ஏந்த வக்தின் இபாதத்தும் துல்ஹஜ்ஜு மீ முந்தின பத்தின் இபாதத்தைக்காண அதிகவரிசையும் உவப்பு முள்ளதில்லை யென்றும் இந்தபத்தில் ஒருநாளின் நோன்பாகிறது வருஷ முழுவதின் நோன்புகளுக்கும் ஒரு இரவின் தொழுகையானது லைலத்துல் கதறுடைய தொழுகைகளுக்கும் சமானமாயிருக்கிறதென்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். அப்போது அஸ்ஹாபுகள் யாறசூலல்லா! ஜிஹாதில் கூட இத்தனை வரிசையில்லையா என்று கேட்டதற்கு ஜிஹாதிலும் இல்லையென்றும், ஆனல் ஜிஹாதில் எவனுடைய குதிரை கொல்லப்பட்டு அவனின் இரத்தமும் ஒட்டப்பட்டதோ அவனுக்கிந்த வரிசையுண்டென்றும் திருவுளமானார்கள்.

ஸஹாபாக்களில் நின்றும் ஒரு கூட்டம் றஜபு மாதம் முழுமையும் நோன்பு வைப்பதை மக்றூஹாயெண்ணினார்கள். ஏனென்றல் அது றமலானைக் கொண்டு ஒப்பாகாமலிருக்கவேயாம் இதற்காக அவர்கள் அதில் இரண்டொரு நோன்பை விட்டுவிடுகிறவர்களா யிருந்தார்கள். இன்னும் ஷஃபான் மாதம் முற்பாதி நாட்கள் ஆய்விட்டால் பிறகு றமலான் வரையில் நோன்புவைக்க வேண்டாமென்று ஹதீதில் வந்திருக்கிறது. ஷஃபான் மாதம் பிற்பாதிநாட்களில் நோன்பு வைக்காமலிருப்பது மேலாயிருக்கும். ஏனென்றல் இதனல் றமலான் பிரிக்கப்படுவதற்கேயாம். இனி றமலானை எதிர்ச்சென்று சங்கிப்பதற்காக ஷஃபானுடைய கடைசி நாளில் நோன்பு வைப்பது மக்றூஹாயிருக்கும். ஆனல் எதிர்ச்சென்று சங்கிப்பதற்கென்ற நிய்யத்தில்லாமல் வேறே ஏதாவது காரணமிருந்தால் குற்றமில்லை.

ஒவ்வொரு மாதத்திலும் அய்யாமுல் பீல் அதாவது பதிமூன்று, பதினன்கு, பதினைந்து இந்நாட்களில் நோன்புகளும் ஒவ்வொரு வாரத்திலும் திங்கள் வியாழன் வெள்ளி இக்கிழமைகளின் நோன்புகளும் அதிகவரிசையுடையனவாயிருக்கின்றன. ஸவுமுத்தஹர் அதாவது காலமுழுவதிலும் தொடர்ச்சியாய் நோன்பு வைப்பது மேற்

கண்ட எல்லா நோன்புகளையும் பொதிந்து கொள்வதுடன் அதனால் அதிக சவாபும் கிடைக்கின்றது. என்கினும் ஐந்துநாள் அகத்தியம் நோன்பை விட்டு விடவேண்டும். அவை:—இரண்டு ஈதுப் பெருநாட்களும், அல்ஹாப் பெருநாள் கழிந்தபிறகு தஷ்ரீகுடைய மூன்று நாட்களுமேயாம். இந்த ஐந்து நாட்களிலும் நோன்பைவிட்டு விடுவதற்குத் தன்பேரில் தடை செய்யாம லிருப்பது வேண்டும். ஏனென்றால் அப்படித் தடை செய்வது மக்றாஹா யிருக்கும். கால முழுமையும் நோன்புவைக்க சாத்தியப்படாதவன் ஒருநாள் நோன்புவைத்து மறு நாள் விட்டு விடுவான். இந்த நோன்பு தாவூது அலைஹிஸ்ஸலா முடைய நோன்பா யிருந்தது. இதன் வரிசை மிகப் பெரியதா யிருக்கின்றது. அப்துல்லாஹிபுனு அம்றப்னில் ஆஸ் றலியல்லாஹு அன்ஹு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களிடத்தில் நோன்பு வைக்க நல்லவழி எதுவென்று கேட்டபோது, அவருக்கு இதைதான் கட்டளை செய்தார்கள். அதற்கவர் யாறஸூலுல்லா நான் இதைக்காண அதிக வரிசையானதை ஆசிக்கிறேன் என்றபோது, இதைக்காண அதிக வரிசையானது ஒன்றுமில்லை யென்றும், ஆனால் இதிலும் தாழ்ந்தது வியாழன், திங்கள் இக்கிழமைகளில் நோன்பு வைப்பதா யிருக்கு மென்றும், இது வருஷத்தின் மூன்றிலொரு பாகத்தைக் கொண்டு றமலானுக்கு நெருங்கியிருப்பதற் கென்றும் திருவுளமானார்கள்.

எப்போது ஒருவன் நோன்பினுடைய ஹகீகத்தை அறிந்தானே அதாவது நோன்பினால் நாடப்பட்ட பிரயோஜனம் இச்சையை முறிப்ப தென்றும், மனதைச் சுத்தப்படுத்துவதென்றும் தெரிந்து கொண்டவன் தன் மனதில் நோட்டமிட்டுத் தானிருக்கும் ஸ்திதியைப் பார்க்க வேண்டும். அப்போது சிலசமயம் நோன்பை விடுவது ஏற்ற மென்றும் சில சமயம் வைப்பது ஏற்றமென்றும் நன்கு விளங்கும். இதனாலே தான் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சிலசமயம் நாயகம் இனி நோன்பை விடமாட்டார்கள் போலிருக்கிறதென்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிற விதமாய் அத்தனை நோன்புகள் வைப்பார்கள். இன்னும் சிலசமயம் இனி நோன்பு வைக்கமாட்டார்க ளென்றெண்ணிக் கொள்ளும் விதமாய் அத்தனை நாள் நோன்பு வைக்காமல் விட்டு விடுவார்கள். ஹலாத்தவர்களுடைய நோன்புகளின் தர்தீபு விளங்காமல் மறைந்ததா யிருந்தது. இனி நாலுநாட்களுக்குமேல் தொடர்ச்சியாய் நோன்பை விடுவது மக்றாஹென்று உலமாக்கள் தாத்பரியப் படுகிறார்கள். இந்த மக்றாஹை ஈதுடையவும் தஷ்ரீகுடையவுமான நான்கு நாட்களில் நின்றும் கியாஸ் செய்து எடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் சதா நோன்பை விடுவதில் மனங்கறுத்தும், மறதி மேலிட்டும், மன உணர்ச்சி தூர்ப்பலப்பட்டும் போகுமென்ற அச்சமிருக்கின்றது.

ஏழாவது அஸ்லு.



ஹஜ்ஜின் பயான்.

அருமையானவனே! அறிந்துகொள் ஹஜ்ஜாகிறது இஸ்லா முடைய றுகுனுகளின் தொகையிற் சேர்ந்ததாயும் வயதில் ஒருதரம் அகத்தியம் செய்யவேண்டிய இபாதத்தாயு மிருக்கிறது.

எவன் ஹஜ்ஜு செய்யாமல் மவுத்தானுனே அவன் யஹூதியாய் அல்லது ஈஸாநியாய்ச் சாகவுமென்று அவனுக்குச் சொல்லுங்க ளென்றும், இன்னும் எவன் தன் சரீரத்தை பாவத்தில் உழம்பாமலும் தன் நாவைத் தகாவார்த்தைகளில் வழங்காமலும் ஹஜ்ஜு செய்கிறானே அவன் அன்னை வயிற்றில் அன்றுபிறந்த பாலகனைப் போல் பாவங்களை விட்டுச் சுத்தமாகிறுனென்றும், இன்னும் அநேக பாவங்களிருக் கின்றன. அப்பாவங்களுக்கு அறபாவில் தரிபடுவதேயன்றி வேறெந்தப் பொருளும் கபாராவாகிறதில்லை என்றும், இன்னும் அறபாவுடைய நாளில் அல்லாஹு தஆலா கல்குகளின் பேரில் தன் றஹ்மத்தை இறக்குகிறதாலும், அவர்களின் பெரும் பாவங்களை மன்னித்து விடுகிற தாலும், ஷைத்தான் அந்த நாளை விட வேறெந்த நாளிலும் அதிகமாய்ப் பங்கப்பட்டு முகம் வாடுவதில்லை யென்றும், இன்னும் எவன் ஹஜ்ஜு டைய நாட்டத்தைக் கொண்டு வீட்டை விட்டுப் பிரயாணமாகி வழி யில் மவுத்தாய் விட்டானேனே அவனுக்காக கியாமத்து நாள் வரையில் வருஷா வருஷம் ஹஜ்ஜும் உம்றுவும் எழுதப் படுகிறதென்றும், மக் கத்திலாவது மதீனத்திலாவது மவுத்தாய்ப் போனால் அவன் கேள்வி கணக்கைப் பற்றிய கவலையற்றிருப்பானென்றும், இன்னும் கபூல் செய் யப்பட்ட ஹஜ்ஜாகிறது துன்யாவைக் காட்டிலும் அதிலுள்ளவைகளைக் காட்டிலும் அதிக நலவானதென்றும் அதற்குச் சொர்க்கமே கூலி யென்றும், இன்னும் மனிதன் அறபாவில் தரிபட்டு அவன் தன் பாவம் பொறக்கப்படவில்லை என்று எண்ணுவதற்கு மேல் அதிக பெரிய பாவம் ஒன்றுமில்லை யென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

அலிய்யுபுனுல் முவப்பகு என்ற ஒரு பெரியோர் சொல்லுகிறதாவது:—நான் ஒரு வருஷம் ஹஜ்ஜு செய்தேன். அறபாவுடைய இரவில் சொப்பனத்தில் இரண்டு மலக்குகளைக் கண்டேன். அவர்கள்

பச்சை உடை உடுத்தவர்களாய் வானத்திலிருந்து இறங்கியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் மற்றொருவரை நோக்கி இவ்வருஷம் ஹாஜிகள் எத்தனைபேர் இருந்தார்கள் உமக்குத் தெரியுமா என்று கேட்டார். அதற்கவர் தெரியாதென்க ஆறுலக்ஷம்பேர் இருந்தார்க ளென்றார். எத்தனைபேருடைய ஹஜ்ஜு கபூலாயிற்று உமக்குத் தெரியுமா என்க அவர் எனக்குத் தெரியாதென்றார். அதற்கவர் ஆறுபேருடைய ஹஜ்ஜு மாத்திரம் கபூலாயிற்றென்று சொன்னார். பின்பு நான் நித்திரையி லிருந்து பதறி எழுந்து ஒருபோதும் நான் அந்த ஆறுபேர்களில் சேர்ந்தவனுயிருக்க மாட்டேன் என்று அதிக கவலையும் துக்கமும் அடைந்தவனுய் அவ்விடமிருந்து மஷ்அறுல் ஹறாம் என்ற இடஞ் சென்று நித்திரை போய்விட்டேன். அங்கும் அந்த இரண்டு மலக்கு களே என்மனமில் வந்து இருவரும் பேசத்தொடங்கி ஒருவர் மற்ற வரைப் பார்த்து இன்றிரவு அல்லாஹு தஆலா ஜனங்களில் என்ன தீர்ப்பு செய்தான் உமக்குத் தெரியுமா என்று கேட்டார். அவர் எனக் குத் தெரியாதென்க, இன்று அந்த ஆறுபேரில் நின்றும் ஒவ்வொரு வரின்பொருட்டால் ஒவ்வொரு லக்ஷம்பேரை மன்னித்து விட்டான் என்று கூறினர். பின்பு நான் சந்தோஷத்துடன் நித்திரையை விட் டெழுந்து அல்லாஹு தஆலாவின் நன்றியறிந்து ஷுகுறுசெய்தேன் என்பதே.

ஒவ்வொரு வருஷமும் ஹஜ்ஜில் ஆறுலக்ஷம் அடியார்பைத்துல் லாவை ஸியாரத்து செய்வார்கள் என்று அல்லாஹு தஆலா வாக் களித்திருக்கிறனென்றும், அதற்குக் குறைந்தால் எண்ணிக்கை பூர்த்தியாகும்பொருட்டு மலக்குகளே அனுப்புகிறனென்றும் இன் னும் புடை சூழ்ந்த கல்யாண சோடனையின் ஊர்க்கோலம்போல் கியா மத்து நாளில் கஃபாவைத் தூக்கப்பட்டு சொர்க்கத்துக்குக் கொண்டு போகப்படுமென்றும், அப்படிப்போகும்போது ஹஜ்ஜு செய்தவர்கள் அதை புடை சூழ்ந்தவர்களாயும் அதன் திரைகளைத் தொட்டவர்களா யும் அத்துடன் சொர்க்கம் போவார்களென்றும் ஹலாத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஹஜ்ஜுடைய ஷறத்துகள்.

அறிந்துகொள் முஸ்லிமானவன் ஹஜ்ஜை அதன் காலத்தில் செய்வானுகில் அவன் ஹஜ்ஜு திருஸ்தாயிருக்கும். ஹஜ்ஜுடைய காலம், ஷவ்வால், துல்காயிதா மாதங்களும், துல்ஹஜ்ஜுமாதம் ஒன் பது நாட்களுமாம். ஈதுப்பெருநாள் சுபுஹு உதயமாகிறவரையில்.

இந்த காலங்களில் ஹஜ்ஜுக்காக இஹ்ரும் கட்டுவது திருஸ் தாயிருக்கும். இதற்கு முன்னே ஹஜ்ஜுக்காக இஹ்ரும் கட்டினுல்,

அது உம்ரூவாகும். தமீஸ் என்னும் பகுத்தறிவுள்ள சிறு பையனுடைய ஹஜ்ஜு தருஸ்தாயிருக்கும். பால் குடிக்கிற குழந்தையாயிருந்தால் அதற்காக வலிக்காரன் இஹ்ரும் கட்டி அக்குழந்தையை அறபாவுக்குக் கொண்டுபோவதுடன் சகியும் தவ்வாபும் செய்வானுகில் அக்குழந்தையின் பக்கத்தால் ஹஜ்ஜு தருஸ்தாயிருக்கும். ஆகவே இஸ்லாமுடைய ஹஜ்ஜு தருஸ்தாவதற்குள்ள ஷறத்துகாலம் மாத்திரமேயாம்.

ஆனல் இஸ்லாமுடைய ஹஜ்ஜின் பொறுப்பு கழிந்து பர்லு இறபடுவதற்குள்ள ஷறத்துகள் ஐந்தாயிருக்கும். அவை:—இஸ்லாமாயிருப்பதும், அடிமையல்லாதிருப்பதும், பாலிகாயிருப்பதும். ஆகிலாயிருப்பதும், காலத்தில் இஹ்ரும் கட்டுவதுமேயாம். சிறு பையன் இஹ்ரும் கட்டி அறபாவில் தரிபடுவதற்கு முன்னே அவன் பாலிகாய் விட்டாலும் அல்லது அடிமையாயிருந்தவன் அவ்வடிமைத் தனத்திலிருந்து நீங்கிப்போனலும் அவனின் இஸ்லாமுடைய ஹஜ்ஜு இறுபட்டுப்போம். உம்ரூவுடைய பர்லு கழிவதற்கும் இதே ஷறத்துகள் வேண்டும். என்கினும் உம்ரூவுக்குக் காலக்குறிப்பில்லை. வருஷமுழுவதும் உம்ரூவின் காலமாயிருக்கிறது.

ஆனல் வேறொருவன் பக்கத்தால் நாயிபாயிருந்து ஹஜ்ஜு செய்பவனுக்கு வேண்டிய ஷறத்தென்னவென்றல், முந்தி அவன் தன் இஸ்லாமுடைய ஹஜ்ஜின் பர்லை இறுத்தவனுயிருக்கவேண்டும். அப்படி இருப்பதற்கு முன்னே வேறொருவன் பக்கத்தால் ஹஜ்ஜை நிய்யத்து செய்தால் இந்த நாயிபுடைய ஹஜ்ஜு இவன் பொறுப்பை விட்டுக் கழிந்துபோம். நாயிபாக்கி வைத்தவனுடைய ஹஜ்ஜும் இறுபடாது. முந்தி இஸ்லாமுடைய ஹஜ்ஜும் பிறகு, கலாவுடைய ஹஜ்ஜும், பிறகு நேர்ச்சையுடைய ஹஜ்ஜும், பிறகு நபாபத்துடைய ஹஜ்ஜுமாய்தான் முடியும், நிய்யத்தை இதற்கு மாற்றமாய்ச் செய்திருந்தாலுஞ்சரி.

ஹஜ்ஜு விதியாகுவதற்கு ஐந்து ஷறத்துகள் உண்டு. அவை:—இஸ்லாமும் புலுகும் அக்லும் அடிமையின்மையும் வல்லமையுமாம். வல்லமை இருவகைப்படும். முதலாவது வகை:—மனிதன் தன்தேகத்தால் ஹஜ்ஜு செய்ய வல்லமையுடையவனுயிருப்பது. இந்த வல்லமைக்கு மூன்று வஸ்துக்கள் வேண்டும். முதலாவது தேக சவுக்கியம். இரண்டாவது வழியின் அச்சமின்மை. அதாவது வழியில் அபாயமான கடலேப்பற்றியாவது அல்லது யாரால் பொருள் சேதம், உயிர் சேதத்தை பயப்படப்படுமோ அந்தப் பகைவனேப்பற்றியாவது அச்சமில்லாதிருக்கவேண்டும். மூன்றுவது போகவரச் செலவுக்கும் திரும்பி

வருகிறவரையில் மனிஷமக்களின் அன்ன வஸ்திரத்துக்கும் போதுமான அளவு பொருள் உள்ளவனு யிருப்பது. இதன் பிறகு எல்லாக் கடன்களையும் இறுத்தவனு யிருக்கவேண்டும். இன்னும் கால்நடையாய் நடக்க நேரிடாதபடி ஏறிப்போகும் சவாரிச் செலவு மிருக்க வேண்டும்.

இரண்டாவதுவகை:—தன் தேகத்தால் ஹஜ்ஜு செய்ய வல்லமை இல்லாதிருந்தால் எப்படி யென்றால் பக்கவாத நோயுள்ளவனு யிருக்கிறான், அல்லது சவுக்கிய மடைவானென்ற நம்பிக்கை இல்லாத ஒரு நோயில் படுக்கையா யிருக்கிறான்; இப்படிப் பட்டவன் தன் பக்கத்தால் ஹஜ்ஜு செய்ய ஒரு நாயுபுக்குச் செலவு கொடுத்தனுப்பத்தக்க ஸ்திதியுள்ளவனு யிருந்தால் அப்படிச் செய்து அதன் சவாபைத் தனக்கு செலுத்தும்படி செய்து கொள்வான். ஒருவன் கூலி வாங்காமல் தன் தகப்பன் பக்கத்தால் ஹஜ்ஜு செய்ய ஒப்புக் கொள்ளுவானுகில் அவனுக்கு உத்தரவு கொடுப்பது தகப்பன்மேல் கடமையாகும். ஏனென்றால் தகப்பனுக்கு மகன் பணிவிடை செய்து சீர்வதித்தனமா யிருக்கும். நான் பணங்கொடுக்கிறேன் யாரையாவது கூலிக்கு நியமனம் செய்தனுப்பென்று மகன் சொன்னால் அதை அங்கீகரிப்பது தகப்பன் மேல் கடமையாகாது. ஏனென்றால் பொருளை அங்கீகரிப்பதில் உபகாரச்சுமை சுமருகின்றது. ஒரு அன்னியன் கூலியில்லாமல் இவன் பக்கத்தால் ஹஜ்ஜு செய்கிறதா யிருந்தால் அவனில் உபகாரத்தை ஏற்பது விதியாகாது.

ஒருவனுக்கு ஹஜ்ஜு செய்ய வல்லமையுண்டாய் விட்டால் அவன் அதைச் சீக்கிரப் படுத்த வேண்டும். மறுவருஷம் ஹஜ்ஜு செய்ய உதவி கிடைக்கும் பக்ஷம் தாமதப் படுத்தினாலும் ஆகும். ஆனால் அவன் ஹஜ்ஜு செய்வதற்கு முன்னே மவுத்தாய்ப் போவானுகில் பாவியாவான். அப்போது அவனுடைய ஆஸ்தியில் நின்றும் நாயிபை நியமனம் செய்து ஹஜ்ஜு செய்விக்க வேண்டும். அதைப்பற்றி அவன் வஸிய்யத்து செய்யாமற் போனாலுஞ்சரி ஏனென்றால் இது அவன் மேல் பர்லர்ய்ப் போயிருக்கிறது. இன்னும் வல்லமை யுள்ளவர்கள் ஹஜ்ஜு செய்யாமலிருந்தால் அவர்களிடம் ஜிஸிய்யாவென்ற தலைவரி வாங்கும்படி அந்தந்தப் பட்டணங்களிலுள்ள ஆமில்களுக்கு தாகீது எழுதி நாட்டங் கொண்டிருக்கிறேன் என்று உமர் றலியல்லாஹு அன்ஹு சொல்லி யிருக்கிறார்கள்.

ஹஜ்ஜுடைய றுகுனுகள். அதாவது எவையில்லாமல் ஹஜ்ஜு தருஸ்தாகின்றதில்லையோ அவை இஹ்றுமும், தவ்வாபும், அதன் பிறகு சகியும், அறபாவில் தரிப்பதும், தலைமுடி யிறக்குவதும் ஆக ஐந்து காரியங்களா யிருக்கும்.

இனி ஹஜ்ஜுடைய வாஜிபுகள் ஆறு காரியங்களா யிருக்கும். அவைகளை விடுவதினால் ஹஜ்ஜு பாத்திலாகிறதில்லை என்கினும் ஒரு கவுல்படி ஒரு ஆடறுப்பது விதியாகின்றது. அவர்களில் முதலாவது மீகாத்தில் இஹ்ரும் கட்டுவது. இஹ்ருமில்லாமல் மீகாத்தை விட்டுத் தாண்டிப் போவாஞகில் ஒரு ஆடு விதியாகும். இரண்டாவது கல் எறிவது. மூன்ருவது சூரியன் அஸ்தமிக்கிற வரையில் அறபாவில் தரிப்பது. நான்காவது இரவில் முஸ்தலிபாவில் தங்குவது. ஐந்தாவது மீனாவில் தங்குவது. ஆருவது பயணத்தவ்வாபு செய்வது. பிந்தின நான்கு காரியங்களை விடுவதினால் ஒரு கவுல்படி ஆடு விதியாகாது என்ருலும் சுன்னத்தா யிருக்கும்.

ஆனால் ஹஜ்ஜு செய்யும்வகை இப்ருது என்றும் கிரான் என்றும் தமத்து என்றும் மூன்றுவிதமா யிருக்கிறது. இவை எல்லா வற்றிலும் மேலானது இப்ருதா யிருக்கும்.

ஹஜ்ஜு இப்ருதென்பது தனிப்பட ஹஜ்ஜு மாத்திரம் செய்து கொண்டு பிறகு ஹறமை விட்டுத் தாண்டிப் போய் உம்ருவுக்காக இஹ்ரும் கட்டிக் கொண்டு உம்ரு செய்வதாம். உம்ருவுக்காக ஜுஹ்ருனுவில் இஹ்ரும் கட்டுவது தன்யீமில் கட்டுவதைவிட மேல். தன்யீமில் கட்டுவது ஹுதைபியாவில் கட்டுவதைவிட மேல். இந்த மூன்று இடங்களிலும் கட்டுவது சுன்னத்தா யிருக்கும்.

ஹஜ்ஜு கிருனென்பது ஹஜ்ஜையும் உம்ருவையும் சேர்த்து நிய்யத்து செய்து اللهم لبيك في حجة وعمرة அல்லாஹும்ம லப்பைக பி ஹஜ்ஜத்தின் வஉம்றத்தின் என்று சொல்வதா யிருக்கும். இப்படிச் செய்வதில் ஹஜ்ஜு உம்ரு இரண்டுக்கும் இஹ்ரும் கட்டின வனுகுவான். ஹஜ்ஜுடைய அமல்களைச் செய்வாஞகில் உம்ருவும் அதில் சேர்ந்துவிடும். முழுக்கில் ஒலு சேர்வது போல் எவன் இப்படிச் செய்வானே அவன்மேல் ஒரு ஆடு விதியாகும். ஆனால் மக்கத்தி லுள்ளவன் மேல் விதியாகாது. ஏனென்ருல் அவன் இஹ்ரும் கட்டுந் தலம் மக்கமா யிருக்கிறது. எவன் ஹஜ்ஜு கிருன் செய்கிருனே அதாவது ஹஜ்ஜையும் உம்ருவையும் சேர்த்து நிய்யத்து செய்கிருனே அவன் அறபாவில் தரிபடுமுன்னமே தவ்வாபும் சகியும் செய்வாஞகில் சகியை ஹஜ்ஜும் உம்ருவைக் கொண்டு கணக்காக்கப்படும். என்ருலும் அறபாவில் தரிபட்டதின் பிறகு தவ்வாபை மீளவைப்பது அவசியம். ஏனென்ருல் றகுனுடைய தவாபு தருஸ்தாகுவதற்கு அதை அறபாவில் தரிபட்டதின் பிறகு செய்வது ஷறத்தா யிருக்கும்.

ஹஜ்ஜு தமத்து என்பது மீகாத்தில் சேர்ந்த பிறகு உம்ருவுக்காக இஹ்ரும் கட்டி மக்கத்திற் போய் இஹ்ருமுடைய கைதில்

இல்லாமல் ஹலாலாகிபிறகு ஹஜ்ஜுடைய நேரத்தில் மீண்டும் ஹஜ்ஜுக்காக இஹ்ரும் கட்டுவதாயிருக்கும். இவன்மேல் ஒரு ஆடு விதியாகும். அதற்குச் சக்தியில்லாதவன் ஈதுல் லுஹாவுக்கு முன்னே தொடர்ச்சியாயாவது தொடர்ச்சியன்றியாவது மூன்று நாளும் உவர்ந்து சேர்ந்த பிறகு ஏழுநாளும் நோன்புவைப்பான். ஹஜ்ஜுகிரனிலுங் கூட ஆடறுக்க சக்தியில்லாதவன் பத்துநாள் நோன்புவைப்பான். தமத்துகுடைய குர்பானி யார்மேல் வாஜிபென்றால், எவன் உம்ரவுக்காக ஷவ்வால் துல்காயிதா மாதங்களிலும் துல்ஹஜ்ஜு மாதம் பத்து நாட்களிலும், இஹ்ரும் கட்டினானே, அல்லது ஹஜ்ஜை காயப்படுத்தினானே அல்லது ஹஜ்ஜுடைய இஹ்ரும் மீகாத்தில் கட்டவில்லையோ அவன்மேல் வாஜிபாகும். ஆகவே மக்கத்தையுடையவன் அல்லது பிரதேசத்தானாயிருப்பவன் ஹஜ்ஜுடைய நேரத்தில் மக்கத்தை விட்டு மீகாத்துக்காவது அல்லது மீகாத்திருக்கும் தூரத்தைப் போலாவது போவானுகில் அவன்மேல் ஆடு விதியாகாது.

ஹஜ்ஜில் ஆறு காரியங்கள் விலக்காயிருக்கும். முதலாவது லிபாஸ் அணிவது ஆகாது அதாவது இஹ்ரும்மில் சட்டை, சுருவால், தலைப்பாகை, மோஜா இவைகளை அணியக்கூடாது. என்கினும் உடுத்தாடையணிந்து துப்பட்டி போர்த்தவேண்டும். செருப்பணிவான். செருப்பில்லாவிட்டால் ஜுத்தா அணிவதாகும். உடுத்தாடையில்லாவிட்டால் சுருவால் ஆகும். சர்வாங்கத்தையும் துப்பட்டியால் மறைத்துக் கொள்ளலாம். ஆனால் தலைதிறந்திருக்கவேண்டும். பெண்பிள்ளை வழக்கப்படி லிபாஸ் அணிவாள். என்றாலும் முகத்தை மறைக்கமாட்டாள். இன்னும் பெண்பிள்ளைகள் ஒட்டகை அம்பாரியில் இருப்பது ஆகும். இரண்டாவது வாசம் பூசக்கூடாது. வாசம் பூசினாலும் தையல் உடை அணிந்தாலும் ஒரு ஆடு விதியாகும்.

மூன்றுவது முடியிரக்கவும் நகம் அறுக்கவும் கூடாது. அப்படிச் செய்தால் ஆடுவிதியாகும். சுருமாபோடுவதும் தண்ணீர் புரைக்குப் போவதும் இரத்தங்களைவதும் சடைபிடிக்காமலிருக்கும்படி ரோமங்களை வாரிச்சீவுவதும் ஆகும். நான்காவது ஜிமாஉ செய்யக்கூடாது. ஜிமாஉ செய்தால் ஒரு ஒட்டகமாவது, ஒரு மாடாவது, ஏழு ஆடுகளாவது வாஜிபாகும். ஹஜ்ஜும். பாத்திலாகும். கலாவிதியாகும், முந்தின இஹ்ரமுடைய கைதிலிருந்து நீங்கி ஹலாலானபிறகு ஜிமாஉ செய்தால் ஒட்டகம் வாஜிபாகும். என்கினும் ஹஜ்ஜுபாத்திலாகாது. ஐந்தாவது பெண்பிள்ளையைத் தொடுவது, முத்தமிடுவது போல் ஜிமாஉ சம்பந்தமான காரியங்களைச் செய்யக்கூடாது. ஸ்திரி புரு

ஷர் ஒருவருக்கொருவர் எதைத் தொடுவதிலல் தஹாறத்து முறிகின் றதோ அதைத் தொடுவதிலும், பெண் பிள்ளையுடன் இன்பம் பாராட்டு வதிலும், ஆடுவிதியாகும். இன்னும் இவ்ரூமில் நிக்காஹ் முடிப்பது ஹரும். ஆனல் அந்த நிக்காஹ் திருப்தாகின்ற தில்லையாதலால் அதற்காக ஆடு முதலியது விதியாகாது. ஆருவதுவேட்டை அறுக்கக் கூடாது. என்கினும் கடல்வேட்டை ஆகும். கரைவேட்டையடித்தால் அந்த வேட்டையைப்போலுள்ள பிராணி அதாவது ஆடு, மாடு ஒட்ட கங்களில் நின்றும் எந்த நல்ல பிராணிக்கு அந்த வேட்டை ஒத்திருக் கிறதோ அந்தப் பிராணி வாஜிபாகும்.

ஹஜ்ஜு செய்வது இன்னபடி என்பது.

அருமையானவனே! ஹஜ்ஜுடைய அமல்கள் இன்னபடி செய்வ தென்பதை துவக்கத்திலிருந்து கடைசிவரையில் வரிசைக்கிரமமாய் அறியவேண்டும். சுன்னத்துடைய வழியாய் அந்த அமல்களில் பர்லு, சுன்னத்து, அதபுகள் இன்னின்னவென்று தெரிந்துகொள்ளவேண்டும். அப்படித் தெரிந்துக்கொள்ளாமல் ஒருவன் வழக்கப்பிரகாரம் இபா தத்து செய்வானுகில் அவனிடத்தில் பர்லுகள், சுன்னத்துகள் அதபு கள் எல்லாம் சமமாய்த்தோன்றும். மனிதன் சுன்னத்துகளாலும் நப்லு களாலும் முஹப்பத்துடைய தானத்தில் சேருகின்றன். எப்படியென் றால் "பர்லுகளை இறப்பதினல் அடியார்கள் என் சன்னதிக்கு நெருங்குகிறார்கள் என்றும், எந்த அடியான் சுன்னத்துகளைக் கொண்டும் நப்லுகளைக்கொண்டும், என் சமுகத்தை அடைய நாடுகின் றனே அவனுக்குநான் கண்ணையும் கையாயும் நாவாயுமிருப்பேனுதலால் அவன் என்னைக்கொண்டேபார்ப்பான்; என்னைக்கொண்டே கேட்பான், என்னைக்கொண்டே வாங்குவான்; என்னைக்கொண்டே பேசுவான் என் றும்" அல்லாஹ் தஆலா சொல்கிறதாய் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். ஆதலால் இபாதத்து டைய சுன்னத்துகளையும், அதபுகளையும் நிறைவேற்றுவது மிகமுக்கிய மாயிருக்கும். ஒவ்வொரு தானத்தின் அதபுகளை கவனம் வைக்க வேண்டும்.

ஹஜ்ஜுடைய பிரயாண முயற்சியின் அதபுகள்.

ஹஜ்ஜுக்குப் பிரயாணமாகு முன் தவுபாச்செய்யவேண்டும், யார் யாருக்கு என்னென்ன கொடுக்கவேண்டுமோ அவைகளைக்கொடுத்து விடவேண்டும், கடனை இறுத்துவிடவேண்டும், மனைவிமக்கள் முத லானவர்களின் அன்னவஸ்திரச் செலவுகொடுக்கவேண்டும். வஸியத்து நாமா எழுதி வைக்கவேண்டும், ஹலாலான பொருளில் நின்றும்

வழிச் செலவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும், ஹலால் ஹறாம் என்பதில் சந்தேகமாயிருக்கிற ஷுபுஹத்தான பொருளை விட்டும் பேணவேண்டும், ஏனென்றால் ஷுபுஹத்தான பொருளால் வழிச்செலவு செய்து கொண்டுபோய் ஹஜ்ஜு செய்வானுகில் அவன் ஹஜ்ஜு கபூலாகுவதில் சந்தேக மிருக்கிறது. வழியில் ஏழை மிஸ்கீன்களுக்கு உபகாரம் செய்யக்கூடிய அளவாய்ச் செலவுக்கு வைத்துக் கொள்ள வேண்டும். வழியில் யாதொரு துன்பம் அணுகாமல் சவுக்கியம் வாய்க்கும் பொருட்டுப் பிரயாணப் படுவதற்கு முன்னே ஏதாவது கைரூத்து செய்ய வேண்டும். வலுவுள்ள மிருகத்தை வாடகைக்குப் பிடிக்க வேண்டும். அந்த மிருகத்துக்குடையவன் சம்மதிக்கும் பொருட்டுத் தான் கொண்டு போகக் கருதும் சாமான்களை அவனுக்குக் காண்பிக்க வேண்டும். ஸபர் செய்தவனுயும் தீனுடையவும் வழியினுடையவுமான காரியங்களில் உருக்கமாய் தைரியம் சொல்லித் தேற்றுகிறவனுயு மிருக்கிற ஒரு சாலிஹான துணைவனை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். ஊரிலுள்ள தோஸ்துகளைக் கண்டு பிரயாணத்துக்கு அவர்களிடத்தில் விடைபெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களை கைரூன துவா செய்யும்படி கேட்க வேண்டும் ஒவ்வொருவரிடத்திலும்

استودع الله دينك وامانتك وخواتم عملك

அஸ்தவ்தி உல்லாஹ தீனக வஅமானத்தக வகவாதிம அமலிக என்று ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டும். அவர்கள் அதற்குப் பிரத்தியாக,

في حفظ الله وكنفه وزودك الله التقوى وجنبك الردى وغفر ذنبك ووجهك للخير اينما توجهت

பீஹிப்லில்லாஹி வகனபிஹி வஸவ்வதக்கல்லாஹுத்தக்வா வஜன்னபகர் ரதா வகபற தம்பக வவஜ்ஜஹக லில்கைரி அய்னமா தவஜ்ஜஹ்த்த என்று சொல்ல வேண்டும்.

வீட்டிலிருந்து பயணப் படுமுன்னே இரண்டு றக்அத்துத் தொழ வேண்டும். முந்தின றக்அத்தில் சூரத்து பாத்திஹாவுடன் குல்யா அய்யுஹல் காபிறூனும், இரண்டாம் றக்அத்தில் சூரத்து பாத்திஹாவுடன் குல்ஹு வல்லாஹு. அஹதும் ஓதவேண்டும். கடைசியில்,

اللهم انت الصاحب في السفر وانت الخليفة في الاهل والولد والمال احفظنا واياهم من كل افة اللهم انا نسئلك في مسيرنا هذا البر والتقوى ومن العمل ما ترضى

அல்லாஹும்ம அன்த்தஸ்ஸாஹிபு பிஸ்ஸபரி வஅன்த்தல்கலீ பத்து பில் அஹ்லி வல்வலதி வல்மாலி இஹ்பல்னு வஇய்யாஹும் மின்குல்லி ஆபத்தின் அல்லாஹும்ம இன்னு நஸ்அலுக்க பிமஸீ ரினு ஹாதா அல்பிர்ற வத்தக்வா வமினல் அமலி மாதற்லா என்று ஓத வேண்டும். தன் வீட்டுத் தலைவாசலுக்குச் சென்றவுடன்,

بسم الله توكلت على الله ولا حول ولا قوة الا بالله اللهم بك
انتشرت عليك توكلت وبك اعتصمت واليك توجهت
اللهم زودني التقوى واغفر لي ذنبي ووجهني للخير اينما توجهت

பிஸ்மில்லாஹி தவக்கல்த்து அலல்லாஹி வலாஹவ்ல வலாகுவ் வத்த இல்லாபில்லாஹி அல்லாஹும்ம பிக்க இன்த்தஷர்த்து அலைக்க தவக்கல்து வபிக்க இஃதஸம்த்து வஇலைக்க தவஜ்ஜஹ்து அல்லா ஹும்ம ஸவ்வித்னித்தக்வா வக்பிர்லீ ஸன்பீ வவஜ்ஜிஹ்னீ லில்கைரி ஐனமா தவஜ்ஜஹ்த்து என்று ஓத வேண்டும். வாகனத்தின் மீதேறும் போது,

بسم الله وبالله والله اكبر سبحان الذي سخر لنا هذا
وماكنا له مقرنين وانا الى ربنا لمنقلبون

பிஸ்மில்லாஹி வபில்லாஹி வல்லாஹு அக்பர் ஸுபுஹானல்லதீ ஸக்கறலனு ஹாஸா வமாகுன்னு லஹுமுக்ரினீன வஇன்னு இலா றப்பினு லமுன்கலிபூன் என்று ஓத வேண்டும். செல்லும் பாட்டை முழுவதிலும் அல்லாவுடைய திக்றையும் குற்ஆன் ஓதலையும் கைவிடா திருக்க வேண்டும். மலைகள், குன்றுகள், மேடுகள் முதலான உன்னதஸ் தானங்களின்மேற் செல்லும் போது,

اللهم لك الشرف على كل شرف ولك الحمد على كل حال

அல்லாஹும்ம லகஷ்ஷரபு அலாகுல்லி ஷரபின் வலக்கல் ஹம்து அலாகுல்லி ஹாலின் என்று ஓத வேண்டும். வழியில் ஏதாவது பயங்கரமுண்டானால் ஆயத்தல் குர்ஸியும், ஷஹிதல்லாஹுவும், குல்ஹுவல்லாஹுவும், குல்அவூது பிறப்பில்பலகியும், குல்அவூது பிறப்பின்னுஸியும் முடிய ஓதவேண்டும்.

இஹ்ரும் கட்டுகிறதுடையவும் மக்கத்தில் புகுவதுடையவுமான அதபுகள்.

பிரயாணக்காரர் இஹ்ரும் கட்டுகிற இடமான மீகாத்துக்குச் சென்றால் ஜும்ஆவுடைய பயானிற் சொன்னதுபோல் முந்திக் குளிக்க

வேண்டும், தலைரோமம் களையவேண்டும், நகம் அறுக்கவேண்டும், தைத்த உடைகளைக் களைந்துவிட வேண்டும், வெள்ளை உடுத்தாடையும் தப்பட்டியும் அணியவேண்டும். இஹ்ரும் கட்டுவதற்கு முன்னே நல் வாசம் பூசவேண்டும். பயணமாகும்போது ஒட்டகையை எழுப்பி வழியை எதிர்நோக்கி சப்பில் ஹஜ்ஜை நிய்யத்து செய்து நாவினால்,

لبيك اللهم لبيك لا شريك لك لبيك ان الحمد والنعمة لك
والملك لا شريك لك

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக் லாஷரீக்கலக்க லப்பைக் இன்னல் ஹம்த வந்நிஃமத்த லக்க வல்முல்க்க லாஷரீக்கலக என்று ஓதவேண்டும். செல்லும் வழியில் மேட்டில் ஏறும்போதும் பள்ளத்தில் இறங்கும்போதும் வேறே பிரயாணக்காரரைச் சந்திக்கும்போதும் அடிக்கடி மேற்கண்ட வாக்கியத்தை சப்தமிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கவேண்டும். மக்கத்தின் அருகிற்போய்ச் சேர்ந்தால் குளிக்கவேண்டும். ஹஜ்ஜில் ஒன்பது காரியங்களுக்காக குளிப்பது சுன்னத்து. அவையாவன:—இஹ்ரும் கட்டுவதற்கும், மக்கத்தில் புகுவதற்கும், ஜியாரத்துடைய தவ்வாபுக்கும், அறபாவில் தரிப்பதற்கும், முஸ்தலிபாவில் தங்குவதற்கும், மூன்று குளிப்புகள் மூன்று ஜம்ரூக்களில் கல்லெறிவதற்கும், புயணத்தவ்வாபுக்குமேயாம். என்கினும் ஜம்றத்துல் உக்பாவில் கல்லெறிவதற்காக குளிப்பு தேவையில்லை.

குளித்து மக்கத்தில் புகுந்தால் பைத்துல்லாவின்மேல் பார்வை விழுந்தவுடன்,

لا اله الا الله والله اكبر اللهم انت السلام ومنك السلام وداركَ
دار السلام تباركت يا ذا الجلال والاكرام اللهم هذا بيتك عظمته
وشرفته وكرمته اللهم فزده تعظيما وزده تشريفا وتكريما وزده مهابة
وزد من حجه برا وكرامة اللهم افتح لي ابواب رحمتك وادخلني
جنتك واعذني من الشيطان الرجيم

லாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் அல்லாஹும்ம அன்த்தஸ்ஸலாமு வமின்கஸ்ஸலாமு வதாறுக தாறுஸ்ஸலாமு தபாரக்த யாதல்ஜலாலி வல்இக்ரும் அல்லாஹும்ம ஹாதாபைதுக அல்லம்தஹு வஷர்ரப்தஹு வகர்ரம்த்தஹு அல்லாஹும்ம பஸித்லஹு தஃலீமன் வஸித்லஹு தஷ்ரீபன் வதக்ரீமன் வஸித்லஹு

மூஹாபத்தன் வஸித் மன் ஹஜ்ஜ பிர்ரன் வகரூமத்தன் அல்லா ஹும்ம யிப்தஹ்லீ அப்வாப ரஹ்மத்திக்க வஅத்கில்னீ ஜன்னத்தக்க வஅஇத்னி மினஷ்ஷைதா னிர்றஜீம் என்று ஓதவேண்டும். பிறகு பனிஷைபாவென்னும் வாசல் வழியாய் மஸ்ஜிதுக்குப்போகவேண்டும். ஹஜ்ருல் அஸ்வதிடம்சென்று அதை முத்தமிடவேண்டும். ஜனநெருக்கத்தினால் அதன்கிட்டே செல்லக்கூடவில்லையானால் அதன் பக்கமாய்க் கையை நீட்டி,

اللهم اما نتى ادينها وميثاقي تعاهدته اشهد لے بالوفاء

அல்லாஹும்ம அமானதீ அத்தைத்துஹா வமீஸாகீ தஆஹத்துஹ அஷ்ஹத்லீ பில்முவாபாத்தி என்று ஓதவேண்டும். பின்பு தவ்வாபு செய்ய வேண்டும்.

தவ்வாபு செய்வதின் அதபுகள்.

அறிந்துக்கொள் தவ்வாபானது தொழுகையைப் போலாயிருக்கும். தொழுகைக்கு எப்படியே அப்படியோ தவ்வாபுக்கும் தேக வஸ்திரங்கள் சுத்தமாயிருப்பதும், மானம் மறைய உடை உடுப்பதும் ஷரத்தாயிருக்கும். ஆனல் தவ்வாபு செய்யும்போது பேசுவது ஆகும். தவ்வாபை ஆரம்பிக்கு முன்னே இஸ்த்திபாகு என்னும் சுன்னத்தை அதாச் செய்யவேண்டும். இஸ்த்திபாகு என்பது அங்கவஸ்திரத்தின் நடுவை வலதுகைக்குக் கீழே ஆக்கி அதன் இரண்டு முந்தாணிகளையும் இடதுதோளின்மேல் போட்டுக்கொள்வதேயாம். பிறகு பைத்துல்லாவை விலாப்புறமாக்கி ஹஜ்ருல் அஸ்வதில் நின்றும் தவ்வாபை ஆரம்பிக்கவேண்டும். பைத்துல்லாவுடைய ஹத்தில் அடங்கின ஷாதுர்வான் மீது கால்படாதிருக்கும் பொருட்டு பைத்துல்லாவுக்கும் தனக்கும் மூன்றடிக்குக் குறையாத தூரத்திலிருந்து தவ்வாபு செய்யவேண்டும். தவ்வாபு செய்யத் தொடங்கும்போது,

اللهم ايمانا بك وتصديقا بكتابك ووفاء بعهدك
واتباعا لسنة نبيك محمد صلى الله عليه وسلم

அல்லாஹும்ம ஈமானன் பிக்க வதஸ்தீக்கன் பிகிதாபிக்க வவபாஅன் பிஅஹ்திக வஇத்திபாஅன் லிஸுன்னத்தி நபீய்யிக முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று ஓதவேண்டும் வாசற்படியண்டை வரும்போது,

اللهم هذا البيت بيتك وهذا الحرم حرمك وهذا الامن امنك
وهذا المقام العائذ بك من النار

அல்லாஹ்ம்ம ஹாதல்பைத்து பைத்துக்க வஹாதல் ஹறமு ஹறமுக்க வஹாதல் அம்னு அம்னுக்க வஹாதல் மகாமுல் ஆயிது பிக்க மினன்னரி என்று ஓதவேண்டும் றுகுனு இராகியினிடம் வரும் போது,

اللهم انى اعوذبک من الشک والشرک والکفر والنفاق والشقاق وسوء الاخلاق وسوء المنظر في الاهل والمال والولد

அல்லாஹ்ம்ம இன்னீ அவுது பிக்க மினஷ்ஷக்கிவஷ்ஷிர்கி வல்குபுரி வந்நிபாகி வஷ்ஷிகாகி வசூயில் அக்லாகி வசூயில் முன்லரி பில்அஹ்லி வல்மாலி வல்வலதி என்று ஓதவேண்டும். நீர் விழும் தூம்பின் கீழ் வரும்போது;

اللهم اظلنى تحت عرشک يوم لا ظل الا ظل عرشک اللهم اسقنى في کاءس محمد صلي الله عليه وسلم شربة لا اظماء بعده ابدا

அல்லாஹ்ம்ம அலில்லனி தஹ்த்த அறுஷிக்க யவுமலாலில்ல இல்லாலில்ல அறுஷிக்க அல்லாஹ்ம்ம அஸ்கினி பீகஃஸி முஹம் மதின் ஸல்லல்லாஹ் அலேஹி வஸல்லம ஷரபத்தன் லாஅல்மஉ பஃதஹ் அபதா என்று ஓதவேண்டும். றுகுனு ஷாமியினிடம் வரும் போது,

اللهم اجعله حجا مبرورا وسعيا مشکورا وذنبا مغفورا وتجارة لن تبور ياعزيز يا غفورا غفروا رحم وتجاوزعما تعلم انک انت الاعز الاکرم

அல்லாஹ்ம் மஜ்அல்ஹ் ஹஜ்ஜன் மப்றூறன் வஸஃயன் மஷ் கூறன் வதம்பன் மக்பூரன் வதிஜாரத்தன் லன்தபூர யாஅஸீஸ் யாக பூறு இக்பிர் வர்ஹம் வதஜாவஸ் அம்மாதஃலமு இன்னக்க அன்தல் அஇஸ்ஸ்ல் அக்றம் என்று ஓதவேண்டும். றுகுனு எமாமியினிடம் வரும்போது,

اللهم انى اعوذبک من الفقر ومن عذاب القبر ومن فتنة المحيا والممات واعوذبک من الخزي في الدنيا والاخرة

அல்லாஹ்ம்ம இன்னீ அவுதுபிக்க மினல் பக்ரி வமின் அதாபில் கப்ரி வமின் பித்னதில் மஹ்யா வல்மமாத்தி வஅவுது பிக்க மினல் கிஸ்யி பித்துன்யா வல்ஆகிரா என்று ஓதவேண்டும். இந்த றுகுனுக் கும் ஹஜ்றுல் அஸ்வதுக்கும் மத்தியில் வரும்போது,

اللهم ربنا اتنا في الدنيا حسنة وفي الاخرة حسنة وقنا
برحمتك عذاب القبر وعذاب النار

அல்லாஹும்ம றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா பிறஹ்மத்திக்க அதாபல் கப்ரி வஅதாபன்னாரி என்று ஓதவேண்டும். இது ஒரு சுற்றாயிற்று. இப்படியே ஏழுதரம் சுற்றவேண்டும். ஒவ்வொரு சுற்றிலும் மேற்கண்ட துவாக்களை ஓதவேண்டும். முந்தின மூன்று சுற்றுகளில் ஆனந்தத்தோடு விரைவாய் நடக்கவேண்டும். பைத்துல்லாவின் அருகில் ஜனநெருக்கமாயிருந்தால் தூரத்தில்போய் ஜல்தி ஜல்தியாய் தவ்வாபு செய்யவேண்டும். பிந்தின நான்கு சுற்றுக்களில் மெதுவாய் நடக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் ஹஜ்றுல் அஸ்வதை முத்தமிட்டும் றுக்னு எமானியைக் கையால் தடவியும் வரவேண்டும். ஜனநெருக்கத்தினால் அப்படித் தடவமுடியாமற்போனால் கையினால் இஷாரு செய்யவேண்டும். ஏழு சுற்றுகள் பூர்த்தியாய் விட்டால் பைத்துல்லாவுக்கும் ஹஜ்றுல் அஸ்வதுக்கும் மத்தியில் நின்று வயிற்றையும், மார்பையும், வலது கன்னத்தையும், கஃபாவின் சுவற்றோடணைத்து இரண்டு உள்ளங்கைகளைச் சுவற்றின்மேல் வைத்து அதன்மேல் தலையை வைக்கவேண்டும், அல்லது கஃபாவின் ஆஸ்தானமாகிய வாசற்படியில் வைக்கவேண்டும். இந்த இடத்துக்கு முல்த்தஸிம் என்று சொல்லப்படும். இந்த இடத்தில் துஆ கபூலாக்கப்படுகின்றது. இவ்விடத்தில்,

اللهم يارب البيت العتيق اعتق رقبتي من النار واعذني
من كل سوء وقنعني بما رزقتني وبارك لي فيما اتيتني

அல்லாஹும்ம யாறப்பல் பைத்தல் அத்தீகி அஃதிக் றகபத்தி மினன்னாரி வஅஇஸ்னீ மின்குல்லி சூயின் வகன்னிஃனீ பிமா ரஜக்தனி வபாரிக்லீ பீமா ஆதைதனி என்றோத வேண்டும். பின்பு ஸலவாத்து ஓதவேண்டும். இஸ்திக்பாறு செய்யவேண்டும். கோரிக்கைகளைக்கேட்க வேண்டும் இதன் பிறகு மகாமுக்கு முன்னால் நின்று இரண்டு றக்அத்தத் தொழவேண்டும். இதற்குத் தவ்வாபுடைய துகாஹ என்று பெயர். இதோடுதான் தவ்வாபு முடிவு பெருகின்றது. இத்தொழுகையின் முந்தின றக்அத்தில் சூறதுல் பாத்திஹாவுடன் குல்யாவும் இரண்டாம் றக்அத்தில் சூறத்துல் பாத்திஹாவுடன் குல்ஹு வல்லாஹுவும் ஓதவேண்டும். தொழுத பிறகு துஆகேட்கவேண்டும். ஏழு சுற்றுகள் ஆகாதவரையில் ஒரு தவ்வாபும் பூர்த்தியாகிறதில்லை. ஒவ்வொரு தவ்வாபிலும் இந்த துகாஹவைத் தொழவேண்டும். பிறகு ஹஜ்றுல் அஸ்வதியிடம் சென்று அதை முத்தமிடவேண்டும். இதோடு தவ்வாபை முடித்துவிட்டு சயீ செய்வதில் முயலவேண்டும்.

சயீசெய்வதின் அதபுகள்.

பின்பு ஸபாமலைக்குப்போய் கஃபா ஷரீபு தெரியும்படி அத்தனை படிகள் ஏரவேண்டும். பின்பு கஃபாவின்பக்கம் முகம் நோக்கி,

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيي
ويميت وهو لا يموت بيده الخير وهو علي كل شيء قدير لا اله الا الله
وحده صدق وعده ونصر عبده واعز جنده وهزم الاحزاب وحده
لا اله الا الله مخلصين له الدين ولو كره الكافرون

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவலாய மூத்து பியதிஹில் கைறு வஹுவ அலாகுல்லி ஷையின் கதீர் லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு ஸதக வஃதஹு வநஸற அப்தஹு வஅஅஸ்ஸ ஜுந்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு லாஇலாஹ இல்லல்லாஹு முக்லிஸீன லஹுத்தீன வலேளகரிஹல் காபிறூன் என்று ஓத வேண்டும். துவா செய்யவேண்டும், முறுது களைக் கேட்க வேண்டும். பின்பு அங்கிருந்திறங்கி ஸயீ செய்யத் தொடங்க வேண்டும். மருவாமலை வரையில் போவதில் முதலில் மெது வாய் நடக்க வேண்டும்.

رب اغفر وارحم وتجاوز عما تعلم انك انت الاعز الاكرم اللهم ربنا اتنا
في الدنيا حسنة وفي الاخرة حسنة وقنا عذاب النار

றப்பிக்பிர்வர்ஹம் வதஜாவஸ் அம்மாதஃலம் இன்னக்க அன்த் தல் அஅஸ்ஸுல் அக்றம் அல்லாஹும்ம றப்பனு ஆத்தினு பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிறத்தி ஹஸனத்தன் வகினு அஸாபன்னர், என்று ஓத வேண்டும். மஸ்ஜிதின் மூலைப்பக்கமா யிருக்கிற பச்சை மீல் வரையில் மெதுவாய் நடக்கவேண்டும். அதன் பிறகு மற்ற இரண்டு மீல்களுக்குச் செல்லுகிற வரையில் ஆறுகஜதூரம் துரிதமாய் நடக்க வேண்டும். பின்பு மறுவாமலைக்குப் போகிற வரையில் மெதுவாய் நடக்கத் தொடங்க வேண்டும். மருவாமலையின் மீதேறி ஸபாமலையை நோக்கி மேற்சொன்ன துஆக்களை ஓதவேண்டும். இது ஒருதரம் ஆயிற்று. ஸபாமலைக்குப் போனால் இரண்டுதரம் என்றாகும். இதே விதமாய் ஏழுதரம் ஸயீசெய்தொழிந்தால் குதூமுடையவும் ஸயீ யுடையவுமான தவ்வாபுகள் செய்ய வேண்டும். ஹஜ்ஜில் இந்த தவ்வாபு ஸுன்னத்தா யிருக்கும். ஆனால் முகுனுடைய தவ்வாபை அறபாவில் தரிப்பட்டதின் பின்னால் செய்ய வேண்டும். ஸயீயின்போது ஒலுவிருப்

பது சுன்னத்தாயும் தவ்வாபின்போது வாஜிபாயு மிருக்கிறது. இந்த ஸயீயேபோதும். அறபாவில் தரிப்பட்டபின் சயீசெய்வது ஷறத் தல்ல. ஆனல் சயீசெய்வது தவ்வாபுக்குப் பிந்தியாயிருக்க வேண்டும். அந்த தவ்வாபு ஸுன்னத்தா யிருந்தாலும் சரியே.

அறபாவில் தரிப்படுவதின் அதபுகள்.

அறிந்து கொள்ளுங்கள்:—அறபாவுடைய நாளில் காபிலாக்காரர் அறபாத்திற் போய்ச் சேர்ந்தால், குதூமுடைய தவாபு செய்யமாட்டார் கள். அறபாநாளுக்கு முன்னே வந்து சேர்ந்தால் அப்போது குதூ முடைய தவாபை நிறைவேற்றுவார்கள். தர்வியாவுடைய நாளில் மக்கத்திலிருந்து புறப்பட்டு அந்த இரவில் மினுவில் தங்கி மறுநாள் அறபாத்துக்குப் போவார்கள். அறபாவுடைய நாளில் பொழுது மதி யத்தை விட்டுச் சாய்ந்த நேரம் தொடங்கி ஈதுடைய ஸுபுஹு உதய மாகிற வரையில் அறபாவில் தரிக்கும் நேரமா யிருக்கும். ஸுபுஹு ஆனதின் பிறகு போய்ச் சேர்ந்தால் ஹஜ்ஜு தவறிப்போம்.

அறபாவுடைய நாளில் குளிக்கவேண்டும். அஸறு தொழுகையை லுஹறு தொழுகையுடன் சேர்த்துத் தொழவேண்டும். துவா செய் வதில் பராக்காக வேண்டும். ஹஜ்ஜினுல் முக்கியமாய் நாடப்பட்டது துவாவேயாம். அந்த சிறப்பான நேரத்தில் ஜனங்களின் மனம் ஓர்மிப்பதாயும் அவர்களின் துவா கபூலாக்கப் படுவதாயு மிருக்கிறது. லாஇலாஹ இல்லல்லாஹு என்ற திக்று அந்த நேரத்தில் மிக நன்மை யானதா யிருக்கிறது. பொழுது மத்தியத்தை விட்டுச் சாய்ந்தது தொடுத்து மாலே நேரம் வரையில் கெஞ்சியழுது இஸ்திக்பாரு ஓதி கலப்பற்ற நெஞ்சோடு தௌபாச் செய்து சென்ற பாவங்களுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும். அந்த நேரத்தில் ஓதுகிற துஆக்கள் அநந்த மிருக்கின்றன. அவைகளை இங்கு எழுதுவது கிதாபு விரிவதற் காரணமாகும். இஹ்யாவுல் உலூமித்தினில் அவைகள் எழுதப் பட் டிருக்கின்றன. அதிலிருந்து பாடமிட்டுக் கொள்ளவும். பின்பு ஏதா வது பாடமாயிருக்கிற துவாவை ஓதுவான். ஏனென்றால், மாஸூறு வாகிய எல்லா துவாக்களையும் அந்தநேரத்தில் ஓதுவது மிக நன்மையா யிருக்கும். பாடம் செய்யக்கூடாமற் போனல் எழுதியதைப் பார்த்து ஓதுவான் அல்லது மற்றொருவனை ஓதச்சொல்லி தான் ஆமீன் கூறு வான். சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னே அறபாத்துடைய ஹத்து களை விட்டுத் தாண்ட மாட்டான்.

ஹஜ்ஜுடைய மற்றும் அமல்களின் அதபுகள்.

அறபாவில் தரிப்பட்டதின் பிறகு அங்கிருந்து முஸ்தலிபாவுக் குப் போகவேண்டும், குளிக்கவேண்டும். ஏனென்றால், முஸ்தலிபாவா

கிறது ஹறமில் சேர்ந்ததா யிருக்கும். மக்ரிபு தொழுகையைப் பிற் படுத்தி அதை இஷாவுடன் சேர்த்து ஒரே பாங்கும் காமத்தும் கொண்டு தொழ வேண்டும். கூடுமானுல் அந்த இரவில் அங்கு விழித்த வணங்கிக் கொண்டிருப்பான். எனென்றுல் இந்த இரவு பெரிய வரிசை யுள்ளதா யிருக்கிறது. முஸ்தலிபாவில் இராத் தங்குவது இபாதத் துடைய தொழுகையில் சேர்ந்ததா யிருக்கும். யாராவதொருவன் இங்கு தங்கா விட்டால் ஒரு ஆடறுப்பது விதியாகும். மினுவிற் போய் கல்லெறிவதற்காக இங்கிருந்து ஏழு கற்களை எடுத்துக் கொள்வான். எனென்றுல் இவ்வகையான கற்கள் இங்கு மிகுதமாயுண்டு. இரவு இரண்டு ஜமாஅத்திற்கு மினுவுக்குப் போவான். ஸுபுஹு தொழு கையை இருட்டோடே தொழுது கொள்வான். முஸ்தலிபாவின் கோடி யில், மஷ்அறுல் ஹறமென்று சொல்லப்படுகிற இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் வெளிச்சமாகிற வரையில் அங்கு தங்கி யிருந்து துவா கேட் பான். பின்பு அங்கிருந்து வாதியுல் மஹ்ஸர் என்ற இடத்திற்கு போக கோரிடும். அந்த வாதியுல் மஹ்ஸருடைய மைதானத்தைக் கடக்கிற வரையில் மிருகத்தைச் சிக்கிரம் நடத்துவான். காலாளா யிருந்தால், தானே துரிதமாய் நடப்பான். எனென்றுல், இது தான் சுன்னத்தா யிருக்கும்.

பின்பு ஈதுடைய காலை நேரம் தொடங்கி ஜம்ரத் தென்று சொல்லப்படுகிற மேட்டைத்தாண்டி அங்கிருந்து, (கிப்லாவின் பக்கம் முகம் நோக்கினுல்) வழியின் வலது பக்கத்தி லிருக்கிற ஜம்றத்துல் உக்பா வென்ற மேட்டினிடம் சேருகிற வரையில் சில வேளை தக்பீரும் சில வேளை தல்பியாவும் சொல்லிக் கொண்டிருப்பான். எப்பொழுது சூரியன் ஒரு வல்லய உயரம் உயர்ந்து விட்டதோ அப்போது ஏழு கற் களை இந்த ஜம்ரூவில் எறிவான். அந்த வேளையில் கிப்லாவின் பக்கம் முகம் நோக்குவது மேலாயிருக்கும். தல்பியாவுக்கு பதில் இங்கு தக்பீர் சொல்லுவான். ஒவ்வொரு கல்லையும் எறியும் போது

اللهم تصديقا بكتابك واتباعا لسنة نبيك

அல்லாஹும்ம தஸ்தீகன் பிகிதாபிக்க வஇத்திபாஅன் லிஸுன் னத்தி நபிய்யிக்க என்று ஓதுவான். கல் எறிந்தாய் விட்டால் தல்பியா வையும் தக்பீரையும் நிறுத்தி விடுவான். ஆனுல் அய்யாமுத் தஷ்ரீ குடைய கடைசி நாளின் ஸுபுஹு வரையில் பர்லு தொழுகைக்குப் பின்னுல் சொல்லிக் கொண்டு வருவான். அது ஈது நாளில் நின்றும் நாலாம் நாளா யிருக்கும். பின்பு தான் இறங்கி யிருக்கும் இடத்துக்குப் போய் துஆ கேட்பதில் பராக்காகுவான். பின்பு குறுபானி செய்ய வேண்டுமானுல் செய்வான். அதன் ஷறத்துகளைக் கவனித்துக் கொள்

வான். அதன் பிறகு தலே முடி இறக்குவான். எப்போது அந்த தினத்தில் கல் எறிதலும் முடி இறக்குதலும் செய்தாய் விட்டதோ அப்போது ஒரு தஹல்லுல் உண்டாய் விட்டது. அதாவது :— இஹ்ரூமில் விலக்கப்பட்டிருந்தவைகளில் ஜிமாஉம் வேட்டையாடுவதும் நீங்கலாக மற்றுங் காரியங்கள் ஹலாலாய் விடும். பின்பு மக்கத்திற் போய் றுகுனுடைய தவாபை நிறைவேற்றுவான். ஈதுடைய இரவின் முற்பாதி பாகம் சென்ற பிறகு இந்த தவாபின் நேரம் ஆரம்பிக்கின்றது. என்கிலும் இந்த தவாபை ஈதுடைய பகலில் செய்வது அதிக மேலாயிருக்கும். இந்த தவாபின் கடைசி நேரம் குறிக்கப்படவில்லே. எவ்வளவு பிற்படுத்தினாலும் தவறிப்போகாது. ஆனல் இதைச் செய்யாத வரையில் மற்றொரு தஹல்லுல் உண்டாக மாட்டாது. ஜிமாவு செய்வது ஹறாமாய் நிற்கும். எப்பொழுது இந்த தவாபையும், குதுமுடைய தவாபிற் சொல்லப்பட்ட விதமாய்ச் செய்தாகுமோ அப்போது ஹஜ்ஜு முடிவாகும். ஜிமாஉம் வேட்டையாடுவதும் ஹலாலாகும்.

முந்தியே ஸயீ செய்திருந்தால் மறுதடவை ஸயீசெய்யமாட்டான். முதலில் செய்யவில்லையானல், றுகுனுடைய ஸயீயை இந்தத் தவாபுக்குப் பிந்தி செய்வான். எப்பொழுது கல்லெறிதலும் முடியிறக்குதலும் தவாபும் செய்தாயிற்றோ அப்பொழுது ஹஜ்ஜு பூர்த்தியாய் விட்டது. இஹ்ரூமில் நின்றும் நீங்கினன். ஆனல் அய்யாமுத் தஷ்ரீகில் கல்லெறிவதும் மினுவில் இராத் தங்குவதும் இஹ்ரூம் நீங்கினதின் பின்னு யிருக்கும். ஸயீயும் தவாபும் செய்தான பிறகு ஈதுடைய நாளில் மீண்டும் மினுவுக்கு வருவான். அந்த இரவில் அங்கே தங்குவான் ஏனென்றல் இந்த தங்குதல் வாஜிபா யிருக்கும். மறுநாள கல்லெறிவதற்காக மதியத்திற்கு முன்னே குளிப்பான். அறபாத்தின் பக்கமா யிருக்கிற ஜும்றத்துல் ஊலாவில் ஏழு கற்களே எறிவான். அந்த வேளையில் கிப்லாவை நோக்கி நின்று பகரு சூரத்துடைய அளவுக்கு துஆ செய்வான்; பின்பு ஜும்றத்துல் உஸ்தாவில் ஏழு கற்களே எறிவான்; துஆ செய்வான். பின்பு ஜும்றத்துல் உக்பாவில் ஏழுகற்களே எறிவான். இந்த இரவில் மினுவில் தங்குவான்; பின்பு ஈதின் மூன்றும் நாளும் இதே ஒழுங்காய் அந்த மூன்று ஜும்றுக்களிலும் இருபத்தோர் கற்களே எறிவான். நாடினுல் இதோடே போதுமாக்கிக் கொண்டு மக்கத்திற்குப் போவான். அப்படிப் போகாமல் சூரியன் அஸ்தமிக்கிற வரையில் இருப்பானுகில் அந்த இரவிலும் அங்கு தங்குவது வாஜிபாய் விடும். மறுநாளிலும் இருபத்தோர் கற்களெறிவது விதியாகும். ஹஜ்ஜுடைய எல்லா விபரங்களும் மேற் சொல்லி வந்தவைகளேயாம்.

உம்ரூவின் பயான்.

உம்ரூ செய்யநாடினால் குளித்து ஹஜ்ஜில் அணிவதுபோல் இஹ்ரூமின் உடையணிந்து கொள்வான். மக்கத்தினின்று புறப்பட்டு உம்ரூவுக்கு இஹ்ரூம் கட்டும் தலமாகிய மீகாத்துவரையில் போவான். அந்த மீகாத்துகளாவன:—ஜுஃபுரூனு, தன்யீம், ஹுதைபிய்யா இந்த ஸ்தலங்களேயாம். அங்கே உம்ரூவை நிய்யத்து செய்து லப்பைக் சொல்லுவான். ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவின் பள்ளியில்போய் இரண்டு றக்அத்து தொழுவான்; பின்பு மக்கத்துக்குத் திரும்புவான். வழியில் லப்பைக் சொல்லுவான். மஸ்ஜிதுக்குச் சென்றபிறகு தலை முடி இறக்குவான்: இதோடு உம்ரூ முடிவாய்விட்டது. உம்ரூவை வருஷமுழுவதிலும் செய்யலாம். எவன் மக்கத்திலிருக்கிறானோ அவன் தன்னால் கூடியவரையில் எத்தனை விடுத்தமானாலும் உம்ரூ செய்வான். இல்லாவிட்டால் தவாபு செய்வான். இதுவும் சாத்தியப்படாமற்போனால் பைத்துல்லாவைப் பார்ப்பான். பைத்துல்லாவுக்குப்போனால் இரண்டு தூண்களுக்கு மத்தியில் தொழுவான். பைத்துல்லாவை சங்கிப்பதோடும் கனப்படுத்துவதோடும் அதில் வெறுங் காலாய்ப்போவான். ஸம்ஸம் தண்ணீரை வயிறுநிறையக் குடிப்பான். எந்த நிய்யத்துகொண்டு குடித்தாலும் சௌக்கியமுண்டாகும். அப்போது,

اللهم اجعله شفاء من كل سقم وارزقني الاخلاص واليقين والمعافات في الدنيا والاخرة

அல்லாஹும் மஜ்அல்ஹு ஷிபாஅன் மின்குல்லி ஸுக்மின் வர்ஸுக்னில் இக்லாஸ வல்யகீன வல்மு ஆபாத்த பித்துன்யா வல் ஆகிறு என்றோதுவான்.

பிரயாணத்தவ்வாபின் பயான்.

ஊருக்கு திரும்ப நாடினால் முந்திசாமான்களைக் கட்டுவான். அதன் பிறகு பிரயாணத்திற்கு பைத்துல்லாவை விட்டுப் பிரிகின்றானால் அதை ஏழுதரம் தவாபு செய்வான். இரண்டு றக்அத்துத் தொழுவான். தவாபுடைய பாபில் முன்சொல்லிருக்கிறதுபோல் ஆனால் இந்தத் தவாபில் இள்திபாகு செய்வதும் விரைவாய் நடப்பதும் அவசியமில்லை. பிறகு முல்தஸிமுக்கு வந்து துவாசெய்து கஃபாவைப் பார்த்துக்கொண்டே பின்னடையாய்த் திரும்புவான்; மஸ்ஜிதில் நின்றும் வெளியே வருகிறவரையில் இதேவிதமாய் நடப்பான்.

மதீனு முனவ்வருவுடைய ஸியாரத்தின் பயான்,

பின்பு மதீனு முனவ்வருவுக்குப்போவான். ஏனென்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் திருவாயினால், எவன் என்னுடைய வபாத்தின் பிறகு என்னை ஸியாரத்து செய்கிறானே அவன் என் ஹயாத்தில் என்னைக் கண்டவன்போல் ஆகின்றானென்றும், ஒருவன் என்னை ஸியாரத்து செய்கிற எண்ணமின்றி வேறு எண்ணமில்லாதவனாய் மதீனத்துக்கு வருவானாகில் அல்லாஹு தஆலா இடத்தில் அவனுடைய ஹக்கு ஸாபித்தாகுமென்றும் அவனுக்காக என்னை மன்றாடச் செய்வானென்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

மதீனத்துடைய வழியில் ஸலவாத்தை மிகுதமாய் ஓதுவான். எப்போது மதீனுவுடைய சுவரின்மேல் பார்வை விழுந்ததோ அப்போது,

اللهم هذا حرم رسولك فاجعله لي وقاية من النار وامانة
من العذاب وسوء الحساب

அல்லாஹும்ம ஹாஸா ஹரமு ரஸூலிக்க பஜ்அல்ஹுலீ விகாயத்தன் மினன்னார் வஅமானத்தன்மினல் அஸாபிவஸூஇல் ஹிஸாப் என்று இந்த துவாவை ஓதுவான். முந்தி குளித்து அதன் பிறகு மதீனுவில் புகுவான். நல்லவாசனை பூசுவான், வெள்ளை உடை அணிவான். புகும்போது தாழ்மையாயும் அமரிக்கையாயு மிருப்பான். அப்போது,

اللهم ادخلني مدخل صدق فاخرجني مخرج صدق
واجعل لي من لدنك سلطانا نصيرا

அல்லாஹும் மத்கில்னீ முத்கலஸித்கின் வ்அக்ரிஜ்னீ முக்றஜ ஸித்கின் வஜ்அல்லீ மில்லதுன்க்க சுல்த்தானன் நஸீரு என்று ஓதுவான். பின்பு மஸ்ஜித்தில்போய் மிம்பருடைய தூண்களுக்கு தன் வலது தோளுக்கு எதிரே இருக்கும்படி மிம்பரின் அடியில் இரண்டு றக்அத் தொழுவான். ஏனென்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்த இடத்தில்தான் நிற்கிறவர்களாயிருந்தார்கள். பின்பு ஸியாரத்துசெய்வான், றவுலாஷரீபின் சுவற்றின் பக்கம் முகம் நோக்கி முதுகை கிப்லா பக்கமாக்குவான். கையை சுவற்றின்மேல் வைத்து அதை முத்தமிடுவது சுன்னத்தல்ல மேலும் தூரத்திலிருப்பது பெரிய மரியாதையாயிருக்கும். பிறகு பின்வருமாறு ஸலாம் சொல்லுவான்.

السلام عليک يا رسول الله السلام عليک يا نبى الله السلام عليک يا حبيب الله السلام عليک يا صفى الله السلام عليک يا سيد ولد ادم السلام عليک يا سيد المرسلين وخاتم النبيين ورسول رب العالمين السلام عليک وعلى الک واصحابک الطاهرين وازواجک الطاهرات وامهات المؤمنين جزاک الله عنا افضل ما جزا نبيا عن امته وصل عليک كلما ذكرک الذاكرون وغفل عن ذكرک الغافلون

அஸ்ஸலாமு அலைக்க யாரஸூலல்லாஹ் அஸ்ஸலாமு அலைக்க யா நபிய்யல்லாஹ் அஸ்ஸலாமு அலைக்க யாஹபீபல்லாஹ் அஸ்ஸலாமு அலைக்க யாஸபிய்யல்லாஹ் அஸ்ஸலாமு அலைக்க யாஸையிதல் வுல்தி ஆதம் அஸ்ஸலாமு அலைக்க யாஸையிதல் முர்ஸலீன் வகாதமன் நபிய்யீன் வரசூல றப்பில் ஆலமீன் அஸ்ஸலாமு அலைக்க வஅலாஆலிக வஅஸ்ஹாபிக்கத்தாஹிறீன் வஅஸ்வாஜிக்கத் தாஹிறாத்தி வஉம்ம ஹாத்தில் முமினீன் ஜஸாக்கல்லாஹு அன்னா அப்பல மாஜஸா நபிய்யன் அன்உம்மத்திஹி வஸல்லி அலைக்க குல்லமா ஜகரக்கஸ்ஸாகிறான் வகபல அன்ஸிக்ரிகல் காபிலூன்.

யாராவது நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஸலாம் செலுத்தும்படி சொல்லியிருந்தால் இவ்விதம் சொல்வான்.

السلام عليک يا رسول الله من فلان السلام عليک يا رسول الله من فلان

அஸ்ஸலாமு அலைக்க யாரசூலல்லாஹி மின்புலானின் ↑அஸ்ஸலாமு அலைக்க யாறசூலல்லாஹி மின்புலானின் *பின்பு கொஞ்சம் முன்னே சென்று அபூபக்கர் ஸித்தீகு, உமர் றலியல்லாஹு அன்ஹுமா இவர்கள்பேரில் இவ்விதம் ஸலாம் சொல்லுவான்.*

السلام عليكما يا وزيرى رسول الله والمعاونين له على القيام
في الدين ما دام حيا والقائمين بعده في امته بامور الدين
يتبعان في ذلک اثاره ويعملان بسنته فجزاكم الله خير
ما جزي وزراء نبى على دينه

↑புலானின் என்ற ஸ்தானத்தில் ஸலாம் சொல்லச் சொன்னவர்களுடைய பெயரைச் சொல்லவேண்டியது.

அஸ்ஸலாமு அலைக்குமா யாவஸீநீ றஸூலில்லாஹி வல்முஆ வினீன லஹு அலல்கியாமி பித்தீனி மாதாமா ஹையன் வல்காயி மைனி பஃதஹு பீஉம்மதிஹி பிஉமூரித்தீனி யத்தபீஆனி பிதாலிக்க ஆஸாரஹு வயஃமலானி பிஸன்னத்திஹி பஜ்ஸாக்குமல்லாஹு கைற மாஜஸா வஸறுஅ நபிய்யின் அலாதீனிஹி பின்பு அங்கே நின்று கொண்டு எவ்வளவுகேட்க சக்தி யிருக்கின்றதோ அவ்வளவு துவா கேட்பான். பின்பு அங்கிருந்து புறப்பட்டு பகீஉ என்னும் கபுறுஸ் தானுக்குப்போய் பெரியோர்களுடையவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர்களுடையவுமான கபுறுகளை ஸியாரத்து செய்வான். மதீனுவை விட்டுப் புறப்படும்போது மறு தடவை றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் றவுலாவுக்குப்போய் ஸியாரத்து செய்துகொண்டு அங்கிருந்து பிரயாண மாகுவான்.

ஹஜ்ஜில் அமைந்திருக்கும் இரகசியங்கள்.

மேற்சொல்லி வந்த ஹஜ்ஜின் வெளியுறுப்பான ஒவ்வொரு அமலி லும் ஒரு இரகசியம் இருக்கின்றது. ஹஜ்ஜைக்கொண்டு நாட்டப் பட்டதென்னவென்றால், மனிதன் உற்றுணர்ந்து ஆகிறத்துடைய காரியங்களை நினைவு கூரவேண்டுமென்பதேயாம். ஹஜ்ஜின் பிரதான இரகசியம் யாதெனில், இஸ்லாமுடைய உணுவானில் கூறியபடி மனி தன் தன்னுடைய இக்தியாரை (சுயதந்திரத்தை) அல்லாவினிடம் ஒப்பு விக்காத வரையில் பூரணபதவியை அடையமாட்டான். இத்தகைமை யாய் அவனைப் படைக்கப்பட்டிருக்கிறது. அவன் தன் மனேஇச்சை யின்படி நடப்பது அவனின் கேட்டுக்குக் காரணமாகும். அவன் சுய தந்திரனுய் இருக்கிறவரையில் இன்னும் எதையும் மார்க்க விதிப்படி செய்யாதவரையில் அவன் தன் இச்சையைப் பின்பற்றினவனுயிருக்கின் றன். அவனின் நடவடிக்கை அடிமையின் நடவடிக்கைபோலர்காது. ஆனல் அவனின் நற்பதவியோ அடிமைத்தனத்தில் தானிருக்கிறது. இதனுலேயே முந்தின மார்க்கங்களில் ஒவ்வொரு உம்மத்துக்கும் சன்னியாசமும் துறவறமும் அருளப்பட்டிருந்தது. அம்மார்க்கங்களின் ஆபிதுகள் மலைகளிற்போய் வாழ்நாள் முழுவதும் தவம்புரிகின்றவர் களாயிருந்தார்கள். பின்பு ஜனங்கள் ஹலாத் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடத்தில், யாறசூலல்லாஹ் நம்முடைய மார்க் கத்தில் சன்னியாசமும் துறவறமும் இல்லாத காரணமென்னவென்று கேட்டதற்கு, அதன் ஸ்தானத்தில் ஜிஹாதையும் ஹஜ்ஜையும் விதிக்

கப்பட்டதென்று உத்தரங்கூறினார்கள். ஆதலால் அல்லாஹு தஆலா சன்னியாசத்திற்குப் பதிலாக இந்த உம்மத்தோர்க்கு ஹஜ்ஜை அருளி யிருக்கின்றான். ஏனென்றால் ஹஜ்ஜில் தவமும் உண்டா யிருக்கிறது. அதனோடு உற்றுணர்ந்து அச்சமடைவதற்குரிய சாதனங்களு மிருக் கின்றன.

அதெப்படியென்றால், அல்லாஹு தஆலா கஃபாவுக்குப் பெரு மையைக்கொடுத்து அதைத் தன் பக்கம் சேர்த்து அதற்குத் தன் சன் னதி என்று பேரிட்டான்; இன்னும் அதை சுல்தான்களுடைய கொலு மண்டபம்போல் ஆக்கினான். அதைச்சூழ ஹறமை ஏற்படுத்தினான். அதன் மகத்துவம் நிலைத்தோங்கும் பொருட்டு அங்கு வேட்டை யாட லும் விருக்ஷம் தரித்தலும் கூடாதென்று விலக்கினான். அறபாத்தை ஹறமுக்கு எதிராக கொலுவுக்கெதிரில் அமைக்கும் முத்த வெளிபோல் அமைத்தான். ஏனென்றால் ஜனங்கள் பல பக்கங்களினின்றும் பைத்துல் லாவை தரிசிக்கவந்து கூடுவதற்கேயாம். ஆனால் அல்லாஹு தஆலா சன்னதியையும் தலத்தையும் விட்டுத் தூய்மையுடையவனென்பது யாவரும் அறிந்த சங்கதியே. என்கினும் ஒரு மஹ்பூபைப்பற்றிய ஆசை கனத்ததாயிருந்தால் அந்த மஹ்பூபின் பக்கம் சேர்க்கப்பட்டி ருக்கிற பொருளும் மஹ்பூபா யிருக்கிறதல்லவா? ஆகவே முஸ்லிம்கள் இந்த ஆசையில் மனைவி மக்கள் முதலானவர்களையும் பொருளையும் ஊரையும்விட்டு வனந்தரங்களைக்கடக்கும் அபாயத்தில் விழுகிறார்கள். அடிமையைப்போல் அல்லாஹு தஆலாவின் சன்னிதானத்துக்குப் போகிறார்கள்.

இன்னும் இந்த வணக்கத்தில் கல் எறிதல், ஸபாமறுவாவுக்கு மத் தியில் ஓடுதல்போன்ற இன்னகாரணத்துக்கென்று தெரியாமல் புத்தி மயங்கும்படியான காரியங்களைச் செய்யும்படி அவர்களுக்கு ஏவப் பட்டிருக்கிறது. இதேனென்றால், எதில் புத்தி நுழைய இடமுண் டோ அதைச்செய்ய நப்ஸுக்கும் பிரியமாகின்றது. ஏனெனில், என்ன செய்கிறேன் ஏன் செய்கிறேன் என்பதை அவன் உணர்ந்திருக்கிறான். ஸக்காத்து கொடுப்பதில் ஏழைகளுக்கு உதவியாகிறதென்றும், தொழு வதில் அல்லாஹுக்குத் தாழ்ச்சி செய்தலுண்டாயிருக்கிற தென்றும், நோன்பு வைப்பதில் ஷைத்தானுடைய படையாகிய இச்சை முறிகின்ற தென்றும் உணர்ந்திருப்பதினால் அவன் நப்ஸானது புத்தியோடு ஒத்து இக்காரியங்களைச் செய்யக்கூடும். அடிமைக்கு ஒரு காரணமும் தென்படாமல், எஜமானனுடைய ஏவலினால் மாத்திரம் செய்வதுதான் அடிமைத்தனத்தின் பூர்த்தியாம். கல் எறிதலும் ஓடலும் இதே

வகையில் சேர்ந்தவைகளாம். ஏனென்றால், இதில் சொன்னதை செய்வது மாத்திரமேயொழிய வேறொன்றும் புலப்படவில்லை. இதனாலேதான் ஹலாத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், لبيك بحجة حقا تعبدا ورقا லப்பைக பிஹஜ்ஜதின் ஹக்கன் தஅப்புதன் வரிக்கன் என்று திருவுளமாகி இதற்கு அடிமைத்தனமும் வணக்கமும் என்று பேரிட்டார்கள்.

இன்னும் சிலர் ஹஜ்ஜுடைய அமல்களைக்கொண்டு நாடப்பட்ட கருத்தென்னவென்று மயங்குகிறார்கள். இதன் இரகசியம் அவர்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அதனால் நாடிய கருத்தும் தாத்பரியமும் யாதெனில்:—அடியான் அதன் கருத்தையும் தாத்பரியத்தையும் ஆராயாமல் தன் அடிமைத்தனத்தை வெளியாக்க வேண்டுமென்பதும், அவனின் நோக்கம் எஜமானனுடைய ஏவலின்பேரில் மாத்திரமிருக்க வேண்டுமென்பதும், அதில் புத்திக்கும் நப்ஸின் இச்சைக்கும் இடமிருக்கக்கூடாதென்பதும் அதனால் அவன் இவைகளை எல்லாம் விட்டு விடவேண்டுமென்பது இதன் தாத்பரியமாம். ஏனெனில் ஹக்குத் தஆலாவும் அவனின் ஏவலும் தவிரவேறொன்றும் பாக்கியில்லாதபடி தன்னை அவனின் ஐக்கியப்படுத்துவதிலேயே மனித்னுக்கு நற்பதவி யிருக்கிறது.

ஹஜ்ஜில் உற்றுணர வேண்டியவைகள்.

ஹஜ்ஜின் ஸபரை ஒருவாறு ஆகிரத்துடைய ஸபருக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இந்த ஸபரில் நாடப்பட்டது கஃபாவும் அந்த ஸபரின் நாட்டம் கஃபாவின் நாயகனுமேயாம். ஆதலால் இந்த ஸபரின் காரியங்களையும் நிலைமைகளையும் கொண்டு அந்த ஸபரை நினைவு கூறவேண்டும்.

எப்பொழுது தன் இன ஜனங்களையும் இஷ்டர்களையும் விட்டுப் பிரிகின்றானே அப்பொழுது இந்தப்பிரிதல் மவுத்துடைய ஸக்ரத்தின் போது உண்டாகிற பிரிதலுக்குச் சமானமா யிருக்கிறதென்றுணர வேண்டும். இன்னும் எப்படி இந்த ஸபருக்கு முன்னே எல்லாப் பற்றுகளையும் விட்டு மனம் பிரிந்து புறப்பட நேரிடுகின்றதோ அப்படியே அந்தியவயதில் துன்யாவின் எல்லாப்பற்றுகளையும் விட்டு மனதை ஒழிக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் ஆகிறத்தின் ஸபர் தன்பேரில் கஷ்டமாகுமென்றும் உணரவேண்டும்.

இன்னும் இந்த ஸபரில் வழந்திரங்களில் ஆகாரத்திற்கு மிடை வராதிருக்கும்படி எச்சரிக்கையா யிருந்து வழிக்கு வேண்டிய பலவகையான உணவு முதலியவைகளைத் தயார் செய்கிறபோது, கியாமத்து

டைய மைதானம் மிகப் பெரிய தென்றும், அதிக பயங்கரமான தென்றும், அதற்குத் தக்க தங்கரிப்பான இபாதத்துகள் மிகத் தேவையாகுமென்றும் உணர வேண்டும். இன்னும் இந்த ஸபரில் சிக்கிரம் கெட்டுப் போகிற பண்டங்கள் தன்னோடிரா தென்றும் அவை வழிக்கு உதவா தென்றும் அறிந்திருப்பதினால் அப்படியான பண்டங்களைத் தன்னோடு கொண்டு போகிறதில்லை. இதே விதமாய் ரியாவும் குற்றங் குறைகளு மூள்ள எந்த இபாதத்தும் ஆகிறத்துடைய வழிக்கு உதவா தென்றுணர வேண்டும்.

இன்னும் சவாரியின் மேல் உட்காரும் போது ஜஞ்ஸாவை நினைக்க வேண்டும். ஏனென்றால் ஆகிறத்துடைய ஸபருக்குள்ள சவாரி இதுதான் என்பதை அவன் நன்றாய் அறிந்திருக்கிறான். ஒருக்கால் சவாரியை விட்டு இரங்குவதற்கு முன்னே ஜஞ்ஸாவில் ஏறுகிற நேரம் வந்து சம்பவிக்கவும் கூடும். ஆதலால் இந்த ஸபர் அந்த ஸபரின் வழிக்கு உதவக்கூடிய தங்கரிப்பா யிருக்க வேண்டும்.

இன்னும் இஹ்ராமுடைய உடையை (அதாவது மக்கத்தினருகே சென்றவுடன் வழக்கமான உடையைக் களைந்து விட்டு உடுத்திக் கொள்ளப் போகிற இரண்டு வெள்ளை துப்பட்டிகளை) தயார் செய்யும் போது கபனை ஞாபகம் செய்ய வேண்டும். ஏனென்றால் அதுவும் இந்த உகைத்தின் வழக்கமான உடைக்கு மாற்றமானதா யிருக்கிறது. காடுகளுடையவும் கணவாய்களுடையவுமான பயங்கர அபாயங்களைக் காணும் போது முன்கர் நகீர்களையும் கப்றுடைய பாம்பு தேள்களையும் நினைக்க வேண்டும். ஏனெனில் கபுறில் நின்றும் மஹ்ஷர் வரையில் ஒரு பெரிய காடா யிருக்கிறது. அதில் கணவாய்கள் அநந்தமுண்டு. இன்னும் எப்படி வழி காட்டியாகிய துணைவன் இல்லாமல் காட்டின் அபாயங்களினின்று தப்ப முடியாதோ அப்படியே வணக்க மென்னும் துணைவனில்லாமல் கபுறுடைய பயங்கரங்களினின்றும் தப்ப முடியாது. இன்னும் எப்படிக் காட்டில் மனைவி மக்களையும் இஷ்டர்களையும் விட்டுத் தனிக்கின்றோமோ அதே கதியாய் கபுறிலும் ஒண்டியாகின்றான். இன்னும் எப்போது லப்பைக்க சொல்லுகிறோமோ அப்போது அல்லாஹு தஆலாவுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபு சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டும். இப்படியே கியாமத்து நாளில் இவனைக் கூப்பிடப்படும். அதினாலுண்டாகும் பயத்திலும் அந்தக் கூப்பிடுதல் எப்படியாகுமோ என்கிற கவலையிலும் ஆழ்ந்திருக்க வேண்டும். அலியுபுனுல் ஹுஸைன்

றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் இற்றும் கட்டுகிற வேளையில் முகநாடி வேறுபட்டு மெய்நடுக்கமுற்று லப்பைக்க சொல்ல அவர்களால் முடியாமற் போயிற்று. அப்போது ஜனங்கள் அவர்களிடத்தில் தாங்கள் ஏன் லப்பைக்க சொல்லாம லிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு நான் லப்பைக்க சொன்னால் லாலப்பைக்கவலா ஸஃதைக்க என்று ஜவாபு வருமெனப் பயப்படுகிறேன் என்று இவ்வளவு சொல்லி ஒட்டகையின் மீதிருந்து கீழே விழுந்து உணர்வு மாறிப் போனார்கள்.

அபூஸுலைமான் தாரானியவர்களின் முரீதா யிருந்த அஹ்மது புனுல் ஹவாரிமீ என்பவர்கள் ரிவாயத்து செய்கிறதாவது அபூஸுலைமான் அந்த நேரத்தில் லப்பைக்கு சொல்லவில்லை. ஒரு மைல் தூரம் சென்று உணர்வு மாறிப் போனார்கள். பின்பு உணர்வு தெளிந்த போது அல்லாஹு தஆலா மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு, அய் மூஸா! உம்முடைய உம்மத்திலுள்ள அக்கிரமக்காரர்கள் என் நாமத்தை நாவிலெடுக்க வேண்டாமென்று நீர் அவர்களுக்குச் சொல்லும். ஏனென்றால், எவன் என்னை நினைக்கின்றானோ அவனை நானும் நினைக்கின்றேன். ஆனால் அக்கிரமக்காரர்களை நான் முனியுதல் கொண்டு நினைப்பேன் என்று வஹீ அனுப்பினன் என்றும், ஸுபுஹுத்தான பொருளில் நின்றும் ஹஜ்ஜுடைய செலவுக்கு எடுத்துக் கொண்ட ஒருவன் லப்பைக்க சொன்னால் அவனுக்கு; لا لبيك و لا سعد يك حتى ترد ما في يد يك லாலப்பைக்க வலா ஸஃதைக்க ஹத்தா துறத்த மாபீயதைக்க என்று ஜவாபு கொடுக்கப்படுமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனென்று சொன்னார்கள் என்பதே.

தவ்வாபும் சுஊபுமாகிறது, ஏழைகளும் மிஸ்கீன்களும் சுல்தான்களுடைய சமூகத்தை நாடிப்போய் தங்கள் கோரிக்கைகளை விண்ணப்பம் செய்து கொள்ள எப்போது சமயம் வாய்க்குமென்று சுல்தானுடைய அரண்மனையைச் சுற்றிக் கொண்டிருப்பது போலும், தங்களுக்கு சிபாரிசு செய்ய யாராவது அகப்படுவார்களென்று அரண்மனையின் மைதானத்தில் தேடி அலைவது போலும், ஒரு சமயம் அசந்தர்ப்பமாய் சுல்தானுடைய பார்வை தங்கள் பேரில் விழுந்து சுல்தான் தங்களைப் பார்க்க மாட்டாரா வென்ற ஆதரவு வைக்கிறது போலு மிருக்கிறது. ஸபாமறுவாவுக்கு மத்தியிலுள்ள மைதானமே இந்த அரண்மனையின் மைதானம் போலாகும். ஆனால் அறப்பாத்துடைய மைதானத்தில் ஜனங்கள் நிற்பதும் உலகத்தின் பலபக்கங்களினின்றும் பலவகையான ஜனங்

கள் ஒன்றுசேர்ந்து வருவதும் பற்பல பாஷைகளால் துவா கேட்பதும் கியாமத்துடைய மைதானத்துக்குச் சமானமாகிறது. ஏனென்றால் அங்கேயும் ஜனங்கள் சேகரமாவார்கள். ஒவ்வொருவனும் தன் தன் கவலையிலேயே பராக்காகி நான் அங்கீகரிக்கப் படுவேனோ அல்லது றத்து செய்யப்படுவேனோ என்று கலங்கிக் கொண்டிருப்பான்.

இன்னும் கல் எறிதல்கொண்டு நாட்டமாவது, இபாதத்தின் வழியாய் மாத்திரம் அவன் தன் அடிமைத் தனத்தை வெளியாக்க வேண்டுமென்பதேயாம். இன்னும் இதில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமைக் கொண்டு ஒப்பாகுதலும் உண்டாயிருக்கிறது, ஏனென்றால் அங்கே இப்லீஸானவன் அவர்களைக் கலைப்பதற்காக அவர்களின் எதிரே வந்திருந்தான். அவர்கள் அவன்பேரில் கல் எறிந்தார்கள். ஆனால் ஷைத்தான் அவர்களுக்குத் தென்பட்டதினால் அவர்கள் அப்படிச் செய்தார்கள். எனக்கு அவன் தென்படவில்லையே நான் ஏன் வீணில் கல்லெறிய வேண்டுமென்று உனக்கு எண்ணம் வருமாகில் இந்த எண்ணத்திற்குக் காரணம் ஷைத்தானுடைய கலைவேயாதலால் தாமதமில்லாமல் அவன் முதுகெலும்பு முறியும் பொருட்டும் நீ எவனுக்கு வழிபட்ட அடிமையாயிருக்கும் பொருட்டும் உடனே கல் எறி, உனக்கு என்ன கட்டளை யிட்டிருக்கிறதோ அதை நிறைவேற்று, தன் சுய தந்திரத்தை விட்டுவிடு, இன்னும் இந்தக்கல் எறிதலால் ஷைத்தான் பலங்குன்றி தளர்ச்சி யடைகிறானென்பதை மெய்யென்று நம்பு.

ஹஜ்ஜில் உற்றுணர்ந்து பார்க்க வேண்டியவைகளில் நின்றும் இவ்வளவு விபரித்ததேனென்றால், ஒருவன் இந்த வழியை அறிவானாகில் அவன் புத்தி எவ்வளவு தலக்கமாயும் ஆசை எவ்வளவு பூர்த்தியாயுமிருக்கிறதோ அவ்வளவுக்கு இந்தப் பொருள்கள் அவனுக்கு வெளியாகும். அவன் ஒவ்வொரு காரியத்திலும் இன்பத்தை அடைவான். ஏனென்றால், இதுதான் ரூஹுடைய இபாதத்தாயிருக்கிறது. அவன் இதனாலே காரியங்களின் வெளிப்படையான ரூபத்தைக் கடந்து அதன் அந்தரங்கமான பொருளையுணர்ந்து கொள்கின்றான்.

எட்டாவது அஸ்லு.



குருஆன் ஓதுவதின் பயான்.

அறிந்துக் கொள்ளுங்கள்:—குருஆன் ஓதுகிறது இபாதத்துகளில் அதிக நன்மையான இபாதத்தாயிருக்கும். அதிலும் சொந்தமாக தொழுகையில் நிற்கும்போது ஓதப்படுவதாம். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் திருவாயினால் என் உம்மத்துடைய இபாதத்துகள் எல்லாவற்றிலும் அதிக நன்மையுடைய இபாதத்தாகிறது குருஆன் ஓதுகிறதாயிருக்குமென்றும், எவனுக்குக் குருஆன் என்னும் பாக்கியத்தைக் கொடுக்கப்பட்டதோ அவன் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த பாக்கியத்தைவிட இன்னும் மேலான ஒரு பாக்கியத்தை மற்றொருவனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதாய் நினைப்பானால் அவன் அல்லாஹு தஆலா கணப்படுத்தின ஒரு பொருளை அவமதித்தவனாகுவா னென்றும், ஒருவன் குருஆனை (உவமைக்கு) ஒருதோலில் வைப்பானால் அதை நெருப்பு தீண்டாதென்றும் கியாமத்து நாளில் அல்லாஹு தஆலா விடத்தில் குருஆனைக் காட்டிலும் பெரிய ஷபாஅத்து செய்கிறவர்கள் யாதொரு நபியுமில்லை மலக்குமில்லை மற்றொருவருமில்லை என்றும், குருஆன் ஓதுவதினால் மற்றுங் கோரிக்கைகளைக் கேட்க எவனுக்குத் தடையாகிறதோ அவனுக்கு ஷுக்குறு செய்கிறவர்களுக்குள்ள பெரிய சவாபை நான் கொடுப்பேன் என்று அல்லாஹு தஆலா கூறியிருப்பதாயும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னும் இரும்புக்குத் துருபிடிப்பதுபோல் கல்புகளுக்குத் துருபிடிக்கு மென்று நாயகமவர்கள் திருவுளமானபோது ஜனங்கள், யாரஸூலல்லா அந்தத் துரு எதனால் நீங்குமென்று கேட்டார்கள். அதற்கு குருஆன் ஓதுவதினாலும் மவுத்தை நினைப்பதினாலும் நீங்குமென்று திருவுளமானார்கள்.

இன்னும் நான் தன்யாவை விட்டுப்போகிறேன். சதா உங்களுக்கு நஸீஹத்து செய்து கொண்டிருக்கும்படி உங்களுக்காக இரண்டு வாயிலாக ளென்னும் பிரசங்கிகளை விட்டேன், என்றும் அவர்களில் ஒருவர் பேச்சுடையவர் என்றும், மற்றவர் மௌனியென்றும், பேச்சுடைய பிரசங்கி குருஆன் என்றும், மௌனப்பிரசங்கி மவுத் தென்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னும் இபுனுமஸ்வூது றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறதாவது. நீங்கள் குருஆனை ஓதுங்கள். ஏனென்றால், ஒவ்வொரு ஹறுபுக்கும் பிரத்தியாக பத்து நன்மைகள் உண்டு. அலிப் லாம் மீம் என்பது ஒரு ஹறுபு என்று சொல்லமாட்டேன். மேலும் அலிப் ஒரு ஹறுபு, லாம் ஒரு ஹறுபு, மீம் ஒரு ஹறுபு என்று சொல்லுகிறேன் என்பதே.

அஹ்மதுபுனு ஹம்பல் றஹிமஹுல்லா சொல்லி யிருக்கிறதாவது:—நான் அல்லாஹு தஆலாவை மனமில் கண்டு, என்னுடைய நாயகனே! உன் சமூகத்தில் எதனால் நெருங்குவது நலவென்று கேட்டேன். அதற்கு என் கலாமாகிய குறுஆனாலென்று திருவுளமானான். அப்போது நான் ஆண்டவனே மஃனுவை அறிந்தோதினாலும் அறியாமலோதினாலுமாவென்று கேட்டதற்கு அறிந்தாலும் அறியாவிட்டாலும் சரியென்று திருவுளமானான் என்பதே.

மறதியாளரின் குருஆன் ஓதல்.

அருமையானவனே! அறிந்துகொள். எவன் குருஆனைப் படித்துக் கொண்டானோ அவன் பதவி பெரிதாயிருக்கிறது. ஆதலால் அவன் குருஆனுடைய சங்கையை கவனம் வைக்கவேண்டும். அயோக்கியமான செயல்களைவிட்டுத் தன்னைக் காக்கவேண்டும். எல்லா நேரங்களிலும் நிலமைகளிலும் ஒழுக்கத்துடனிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் குருஆனை அவனுக்கு விரோதியாய்ப் போகுமென்ற அச்சமிருக்கிறது.

றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தங்கள் திருவாக்கினால் என்னுடைய உம்மத்தில் குருஆன் ஓதும் மூனுபிருகள் மிகுதம்பேர் இருப்பார்கள், என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் நரகத்தின் மலக்கானவர் வீக்கிரக வணக்கக்காரரைப் பிடிப்பதைக் காட்டிலும் குருஆன் ஓதும் தீயனைச் சிக்கிரமாய்ப் பிடிப்பார் என்று அபூலைலா மான் தாரூனி என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் தவுறுத்துவேதத்தில் எழுதியிருக்கிறதாவது:—ஓ அடியானே! உனக்கு வெட்கமில்லையா? உன் சினேகனிடமிருந்து உனக்கு ஒரு காகிதம் வருமாகில் அப்போது நீ வழிநடந்து கொண்டிருந்தால் உடனே நின்று விடுகிறாய். ஒருபக்கம் ஓதுங்கிப்போய் அதன் ஒவ்வொரு எழுத்தையும் வாசிக்கிறாய். இந்த கிதாபோ நீ நன்கு விளங்கி அமல் செய்யும் பொருட்டு நான் உனக்கெழுதிய நிரூபமாயிருக்கிறது. நீ இதை அலட்சியம் செய்கிறாய். அதன்படி அமல்செய்

கிறயில்லே. சிலசமயம் வாசித்தாலும் அதன் கருத்தை உணர்கின்ற யில்லே என்று அல்லாஹ் தஆலா திருவுளமாயிருக்கிறான் என்பதே.

இன்னும் ஹஸன் பஸரீ றஹிமஹுல்லா சொல்லுகிறதாவது உங்களுக்கு முன்னிருந்த ஜனங்கள் குறுஆன் ஷரீபை, அல்லாஹ் தஆலாவினிடமிருந்து தங்களுக்கு வந்த ஒரு கட்டளைக் காகிதமா யெண்ணினார்கள். இரவில் அதன் கருத்தை ஆலோசிப்பவர்களாயும் பகலில் அதன்படி அமல் செய்பவர்களாயு மிருந்தார்கள். நீங்களோ அதைப்படிப்பிக்கவும் அக்ஷரங்களின் அசைகளைச் செம்மையாய் உச்சரிக்கவும் எடுத்துக்கொண்டீர்கள். அதன் கட்டளைகளை நிறை வேற்றுவதில் சோம்பல் செய்கிறீர்கள் என்பதே.

ஆதலால் குறுஆனைக்கொண்டு நாடப்பட்ட முக்கிய கருத்து குறுஆனை ஓதுவதே அல்ல. மேலும் அதன்படி அமல்செய்யவேண்டு மென்பதேயாம். ஓதுவது ஞாபகம் வைப்பதற்கும் ஞாபகம் வைப்பது கட்டளையை நிறைவேற்றுவதற்குமேயாம். எவன் கட்டளையை நிறை வேற்றாமல் ஓதிக்கொண்டிருக்கிறானே அவன் ஒரு எஜமானன் சில காரியங்களைச் செய்யும்படி கட்டளை செய்தனுப்பி யிருந்த ஒரு காகிதத்தை வாங்கிப்பார்த்து அதன்படி கட்டளையை நிறைவேற்றாமல் ஒரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு நல்ல இராகத்தோடு அந்த காகி தத்தை வாசித்துக்கொண்டும் அதன் அக்ஷரங்களை நன்றாய் உச்சரித் துக்கொண்டு மிருக்கிற ஒரு வேலைக்காரனுக்கு ஒப்பாகுவான். அவன் கோபாக்கினைக்குட்படுவான் என்பதிற் சந்தேகமில்லே.

குறுஆன் ஓதுவதின் வெளிப்படையான அதபுகள்.

குறுஆன் ஓதுவதில் ஆறுகாரியங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவது அதைக் கனப்படுத்தி ஓதவேண்டும். அதாவது முதலில் ஒலுச்செய்யவேண்டும். தொழுகையில் உட்காருவதுபோல் கிப்லாவை நோக்கித் தாழ்மையோடு உட்காரவேண்டும். அபூதல் மூமினின் அலி றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறதாவது:—ஒருவன் குறு ஆனை தொழுகையில் நின்றுகொண்டு ஓதினால் அவனுக்கு ஒவ்வொரு ஹறுபுக்காக நூறுநன்மைகளும் உட்கார்ந்து தொழுவதில் ஓதினால் ஐம்பது நன்மைகளும் தொழுகைக்கு வெளியே ஒலுவுடன் ஓதினால் இருபத்தைந்து நன்மைகளும் எழுதப்படும். ஒலுவில்லாமல் ஓதினால் பத்து நன்மைகளுக்குமேல் அதிகம் எழுதப்படுவதில்லே. இரவில் மன ஓர்மிப்பு அதிகமாயிருப்பதால் இராத்தொழுகையில் ஓதுவது மிக வரிசையாயிருக்கும் என்பதே.

இரண்டாவது அவசரப்படாமல் மெதுவாய் ஓதவேண்டும்; அதன் மஃனாவில் பொறுமையாய் யோசிக்க வேண்டும். சீக்கிரத்தில் முடிய வேண்டுமென்று கருதக்கூடாது. சில ஜனங்கள் அவசரமாய் ஓதி ஒரு நாளில் ஒரு குர்ஆன் முடிக்கிறார்கள். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் திருவாக்கினால் எவன் குர்ஆன் மூன்று தினத்துக்கு முன்னே முடிப்பானோ அவன் குர்ஆனிலிருக்கிற பிக்ஹுடைய இல்மை விளங்கியறியான் என்று திருவுளமா யிருக்கிறார்கள். இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா சொல்லுகிறதாவது நான் சூறத்துல் பகறையும் ஆலஇம்ரானையும் அவசரமாய் ஓதுவதைக்காண இஜாஸுல் ஸிலத்தில் அர்லுவையும் அல்காரி ஆவையும் மெதுவாய்ப் பொறுமையோடு ஓதுவது மிக; பிரியமா யிருக்கிறது என்பதே. ஒருவர் அவசரமாய் குர்ஆன் ஓதிக்கொண்டிருந்ததை ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா கண்டு இந்த மனிதன் சும்மா இருக்கிறாரில்லை குர்ஆன் ஓதுகிறாரில்லை யென்று சொன்னார்கள். ஒருவன் அஜமியா யிருந்து அவன் குர்ஆனுடைய மஃனாவை அறியவில்லையானால் குர்ஆனைக் கனப்படுத்துதல் இருபடும் பொருட்டு அவன் அவசரப் படாமல் மெதுவாய் ஓதுவது அவன் விஷயத்தில் மிக வரிசையா யிருக்கும்.

மூன்றாவது அழவேண்டும். எனென்றால் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் திருவாக்கினால் நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் அழுங்கள் அழுகை வராவிட்டால் கஷ்டப்பட்டு அதை வரப்பண்ணுங்கள் என்று திருவுளமா யிருக்கிறார்கள். இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா சொல்லுகிறதாவது: சுபுஹானல்லதீ என்ற சூரத்திலுள்ள ஸஜ்தாவின் ஆயத்தை நீங்கள் ஓதுவீர்களானால் அழுது கொள்ளாத வரையில் ஸஜ்தா செய்வதற்காக நீங்கள் அவசரப்பட வேண்டாம். ஒருவனுடைய கண்கள் அழுவில்லையானால் அவன் மனமாவது அழுவேண்டும் என்பதே. றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறதாவது:—குர்ஆனை தக்கத்துக்காக இறக்கப் பட்டது. ஆகலால் அதை ஓதும்போது தங்களை தக்கமுடையவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். எவன் குர்ஆனில் சொல்லி வரப்பட்ட சொர்க்க நரகங்களைப்பற்றிய வாக்குத் தத்தங்களையும் அச்ச மூட்டல்களையும் விதிவிலக்குகளையும் பொறுமையாய் நோட்டமிட்டும் தன்னுடைய கேவலஸ்திதியை நிதானித்தும் பார்ப்பானோ அவனுக்கு அகத்தியம் தக்கம் வரும். ஆனால் அப்படி தக்கம் வருவதற்கு அவன் பேரில் மறதி மிகைக்காம லிருக்கவேண்டும்.

நாலாவது ஒவ்வொரு ஆயத்தின் ஹக்கை நிறைவேற்றவேண்டும். ஏனென்றால், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அதாபுடைய ஆயத்தை ஓதுவார்களாகில் இஸ்திஆதா செய்கிறவர்களாயும் அதாவது அல்லாவிடத்தில் காவல்தேடுகிறவர்களாயும் றஹ்மத்துடைய ஆயத்தை ஓதினால் றஹ்மத்தைக் கேட்கிறவர்களாயும் தன்ஸீஹுடைய அதாவது அல்லாஹு தஆலாவின் பரிசுத்தங்கூறும் ஆயத்துகளில் தஸ்பீஹு செய்கிறவர்களாயும், துவக்கத்தில் அவூது ஓதுகிறவர்களாயும், ஓதி முடிந்தால்,

اللهم ارحمني بالقران واجعله لي اماما ونورا وهدى ورحمة اللهم
ذكرني منه ما نسيت وعلمني منه ما جهلت وارزقني تلاوته اناء
الليل واطراف النهار واجعله حجة لي يارب العالمين

அல்லாஹும் மர்ஹம்னீ பில்குர்ஆனி வஜ்அல்ஹுலீ இமாமன் வநூறன் வஹுதன் வரஹ்மதன் அல்லாஹும்ம தக்கிர்னீ மின்ஹு மாநஸீத்து வஅல்லிம்னீ மின்ஹு மாஜஹில்த்து வர்ஜுக்னீ திலாவத்தஹு ஆனை அல்லைலி வ அத்ராபன்னஹாரி வஜ்அல்ஹு ஹுஜ்ஜத்தன் லீ யாரப்பல் ஆலமீன் என்ற இந்த துஆவை ஓதுகிறவர்களாயுமிருந்தார்கள். எப்போது ஸஜ்தாவுடைய ஆயத்தை ஓதினாலே அப்போது முந்தி தக்பீர்சொல்லி பிறகு ஸஜ்தா செய்வான். இதில் தொழுகையுடைய ஷறத்துகளான தேக வஸ்திர சுத்தம் மானம் மறைத்தல் முதலியவை அவசியமானவைகளாகும். ஸஜ்தாவுக்குப் பிறகு தஷஹ்ஹுதும் ஸலாமும் தேவையில்லை.

ஐந்தாவது இரைந்தோதுவதில் ரியாவென்னும் புகழாசையின் சந்தேகமிருந்தால் அல்லது மற்றவருடைய தொழுகையில் இடையூறுண்டாகிறதாயிருந்தால் அமர்ந்து ஓதவேண்டும். ஏனென்றால் பகிரங்கமாய்க் கொடுக்கப்படுகிற கைறுத்தைக்காண மறைவாய்க் கொடுக்கப்படுகிற கைறுத்தானது எப்படி அதிகவரிசையுள்ளதோ அப்படியே குறுஆனை இரைந்தோதுவதைக் காண அமர்ந்தோதுவது அதிகவரிசையுள்ளதென்று ஹதீதில் வந்திருக்கிறது. ரியாவுடைய சந்தேகம் முதலியவை ஒன்றும் இல்லாமற்போனால் அப்போது இரைந்தோதுவது மேல். ஏனென்றால், மற்றவன் அதைக்கேட்பதினால் அவனுக்குப் பிரயோஜனமுண்டாகும். தனக்கும் நன்றாய் விளக்கமாகும், மனங்குவியலாகும், ஆசை அதிகரிக்கும், தூக்கம் ஓட்டம் பிடிக்கும், மற்றும் தூங்குகிறவர்கள் விழித்துக் கொள்வார்கள். இந்த எல்லா நிய்யத்துகளும் ஒன்றுசேர்ந்தால் ஒவ்வொன்றின் ஸவாபும் கிடைக்கும். குறுஆனில் பார்த்து ஓதுவது அதிக சிலாக்கியம். ஏனென்றால் அதில்

கண்களும் வேலை செய்கின்றன. இன்னும் குருஆனில் பார்த்தோதி ஒரு தரம் முடிப்பது ஏழு தரம் முடிப்பது போலாகு மென்று சொல் லப்பட்டிருக்கிறது. மிஸ்ரூடைய உலமாக்களில் நின்றும் ஒருவர் ஷாபிஈ றஹிமஹுல்லாவிடம் போனபோது அவர்களை ஸஜ்தாவிலும் அவர்களுக்கு முன்னால் குர்ஆன் வைக்கப்பட்டும் இருக்கக் கண்டு, பிக்ஹானது உம்மை குறுஆன் ஓதுவதை விட்டும் தடுத்து வைத் திருக்கிறது. நான் இஷாத் தொழுகையின் பிறகு ஸுபுஹு வரையில் விழித்து குர்ஆன் ஓதுகிறேன் என்று சொன்னார். றஸூல் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபூபக்கர் ஸித்தீகு றலியல்லாஹு அன்ஹுவினிடம் போனபோது அவர்கள் தொழுகையில் குறுஆனை அமர்ந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். நாயகமவர்கள் நீர் ஏன் அமர்ந்து ஓதுகிறீர் என்று கேட்டதற்கு நான் யாரோடு பேசுகிறேனோ அவன் கேட்கிறான் என்றார்கள். உமர் றலியல்லாஹு அன்ஹுவை இரைந் தோதிக் கொண்டிருக்கக் கண்டு நீ ஏன் இரைந்தோதுகிறீர் என்று கேட்டார்கள். அதற்கு தூங்குகிறவர்களை எழுப்புகிறேன் ஷைத்தானை விரட்டுகிறேன் என்று உத்தரம் கூறினார்கள். அதற்கு நாயகமவர்கள் நீங்கள் இருவரும் நன்மையான வேலை செய்தீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். ஆதலால் இவ்வகையான அமல்கள் நிய்யத்தைப் பொருத்தவைகளா யிருக்கின்றன. அமர்ந்தோதல் இரைந்தோதல் இரண்டிலும் நிய்யத்து நன்று யிருந்தால் இரண்டினுடைய சவாபும் கிடைக்கும்.

ஆறுவது நல்ல சப்தமாய் ஓத வேண்டும். ஏனென்றால் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் குறுஆனை நல்ல சப்தத்தினால் அழகு படுத்துங்கள் என்று திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் றஸூல் நாயகமவர்கள் அபூஹுரைறாவின் மவுலாவை நல்ல சப்தமாய் குறுஆன் ஓதிக்கொண்டிருக்கக்கண்டு,

الحمد لله الذى جعل فى امتى مثل هذا அல்ஹம்து லில்லா ஹில்லதீ ஜஅல பீஉம்மத்தீ மிஸ்ல ஹாஸா இவர் போன்ற வரை என் உம்மத்திலாக்கி வைத்த நாயகனுக்கே எல்லாப் புகழுமென்று ஷுகுறு செய்தார்கள். இதன் காரணமென்ன வென்றால், சப்தம் எவ்வளவு அழகா யிருக்கிறதோ அவ்வளவுக்கு மனதில் குறுஆனுண்டாகும் குணமும் அதிகமாகும். நல்ல சப்தமாய் ஓதுவது ஸுன்னத்து. ஆனால் சங்கீதவான்களின் வழக்கம் போல் கலிமாக்களையும் ஹறுபுகளை யும் இராகத்தினால் நீட்டுவது மக்றூஹா யிருக்கும்.

குறுஆன் ஓதுவதின் உட்படையான அதபுகளும் ஆறேயாம். முதலாவது :—கலாமின் பெருமையை உற்றுணர வேண்டும். அதெப்படி யென்றால், இது அல்லாவுடைய கலாமாயும் பூர்வமானதாயும் அவனுடைய லிபத்தாயும் அவன் ஜாத்தைக் கொண்டு நிலையானதாயு மிருக்கின்றது என்றும், நாவின் பேரில் நடப்பது எழுத்துக்கள் என்றும் எப்படி நெருப்பென்ற சொல்லை நாவினால் சொல்ல எளிதாயும் யாவரும் சகிக்கக் கூடியதாயும் இருந்தாலும் நெருப்பென்ற பொருளை பரிசிக்க ஒருவராலும் முடியாதோ அப்படியே இந்த ஹறுபுகளுடைய மஃனாக்களின் பொருள் வெளித்தோற்றமாகில் ஏழு வானம் பூமிகளுக்கும் அதன் தோற்றத்தை சகிக்க முடியா தென்றும் உணரவேண்டியது. இதனாலே தான் அல்லாஹ் தஆலா,

لو انزلنا هذا القران على جبل لرايته خاشعا متصدعا من خشية الله

நாம் இந்த குறுஆனை ஒரு மலையின் பேரில் இறக்கி வைத்தோமானால் மெய்யாகவே நீர் அந்த மலையை அல்லாஹ்டைய பயத்தினால் பயப்படுகிறதாயும் துண்டு துண்டாய்ப் போகிறதாயும் காண்பீர் என்று திருவுளமா யிருக்கிறான். என்கினும் குருஆனுடைய கனதியும் அழகும் ஹறுபுக ளென்ற உடையினால் மறைக்கப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் நாவும் மனதும் அதை சகிக்கக் கூடுவதற்கும் ஹறுபுக ளென்ற உடையினலன்றி மற்றபடி மனிதர்கள் அறியக் கூடாம லிருந்ததினாலுமேயாம்.

இப்படி அல்லாஹ் தஆலா கூறிய மேற்கண்ட வாக்கியமானது இந்த ஹறுபுகள் தவிர இன்னும் ஏதோ ஒரு பெரிய காரிய மிருக்கிறதாய் அறிவிக்கின்றது. அதெப்படி என்றால் மனித பாஷையை விளங்க மிருகங்களுக்கு சக்தியில்லை யாதலால் அதனால் அவைகளை ஓட்டவும் பழக்கவும் வேலை கொள்ளவும் கூடாதிருந்த நிமித்தம் அம் மிருகங்களின் சப்தத்தை யொத்த பல சப்தங்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அவைகளுக்கு அவ்வேலைகளை உணர்த்திக் காட்டுகிறார்கள். அவைகள் அந்த சப்தங்களைக் கேட்டு வேலை செய்கின்றன. ஆயினும் அந்த வேலை எதற்காகச் செய்வதென்று அம்மிருகங்களுக்குத் தெரியாது. மாடானது தனக்குக் காட்டப்படுகிற சப்தத்தை யுணர்ந்து நிலத்தை உழுகின்றது. உழவின் பயன் இன்ன தென்று அதற்குத் தெரியாது. மண்ணில் காற்று நுழைந்து அவ்விரண்டுடன் தண்ணீர் கலந்து இம்மூன்றும் சேர்ந்து விதைக்கு உணவாகி அதில் வளரும் தகுதியை உண்டாக்குகின்றன வென்பதை உழவில் கருதிய தாகும். அநேக ஜனங்கள் குறுஆனில் நின்றும் இந்த சப்தமும் வெளியரங்கமான அர்த்தமுந்தவிர அதிக பாகத்தை யடையவில்லை. இதுமாத்திரமா, சிலர் இதே எழுத்துக்களும் சப்தங்களுந்தான் குறுஆன்

என்று எண்ணுகிறார்கள். இப்படி எண்ணுவது மிகப்பேதமையும் அறியாமையுமாயிருக்கும். இதுவோ ஒருவன் நெருப்பென்ற பொருள் காகிதத்தின்மேல் பட்டால் காகிதம் அதைத்தாங்காதென்பதையுணராமல், நெருப்பு என்ற இந்த எழுத்துகளே நெருப்புக்குப் பொருளென்றெண்ணுவதுபோலிருக்கிறது. இந்த எழுத்துகளோ காகிதத்தை ஒன்றும் செய்யாமல் எப்போதும் காகிதத்தின்மேலிருக்கிறது. எப்படி ஒவ்வொரு உடம்புக்கும் அது நிலைத்திருக்கக் காரணமாயிருக்கிற ஒரு உயிருண்டோ அப்படியே குர்ஆனுடைய ஹறுபுகளின் அந்தரங்கமானபொருள் அதன் உயிர்போலும் ஹறுபுகள் அதன் உடம்புபோலுமிருக்கின்றன. இன்னும் எப்படி உடம்பினது பெருமை உயிரிலாலாகின்றதோ அப்படியே ஹறுபுகளின் பெருமை அதன் பொருளென்ற உயிரிலாலாகின்றது. இது விஷயமான எல்லா நிச்சயிப்பையும் இக்திதாபிற் சொல்வது கஷ்டமேயாம்.

இரண்டாவது:—குர்ஆன் ஓதஆரம்பிக்குமுன்னே அதுயாருடைய வாக்கோ அந்த அல்லாஹ் தஆலாவின் பெருமையை மனதில் முன்னிருத்திக் கொள்ளவேண்டும். நான் யாருடைய கலாமை ஓதுகின்றேன் எப்பேர்ப்பட்ட பெரிய வேலையில் உட்காருகிறேன் என்பதை தியானித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், لا يمسه الا المطهرون "குர்ஆனை சுத்த மானவர்களன்றி மற்றவர்கள் தொடக்கூடாது" என்று அல்லாஹ் தஆலா திருவுளமாயிருக்கிறான். எப்படி வெளியரங்கமான முஸ்ஹறபைத் தொடுவதற்குச் சுத்தமான கைவேண்டுமோ அப்படியே கலாமுல்லாவின் அந்தரங்கமான பொருளையுணர்வதற்கு, தூர்க்குணங்களென்னும் நஜஸில்லாமற் சுத்தமானதாயும் அல்லாஹ் தஆலாவைக் கனப்படுத்தலென்னும் ஒளியினால் அலங்கரிக்கப் பெற்றதாயுமிருக்கிற மனம் வேண்டும். இதனாலேதான் இக்ரிமா றலியல்லாஹு அன்ஹு முஸ்ஹறபை திறந்தால் ஒருவாறு உணருமாறு ஹவகலாமுறப்பீ இது என் ஆண்டவனுடைய காலம் என்று சொல்கிறவர்களாயிருந்தார்கள். அல்லாஹ் தஆலாவுடைய பெருமை மனதில் அமைவதற்கு அவனுடைய ஸிபத்துகளையும் செயல்களையும் நோட்டமிட்டு அறஷு, குர்ஸி, ஏழுவானங்கள், பூமிகள், இவற்றிலுள்ளவைகள், மலக்குகள், ஜின்னுகள், மனிதர்கள், மற்றும் உயிரினங்கள், ஊர்வன, தாதுவர்க்கம் தாவரவர்க்கம், மற்றும் பலவகையான படைப்புகள் இவைகளெல்லாம் யாருடைய வல்லமையென்றகையில் இருக்கின்றனவோ அவனுடைய கலாமே இந்த குர்ஆனென்றும், அவன் இவை யெல்லாவற்றையும் அழித்து விட்டாலும் அவனுக்குப் பரவாயில்லையென்றும், அதனால்,

அவனுடைய பூரணத்தன்மைக்கு யாதொரு தோஷம் அணுகாது என்றும், எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறவனும் காக்கிறவனும் இரணம் செலுத்துகிறவனும் அவனே என்றும் இவ்வாறு சிந்தித்துப்பார்க்க வேண்டும். இப்படிப்பார்ப்பதில் அவனின் பெருமை ஏதோ கொஞ்சம் மனதில் அமையலாகும்.

மூன்றுவது:—ஓதலில் மனம் ஹாலிராயிருக்கவேண்டும். மறதியா யிருக்கக்கூடாது. மனதில் எண்ணங்கள் அவனை இங்கும் அங்கும் இழுக்கக்கூடாது. எதையாவது மறதியோடு ஓதினால் அதை ஓதவில்லை யென்று பாவித்து மீண்டும் அதை ஓதவேண்டும். இது எப்படி யிருக் கிறதென்றால், ஒருவன் தோட்டம் சுற்றிப்பார்க்கப்போய் அங்குள்ள அதிசயங்களையும் விநோதங்களையும் பார்க்காமல் பறந்து வெளியே வந்துவிட்டது போலிருக்கிறது. குர்ஆனே மூமின்களுடைய காட்சி சாலையாயிருக்கிறது. அதில் அனேக அதிசயங்களும் ஆழிய பூராயங் களுமிருக்கின்றன. ஒருவன் அதில் பொருமையாய் நோட்டமிட்டுப் பார்ப்பானாகில் அவன் வேறொன்றிலும் சிந்தையை செலுத்தமாட்டான். ஆதலால் எவன் குறுஆனுடைய மஃனாவை அறிகின்றானில்லையோ அவன் நஸீபு குறைந்தவனே யாகுவான். என்கினும் மனம் சிதறுமா லிருக்கும் பொருட்டு அதன் பெருமையை அவன் தன் மனதில் நாட்டிக்கொள்ளவேண்டும்.

நாலாவது:—ஒவ்வொரு சொல்லின் மஃனாவை அது மனதில் அமையும்படி விளங்கி அறியவேண்டும். ஓரே தடவையில் விளங்கா விடில் மறுதரம் ஓதவேண்டும். இன்னும் அதனால் ஏதாவது இன்பம் அடைந்தால் அப்போது திரும்பி ஓதவேண்டும். ஏனென்றால், ان تعذبهم فانهم عبادك மிகுத்தமாய் ஓதுவதிலும் இதுவே மேலாயிருக் கும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு இரவில் ஸூறுஹுவரையில் இந்த ஆயத்தை தொழுகையில் மடக்கி மடக்கி ஓதிக் கொண்டிருந்தார்கள். இன்னும் பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீமை இருபது தடவை ஓதிக்கொண்டிருந்தார்கள் என்று அபூஜர் றலியல் லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். ஸயீதுபுனுஹுபைர் றலியல் லாஹு அன்ஹு இந்த ஆயத்தில் وامتازوا اليوم ايها المجرمون ஒரு இரவு முழுவதும் போக்கினார்கள். ஒருவன் ஒரு ஆயத்தை ஓதிக் கொண்டிருக்கும்போது வேறொரு ஆயத்தின் மஃனாவை தியானிப்பா னாகில் அவன் அந்த ஆயத்தடைய ஹக்கை நிறைவேற்றுதவனாகுவான். ஆமிறுபுனு அப்தில்லா என்பவர் தமக்கு வஸ்வாஸ் உண்டாவதைக் குறித்து முறையிட்டுக் கொண்டிருந்ததாயும் அந்த வஸ்வாஸு தன் யாவுடைய எண்ணங்களா யிருக்கலாமென்று ஜனங்கள் சொன்னதா யும்

அதற்கவர் தன்யாவுடைய எண்ணங்களைத் தொழுகையில் நான் எண்ணுவதை விட என் நெஞ்சில் கத்தியால் வெட்டுவது எனக்கு மிக இலேசாய்த் தோன்றும். ஆனால் என்மனதில் கியாமத்து நாளில் நான் அல்லாஹ் தஆலாவுகு முன்னே எப்படி நிற்பேனோ என் கதி எப்படி யாகுமோ என்ற குழப்பம் உண்டாகிறதென்று சொன்னதாயும் நகல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மஹான் இது வஸ்வாஸ்களிற் சேர்ந்த தென்று எண்ணுகிறவராயிருந்தார். ஏனென்றால், ஒருவன் தொழுகையில் எப்போது எந்த ஆயத்தை ஓதுகிறானோ அப்போது அந்த ஆயத்தினுடைய மஃனாவைத்தவிர வேறொன்றையும் சிந்திக்கக் கூடாதென்பதினாலேயாம். அப்படி சிந்திப்பானால் அது தீனுடைய விஷயமாயிருந்தாலும் வஸ்வாஸேயாம். மேலும் ஒவ்வொரு ஆயத்திலும் அதன் மஃனாவைத் தவிர வேறொன்றையும் சிந்திக்காமல் யிருக்க வேண்டும். எப்போது குத்தாஸ்ன், அஸீஸ்ன் ஹக்கீமுன், ஜப்பாருன் முதலிய அல்லாஹ் தஆலாவுடைய சிபத்துகளைக் கூறும் ஆயத்துகளை ஓதுவானோ அப்போது அந்த ஸிபத்துகளின் இரகசியங்களில் நோட்டமிட்டு அவற்றின் மஃனா என்ன வென்று அறியவேண்டும். இன்னும் கலகஸ்ஸமாவாத்தி வல் அர்லி என்பது போன்ற அவனுடைய செயல்களைக்கூறும் ஆயத்துகளை ஓதும்போது படைப்புகளின் விநோதங்களை நோட்டமிடுவதனால் படைத்தவனுடைய பெருமையையும் அவனின் பூரண ஞானத்தையும் வல்லபத்தையும் அறிய வேண்டும். இப்படியறிவதின் எந்த வஸ்துவினும் அல்லாவையே தரிசிப்பவனாயும், எல்லாவற்றையும் அவனோடு காண்பவனாயும், அவனைக் கொண்டே பார்ப்பவனாயும் ஆய்விடவேண்டும். இன்னும் எப்போது "இன்னகலக்னல் இன்ஸான மின்நுத்துபத்தின்" என்ற ஆயத்தை ஓதுகிறானோ அப்போது நுத்பாவினுடைய புதுமைகளைச் சிந்தித்து ஒரு விதமான இந்த நீர்த்துளியினால் எப்படி எப்படியான பற்பல பொருள்கள் உண்டாயின வென்பதை அதாவது சதை, தோல், நரம்பு, எலும்பு முதலியவைகளும் தலை, கால், கண், நாவு முதலிய உறுப்புகளும் எவ்வாறாயின வென்பதையும் கேள்வி, பார்வை, ஜீவிப்பு முதலிய அந்தரங்க சங்கதிகள் எப்படியாயின வென்பதையும் நோட்டமிட வேண்டும். குறுஆனுடைய எல்லா மஃனாவையும் விளங்கிச் சொல்வது கஷ்டமானால் மனிதன் குர்ஆனில் நோட்டமிட வேண்டும் மென்பதை உணர்த்திக்காட்டக்கருதி இம்மாத்திரம் சொல்லப்பட்டது. குறுஆனுடைய மஃனாக்கள் மூன்று பேருக்குத் தெரியலாகா. அவர்களில் ஒருவன் முன்னமே வெளியரங்கமான தபுஸீர் ஓதாதவனாயும் அறபி பாஷை தெரியாதவனாயு மிருப்பவனும். மற்றொருவன் யாரெனில் ஒரு பெரும்பாவத்தை விடாமற் செய்து கொண்டாவது அல்லது யாதொரு

பிதுஅத்தை நிண்ணயங் கொண்டாவது இருப்பவனும். இப்படிப்பட்ட வர்களுடைய மனமானது பிதுஅத்தும் பாவமுமென்ற இருளினுல் இருண்டு போகின்றது. மற்றொருவனே இல்முல் கலாமில் ஒரு நிண்ணயத்தைப் படித்து அதன் வெளிப்படையை சாதித்து அதற்கு மாறுய் ஏதாவது மனதில் வந்தால் அதைப் பொருந்திக் கொள்ளாத வனும். இப்படிப்பட்டவன் அந்த வெளிப்படையான நிண்ணயத்தை விட்டு மீளுவது அசாத்தியமேயாம்.

ஐந்தாவது:—ஆயத்துகளுடைய மஃனாக்கள் எப்படி வெவ்வேறு விதமாய் மாறுகின்றனவோ அப்படியே அவன் மனமும் வெவ்வேறு குணமாய் மாறவேண்டும். அதெப்படி யென்றுல் பயத்தைக் குறித்த ஆயத்தை ஒதும்போது மனதில் பயமும் அச்சமும் உண்டாகவேண்டும். றஹ்மத்துடைய ஆயத்தை ஒதும்போது முகமலர்ச்சியும் மனமகிழ்ச் சியும் அவனில் வெளியாகவேண்டும். அல்லாஹ¨ தஆலாவுடைய ஸிபத்துகளைக் கேட்கும்போது தாழ்ச்சியையும் தலைசாய்ப்பையும் தெரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ¨ தஆலாவின் விஷயத்தில் இணையுண்டு, பிள்ளையுண்டு என்பது போன்ற காபிர்களின் தகாத வார்த்தைகளைக் கேட்டால் இந்த இடத்தில் சப்தத்தை மெதுவாக்கி வெட்கத்தோடும் நாணத்தோடும் ஓதவேண்டும். இதுபோலவே ஒவ்வொரு ஆயத்தின் மஃனா வெவ்வேறுயிருக்கிறது. அந்த மஃனா வுக்குச் சம்பந்தமான குணமிருக்கிறது, ஆதலால் ஓதுகிறவன் அந்தந்த ஆயத்துகளின் ஹக்கு தன்னுல் இறுபடும்படி அந்தந்தக் குணங்களைக் கொண்டு மாறவேண்டும்.

ஆறுவது:—குறுஆனை அல்லாஹ¨ தஆலாவிடமிருந்து கேட் பதுபோல் கேட்கவேண்டும். இப்போது அவனிடமிருந்தே கேட்பதாய் பாவித்துக் கொள்ளவேண்டும். ஒரு பெரியோர் சொல்லியிருக்கிறதா வது:—நான் குறுஆனை ஓதிக்கொண்டிருந்தேன் அதை றசூல் ஸல்லல் லாஹ¨ அலைஹிவஸல்ல மவர்களிடமிருந்து கேட்கிறேன் என்று பாவித்துக் கொள்ளாதவரையில் அதன் இன்பத்தை நான் அடைய வில்லை. பிறகு கொஞ்சம் முன்னே சென்று ஜிப்ரயீலிட மிருந்து கேட்கிறேனென்று எண்ணிக்கொண்டேன். இன்பம் அதிகமாயிற்று. பின்பு இன்னும் முன்னே சென்று உயர்ந்த பதவிக்குச் சேர்ந்தேன். இப்போது நேரே அல்லாஹ¨ தஆலாவிடமிருந்து கேட்கிறவன்போல் ஓதுகிறேன். இப்போது நான் எப்போது மடைந்திராத இன்பத்தை அடைகிறேன் என்பதே.

ஒன்பதாவது அஸ்லு.

ஹக்கு தஆலாவுடைய திக்ரின் பயான்.

அறிந்து கொள்ளுங்கள். எல்லா இபாதத்துகளையும் கொண்டு கருதப்பட்டசாரம் அல்லாஹு தஆலாவுடைய திக்ரேயாம். ஏனென்றால் தொழுகையானது இஸ்லாமின் தூணுயிருக்கிறது. அதைக் கொண்டு நாடப்பட்டபொருள் அல்லாஹு தஆலாவுடைய திக்ருயிருக்கும். அதெப்படி யென்றால்,

ان الصلوة تنهى عن الفحشاء والمنكر ولذكر الله اكبر

"திடனுகத் தொழுகையானது கெடுதியையும் தீங்கையும் விட்டு நீங்குகின்றது. இன்னும் மெய்யாகவே அல்லாவுடைய திக்ருனது மிகப் பெரியதாயிருக்கிறது" என்று அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறான். இன்னும் குர்ஆனே ஓதுவது எல்லா இபாதத்துகளைக் காணமேன்மையாயினது. எதனுலென்றால் அது அல்லாஹு தஆலாவுடைய கலாமாயிருப்பதினுலும், அல்லாவை நினைவுவருத்துவதினுலும் அதிலுள்ள சங்கதிகள் அல்லாஹு தஆலாவை நினைப்பதற்குக் காரணமாயிருப்பதினுலுமேயாம். இன்னும் நோன்பைக் கொண்டு நாடப்பட்டதென்னவென்றால், இச்சைமுறிய வேண்டுமென்பதேயாம். எப்போது மனமானது இச்சைகளென்ற குப்பைக் குவியலிலிட்டுச் சுத்தமாகின்றதோ அப்போது அது அல்லாஹு தஆலாவுடைய திக்ரைக்கொண்டு நிரம்புகின்றது. இச்சைகளால் நிறைந்திருக்கிற மனதைக்கொண்டு திக்ரு செய்யமுடியாது. அதில் திக்ரின் குணமுங்காட்டாது. இன்னும் பைத்துல்லாவின் ஜியாரத்தாகிய ஹஜ்ஜைக்கொண்டு நாடப்பட்டதென்னவென்றால் அந்த பைத்து என்னும் வீட்டுக்குடையவனை நினைப்பதும் அவனைக்கண்டு தரிசிக்க ஆசையை எழுப்புவதுமாம். ஆகவே எல்லா இபாதத்துகளின் சாரம் அல்லாவுடைய திக்ரென்றே ஆயிற்று. என்கினும் இஸ்லாமின் மூலப்பொருளாகிய லாஇலாஹ இல்லல்லாஹு என்னும் இந்தக் கலிமாவிருக்கின்றதே இது தனியே திக்ருயிருக்கும். மற்றும் எல்லா இபாதத்துகளும் இந்த திக்ரை உறுதிப்படுத்துகின்றன. அல்லாஹு தஆலாவுடைய திக்ரின் பிரயோஜனம் என்னவென்றால் எவன் திக்ரு செய்கிறனை அவனை அல்லாஹு தஆலா நினைக்கின்றான். இதிலும் பெரிய பிரயோஜனம் என்ன இருக்கிறது? இதனுலேதான் அல்லாஹு தஆலா فاذكروني اذكركم

"என்னை நினையுங்கள் நான் உங்களை நினைப்பேன்" என்று திருவுளமா யிருக்கிறான். இந்த நினைத்தல் இடைவிடாது சதாவா யிருக்க வேண்டும்.

சதாவா யில்லாவிட்டால் மிகுந்த நேரங்களிலாவ திருக்கவேண் டும். இதன்பேரில் தான் வெற்றியும் மாராயமும் கட்டுண்டிருக்கிறது. இதன் நிமித்தமே, واذكروا الله كثيرا لعلكم تفلحون "அல்லாவை அதிகமாய் நினையுங்கள் நீங்கள் ஜெயம் பெறலாம்" என்று அல்லாஹ் தஆலா திருவுளமா யிருக்கிறான் அதாவது நீங்கள் வெற்றியடைய ஆசையுள்ளவர்களா யிருந்தால் அதிகமாய் திக்று செய்யுங்கள் கொஞ் சமாயல்ல. மிகுந்தநேரங்களில் செய்யுங்கள் கொஞ்ச நேரங்களில் அல்ல என்பதே. இதேகாரணத்தால்,

الذين يذكرون الله قياما وقعودا وعلى جنوبهم

அல்லதீன யத்குறூனல்லாஹ என்று அவன் திருவுளமானதில் எவர்கள் நின்றிருக்கும்போதும் உட்கார்ந்திருக்கும்போதும் படுத்திருக் கும்போதும் அல்லாவை நினைக்கிறவர்களாயும் எந்த சமயத்திலும் அவனை மறக்காதவர்களாயு மிருக்கிறார்களோ அவர்களைப் புகழ்ந்திருக் கிறான். இதுவுமன்றி,

واذكر ربك في نفسك تضرعا وخيفة ودون الجهر من القول بالغدو والاصال ولا تكن من الغافلين

"காலையிலும் மாலையிலும் உன் மனதில் கெஞ்சுதலாயும் பய பக்தியாயும் இரகசியமாயும் உன் ஆண்டவனை நினை, அவனை மறப்ப வர்களில் ஒருவனுயிராதே" என்று அல்லாஹ் தஆலா திருவுளமா யிருக்கிறான். இன்னும் ஒருவர் றஸூல் ஸல்லல்லாஹ் அலைஹிவஸல் லமவர்களிடத்தில் எல்லா அமல்களைவிட எந்த அமல் அதிகவரிசை யுடையதென்று கேட்டபோது மவுத்தாகிற வேளையில் உன் நாவு அல் லாவுடைய திக்ரிலிருப்பது அதிகவரிசையான அமல் என்று திருவுள மானார்கள். இன்னும் நபி நாயகம் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அஸ்ஹாபுகளை நோக்கி, உங்களுக்கு அதிக நலவானதும் அல்லாஹ் தஆலாவிடத்தில் மேன்மையாய் அங்கீகரிக்கப்பட்டதும், மிகப் பதவியுள்ளதும், வெள்ளி, பொன்னை ஸதகா கொடுப்பதைக்காண அதிக நன்மையானதும் அல்லாவுடைய பகைவரோடு ஜிஹாது செய்து அவர்கள் உங்கள் கழுத்தையும் நீங்கள் அவர்கள் கழுத்தை யும் வெட்டுவதைக் காட்டிலும் அதிக வரிசையுள்ளதுமான ஒரு

அமலே நான் உங்களுக்கு அறிவிக்கவேண்டாமா? என்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் யாறஸூலல்லா அதென்ன அமல்? என்று வினவினர்கள். அப்போது நாயகமவர்கள் அது (திக்றுல்லா) அல்லாவை நினைப்பதாயிருக்கு மென்று திருவுளமானார்கள். இன்னும் எவனே என் திக்ருனது தன் ஹாஜத்துகளைக்கேட்க வொட்டாமல் தடுக்கின்றதோ அவனுக்கு என்னிடத்திலிருக்கும் இனுமானது கேட்பவர்களின் இனுமைக்காட்டிலும் மிக நலவானதாயிருக்குமென்று அல்லாஹு தஆலா அருளியிருப்பதாக றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அல்லாஹ்வை மறந்தவர்களின் நடுவே அவனே திக்று செய்கிறவன் செத்தவர்களின் நடுவே ஜீவித்திருக்கிறவன் போலும்; பட்ட மரங்களின் நடுவே பச்சை மரத்தைப்போலும்; படைக்களத்திலிருந்து பயந்தோடுகிறவர்களின் நடுவே நிலையாய் நின்று யுத்தம் செய்கிறவீரன்போலும் இருக்கிறான் என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் மஆதுபுனு ஜபல் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறதாவது:—சொர்க்கவாளிகளுக்கு எதைக் குறித்தும் கைசேதமிராது; ஆனல் துன்யாவில் அவர்கள் அல்லாஹ்வை திக்று செய்யாமல் வெறுமையாய்க் கழிந்தபோன நேரத்தைக் குறித்து அவர்களுக்கு கைசேத மிருக்கும் என்பதே.

திக்றுடைய ஹகீகத்தின் பயான்.

அறிந்துகொள்ளுங்கள் திக்றின் வகுப்புகள் நான்காயிருக்கும். முதலாவது வகுப்பு யாதெனில், நாவால் திக்று செய்வதும் மனம் அதை மறந்திருப்பதுமாம். இதன் பலன் அற்பமானதாயிருந்த போதிலும் இதிலுமோர் குணமில்லாமற் போகவில்லை. ஏனென்றால் எந்த நாவு திக்றென்னும் வேலையில் பாக்காயிருக்கின்றதோ அதுவீண் பேச்சு பேசுகிற நாவைக்காட்டிலும் அதிக நலவானதாயிருக்கிறது.

இரண்டாவது வகுப்பு திக்றுவது:—கல்பில் திக்று இருக்கிறது ஆனல் நிலைத்திருக்கிறதில்லை. பிரயாசையினல் மனதை திக்றில் வைத்தால் அது தரிபடுவதாயும், பிரயாசையில்லாமற் போனல் மறதியினலாவது நபுஸின் பல எண்ணங்களினலாவது மனம் தன் இஷ்டப்படி திரும்பி விடுவதாயு மிருப்பதாம்.

மூன்றுவது வகுப்பு திக்று என்னவென்றால், மனதில் திக்று குடிகொண்டு, பிரயாசையினல் வேறு காரியத்தில் மனதைச் செலுத்தக்கூடிய விதமாய் மனதில் திக்று மிகைத்துப் போவதாம். இதுபெரிய தரஜா உள்ளது.

நான்காவது வகுப்பு என்னவென்றால், திக்று செய்யப்படுகிற அல்லாஹ்வுடைய தஆலாவையே மனதில் குடிகொள்வது திக்றையல்ல; ஏனென்றால் எவன் திக்று செய்யப்படுகிறவனை நேசிக்கின்றானோ அவனிலும் இன்னும் எவன் திக்றை நேசிக்கிறானோ அவனிலும் பெரிய பேதமிருக்கிறது. மேலும் திக்றும் அதன் நினைவும் மனதை விட்டொழிந்து திக்று செய்யப்படுகிறவன் மாத்திரம் மனதில் நிலைப்பதுதான் பூரணமானது. ஏனென்றால் திக்ருனது அறபியாயிருந்தாலும் பார்ஸியாயிருந்தாலும் அது நபுஸின் பேச்சேயொழிய வேறல்ல. மனமானது அறபி பார்ஸி முதலிய பேச்சுகளையும் மற்று முள்ளவைகளையும் விட்டொழிந்து வேறொரு வஸ்துவுக்கும் அதில் இடமில்லாதபடி எல்லாம் அழிஞ்சுகவே ஆய்விடுவதுதான் திக்றின் சாரமாம். பெரிய முஹப்பத்திருந்தால்தான் இப்படியாகும். இதற்கு இஷ்கு என்று சொல்லப்படும். ஆஷிகானவன் எப்போதும் மஃஷூகையே பார்க்கிறவனாயிருக்கிறான்; இன்னும் அவனின் நினைவினால் பேரையும் அவன் மறந்து போகக்கூடும். எப்போது முஹப்பத்தில் இவ்வளவு மூழ்கிப்போனானோ இன்னும் தன்னையும் அல்லாஹ்வை தவிர மற்றும் பொருள்களையும் மறந்துபோனானோ அப்போது அவன் தஸவ்வுபுடைய பாதையில் வந்தான். சூபியாக்கள் இந்த நிலைமைக்கு பனா என்றும் நாஸ்தி என்றும் சொல்லுகிறார்கள். இப்போது சகலமும் அவன் நினைவிலிருந்து போய்விட்டது. அவன் தன்னையும் மறந்துபோனபடியால் தானும்பனாவாய்விட்டான். அதெப்படியென்றால் அல்லாஹ்வுடைய தஆலாவுடைய படைப்புகளில் நாம் அறியாதவை அனந்தமிருக்கின்றன. அவைகள் நம் விஷயத்தில் இல்லாதவைகளேயாம். நாம் அறிகின்றவைகளே நம் விஷயத்தில் உள்ளவைகளாயிருக்கின்றன. படைப்புகளை ஒருவன் மறந்துபோவானாகில் அவை அவன் விஷயத்தில் இல்லாதவைகளாய்போயின. எப்போது அவன் தன் உணர்வையும் மறந்துபோனானோ அவனும் தன் விஷயத்தில் இல்லாதவனாய்ப் போனான். எப்படி அதனுடன் அல்லாஹ்வன்றி வேறொன்றுமில்லாமற்போனால் அவனுக்கு ஹக்குத்தஆலாவே உள்ளவனாய்த்தோன்றுவான். நீ வானத்தையும் பூமியையும் பார்க்கும்போது அதிலுள்ளவைகளைத் தவிரவேறொன்றையும் நீ காண்கிறதில்லையாதலால் சர்வலோகமும் இதுதான் என்று சொல்லுகிறாய். இதுபோலவே அவனுக்கும் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றும் தென்படுகிறதில்லையாதலால் அவன் ஹமவோஸ்த் எல்லாமவனே என்றும் அவனன்றிவேறொன்றில்லையென்று சொல்லுகின்றான். இந்த நிலைமையில் அல்லாஹ்வினும் அடியானினும் வேற்றுமை இருக்கிறதில்லை. ஓர்மையுண்டாய் விடுகி

றது. இது தவுஹீதும் வஹ்தானியத்துமான முதற்பாதமா யிருக்கும் அதாவது இங்கு வேற்றுமை என்பது எடுபட்டுப் போகின்றது. ஏனென்றால் அவனுக்கு வேற்றுமை என்பது தூரம் என்பதும் தெரி கின்றதில்லை. எவன் இரண்டு பொருள் உண்டென்று அதாவது தன்னையும் அல்லாவையும் உண்டென்று அறிகின்றானே அவன் தான் வேற்றுமை என்பதை அறிவான். இவனே இந்த நிலைமையில் தன்னை யுணராது மறந்தவனாய் ஒன்றையே ஒழிய வேறொன்றை அறியாதவனா யிருக்கிறான். பின்பு வேற்றுமை என்பதை எப்படி அறிவான்.

எப்போது மனிதன் இந்த வகுப்புக்குச் சென்றானோ அப்போது மலகூத்தின் ரூபம் அவனுக்கு வெளியாகும். மலக்குகளுடையவும் நபிமார்களுடையவுமான அர்வாஹுகள் அழகிய ரூபங்களுடன் அவ னுக்குத் தென்பட ஆரம்பிக்கும். இன்னும் அல்லாஹு தஆலா வுடைய சமுகத்துக்கே உரித்தா யிருக்கிற விஷயங்களும், சொல்ல முடியாத அருமையான ஹாலாத்துகளும் வெளியாகும். பின்பு எப் போது அவன் தன் உணர்வில் வந்து வேறே காரியங்களில் பிரவேசிக் கின்றானோ அப்போது முன்னிருந்த பனுவின்கூறு அவனுட னிருக்கும். அந்த ஹாலின் ஆசை அவன் மேல் மிகைத்திருக்கும். துன்யாவும் அதிலுள்ளவைகளும் ஜனங்களின் வேலைகளும் அவனுக்குப் பிரியமா யிரா. அவன் தன் தேகத்தால் மனிதரோடு கூடியும் இருதயத்தால் அவர்களை விட்டு மறைந்து மிருப்பான். இன்னும் ஜனங்கள் துன்யா வுடைய காரியங்களில் ஏன் பராக்கா யிருக்கிறார்க ளென்று மயங்கு வான். இன்னும் அவர்களை இரக்கமுள்ள பார்வையாய்ப் பார்ப்பான், ஏனென்றால் இவர்கள் எப்பேர்ப்பட்ட காரியத்தை விட்டு நஷீபு கெட்டவர்களா யிருக்கிறார்க ளென்பதை அவன் அறிகின்றதினாலென்க. ஜனங்களோ இவன் என் லோககாரியங்களைச் செய்யாம லிருக்கிறானென்று அவனை நகைத்து இவன் பைத்தியக்காரனாய்ப் போவான் என்றெண்ணுகிறார்கள். பின்பு எவன் பனுவுடைய வகுப்புக்குப் போய்ச் சேர்வில்லையோ அவனுக்கு இந்த வெளிப்படுதல்களும் ஹா லுகளும் வெளியாகா. ஆனால் அல்லாவுடைய திக்று இவன் மேல் மிகைத் திருக்கும். இதுவும் நற்பதவிக்குரியவோர் கீமியாவேயாம். ஏனென் றால் திக்று மிகைத்தால் ஆசை மேலிடுகின்றது. அப்போது துன்யா வைக் காட்டிலும் அதிலுள்ளவைகளைக் காட்டிலும் அல்லாவை அதிக மாய் நேசிக்கின்றான். இது தான் நற்பதவியின் வேரா யிருக்கிறது. கடைசியில் மவுத்தினால் அல்லாஹு தஆலாவினிடம் சேருகின்ற போது இவன் அல்லாஹு தஆலாவின் மீது வைத்திருந்த முஹப் பத்து எவ்வளவோ அவ்வளவே இன்பம் அவனுடைய தரிசனையில்

உண்டாகும். தன்யாவானது இவனுடைய மஹ்பூபா யிருந்தால் அதை விட்டுப் பிரியும் போது அதன் மீது வைத்திருந்த உவப்பின் அளவு இவனுக்குத் தக்க முண்டாகும். இதைக் குறித்து உன்வானில் விவரிக்கப்பட்டிருக்கிறது போல்.

பின்பு ஒருவன் அதிகமாய் திக்ரு செய்கின்றான். ஆனால் ஸூபீயாக்களுக்கு உண்டாகிற ஹாலுகள் ஒன்றும் அவனுக்கு வெளியாகாமற் போனால் அதைப்பற்றி அவன் வெறுப்படையாம லிருக்க வேண்டும். ஏனென்றால் நற்பதவியானது ஹாலுகள் வெளியாகுவதின் பேரில் தரிப்பட்டதல்ல. கல்பானது திக்ரென்னும் ஒளியால் பிரகாசத்தை அடையுமானால் அது பூரண நற்பதவிக்குரிய பக்குவத்தை யுண்டாக்கிக் கொள்கிறதாலும் இவ்வுலகத்தி லுண்டாகாத அந்த ஹாலுகள் மவுத்துக்குப் பின் உண்டாகின்றதாலும் அவன் வெறுப்படையாமல் எப்போதும் கல்பை அல்லாஹ் தஆலாவுடைய திக்ரில் ஆக்கக்கடவன். அந்த வெறுப்பினால் அவனை அறவே மறந்துவிடக் கூடாது. ஏனெனில் இடைவிடாத திக்ரானது மலக்கூத்துடைய புதுமைகளையும் அல்லாஹ் தஆலாவுடைய சமுகத்தையும் தரிசிப்பதற்கு திறவுகோலா யிருக்கிறது. இன்னும் நபிமல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் திருவாயினால் "சொர்க்கலோகத்திற்குப் பூங்காவுகளில் உல்லாசமாயுலாவிவர நாட்டமுள்ளவன் அல்லாஹ் தஆலாவை அதிகமாய் திக்ரு செய்யவும்" என்று அருளிச் செய்தார்களே அதன் கருத்து இதுவேயாம். இந்த விவரத்தினால் எல்லா இபாதத்துகளின் சாரமானது திக்ரு இருக்கு மென்றது நன்கு விளங்கும். இன்னும் திக்ரு செய்கிறவன் (ஷரீஅத்துடைய) விதிவிலக்குகளில் அல்லாஹ் தஆலாவை ஞாபகத்தில் வைத்து பாவத்தை விட்டு நீங்கியும் கடமைகளை அனுசரித்தும் வரவேண்டும். இதுவே சாரமுள்ள திக்ரா யிருக்கும். திக்ரானது அவனை இக்காரியத்தின் பேரில் கொண்டு வரவில்லையானால் இது அந்த திக்ரு நபசுடைய பேச்சாயும் சாரமில்லாத வெற்றுச் சொல்லாயு மிருந்த தென்று அறிவிக்கும்.

தஸ்பீஹ், தஹ்லீலு, தஹ்மீது, ஸலவாத்து, இஸ்திக்பாரு இவைகளுடைய விசையின் பயான்.

அடியான் செய்கிற ஒவ்வொரு நன்மையும் கியாமத்து காளில் மீஸான் என்ற தராஸில் வைக்கப்படு மென்றும், ஆனால் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைத் தராஸில் வைத்தால் அது ஏழு வானங்களிலும் ஏழு பூமிகளிலும் அவற்றிலுள்ளவைகளிலும் அதிக

கணமாய்ப் போமென்றும், லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொல்லுகிறவன் அதில் உண்மையுள்ளவனுயிருந்தால் அவனுடைய பாவங்கள் பூமியினுடைய மண்ணைப்போல் மிகுதமாயிருக்கினும் அவை பொறுக்கப்படும் என்றும், ஒருவன் கலப்பற்ற நெஞ்சுடன் லாஇலாஹ இல்லல்லாஹு என்று சொல்லுவானுகில் அவன் சொர்க்கம் புகுவானென்றும், ஒருவன் தினந்தோறும் நூறுதரம்,

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد
وهو على كل شيئ قدير

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்க்கு வலஹுல்ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் என்று சொல்வதானது அவன் பத்து அடிமைகளை உரிமைவிட்டதற்குச் சமமாயிருக்கிறதென்றும் அவன் பட்டோலையில் நூறு நன்மைகள் எழுதப்பட்டு நூறு தீமைகள் அழிக்கப்படுமென்றும் இந்தக் கலிமாவானது இரவுவரையில் ஷைத்தானை விட்டு அவனைக்காக்கின்ற கோட்டையாகுமென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் யாராவதொருவன் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவைச் சொல்லுவானுகில் அவன் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமுடைய பிச்சளத்தில் நின்றும் நாலு அடிமைகளை உரிமைவிட்டவன்போல் ஆகிறுனென்றும் ஸஹீபுகாரியில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் யாராவதொருவன் ஒரு நாளில் நூறுதரம்,

سبحان الله وبحمده ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்றேதுவானுகில் அவனுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப் படுமென்றும் அவை கடலின் நுரைக்குச் சரியாயிருக்கினும் ஒக்குமென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் யாராவதொருவன் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னுல் முப்பத்தி மூன்றுதரம் சுப்ஹானல்லாஹி என்றும் முப்பத்தி மூன்றுதரம் அல்ஹம்து லில்லாஹி என்றும் முப்பத்தி மூன்று தரம் அல்லாஹு அக்பர் என்றும் சொல்லி நூறுந்தரத்தில்,

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد
وهو على كل شيئ قدير

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்க்கு வலஹுல்ஹம்து வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர் என்று ஓதி முடிப்பானுகில் அவனுடைய எல்லாப் பாவங்களும்

மன்னிக்கப்படுமென்றும் அவை கடலின் நுரைக்குச் சரியா யிருக்கி னும் ஒக்குமென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் ரிவா யத்து செய்யப்பட்டிருக்கிறதாவது:—ஒருவர் ஹலாத்து றஸூல் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடத்தில் வந்து யாரஸூலல்லா தன்யாவானது என்னைக் கைநெருங்கச் செய்துவிட்டது. நான் ஏழை யும் ஆஜிஸுமாய்ப் போனேன். இதற்கு என்ன எத்தனம் செய்வ தென்று கேட்டார். அப்போது நாயகமவர்கள் அவரை நோக்கி என்ன உனக்கு மலக்குகளுடைய ஸலவாத்தும் ஜனங்கள் எதை ஓதி இரணம் பெறுகின்றார்களோ அந்த தஸ்பீஹும் தெரியாதா? வென்க அவர் நாயகமவர்களை வணங்கி யாரஸூலல்லா அது எதா யிருக்கு மென்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் சொன்னதாவது:-நீ தினந் தோறும் சுபுஹு தொழுகைக்கு முன்னேயும் பின்னேயும் நூறுதரம்

سبحان الله وبحمده سبحان الله العظيم وبحمده استغفر الله

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ ஸுப்ஹானல்லாஹில் அலீம் வபிஹம்திஹீ அஸ்தக்பிருல்லாஹ் என்று ஓதிக்கொண்டுவா. அப்படி ஓதிவந்தாயாகில் தன்யாவானது உன் பக்கம் திரும்பும், தன்யாவை நீ விரும்பினாலும் விரும்பாமல் போனாலும் சரி. இன்னும் அல்லாஹு தஆலா இதன் ஒவ்வொரு கலிமாவைக் கொண்டு ஒவ்வொரு மலக்கை உண்டாக்குகின்றான். அந்த மலக்குகள் கியாமத்து நாள் வரையில் தஸ்பீஹ் செய்து கொண்டிருப்பார்கள். அதன் ஸவாபு உனக்குக் கிடைக்கும் என்பதே.

இன்னும், سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர் என்ற கலிமாக்கள் பாக்கியாத் துஸ் ஸாலிஹாத்தைச் சேர்ந்தவர்களென்றும் இந்த கலிமாக்களைச் சொல்வ தானது சூரியனுடைய சுற்றுதலுக்குக் கீழேயிருக்கிற ஒவ்வொரு வஸ்துவைக் காட்டிலும் எனக்கு அதிக உவப்பானதா யிருக்கிற தென் றும் இந்த நாலு கலிமாக்களும் அல்லாஹு தஆலாவுக்கு மிக உவப் பான கலிமாக்களென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும், நாவுக்கு இலே ஸானதாயும் மீஸானில் கனமாகுவதாயும் றஹ்மானிடத்தில் உவப் பானதாயு மிருக்கிற இரண்டு கலிமாக்கள் உண்டு என்றும் அவை

سبحان الله وبحمده سبحان الله العظيم

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அலீம் என்ற கலிமாக்களே என்றும் திருவுளமானார்கள்.

ஒருதரம் ஸஹாபாக்களில் பகீருகளாயிருந்த சிலர் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் யா ரஸூலுல்லா! சீமான்களுக்கு ஆகிரத்துடைய எல்லா ஸவாபுகளும் கிடைக்கின்றன. ஏனென்றால் நாங்கள் எந்த இபாதத்தைச் செய்கிறோமோ அதை அவர்களும் செய்கிறார்கள். அதனோடு ஸதகாவும் கொடுக்கிறார்கள். நாங்கள் ஸதகா கொடுக்க சக்தி யில்லாதவர்களா யிருக்கிறோமென்று சொன்னார்கள். அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த அஸ்ஹாபுகளை நோக்கி உங்களுக்கிருக்கிற எளிமைத் தனத்தினால் நீங்கள் ஒதுகிற தஸ்பீஹும், தஹ்லீலும், தக்பீரும் ஸதகாவுக்குப் பகரமா யிருக்கிறதென்றும், இன்னும் நீங்கள் நன்மையைக் கொண்டு ஏவுகிற ஒவ்வொரு ஏவலும் தீமையை விட்டும் விலக்குகிற ஒவ்வொரு விலக்கலும் ஸதகாவா யிருக்கிறதென்றும், இன்னும் உங்களில் யாராவது தங்கள் பெண்ஜாதி பிள்ளைகளுக்கு ஒரு பிடி ஒஜீபனம் உண்ணக் கொடுப்பார்களாகில் அதுவும் ஸதகாவா யிருக்கிறதென்றும் திருவுளமானார்கள்.

பகீருடைய ஹக்கில் தஸ்பீஹ், தஹ்மீதுகளுடைய வரிசை அதிகமென்றதின் காரணம் என்னவென்றால், அறிந்து கொள்ளுங்கள். பகீருடைய கல்பானது துன்யாவுடைய காரியங்களால் இருளடையாமல் சுத்தமா யிருக்கிறது. ஆதலால் அவன் ஒதுகிற ஒரு கலிமாவானது சுத்தமான நிலத்தில் நட்டிய ஒரு வித்துக்குச் சமானமா யிருக்கிறது. அந்த நிலத்தின் குணமும் அதில் ஊன்றின விதையின் பலனும் அதிகமாகவே யிருக்கும். துன்யாவுடைய இச்சைகளால் நிறைந்திருக்கிற கல்பில் அல்லாவுடைய திக்ராகிறது அவர் நிலத்தில் ஊன்றிய விதைக்கு ஒப்பாகும். அதன் குணமும் பலனும் கொஞ்சமேயாம்.

ஸலவாத்துடைய பயான்.

ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது:—ஒரு நாள் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வெளியே புறப்பட்டார்கள். அவர்களுடைய முகத்தில் சந்தோஷக்குறி இலங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவர்கள் திருவாய்மலர்ந்து தங்களுக்கு அல்லாஹு தஆலா சொல்லுகிறதாய் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து அறிவித்தார்கள் என்று அருளிச் செய்தார்கள், அதாவது (என் ஹபீபே) உங்கள் உம்மத்தில் நின்றும் ஒருவன் ஒருதரம் உங்கள் பேரில் ஸலவாத்து ஓதினால் நான் அவன் மேல் பத்துதரம் ஸலவாத்து ஓது

கிறேனே இதுவே உங்களுக்குப் போதாதா? இன்னும் ஒருவன் உங்கள் பேரில் ஒருதரம் ஸலாம் சொன்னால் நான் அவன் மேல் பத்ததரம் ஸலாம் சொல்லுகிறேனே இதன் பேரில் நீர் திருப்தியடைய மாட்டீரா? என்பதே.

இன்னும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்:—யாராவதொருவன் என்பேரில் ஸலவாத்துச் சொல்லுவானுகில் அவன் பேரில் எல்லா மலக்குகளும் ஸலவாத்துச் சொல்லுகிறார்கள், ஸலவாத்தை அவன் அதிகமாய்ச் சொன்னாலும் கொஞ்சமாய்ச் சொன்னாலும் சரி. இன்னும் எவன் என்மேல் அதிகமாய் ஸலவாத்து சொல்லுகிறானு அவன் எனக்கு மிகவும் நெருங்கினவனு யிருக்கிறன். யாராவதொருவன் ஒருதரம் என்பேரில் ஸலவாத்து சொல்லுவானுகில் அவனுக்குப் பத்து நன்மைகள் எழுதப் படுகின்றன. அவனுடைய தீமைகளில் பத்து அழிக்கப் படுகின்றன. இன்னும் யாராவதொருவன் தான் எழுதுகிற வாசகத்தில் என்மேல் ஸலவாத்தை எழுதுவானுகில் அந்த வாசகத்தில் என் பேர் எழுதியிருக்கிற வரையில் மலக்குகள் அவனுக்காகப் பிழை பொறுக்கத் தேடுகிறார்கள் என்று திருவுளமா யிருக்கிறார்கள்.

இஸ்திக்பாருடைய பயான்.

இப்னுமஸ்ஊது றலியல்லாஹு அன்ஹுமா சொல்லுகிறதாவது:—குர்ஆனில் இரண்டு ஆயத்துகளிருக்கின்றன. யாராவ தொருவன் தன்னுடைய பாவங்களுக்குப் பின்னால் அந்த இரண்டு ஆயத்துகளையும் ஓதி பிழை பொறுக்கத் தேடுவானுகில் அவனுடைய பாவங்கள் பொறுக்கப்படும். அந்த ஆயத்துகளில் ஒன்று இது:

والذين اذا فعلوا فاحشة او ظلموا انفسهم ذكروا الله فاستغفروا لذنوبهم

மற்றொரு ஆயத்து இது:

ومن يعمل سوءا او يظلم نفسه ثم يستغفر الله يجد الله غفورا رحيما

இன்னும் அல்லாஹு தஆலா ஹலாத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு, فسبح بحمد ربك واستغفره நீர் உம்முடைய நாயகனுடைய புகழைக் கொண்டு துதி செய்வீராக இன்னும் அவனிடத்தில் பிழை பொறுக்கத் தேடுவீராக என்று திருவுளமா யிருக்கிறான். இதனாலேதான் ஹலாத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பின்வரும் துஆவை ஓதி வருகிறவர்களாயிருந்தார்கள். அதாவது:—

سبحانك اللهم وبحمدك اللهم اغفر لى انك انت التواب الرحيم

ஸுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக்க அல்லாஹும்மக்பிர்லீ இன்னக்க அன்த்தத் தவ்வாபுர் றஹீம் என்பதே. இன்னும் யாராவ தொருவன் இஸ்திக்பார் செய்வாஞகில் அவனுடைய விசனம் நீங்கி விடு மென்றும், எல்லா இடுக்கங்களையும் விட்டு அவன் ஈடேற்றம் பெறுவா னென்றும் அவன் அறியாதபுறத்தி லிருந்து அவனுக்கு ரிஸ்கு கிடைக்கு மென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் நான் தினந்தோறும் எழுபது விடுத்தம் இஸ் திக்பாரு செய்கிறே னென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். றஸூல் நாயகமவர்களுடைய ஹால் இப்படியா யிருந்தால் மற்றவர்கள் எந்த நேரத்திலும் தவுபாவை விட்டொழியாம லிருப்பது மிகவும் அவசியமா யிருக்கிறது. இன்னும் யாராவ தொருவன் நித்திரைக்காகப் படுக்கிற நேரத்தில் மூன்று தரம் استغفر الله الذى لااله الا هو الحى القيوم அஸ்தக்பிருல்லா ஹல்லதீ லாஇலாஹ இல்லாஹுவல் ஹையுல் கய்யூம் என்று சொல்வாஞகில் அவனுடைய எல்லாப் பாவங்களும் மன் னிக்கப்படு மென்றும், அப்பாவங்கள் கடலுடைய அலைகளுக்கும், மரங்களுடைய இலைகளுக்கும், ஆற்று மணல்களுக்கும், தின்யாவுடைய நாட்களுக்கும் சரியா யிருந்தாலும் ஒக்கு மென்றும் திருவுளமா யிருக் கிறார்கள். இன்னும் பாவம் செய்திருக்கிற ஒரு அடியான் நல்ல வித மாய் ஒலுச் செய்து இரண்டு றக்அத்து தொழுது இஸ்திக்பார் செய்வா ஞகில் அவனுடைய பாவம் மன்னிக்கப்படு மென்று திருவுளமா யிருக்கிறார்கள்.

துஆவுடைய அதபுகளின் பயான்,

அறிந்து கொள்ளுங்கள் :—உள்ளச்சத்துடன் கெஞ்சி அழுது துஆ கேட்பதானது நபிலான இபாதத்துகளின் தொகையிற் சேர்ந்த தாயிருக்கிறது. இன்னும் துஆவானது இபாதத்துகளின் மூலியா யிருக்கிற தென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இதற்கு காரணம் யாதெனில், அல்லாஹு தஆலா தன் அடியார்கள் பேரில் இபாதத்தை விதித்து அவர்கள் தங்கள் அடிமைத் தனத்தை வெளியாக்க வேண்டு மென்ற நோக்கத்தி னுலேயாம். அடிமைத்தன மென்பது அடியான் தன்னுடைய கேவல ஸ்திதியையும் அல்லாஹு தஆலாவுடைய மேலான கனத்தையும் கண் டறிவதினுல் உண்டாகும். இந்த இரண்டு விஷயங்களும் துஆவில் காணப்படுகின்றன.

கெஞ்சுவதும் அழுவதும் எவ்வளவு அதிகமாகுமோ அவ்வளவு அதிகமேலாகும்; துஆவில் எட்டு அதபுகளை கவனிக்க வேண்டும்.

முதலாவது :—அந்த துஆ முபாறக்கான காலங்களில் அதாவது அறபா, ஜும்ஆ, ரமலான், ஸஹர் முதலியவைப் போல் பறக்கத்தான நேரங்களில் சம்பவிக்கும் படி முயற்சிக்க வேண்டும்.

இரண்டாவது :—முபாறக்கான சமயங்களை அதாவது யுத்தவீரர் கள் யுத்தஞ் செய்கிற நேரம், மழை பெய்கிற நேரம், பாலு தொழுகை யின் நேரம் முதலியவைபோல் பறக்கத்துடைய சமயங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த சமயங்களில் வானத்துடைய வாசல்கள் திறக்கப்பட்டிருக்கின்றன வென்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் பாங்குக்கும் இகாமத்துக்கும் நடுவேயுள்ள நேரமும் நோன்பு வைத்துக் கொண்டிருக்கிற நேரமும் இது போலவேயாம். கல்பு அதிகமா யிளகி யிருக்கிற நேரமும் அப்படியேயாம். ஏனென்றால் கல்பின் இளக்க மானது றஹ்மத்துடைய வாசல் திறந்திருப்பதற்கு அத்தாட்சியா யிருக்கிறது.

மூன்றாவது :—இரண்டு கைகளையும் ஏந்திக் கொண்டிருக்க வேண் டும். கடைசியில் அக்கைகளை முகத்தின் மேல் தடவிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் தஆலா மிகவும் சங்கை பொருந்தி யவனா யிருக்கிறான். அவன் சமூகத்தில் ஏந்தின கையை அவன் வெறு மையாய்த் திருப்ப மாட்டான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன் னும் யாராவ தொருவன் துஆ செய்வானுகில் அவன் மூன்று வஸ்துக் களில் எதையாவ தொன்றைப் பெறுவானேயன்றி வெறுங்கையனாகா னென்றும், அவற்றுள் ஒன்று அவனுடைய பாவங்களாவது மன்னிக் கப்படும், அல்லது அவன் கேட்பது அப்போதே கிடைக்கும், அல் லது பின்னிட்டாவது கிடைக்கும் என்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

நாலாவது:— துஆ கபூலாகுமோ ஆகாதோ என்ற சந்தேகத்துடன் துஆ செய்யக் கூடாது. அகத்தியம் கபூலாகு மென்று நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனென்றால்,

ادعوا الله وانتم موقنون بالاجابة "நீங்கள் துஆ கபூலாகு மென்று நம்பிக்கை வைத்தவர்களாய் அல்லாஹ் தஆலா விடத்தில் துவா கேளுங்கள்" என்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

ஐந்தாவது :—கெஞ்சுவதோடும் உள்ளச்சத்தோடும் உருகியழுவ தோடும் ஹலாலாறு கல்போடும் துஆ செய்ய வேண்டும். ஏனென்றால் மறதியா யிருக்கிற கல்பின் எந்த துஆவும் ஏற்கப்படுகிறதில்லை யென்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஆருவது:—இடைவிடாமல் தொடர்ச்சியாய் துஆ செய்து கொண்டும் கபூலை ஆதாவு வைத்துக்கொண்டு மிருக்கவேண்டும். நான் அனேகம் தடவை துஆ கேட்டேன் துவா கபூலாக வில்லையென்று சொல்லக் கூடாது. துஆவை ஏற்க இணக்கமான நேரத்தை அல்லாஹ்தஆலா மிகவும் அறிந்தவனுயிருக்கிறன். பின்னர் துஆ கபூலானுல், الحمد لله الذي بنعمته تتم الصالحات அல்ஹம்து லில்லாஹில்லதீ பிநிஃமத்திஹி தத்திமுஸ் ஸாலிஹாத்து கபூலாகுவதில் தாமதமானுல் الحمد لله على كل حال அல்ஹம்து லில்லாஹி அலா குல்லிஹாலின் என்றும் சொல்ல வேண்டும்.

ஏழாவது:—துஆ செய்வதற்கு முன்னே தஸ்பீஹும் ஸலவாத்தும் ஓதவேண்டும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் துஆவுக்கு முன்னே, سبحان ربي العلي الاعلى الوهاب ஸுப்ஹான றப்பியல் அலிய்யல் அஃலல் வஹ்ஹாப் என்று தஸ்பீஹ் செய்கிறவர்களா யிருந்தார்கள். இன்னும் யாராவதொருவன் துவாவுக்கு முன்னே ஸலவாத்து ஓதுவானுகில் அவனுடைய துஆ கபூல் செய்யப்படுமென்றும், அல்லாஹ்தஆலா மிகவும் சங்கை பொருந்தியவனுதலால் தன்னிடத்தில் கேட்கப்பட்ட இரண்டு துஆக்களில் ஒன்றை கபூல் செய்து மற்றொன்றை ரத்து செய்யமாட்டானென்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

எட்டாவது:—துஆவுக்கு முன்னே தல்பா செய்ய வேண்டும். பாவங்களை விட்டும் நீங்கவேண்டும். கல்பை அல்லாவின் வசம் ஒப்புவிக்க வேண்டும். ஏனென்றுல் அநேகம் துஆக்கள் ரத்து செய்யப்படுவதற்குக் காரணம் கல்பின் மறதியும் பாவங்களின் இருளுமேயாம். கஃபுல் அஹ்பார் றலியல்லாஹு அன்ஹு சொல்கிறதாவது:—பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் பஞ்சமுண்டானதினுல் மூஸா அலைஹிஸ்ஸலாம் தங்கள் உம்மத்துகளுடன் கூட மூன்று தரம் மழைக்காக துஆ இரக்கப் புறப்பட்டார்கள். துஆ கபூலாகவில்லை. பின்பு அல்லாஹ்தஆலா மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கு, அய் மூஸா! உம்முடைய கூட்டத்தில் ஒரு கோளன் இருக்கிறன், அவன் இருக்கிறவரையில் உங்கள் துவாவை கபூல் செய்யமாட்டேனென்று வஹியிறக்கினன். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்தஆலாவை வணங்கி ஆண்டவனே அவன் யார்? எனக்குக்காட்டு, நான் அவனை நீக்கிவிடுகிறேனென்று சொன்னார்கள். அதற்கு அல்லாஹ்தஆலா அய் மூஸா! கோள்கூடாதென்கிற நான் எப்படி கோள்சொல்வேன் என்று அறி

வித்த பின்னர் நீங்கள் எல்லாரும் கோளவிட்டுத் தவ்பாச் செய்யுங்க ளென்று உத்திரவு செய்தான். அதுபோல் எல்லாரும் தவ்பாச் செய் தார்கள். அப்போது மழை பொழிந்தது என்பதே. இன்னும் மாலிக் குப்னுதீனார் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறதாவது, ஒருதரம் பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் பஞ்சமுண்டாயிற்று. மழைக்காக துஆ செய்யும் பொருட்டு ஜனங்கள் பலதடவையும் புறப்பட்டு போனார்கள். துவா கபூலாகவில்லை. பின்னர் அவர்களுடைய நபியின் பேரில் வஹி வந்தது. அதெப்படி யென்றால், உங்கள் தேகம் அசுத்தமாயும் உங் கள் வயிறு ஹறாமால் நிறம்பினதாயும் உங்கள் கைகள் அநீதமான இரத்தத்தில் தோய்ந்தவைகளாயு மிருக்கிற இந்த நிலைமையில் துஆ செய்யப் புறப்பட்டீர்கள். இப்படி நீங்கள் புறப்பட்டதினால் என்கோபம் அதிகரித்தது. என்னிடத்திலிருந்து தூரமாய் விடுங்கள், என்று அவர் களுக்குச் சொல் என்பதே.

பற்பல துஆக்களின் பயான்.

அறிந்துகொள்ளுங்கள் மாஸூராவான துஆக்கள் அனந்த மிருக் கின்றன. அவை றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானவைகளாயும் காலையும் மாலையும் தொழுகைகளுக்குப் பின்னே பற்பல நேரங்களில் அவைகளை ஓதுவது ஸுன்னத்தாயு மிருக் கின்றன. இஹ்யாவுல் உலூமித்தீனில் அநேகம் துஆக்களை சேகரம் செய்திருக்கிறேன். இன்னும் பிதாயத்துல் ஹிதாயா வென்ற கிதாபில் மிகுந்த காஸியத்துள்ள சில துஆக்களை எழுதியிருக்கிறேன். யாரா வது விருப்பமுள்ளவர்கள் அக்கிதாபிலிருந்து ஞாபகம் செய்து கொள்ள வேண்டியது. இந்த கிதாபில் அவைகளை எழுதுவது கிதாபு விரிவா வதற்குக் காரணமாகும். இன்னும் இந்த துஆக்கள் பிரபல்லியமான வைகளாயும் ஒவ்வொருவரும் ஞாபகம் செய்திருக்கக் கூடியவைகளாயும் இருக்கின்றன.

ஆதலால் ஜனங்களுக்குப் பெரும்பாலும் ஞாபகமில்லாதவை களும் சில காரியங்களில் அவைகளை ஓதுவது ஸுன்னத்தாயு மிருக்கிற சில துஆக்களை நாம் இங்கு எழுதுவோம். ஏனென்றால் ஜனங்கள் அவைகளைப் படித்துக்கொள்ளவும் அவ்வகளின் பொருளை யுணர்ந்து கொள்ளவும் நேரந்தோறும் அவைகளை ஓதிவரவுமேயாம். ஆதலால் அடியான் எந்த நேரத்திலும் அல்லாஹு தஆலாவை மறக்காமல் அவனிடம் துஆ கேட்கிறவனு மிருக்கவேண்டியது.

வீட்டிலிருந்து வெளியே புறப்படுகிறபோது இதை ஓதுவான்.

بسم الله ربي اعوذبك ان اضل او اضل او اظلم او اظلم او اجهل
او اجهل علي بسم الله الرحمن الرحيم لاحول ولا قوة الا بالله

பிஸ்மில்லாஹி றப்பீ அவூது பிக்க அன் அலில்ல அவ் உலில்ல அவ் அள்லிம அவ் உள்லம அவ் அஜ்ஹல அவ் உஜ்ஹல அலய்ய பிஸ் மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்.

பள்ளி வாசலில் புகும்போது இதை ஓதி முந்தி வலது காலை வைப்பான்.

اللهم صل على محمد وعلى اله وسلم اغفر ذنوبي
وافتح لے ابواب رحمتك

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸல்லிம் இக்பிர் துனூபி வப்தஹ்லீ அப்வாப றஹ்மதிக்க.

வீண் பேச்சுகள் பேசிக்கொண்டிருக்கிற சபையில் உட்காரும் போது இதை ஓதுவது அதற்குக் கபாராவாகும்.

سبحانك اللهم وبحمدك اشهد ان لا اله الا انت استغفرك واتوب
اليك عملت سوء وظلمت نفسي فاغفر لے انه لا يغفر الذنوب الا انت

ஸுப்ஹானக் கல்லாஹும்ம வபிஹம்திக்க அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த அஸ்தக்பிருக்க வஅதூபு இலைக்க அமில்த்து ஸூஅன் வலலம்த்து நப்ஸீ பக்பிர்லீ இன்னஹு லாயக்பிருத்துனூப இல்லா அன்த.

கடைத்தெருவுக்குப் போனால் இதை ஓதுவான்,

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيى ويميت
وهو حي لا يموت بيده الخير وهو علي كل شيء قدير

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது வஹுவ ஹையுன் லாய மூத்து பியதிஹில் கைரு வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்.

புதுப்புடவை உடுக்கும்போது இதை ஓதுவாள்.

اللهم كسوتني هذا الثوب فلك الحمد اسئالك من خيره
وخير ما صنع له واعوذبك من شره وشر ما صنع له

அல்லாஹும்ம கஸவ்த்தனீ ஹாதத் தவ்ப பலக்கல் ஹம்து அஸ் அலுக்க மின்கைரிஹி வகைரிமாஸுனிஅ லஹு வஅவூது பிக்க மின் ஷர்ரிஹி வஷர்ரி மாஸுனிஅ லஹு.

புதிய பிறையைக் காணும்போது இதை ஓதுவான்.

اللهم اهله علينا بالامن والايمان والسلامة والاسلام ربي وربك الله

அல்லாஹும்ம அஹில்லஹு அலைனா பில்அம்னி வல் ஈமான் வஸ்ஸலாமத்தி வல் இஸ்லாம் றப்பீ வறப்பு கல்லாஹ்.

புயல் காற்றடிக்கும்போது இதை ஓதுவான்.

اللهم انى اسئلك خير هذه الريح وخير ما فيها وخير ما ارسلت
به ونعوذبك من شرها وشر ما فيها وشر ما ارسلت به

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைர ஹாதிஹிர்ரீஹி வகைர மா பீஹா வகைர மா உர்ஸிலத் பிஹி வநவூது பிக்க மின் ஷர்ரிஹா வஷர்ரி மா பீஹா வஷர்ரி மா உர்ஸிலத்பிஹி,

ஒருவர் மவுத்தான செய்தியைக்கேட்டால் இதை ஓதுவான்.

سبحان الحى الذى لايموت انا لله وانا اليه راجعون

ஸுப்ஹானல் ஹையில்லதீ லாயமூத்து இன்ன லில்லாஹி வஇன்ன இலைஹி ராஜிஊன்.

கைராத்து கொடுக்கும்போது இதை ஓதுவான்.

ربنا تقبل منا انك انت السميع العليم

றப்பனத கப்பல் மின்ன இன்னக்க அன்த்தஸ்ஸமீஉல் அலீம்.

நஷ்டமுண்டானபோது இதை ஓதுவான்.

عسى ربنا ان يبد لنا خيرا منها انا الى ربنا راغبون.

அஸா ரப்புனு அன்யுப்திலனு கைறன் மின்ஹா இன்ன இலா றப்பினு ராகிபூன்.

யாதொரு வேலையைத் துவக்கம் செய்தால் இதை ஓதுவான்.

ربنا اتنا من لدنك رحمة وهيئ لنا من امرنا رشدا

றப்பனா ஆதினா மின்லத்துன்க்க றஹ்மத்தன் வஹையய்யிஃ லனா மின் அம்ரினா றஷதா,

வானத்தைப் பார்க்கும் போது இதை ஓதுவான்.

ربنا ما خلقت هذا باطلا سبحانك فقنا عذاب النار تبارك الذي
جعل في السماء بروجا وجعل فيها سراجا وقمرا منيرا

றப்பனா மாகலக்த ஹாதா பாத்திலா ஸுப்ஹானக்க பகினா அதா பன்னார் தபாரகல்லதீ ஜஅலபிஸ்ஸமாஇ புறாஜன் வஜஅல பீஹா ஸிரு ஜன் வகமரன் முனீரா.

இடிசத்தம் கேட்கும் போது இதை ஓதுவான்.

سبحان من يسبح الرعد بحمده والملئكة من خيفته

ஸுப்ஹான மன் யுஸப்பிஹுர் ரஃது பிஹம்திஹி வல்மலாயி கத்து மின்கீபத்திஹீ.

எங்கேயாவது இடி விழுகிற போது இதை ஓதுவான்.

اللهم لا تقتلنا بغضبك ولا تهلكنا بعذابك وعافنا قبل ذالك

அல்லாஹும்ம லாதக்துல்னா பிகலபிக்க வலா துஹ்லிக்னா பிஅதாபிக்க வஆபினா கப்ல தாலிக்க

மழை பொழியும்போது இதை ஓதுவான்.

اللهم اجعله سقيا هنيئا وصبانا فعا واجعله سبب رحمتك
ولا تجعله سبب عذابك .

அல்லாஹும் மஜ்அல்ஹு ஸுக்யன் ஹனீஅன் வஸப்பன் நாபி அன் வஜ்அல்ஹு ஸபப றஹ்மத்திக்க வலாதஜ்அல்ஹு ஸபபஅதா பிக்க.

கோபமான வேளையில் இதை ஓதுவான்.

اللهم اغفر لي ذنبي واذهب غيظ قلبي واجرني من الشيطان الرجيم

அல்லாஹும்மக்பிர்லீ தம்பீ வத்ஹப் கைல கல்பீ வஅஜிர்னீ மினஷ்ஷைத்தானிர் ரஜீம்.

பயங்கர முண்டான நேரத்தில் இதை ஓதுவான்.

اللهم انا نعوذ بك من شرورهم ونذرابك في نحورهم

அல்லாஹும்ம இன்ன நவூது பிக்க மின் ஷுரூரிஹிம் வநத்ரஉ பிக்க பீபுஜூரிஹிம்.

யாதொரு ஸ்தானத்தில் நோய் உண்டானுல் அதன் மேல் கையை வைத்து மூன்று தரம்,

بسم الله الرحمن الرحيم اعوذ بالله وقدرته من شرما اجد واحاذر

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் என்றும் ஏழு தரம் அவூது பில்லாஹி வகுத்ரதிஹி மின் ஷர்ரி மாஅஜிது வஉஹாதிரு என்றும் ஓதுவான்.

யாதொரு துக்கத்தைக் கண்டால் இதை ஓதுவான்.

لااله الا الله العلى العظيم لااله الا الله رب العرش العظيم
لااله الا الله رب السموات ورب العرش الكريم

லாஇலாஹ இல்லல்லாஹுல் அலிய்யுல் அலீம் லாஇலாஹ இல்லல்லாஹு றப்புல் அர்ஷில் அலீம் லாஇலாஹ இல்லல்லாஹு றப்புஸ்ஸமாவாத்தி வறப்புல் அர்ஷில் கரீம்.

யாதொரு காரியம் தடைபட்டுப் போனுல் இதை ஓதுவான்.

اللهم اني عبدك وابن عبدك وابن امتك ناصيتي بيدك ماض
في حكمك ونافة في قضائك اسئالك بكل اسم سميت به نفسك
وانزلته في كتابك او اعطيته احدا من خلقك او استاثرت به
في علم الغيب عندك ان تجعل القران ربيع قلبي ونور بصري
وجلاء غمي وذهاب حزني وهمي

அல்லாஹும்ம இன்னீ அப்துக்க வப்னு அப்திக்க வப்னு அமத்திக்க நாஸியத்தீ பியதிக்க மாலின் பீஹுக்மிக்க வநாபிதுன் பீகலாயிக்க அஸ்அலுக்க பிகுல்லி இஸ்மின் ஸம்மைத்த பிஹி நப்ஸக்க வ அன்ஸல்த்தஹு பீகித்தாபிக்க அவ் அஃத்தய்த்தஹு அஹதன் மின் கல்கிக்க அவிஸ்தஃஸற்த்த பிஹி பீஇல்மில் கைபி இன்தக்க அன்தஜ் அலல் குர்ஆன றபீஅ கல்பீ வநூர பஸிரீ வஜிலாஅ கம்மீ வதிஹாப ஹுஸ்னீ வஹம்மீ.

கண்ணாடி பார்க்கும்போது இதை ஓதுவான்.

الحمد لله الذي خلقني فاحسن خلقي وصورني فاحسن صورتي

அல்ஹம்து லில்லா ஹில்லதீ கலகனீ பஅஹ்ஸன கல்கீ வஸவ் வரன் பஅஹ்ஸன ஸுரத்தி.

யாதொரு அடிமையை கிரயத்துக்கு வாங்கினால் அவனுடைய நெற்றி ரோமத்தைப் பிடித்துக்கொண்டு இதை ஓதுவான்.

اللهم اني اسئالك خير ما جبل عليه واعوذ بك بشره وشر ما جبل عليه

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க கைரமாஜ்பில அலைஹி வஅவூதுபிக்க பிஷர்ரிஹி வஷர்ரிமாஜ்பில அலைஹி.

நித்திரைக்காகப் படுக்கிறபோது இதை ஓதுவான்.

رب باسمك وضعت جنبي وباسمك ارفعه هذه نفسي انت
تتوفها لك محيا ها ومماتها ان امسكتها فاغفرلها وان ارسلتها
فاحفظها بما تحفظ به عبادك الصالحين.

ரப்பி பி இஸ்மிக்க வலஃத்து ஜம்பீ வபி இஸ்மிக்க அர்பஉஹு ஹாதிஹி நப்ஸீ அன்த்த தத்தவப்பாஹா லக்க மஹ்யாஹா வமமாத் துஹா இன் அமஸக்த்தஹா பக்பிர்லஹா வஇன் அர்ஸல்த்தஹாப அஹ்பில்ஹா பிமாதுஹ்பிலு பிஹி இபாதகஸ்ஸாலிஹீன்.

நித்திரையிலிருந்து விழிக்கும்போது இதை ஓதுவான்.

الحمد لله الذي احيانا بعد ما اماتنا واليه النشور واصبحنا واصبح
الملك لله والعظمة والسلطان لله والعزة والقدرة لله اصبحنا
على فطرة الاسلام وكلمة الاخلاص ودين نبينا محمد صلي
الله عليه وسلم وملة ابينا ابراهيم حنيفا وما كان من المشركين

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாத்தனா வஇலைஹின் நுஷ்ஊறு வஅஸ்பஹ்னா வஅஸ்பஹல் முல்கு லில்லாஹி வல் அலமத்து வஸ்ஸுல்த்தானு லில்லாஹி வல்இஸ்ஸத்து வல்குத் ரத்து லில்லாஹி அஸ்பஹ்னா அலாபித்ரதில் இஸ்லாம் வகலிமத்தல் இக்லாஸி வதீனி நபிய்யினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வமில்லத்தி அபீனா இப்ராஹீம ஹனீபன் வமாகான மினல் முஷ்ரிகீன்.

பத்தாவது அஸ்லு.

அவுராதுடைய தர்த்தீபின் பயான்.

இஸ்லாமுடைய உன்வானில் நாம் சொல்லி வந்த சங்கதிகளால் மனிதனே நிலநீராலாகிய இந்தப்பிரதேசத்தில் வர்த்தகத்துக்காக அனுப்பி யிருக்கிறதென்றும் அவனுடைய ரூஹாகிறது உல்வி யென்னும் மேல் உலகத்தைச் சேர்ந்ததென்றும், அது அங்கிருந்தே வந்த தென்றும்; பின்பு அவ்விடத்திற்கே போகுமென்றும், இந்த வர்த்தகத்தில் அவ னுடைய வயதே அவனுக்கு முதலா யிருக்கிறதென்றும், இந்த முதல் எப்போதும் சேதமாய்க் கொண்டிருக்கிறதென்றும் தெரிய வந்திருக் கலாம்.

வயதாகிய இந்த முதலினுல் ஒவ்வொரு மூச்சிலும் லாபத்தை யடையாமற் போனுல் கடைசியில் முதலழிந்துபோம். இதன் நிமித்தமே அல்லாஹ் தஆலா,

"திடனுக இன்ஸானுகிறவன் தேசத்திலிருக்கிறன்" என்று திருவுளமா யிருக்கிறன்.

இதற்கு உபமானம்:-ஒரு வர்த்தகனுக்குப் பனிக்கட்டியே முதலா யிருக்கிறது. அவன் அதை உஷ்ணமான தேசத்தில் கொண்டுபோய் விற்கிறவனு யிருக்கிறன். அப்படி விற்கும்போது, ஓ முஸ்லிம்களே உருகிப்போகிற பொருளே முதலாய் வைத்திருக்கிற வர்த்தகன் பேரில் இரக்கப்படுங்கள் (அதாவது சிக்கிரம் வாங்கிக் கொள்ளுங்கள்) என்று சொல்லுகிறன். இது போலவே வயதென்னும் முதலானது ஓயாமல் உருகிக்கொண்டே யிருக்கிறது. ஏனென்றுல், வயதென்பது எண்ணிக் கையில் அடங்கின சில மூச்சுகளேயாம். அவற்றின் எண்ணிக்கையை அல்லாஹ் தஆலா அறிவான்.

ஆகவே எந்த ஜனங்கள் இதன் முடிவை யோசித்துப் பார்த்தார் களோ அவர்கள் தங்கள் மூச்சுகளைப் பாதுகார்த்துக் கொண்டார்கள். ஏனென்றுல் ஒவ்வோர் மூச்சும் ஒவ்வோர் ரத்தினமா யிருக்கிற தென் றும் அதனுல் நித்தியானந்த பதவியை அடையலா மென்றும் அவர் கள் எண்ணினதினுலேயாம். பொன், வெள்ளிகளே முதலாய் வைத் திருக்கிற ஒரு வர்த்தகன் அதை விருத்திசெய்யும் பொருட்டு எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறனே அவ்வளவே அல்ல, அதிலும் அதிகமாய் இது காரியத்தில் இவர்கள் பிரயாசை யெடுத்துக் கொண் டார்கள். அமல்களுக்காக இரவு பகல்களில் நேரங்களே இவர்கள் பாகம்

வைத்து ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு நேரத்தைக் குறிப்பிட்டுக் கொண்டார்கள். எந்த நேரமும் வீண் போகாதபடி வெவ்வேறே அவுராதுகளை நியமனம் செய்து கொண்டார்கள். ஏனென்றால் இவ்வுலகத்தில் நின்றும் ஸபர் செய்தவன் எவனே, இன்னும் அல்லாஹ்வை தஆலாவை தூணை கொண்டவன் எவனே, இன்னும் அல்லாஹ்வை தஆலாவுடைய ஆசை அதிகரித்தவன் எவனே அவனே ஆகிரத்தில் நற்பதவி யடைவான் என்று இவர்கள் அறிந்ததினாலேயாம். அல்லாஹ்வை தஆலாவை தூணை கொள்வ தென்பது ஒயாத திக்ரைக் கொண்டேயொழிய உண்டாகாது. அல்லாஹ்வை தஆலாவுடைய ஆசை யென்பது மஃரிபத்தினாலன்றி உண்டாகாது. மஃரிபத் தென்பது அல்லாஹ்வை தஆலாவை நோட்டத்தினால் விசாரணை புரிவதன்றி வாய்க்காது. ஆகவே ஒயாத திக்ரும் விசாரிப்பும் நற்பதவிக்கு மூலமாயிருக்கிறது. இனி துன்யாவை விடுவதும், இச்சைகளை விடுவதும், பாவங்களை விடுவதும், ஏன் அவசிய மென்றால், திக்ரு பிக்ருகளுக்காக மனவோர்மை யுண்டாவதற்கேயாம்.

ஒயாத திக்ருக்கு இரண்டு வழிகள் உண்டு. முதலாவது :—எப்போதும் அல்லாஹ், அல்லாஹ் என்று கல்பினால் சொல்லிக் கொண்டிருப்பதாம். நாவினால் அல்ல. மேலும் கல்பினால் சொல்வதும் நப்சுடைய பேச்சாயிருப்பதால் அப்படியும் சொல்ல மாட்டான். பின்பு எப்படி யென்றால் ஒரு போதாவது மறக்காதபடி எந்நேரமும் அவனைத் தரிசித்துக் கொண்டிருப்பதாம். இது மிகவும் கஷ்டமானது. இப்படித் தன் மனதை ஒரே ஹாலில் வைக்க எல்லாராலும் முடியாது. இதனால் அநேக ஜனங்களுக்கு சடைவு நேரிடுகின்றது. இதன் நிமித்தமே வெவ்வேறு அவுராதுகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளிற் சில அவுராதுகள் தொழுகை முதலியன போல் சரீரத்தால் செய்யப்படுகிறவைகளாயும், இன்னும் குர்ஆன் ஓதல் தஸ்பீஹ் செய்தல் போல் சில அவுராதுகள் நாவால் ஓதப்படுகிறவைகளாயும் இன்னும் பிக்ரு செய்தல் போல் சில அவுராதுகள் கல்பால் செய்யப்படுகிறவைகளாயும் ஏற்படுத்தப்பட்டன. ஏனென்றால் சடைவு உண்டாகாம லிருப்பதற்கேயாம். ஒரு ஹாலத்திலிருந்து மற்றொரு ஹாலத்தில் திரும்புவதானது பாக்கொழிதலுக்கும் சவுக்கியத்துக்கும் காரணமாகின்றது. இதுவுந் தவிர துன்யாவுடைய ஹாஜத்துகளில் கழிக்க வேண்டிய நேரங்களுக்கும் இதற்கும் ஓர் பிரிவு ஏற்படுகின்றது.

ஆகக்கூடி இதன் கருத்தாகிறது மனிதன் தன்னுடைய எல்லா நேரங்களையும் ஆகிரத்துடைய காரியத்தில் கழிக்க முடியாமற் போனால் அவனுடைய நன்மைத்தட்டு கனக்கும் பொருட்டு அதிக நேரத்தையாவது அதில் கழிக்க வேண்டு மென்பதேயாம். ஏனென்றால் அவனுடைய நேரங்களில் ஒரு பாதியை துன்யாவுடைய காரியங்களிலும் ஹலாலான வஸ்துகளைக் கொண்டு பிரயோஜனம் பெறுவதிலும்

கழித்து மற்றொரு பாதியை ஆகிரத்துடைய காரியத்தில் கழிப் பானுகில் இதில். அவனுடைய தீமைத்தட்டே கனக்கு மென்ற பய மிருக்கிறது. ஏனென்றால் அவன் துன்யாவுடைய காரியங்களை எவ் வளவு பிரியத்துடன் செய்தானோ அவ்வளவு பிரியத்துடன் ஆகிறத் துடைய காரியத்தைச் செய்திருக்க முடியாது. மனம் எதை விரும்பு கின்றதோ அது காரியத்துக்கே சுபாவம் உதவியாய் நிற்கும். தீனு டைய காரியங்களில் மனதைக் கொண்டுவருவது அதன் விருப்பத்துக்கு விரோதமேயாம். ஆகவே அவனுடைய அமலில் ரியாவென்ற புகழாசை யாவது இகழின் பயமாவது கலந்திருக்க இடமுண்டு. இத காரண மாய் அமலில் இக்லாஸ் என்ற கலப்பின்மையைக் காண்பது அரிதா யிருப்பதாலும் இக்லாஸில்லாத அமலினால் எப்பயனு மில்லையாதலா லும் அமல்கள் அதிகமா யிருக்க வேண்டிய தவசியமாயிற்று. ஏனென் றால் அந்த அதிகமான அமல்களில் நின்றும் ஏதாவதொரு அமல் இக்லா ஸுள்ளதாய் வெளிப்படும். ஆதலால் அதிகமான நேரத்தை தீனுடைய காரியத்தில் கழிப்பது அவசியமா யிருக்கிறது. இதன் நிமித்தமே அல் லாஹு தஆலா கீழ்காணும் ஆயத்துகளைத் திருவுளமா யிருக்கிறான்.

ومن اناء الليل فسبح واطراف النهار لعلك ترضى
واذكر اسم ربك بكرة واصيلا ومن الليل فاسجد له وسبحه ليلا طويلا
كانوا قليلا من الليل ما يهجعون

இந்த எல்லா ஆயத்துகளிலும் அடியான் தன்னைப் படைத்த நாயகனு டைய வணக்கத்தில் அதிகமான நேரத்தைக் கழிக்க வேண்டு மென்கிற சயிக்கினை யிருக்கிறது. இது இரவு பகல்களுடைய நேரங்களை பாகித்துக் கொள்வதன்றி உண்டாக மாட்டாது. ஆகவே அதை பயான் செய்வது அவசியமாயிற்று.

பகலுடைய அவ்ராதுகளின் பயான்.

அறிந்து கொள்ளுங்கள். பகலுடைய அவுராதுகள் ஐந்தா யிருக்கின்றன.

முதலாவது விர்து :—ஸுபுஹு நேரம் தொடுத்து சூரியன் உதய மாகிற வரையிலா யிருக்கும். இது முபாரக்கான நேரமா யிருக்கிறது. அல்லாஹு தஆலா இந்த நேரத்தின் மேல் ஆணை யிட்டிருக்கிறான். அதாவது :—

والصبح اذا تنفس قل اعوذ برب الفلق فالق الاصباح

வஸ்ஸுப்ஹி இதாதனப்பஸ் என்றும் குல்அவூது பிறப்பில் பலகி என்றும் பாலிகுல் இஸ்பாஹ் என்றும் திருவுளமா யிருக்கிறான். இந்த எல்லா ஆயத்துகளும் இதே நேரத்தைக் குறித்து வந்திருக்கின்

றன. ஆதலால் இந்த நேரத்தில் தன்னுடைய எல்லா மூச்சுகளையும் பாதுகாக்க வேண்டும். அதெப்படி யென்றால், நித்திரையி லிருந்து விழித்த வுடனே, الحمد لله الذي احيانا بعد ما تنا واليه النشور அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃத மமாத்தினா வஇலைஹின் நுஷூர் என்பதைத் துவாவுடைய பயானிற் சொன்னது போல் முடிய ஓதிக் கொண்டு பின்னர் உடைதரித்து திக்ரிலும் துஆவிலும் பராக்காகு வான். உடை உடுப்பதில் மானமறைப்பதையும் ஏவலுக்கு வழிபடு வதையும் நிய்யத்து செய்வான். ரியாவையும் சிங்காரிப்பையும் நாடான். பின்பு பைதுல் கலாவுக்குப் போவான். உள்ளே போகும் போது இடது காலை முதலில் வைப்பான். அதை விட்டு வெளிப்பட்டு ஒலூ வும் மிஸ்வாக்கும் செய்வான். ஒலுவுடைய பாடத்தில் சொல்லி வந்த துஆக்களையும் திக்ருகளையும் ஒலுவில் ஓதுவான். பின்பு ஸுபுஹு டைய ஸுன்னத்தை வீட்டில் தொழுது கொண்டு அதன் பிறகு பள்ளி வாசலுக்குப் போவான். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய அமல் இதேவிதமா யிருந்தது. ஸுன்னத்துக்குப் பின் ஓத வேண்டியதும் இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹுமா அவர் களால் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறதுமான ஓர் துஆவை பிதாயத் துல்ஹிதாயாவில் நாம் சொல்லி இருக்கிறோம். அதிலிருந்து அதை பாடமிட்டோதுவான். அதன் பிறகு பள்ளி வாசலுக்கு அமறிக்கை யாய் போவான். பள்ளி வாசலில் புகும் போதும் ஓதவேண்டிய துஆவை ஓதி வலது காலை முன்னே வைப்பான். முந்தின சப்பில் உட்காருவான் ஸுபுஹுடைய ஸுன்னத்தைத் தொழுவான். ஸுன்னத்தை வீட் டில் தொழுதிருந்தால் தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுவான். ஜமா அத்தை எதிர்பார்த்துக் கொண்டும் தஸ்பீஹ் இஸ்திக்பாரு ஓதிக் கொண்டு மிருப்பான். பர்லைத் தொழுது முடிந்தால் சூரியன் உதய மாகிற வரையில் இருப்பான். ஹதீதில், நாலு அடிமைகளை நான் உரிமை விடுவதிலும் சூரியன் உதயமாகிற வரையில் பள்ளி வாசலில் தரித்திருப்பது எனக்கு மிகவும் பிரியமா யிருக்கிற தென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்.

சூரியன் உதயமாகிற வரையில் நாலு காரியங்களில் பராக்காயி ருக்க வேண்டும். அவை துஆ கேட்பதும், தஸ்பீஹ் செய்வதும், குர் ஆன் ஓதுவதும், தபக்குரு செய்வதுமேயாம். ஆகவே, தொழுகை யின் ஸலாம் சொன்ன பிறகு துஆவை ஆரம்பித்து,

اللهم صل علي محمد وعلى ال محمد وسلم اللهم انت السلام ومنك
السلام واليك يرجع السلام حينا ربنا بالسلام وادخلنا دار السلام
تباركت يا ذا الجلال والاكرام

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலாஆலி முஹம்தின் வஸல்லிம் அல்லாஹும்ம அன்த்தஸ்ஸலாம் வமின்க்கஸ்ஸலாம் வஇலைக்க யர்ஜி உஸ்ஸலாம் ஹய்யினா றப்பனாபிஸ்ஸலாம் வஅத்கில்னா தாரஸ்ஸலாம் தபாரக்த்த யாதல் ஜலாலி வல் இக்ராம் என்றோதுவான். அதன் பிறகு மாசூமாவான துஆக்களை ஓதுவான். அவைகளை துஆக்களின் கிதாபி லிருந்து படித்துக் கொள்வான்.

துஆக்களை விட்டுப் பாக்கு ஒழிந்த பிறகு தஸ்பீஹ், தஹ்லீலு களில் பாக்காகுவான். ஒவ்வொன்றையும் நூறு தரம் அல்லது எழு பதுதரம் அல்லது பத்து தரம் ஓதுவான். பின் வரும் பத்துதிக்ருகளில் ஒவ்வொன்றையும் பத்து பத்து தரம் ஓதினால் மொத்தம் நூறு தர மாயின. இதிலும் குறையக் கூடாது. இந்த பத்து திக்ருகளுடைய வரிசைகளில் ஹதீதுகள் வந்திருக்கின்றன. கிதாபு விரிபுமென்ற நோக்கத்தினால் நாம் அந்த ஹதீதுகளை இங்கு எழுதவில்லை.

பத்து திக்றுகளாவன.

முதலாவது :—

لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيي ويميت وهو حي لا يموت بيده الخير وهو على كل شيء قدير

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ ஹய்யுன் லாயமூத்து பியதிஹில் கைறு வஹுவ அலாகுல்லிஷையின் கதீர்.

இரண்டாவது :—

لا اله الا الله الملك الحق المبين

லாஇலாஹ இல்லல்லாஹுல் மலிக்குல் ஹக்குல்முபீன்.

மூன்றுவது :—

سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر ولا حول ولا قوة الا بالله العلي العظيم

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

நான்காவது:—

سبحان الله وبحمده سبحان الله العظيم وبحمده

ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அலீம் வபிஹம்திஹி

ஐந்தாவது:—

سبوح قدوس رب الملائكة والروح

ஸ்ப்பூஹ்ன் குத்தூஸ்ன் றப்புல் மலாயிகத்தி வர்ரூஹ்.

ஆறுவது:—

استغفر الله الذي لا اله الا هو الحي القيوم واسئله التوبه

அஸ்தக்பிறுல்லா ஹல்லதீ லாஇலாஹ இல்லாஹ்வல் ஹையுல் கய்யூம் வஅஸ்அலுஹ்த் தவ்பா.

ஏழாவது:—

يا حي يا قيوم برحمتك استغيث لا تكلني الا نفسي طرفة عين واصلح لي شئني كله

யாஹையய்யு யாகய்யூம் பிறஹ்மத்திக்க அஸ்தகீது லாத்தக்கில்னீ இல்லா நப்ஸீதர்பத்தஜனின் வஅஸ்லிஹ்லீ ஷஃனீ குல்லஹ்.

எட்டாவது:—

اللهم لا مانع لما اعطيت ولا معطي لما منعت ولا ينفع ذا الجد منك الجد

அல்லாஹ்ம்ம லாமானிஅ லிமா அஃதைய்த்த வலா முஃதிய லிமாமனஃத்த வலாயன்பஉதல் ஜத்திமின்கல் ஜத்து.

ஒன்பதாவது:—

اللهم صل علي محمد وعلى ال محمد

அல்லாஹ்ம்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின்.

பத்தாவது:—

بسم الله الذي لا يضر مع اسمه شيئ في الارض ولا في السماء وهو السميع العليم

பிஸ்மில்லாஹில்லதீ லாயலுர்ரு மஅஸ்மிஹீ ஷைஉன் பில்அர்லி வலாபிஸ்ஸமாஇ வஹ்வஸ் ஸமீஉல் அலீம்.

இந்தப்பத்து தஜாக்களில் ஒவ்வொன்றையும் பத்துதரம் ஓதுவான் அல்லது எவ்வளவு ஓதக்கூடுமோ அவ்வளவு ஓதுவான் ஏனென்றால் ஒவ்வொன்றின் வரிசையும் வெவ்வேறாக யிருக்கிறது. இன்னும் ஒவ்வொன்றிலும் இன்பமும் மருகுதலும் வெவ்வேறாயிருக்கிறது.

இதன்பிறகு குர்ஆன் ஓதுவதில் பாக்காகுவான். குர்ஆன் ஓத ஏலாமற்போனால், ஆயத்துல் குர்ஸீ, ஆமனர் றஸூலு, ஷஹிதல் லாஹு குலில்லாஹும்ம மாலிகல்முல்கி, ஸூரத்துல் ஹதீதின் துவக்கம், ஸூரத்துல் ஹஷ்ரின் ஒடுக்கம் முதலியவைபோல் கவாரி உல் குர்ஆனே பாடமிட்டு ஓதுவான். குர்ஆனும், திக்ரும் துஆவும் இவையாவும் பொருந்திருக்கிற ஓர் விருது வேண்டுமென்று நாடுகிறவன் ஹலரத்து கிலுரு அலேஹிஸ்ஸலாமவர்கள் இப்ரூஹீமுத் தய்மி என்பவருக்குப் படித்துக்கொடுத்த விருதை ஓதுவான். அதன் வரிசை பெரியதாயிருக்கிறது. அதற்கு முஸப்பஆத்துல் அஷ்ரு என்று பேர் சொல்லப்படுகிறது. அது பத்து வஸ்துக்களாயிருக்கின்றன. ஒவ் வொன்றையும் ஏழு ஏழுதரம் ஓதவேண்டும். அவையாவன:—

1. அல்ஹம்து சூறத்து, 2. குல்அவூது பிறப்பின்னஸ், 3. குல் அவூது பிறப்பில் பலகி, 4. குல்ஹு வல்லாஹு அஹ்து, 5. குல்யா அய்யுஹல்காபிரூன் 6. ஆயத்துல் குர்ஸி இந்த ஆறும் குர்ஆனில் உள் ளவைகள். இவற்றோடு இன்னும் நான்கு திக்ருகள் சேர்ந்து முஸப்ப ஆத்துல் அஷ்ரு எனப்படும். அந்த நான்கு திக்ருகளாவன:—

முதலாவது:—

سبحان الله والحمد لله ولا اله الا الله والله اكبر

ஸுபுஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹு அக்பர்.

இரண்டாவது:—

اللهم صل على محمد وعلى ال محمد

அல்லாஹும்மஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின்.

மூன்றுவது:—

اللهم اغفر للمؤمنين والمؤمنات

அல்லாஹும்மக்பிர் லில்மூமினீன வல்மூமினாத்.

நான்காவது:—

اللهم اغفرلي ولوالدي وافعل بي وبهم عاجلا واجلا في الدنيا والاخرة ما انت له اهل ولا تفعل بنا يا مولينا ما نحن له اهل انك غفور رحيم

அல்லாஹும் மக்பிர்லீ வலிவாலிதய்ய வப்அல்பீ வபிஹிம் ஆஜிலன் வஆஜிலன் பித்துன்யா வல் ஆகிறத்தி மா அன்த்தலஹு அஹ்லு வலா தப்அல்பினா யாமவ்லானா மானஹ்னு லஹு அஹ்ல இன்னக கபூருர்றஹீம்.

இந்த முஸப்ப அத்துல் அஷ்ருடைய பெருமையைக் குறித்து ஓர் நீண்ட ஹிக்காயத்திருக்கிறது * அதை இஹ்யாஉல் உலூமித்தீனில் எழுதியிருக்கிறோம்.

இது முடிந்தபிறகு தபக்குரு செய்வதில் பராக்காகுவான். (தபக்குர் செய்வதென்பது உற்றுப் பார்ப்பதா யிருக்கும்) அது பலவகைப் பட்டிருக்கிறது. அதன் விவரம் இந்த கிதாபின் கடைசியில் சொல்லப் படும், ஆனால் தினந்தோறும் அவசியமா யிருக்கிற தபக்குராவது:—

மவுத்தையும் தவணை நெருக்கத்தையும் உற்றுணர்ந்து என் மரண காலம் நெருங்கி யிருக்குலா மென்றும் நாளைக்கே மவுத்து வரக்கூடு மென்றும் தன் மனதுக்குச் சொல்ல வேண்டியது. இப்படி மவுத்தை நினைத்துப் பார்ப்பதில் பெரிய பிரயோஜன முண்டா யிருக்கிறது. ஜனங்கள் துன்யாவின் பக்கம் முகம்நோக்கி யிருப்பதானது நீண்ட காலம் ஜிவித்திருப்போ மென்கிற அவர்களுடைய மேலெண்ணமா யிருக்கிறது. எனென்றால் அவர்கள் ஒரு மாதத்தில் அல்லது ஒரு வருஷத்தில் நாம் மவுத்தாய்ப் போவோ மென்று உண்மையாய் நம்பி யிருப்பார்களானால் துன்யாவுடைய காரியங்களில் தலையிட்டுக் கொள்ள மாட்டார்கள். இவர்கள் மறுதினத்திலேயே மவுத்தாய்ப் போவது கூடுமாயிருக்க பத்து வருஷம் வரையில் உதவக்கூடிய ஒரு காரியத்தில் இவர்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். இதின் நிமித்தமே அல்லாஹ் தஆலா:—

اولم ينظروا في ملكوت السموات والارض وما خلق الله من شيئ وان
عسى ان يكون قد اقترب اجلهم

---

*அந்த ஹிக்காயத்தை இஹ்யாஉல் உலூமித்தீனிலிருந்து இங்கு எடுத்தெழுதப்படுகிறது:—இப்ராஹீமுத்தைமீ றஹிமஹுல்லா அவர்கள் ஒருநாள் தங்கள் மனமில் மலக்குகள் வந்து தங்களைத் தூக்கிக் கொண்டு சொர்க்கத்துக்குப்போனதாயும், அங்குள்ள விஜைதமான காட்சிகளைக் கண்டு இவை யெல்லாம் யாருக்கென்று மலக்குகளை அவர்கள் கேட்டதற்கு உம்முடைய அமலுக்கு ஒப்பான அமலைச் செய்கிறவர் யாரோ அவருக்கே இவை யெல்லாமென்று மலக்குகள் சொன்னதாயும், இன்னும் அவர்கள் சொர்க்கத்துடைய கனிகளைத்தின்று அவ்விடத்தின் குடிப்பையும் குடித்ததாயும், பின்பு எழுபது நபிமார்களும் எழுபது சப்பு மலக்குகளும் புடைசூழ ஹவத்து றஸூலில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வந்து தங்களுக்கு ஸலாம் சொல்லித் தங்கள் கையைப் பிடித்ததாயும் தாங்கள் நாயகமவர்களை வணங்கி யாரஸூலல்லா தங்களிடத்திலிருந்து இந்த ஹதீதைக் கேட்டிருக்கிறதாய் கிலறு அலை ஹிஸ்ஸலாம் எனக்கு அறிவித்தார்களென்று சொன்னதற்கு நாயகமவர்

வானம் பூமிகளின் இராஜரீகத்தில் அல்லாஹ¨ தஆலா படைத்த வஸ்துக்களில் அவர்கள் உற்றுப்பார்க்க வில்லையா? ஒருக்கால் அவர்க ளுடைய தவணை நெருங்கி யிருக்கக்கூடும் என்று திருவுளமா யிருக் கிறான்.

கல்பைச் சுத்தப்படுத்தி இவ்விதம் உற்றுப் பார்ப்பானுகில்; ஆகி றத்துடைய தங்கரிப்பை சித்தம் செய்ய அவன் மனதில் விருப்பும் பிறக்கும்.

இன்னும் அவன் உற்றுப் பார்க்க வேண்டியதாவது:-இன்றையில் நான் எத்தனை நன்மைகளை செய்யக்கூடும்? எத்தனை பாவங்களை விடக் கூடும்?

சென்ற நாட்களில் நான் என்னென்ன குற்றங்கள் செய்திருக் கிறேன்? அக்குற்றங்கள் நிவர்த்தியாகும் பொருட்டு நான் அவசிய மாய்ச் செய்யவேண்டிய பிரயத்தனங்களென்ன? இவைகளை யெல்லாம் உற்றுப் பார்க்க வேண்டும்.

பின்னர் யாராவதொருவனுக்கு கஷ்டு உண்டானால் அதாவது:- ஒருவன் வானம், பூமிகளின் இராஜரீகத்தைக் காண்பவனையும்

கள் கிலுறு உண்மை சொன்னர், கிலுறு உண்மை சொன்னர், அவர் சொன்னவை யாவும் மெய்யே. அவர் பூலோகர்களில் ஆலிமானவர், அப்தாலுகளில் தலைவரானவர், பூமியில் அல்லாஹ¨ தஆலாவுடைய சேனைகளில் அவர் ஒருவரா யிருக்கிறார் என்று திருவாய் மலர்ந்தருளின தாயும், பின்பு தாங்கள் ரஸ¨லில் நாயகமவர்களை வணங்கி யாரஸ¨ லல்லா இப்படி அமல் செய்த ஒருவன் நான் கண்ட காட்சியைப் போல் காணவில்லையானால் எனக்கு கொடுத்தவைகளில் நின்றும் ஏதா வது அவனுக்குக் கொடுக்கப்படுமா என்று கேட்டதற்கு "என்னை நபி யாய் அனுப்பின நாயன் பேரில் ஆணையாக எவன் இவ்விதம் அமல் செய்தானே அவனுக்கு இவையாவும் கொடுக்கப்படும். என்னையும் சோர்க்கத்தையும் அவன் காணுமற் போனாலும் சரியே, அவன் செய்த பெரும் பாவங்களெல்லாம் மன்னிக்கப்படும். அல்லாஹ¨ தஆலா அவனை விட்டும் கோபத்தை நீக்கிவிடுவான், ஒரு வருஷம் வரையில் பாவங்களில் ஒன்றையும் அவன் பேரில் எழுதவேண்டா மென்று தீமை களை எழுதுகிற மலக்குக்கு உத்திரவு செய்வான். இன்னும் என்னை நபியாக அனுப்பின நாயகன் பேரில் ஆணையாக அல்லாஹ¨ தஆலா எவனை சீதேவியாகப் படைத்தானே அவனை இந்த அமலைச் செய்வான். இன்னும் எவனை மூதேவியாய்ப் படைத்தானே அவனை இதை விட்டு விடுவான்" என்று திருவுளமானதாயும் கண்டதாய்ச் சொன்னர்க ளென் பதே.

அவற்றிலுள்ள படைப்புகளின் விஜைதங்களை நோட்டமிடுகிறவனுயும் அதிலும் மேற்சென்று அல்லாஹு தஆலாவுடைய் ஜலால், ஜமால் களை தரிசிப்பவனுயுமிருந்தால் இதானது எல்லா இபாதத்துகளிலும் மேன்மையானதா யிருக்கும். ஏனென்றால் இந்த ஆராய்வினுல் அல் லாஹு தஆலாவுடைய மகத்துவம் மனதில் உறைகின்றது. அவன் மகத்துவம் மனதில் உறைந்தால் அவனுடைய ஆசைமேலிடுகின்றது. அவன் ஆசை மேலிட்டால் அது நற்பதவிக்கு மூலமாய் விட்டது. ஆனுல் இந்த ஆராய்வு எல்லாருக்கும் வாய்க்கிறதில்லை.

என்கினும் இதற்குபதிலாக தனக்குக்கிடைத்திருக்கிற அல்லா வுடைய நிஃமத்துகளை நோட்டமிடுவான். இன்னும் இவ்வுலகத்தி லுண்டாயிருக்கிற நோய், வறுமை, பலவகையான துன்பங்கள்போல் எவற்றினின்றும் இவனைக் காக்கப்பட்டதோ அந்த கஷ்டங்களையும் உற்றுணர்ந்து அதற்காக ஷுக்ருசெய்வது தன்பேரில் வாஜிபென்பதை யும் தெரிந்துகொள்ளுவான். விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றி விலக்கப்பட்ட பாவங்களை விட்டு விடுவதினுல் ஷுக்ரு பூர்த்தியாகும். ஆகக்கூடி கொஞ்சநேரம் இந்த யோசனைகளில் கழிப்பான் எனென்றால் ஸுபுஹுடைய ஸுன்னத்தும் பர்லும் தவிர வேறென்றும் தருஸ் தில்லை, ஆதலால் அதற்குப் பதிலாகதிக்ரு பிக்ருகளில் இருப்பான்.

இரண்டாவது வித்து :—சூரியன் உதயமானதிலிருந்து லுஹர் நேரம் வரையிலாயிருக்கும். கூடுமானுல் சூரியன் ஒரு வல்லய உயரம் எழும்புகிறவரையில் பள்ளிவாசலில் இருப்பான். அது வரையில் தஸ்பீஹ்செய்வான். மக்ரூஹான நேரம் போய்விட்டால் இரண்டுரக் அத்தத் தொழுவான். எப்போது ஒரு ஜாமநேரம் ஆய்விட்டதோ அப்போது லுஹர் தொழுகை நாலுறக்ஆத்து அல்லது ஆறுறக்ஆத்து அல்லது எட்டு றக்ஆத்துகள் தொழுவது மிக வரிசையா யிருக்கும். இவையெல்லாம் ஹதீதில் வந்திருக்கின்றன.

லுஹர் நேரம் வரையில் இருக்கவில்லையானுல் சூரியன் உயர்ந்த பிறகு இரண்டு றக்ஆத்து தொழுதுகொண்டு அடியார்கள் சம்பந்தமான நன்மையான காரியங்களில் பாக்காகுவான். அவையாவன:—வியாதி யஸ்தனை விஜவல், ஜனுஸாவுடன் போகுதல், முஸ்லிம்களுடைய ஹாஜத்துகளை நிறைவேற்றல், உலமாக்களுடைய மஜ்லிஸில் ஹாலிராகு தல் முதலியவைகளாம்.

மூன்றுவது வித்து:—லுஹர் நேரத்திலிருந்து லுஹர் தொழுகை வரையிலாயிருக்கும். இந்த விருதானது அவரவர்களுடைய நிலைமை களுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். என்றாலும் எவரும் நான்கு நிலைமைகளில் ஒன்றைவிட்டொழிய மாட்டார்கள்.

1-வது நிலமை :—இல்முபடிக்க சக்தியுள்ளவனு யிருப்பதாம். இப்படி யிருந்தால் எந்த இபாதத்தும் இதற்குமேல் நன்மையான தில்லே. மேலும் இப்படியான மனிதன் ஸுபுஹு தொழுது முடிந்த பிறகு இல்முபடிப்பதில் பராக்காகுவான். ஆனல் ஆகிரத்தில் பயன் படக்கூடிய இல்மைப்படிப்பான். எந்த இல்மினல் தன்யாவுடைய விருப்பம் குன்றி ஆகிறத்துடைய விருப்பம் வலுவாகின்றதோ, இன்னும் எந்த இல்மானது அமல்களிலுள்ள ஐபுகளையும் ஆபத்துகளையும் வெளிப்படுத்தி இக்லாஸின் பக்கம் அழைக்கின்றதோ அதுவே ஆகிரத்தில் பயன் படக்கூடிய இல்மாயிருக்கும். தற்கத்துடைய இல்மும் கற்பனு அலங்காரமாயும் விடுகதைகளாயும் சொல்லப்படுகிற கிஸ்ஸாக்களும் சரித்திரங்களும் தன்யாவுடைய ஆவலே அதிகப்படுத்தும். பொறுமையும் கர்வமுமான விதையை மனதில் தூவும். பயன்படக்கூடிய அந்த இல்மானது இஹ்யாவுல் உலூமிலும், ஜவாஹிறில் குர்ஆனிலும் இந்த கிதாபிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் இல்முகளைப்படிப்பதற்கு முன்னே இதைப் படித்துக்கொள்வான்.

2-வது நிலமை:—இல்மு படிக்க சக்தி யில்லாதவனையும் திக்ருதஸ்பீஹு முதலிய இபாதத்துகளில் பராக்காயிருக்கக் கூடியவனையு மிருப்பதாம். முக்கியமாக திக்ரானது கல்பின்பேரில் மிகைத்து கல்புக்குத் தூணையாகும்படி திக்ரில் பராக்காகக் கூடுமானல் அது ஆபிதகளுடைய தராஜாவாயும் பெரிய மகாமாயு மிருக்கிறது.

3-வது நிலமை:—ஜனங்களுக்கு சவுக்கியமுண்டாக்கும்படியான காரியங்களைச் செய்கிறவனுயிருப்பதாம். எதுபோலெனில், ஸுபியாக்களுக்கும் பகீஹுக்களுக்கும் தர்வேஷுகளுக்கும் பணிவிடை செய்வதுபோலென்க. இந்தப்பணிவிடையானது நபிலான இபாதத்துகளைக் காண மிக நன்மையானதாயிருக்கும் ஏனென்றல் இதுவும் இபாதத்தாயிருக்கிறது. அன்றியும் இப்படித்து செய்வதின்பேரில் முஸ்லிம்களுக்கு உதவிசெய்கிறதாயும், சவுக்கிய முண்டாகுவதாயு மிருக்கிறது. அவர்களுடைய துவாவின் பறக்கத்தானது பெரிய குணமுள்ளதாயிருக்கும்.

4-வது நிலமை:—அவன் தன்னையும் தன் பெண்ஜாதிபிள்ளைகளையும் காக்கும் பொருட்டு யாதொரு தொழிலைச் செய்கிறவனுயிருக்கிறதினல் இது காரியம் அவனல் கூடாமலிருப்பதாம். இந்தத் தொழிலில் அவன் மோசஞ்செய்யாமலும் கையினுலும் நாவினுலும் ஜனங்களை இம்சிக்காமலு மிருந்தானுகில் இன்னும் தன்யாவுடைய ஹிருசானது அவனை அளவுக்குமேல் அதிகமாய்ச் சம்பாதிக்கிற கவலையில் ஆழ்த்தாமலும் போதுமான அளவின்பேரில் அவன் பொருந்திக்கொள்ளுகிறவனையு மிருந்தால் அவனும் ஆபிதகளிற் சேர்ந்தவனுகுவான். அஸ்ஹாபுல் யமீன்களுடைய பதவிக்குச் செல்லுவான். அவன் ஸாபிகீன் முகர்ரபீன்களுடைய தொகையில் சேரவில்லையா

ஞலும் இன்னும் ஸலாமத்துடைய தாஜாவைப் பூண்டு நிற்பது மிக வும் குறைந்த தரஜாவாயிருந்தாலும் சரி. ஆனல் யாராவதொருவன் இந்த நான்கு நிலைமைகளில் ஒரு நிலைமையாவது இல்லாதவனுயிருந்தால் அவன் ஹலாக்காகிறவர்களிலும் ஷைத்தானேத் துயர்ந்தவர்களிலும் சேர்ந்தவனுகுவான்.

நாலாவது விர்து:—ஸவால் நேரத்திலிருந்து அஸர் தொழுகை வரையிலாயிருக்கும். ஆகவே ஸவாலுக்கு முன்னே கைலூலா வென்னும் மத்தியான நித்திரை செய்வான். நோன்புக்காக ஸஹர் செய்வ தெப்படியோ அப்படியே இந்த கைலூலாவென்னும் நித்திரையானது இரவின் தொழுகைக்காக ஸஹர் செய்வதாயிருக்கிறது. என்கினும் எவனெருவன் இரவில் நபில் தொழுகாதவனுயிருக்கிருனே அவனுக்கு இந்த கைலூலா நித்திரை மக்ரூஹாயிருக்கும். ஏனென்றல் அதிக மாய்த் தூங்குவது ஆகாதென்க. இந்த நித்திரையிலிருந்து விழித்த பிறகு வக்துக்குமுன்னே ஒலுசெய்வான். பாங்கு சப்தத்தைப் பள்ளி வாசலில்போய் கேட்கும் படிக்கும் தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழும் படிக்கும் முஅத்தினுடைய பாங்குக்கு ஜவாபு சொல்லும்படிக்கும் மூந்தியே போக முயற்சிப்பான். பர்லுக்கு முன்னே நாலு றக்அத்து ஸுன்னத்தை நீட்டித் தொழுவான். ஏனென்றல், ஹலரத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இந்த நாலு றக்அத்தை நீட் டித் தொழுகிறவர்களையும் இந்த நேரத்தில் வானத்துடையவாசல்கள் திறக்கின்றனவென்று சொல்லுகிறவர்களாயும் இருந்தார்கள். இன்னும் யாராவதொருவன் இந்த நாலுறக்அத்து தொழுகையைத் தொழுவா னுகில் அவனுடன் எழுபதினுயிரம் மலக்குகள் தொழுகிறார்களென் றும் இரவுவரையில் அவனுக்காகப் பிழைபொறுக்கத் தேடுகிறார் களென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. பிறகு தீமாமுடன் பர்லைத்தொழு வான். பின்பு இரண்டு றக்அத்து ஸுன்னத்தைத் தொழுவான். அதன் பிறகு அஸர் தொழுகைவரையில் இல்மைக்குற்றுக் கொடுப்பதிலாவது அல்லது முஸ்லிம்களுக்கு உதவி செய்வதிலாவது அல்லது அல்லாஹு தஆலா உடைய திக்ரிலாவது அல்லது குர்ஆனே ஓதுவதிலாவது அல்லது தேவையான அளவுக்கு ஹலாலான யாதொரு தொழில் செய்வதிலாவது பராக்காகுவான். இவைகளைத் தவிர வேறே யாதொரு வேலையில் பிரவேசிக்கமாட்டான்.

ஐந்தாவது விர்து:—அஸரு நேரத்திலிருந்து சூரியன் அஸ்தமிக் கிறவரையிலாயிருக்கும். அஸருக்குமுன்னே பள்ளிவாசலுக்கு வரு வான். நாலு றக்அத்து நபில் தொழுவான். ஏனென்றல் அஸருடைய பர்லுக்கு முன்னே எவனெருவன் நாலு றக்அத்து நபில் தொழு கிருனே அவன்மேல் அல்லாஹு தஆலா றஹ்மத்தை அனுப்பு கிருனென்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திரு-

வுளமாயிருக்கிறார்கள். பர்லுத் தொழுது முடிந்தபிறகு மேற் சொல்லிய காரியங்களிலன்றி வேறு காரியங்களில் பராக்காகமாட்டான்.

பின்பு மக்ரிபு தொழுகைக்கு முன்னே மஸ்ஜிதுக்குப்போய் தஸ்பீஹும் இஸ்திக்பாரும் செய்து கொண்டிருப்பான். ஏனென்றால் இந்த நேரத்தின் வரிசையாகிறது ஸுப்ஹு நேரத்தின் வரிசையைப் போலாயிருக்கிறது. அதெப்படியென்றால்.

وسبح بحمد ربك قبل طلوع الشمس وقبل غروبها .

சூரியன் உதையமாகு வதற்கு முன்னும் அது அஸ்தமிப்பதற்கு முன்னும் உம்முடைய றப்பைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்வீராக என்று அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிறான். இந்த நேரத்தில் வஷ்ஷம்ஸி என்ற ஸூறத்தையும் வல்லைலி என்ற ஸூரத்தையும் குல்அவூது பிறப்பில் பலகி, குல்அவூதுபிறப்பின்னாஸ் என்ற ஸூரத்துகளையும் ஓதுவான். சூரியன் அஸ்தமிக்கிற வேளையில் இஸ்திக்பாரு செய்வதில் பராக்காகுவான்.

ஆகக்கூடிய முடிவுயாதெனில், நேரங்களை பாகித்து அந்தந்தநேரத்திலும் அந்தந்த அமல்களைச் செய்து வரவேண்டுமென்பதேயாம். இதில் வயதின் பரக்கத்திருக்கிறது. எவனொருவன் நேரத்தை வீணில் கழிப்பானே அவனுடைய வயதில் பெரும்பான்மையானது சேதமாகின்றது.

இரவின் அவ்ராதுகளின் பயான்.

இரவின் விர்துகள் மூன்றுயிருக்கும். முதலாவது விர்து,—மக்ரிபு தொழுதலிலிருந்து இஷா தொழுகைவரையிலாயிருக்கும். இத்தொழுகைகளுக்கு மத்தியில் விழித்திருப்பதானது பெரியவரிசையுள்ளதாயிருக்கிறது. இந்த ஆயத்தானது இதே விஷயமாய் வந்திருக்கிறதென்று ஹதீதில் வருகிறது. ஆதலால் இஷா தொழுகை வரையில் நபில்களைத் தொழுது கொண்டிருப்பான். பகலில் நோன்புவைப்பதைக் காட்டிலும் இதை மிக நலவென்று பெரியோர்கள் எண்ணியிருக்கிறார்கள். இந்த வேளையில் அவர்கள் ஒஜீபனம் உண்கிறதில்லை. வித்ரை தொழுது முடித்தால் பிறகு ஒன்றும் பேசமாட்டான், ஏனென்றால் அமல்கள் அதன் பேரிலேயே முடிவு பெறுவதாகும். எல்லாவேலைகளிலும் கடைசியானது நன்மையாகவே யிருக்கவேண்டும்.

இரண்டாவது விர்து:—நித்திரையாயிருக்கும். நித்திரையானது இபாதத்துகளில் சேர்ந்ததாயிருமற் போனாலும் அதில் அதபுகளும் ஸுன்னத்துகளும் காணப்பட்டால் அப்போது இது இபாதத்துகளின் தொகையிற் சேர்ந்ததாகும். நித்திரையில் ஸுன்னத்தாகிறது கிபுலாவின் பக்கம் முகமாக்கிப் படுப்பதும் கபுரில் மய்யித்தைப்படுக்க வைப்பதுபோல் முதலில் வலது பாரிசத்தின் மேல் ஒரு கணித்துப்படுப்

பதுமாயிருக்கும். இன்னும் நித்திரையை மவுத்துடைய தங்கை யென்றும் விழிப்பை ஹஷ்ருக்கு ஒப்பாகவும் எண்ணுவான். நித்திரையின் போது பிடித்துக்கொள்ளப்பட்டிருந்த அந்த ரூஹை மீண்டும் இவனுக்கு கொடுக்காமலிருக்கவுங்கூடும். ஆதலால் இவன் ஆகாத்துடைய காரியத்தைச் செய்து முடித்தவன்போல் ஆகக்கடவன். அதெவ்வாறெனில்,

ஒலுசெய்து படுப்பான், தவுபாச் செய்வான், விழித்தேனுகில் இனிபாவஞ் செய்யமாட்டேனென்று வைராக்கியம் பூணுவான், வஸிய்யத்து எழுதி தலைமாட்டில் வைப்பான், பெருமைத்தனமாய்த் தூங்கமாட்டான். நித்திரை அதிகரிக்காமலிருக்கும் பொருட்டு மிருதுவான விரிப்பில் படுக்கமாட்டான். ஏனென்றால் நித்திரையில் வயதுவீணாய் கழிகின்றது. இரவும்பகலும் சேர்ந்து எட்டுமணி நேரத்துக்குமேல் அதிகமாய்த் தூங்கமாட்டான். இது இருபத்து நாலுமணி நேரத்தில் மூன்றிலொரு பங்காகின்றது. இவ்விதம் நடந்து கொண்டால் அறுபது வருஷம் ஜீவித்திருப்பானுகில் அதில் இருபது வருஷம் நித்திரையில் வீண்போயிருக்கும். இதற்குமேல் அதிகமாய் வயதைப் பழுதாக்கக் கூடாது. இரவில் தொழுகைக்காக எழுந்திருக்கும்பொருட்டு அல்லது ஸுபுஹுக்கு இருட்டோடே எழுந்திருக்கும் பொருட்டு ஒலுவுக்காகத் தன்கையினுல் தண்ணீரையும் மிஸ்வாக்கையும் சித்தம் செய்துவைத்துக் கொள்வான். இரவில் விழித்தெழும்ப, அல்லது ஸுபுஹில் இருட்டோடே விழித்தெழும்ப மனதில் நாட்டம் செய்துகொள்வான். இப்படி நாட்டம் செய்துகொண்டால் நித்திரை மேலீட்டினுல் விழிக்க கூடாமற்போனுலும் சவாபுண்டாகும். படுப்பதற்காக விலாப்பக்கத்தை பூமியில் வைத்து முன் சொன்னதுபோல்,

باسمك ربي وضعت جنبي وباسمك ارفعه

பிஇஸ்மிக றப்பீ வலஃத்து ஜன்பீ வபி இஸ்மிக்க அர்பஉஹு என்று ஓதுவான். பின்னர் ஆயத்தல் குர்ஸியையும், ஆமனர் ரஸூலையும், முஅவ்வசத்தைனி என்ற குல்அவூதுபிறப்பில் லகி குல்அவூது பிறப்பின்னுஸியான் இரண்டு ஸூரத்துகளையும், தபாரக்ஸூரத்தையும் ஓதுவான். அப்போது இதே திக்ரும் ஒலுவுமுண்டாயிருக்கிற நிலைமையில் தூங்கிவிடுவான். யாராவதொருவன் இவ்விதமாய்த் தூங்குவானுகில் அவனுடைய ரூஹை அருவுக்குக் கொண்டுபோகிறார்கள். விழிக்கிறவரையில் அவனை இரவில் தொழுகிறவர்களில் ஒருவனுயெழுதுகிறார்கள்.

மூன்றுவது விர்து:—தஹஜ்ஜுது, இராத் தொழுகையுமாம். அதாவது நித்திரையிலிருந்து விழித்து பாதிராத்திரிக்குப்பின் தொழுகிற தொழுகையாயிருக்கும். பிற்பாதிராத்திரியில் இரண்டு றக் அத்துத் தொழுகிறதானது மற்றுமுண்டான அநேகத் தொழுகைகளுக்காண

மிகுந்தவரிசைப்புள்ளதாயிருக்கிறது. இதற்குக் காரணம் யாதெனில், இந்த நேரத்தில் கல்பு சுத்தமாயும் தன்யாவுடைய பராக்குகள் ஒன்றுமில்லாமலுமிருப்பதேயாம். இன்னும் இந்த நேரத்தில் வானத்தில் நின்றும் றஹ்மத்துடைய வாசல்கள் திறக்கப்படுகின்றன. இராத்தொழுகைகளின் வரிசையில் வந்திருக்கிற ஹதீதுகள் அநேகமுண்டு. அவைகளை இவ்யாவில் நாம் பயான் செய்திருக்கிறோம். ஆகக்கூடி இரவின் நேரங்கள் வீணில் கழியாமலிருக்கவேண்டுமென்பதே இதன் கருத்தாம்.

இந்த எட்டு விர்துகளையும் அனுசரித்தவனுக ஒரு இரவுக்கல்களைகழித்த ஒருவன் பின்பு இதைவிட்டு விடாமல் தன் வயதின் அந்தியகாலம் வரையில் தினந்தோறும் இதேவிதமாய்ச் செய்து வருவான். இந்தவிர்துகள் அவனுக்குக் கஷ்டமாய்த் தோன்றினால் நீண்டகாலம் ஜீவித்திருக்கலாமென்ற மேலெண்ணத்தைக்குறைத்து ஒருகால் நான் இன்றிரவில் மவுத்தாய் விடக்கூடுமாதலால் பகலில் அனுசரிக்கவேண்டியவிர்துகளை இன்று நிறைவேற்றுவேன் என்றும் ஒருக்கால் நாளையதினம் எனக்கு மவுத்துவரக் கூடுமாதலால் இரவில் அனுசரிக்கவேண்டிய விர்துகளை இந்த இரவில் செய்துகொள்வேன் என்றும் தனக்குள்ளே பேசிக்கொள்வான். நாள்தோறும் இதேவிதமாய்ச் சுந்நத்தை செய்வான்.

இடைவிடாமல் இப்படி அமல் செய்வதில் பராக்காயிருந்ததினால் தேகபலன் குன்றி நோயாளியாய்ப்போனால் அப்போது அவன் தன் மனதில் எண்ணவேண்டிய தென்னவென்றால் இப்போது நான் வழிப்பிரயாணத்திலிருக்கிறேன், என்சொந்த ஊர் ஆகிறதாயிருக்கிறது, பிரயாணக்காரனுக்கு வழிநடப்பில் கஷ்டம் நேரிடுவது சாதாரணமேயாம். என்கினும், கஷ்டத்தைப் பார்க்காமல் துரிதமாய் வழியைக்கடந்து ஊர் போய்ச்சேர்ந்தால் தான் சுகமடையலாம் என்பதே. ஆகிரத்தில்கிடைக்கிறநித்திய வாழ்க்கையை நோக்க இந்தப் பிரபஞ்சவாழ்க்கை எவ்வளவாகு மென்பது வெளிப்படையாயிருக்கிறது. ஒருவன் பத்து வருஷம் சுகத்தை அனுபவிப்பதற்கு கஷ்டத்தை எடுத்துக்கொள்வது ஆச்சரியமல்லவே. பின்பு மனிதன் நூறுயிரவருஷகாலம் சுகத்தை அனுபவிப்பதற்கு அல்ல. அல்லது முடிவில்லாத நித்திய காலத்தில் சுகத்தை அனுபவிப்பதற்கு நூறுவருஷவரையில் கஷ்டத்தை எடுத்துக்கொண்டால் என்ன ஆச்சரியம்?

கீமியாயெ ஸஆதத்தினின்றும் இபாதாத்துடைய ருக்குனு

முற்றுப்பெற்றது.

கீமியாயெ ஸஆதத்தினின்றும் ஷுக்ர் வாஜிபாவது வால்யம்

முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras.

70
5.125